33

திவ்யப்ரபந்தவியாக்கி
யானம்.

உ

சிவமயம்.

சிவப்பிரகாசம்.

கொற்றவன்குடி

உமாபதிசிவாசாரியார்

திருவாய்மலர்ந்தருளியது.

இதற்கு

மதுரை, சிவப்பிரகாசர்செய்த

வியாக்கியானத்துடன்

கொன்றமாநகரம் ம-ா-ா-ஸ்ரீ,

முருகப்பமுதலியாரவர்கள் பௌத்திரரும்

அருணாசலமுதலியாரவர்கள்புத்திரருமாகிய

சண்முகசுந்தரமுதலியாரால்

பரிசோதித்து

தத்துவபோதினி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

ஆங்கிரசஹு ஐப்பசிமீ

நூலாசிரியர்

வரலாறு.

உமாபதிசிவாசாரியார் தில்லைவாழந்தணர்குலத்திற் பிறந்து யௌவனத்திலே தாம்கற்கவேண்டிய வேதசிவாகமாதிகளை யோதியுணர்ந்து நல்லொழுக்கம்பூண்டு அவ்வூரிலிருக்கும்யாவராலு நன்குமதிக்கப்பட்டுவருநாளில், ஒருநாள் தமக்குரிய விருதுகளோடுதிருக்காளாஞ்சேரிக்குப்போயினர். அவ்விடத்தில் திருப்பெண்ணாகடத்தில் பிராமணகுலத்திற் றிருவவதாரஞ்செய்து சகலாகமபண்டிதரென்னுங்காரணப்பெயர்பூண்ட அருணந்திசிவாசாரியரா லுபதேசம்பெற்று விளங்காநின்ற மறைஞானசம்பந்தசிவாசாரியார் இவரவ்வழியே போவதைக்கண்டு "பகற்குருடன்போகின்றான்" னெனச்செப்பினர். இதனை உமாபதிசிவாசாரியார் மலபரிபாகம்பெற்றுசத்திநிபாத முற்றிருந்தவராகையாலே தமது செவியிற்புகுந்தவுடன் தாமூர்ந்துசெல்லுஞ்சிவிகையைவிட்டிறங்கி மறைஞானசம்பந்தசிவாசாரியாரிடத்திற்சென்றுஅஷ்டாங்கபஞ்சாங்கங்களோடும் பணிந்தச்சமயத்திலவர்புசித்துக்கொண்டிருந்த வன்னரசங்கீழொழுக அதனைக் கீழொழுகவொட்டாமல் கையேந்தித் தாமும்புசித்தருளினர். மறைஞானசிவாசாரியார் இவரது அதிதீவரபக்குவத்தைக்கண்டு மோக்ஷசாதனங்களுக்குரிய உபதேசங்களை யருளிச்செய்தனர்.

உமாபதிசிவாசாரியார் மறைஞானசம்பந்த சிவாசாரியா ரநுக்கிரகத்தைப்பெற்று திரும்புகாலையில் தமதுகுலத்தாரால் தமது ஆசிரியரது எச்சிலைப்புசித்த காரணத்தைப்பற்றி நீக்கப்பட்டு கொற்றவன்குடியிற்சென்று வசித்தருளினர். இ

வ்வாறு தாம்வசித்துவருநாளில் வடமொழியில் பௌட்கராகமத்துக்கு வியாக்கியாநமும் தமிழில் சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறிவிளக்கம், சங்கற்பநிராகரணம் என்னுஞ் சைவசித்தாந்த சாத்திரங்களையும், கோயிற்புராணம், திருத்தொண்டர்புராணசாரம், திருமுறைகண்டபுராணம், சேக்கிழார்புராணம், திருப்பதிக்கோவை, திருப்பதிகக்கோவை என்னும் பிரபந்தங்களையுஞ் செய்தருளினார்.

உமாபதிசிவாசாரியார் அருணமச்சிவாயதேசிகர் முதலிய மாணாக்கர்களுக்குபதேசித் தருளிச்செய்ததன்றியும் சபாநாயகர் விடுத்தருளிய "அடியார்க்கெளியன் சிற்றம்பலவன் கொற்றங், குடியார்க்கெழுதியகைச்சீட்டுப் - படியின்மிசைப், பெற்றான்சாம்பானுக்குப் பேதமறத்தீக்கைசெய்து, முத்திகொடுக்கமுறை." என்னுந் திருமுகத்தைப்பெற்றுக்கொண்டு பெற்றான்சாம்பானுக்கு உடனே முத்திகொடுத்தருளினார். இதனைப்பெற்றான்சாம்பான் மனைவி தனதஞ்ஞானத்தால் அரசனிடத்திற்சென்று தனதுநாயகனை உமாபதிசிவாசாரியார் கொலைசெய்தனரென்று முறையிட அரசன் தமதுமந்திரியுடனாலோசித்து அவரைத்தம்மிடத்தில் வரவழைப்பது தகுதியன்றென்று • தமதுபரிவாரங்களுடன் பெற்றான்சாம்பான் மனைவியைக்கூட்டிக்கொண்டு உமாபதிசிவாசாரியாரிடத்திற்குச்சென்றனர்கள். இதனையுணர்ந்த உமாபதிசிவாசாரியார் தமக்குப்பிரியமுள்ள முள்ளிச்செடியருகி லிவர்களுடன்சென் றிவர்களையந்திர அம்முள்ளிச்செடிக்கு முத்தியளித்தருளினார்.

உமாபதிசிவாசாரியார் கொடிக்கவியருளிச்செய்த காரணம் இவரைத்தில்லையில் தீக்ஷதர்கள் நீக்கியவுடன் சபாநா

யகருக்குக் கொடியேற்றம்வரக் கொடியேரமாட்டாததைக் கண்டு தீக்ஷதர்கள்வருந்த அவர்கள் சொப்பனத்தில் உமாபதிசிவாசாரியார் வந்தாற் கொடியேறுமென்று சபாநாயக ரருளிச்செய்ய உடனே தீக்ஷதர்கள் உமாபதிசிவாசாரியாரிடத்திற்சென்றுசபாநாயகர்சொல்லியருளியதைச்செப்பித் தங்கள்குற்றத்தைப் பொறுக்கும்படிக் கேட்டுக்கொண்டார்கள். உடனே உமாபதிசிவாசாரியர் தில்லைக்கெழுந்தருளி கொடிக்கவியென்னுஞ் சாத்திரஞ்செய்தருளி யக்கொடியேறச்செய்தனர்.

மறைஞானதேசிகர் பரிபூரணதசையடைந்ததலம் திருக்காளாஞ்சேரி.

உமாபதிசிவாசாரியர் பரிபூரணதசை யடைந்ததலம் கொற்றவன்குடி.

சந்தானகுரவர்நால்வர் திருநக்ஷத்திரம்.

சித்திரையத்தமுமாபதியாவணித்திங்கடனி
லுத்திரஞ்சேர்கொண்மறைஞானசம்பந்தரோதுகன்னிச்
சுத்தமெய்ப்பூரமருணந்தியைப்பசிச்சோதிதன்னில்
வித்தகமெய்கண்டதேவர்சிவகதிமேவினரே.

சைவசித்தாந்தசாத்திரம்.

பதினான்கினையுமுணர்த்துஞ்செய்யுள்.

உந்திகளிறுவுயர்போதஞ்சித்தியார்
பிந்திருபாவுண்மைப்பிரகாசம்—வந்தவருட்
பண்புவினாபோற்றிகொடிபாசமிலாநெஞ்சுவிடு
உண்மைநெறிசங்கற்பமுற்று.

விளம்பரம்.

இப்புத்தகம் வேண்டியவர்கள் சென்னபட்டணத்தைச் சார்ந்த சிந்தாத்திரிப்பேட்டை ஐயாமுதலியார்வீதியில்-௩௬-வது கதவிலக்கமுள்ள - ம - ள - ள - ஸ்ரீ, கொன்றமாநகரம் முருகப்பமுதலியாரவர்கள்வீட்டில் அருணசலமுதலியாரவர்கள் குமாரர் சண்முகசுந்தரமுதலியாரிடத்தில் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம். (இதன்விலை ரூ - ௧½.)

இப்பொழுதச்சிட்டிருக்கும் புத்தகங்கள்.

திருவுந்தியார் மூலமுமுரையும்.	அணா	- ௨.
இருபாவிருபஃது மூலமுமுரையும்.	,,	- ௩.
உண்மைவிளக்க மூலமுமுரையும்.	,,	- ௧½.
விருவெண்பா கொடிக்கவி உண்மை நெறிவிளக்கம் மூலமுமுரையும்.	,,	- ௧¼.
போற்றிப்பஃறொடை மூலமுமுரையும்.	,,	- ௧¼.
இவைகளொன்றாய்ச்சேர்த்துக் கட்டியது.	,,	- ம.

செய்யுளகராதி.

செய்யுளகராதி.

உதாரணசாத்திரங்களின்பெயர்.

இருபாவிருபஃது
உண்மைவிளக்கம்
உருபசொருபவகவல்
ஔவைக்குறள்
காளத்திபுராணம்
காளத்தியந்தாதி
கோயிற்புராணம்
சதுர்த்தசங்கிரகம்
சிவஞானசித்தியார்
சிவஞானபோதம்
சிவஞானபோதச்சூரணை
சிவாகமம்
சிவாநந்தமாலை
சிவார்ச்சனுபோதம்
சிற்றம்பலத்தம்பிரானு ரருளி யஞானப்பஃறொடை
சூதசங்கிதை
ஞானதீக்கைத்திருவிருத்தம்
ஞானபூசைத்திருவிருத்தம்
ஞானவந்திரட்டை
ஞானுமிர்தம்
தத்துவசரிதை
தத்துவப்பிரகாசம்
தத்துவவிளக்கம்
திருக்களிற்றுப்படியார்
திருக்கோவை
திருநெறிவிளக்கம்
திருப்புகழ்
திருமந்திரம்
திருவருட்பயன்
திருவள்ளுவப்பயன்
திருவாசகம்
தேவாரம்
தேவிகாலோத்திரம்
துகளறுபோதம்
நேமிநாதம்
பிரசாதவகவல்
புத்தநூல்
புராணசாரம்
பூஜாகரணம்
பெரியபுராணம்
போஜனவிதி
போற்றிப்பஃறொடை
மெய்ஞ்ஞானவிளக்கம்

திருச்சிற்றம்பலம்.

சிவப்பிரகாச வியாக்கியாநம்.

காப்பு.

திருமேவுமுண்மைச்சிவப்பிரகாசத்தின்
மருமேவுபேருரைக்குமாணுச் - செருமேற்
றெருடக்குஞ்சமர்க்கட் சுரிகுழன்மான்றந்த
கடக்குஞ்சரக்கன்றே காப்பு.

இந்தச்சிவப்பிரகாசமென்று சொல்லப்பட்ட நூலுக்கு வரலாறுவது பூரணகத்தாவாயிருக்கப்பட்ட ஸ்ரீகண்டபரமேஸ்வரன் தானருளிச்செய்த முன்னூலாகியசிவாகமத்தில் ஞானகாண்டமா யிருக்கப்பட்ட பதிபசு பாசத்தினுண்மையை ஸ்ரீநந்திதேவதம்பிரானுர்க்குக் கடாக்ஷித்தருள அந்தவுபதேசத்தின் பயனுயிருக்கப்பட்ட சிவஞானபோதமாகிய மூலக்கிரந்தம் பன்னிரண்டையும் ஸ்ரீநந்திதேவதம்பிரானுர் சநற்குமாரபகவான் முதலாயுள்ள விருடிகளுக்குக் கடாக்ஷித்தருள வந்த சநற்குமாரபகவான் சத்தியஞானதரிசனிகளுக்குக் கடாக்ஷித்தருள வந்த சத்திய ஞானதரிசனிகள் பரஞ்சோதிமாமுனிகளுக்குக் கடாக்ஷித்தருள வந்தப் பரஞ்சோதிமாமுனிகள் திருவெண்ணெய் நல்லூரேதிருப்படை வீடாகவுடைய மெய்கண்டதேவதம்பிரானுர்க்குக் கடாக்ஷித்தருள வந்தமெய்கண்டதேவ தம்பிரானுர் அந்தமூலக்கிரந்தம் பன்னிரண்டின்வழியே பன்னிரண்டுசூத்திரமாக வகுத்து

அந்நூற்பெயராலே சிவஞானபோதமென்னுந் திருநாமத்தினையுஞ்சாத்தி வழிநூலாகச்செய்தருளித் தமதுதிருவடியைப்பெற்ற அருணந்தி தேவதம்பிரானுர்க்குக் கடாக்ஷித்தருள அவரந்நூலை யாராய்ந்துபார்த்தருளி யந்நூற் சொற்சுருங்கி யத்தமாழ்ந்திருக்கையினாலே யந்நூலினத்தத்தை விரித்துச் சிவஞானசித்தியென்னுந் திருநாமத்தினையுஞ்சாத்தி வழிநூலாகச்செய்தருள இந்தவிரண்டுநூலையுங் கொற்றவன்குடியில் உமாபதிதேவதம்பிரானுர் திருவுள்ளத்தடைத்தருளி யந்தவிரண்டுநூலினத்தமுந் தீவிரதரமுள்ள புத்திமான்களுக்கொழிந்து மற்ருெருவர்க்குந் தெரியாதென்றுசண்டியாவர்க்கு மெளிதாக வறியத்தக்கதாக அந்தவிரண்டுவழிநூலினத்தமு முன்னூலாகிய சிவாகமத்தினத்தமுந் தம்மிடத்தில் விளைவதா யிருக்கப்பட்ட திருவருண்ஞானமுங் கூட்டிப்பொதுவைம்பது செய்யுளாகவு முண்மையைம்பது செய்யுளாகவும் ஆகத்திருவிருத்த நூறுகக்கொண்டு சிவப்பிரகாசமென்னுந் திருநாமத்தினையுஞ் சாத்திச்சார்புநூலாகச் செய்ததெனவறிக. என்றிங்ஙனஞ் சிவாகம முன்னூலென்பதற்குஞ் சிவஞானபோதமுஞ் சிவஞானசித்தியும்வழிநூலென்பதற்கு மிந்தச்சிவப்பிரகாசஞ் சார்புநூலென்பதற்கும் பிரமாணமாவது:— "வினையினீங்கி விளங்கிய வறிவின் முனைவன் கண்டது முதனூலாகும்"— "முன்னோர் நூலின் முடிபொருங்கொத்துப் பின்னோன்வேண்டும் விகற்பங்கூறி யழியாமரபினது வழிநூலாகும்"—"இருவர்நூற்கு மொருசிறை தொடங்கித் திரிபுவேறுடையது புடைநூலாகும்"— "தன்கோணிறீஇப் பிறர்கோண்மறுப்பினெதிர்நூலென்ப வொருசாரோரே" என்னுமிலக்கணவிதியைப்பற்றி, வினையினீங்கி விளங்கியவறிவின் முனைவன்கண்டது முதனூலாகும்; என்னும்விதியால் சிவாகமமுன்னூலான தெனவறிக. இரண்டாவது முன்னோர்

நூலின் முடிபொருங் கொத்துப்பின்னோன் வேண்டும் விகற்பங்கூறி யழியாமரபி னதுவழிநூலாகும்; என்னும்விதியால் சிவஞானபோதமுஞ் சிவஞானசித்தியும் வழிநூலானதெனவறிக. மூன்றாவது இருவர்நூற்கு மொருசிறைதொடங்கித் திரிபுவேறுடையதுபுடைநூலாகும்; என்னும்விதியால் முன்னூலாகிய சிவாகமத்தினத்தமும் வழிநூலாகிய சிவஞானபோதஞ் சிவஞானசித்தியினத்தமுங் கருத்திலுறைதிருவருளாகிய வேற்றுமையத்தமுங்கூட்டி யருளிச்செய்கையாலிந்தச் சிவப்பிரகாசஞ் சார்புநூலான தெனவறிக. என்றிங்ஙனஞ் சிவாகமமுன்னூலென்பதற்குஞ் சிவஞானபோதமுஞ் சிவஞானசித்தியும்வழிநூலென்பதற்குஞ் சிவப்பிரகாசம்புடையாகிய சார்புநூலென்பதற்கும் பிரமாணமேதென்னில் ஞானதீக்கைத் திருவிருத்தத்தில். "தேசமிகுமருட்பயின்ற சிவப்பிரகாசத்திற் றிரிந்துபொதுச்சங்கற்பநிராகரணத்திருத்தி, யாசிலருள்வினாவெண்பாச்சார்புநூலா லருளொளித்திற்றுறிகூடவளித்துஞானப், பூசைத்க்ககாரணமுன் புகன்றதனிற்புரிந்து புணர்விக்கச் சிவஞானபோத சித்திவழிநூன், மாசில்சதமணிக்கோவை முன்னூல்சான்று மருவுதிருமுறைத்திரட்டுவைத்தனன் மன்னுயிர்க்கே"—என்பது கண்டுகொள்க. அன்றியுமிந்தச்சார்புநூலாகிய சிவப்பிரகாசமென்னுநூலிலே முன்னூலினத்தமும் வழிநூலினத்தமும் அதுநீங்கலாக வேற்றுமையத்தமுங்கூட்டி யருளிச்செய்ததற்குப் பிரமாணம். இந்நூலிலே. "தெரித்தகுருமுதல்வருயர்" என்றசெய்யுளிலே "இறைவனூலுங் கலந்து" என்றமையான் முன்னூலினத்தமுங் கூடினதெனவறிக. "விளம்பியநூலவை யிரண்டும் விரும்பிநோக்கி" என்றமையால் வழிநூலினத்தமுங்கூடினதெனவறிக. "கருத்திலுறைதிருவருளும்" என்றமையால் திரி

புவேறுடைய வேற்றுமையத்தமுங்கூடின தெனவறிக. ஆக மூன்றுவகையு மிங்ஙனங்கண்டுகொள்க.

இந்தச்சிவப்பிரகாசமாகிய நூலிற்செய்யுணூற்றுக்கு ங்கருத்தே தென்னில்:—பாயிரமீராறு பதியாறுபல்லுயிரொ ன், றேயுந்திரோத மலமொன்றென்பர்—தூயபத, முத்தித ருமாமாயை யொன்றுகுமூவுலகிற், புத்திதருமாயைப் புணர் ப்பாறு—பெத்தம்விட,நன்றுதீதாகும் வினைநாலாகு நாடோ றுந், துன்றுமலத்தின் றொகையொன்று—பொன்றவருங், கேவலமைந்து கிளக்கி னுயிருக்குப், பாவுணர்த்தும் வைகரி யின் பாலிரண்டு—தேவர்களுங், கூடுஞ் சகல நாலைந்தாகுங் கூடுமலம், வீடுகின்ற சுத்தவியப்பொன்று—நீடுமின்ப, முத் தியொன்றுக மதித்தருளால் முன்னோர்கள், பத்தியாற்சொ ன்ன பரிசினு—லித்தலமே, லுண்மையுரைக்கி னுயிருண்மை யொன்பதா, நண்ணவத்தை மூன்றுநலமாக—வெண்ணரிய, தன்னையுணர்த்துந்தகையைந்து, தன்னுணர்த்து மன்னுணர் வின் ஞானவகைமூன்று—பின்னுயிரை, மாசறவேகாணும் வ கையைந்து மற்றதனி, லாசொழிக்குந்தன்மையது நான்கு— தேசனுருப், பார்வையறப்பார்க்கும்வகை பத்தாம்பஞ்சாக் கரத்தைத், தேரும்வகை மூன்றுதெரியுங்கால்—சீர்மருவு, ம ன்பாற்சிவனை யநுபவிக்கு மெய்யடியா, ரின்பப்பகுதி யிரு மூன்று—துன்பமறச், சொற்றருநூலின்கருத்தொன்று சொ ற்றருநூ,னற்றவருக் கீயுநலமொன்று—முற்றவரும், பந்தம றுத்த சகநாதன் பார்வையென, வந்தளித்த சம்பந்தமாமு னிவ—னெந்தைபதஞ், சென்னியின்மேல்வைத்துச் சிவப்பிர காசக்கருத்தை, யன்னவயற்காவை யம்பலவ—னன்னயத் தாற், சொன்னனெழுபிறப்புந் தொல்லைவினையுந்தீர, மன் னுகமத்தை மதித்து. எ—து. கண்டுகொள்க.

• அன்றியுமிந்நூலுக்குத் திருவடிவரைவு மதிகாரமுமொக்கவரும்வகையாவது: "ஓங்குபரந்தநலம்வளர்தேவர்பா-ரீங்கிவையாறு மிறைவன்வணக்கம் - புறச்சமயத்தவர் நூற்கருத்தாகு-மூவகைவிரும்பிய கிரியையெனமூன்று-மாவது தீக்காமுறைமையதாகும் - தெரித்ததொன்மை யென விவ்விரண்டும்-விரித்தநூன்மரபவையடக்கம்மே - பலகலைநீடிங்குல சங்கந்த - மேற்றவிவ்வாறு மிறைவனிலக்கண - மெண்ணரிதொன்றும்பசுவினிலக்கண- மேகமாயொன்றுமலமுந் திரோதமு - முன்னலொன்றுங் குடிலையினியல்பா-முருவாதியென்னைபடைத்தவல்ல-லருத்திமன்னியவாறுமசுத்தத்- திருத்தகு மாயையின் செய்தியதாகும்- நண்ணியகன்ம மேலையுற்றவென்-றெண்ணியநான்குங் கன்மத்தியல்பே - மோசமிகவென்றெண்ணியவொன்றும் - வேகமிகுமலமைந்தின்விதியே-யோங்கின்மைமாயையந்நியம்புகலு- மீங்கிவையைந்துங் கேவலத்தியல்பே-வந்தடைந்தித்தகைபேசரியைவகை - யந்தமிலவகில்குணமானதனுவுடன் - சொன்னமுந்தியிந்நிலைதோற்றி-யன்னபத்துஞ் சகலவவத்தையே - யினையநாடியென விவ்விரண்டு-முனைவன் சுத்தமுறைமையதாகு - மரிவையரொன்றும் பரசமயத்தவர்-மருவியமுத்தியின் வாய்மையதாகு-மென்னும்பொதுவியல் விருத்தமைம்பதின் -மன்னியகருத்தை வகுத்தனனிப்பா-லீங்கிவையொன்று முண்மையிற்பாயிரஞ் - செறிந்திடுமுருவுண ரறிவெனில்வாயி-லறிவிறலெவ்வறி வசத்தறிந்ததுவுஞ் - சத்திநுகண்ணொளி யோரிடத்தெட்டு - மித்திறமான்ம விலக்கணமாகு - மெண்ணவிவ்வகை நீக்கமின்மூன்று - மண்ணலளித்தவவத்தையதாகு-மருவியதனக்கெனக் கண்டறிபுலன்க - ளிருணனியறிந்திடு மிவையோ ரைந்தும்-பொருவிலான்மாவை யுணர்த்தல்புகலுங்-காட்டிடும்பன்னிற மாயையிம்மூன்று - மூட்டுஞான வாய்மையையுரைக்கு-

தேசுறமும்மையின் பாரிப்பதாகுந் - தன்னறிதத்துவ முறை தருசுத்த மின்னவைநான்கு மன்னுயிர்த்தரிசனம்-புகல்ருமி ன்றுநோக்கிந்நிலையடைபவ-ரிகலறுநான்கு மிலங்குயிர்ச்சுத்தி-பொற்புறமொடுங்கிடா பற்றிடுமுந்திய-சொற்பெறுபாசம் விளம்பியபாவிக்கி-லொன்றிரண்டாகியழிந்திடுமெல்லை-யென்றிவைபத்து மிலங்குயிரிலாபம் - பந்தந்திருவெழுத்தை ந்திலாசுறு - மந்தமின்மூன்றுமைந்தெழுத்தருணிலை-திங்குறு குறிப்பக மண்டமண் தொண்டரொன்-ருங்கிவையாறு மணை ந்தோர்தன்மை - நிலவுலகொன்று நூற்கருத்தாகுந்-திருவரு ளொன்று மருளுறைநூலைக்-கொடுக்குமுறைமைப் பகுதிய தாகுமென்-றிப்படியுமாபதி தேவனுரைத்த - மெய்ப்படுசிவ ப்பிர காசவிருத்தக் - கருத்தினதுண்மை விரித்துரைத்தருளி னன்-சண்பையில்வாழுந் தவகுருநாதன் - பண்பமர்சிற்றம்ப லவன்ருனே. எ - து. கண்டுகொள்க.

என்றிங்ஙனங் கூறிவந்தவகையில் முன்னுள்ள சிவஞானபோதத்தினத்தமுஞ் சிவஞானசித்தியினத்தமு மிந்தச் சிவப்பிரகாசவழிநூலினத்தமுங் கூடினதேயானு லந்நூல்களைப்போலச் சூத்திரம் பன்னிரண்டு மிந்நூலினின்ற முறைமையெங்ஙனே யென்னில் அவைவருமாறு. ஓங்கொளியாயென்ற விருத்தந்தொடங்கி தொன்மைய வாமென்னும் விருத்த முடிவாகிய செய்யுட்பன்னிரண்டும் பாயிரமாக வகுத்தருளிச்செய்து மேற்பதி யிலக்கணமாகிய பலகலையென்ற விருத்தந்தொடங்கி ஏற்றவினவயென்ற விருத்தமுடிவாகிய செய்யுளாறு முதற்சூத்திரமாகவும் பசுவிலக்கணமாகிய எண்ணரிதாயென்ற விருத்தந்தொடங்கி அரிவையரின்புறுமுத்தி யென்ற விருத்தமுடிவாகிய செய்யுள்முப்பத்திரண்டு மிரண்டாஞ்சூத்திரமாகவும் ஆகப்பொதுவைம்பது மிங்ஙனம்வகுத்து

மேலுண்மை யைம்பதில் இங்கிவையென்ற விருத்தமொன்றும் இந்தஉண்மைக்கு அதிகாரவகுப்பாகவும் மேல் ஆன்மவிலக்கணமாகிய செறிந்திடுமென்ற விருத்தந்தொடங்கி ஓரிடத்திருத்தலென்ற விருத்தமுடிவாகிய செய்யுளெட்டு மூன்றுஞ்சூத்திரமாகவும் அவத்தைத் தன்மையாகிய எண்ணவொன்றிலாததீதம் இவ்வகையவத்தை நீக்கமிலதீதம் ஆகச் செய்யுள்மூன்று நாலாஞ் சூத்திரமாகவும் உணர்த்து முறைமையாகிய மருவியபொறியிலென்ற விருத்தந்தொடங்கி யறிந்திடுமனுதி யென்ற விருத்தமுடிவாகிய செய்யுளைந்தும் ஐந்தாஞ் சூத்திரமாகவும் ஞானவாய்மையாகிய காட்டிடுங்கரணம் பன்னிறங்கவரு மாயைமாமாயையென்னும் விருத்தமூன்றினுள் காட்டிடுங்கரணமொன்றும் ஆறுஞ்சூத்திரமாகவும் நின்றவிருத்தமிரண்டு மேலதற்கோர் புறனடையாகிய வேழாஞ்சூத்திரமாகவும் மேலதன்பயனென்னு மதிகாரத்தினுள் தேசுறமருவுமென்ற விருத்தந்தொடங்கி எல்லையில்பிறவியென்னும் விருத்தமுடிவாகிய செய்யுட் பத்தொன்பதும் புனிதனுமமென்னு மதிகாரமாகிய பந்தமானவை திருவெழுத்து ஆசுறுவென்னும் விருத்தமூன்றும் ஆகமுன்னுங் கூட்டிச்செய்யுள் இருபத்திரண்டினுள் தேசுறமருவுமென்ற விருத்தமொன்றும் இவையிற்றுக்கு அதிகாரவகுப்பாகவும் ஆன்மதரிசனமாகிய தன்னறிவதனுலென்ற விருத்தந்தொடங்கிச் சுத்தமாஞ்சத்தி யென்ற விருத்தமுடிவாகச் செய்யுள் நாலும் எட்டாஞ்சூத்திரமாகவும் ஆன்மசுத்தியாகிய புகலருமசத்தர்தம்பா லென்ற விருத்தந்தொடங்கி அடைபவர் சிவமேயாகு மென்றவிருத்தமுடிவாகிய செய்யுள்நாலும் பஞ்சாக்கர தரிசனத்தில் விருத்தமூன்றும் ஆக முன்னுங்கூட்டிச்செய்யுளேழும் ஒன்பதாஞ் சூத்திரமாகவும் ஆன்மலாபமாகிய பொற்புறுகருவியென்ற விருத்தந்தொடங்கி எல்லை

யில் பிறவியென்ற விருத்தமுடிவாகிய செய்யுட்பத்தும் பத்தாஞ் சூத்திரமாகவும் மேல்அணைந்தோர் தன்மையாகிய தீங்குறு மாயையென்ற விருத்தந்தொடங்கித் தொண்டர்களிடமென்ற விருத்தமுடிவாகச்செய்யுள் ஆறினுள் தீங்குறு குறிப்பிடம் அகம்புறம் அண்டம் மண்முதலென்னும் விருத்தமைந்தும் பதினொன்றாஞ் சூத்திரமாகவும் தொண்டர்களிடமென்ற விருத்தமொன்றும் பன்னிரண்டாஞ் சூத்திரமாகவும் நின்றதெனவறிக. இங்ஙஞ்ன சூத்திரம் பன்னிரண்டும் வகுத்து நிலவுலகாயிதாதி யென்னும் விருத்தமொன்றும் இந்நூலின்கருத்தாகவும் திருவருள்கொடுத்து என்னும்விருத்தமொன்றுஞ் சீடனுக்கு நூலுமத்தமுங் கொடுக்குமுறையாகவும் வகுத்து இந்நூலருளிச்செய்ததெனவறிக, ஆகவிங்ஙனஞ் சூத்திரங்கள் வகுத்ததுக்கு மேலெழுதுகிற வியாக்கியிலே யந்தந்த வதிகாரங்கடோறுஞ் சிவஞானபோதத்திலுஞ் சிவஞானசித்தியிலும் வருஞ்சூத்திரத்தினேதுக்களுங் காட்டியெழுதுகிற முறைமையிலே சூத்திரம்பன்னிரண்டுங் கண்டுகொள்க.

இந்த வியாக்கியாநஞ்செய்தது மெய்கண்டசந்ததியில் காவையம்பலநாதத்தம்பிரானுர் திருவடிமரபில் ஆசாரியரில் மதுரையில் ஞானப்பிரகாசத் தம்பிரானுர்திருவடியடியாரில் சிவப்பிரகாசன் செய்தவியாக்கியாநமெனவறிக. இந்தச் சிவப்பிரகாசமாகிய நூலுக்கு முன்னோர்களும் வியாக்கிசெய்திருக்க இப்பொழுது இந்தவியாக்கிசெய்யவேண்டுங் காரணமேதென்னில் முன்னுள்ளதம்பிரான்களெழுதின வியாக்கிகளெல்லாம் பொழிப்புரையாகவெழுத அதனோடு சமயிகள் கருத்துகளுங்காட்டி யென்றம்பிரான் ஞானப்பிரகாசத்தம்பிரானு ரெழுதின வியாக்கியின்வழியே தொ

ந்தனையும் பாட்டுஞ்சேர்த்து அதுநீங்கலாகக்காவையம்பல நாதத்தம்பிரானூர் இந்நூலின் கருத்தாகச் செய்தருளின குறள்வெண்பா நூறும் இந்நூலிற் பாட்டுகடோறும் பகுத்துச் சேர்த்து அந்தக்குறளின் கருத்தாகிய அத்தங்களுக்குந் தவறுவராமல் முன்னுண்டான வியாக்கிகளின்பொழிப்போடும் விரிவோடும் நுட்பமும் அகலமுங்காட்டி வழிநூல்களிலுண்டான சூத்திரம் பன்னிரண்டும் இந்நூலிலேவகுத்து வியாக்கி செய்ததெனவறிக. இங்ஙனம் பலவகையாக வியாக்கி யெழுதுகைக்கு விதியேதென்னில் அஃதாவது "பொழிப்பகலநுட்பநூலெச்சமென்றூருக், கொழித்தகலங்காட்டாதார் சொற்கள் - பழிப்பி, னிரையாமாசெக்கர் நெடுங்குன்றநாடா, வுரையாமோ நூலுக்குநன்கு." என்றமையான் நூல்களுக்கு நால்வகைப்பொருள்களுங் கூட்டி வியாக்கிசெய்யும் விதியுண்டாகையா லவ்விதியைப் பற்றிப் பொழிப்பும் அகலமும் நுட்பமும் நூலெச்சமுங் காட்டி வியாக்கியெழுதின தெனவறிக. அஃதாவது "பொழிப்பெனப்படுவது பொருந்தியபொருளைப் பிண்டமாகக்கொண்டுரைப்பதுவே" எ - ம். "அகலமென்பதாசறக்கிளக்கின் விகலமின்றிவிரித்துரைப்பதுவே" எ - ம். "நுட்பமென்பது நுழைபொருளியாவுந் திட்பமாகத்தெளியக்கூறல்" எ- ம். "எச்சமென்ப திருபொருளொழிவு மிச்சமாக விரித்துரைப்பதுவே" எ - ம். வருமிலக்கணவிதியைப்பற்றி யெனவறிக. இதிற் பொழிப்பாவது சத்தத்துக்கு அத்தமாகத்தொகுத்தெழுதுகை யெனவறிக. அகலமாவது அதனைவிரித்தெழுதுகை யெனவறிக. நுட்பமாவது கடாவுக்கு விடைகொடுத்தெழுதுகை யெனவறிக. எச்சமாவது பாட்டிற் புகுதாதபொருள்களை யமைத்தெழுதுகை யெனவறிக. மேற்பாயிரம்வருமாறு,

இங்ஙனமிந்தநூல்களுக்கு முந்தப்பாயிரங் கூறுகைக்கு விதியேதென்னில். "ஆயிரமுகத்தா னகன்றதாயினும் பாயிரமில்லது பனுவலன்றே" என்னும்விதியைப்பற்றி முந்தப்பாயிர மருளிச்செய்யவேண்டி இந்நூலுக்குக் காப்பொருசெய்யுளாகவும் பாயிரம் பன்னிரண்டு செய்யுளாகவுமருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

ஒளியானதிருமேனி யுமிழ்தானமிகமேவு
களியாரவருமானை கழனாளுமறவாம
லளியாருமலர்தூவு மடியார்களுளமான
வெளியாகும்வலிதாய வினைகூடநினையாவே.

ஒளிபிதுகாப்பருட் கணபதிகழலிணை
தெளிபவருளம்வினைசேராவென்றது.

வியாக்கியானம். ஒளியானதிருமேனி. என்பது. ஞானப்பிரகாசமான திருமேனியிலே,—உமிழ்தானமிகமேவு களியாரவருமானை. எ-து. பொழியாநின்ற மதத்தினை மிகவும் பொருந்தப்பட்டுக் கர்வமிகுதியாலே யெழுந்தருளாநின்ற யானைமுகத்தினையுடைய மூத்தநாயனார்,—கழனாளுமறவாமல். எ-து. அவனது ஸ்ரீபாதத்தை நாடோறுமறவாமல்,—அளியாருமலர்தூவு மடியார்கள். எ-து. வண்டுகளை யாட்சியாகவுடைய பூக்களினாலே யர்ச்சித்து வழிபடுகிற தொண்டராயுள்ளவர்கள்,—உளமானவெளியாகும். எ-து. உள்ளமானது அஞ்ஞானமாகிய விருணீங்கி சிவஞானம் பிரகாசியா நிற்கும். ஆகையாலே,—வலிதாயவினைகூட நினையாவே. எ-து. அவர்களைமிக்க வினைகளானதும்பொருந்தவிசாரியாது. எ-று. என்னவே இந்நூல்காப்பது நிமித்தமாக வழிபடாநின்றேமென்பது கருத்து.

நுட்பம். ஞானமென்றது அறிவெனவறிக. தானமென்றது மதமெனவறிக. அடியார்களென்றதுதங்கள் சுதந்தரஹானியையறிந்து வழிபடுந்தொண்டர்களெனவறிக. சுதந்தரஹானியாவது யானெனது கெடநிற்கை யெனவறிக. வலிதாயவினையென்றது. பிராரத்தம் புசிக்கச்சே யேறுகிற ஆகாமியகன்மமெனவறிக. இதற்குப்பிரமாணம். திருவருட்பயனில். "ஏன்றவினையுடலோடேகு மிடையேறுவினை, தோன்றி லருளேசுடும்." எ - து. கண்டுகொள்க. இதன்கருத்து. இந்நூலுக்குக் காப்பெனவறிக. இனிப்பாயிரம் பன்னிரண்டும் வருமாறு.

நின்மலசொரூபமாயிருக்கப்பட்ட பரமசிவமானது ஆன்மாக்களுக்குண்டான ஜநநமரண்துக்கத்தை நீக்குகைப் பொருட்டாகத் திருவம்பலத்தின்கண்ணே நின்று திருநடஞ்செய்த வவதாரத்தைநோக்கி யிந்நூற்செய்துமுடிவதுபொருட்டாகத் தோத்திரம்பண்ணுவா னெடுத்துக்கொண்டருளியது.

ஓங்கொளியாயருண்ஞானமூர்த்தியாகி யுலகமெலாமளித்தருளு முமையம்மைகாணத், தேங்கமழுமலரிதழி திங்கள்கங்கை திகழரவம்வளர்சடைமேற்சேரவைத்து, நீங்கலரும்பவத்தொடர்ச்சிநீங்கமன்று ணின்றிமையோர் துதிசெய்ய நிருத்தஞ்செய்யும், பூங்கமல மலர்த்தாள்கள் சிரத்தின்மேலும் புந்தியினு முறவணங்கிப் போற்றல் செய்வாம். (க)

மன்னியகடவுள் பொன்னடிவாழ்த்தி
முன்னவனுண்மை முறைமைமொழிந்தது.

வி - ம். ஒங்கொளியாய். எ-து. நின்மலசொரூபமாயிருக்கப்பட்ட பரமசிவமானது மிகுந்தபிரகாசமான பரையினது சொரூபமாகிய பேரொளியாய்ப் பிரிவற நிற்கச்செய்தே பிரபஞ்சங் காரியப்படுத்துமவதரத்து,— அருண்ஞானமூர்த்தியாகி. எ - து. தனது காருண்ணியத்தினாலே யிச்சாஞானக் கிரியாசொருபனாய்,—உலகமெலா மளித்தருளுமுமையம்மைகாண. எ - து. பிரபஞ்சத்தையெல்லா மிரக்ஷித்தருளுகிற வுமாபரமேஸ்வரியார்திருக்கண் சாத்தியருள,—தேங்கமழு மலரிதழிதிங்கள்கங்கை திகழரவம்வளர்சடைமேற் சேரவைத்து. எ - து. மணம்விட்டு வீசாநின்ற கொன்றை மலரினையுந் திருவிளம்பிறையினையுங் கங்காபரமேஸ்வரியையும் பணாமணிகளினாலேவிட்டு விளங்காநின்ற நாகத்தினையு நீண்டதிருச் சடாபாரத்திலே பொருந்தவைத்து,—நீங்கலரும் பவத்தொடர்ச்சி நீங்க. எ - து. ஆன்மாக்களால் விட்டுநீங்குதற்கரிதாகிய பிறவித்தொடர்ந்தனைவிட்டு நீங்குகைப்பொருட்டாக,—மன்றுணின்றிமையோர் துதிசெய்ய நிருத்தஞ்செய்யும். அநுவயம். இமையோர்துதிசெய்ய மன்றுணின்று நிருத்தஞ்செய்யும். எ - து. தேவர்களாயுள்ளோர்கள் தோத்திரம்பண்ணத் திருவம்பலத்தின் கண்ணேநின்று திருக்கூத்தாடல் செய்தருளுமவனது,—பூங்கமலமலர்த்தாள்கள் சிரத்தின்மேலும்புந்தியினு முறவணங்கிப் போற்றல்செய்வாம். எ- து. பொலிவினையுடைத்தாகிய தாமரைமலர் போன்ற ஸ்ரீபாதங்களை இந்நூல்செய்து முடிவதுபொருட்டாக வெனதுதலைமேலும்இதயத்திலு மழுந்தவைத்துத்தோத்திரம் பண்ணுகின்றேன். எ - று.

நு-ம், ஒங்கொளியாய். என்பதற்கு அந்தப்பரமசிவமானதுபராபினது சொரூபமாகிய பேரொளியாயிருக்குமென்று

பொருட்கூறியதே தென்னில் அஃதாவது, ஆய்என்ற வி காரச்சொற்கொண்டே அந்தப்பராசத்தியுடம்பாகப் பர மசிவநிற்கையாலே யப்படிச் சொல்லப்பட்ட தெனவறிக. அதற்கு வழியேதென்னில் தனக்கென்றொரு நிறமில்லாத சுத்தபடிகமானது கூடினதினிறமாயிருந்தாற்போலத் தனக் கென்றொரு சொரூபமில்லாத அந்தப்பரமசிவமானது தன து பரையினது சொரூபமாகிய பேரொளி யாகையாலேயும் அந்தச்சத்தியிடமாக விச்சாஞானக்கிரியா சொரூபனாகையா லேயும் அப்படிச்சொல்லப்பட்டதெனவறிக. இதற்கு. பி- ம். சிவஞானசித்தியாரில், "பொன்மைநீலாதிவன்னம் பொருந் திடப் பளிங்கவற்றின், றன்மையாய் நிற்குமாபோற் சத்தித ன் பேதமெல்லா, நின்மலன்றானாய்த்தோன்றி நிலைமையொ ன்றாயேநிற்பன், முன்னருட் சத்திதன்பால்முகிழ்க்குந்தான் முளையானன்றே." எ - து. கண்டுகொள்க. அன்றியுமந்த ப்பரமசிவமானது தனக்கென்றொரு சொரூபமாயிராதென் பதற்கு. பி- ம். சித்தியாரில். "குறிப்படியினின் றட்டகுண மெட்டுச்சித்தி" என்னுஞ்செய்யுளில் "மேலொடுகீழில்லா,னி றுத்துவதோர் குணமில்லான்றன்னை யொருவருக்கு நினைப் பரியானென்று மில்லான்." எ - ம். கண்டுகொள்க. அன்றி யு மிந்நூலினும் "பலகலை" என்னுஞ்செய்யுளிலே "பூதிபரமே யதுதானிலவு மருவுருவின்றிக் குணங்குறிகளின்றி நின் மலமாய்" எ-ம். தேவாரத்தினும் "இன்னதன்மையனென்றறி யொணாவெம்மானை" எ-ம். திருவாசகத்தினும் "ஒருநாமமோ ருருவமொன்றுமிலார்." எ-ம். இப்பொருட்பற்றி யெனவறிக. அன்றியு மந்தப்பரமசிவமானது அப்படிப் பேரொளியாயிரு க்குமென்றது. அதுசோமசூரியாக்கினி நக்ஷத்திரங்கள்முத லாயுள்ளவையிற்றுக்கு மொளிகளையுங் கொடுப்பதாய்சக்ஷு விந்திரியத்தை மறைக்கப்பட்ட புறவிருளைப்போலன்றி மற்

றுள்ள விடயவிந்திரியங்களையு மறைப்பதாய் ஆன்மாக்களு டைய விச்சாஞானக்கிரியைகளையு மறைக்கப்பட்ட பேரந்த காரமாகிய ஆணவமலத்தைநீக்குகையாலே அப்படிச்சொன்ன தெனவறிக. அப்படிச்சிவன்பேரொளியுமா யிருப்பனென் பதற்கு. பி-ம். தேவாரம் "காரொளிய திருமேனிச்செங்கண் மாலும்" என்னுந்திருப்பாட்டிலே "பேரொளியைப் பெரும் பற்றப்புலியூரானை" எ-து. கண்டுகொள்க. அன்றியும் திரு வாசகத்தில். "வெளிவந்திலேனை விடுதிகண்டாய் மெய்ச்சுட ருக்கொல்லாமொளிவந்த பூங்கழல்" எ-ம். கோவைத்தி ருவாசகத்தில். "உருகுதலைச்சென்ற வுள்ளத்து மம்பலத்தும் மொளியே, பெருகுதலைச்சென்று நின்றேன்" எ-ம். கண் டுகொள்க. அன்றியும் சிவன்சோமசூரியாக்கினி நக்ஷத்தி ரங்கள் முதலாயுள்ளவையிற்றுக்கு மொளிகளைக்கொடுப் பானென்பதற்கு. பி-ம். சித்தியாரில். "நாயகன் கண் ணயப்பா லுயகிபுதைப்பவெங்கும், பாயிருளாகிமூடப்பரி ந்துலகினுக்கு நெற்றித், தூய நேத்திரத்தினாலே சுடரொளி கொடுத்த பண்பிற், றேயமா ரொளிகளெல்லாஞ் சிவனுருத் தேசதென்னார்" எ-து. கண்டுகொள்க. இனியருண்ஞானமூர் த்தியாகி. எ-கு. ஞானமொன்றையுஞ்சொல்ல விச்சாஞான க்கிரியா சொரூபனென்று பொருட்கூறிய தேதென்னில்ஞா னமுண்டானவிடத்திலே இச்சையுங்கிரியையு முண்டாகை யாலப்படிச்சொன்ன தெனவறிக. இதற்கு. பி-ம். சித் தியாரில். "எத்திறஞானமுள்ள தத்திற மிச்சைசெய்தி, வைத்தலான்மறைப்பின்ஞான மருவிடுங்கிரியை யெல்லாம்" எ-து. கண்டுகொள்க. இனி திங்கள்கங்கை திசமுரவம் வளர்சடைமேற்சேரவைத்து. எ-கு. இவைகளைப்பொருந்த வைத்து என்றதேதென்னில் பாம்புஞ் சந்திரனுந் தம்மிற் பகையாயிருக்கவு மவையிற்றைப் பகையறவைக்கையாலெ

னவறிக. இதற்கு. பி - ம். தேவாரத்தில் "பாம்பொடு திங்கட்பகை தீர்த்தாண்டாய்" எ - து. கண்டுகொள்க. நிருத்தமென்றது - பஞ்சகிருத்தியத்தை யெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில் "உலகமேயுருவமாக யோனிகளுறுப்பதாக, விலகுபேரிச்சாஞானக் கிரியையுட்கரணமாக, வலகிலாவுயிர்கட்கெல்லா மிருபயனுக்கியைந்து, நலமிகுதொழில்களோடு நாடகநடிப்பனுதன்" எ - து. கண்டுகொள்க. பவத்தொடர்ச்சி நீங்கநிருத்தஞ்செய்யுமென்றது மிப்பொருட்பற்றி யெனவறிக. அப்படிச் சிவன்பஞ்சகிருத்தியஞ்செய்யவே யான்மாக்களுக்கு மலபரிபாகம்வந்து முத்தியைப்பெறுவார்களென்பதற்கு. பி - ம். சித்தியாரில். "சொன்னவித்தொழில்களென்ன காரணந்தோற்ற வென்னில், முன்னவன் விளையாட்டென்று மொழிதலுமாமுயிர்க்கு, மன்னியபுத்திமுத்தி வழங்கவுமருளான்முன்னே, துன்னியமலங்களெல்லாந் துடைப்பதுஞ் சொல்லலாமே" எ - து. கண்டுகொள்க. இனி சிரத்தின்மேலும்புந்தியினுமுறவணங்கிப்போற்றல்செய்வாம். எ-கு. வஸ்துவொன்றுயிருக்க சிரத்தின்மேலும் புந்தியினுமென்று இருவகையானதேதென்னில் தீக்கையிலுண்டான சகளத்தையுந் தியானத்திலுண்டான நிட்களத்தையுமெனவறிக. அவையாவன, சகளமென்றது ஆசாரியமூர்த்தியாகிவந்து அறிவித்துத் திருவடியைவைத்ததெனவறிக. நிட்களமென்றது உயிர்க்குயிராய் நின்றறிவிக்கிற பேரறிவையெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில். "என்னையிப்பவத்திற்சேராவகையெடுத்தென் சித்தத்தே, தன்னைவைத்தருளினாலே தாளிணைதலைமேற்சூட்டும்." எ-ம். திருக்களிற்றுப் படியாரில் "சிந்தையினுமென்றன் சிரத்தினுஞ்சேரும்வகை, வந்தவனை மண்ணிடையும்வாராமற் - றந்தவனே." எ-ம். வருமேதுக்களைக்கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது நின்மலசொரூபியாயிருக்கப்பட்ட பரமசிவமானது தனதுபரையினதுசொரூபமாகிய பேரொளியுமாயிச்சா ஞானக்கிரியா சொரூபியுமாய்த்திருவம்பலத்தின்கண்ணே நின்று திருநடஞ்செய்த வவதரத்தை நோக்கியிந்நூற்செய்தமுடிவது பொருட்டாகத்தோத்திரம்பண்ணுமுறைமையை யறிவித்தது. (௧)

இங்ஙனந் திருநடஞ்செய்தருளுகிற சிவனுக்குண்டான கிருத்தியங்களுக்கெல்லா முடனாயிருக்கப்பட்ட பராசத்தியைநோக்கித் தோத்திரம்பண்ணுவா னெடுத்துக்கொண்டருளியது.

பரந்தபராபரையாதி பரனதிச்சை பரஞானங்கிரியைபரபோகரூபந், தருங்கருணை யுருவாகி விசுத்தாசுத்தத் தனுகரணபுவனபோகங்சடாங்க, விரிந்த வுபாதானங்கண்மேவியொன்றாய் விமலமாயைந்தொழிற்கும் வித்தாய் ஞாலத், தரந்தைகெடமணிமன்றுளாடல்காணு மன்னையருட்பாதமலர் சென்னிவைப்பாம். (௨)

புத்தியுமுத்தியும் பொருந்திநின்றளிக்குஞ்
சத்திதன்பேதத் தகைமைசாற்றியது.

வி - ம். பரந்தபராபரை எ - து. எங்கும்பரிபூரணமாயிருக்கிற மேலான பராசத்தியானது. ஆதி. எ - து. திரோதசத்தியுமாய்,—பரனதிச்சை பரஞானங்கிரியை. எ - து. பரனுடைய விச்சாசத்தியென்றும் மேலானஞானசத்தியென்றுங் கிரியாசத்தியென்றும்,—பரபோகரூபந்தருங்கருணையுருவாகி. எ - து. மேலானசிவபோகத்தைத் தன்னடியார்க்குக் கடாக்ஷித்தருளுகிற காருண்ணியசத்தி யிப்படியிச்சாஞானக்கிரியா சொரூபமாகி. இந்தப்பதத்துக்கிதுவன்றியு

மேலான சுகசொரூபத்தைத் தன்னடியார்க்குக் கடாக்ஷித்தருளுகிற காருண்ணியகத்தாவுக்குத் திருமேனியுமாய் என்பாருமுளர்,—விசுத்தாசுத்தத்தனுகரணபுவனபோகங்கடாங்க விரிந்தவுபாதானங்கண்மேவி. எ-து. சுத்தமாயையிலுண்டான தனுகரணபுவன போகங்களையு மசுத்தமாயையி லுண்டான தனுகரணபுவனபோகங்களையுந்தருகிற்பதாகப் பரந்தவிந்து மோகினி மானென்கின்ற மூன் றுபாதானங்களையும் பொருந்தி,—ஒன்ருய். எ-து. இங்ஙனம்பெயருந் தொழிலும் பலவாயிருந்துந் தாஞென்ருயிருப்பதாய்,—விமலமாய். எ-து. இந்தவுபாதானங்களோடு கூடியிருந்தாலுந் தானின்மலமாயிருப்பதாய்,—ஐந்தொழிற்கும் வித்தாய். எ-து. சிவன்செய்யப்பட்ட சிருஷ்டிதிதிசங்காரந் திரோபாவமநுக்கிரக மென்னப்பட்ட பஞ்சகிருத்தியங்களுக்குங் காரணமாய்,—ஞாலத்தரந்தைகெட மணிமன்றுளாடல் காணும். எ-து. பிரபஞ்சத்திலுள்ளார்பிறவிக்கிலேசநீங்குகைப் பொருட்டாக அழகியதிருவம்பலத்தின்கண்ணே சிவனைத் திருக்கூத்துக் கண்டருளும்,—அன்னையருட் பாதமலர் சென்னிவைப்பாம். எ-து. இந்தவியல்புகளையுடைய வுலகமாதாவினது கிருபைபொருந்தின ஸ்ரீபாதகமலத்தை யெனதுதலைமேலே வைத்துக்கொள்ளாநின்றேன். எ-று.

ஆ-ம். பரந்தபராபரை. எ-கு. பூரணமாகியமேலான பராசத்தியென்றதேதென்னில் பூரணகத்தாவாகியபரமசிவனுக்குச் சத்தியாய் நிற்கையாலெனவறிக. இதற்கு.பி-ம். சித்தியாரில். "எத்திறனின்ருனீசனத்திறமவளுநிற்பள்." எ-து.கண்டுகொள்க. இனி ஆதியென்றதைத் திரோதசத்தியென்றது. திரோதசத்திக்கு ஆதியென்றபேரானதேதென்னில் அந்தத்தி

ரோத மவதரசத்தியாகி யோரவதரத்திலேதோன்றுகையாலெனவறிக. இனி மற்றுள்ள விச்சாஞானக்கிரியாசத்திகளைப் பரனதிச்சைபரஞானங்கிரியையென்று இந்தச்சத்திகளுக்குச் சிவனைக்கூட்டிச்சொன்னதேதென்னில் சிவனுக்குஇந்தச்சத்திகள் இச்சாஞானக்கிரியாசத்திகளாய் நிற்கையாலெனவறிக. அவையாவன சிவன் ஆன்மாக்களை யிரக்ஷிக்கவேணுமென்று திருவுளத்திலேயொருநினை வெழுந்திருந்த வவதரத்துக்கிச்சாசத்தியாகையாலும் அதிலேயொரு அறிவெழுந்திருந்த வவதரத்துக்கு ஞானசத்தியாகையாலும் அந்த ஆன்மாக்களைப் பிரபஞ்சகாரியப்படுத்து மவதரத்துக்குக் கிரியாசத்தியாகையாலு மப்படிச்சொன்ன தெனவறிக. இங்ஙனஞ் சொன்னதற்கு. பி - ம். சித்தியாரில். "ஒன்றதாயிச்சாஞானக் கிரியையென்றொருமூன்றாகி, நின்றிடுஞ்சத்தியிச்சை யுயிர்க்கருணைசமாகு, நன்றெலாஞானசத்தி யானயந்தறிவனாதனன்றருட்கிரியைதன்னா லாக்குவனகிலமெல்லாம்." எ - து. கண்டுகொள்க. இனி பரபோகரூபந்தருங்கருணை யுருவாகி. எ - கு. மேலானசுகசொரூபமாகிய சிவபோகத்தைத்தன்னடியார்க்குக் கடாக்ஷித்தருளுகிற சத்தியென்று பொருட்கூறியதற்கு. பி-ம். தத்துவவிளக்கத்தில் "பவமேவியநெறிபந்திக்குமீசன் பசுக்கடம்மை." யென்னுஞ்செய்யுளில் "சத்திகண்ணூற்சென்று சார்ந்து பின்னர்ச், சிவமேவுவொன்றுகாண் கொச்சைக்காவலன்சித்திரிப்பே" எ - ம். இந்நூலினும். "முன்னைத் தகைவிலாமலங்கள்வாட்டி யத்தனையருளும்." எ - ம். திருவாசகத்தினும் "அவனருளாலே யவன்றாள்வணங்கி" எ - ம். கண்டுகொள்க. இனி விசுத்தாசுத்தத்தனுகரணபுவனபோகங்கடாங்க விரிந்த வுபாதானங்கள். எ - கு. விந்துமோகினிமானென்று பொருட்கூறியதேதென்னில் விந்துவென்றது சுத்தமாயையிற்றோன்றப்பட்ட விந்துசத்தியென

வறிக. மோகினியென்றது அசுத்தமாயையெனவறிக. மா
னென்றது அவ்வியத்தமாகிய பிரகிருதிமாயையெனவறிக.
என்னு முபாதானமூன்றுக்கும். பி - ம். சித்தியாரில்.
"மந்திரமத்துவாவின் மிகுத்தொருவடிவமாகத், தந்ததெனை
ரனுக்கென்னிற் சகத்தினுக்குபாதானங்கள், விந்துமோகினி
மான் மூன்றுமிவற்றின்மேலாகி விந்துச், சிந்தையாரதீதமா
ன சிவசத்திசேர்ந்துநிற்கும்." எ - து. கண்டுகொள்க. இனி
ஒன்றாய். எ - கு. பெயருந்தொழிலும் பலவாயிருந்துந் தா
னொன்றாயிருப்பதாயென்று பொருட்படுத்தினதற்கு. பி - ம்.
சித்தியாரில். "சத்திதான்பலவோவென்னிற்றானொன்றேய
னேகமாக, வைத்திடுங்காரியத்தால்" எ - து. கண்டுகொள்
க. இனி ஐந்தொழிற்கும் வித்தாய். எ - கு. சிவன்செய்யுங்கி
ருத்தியங்களுக்கெல்லா மிந்தச்சத்திகாரணமா யிருப்பளெ
ன்று பொருட்கூறியதேதென்னில் சிவன்யாதாமொன்றை
ச்செய்யுமிடத்து இந்தச்சத்தியைக்கூடாமற் செய்யானாகை
யாலப்படிச்சொன்னதெனவறிக. இதற்கு. பி - ம். திருக்
களிற்றுப்படியாரில். "நங்கையினானமனைத்துஞ் செய்தாற்
போலுடனைத்து, நங்கையினாற்செய்தளிக்கு நாயகனை" எ-ம்.
"நேரிழையா, டன்வசனாயேயிருப்பான்றான்" எ - ம்.
சித்தியாரினும். "அவளால்வந்த வாக்கமிவ்வாழ்க்கையெல்
லாம்." எ - ம். வருமேதுக்களைக்கண்டுகொள்க. இனி அ
ன்னையருட்பாதமலர் சென்னிவைப்பாம். என்றபதத்தில் அ
ன்னையென்றதை யுலகமாதாவென்று பொருட்கூறியதேதெ
ன்னில் இந்தச்சத்திசர்வான்மாக்களையுந்தோற்றுவித் தூட்டி
யுறக்கி யனுக்கிரகித்து நிற்கையாலப்படிச்சொன்னதெனவ
றிக. இதற்கு. பி - ம். சித்தியாரில் "பேசரியவுயிரையெலா
ம்பெற்றுநோக்கிப் பெரும்போகமவையளித்துப் பிறப்பினை
யு மொழித்திட், டாசகலுமடியருளத்தப்பனுடனிருக்கு மன்

னையருட்பாதமலர்சென்னிவைப்பாம்." என்பதனுள் "ஆசக லுமடியருளத் தப்பனுடனிருக்குமன்னே." எ - து, கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது பராசத்தியானது திரோதசத்தியுமா யிச்சாஞானக்கிரியாசத்தியுமாய்ச் சிவனுக்குத்திருமேனியுமாய்ச் சுத்தமாயையு மசுத்தமாயையு மாகிய்விந்துமோகினிமானென்கிற வுபாதானங்களையுங்கூடிநின்று காரியப்படுத்திச்சிவன்செய்யும் பஞ்சகிருத்தியங்களுக்குங் காரணமாயான்மாக்கள் ஜநநநீங்குகைப்பொருட்டாகத் திருவம்பலத்தின்கண்ணே சிவனைத்திருக்கூத்துக்கண்டருளுகிற பராசத்தியைநோக்கித் தோத்திரம்பண்ணின முறைமையையறிவித்தது. இவையிரண்டும்வழிபடுதெய்வவணக்கம். (உ)

இங்ஙனஞ்சொல்லப்பட்ட பரமேஸ்வரியோடும் பரமேஸ்வரன்கூடினவவதாரத்துத் திருவவதாரஞ்செய்தருளின மூத்தநாயனாரைநோக்கித் தோத்திரம்பண்ணுகின்றது.

நலந்தரநூலிருந்தமிழின்செய்யுட்குற்ற நண்ணுமவிடையூறுநலியாமைகருதி, யிலங்குமிருகுழையருகுபொருதுவரிசிதறி யிணைவேல்களிகழ்ந்தகயற்கண்ணியொடு மிறைவன், கலந்தருளவருமானைமுகத்தான்மும்மைக் கடமருவியெனநிலவுகணபதியினருளா, லலந்துமதுகர்முனிவர்பரவவளர்கமல மனையதிருவடியிணைகணினைதல் செய்வாம். (ங)

சொற்றருநூலிற் குற்றமணுகாவகை
பொற்புறுகரிமுக னற்பதம்பணிந்தது.

வி - ம். நலந்தரநூல். எ - து. இந்நூலுக்கெல்லா நன்மைகளுமுண்டாம்படியும்,— இருந்தமிழின்செய்யுட்குற்ற ந

ண்ணுமல். எ - து. பெரியதமிழாகிய தொல்காப்பியமுதலா யுள்ள விலக்கணங்களினீக்கப்பட்ட பஞ்சவதிகாரகுற்றங் களும்வந்து பொருந்தாதபடியும்,— இடையூறுநலியாமை கருதி. எ - து. இந்நூல்செய்துமுடிகைக்கு இராஜீகதெய்வீ கங்களினு லொருவிக்கினங்களும்வாராமலும் விசாரித்து, இலங்குமிருகுழையருகு பொருதுவரிசிதறி யிணைவேல்களி சழ்ந்தகயற்கண்ணியொடுமிறைவன் கலந்தருளவருமானைமு கத்தான். எ - து. விளங்கப்பட்டவிரண்டு மகரக்குழையள வுஞ்சென்று மோதிச்செவ்வரிபரந்து தனக்குவமையாகச் சொல்லப்பட்டவேல்களையும் பழித்தகயல்போன்ற கண்ணி னையுடைய பரமேஸ்வரியோடும் பரமேஸ்வரன்கூடியருள வெழுந்தருளின யானைமுகத்தினையுடைய,—மும்மைக்கடம ருவி யெனநிலவுகணபதியினருளால். எ - து. இரண்டுகன் னங்களாலு முபத்தத்தினுலும் பாயுமதமானது மலையிலேநி ன்று மருவிபாய்ந்தாற்போலவென்னும்படி பொருந்தப்படா நின்ற விக்கிநேஸ்வரனநுக்கிரகத்தாலே,— அலந்துமதுகர முனிவர்பரவவளர்கமல மனையதிருவடியிணைக ணினைதல்செ ய்வாம். எ - து. முனிவராகியவண்டுக ளாசைப்பட்டுத் தோ த்திரம்பண்ண நிறம்வளராநின்ற செவ்வித்தாமரைமலர்போ ன்ற வவனது ஸ்ரீபாதங்களைச்சிந்தியாநின்றேன். ஏ - று.

ரு - ம். நலந்தரநூல். எ - கு. நன்மையுண்டாக வெ ன்றதேதென்னில் சைவசித்தாந்தவத்தத்துக்கு மலைவுவராம லென்றதெனவறிக. இருந்தமிழின் செய்யுட்குற்றநண்ணுமல் எ - கு. பஞ்சவதிகார குற்றங்களும் பொருந்தாமலென்ற தேதென்னில் எழுத்துஞ் சொல்லும் பொருளும் யாப்புமல ங்காரமு மென்னப்பட்ட இலக்கணவிதிகளுக்குக் குறைவுப டாமலென்றதெனவறிக. இடையூறு நலியாமை. எ - கு.

இராஜீக தெய்வீகங்களினு லிடையூறுவராம லென்றதேதெ ன்னில் இராஜீகமென்றது படைக்கலங்களினுலுண்டானவி க்கிநமெனவறிக தெய்வீகமென்றது பசிகளினுலு நோய்க ளினுலுமுண்டான விக்கிநமெனவறிக. வரு மானைமுகத்தா ன். எ - கு. எழுந்தருளின யானைமுகத்தானென்ற தேதெ ன்னில் எழுந்தருளின தென்றது திருவவதாரஞ் செய்ததெ னவறிக.

இதனுற்சொல்லியது இந்நூற்செய்துமுடியுமிடத்து இ ந்நூலுக்கு நன்மையுண்டாம்படியு மிலக்கணவிதியிலுண்டா னகுற்றங்கள் பொருந்தாதபடியு மிடையூறுவாராதபடியும் விசாரித்து விக்கிநேஸ்வரனை நோக்கித் தோத்திரம்பண்ணு முறைமையினை யறிவித்தது. (௩)

இன்னமு மிந்நூல்செய்து முடிகைக்கு விக்கிநங்கள் வாராமல் விநாயகனுக்குப்பின்பு திருவவதாரஞ்செய்தருளி ன சுப்பிரமணியனை நோக்கித் தோத்திரம் பண்ணுகின்றது.

வளநிலவுகுலவமராதிபதியாய்நீல மயிலேறிவரு மீசனருண்ஞானமதலை, யளவில்பலகலையங்கமாரணங்க ளுணர்ந்த வகத்தியனுக்கோத்துரைக்குமண்ணல்விறலெ ண்ணு, வுளமருவுசூரனுரமெனதிடும்பையோங்கலொன் றிரண்டுகூறுபடவொளிதிகழ்வேலுகந்த, களபமலிகுறம கடன்மணிமுலைகள்கலந்த கந்தன்மலரடியிணைகள்சிந்தை செய்வாம். (௪)

அருமறைச்சிரப்பொரு ளகத்தியற்குரைத்த
முருகனதிருபதம் பரிவுடன்மொழிந்தது.

வி - ம். வளநிலவுகுலவமராதிபதியாய். எ - து. புது மைபொருந்தியிருக்கிற தேவர்கள்கூட்டத்திற்குக் கத்தாவா

யிருக்கப்பட்ட,— நீலமயிலேறிவருமீச னருண்ஞானமதலை. எ - து. நீலநிறத்தையுடைய மயிலை வர்கனமாகவுடையனுமாய பரமேஸ்வரன்தந்தருளும் ஞானப்பிள்ளை,—அளவில் பலகலை யங்கமாரணங்களுணர்ந்த வகத்தியனுக்கோத்துரைக்கு மண்ணல். எ - து. அளவில்லாத பலகலையாகியஞானங்களையும் சிக்ஷை நிருத்தம் சந்தசு சோதிடம் கற்பம் வியாகரணம் என்னப்பட்டவாறங்கமாகிய அங்கமும் இருக்கு எஜுர் சாமம் அதர்வணம் என்னப்பட்ட நாலுவேதமுமோதியுணர்ந்த அகத்தியமஹாவிருடிக்குப் பிரணவசொரூபத்துக்கு வியாக்கியானஞ்செய்த சுவாமி,—விறலெண்ணுவுளமருவுசூரனுரமெனதிடும்பையோங்க லொன்றிரண்டுகூறுபடவொளிதிகழ்வேலுகந்த. எ - து. பிறருடைய வெற்றியினைவிசாரியாத மனத்தினையுடைய சூரபத்மாவினுடையமார்பையும் என்னுடைய பிறவிக்கிலேசத்தினையும் அசுரரொதுங்கப்பட்ட கிரவுஞ்சபர்வதத்தையும் ஒவ்வொன்று இவ்விரண்டு கூறுபடத்தக்கதாகப் பிரகாசம்விளங்காநின்ற வேலிலே திருவுளம் வைத்தருளின,—களபமலிகுறமகடன்மணிமுலைகள் கலந்தகந்தன். அறுவயம். குறமகடன்களபமலிமணிமுலைகள்கலந்தகந்தன். எ- து. வள்ளிநாச்சியாருடையகளபச்சேறு மிகவும்பொருந்தின வொளியையுடைய திருமுலைத்தலங்களிலே முயங்கியருளின சுப்பிரமணியப்பிள்ளையாரது,—மலரடியிணைகள் சிந்தைசெய்வாம். எ - து. தாமரைமலர்போன்ற ஸ்ரீபாதங்களையு மிந்நூல்விக்கினமறச்சென்றுமுடிவதுபொருட்டாக நினையாநின்றேன். எ - று.

ரு - ம். தேவர்களுக்கதிபதியென்றது அவர்களுக்குக்கர்த்தாவாகையா லெனவறிக. நீலமயிலேறிவருமென்றது அஞ்ஞானமாகியவிருட்சியைவிட்டுத் தோய்வறநிற்கையாலெ

னவறிக. ஞானமதலையென்றது ஒருவரறிவியாமற்றானே யறிகைக்குண்டான மகத்துவத்தினாலெனவறிக. இடும்பையிரண்டுபடவென்றது பிறவித்துக்கமாகியவிடும்பை ஆன்மாவினோடுங்கூடிநின்று ஜநநமரணப்படுத்திவருகையினாலே அருளோடுங்கூடிவழிபடுமவதரத்து அதுநீங்குகையாலெனவறிக. ஒளிதிகழ்வேலுகந்தவென்றது தன்னைவழிபடுமடியார்க்குண்டானதுக்கங்களை ஜயிக்கவேணுமென்று திருவுள்ளத்தடைத்து வேலையெடுக்கையினாலெனவறிக.

இதனாற்சொல்லியது இந்நூலிடையூறுவராமல் முடியவேண்டி ஈசனருள்ஞானமதலையாகிய சுப்பிரமணியப்பிள்ளையாரைநோக்கித் தோத்திரம்பண்ணுமுறைமையையறிவித்தது. (ச)

இந்நூலருளிச்செய்கிறவத்தமுண்டானமுறைமை யெப்படியென்றுவினவப் பாரம்பரியமாக வுபதேசஞ்செய்தருளினசந்தானகுரவர் திருமுடியடைவுமேலருளிச்செய்கின்றது.

தேவர்பிரான்வளர்கயிலைக்காவல்பூண்ட திருநந்தியவர்கணத்தோர்செல்வர்பாரிற், பாவியசத்தியஞானதரிசனிகளடிசேர் பரஞ்சோதிமாமுனிகள்பதியாம்வெண்ணெய், மேவியசீர்மெய்கண்டதிறலான்மாறா விரவுபுகழருணந்திவிறலார்செல்வத், தாவிலருண்மறைஞானசம்பந்தரிவரிச் சந்தானத்தெமையாளுந்தன்மையோரே. (ரு)

ஆதிமாமுனிவர்க் கம்பிகாபதியருள்
கோதிலாஞானக் குருமரபுரைத்தது.

வி-ம். தேவர்பிரான்வளர்கயிலைக்காவல்பூண்ட திருநந்தி. எ-து. தேவர்களுக்குக்கத்தாவாகிய ஸ்ரீகண்டபரமே

ஸ்வரனெழுந்தருளியிருந்துள்ள மிக்ககயிலாயத்திருமலையை
க் காக்கிறதேவிரதமாகப்பூண்ட ஸ்ரீநந்திகேஸ்வரநாயனார்,
அவர்கணத்தோர்செல்வர். எ - து. அவரது திருவடியைப்பெ
ற்ற மஹாவிருடிகளி லொப்பில்லாத ஞானச்செல்வத்தையு
டைய சநற்குமாரபகவான்,—பாரிற்பரவியசத்தியஞானதரி
சனிகள். எ - து. அவர்திருவடியைப்பெற்றுப் பூமியிலேயெ
ழுந்தருளின சத்தியஞானதரிசனிகள்,— அடிசேர்பரஞ்சோ
திமாமுனிகள். எ - து. அவரது ஸ்ரீபாதத்தைப்பெற்ற பரஞ்
சோதிமாமுனிகள்,—பதியாம்வெண்ணெய் மேவியசீர்மெய்
கண்டதிறலான். அநுவயம். சீர்வெண்ணெயாம்பதிமேவிய
மெய்கண்டதிறலான். எ - து. சிறப்புமிக்கதிருவெண்ணெ
ய் நல்லூரோதிருப்படை வீடாகவுடையமெய்கண்டதேவநா
யனார்,—மாருவிரவுபுகழருணந்தி. எ - து. அவரதுதிருவடி
யைப்பெற்ற அழியாதபுகழைக்கலந்த அருணந்திதேவநாய
னார்,— விறலார்செல்வத்தாவிலருண்மறைஞானசம்பந்தர்.
எ - து. அவரதுதிருவடியைப்பெற்று வெற்றிபொருந்தின
செல்வமாகிய குற்றமில்லாதவருளைப்பெற்ற மறைஞானச
ம்பந்தநாயனார்,—இவரிச்சந்தானத்தெமையாளுந் தன்மை
யோரே. எ- து. இவர்களாறுதிருப்பெயரு மிந்தமெய்கண்ட
சந்தானத்து எம்மையடிமையாக வேவற்செய்வித்தாக்கொ
ள்ளுமுறைமையினையுடையோர்கள். எ - று.

ரு - ம். தேவர்பிரானென்றது பிரம விட்டுணுக்கள்
முதலாயுள்ள தேவர்களுக்குங் கத்தாவென்றதெனவறிக. வ
ளர்கயிலையென்றது உயர்ந்த கயிலையென்றதெனவறிக. அ
ந்தக்கயிலையைக் காவல்பூண்ட திருநந்தியென்றதேதென்னி
ல் சிலாதரமுனி புத்திரனில்லாமற் றவஞ்செய்யு மவதரத்
து அவனுக்குச் சிவன் முன்னின்றுனக்கு வேண்டியதேதென்

றுகேட்டருளத் தேவரீரைப்போலச் சாவாமூவாவியல்பினை யுடையபுத்திரன் வேண்டுமென்றுகேட்ப அப்படிப்புத்திரனு கக் கொடுத்தருளிபபடிவருகையாலே அவர் கன்மபூமியிலே யிருக்கவொண்ணுதென்று திருவுள்ளத் தடைத்தருளி யவர்க் கு நந்திகேஸ்வர நாயனுரென்று ஞானுபிடேகமுஞ்செய்து மற்றுள்ளவிருடிகளுக்கு ஞானேபதேசங் கொடுக்கக்கற்பித் து அவர்க்குக் கயிலாயத்திருமலேயுங் காக்கிறது விரதமாகவ ன்றே கொடுத்தருளின தெனவறிக. மெய்கண்டதிறலானெ ன்றது உண்மைஞானம்ாகிய சத்தியத்தைத் தரிசித்தசாமர் த்தியத்தை யுடையவனென்றதெனவறிக. விறலார்செல்வம். எ-கு. வெற்றிபொருந்தினசெல்வமென்றது அருட்செல்வத் தையெனவறிக. அருட்செல்வமென்றதேதென்னில்அருட்செ ல்வமேற்பட்ட செல்வமாகையாலும் அருட்செல்வமுடைய வர்கள் பொருட்செல்வங் கொள்ளாதபடியாலு மப்படிச் சொன்னதெனவறிக. என்னு மிவ்விரண்டினுள்ளும் அருட் செல்வம் பொருட் செல்வத்தினு மேற்பட்டதென்பதற்கு. பி - ம். திருவள்ளுவப்பயனில் "அருட்செல்வஞ் செல்வத் துட்செல்வம், பொருட்செல்வம் பூரியார்கண்ணுமுள." என் னும் பொருட்பற்றி நின்றதெனவறிக. அன்றியும் அருட்செ ல்வமுடையவர்கள் பொருட்செல்வங் கொள்ளார்களென்ப தற்கு. பி- ம். தேவாரத்தில். "துகிலுடுத்துப்பொன்பூண்டு திரிவார்சொல்லுஞ் சொற்கேட்கக்கடவோமோதுரிசற்றுே மே." எ - ம். பெரியபுராணத்தில், "கேடுமாக்கமுங்கெட் டதிருவினு, ரோடுஞ் செம்பொனுமொக்கவே நோக்குவா ர்." எ - ம். சித்தியாரில். "ஒட்டிற்றமணியத்திற் சமபுத்திப ண்ணிச் சங்கரனே, டொக்கவுறைந் தவனிவனே யிவனவனை விடாதே யுடந்தையாய்ச் சிவன்றுேற்றமொன்றுமே காண்ப ர்" எ - ம். கண்டுகொள்க. இச்சந்தானமென்ற சுட்டுகொ

ண்டே மற்றுள்ள சந்ததிகளுக்கு மிப்படிப்பாரம்பரியமாக ஆசாரியமரபுண்டாகையா லிந்தமெய்கண்ட சந்ததியென்று பொருட்படுத்தின தெனவறிக.

இதனாற் சொல்லியது இந்த மெய்கண்டசந்ததிக்குச் சைவசித்தாந்தவத்தம் பாரம்பரியமாக வுபதேசஞ்செய்தருளின சந்தான குரவரொழுங்கினை யறிவித்தது. (ரு)

இங்ஙனஞ் சொல்லப்பட்ட வாசாரியரில் பிற்கூறியமறைஞானசம்பந்தநாயனார் தம்மையிரக்ஷித்த வாசாரியராகையா லவரைநோக்கித் தனித்தொருசெய்யுளாகத் தோத்திரம் பண்ணுகின்றது.

பார்திகழவளர்சாமவேதமல்கப் பராசரமாமுனிமரபுபயிலஞானச், சார்வுதரவந்தருளியெம்மையாண்டசைவசிகாமணிமருதத்தலைவனந்தண், கார்மருவுபொழில்புடைசூழ்மதின்மீதேமதியங் கடவாமைநெடுங்கொடியின் கரந்தகையுங்கடந்தைச், சீர்நிலவுமறைஞானசம்பந்தனெந்தை திருவளருமலரடிகள்சென்னிவைப்பாம். (சா)

மன்னியவொருபொருள்வடிவுகொண்டிருபதஞ்
சென்னியின்வைத்ததேசிகன்வணக்கம்.

வி-ம். பார்திகழ. எ-து. பூமிவிளங்குவதாகவும்,—வளர்சாமவேதமல்க. எ-து. ஆயிரஞ்சாகைகளாக விரியப்பட்ட சாமவேதம் வர்த்தியாநிற்கவும்,—பராசரமாமுனிமரபுபயில. எ-து. பராசரப்பிரமவிருடி கோத்திரந்தழைக்கவும்,—ஞானச்சார்வுதரவந்தருளி யெம்மையாண்ட சைவசிகாமணி. எ-து. ஞானவொழுக்கமுண்டாம்படி யெழுந்தருளி யொன்றுக்கும்பற்றாதவென்னை யடிமையாகக்கொண்

டருளினசைவசமயத்துக் கோரபிடேகமாணிக்கம்,—மருத த்தலைவன். எ-து. மருதூர்க்குக் கத்தாவானவன்,—அந்தண் கார்மருவு பொழில்புடை சூழ்மதின்மீதே மதியங்கடவாமை நெடுங்கொடியின் கரந்தகையுங் கடந்தைச் சீர்நிலவுமறை ஞானசம்பந்தன். எ-து. அழகினையுங் குளிர்ச்சியினையுமுடை யமேகம் பொருந்தப்பட்ட சோலைப்பக்கங்களிலே சூழ்ந்த பெரியமதிலுக்குமேலே சந்திரனோடாமல் நெடியகொடியின துகைகளாலே தகையப்பட்ட சிறப்புடைய திருப்பெண்ணா கடத்துச் சிறப்புவிளங்காநின்ற மறைஞானசம்பந்த னென் கின்ற திருநாமத்தினையுடைய,—எந்தைதிருவளருமலரடிகள் சென்னிவைப்பாம். எ-து. எம்முடைய சுவாமியது அழகு வளராநின்ற தாமரைமலர்போன்ற ஸ்ரீபாதங்களை யெனது தலைமேலே வைத்துக்கொள்ளாநின்றேன். எ-று.

ரு-ம். பார்திகழ. எ-கு. பூமிவிளங்கவென்றதேதெ ன்னில் பிரபஞ்சத்திலுண்டான ஆன்மாக்களுக்குஞானம்பிர காசிக்கவென்றதெனவறிக. சாமவேதமல்க. எ-கு. சாம வேதம்வர்த்திக்க வென்றதேதென்னில் மற்றுள்ளவேதமூன் றினுமிந்நூல்செய்துடையார்க்கு இதுபாரம்பரியமாக அதி கரித்து வருகையாலெனவறிக. பராசரமாமுனிமரபுபயில. எ-கு. பராசரப்பிரமவிருடிகோத்திரந்தழைக்க வென்றதே தெனில் அநாதியேயிந்நூல்செய்துடையாராசாரியரந்தக் கோத்திரமாய் வருகையாலெனவறிக. ஞானச்சார்புதரவ ந்தருளி. எ-கு. ஞானவொழுங்குண்டாக வென்றதேதென் னில் இந்நூல்செய்துடையாரை ஞானவுபதேசத்தைச்செய் து அந்தவொழுங்கிலே நிறுத்துகையாலெனவறிக. மருதூ ரென்றும் பெண்ணாகடமென்றும் திருப்படைவீடிரண்டாக வேண்டுவானேனென்னில் மருதூர் திருவவதாரஞ்செய்தரு

ளனவறிக. பெண்ணாகடமாசாரியரபிடேகஞ்செய்தலூளன வறிக.

இதனாற்சொல்லியது இந்நூல்மலைவறச்சென்றுமுடிய வேண்டித் தம்மையிரக்ஷித்தவாசாரியனைநோக்கி வழிபடு முறைமையையறிவித்தது. (சு)

• இந்நூ லருளிச்செய்கிற வத்தமேதென்றுவினயதற்கு த்தரமேலருளிச்செய்வானெடுத்துக்கொண்டருளியது.

புறச்சமயத்தவர்க்கிருளாயகச்சமயத்தொளியாய்ப் புகழளவைக்களவாகிப்பொற்பணிபோலபேதப், பிறப்பி லதாயிருள்வெளிபோற்பேதமுஞ் சொற்பொருள்போற் பேதாபேதமுமின்றிப்பெருநூல்சொன்ன, வறத்திறனா ல்விளைவதாயுடலுயிர்கண்ணருக்க னறிவொளிபோற்பிரி வருமத்துவிதமாகுஞ், சிறப்பினதாய்வேதாந்தத்தெளி வாஞ்சைவ சித்தாந்தத்திறனிங்குத்தெரிக்கலுற்றாம். (எ)

வளம்பயினூலின் மதிப்புடன்வகுத்து
விளம்புறுபொருளின் மேன்மையைவிரித்தது.

வி-ம். புறச்சமயத்தவர்க்கிருளாய். எ-து. பரசமயிகளா யுள்ள வுலோகாயிதன்முதல் பாஞ்சராத்திரியீறாகச்சொல்ல ப்பட்ட சமயிகளுக்குத்தெரியாததாய்,—அகச்சமயத்தொளி யாய். எ- து. உட்சமயமாயுள்ள சைவமுதல்வைரவமீறாகச் சொல்லப்பட்ட சமயங்களாறுக்குஞ் சைவத்திற்பேதமாயு ள்ள சமயிகளெட்டுப்பெயர்க்குமறியப்படுவதாய்,—புகழள வைக்களவாகி. எ-து. சர்வராலும்புகழ்ந்து சொல்லப்பட்ட வளவைப் பிரமாணங்களினாலே யளவிடப்படுவதாய்,—பொ

ற்பணிபோலபேதப்பிறப்பிலதாய். எ-து. கத்தாவும்பிரபஞ்சமும் பொன்னென்றாய்ப் பணிபலவானாற்போல விருக்குமென்கிற வபேதசித்தாந்தமுமடாததாய்,— இருள்வெளிபோற்பேதமுஞ் சொற்பொருள் போற்பேதாபேதமுமின்றி. எ-து. கத்தாவும்பிரபஞ்சமு மிருளும்வெளியும்போல வொன்றோடொன்றுகூடாமல் வேறாயிருக்குமென்கிறபேதவாதிகள் சித்தாந்தமும் சொல்லும்பொருளும்போலச் சத்தத்தைச்சொன்னபொழுது அந்தச்சத்தந்தானேயத்தமாய்த்தோன்றியும் அத்தத்தைக்கண்டபொழுது அந்தச்சத்தம்வேறாயும் அத்தம் வேறாயும் ஒன்றுமாயிரண்டுமாயிருந்தாற்போலக் கத்தாபிரபஞ்சமு மாயல்லவுமா யிருப்பானென்கிற பேதாபேதவாதிகள் சித்தாந்தமுமடாததாய்,— பெருநூல்சொன்னவறத்திறனால் விளைவதாய். எ-து. பெரியநூலாகிய வேதாகமங்களிற்சொல்லப்பட்டசரிதைகிரியாயோகங்களை யநுட்டித்ததனாலேயுண்டாகப்படுவதாய்,— உடலுயிர்கண்ணருக்கனறிவொளிபோற்பிரிவறு மத்துவிதமாகுஞ் சிறப்பினதாய். எ-து. யாதாமொன்றையறியுமிடத்து உடலுமுயிருந்தன்னிலொன்றுபட்டறியுமறிவைப்பிரிக்கவொண்ணாதாற்போலவும் யாதாமொன்றைக்காணுமிடத்துக் கண்ணினொளியு மாதித்தப்பிரகாசமுந்தன்னிலொன்றுபட்டுநிற்குந் தன்மையைப் பிரிக்கவொண்ணாதாற்போலவும் கத்தாவையும் பிரபஞ்சத்தையுந்தன்னிற்பிரித்தற்கரிதாய் அநந்நியமாயிருக்கிற சிறப்பினையுடைத்தாகிய,— வேதாந்தத்தெளிவாஞ்சைவசித்தாந்தத் திறனிங்குத்தெரிக்கலுற்றாம். எ — து. வேதத்தின்முடிவிற்றெளிவாயுள்ள சைவசித்தாந்தத்தினுண்மையாகியவத்தத்தை யிந்நூலிலே விளங்கச்சொல்லாநின்றேன். எ - று. வேதத்தின்முடிவிற்றெளிவென்றது வேதாந்தமுடம்புஞ்சித்தாந்தமுயிருமாய் நிற்கையாலெனவறிக.

௩ - ம். புறச்சமயிகளுக்கிருளென்றதேதென்னில் அவர்கள்திரிபதார்த்தநிர்ணயமுடையவர்க ளல்லவாகையாலுஞ் சிவனைக்கத்தாவென்றுகொள்ளுகையு மில்லாதவர்களாகையாலுமெனவறிக. அகச்சமயிகளுக்கொளியென்றதேதென்னில்இவர்கள் பதிபசுபாச மூன்று முண்டென்று நாட்டுகையாலுஞ் சிவனைக் கத்தாவாகக்கொள்ளுகையாலு மெனவறிக. இவர்களும் அம்மாத்திரமொழிந்து சைவசித்தாந்தவுண்மைக்குரியவர்களல்லவெனவறிக. அஃதெங்கேகாணப்பட்டதென்னில் சங்கற்பநிராகரணத்தில் ஐக்கியவாதிமுதல் சிவாத்துவிதியாகிய சைவர்முடிவாகவுள்ள பேதமெட்டினுமுண்டானவத்தங்களை மறுத்தவொழுங்கிலேகண்டுகொள்க. அளவைகளினாலளவிடப்படுவதாயென்றதேதென்னில் அளவைப்பிரமாணமாகிய காண்டல் கருதல் உரையென்னப்பட்ட பிரத்தியக்ஷம் அநுமானம் ஆகமம்என்கின்ற மூன்றுவகையினாலும் அளவிட்டறியப்படுவதா யென்றதெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில். "அளவைகாண்டல் கருதலுரை யபாவம்பொருளொப்பாறென்ப, ரளவைமேலுமொழிபுண்மையைதிகத்தோடியல்பெனநான், களவைகாண்பரவையிற்றின்மேலுமறைவரவையெல்லா மளவைகாண்டல்கருதலுரை யென்றிம்மூன்றினடங்கிடுமே." எ-து. கண்டுகொள்க என்னவே சித்தாந்தம் இம்மூன்றுவகையாலு மறியப்படுமென்பதுகருத்து. இனி பொற்பணிபோலபேதப்பிறப்பிலதாய். எ-து. பொன்னிலேநின்றும்பணிபலவாறுற்போலக் கத்தாவினிடத்திலே பிரபஞ்சமுண்டாமென்கிறஅபேதசித்தாந்தமுமடாததாயென்றதேதென்னில் கத்தாவோவென்றாற் சித்தாயிருப்பானொருவன்.பிரபஞ்சமோவென்றால்ஜடமாயிருப்பதொன்று. ஆகையாற் சித்தினிடத்துச் சடந்தோன்றாததுகொண்டே சிவனிடத்துப் பிரபஞ்சந்தோன்று தென்றதெனவறிக.

இருள்வெளிபோற்பேதமும். எ - கு. இருளும்வெளியும்போலக் கத்தாவும்பிரபஞ்சமுந்தன்னில் வேறாயிருக்குமென்கிற பேதசித்தாந்தமு மடாததாயென்றதேதென்னில் இந்தப்பிரபஞ்சங் காரியப்படுமிடத்துக் கத்தாவாலே காரியப்படவேண்டுகையா லப்படிவேறென்றுசொல்லவொண்ணாதெனவறிக. இனி சொற்பொருள்போற் பேதாபேதமும். எ - கு. சொல்லும் பொருளும்போலக் கத்தாவும் பிரபஞ்சமுந்தன்னிலொன்றுமா யிரண்டுமாயிருக்குமென்கிற பேதாபேதசித்தாந்தமுமடாததாயென்றதேதென்னில் சித்தாயுள்ளசிவனிடத்துச் சடமாயுள்ள பிரபஞ்சந்தோன்றாதாகையா லொன்றென வொண்ணாதென்றுஞ் சடமாயுள்ளபிரபஞ்சஞ் சித்தாயுள்ளசிவனாலே காரியப்படவேண்டுகையால் வேறெனவொண்ணாதென்றுஞ் சொன்னதெனவறிக. பெருநூல்சொன்ன வறத்திறனால் விளைவதாய். எ - கு. அறத்திறனாலென்றதை குருபூசை சிவபூசை மஹேஸ்வரபூசைகளினாலுண்டாவதா யென்னவுமாமெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில் "புண்ணியமேனோக்குவிக்கும் பாவங்கீனோக்கும் புண்ணியனைப்பூசித்த புண்ணியத்தினாலே நண்ணியஞானத்தி லிரண்டினையுமறுத்து" எ - ம். "தாபரசங்கமங்க ளென்றிரண்டுருவினின்று, மாபரன்பூசைகொண்டு மன்னுயிர்க்கருளை வைப்பன்" எ - ம். கண்டுகொள்க. இதிற்றாபரமென்றதிலிங்கமூர்த்தமெனவறிக. சங்கமமென்றது குருவையு மஹேஸ்வரரையு மெனவறிக. இனி யுடலுமுயிருங்கூடின வறிவையுங் கண்ணுமருக்கனுங்கூடினவொளியையும் பிரிக்கவொண்ணாதாற்போலக் கத்தாவையு மான்மாக்களையும் பிரிக்க வொண்ணாதாய் அத்துவிதமா யிருக்குமென்றதேதென்னில் சிற்றறிவாயுள்ள வான்மாக்களைப் பேரறிவாயுள்ள சிவனறிவிக்குமிடத்திரண்டறிவையும் பிரிக்கவொண்ணாதென்றதெனவறிக.

அத்துவிதமென்ற தேதென்னில் ஒன்றுமல்ல இரண்டுமல்ல வென்றதெனவறிக. அஃதாவது ஒன்றல்லவென்றது ஆன்மாவுஞ்சிவமு மொன்றல்ல வென்றதெனவறிக. இரண்டல்ல வென்றது ஆன்மாக்கள் ஜீவிக்குமிடத்துச் சிவனறிவிக்கவறிந்து பிரிவறநின்று ஜீவிக்கையாலெனவறிக. இதற்கு. பி-ம். இருபாவிருபஃதில். "ஒன்ருகாம லிரண்டாகாம லொன்று மிரண்டு மின்ருகாமல்" எ - து. கண்டுகொள்க. சிறப்பென்றது அத்தத்தின்மஹான்மியமெனவறிக. வேதத்தின் முடிவிற் றெளிவென்றது சொல்லிறந்தபொருளெனவறிக. இதற்கு. பி - ம். கோயிற்புராணத்தில். "ஆரணங்கள் முடிந்தபதத்தானந்தவொளியுலகிற், காரணங்கற்பனைகடந்த கருணை" எ-ம். இந்நூலினும். "இங்கிதுவென் றதுகடந்தவியல்பினுனும்." எ-ம். கண்டுகொள்க. அன்றியும் வேதாந்தத்தெளிவென்றதை வேதாந்தப்பொருளைவிடப்பட்ட சித்தாந்தமென்பாருமுளர். அஃதத்தமன்று. அதுவேனென்னில் வேதாந்தமுடம்புஞ் சித்தாந்தமுயிருமாய்நிற்கையா லப்படிநீக்கஞ்சொல்லவொண்ணுதென்றதெனவறிக. இதற்கு. பி - ம். இந்நூலில் "வேதத்தலைதருபொருளாய்." எ - து. கண்டுகொள்க. சைவசித்தாந்த மென்றதேதென்னில் சைவமென்றது சிவாகமத்தையெனவறிக. சித்தாந்தமென்றது அந்தச் சிவாகமத்தின் கருத்தாகிவந்த அத்தத்தையெனவறிக.

இதனுற் சொல்லியது இந்நூலிலேசொல்லுகிறவத்தமானது புறச்சமயமாகிய வுலகாயிதனுக்கும் புத்தரிற் சௌத்திராந்திகன் யோகாசாரன் மாத்திமீகன் வைபாடிகன் ஆகப்பேர் நால்வருக்கும் அமணரில் நிகண்டவாதி ஆசீவகன் ஆகப்பேர் இருவருக்கும் மீமாங்கிசரில் பட்டாசாரியன் பிரபாகரன் நையாயிகன் ஆகப்பேர் மூவருக்கும் அகம்பிரமவா

தியான மாயாவாதி பாற்கரியன் கிரீச்சுரசாங்கியன் ஆகப் பேர் மூவருக்கும் வைணவனாகிய பாஞ்சராத்திரிக்கும் ஆக இங்ஙனஞ்சொல்லப்பட்ட சமயமாறினுற் பேதமாகச்சொல்லும் பேர்பதினுலுக்குந் தெளிவில்லாததாயிருக்குமென்னு முறைமையும் உட்சமயமாகிய சைவம் பாசுபதம் மாவிரதம் காளாமுகம் வாமம் வைரவமென்னப்பட்ட சமயமாறுக்கு முதற்கூறப்பட்ட சைவத்திற் பேதமாயுள்ள ஐக்கியவாதி பாடாணவாதி பேதவாதி சமவாதி சங்கிராந்தவாதி ஈஸ்வரவவிகாரவாதி பரிணாமவாதிசிவாத்துவிதியாகிய சைவர் ஆகப்பேர் எட்டுக்குந் தெளிவாயிருக்குமென்னுமுறைமையும் அளவைப் பிரமாணமாகச் சொல்லப்பட்ட பிரத்தியக்ஷம் அநுமானம் ஆகமமென்கிறமூன்றுவகையினுலு மளவிடப்பட்டிருக்குமென்னு முறைமையும் பொன்னும் பணியும்போ லிருக்குமென்கிற அபேதசித்தாந்தங்களும் இருளும் வெளியும்போ லென்கிற பேதசித்தாந்தங்களும் சொல்லும்பொருளும்போ லென்கிற பேதாபேத சித்தாந்தங்களும் ஆகமூன்றுவகையு முன்னெண்ணப்பட்ட வகச்சமயத்தினும் புறச்சமயத்தினு மடங்கியிருக்கையா லந்தவத்தங்களுமல்லவா யிருக்குமென்னு முறைமையும் இந்தச்சைவசித்தாந்தஞ் சிவபுண்ணியத்தினுலே யுண்டாவதாய் வேதத்தின்முடிவிற் றெளிவுமா யத்துவிதமுமா யிருக்கிறதே சைவசித்தாந்தமென்னு முறைமையையு மறிவித்தது. (எ)

இங்ஙனஞ் சொல்லிவந்த வத்தத்தைப்பெறுகிற ஆன்மாக்க ளெத்தனைவகைப்பட் டிருப்பார்களென்றும் அவர்களுக்கு இந்தவத்தத்தைச் சிவன்கடாக்ஷிக்கிறமுறைமையெப்படியென்றும்வினவினவவதரத்து மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

மூவகையாருயிர்வர்க்கமலத்தார்கன்ம மூலமலத்தார்மூன்றுமுடையாரன்றே, தீவகமாமெனவுருவாய்வந்து நாதன் றிருநோக்காற்பரிசத்தாற்றிகழும்வாக்காற், பாவனையான்மிகுநூலாலியோகப்பண்பாற் பரவிவருமவுத்திரியாற்பாசநாச, மேவவருளுதவுமவுத்திரியிரண்டுதிறனும் வியன்கிரியைஞானமெனவிளம்புமாறே. (அ)

மூவகையுயிரின் முறைமையுமவர்க்குக்
காவலனருள்புரி கடனுநவின்றது.

வி - ம். மூவகையாருயிர்வர்க்கம். அநுவயம். ஆருயிர்வர்க்கமூவகை. எ-து. நிரம்பியிருக்கிறவான்மாக்கள் மூன்றுவகைப்பட்டிருப்பார்கள். அஃதாவது,—மலத்தார். எ- து. ஆணவமலமொன்றையுடைய விஞ்ஞானகலரொன்றும்,— கன்மமூலமலத்தார். எ-து. கன்மமலமும் ஆணவமலமுமுடைய பிரளயாகலரொன்றும்,—மூன்றுமுடையார். எ - து. ஆணவமலமுங் கன்மமலமு மாயாமலமுமுடைய சகலரொன்றுஞ் சொல்லப்பட்டிருப்பார்கள். அவர்களுக்கிந்தமலங்களெந்தவவதரத்திலே யுண்டானதோவென்னில்,—அன்றே. எ-து. இவை யநாதியேயுள்ளதாயிருக்கும். அவர்களுக்கிந்த மலங்கணீங்கும்வழி யெப்படியோவென்னில்,—தீவகமாமென வுருவாய்வந்து நாதன். அநுவயம். நாதன் தீவகமாமெனவுருவாய்வந்து. எ - து. சிவனிந்தமூவகையான்மாக்களுக்குமுண்டானமலங்களைப் பாகம்வருத்துமிடத்து யாதாமொருபக்ஷிகளை மிருகங்களைப் பிடிக்கவேண்டினவர்க ளதற்கதற்கேற்ற பார்வையைக்காட்டிப் பிடித்தாற்போல ஒருமலத்தையுடைய விஞ்ஞானகலருக்கு மிரண்டுமலத்தையுடைய பிரளயாகலருக்கு மூன்றுமலத்தையுடைய சகலருக்கு மவரவர்நின்ற நிலைக்குத்தக்கதாகத் திருமேனிகொண்டிரக்ஷிக்குமிடத்து வி

ஞ்ஞானகலரும் பிரளயாகலரு மிந்தப்பூததேக சம்பந்தமற நிற்கையா லவர்களைநிராதாரமாகிய திருமேனிகொண் டிரக்ஷித்து இந்தச் சகலரையிரக்ஷிக்குமிடத் திவர்க ளிந்தப்பூத தேகசம்பந்தமாய்நிற்கையா லவர்களைப்போலச் சாதாரமாகிய மானுடச்சட்டைசாத்திவந்திரக்ஷிக்கும். இங்ஙன மிரக்ஷிக்குமிடத்து,— திருநோக்காற்பரிசத்தாற் றிகழும்வாக்காற் பாவனையான்மிகுநூலா லியோகப்பண்பாற் பரவிவருமவுத்திரியாற் பாசநாசமேவவருளுதவும். எ-து. திருநோக்காற் றிருக்கண்சாத்தியும் ஸ்ரீபாத ஸ்ரீஹஸ்தங்களால்பரிசித்தும் விளங்கவுபதேசித்துந் தன்னைப்போலநின்மலமாகப்பாவித்தும் மஹத்தாகியநூலுரைத்துக்காட்டியும் பொருளோடுகூட்டியுங் குண்டமண்டலமிட்டுச்செய்யுந்தீக்கைகளாலும் பாசநாசமாம்படிபொருந்த ஞானத்தையுண்டாக்கும்.இவையிற்றில்,— அவுத்திரி யிரண்டுதிறனும். எ - து. அவுத்திரியாகிய தீக்கை யிரண்டுவகைப் பட்டிருக்கும். அஃதாவது,—வியன்கிரியை ஞானமெனவிளம்புமாறே. எ - து. வியப்பத்தையுடையகிரியாவதியென்று மனோபாவத்தாற்செய்கிற ஞானவதியென்றுஞ் சிவாகமங்கள்சொல்லும். எ - று.

௩-ம். மூவகையாருயிர் வர்க்கம். எ - கு. ஒருமலத்தையுடைய விஞ்ஞான கலரொன்று மிரண்டுமலத்தை யுடையபிரளயாகலரென்று மூன்றுமலத்தையுடைய சகலரொன்றும் பொருட்கூறியதற்கு வகையேதென்னில் முற்கூறியஒருமலத்தையுடைய விஞ்ஞானகலராவார் பக்குவரென்று மபக்குவரென்று மிரண்டுவகைப்பட்டிருப்பர்கள். இதிற்பக்குவரானவர்கள் மலபரிபாகத்தின் மிகுதியாலே சிவனுடைய அநுக்கிரகத்தைப்பெற்றுச் சாயுச்சியத்தையடைவர்களெனவறிக. மற்ற அபக்குவர்களும் மலபரிபாகத்தின் மந்த

த்தாலே சிவனுடைய அநுக்கிரகத்தைப்பெற்றும் அதிகாரம லத்தோடுங் கூடியிருப்பர்கள். அவர்களுமணுசதாசிவரொன்று மட்டவித்தேசுரரொன்றுஞ் சத்தகோடி மஹாமந்திரேசுரரென்று மூன்றுவகைப்பட்டிருப்பர்கள். இதில் அணுசதாசிவர் சிவனுடைய வநுக்கிரகத்தைப்பெற்று சாதாக்கியதத்துவத்திலே யிருப்பர்கள். மற்ற அட்டவித்தேசுரர்களுஞ் சுத்த மாயாகிருத்தியத்துக் கதிகாரமாய் மயேசுரதத்துவத்திலே யிருப்பார்கள் சத்தகோடிமஹாமந்திரேசுரர்களு மட்டவித்தேசுரராலே பிரேரிக்கப்பட்டுச்சுத்தவித்தியா தத்துவத்திலே யிருப்பார்கள் அவர்களு மிருவகைப்படுவர்கள் அஃதாவது மூன்றரைக்கோடிபேர் சிவன்குருமூர்த்தத்தை யதிட்டித்துச் சகலரையிரக்ஷிக்குமிடத்து அதற்குக்காரணமாக விருந்து மஹாபிரளயகாலத்திலே மோக்ஷத்தையடைவர்கள் மற்றை யமூன்றரைக்கோடி பெயருஞ் சிவன்குருமூர்த்தத்தை யதிட்டியாமல் நிராதாரமாய்நின்று விஞ்ஞானகலரையும் பிரளயாகலரையு மநுக்கிரகிக்குமிடத்து அதற்குக்காரணமாயிருந்ததிகாரத்திலுள்ள வைராக்கியத்தாலே சிருட்டிக்குப்பின்பாக மோக்ஷத்தையடைவர்களென்னவறிக. இங்ஙனங்கூறிவந்தவகைகளுக்கு. பி-ம். தத்துவவிளக்கத்தில் "அறிந்தவர் தீர்ந்துகளினர் தீராத்துகளர் முன்னர்ச், செறிந்தவர் விஞ்ஞைக்கு நாயகரெண்ம ரெனச்சிறந்தோர், பிறிந்தவர் மந்திரராமெழுகோடியர் பேரொலியான், மறிந்ததிரைப்புனல் வெங்குருவாணர்வகுத்தவரோ'.' எ-து. கண்டுகொள்க. இங்ஙனங்கூறப்பட்ட விஞ்ஞானகலரில்முற்கூறிய அபக்குவர் தன்மையெங்ஙனேயென்னில் கேவலத்தி லான்மாநிற்குந்தன்மைபோல ஒருவடிவுமற்று ஆணவமலசொரூபராய்ச் சுத்தமாயையிலே தோற்றமுமொடுக்கமு மாகையாற் சுத்தமாயையாலே ஆணவமலபரிபாகம் வருமளவும் பெத்தராயிருப்பார்களெனவறி

௧. இவர்களுக் கிந்தவிஞ்ஞானகலப் பிராப்தி யெதினாலுண்டான தென்னில் ஞானமற்ற துறவாலும் யோகத்தாலும் அகம்பிரமமென்கிற ஞானத்தாலுங் கன்மக்ஷயம்வந்துஞ் சிவஞானம் பிரகாசியாதபடியாலே ஆணவமோசனம் பிறவாமல் வந்துகூடினநிலையெனவறிக. இந்தவிஞ்ஞானகலசத்தத்துக்குப் பொருளாவது அகம் பிரமமென்கிற விசிட்டஞானத்தாலே மாயாகாரியமான கலாபெந்த மற்றவர்களெனக்கொள்க. இங்ஙனங் கூறிவந்தவகையில் அணுசதாசிவர்க்கும் அட்டவித்தேசுரருக்கும் சத்தகோடி மஹாமந்ரேசுரருக்கும் வயிந்தவ சரீரமெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில் "வித்தைகளவித்தையீசர் சதாசிவனொன்றிவர்க்கு, வைத்துறுபதங்கள்வன்னம் புவனங்கண்மந்திரங்க, டத்துவஞ்சரீரம் போகங் கரணங்கடாமெலாமு, முய்த்திடும்வயிந்தவந்தானுபாதானமாகிநின்றே." எ - து. கண்டுகொள்க. இனிஇரண்டுமலத்தையுடைய பிரளயாகலர்தன்மை யெங்ஙனேயென்னில் அவர்களும் பக்குவனொன்றும் அபக்குவனொன்றுமிரண்டு வகைப்படுவர்கள் அதில் பக்குவரானவர்களை மலபரிபாகத்தின் மிகுதியாலே சிருட்டிகாலத்திலே சிவனிரட்சித்தருளுவன் இவர்களும் பரமுத்தி பெற்றவர்களென்று மபரமுத்தி பெற்றவர்களென்று மிரண்டு வகைப்படுவர்கள் இவர்களில் பரமுத்திபெற்றவர் மலபரிபாகத்தின் மிகுதியாலே சாயுச்சியத்தைப் பெற்றவர்க ளெனவறிக. மற்றஅபரமுத்திப்பெற்றவர்கள் சிவனாலே யநுக்கிரகத்தைப்பெற்று மலபரிபாகத்தின் மந்தத்தாலே யதிகாரமலத்தோடுங்கூடி அட்டவித்தேசுரராலே பிரேரிக்கப்பட்டுப் பிரகிருதிமாயைக்குக் கீழுண்டான கிருத்தியங்களும் பண்ணிக்கொண்டு கலாமத்திமத்திலே யிருப்பர்களெனவறிக. அப்படிப் பிரகிருதிமாயையோடுங் கூடியிருந்தாற் சகலரைப்போலக் கலாதியால் வாதை

ப்படார்களோவென்னி லதுவுண்டாகாது. அதுவென்போல வென்னில் பாம்பினிடத்திலுண்டான விடமானது பிறரைவருத்தஞ்செய்து மந்தப்பாம்பை வருத்தாதுபோல வெனவறிக. இந்தப்பிரளயாகலர்க்கு ஆணவமலமுங் கன்மமலமுமென்றுசொல்லியிருக்க மாயாமல சம்பந்தம் வருவானேனென்னில் அவர்களிற்சிலர்முற்செய்ததபோபலத்தாலாணவமலமுங்கன்மமலமும் பரிபாகமாகிற வவதரத்திலே விஞ்ஞானகலரில் மந்திரேசுரர் பதத்தைப்பெற்றுச் சுத்தவித்தையையார்ஜித்திருந்து சிவனாலே யதிகாரத்தைப்பெற்று அந்தவதிகார நடத்தவேண்டுகையாலே யந்தமாயையோடுங் கூடிநடத்தினாலு மதிற்றோய்வற நிற்பர்களெனவறிக. அஃதெங்ஙனேயென்னில் சிவன்பிரபஞ்சத்தை நடத்துகைச்செய்தே யதிற்றோய்வறநின்றாற்போல வெனவறிக. அவர்களாவது மண்டலரெட்டு குரோதனரெட்டு வீரரொன்று ஸ்ரீகண்டரொன்று உருத்திரர்நூறு ஆக நூற்றொருபத்தெட்டுப் பெயரெனவறிக. இதற்கு. பி - ம். தத்துவவிளக்கத்தில் "பெற்றதவப்பயனாற் பிரளயாகலரிற்சிலரைக், குற்றமில்மந்திரநாயகராக்கு மெங்கொச்சையர்கோன், மற்றவர் மண்டலர்குரோதாதிபர்வீரர்ஸ்ரீகண்டரீ, ருற்றவுருத்திர ரெட்டெட்டொன்றொன்று நூறெண்ணிவர்க்கே. எ - து. கண்டுகொள்க. இங்ஙனங்கூறப்பட்ட பிரளயாகலரில் பக்குவரானவர்கள்கன்மத்துக்கீடாகச் சிருட்டிகாலத்திலே சூக்குமதேகத்தோடுங்கூடிச் சகலராயும்விடுவர்களெனவறிக. இதற்கு. பி - ம். தத்துவவிளக்கத்தில். "வகுத்தவரிற்புவனாதிபரோனையர் மற்றவர்பின், றொகுத்தவரிற்பந்த முற்றினர்தூய்நெறிச் செல்வர்பின்பால், மிகுத்தவர்தாம்புரி யட்டகத்தோடும் வினைவழியிற் பகுத்தபிறப்பிற் சகலர்முப்பாசமும்பற்றினரோ". எ - து. கண்டுகொள்க. இனி சகலருடையதன்மை யெங்ஙனேயெ

ன்னில் அவர்களுமாணவமாயைகாமியமென்னு மூன்றுமலத் தோடுங்கூடி யண்டஜஞ் சுவேதஜமுற்பீஜஞ் சராயுஜமென்கி றநால்வகைத்தோற்றத்திலே சுரர்நரர் மிருகம் பசு பக்ஷிதாப ர நீருறைவனவாகிய யெழுவகைப்பிறப்பினையுமெடுத்து இ ருநூற்றிருபத்துநாலு புவனங்களினு முழன்று திரியுமவதரத் திலே யிருவினையொப்புமலபரிபாகமு முண்டாய்ச்சத்திநிபா தம்விளைந்து பக்குவப்பட்டவான்மாக்களுக்குச் சிவனவர்க ளைப்போலே மானிடச்சட்டைசாத்திக்கொண்டுவந்துஉண் மைஞானத்தைக்கடாக்ஷித்துத் தனதுபூரணஞானத்தோடுங் கூட்டிக்கொள்ளுவனெனவறிக. இதற்கு. பி - ம். தத்துவவி ளக்கத்தில் "எண்ணும்வினைப்பய னுற்புவனந்தொறும் போ கமென்று, நண்ணிவருஞ்சகலர்க்கொருகால நயந்தங்ஙனே, பண்ணியகன்மந்துலையொத்துச்சத்தி நிபாதமுறக், கண்ணி யலுங்குருவாய்க்காழிவேந்தன் கதிதருமே." எ - து. கண்டு கொள்க. இனி நிவகமாமெனவுருவாய்வந்து. எ - கு. மூவ கையான்மாக்களையுங் கத்தாவிரக்ஷிக்குமிடத்து விஞ்ஞானக லரையும் பிரளயாகலரையும் நிராதாரமாகநின்றிரக்ஷித்தரு ளுவனென்றுஞ் சகலரைச் சாதாரமாகவந் திரக்ஷித்தருளுவ னென்றும் பொருட்கூறியதற்கு. பி-ம். சித்தியாரில். "உரை த்ருமிப்பசுவர்க்கமுணரின்மூன்று முயருமவிஞ்ஞானகலர் பிரளயாகலர்சகலர், நிரையின்மல மலங்கன்ம மலங்கன் மமாயை நிற்குமுதலிருவர்க்கு நிராதாரமாகிக், கரையிலரு ட்பரன் றுவிதாசத்திநிபாதத்தாற் கழிப்பன்மலஞ்சகலர்க் குக்கன்மவொப்பிற், றரையிலாசான் மூர்த்தியாதாரமாகித் தரித்தொழிப்பன் மலஞ்சதுர்த்தாசத்தி நிபாதத்தால்."எ-ம். சிவார்ச்சனுபோதத்தினும். "வைத்தமலமலங்கன்மமலங்கன் மமாயை மருவவிஞ்ஞானகலர் பிரளயாகலர் சகல, ரித்த கைமையிவர்க் கீசனிவையகலவருளா லியற்றுவதோர் செ

ய்தியிரண்டாகுந்தீவிரதச், சத்தியினால்முன்னிருவர்க்காசா ன்மூர்த்தி தரியாதேதான்பண்ணுநிராதாரந்தரித்து, வித்த கமாமந்தத்தீவிரத்தாற் பின்னர் விளம்புவர்க்குச் செய்தியு ஞ் சாதாரமன்றே." எ-ம். கண்டுகொள்க. அன்றியு மூவகை யான்மாக்களையு மவரவர்நின்றநிலையிலே சிவன்கூடிநின்றி ரக்ஷித்தருளுவனென்று பொருட்கூறியதற்கு. பி - ம். போ ற்றிப்பஃறொடையில். "நன்னெறிவிஞ்ஞானகலர் நாடுமல மொன்றினையு, மந்நிலையே யுண்ணின்றறுத்தருளிப் - பின்ன ன்பு, மேவாவிளங்கும் பிரளயாகலருக்குத் தேவாய்மலகன் மந்தீர்த்தருளிப்-பூவலயந், தன்னின்றுநீங்காச் சகலர்க்கவர் போல, முன்னின்று மும்மலந்தீர்த்தாட்கொள்கை - யன்ன வனுக், காதிகுணமாதலினா லாடுந்திருத்தொழிலுஞ், சோதி மணிமிடற்றுச்சுந்தரமும் - பாதியாம், பச்சையிடமும் பவ ளத்திருச்சடைமேல், வைச்சநதியு மதிக்கொழுந்து-மச்சமு ற, வாடுமரவு மழகார்திருநுதன்மேல், நீடுருவவன்னி நெடுங் கண்ணுங்-கேடிலயங், கூட்டுந்தமருகமுங் கோலவெரியகலு ம், பூட்டரவக்கச்சும்புலியதளும்-வீட்டின்ப, வெள்ளத்தழு த்தி விடுந்தாளினுமடியா, ருள்ளத்தினும் பிரியாவொண்சில ம்புங்- கள்ளவினை, வென்றுபிறப்பறுக்கச் சாத்தியவீரக்கழ லு, மொன்றுமுருத்தோன்றுமலுள்ளடக்கி - யென்று, மிற வாதவின்பத்தெனையிருத்தவேண்டிப், பிறவாமுதல்வன்பிற ந்து". எ - து. கண்டுகொள்க. அன்றியுமவரவர் நின்றநிலைக் குத்தக்கதாகத் திருமேனிகொண் டிரக்ஷிப்பன். எ-கு. பி-ம். பூசாகரணத்தில். "எவ்வுலகத்துமூர்த்தி யேதுகொண்டிவணி யங்குமவ்வுலகத்து மேனியதுகொண்டங்கமருமீசன்" எ-து. கண்டுகொள்க. இனி திருநோக்காலென்ற பதந்தொடங்கிப் பரவிவருமவுத்திரியாலென்ற பதமுடிவாகிய வெழுவகைத்தீ க்கைக்கும் வகையேதென்னில் திருநோக்காலென்றது மச்

சமானது சினையைப்பார்த்துநிற்க வந்தச்சினையந்தமச்சத்தின்சொரூபம்பெற்றாற்போலவாசாரியனுண்மையிலே சித்தத்தைவைத்து ஞானதிருட்டியாலே பார்க்குமவதாரத்து அத்துவாக்களிற்கட்டுண்ட கன்மங்களைத்தகித்து இராகுவினாலே விழுங்கிவிடப்பட்ட சந்திரனைப்போல மலத்திரயங்களின் மறைப்புண்டுகிடந்தவான்மாவையு மந்தமலங்களினீக்குகை யெனவறிக. இனி இரண்டாவது பரிசத்தாலென்ற தீக்கையும் பஞ்சப்பிரமசடங்கங்களின் சொரூபமாயிருக்கிற ஸ்ரீபஞ்சாக்கரத்தை வலக்கையிலேரெதித்து இந்தப்பிராரத்தவாதனையை நீக்குவதுபொருட்டாகச்சீடனுடையதலையிலே சோதிமயமாகவைத்து அந்தச்சோதியையு மவனுடையவுள்ளும் புறம்பும் பூரணமாகத்தியாநித்து அந்தஸ்ரீஹஸ்தத்தாலே யவனுடையவுடம்பிற் பஞ்சகலாத்தானங்களையும்பரிசித்து வாதனையையொழிக்குமதுவெனவறிக. இனி மூன்றாவது திகழும்வாக்கா லென்றது வாசகதீக்கையெனவறிக. அஃதாவதுபதி பசு பாசத்தினுண்மையான ஸ்ரீபஞ்சாக்கரத்தை ஞானவொளியுடனே கூடவுபதேசிக்கையெனவறிக. இனி நாலாவது பாவனையாலென்றது சீடனைத்தன்னைப்போல நின்மலமாகப்பாவித்துப் பிரபஞ்சப்பற்றற மலத்திரயங்களிற் றோய்வறநிறுத்துகையெனவறிக. இனி ஐந்தாவது மிகுநூலாலென்றது இந்தமுறைமைகளெல்லா மிவனுக்குச்சந்தேகந் தீரச்சாத்திரங்களிலே யொப்புக்கொடுத்துக்கேட்டல் சிந்தித்தல் தெளிதலாயுள்ள மூவகையினுநிறுத்துகையெனவறிக. இனி யாறாவதுயோகப்பண்பாலென்றது அட்டாங்கயோகத்தினாலே மனோவிகாரத்தையடக்குவித்து நிட்டையைப்புரிவிக்கை யெனவறிக. இங்ஙனஞ்சொல்லப்பட்ட தீக்கை யறுவகையும் பக்குவர்க்குச்செய்யுமதெனவறிக. இனி யேழாவது அவுத்திரியென்றதீக்கை குண்டமண்டலமிட் டக்கினிகாரிய

முஞ்செய்து பாசக்ஷயம் பண்ணுவதெனவறிக. இது அப க்குவர்க்குச்செய்யுந் தீக்ஷையெனவறிக. அதுவும் ஞான வதியாகவுங் கிரியாவதியாகவுஞ் செய்யப்படுமெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில். "பலவிதமாசான் பாசமோச னந்தான்பண்ணும் படிநயனத்தருள்பரிசவாசகமானதமு, மலகில்சாத்திரமியோகமவுத்திராதியனேக முளவவற்றின வுத்திரியிரண்டுதிறமா, மிலகுஞானங்கிரியையெனஞானம னத்தா லியற்றுவது கிரியையெழிற்குண்டமண்டலாதி,நிலவு வித்துச்செய்தல் கிரியாவதிதானின்னு நிர்ப்பீசஞ்சபீசமென விரண்டாகிநிகழும்." எ-ம். "பாலரொடுவாலீசர்விருத்தர்ப ணிமொழியார் பலபோகத்தவர் வியாதிப்பட்டவர்க்குப்பண் ணுஞ், சீலமதுநிர்ப்பீசஞ்சமயாசாரந் திகழ்சுத்திசமயிபுத்தி ரர்க்குநித்தத், தேலுமதிகாரத்தை யியற்றித்தானுமெழினிர திகாரையென நின்றிரண்டாய்விளங்குஞ், சாலநிகழ்தேகபா தத்தினோடு சத்தியநிர்வாணமெனச் சாற்றுங்காலே." எ-ம். சிவார்ச்சனுபோதத்தில். "செய்யும்வகையிரண்டுபடியாகுந் தேரிற் றிகழ்ஞானவதிகிரியாவதியென்றுசெப்பி, யுய்யும்வ கையுவந்துமனோபாவகத்தான்மலங்க ளோட்டுவது ஞான வதியொண்கிரியாவதிதான், வையநிகழ்குண்டமண்டலமி ட்டுமற்று மருவுதிருமேற்கட்டி கட்டிவளர்தருப்பை, கொய் யுமலராற்செய்த மாலைகளுந்தூக்கிக் கும்பகலசங்களுங்கொ ண்டியற்றுவனகுறித்தே." எ - ம். கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது ஆன்மவர்க்கமூன்றுவகைப்பட்டிரு க்குமென்று மவர்களுக்கிந்தமல மாதியென்று மிந்தமலங் களைச் சிவனீக்குமிடத்து விஞ்ஞானகலருக்கும் பிரளயாக லருக்கும் நிராதாரமாய்நின்றுபோக்குவனென்றுஞ் சகலரு க்கு மானிடச்சட்டைசாத்தி யாசாரியமூர்த்தியாகிவந்துமல ங்களைநீக்கி யிரக்ஷிப்பனென்னுமுறைமையுமறிவித்தது. (அ)

கத்தா விங்ஙனமாசாரியமூர்த்தமாய்வந் திரக்ஷிக்குமி டத்துண்டான தீக்கை யெத்தனைவகைப்பட் டிருக்குமென் றுவினுயதற் குத்தர மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண் டருளியது.

விரும்பியமந்திராதிகாரமர்ச்சனுதிகார மேவுமியோ காதிகாரமெனச்சமயவிசேடம், வரும்பொருவினிருவா ணமந்திரங்கள்பதங்கள் வன்னங்கள்புவனங்கடத்துவங் கள்கலைக, ளிரங்கடைவிற்றுகைபதினென்றெண்பத் தொன்றைம்பத்தொன் றிருநூற்றேடிருபத்துநாலாறு றைந்திற், பரந்தநெறியறுவகையுமொருவினினைவரிதாம் பரபதத்துளுயிர்விரவப்பயிற்றுமன்றே. (சுூ)

தக்கசரிதைக்கிரியை யோகத்தன்மையு
மிக்கஞான விதியையும்விரித்தது.

வி - ம். விரும்பியமந்திராதிகாரம். எ-து. சிவபுண்ணி யத்துக்குரியவர்கள் சர்வரும்விரும்பியிச்சிக்கப்பட்ட மந்தி ரங்களையதிகரிக்கை,—அர்ச்சனுதிகாரம். எ - து. பூசைகளை யதிகரிக்கை,—மேவுமியோசாதிகாரம். எ - து. பொருந்தப் பட்டயோகங்களையதிகரிக்கை,— எனச்சமயவிசேடம்வரும். எ - து. இங்ஙனஞ் சொல்லப்பட்ட மூன்றுபாதமுஞ் சமய தீக்கையினும் விசேடதீக்கையினுமுண்டாகாநிற்கும்,—பொ ருவினிருவாணம். எ - து. ஒப்பில்லாதநிருவாணதீக்கையா வது,— மந்திரங்கள் பதங்கள் வன்னங்கள் புவனங்கடத்து வங்கள் கலைகள். எ - து. மந்திரங்களென்றும் பதங்களெ ன்றும் அக்கரங்களென்றும் புவனங்களென்றும் தத்துவங் களென்றும் கலைகளென்று மிங்ஙனஞ்சொல்லப்பட்டவகை களாறுக்கும்,—இரங்கடைவிற்றுகை. எ - து. கூறுமடை விற்றுகையாவது,— பதினென்றெண்பத்தொன் றைம்பத்

தொன்றிருநூற்ருேடிருபத்து நாலாருறைந்தில். எ - து. மந்திரங்கள் பதினொன்றென்றும் பதமெண்பத்தொன்றென்றும் அக்கரமைம்பத்தொன்றென்றும் புவன மிருநூற்றிருபத்துநாலென்றும் தத்துவ முப்பத்தாறென்றும் கலைகளைந்தென்றும் ஆக விங்ஙனம்,— பரந்தநெறியறுவகையு மொருவி. எ-து. விரிந்தவழி யாறுபிரகாரமாகிய வத்துவாக்களையும்விட்டு நீங்கி,—நினைவரிதாம் பரபதத்துளுயிர்விரவப் பயிற்றுமன்றே. எ - து. மனத்தினால்நினைத்தற்கரிதாகிய மேலான சிவபதமாகிய சாயுச்சியத்திலே யான்மாவைப்பொருந்தும்படி செய்விக்கும். எ - று.

ரு - ம். விரும்பியமந்திராதிகாரம். எ - கு. சர்வரும் விரும்பி யிச்சிக்கப்பட்ட மந்திரங்களென்றதேதென்னில் ஞானவான்களன்றியே மற்றுள்ளவர்களு மதிகரிக்கையாலப்படிச் சொன்னதெனவறிக. இனி அர்ச்சனாதிகாரம். எ-கு. பூசைகளையதிகரிக்கை யென்றதேதென்னில் குருபூசைசிவபூசைமகேசுரபூசை முதலாயுள்ளவையிற்றையென்வறிக. இனி மேவுமியோகாதிகாரம். எ - கு. பொருந்தப்பட்டயோகங்களை யதிகரிக்கையென்றதேதென்னில் இயமம் நியமம் ஆதனம் பிராணாயாமம் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி என்னப்பட்ட அட்டாங்கயோகங்களும் அன்றியும் ஆதாரயோக நிராதாரயோகமென்னும் யோகங்களுமெனவறிக. இனி சமயவிசேடம்வரும். எ - கு. இங்ஙனஞ்சொல்லப்பட்ட தீக்கைகளிரண்டினுள்ளு மூன்றுபாதமு மடங்குமென்றதேதென்னில் சமயதீக்கையில் சரிதையொன்றுமெனவறிக விசேடதீக்கையிலே கிரியையும் யோகமுமடங்கி வருகையாலப்படிச் சொன்னதெனவறிக. அப்படிச்சமயதீக்கைக்குச் சரிதையொன்றுமாயிருக்க விசேடதீக்கைக்குக் கிரியையும்யோகமுமா யொருதீக்கையிலே இரண்டுபாதமுமடங்

கி நின்றவழியெங்ஙனேயென்னில் விசேடதீக்கைக்குப் பூசைகளையதிகரிக்கைவேண்டுகையாற் பூசைகளையதிகரிக்குமிடத்துப் பிராணாயாமமும்அந்தரியாகமுமாகிய வுட்பூசையுஞ் செய்யவேண்டுகையா லவையிரண்டும்யோகத்திலடங்கிவருகையாலே விசேடதீக்கைக்குக்கிரியையும் யோகமுங்கூடிவருமென்றதெனவறிக. இதற்கு. பி - ம். ஞானவந்திரட்டையில். "மற்றதனிற்றர்ப்பணஞ்திசரிதைகிரியைபூசை மருவுபிராணாயாம மன்னிவளர்யோகம்" எ - து. கண்டுகொள்க. சமயத்துக்குத் தர்ப்பணமுதலானதொழிலும் விசேடத்துக்குப்பூசைகளும் பிராணாயாமமுதலானயோகங்களுங் கூடிவருகையாலே யப்படிச்சொல்லப்பட்டதெனவறிக. இனிபொருவினிருவாணம். எ - கு. ஒப்பில்லாதநிருவாணதீக்கையென்றதேதென்னில் நிருவாணதீக்கை சாயுச்சியத்துக்கேதுவாக்குகையாற் சாயுச்சியத்திற்கு வேறொப்பில்லாதபடியாலே யப்படிச் சொல்லப்பட்டதெனவறிக. இனி இரங்கலைவிற்றொகை. எ-கு. இரங்குத லோசையென்றும் ஓசை சொல்லென்றும் சொன்னதெனவறிக. இதற்கு. பி-ம். இந்நூலில். "ஆசுறுதிரோதமேவாதகலுமாசிவமுன்னுக வோசைகொள்" எ-து. கண்டுகொள்க. இனிமந்திரம்பதினொன்றென்றதேதென்னில் ஈசானமுதல் அத்திரமுடிவாகிய மந்திரங்களை யெனவறிக. பதமெண்பத்தொன்றென்றதேதென்னில்பிரணவமாகிய ஓங்காரமுதல் நமோநமவந்தமெனவறிக. அக்கர மைம்பத்தொன்றென்றதேதென்னில் அகாரமுதல்க்ஷகாரமுடிவெனவறிக. புவனமிருநூற்றிருபத்து நாலென்றதேதென்னில் அநாசிருதைமுதல் காலாக்கினியந்தமெனவறிக. தத்துவ முப்பத்தாறென்றதேதென்னில் பிருதிவிமுதல்நாதமுடிவாகிய தத்துவங்களை யெனவறிக. அவையாவன ஆன்மதத்துவமிருபத்துநாலும் வித்தியாதத்துவமேழும் சிவதத்துவமைந்

துமெனவறிக. கலைகளாந்தென்றதேதென்னில்நிவிர்த்திகலைபிரதிட்டாகலை வித்தியாகலை சாந்திகலைசாந்தியாதீதகலையென்னுங் கலைகளெனவறிக. இனிபரந்தநெறியறுவகையுமொருவி நினைவரிதாம் பரபதத்துளுயிர் விரவப்பயிற்றுமன்றே. எ-கு. ஆறுவழியாகவிரியப்பட்ட அத்துவாக்களைவிட்டுநீங்கிமேலானசிவபதத்திலே யான்மாபொருந்தும்படி செய்விக்குமென்றுபொருட்படுத்தினத்துக்கு வழியேதென்னில் ஒருபுற்றிற்கிடக்கும்பாம்பினை யோட்டிவிடவேண்டினவர்க ளந்தப்புற்றில் நிலைகுலையத்தக்க வுபாயஞ்செய்யவே யந்தப்புற்றைவிட்டுப் பாம்பு தானேபோனாற்போல ஆசாரியனுஞ் சீடனைக் கலாசோதனைசெய்து திருநோக்கத்தினாலே பார்க்கவே ஆன்மாக்களும் அத்துவாக்களைவிட்டுநீங்கித் திருவருளைப்பொருந்திச் சாயுச்சியத்தை யடையுமென்றதெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில் "மூன்றுதிறத்தணுக்கள்செய்யுங் கன்மங்கட்கு முன்னிலையாமூவிரண்டாமத்துவாவி, னான்றமுறையவையருத்தியறுத்துமலமுதிர்வித் தரும்பருவமடைதலுமேயாசானாகித், தோன்றிநுகராதவகை முற்செய்கன்மத்துகளறுத்தங்கத்துவா தொடக்கறவேசோதித், தேன்றவுடற்கன்மமனுபவத்தினாலறுத்திங் கினிச்செய்கன்மமூலமலஞானத்தாலிடிப்பன்" எ-ம். இருபாவிருபஃதினும். "அத்துவாமெத்தியடங்காவினைகளுஞ் சுத்திசெய்தனையே." எ-ம். "காரார்கிரகக்கலியாழ்வெனைநின் பேராவின்பத்திருத்தியபெரும" எ-ம். ஞானாமிர்தத்தினும். "என்னையன்னதாய்த் தொன்முதுபிறவி-யறைபோக்கொழியக்குலமுழுதும்வினையி-ஞானவொள்வாள்பூமுகமழுங்கத்- தோன்றுசினந்தணியாத்தண்டாச்சீற்றத்து - மறவினையல்லையோ நீயேயிறைவ". எ-ம். வருமேதுக்களைக் கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது சமயதீக்கையினும் விசேடதீக்கையினுஞ் சரியையுங்கிரியையும் யோகமுமடங்குமென்றுந் திருவாணதீக்கையிலே சாயுச்சியமென்னு முறைமையு மறிவித்தது. (௯)

இங்ஙனஞ் சொல்லப்பட்ட தீக்கை மூன்றினுள்ளுந் திருவாணதீக்கையினாலே சாயுச்சியமென்றருளிச்செய்து மற்றுண்டான சமயதீக்கைக்கும் விசேடதீக்கைக்குஞ் சரியைகிரியாயோகமென்னுந் தொழில்களைக் கற்பித்ததொழிய அந்த ஞானதீக்கைபோல வொருபயன்களை யருளிச்செய்யாததேதென்று வினயதற்குத்தரமே லருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

கிரியையெனமருவுமவையாவுஞானங் கிடைத்தற்குநிமித்தமெனக்கிளக்குமுண்மைச், சரிதைகிரியாயோகத்தன்மையோர்க்குச் சாலோகசாமீபசாரூபங்கண், மருவியிடுமுயர்ஞானமிரண்டாமாரு மலமகலவகலாதமன்னுபோதத், திருவருளொன்றென்றதனைத்தெளியவோதுஞ் சிவாகமமென்றுலகறியச்செப்புநூலே. (௧௦)

மூவிதமானமுத்திப்பதமு
மேவியவருளுமெய் யாகமமென்றது.

வி - ம். கிரியையென மருவுமவையாவுஞானங்கிடைத்தற்கு நிமித்தமெனக்கிளக்கும். எ - து. சிவத்தொழிலாகப் பொருந்தப்பட்டவையனைத்தும் ஞானமுண்டாகைக் கேதுவென்று சிவாகமங்களிற் சொல்லப்பட்டிருக்கும் அப்படியாகில் அந்ததிருவாணதீக்கையுள்ளவர்களைப்போல விவர்களுக்குச் சாயுச்சியமுண்டோவென்னில் அப்படியாகாது. பின்னையெங்ஙனே யென்னில்,—உண்மைச்சரிதை கிரியாயோகத்த

ன்மையோர்க்குச் சாலோக சாமீபசாரூபங்கள் மருவியிடும். எ - து. சிவாகமங்களா னிச்சயித்து அறுதியிடப்பட்டசரி யைத்தொழிலுங் கிரியைத்தொழிலும் யோகத்தொழிலும்வ ழுவறச்செய்யுமவர்களுக்கு அந்தந்தவொழுங்கிலே சாலோ கபதஞ் சாமீபதஞ் சாரூபதமென்னும் பதமுத்திகளுண்டாய் வரும். அப்படியானால் முன்னே சிவத்தொழில்களினாலே ஞா னமுண்டாமென்றுசொல்லி யிப்போது பதமுத்திகளுண்டா மென்றுசொல்லலாமோவென்னில் அப்படிஞானத்துக்கேது வாமென்று சொன்னது மந்தந்தத் தொழில்களினாலே பத முத்திகளைப்பெற்று ஞானத்துக் கேதுவாமென்று சொன் னதாயிருக்கும் அப்படியுண்டாகிய ஞானந்தான் முற்கூறிய சரிதைகிரியாயோகங்களைப்போலப் பலவழியாயிருக்குமோ வொருவழியா யிருக்குமோவென்னில்,—உயர்ஞான மிரண் டாம். எ - து. மேலானஞானமு மிரண்டுவகைப்பட்டிருக் கும். அஃதெப்படியென்னில்,—மாருமலமகலவகலாதமன்னு போதத்திருவருளொன்று. எ-து. அநாதியேதன்னைவிட்டு நீங் காத ஆணவமலமறைப்புவிட்டு நீங்கும்படி தன்னைவிட்டுநீங் காததிருவருளோடுங்கூடி யிரண்டறநின்றநுபவிக்கிற ஞான மொன்று,—ஒன்றதனைத்தெளியவோதுஞ்சிவாகமம். எ - து. மற்றொரு ஞானமாவது அந்தத்திருவருண் ஞானத்தைத் தெ ளியவறிந்தநுபவிக்கத்தக்கதாகச் சிவாகமங்களையோதியுண ர்ந்தது,— என்றுலகறியச் செப்புநூலே. எ - து. என்றிங் ஙனமுயர்ந்தோ ரறியத்தக்கதாக நூல்கள்சொல்லும். எ-று.

று - ம். கிரியையென்றது தொழில்களுக்கெல்லாம் பொதுப்படச்சொல்லியிருக்கச் சிவத்தொழிலொன்றையுஞ் சொல்லவேண்டுவா னேனென்னில் இதுசிவனைப்பெறுகை க்குத் தொழில்சொல்லுகையால் சிவத்தொழிலென்று சொ

ன்னதெனவறிக. உண்மைச்சரிதை கிரியாயோகம். எ - கு. சிவாகமஞ்சொன்ன முறைமைக்குத் தவறுவராமலென்றதே தென்னில் திருவலகு திருமெழுக்கு திருநந்தனவன முதலாயுள்ள சரிதைத் தொழில்களுக்குஞ் சிவபூசை குருபூசை மஹேசுரபூசை முதலான பூசைத்தொழில்களுக்கும் ஆதார யோக மட்டாங்கயோக முதலானயோகத்தொழில்களுக்குந்தவறுவராம லென்றதெனவறிக. இவை மூன்றுக்கும். பி - ம். சித்தியாரில். "தாதமார்க்கஞ்சாற்றிற் சங்கரன்றன்கோயிற் றலமலகிட்டிலகுதிருமெழுக்குஞ்சாத்திப், போதுகளுங்கொய்து பூந்தார்மாலைகண்ணி புனிதற்குப் பலசமைத்துப் புகழ்ந்துபாடித், தீதிறிருவிளக்கிட்டுத் திருநந்தவனமுஞ் செய்துதிருவேடங்கண்டா லடியேன்செய்வ, தியாது பணியீரென்று பணிந்தவர்தம்பணியு மியற்றுவதிச் சரிதைசெய்வோ ரீசனுலகிருப்பர்" எ - து. சரிதைக்குக் கண்டுகொள்க "புத்திரமார்க்கம் புகலிற் புதியவிரைப்போது புகையொளி மஞ்சனமமுது முதல்கொண்டைந்து, சுத்திசெய்தாதனமூர்த்தி மூர்த்திமானுஞ் சோதியையும் பாவித்தாவாகித்துச் சுத்த, பத்தியினலருச்சித்துப் பரவிப்போற்றிப் பரிவினொடு மெரியில்வருகாரியமும் பண்ணி, நித்தலு மிக்கிரியையினை யியற்றுவோர்க ணின்மலன்ற னருகிருப்பர் நினையுங்காலே." எ - து. கிரியைக்குக் கண்டுகொள்க. "சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்துவளியிரண்டுஞ் சலிப்பற்று மூச்சதுரமுதலாதாரங்க, ளகமார்க்கமறிந்தவற்றி னரும்பொருள்க ளுணர்ந்தங் கணைந்துபோய் மேலேறியலர்மதிமண்டலத்தின், முகமார்க்கவமுதுடல முட்டத்தேக்கி முழுச்சோதிநினைந்திருத்தன் முதலாகவினைக, ளுகமார்க்கவட்டாங்கயோகமுற்று முழைத்தலுழந் தவர்சிவன்ற னுருவத்தைப் பெறுவர் " எ - து. யோகத்திற்குக் கண்டுகொள்க. உயர்ஞா

னம். எ-கு. மேலான ஞானமென்ற தேதென்னில்அந்தஞா னத்துக்குரித்தானவர்கள் நூல்களை யோதியுணர்ந்து சமய பேதங்களையு மறிந்து மேலான பதி பசு பாசங்களையுந் தரிசி த்து சாலோகமாதியான பதமுத்திகளையுங் கடந்து மேற்பட் டசாயுச்சியத்தைப் பெறுகையாலே யப்படிச்சொன்னதென வறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில். "சன்மார்க்கஞ் சகலக லை புராணவேத சாத்திரங்கள் சமயங்க டாம்பலவு முணர்ந் து, பன்மார்க்கப் பொருள்பலவுங் கீழாக மேலாம் பதி பசு பாசந் தெரிந்து பரசிவனைக்காட்டு, நன்மார்க்க ஞானத்தா னடிஞான ஞேயமொடு ஞாதிருவு நாடாவண்ணம், பின்மா ர்க்கச் சிவனுடனாம்பெற்றிஞானப் பெருமையுடையோர் சிவ னைப்பெறுவர்காணே" எ- து. ஞானத்துக்குக் கண்டுகொள்க என்றிப்படியிருக்க இந்த ஞானத்தை யுயர்ஞான மிரண்டா மென்று கூறியதற்குத் திருவருள்ஞானமொருஞானமென்று ம் சிவாகமங்களையோதியறிகிறஞான மொருஞானமென் றும் பொருட்படுத்திக் கூறினதற்கு வழியேதென்னில், திரு வருள்ஞானமாவது முதலிகள் மூவர் காரைக்காலம்மை முத லாயினோர்க் குண்டாகிய ஞானமெனவறிக. சிவாகமங்களை யோதியறிந்து வருகிறஞானமாவது ஸ்ரீநந்திதேவநாயனார் முதலாயுள்ள சமயக்குரவர்க்குண்டாகிய ஞானமெனவறிக. இவையிரண்டிற்கும். பி - ம். சித்தியாரில் "பண்டைநற்ற வத்தாற்றோன்றிப் பரமனைப்பத்திபண்ணுந், தொண்டரைத் தானேதூய கதியினிற்செலுகுப்பன்மார்க்கர், கண்டநூலோ திவீடு காதலிப்பவர்கட்கீசன், புண்டரீகத்தாள் சேரும் ப ரிசினைப் புகலலுற்றாம். எ - ம். போதமிகுத்தோர்தொகுத் தபேதமைக்கே பொருந்தினோ ரிவர்க்கன்றிக் கதிப்பாற் செல்ல, வேதநெறியெனுமவர்கட் கறியமுன்னோ னிறைவ னருணந்தி தனக்கியம்பநந்தி, கோதிலருட் சநற்குமாரர்க்கு

க்கூறக் குவலயத்தி னவ்வழியெங் குருநாதன்கொண்டு, நீத கலவெமக்களித்த ஞானநூலை தேர்ந்துரைப்பன் சிவஞான சித்தியென்றே" எ-ம். கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது சரிதைகிரியாயோகங்களை முற்ற ச்செய்தவர்களுக் கந்தந்தமுறைமையிலே சாலோக சாமீப சாரூபமென்னும் பதமுத்திகளுண்டாமென்றும் ஞானத்துக் குச் சாயுச்சியமுண்டாமென்றும் அந்த ஞானமிரண்டுவகை ப்பட் டிருக்குமென்றும் இதிற்றிருவருள்ஞான மொருஞா னமென்றும் சிவாகமங்களை யோதியறிகிறஞான மொருஞா னமென்றும் வருமுறைமையை யறிவித்தது. (௧௦)

அப்படிச்சிவாகமங்க ளுண்டாயிருக்கச்செய்தே யிந்த த்தமிழ்நூல்களை யிப்பொழுது செய்யவேண்டுங்காரணமே தென்றுவினவ இந்தத்தமிழ்நூல்களிலுண்டாகிய வத்தங் களும் அந்தச்சிவாகமத்தி னத்தந்தானுயிருக்குமென்று மி ந்தத்தமிழ்நூல்களும் பாரம்பரியமாக வருகிறதென்று மரு ளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

தெரித்தகுருமுதல்வருயர்சிவஞானபோதஞ் செப் பினர்பின்பவர்புதல்வர்சிவஞானசித்தி, விரித்தனர்மற்ற வர்கடிருவடிகள்போற்றி விளம்பியநூலவையிரண்டும்வி ரும்பிநோக்கிக், கருத்திலுறைதிருவருளுமிறைவனாலுங் கலந்துபொதுவுண்மையெனக்கருதியானு, மருத்திமிகவு ரைப்பன்வளர்விருத்தநூறு மாசில்சிவப்பிரகாசமாகும ன்றே. (௧௧)

உன்னரும்பொருளை யுரையானுணர்த்திய
முன்னவரருளா னூற்பெயர்மொழிந்தது.

வி - ம். தெரித்தகுருமுதல்வ ருயர்சிவஞானபோதஞ் செப்பினர். எ - து. முற்கூறப்பட்ட ஆசாரியரில் விசேடத்துவத்தையுடைய மெய்கண்டதேவ தம்பிரானார் மேலானசிவஞானபோதமாகிய மூலக்கிரந்தம் பன்னிரண்டினுமுள்ள அத்தத்தைத் தமிழாகவிரித்துப் பன்னிரண்டுசூத்திரமாகவகுத்து அந்தநூலின்பெயராலே சிவஞானபோதமென்று செய்தருளினார். அன்றியுந் தமிழாகிய சிவஞானபோதமொன்றிலேயு மேற்றிப் பொருளுரைப்பினுமாம்,—பின் பவர்புதல்வர்சிவஞானசித்திவிரித்தனர். எ - து. அதற்குப்பின்பாக அவரதுதிருவடியைப்பெற்ற சண்பையர்தலைவநாயனாராகிய அருணந்திதேவதம்பிரானார் சிவஞானசித்தியென்னு நூலைவிரித்துச்செய்தருளினார்,— மற்றவர்கடிருவடிகள்போற்றி. எ - து, அந்தவிரண்டுதம்பிரானார்கள் திருவடியையுந்துதித்து,—விளம்பியநூலவையிரண்டும் விரும்பினோக்கி. எ-து. அவர்களருளிச்செய்யப்பட்டநூல்களிரண்டினையு மாசையோடுமாராய்ந்துபார்த்து அதிலுண்டானவத்தமும் அதுவுமன்றி,— கருத்திலுறைதிருவருளுமிறைவநூலுங்கலந்து. எ-து. என்னுடைய இதயத்திலே பொருந்திநின்று நிகழ்த்துகிறதிருவருளையுந் தம்பிரானாரருளிச்செய்த சிவாகமத்திலுண்டாகிய அத்தத்தையும் இந்நூலிலேவிரவி,—பொதுவுண்மையெனக்கருதி. எ-து. இந்நூற்செய்யுமிடத்துப் பொதுவென்றுமுண்மையென்று மிரண்டுபகுதியாகவிசாரித்து,— யானுமறித்திமிகவுரைப்பன். எ - து. ஒன்றுக்கும்பற்றுதநானும் ஆசைமிகுதியாலே யொருசாத்திரமாகச்சொல்லுவன்,— வளர்விருத்தநூறும். எ - து. சிறப்புவளரப்பட்ட விருத்தப்பாவாகிய செய்யுள்நூற்றினையும்,—ஆசில்சிவப்பிரகாசமாகுமன்றே. எ - து. இந்நூலுக்குத்திருநாமங் குற்றமற்ற சிவப்பிரகாசமாம். எ - று.

ரு - ம். உயர்சிவஞானபோதமென்றதை மேலான சிவஞானபோத மென்றதேதென்னில் மற்றுள்ள சமயங்களிற் சொல்லப்பட்ட அத்தங்களெல்லாத்தினுமேற்பட்டஉண்மை ஞானத்தை சொல்லுகையா லெனக்கொள்க. சிவஞானசித்தியை விரியச்செய்தாரென்றதேதென்னில் முற்கூறப்பட்ட நூலாகிய சிவஞானபோதம் சொற்சுருங்கி அத்தமாழ்ந்திருக்கையாலே யந்தச்சிவஞானசித்தியிற்சொல்லு மத்தமும் விரியச்செய்கையினுலெனக்கொள்க. இதற்கு. பி- ம். சித்தியாரில். "குவலயத்தினவ்வழியெங் குருநாதன்கொண்டு தீதகலவெமக்களித்த ஞானநூலைத் தேர்ந்துரைப்பன் சிவஞானசித்தியென்றே. எ - து. கண்டுகொள்க. கருத்திலுணா திருவருளும் என்றது உயிர்க்குயிராய்நின்று நிகழ்த்துகிற அநுபவஞானத்தையெனவறிக இதற்கு. பி - ம். சித்தியாரில். "அந்நியமிலாமையானு மறிவினுணிற்றலானு முன்னியவெல்லாமுண்ணின்றுணர்த்துவனுதலானும்" எ-ம். "மதியருக்கனணையரவம் போற்ருேன்றுமான்மாவிலரனே" எ-ம். பூசாகரணத்தில். "ஞானிக் குயிரினிற் குளிருமன்றே" எ-ம். வருமேதுக்களு மிப்பொருட்பற்றியென்பதைக் கண்டுகொள்க. இனி இறைவநூலுங்கலந்தென்றது அந்த இரண்டுநூலினும் வாராதஅத்தங்களைக்கூட்டி அநுபவமாக வருளிச்செய்கையினுலெனக்கொள்க. பொதுவென்றது பதி பசு பாசங்களைச் சாமாநியமாக வருளிச்செய்கையினு லெனக்கொள்க. உண்மையென்றது ஆன்மதரிசனம் சிவதரிசன முதலாயுள்ளவற்றை யநுபவமாக வருளிச்செய்கையினுலெனக்கொள்க. வளர்விருத்தநூறுமென்றது இந்நூலாராயுந்தோறு மாராயுந்தோறு மத்தமென்மேலும் வளருகையாலெனக்கொள்க. இதற்கு. பி - ம். திருவள்ளுவப்பயனில். "நவிறொறுநூனயம்போலும்." எ - து. கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது இந்நூலிலே முன்னூலாகிய சிவாகமத்தினத்தமும் வழிநூலாகிய சிவஞானபோதத்திலுஞ் சிவஞானசித்தியிலு முண்டான அத்தமுங் கருத்திலே கூடிநின்று காரியப்படுத்துகிற அநுபவஞானத்தினையுங் கூட்டிச்செய்தோமென்னு முறைமையையு மறிவித்தது. (கக)

அப்படியே யிங்ஙனம்பழையதாகவருகிற நூலு மிப்பொழுது செய்யப்பட்ட புதுநூலுந் தன்னிலொக்குமோவென்று வினவ அஃதிரண்டு மொருவகையத்தமானாற் கொள்ளப்படுமென்னு முறைமையு மிந்நூல்கொள்ளும்பகுதியுடையவர்கள் முறைமையு மவையடக்கமு மேலருளிச்செய்வானெடுத்துக்கொண்டருளியது.

தொன்மையவாமெனுமெவையுநன்றாகாவின்று தோன்றியநூலெனுமெவையுந்தீதாகாதுணிந்த, நன்மையினார்நலங்கொண்மணிபொதியுமதன்களங்க நவையாகாவெனவுண்மைநயந்திடுவர்நடுவாந், தன்மையினாற்பழைமையழகாராய்ந்துதரிப்பர் தவறுநலம்பொருளின்கட்சார்வாராய்ந்தறித, லின்மையினாற்பலர்புகழிலேத்துவரேதிலருற் றிகழ்ந்தனரேலிகழ்ந்திடுவர்தமக்கெனவொன்றிலரே.()

சான்றோர்செய்தியுஞ் சால்பிலார்தன்மையுந்
தோன்றுமாறு சொல்லவையடக்கம்.

வி - ம். தொன்மையவாமெனுமெவையுநன்றாகா. எ-து நூல்கள் பழையதேயாயினும் பதி பசு பாசத்தினுண்மையைத் தெரியச்சொல்லாதபோது எவராலேசொல்லப்பட்டதாயினு நன்மையுண்டாகாது,—இன்றுதோன்றியநூ லெனுமெவையுந் தீதாகா. எ-து. இப்பொழுது புதிதாகச்சொல்லப்பட்ட நூலாயினும் பதி பசு பாசங்களைத்தெரியச்சொல்லுமாயி

ன் அந்தநூலுக்குக்குற்றமுண்டாகாது ஆகையாலிவையிரண்டினுட் புதுநூல்கொள்ளுமிடத்து,— துணிந்தநன்மையினோர். எ - து. சித்தாந்தவழக்கினையறிந் துறுதிவந்த நல்லோர்கள் நூலின்புதுமைகொள்ளார்கள் அதென்போலவென்னில்,—நலங்கொண்மணி பொதியுமதன்களங்க நவையாகாவெனவுண்மை நயந்திடுவர். எ - து. நல்லவிரத்நமானது பொல்லாத தொன்றிலே பொதிந்திருந்தாலு மிரத்நமறிந்தவர்கள் பொதிந்ததின்குற்றம்பாராம லிரத்நத்தினையே கொண்டாற்போலப்பொருளினுண்மையைக் கைக்கொள்ளுவார்கள். அன்றியும்,—நடுவாந்தன்மையினோர். எ - து. மத்திமராயுள்ளவர்களுத்தமரைப்போல நூலைக்கண்டமாத்திரத்திலே பொருளைக் கொள்ளமாட்டார்களாதலாலே,— பழைமையழகாராய்ந்து தரிப்பர். எ-து. பழையதாயுள்ள வாகமங்களி னத்தத்தையுமிப்பொழுதுண்டான நூலினத்தத்தையு மாராய்ந்துபார்த்துக்கொள்ளும்பகுதியினாற் கொள்ளுவார்கள். இவையிரண்டுபகுதியுமன்றி,—தவறுநலம்பொருளின்கட் சார்வாராய்ந் தறிதலின்மையினோர். எ-து. நூலுக்குண்டாகிய குற்றமிது குணமிதுவென்று பொருளினிடத்திலேபொருந்தின முறைமையை யாராந்துபார்த்தறியமாட்டாதவறிவீனராயுள்ளவர்கள்,—பலர்புகழிலேத்துவர். எ-து. நூலின்பயனறிந்த உத்தமர்கொண்டாடினாற் கூடியிருந்து கொண்டாடுவார்கள்,—ஏதிலருற்றிகழ்ந்தனரோ விகழ்ந்திடுவர். எ-து. இந்நூற்செய்தற்குப் பொறாமையாக அந்நியரிகழ்ந்துரைக்குமிடத்து அதற்குங்கூடியிகழ்ந்துரையாநிற்பர்கள். அவர்களாரோவென்னில்,—தமக்கெனவொன்றிலரோ. எ - து. நன்றுதீதென்றறியத்தங்களுக்கெனவோரறிவில்லாதவர்கள், எ-று.

ஈ - ம். எவையு நன்றாகா வென்றதுகொண்டே பழையநூல்களிற் குற்றங்குறையுமெனக்கொள்க. எவையுந்தீதா

காவென்றதுகொண்டே புதியநூல்களில் நன்மைகுறையுமெனக்கொள்க. களங்கநவை என்றிருவகைக் குற்றமாகச் சொன்னதேதென்னில் இரத்நத்தைப் பொதியப்பட்டது குற்றமுடையதாளுலு மிரத்நத்தைக்குற்றமாகக் கொள்ளார்களென்றதெனவறிக. உண்மைநயந்திடுவரொன்றதை நூலின்புதுமை விசாரியாமற் பொருட்கொள்ளுவார்களென்றது அத்தத்தின் மஹான்மியங்கண்டுகொள்வார்களென்றதெனக்கொள்க. தமக்கென வொன்றிலரே என்றதை தமக்கென வோராறிவில்லாதவர்க ளென்றதேதென்னில் முன்ஜநநத்திற்றமக்கென்ன ஒருதவமில்லாதவர்க ளென்றதென்னவு மாமெனக்கொள்க.

இதனுற் சொல்லியது இந்நூற்கொள்ளுமிடத்து அறிவாலுயர்ந்தபெரியோர்கள் கொள்ளுமுறைமையு மத்திமராயுள்ளவர்கள் கொள்ளுமுறைமையு மறிவீனராயுள்ளவர்கள்கொள்ளுமுறைமையுஞ்சொல்லிஅவையடக்கமுமறிவித்தது.(சஉ)

இவைபன்னிரண்டும் பாயிரம்

முற்றும்.

நூல்.

பொது.

இங்ஙனம் பாயிர மருளிச்செய்து மேல் முதற்சூத்திரமாகிய பதியிலக்கண மருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

இந்தப்பதியிலக்கணத்தில் முதற்சூத்திரநின்றமுறைமை யெங்ஙனேயென்னில் பதியிலக்கணமாக வகுத்த "பலகலை"

என்றவிருத்தந்தொடங்கி "ஏற்றவிவை" என்னும் விருத்தமுடிவாகிய செய்யுளாறும் சிவஞானபோதத்தினுஞ் சிவஞானசித்தியினும் முதற்சூத்திரத்தில் வருங்கருத்தாகையா லப்படிச்சொன்னதெனவறிக. அப்படி யந்தநூல்களில் முதற்சூத்திரத்திலுண்டானகருத்து இந்தவிருத்தமாறினு நின்றதற்கு வழியேதென்னில் சிவஞானபோதத்தில் முதற்சூத்திரமாகிய:— "அவனவளதுவெனுமவைமூவினைமையிற், றோற்றிய திதியேயொடுங்கி மலத்துளதா, மந்தமாதியென்மனார் புலவர்" என்னுஞ்சூத்திரத்துக்குக்கருத்து சங்காரகாரணனை முதலாகவுடைத்திவ்வுலகமென்பதனால் சிவனே கத்தாவென்னுங்கருவைப்பற்றி இந்நூலினுமிச்செய்யுட்க ளாறினுள்ளும் "நீடுபெறநிறுவியவை யொடுக்குமேனி" எ-ம். "அவையெங் கடவுடானே யந்தமுறவழித்திடுவன்." எ-ம். "ஏற்றவிவையர னருளின் றிருவிளையாட்டாக வியம்புவர்கள்." எ-ம். சிவனே கத்தாவென்றுவருகையாலும். சித்தியாரில் முதற்சூத்திரத்தின் விருத்தங்களில் "சிவனருவுருவுமல்லன்" என்னும் விருத்தத்திற்கருவைப்பற்றி இந்நூலினும் "பலகலை" என்றவிருத்தத்தில் "பதிபரமேயதுதானிலவு மருவுருவின்றி" என்று வருகையாலும் "பொன்மை நீலாதிவன்னம்" என்னும் விருத்தத்திற்கருவைப்பற்றி இந்நூலினும் "நீடுபராசத்தி" என்னும் விருத்தம்வருகையாலும் "குறித்ததொன்றாகமாட்டா குறைவிலனாதலானும்" என்னும் விருத்தத்தின் கருவைப்பற்றி இந்நூலினும் "இங்கிதுவென்றது கடந்தவியல்பினனும்" என்னும் விருத்தம்வருகையாலும் "ஒருவனோடொருத்தி"என்னும்விருத்தத்தின் கருவைப்பற்றி இந்நூலினும் "உலகமெலா மொருவனோடொருத்தி" என்னும் விருத்தம்வருகையாலும் "தோற்றுவித்தளித்துப் பின்னுந்துடைத்தருடொழில்கள்மூன்றும் போற்றவேயுடைய னீசன்" எ-ம். "உரைதருவித்தொழில்கள்மூன்றும் மூ

வருக்குலகமோத வனைத்தொருவனுக்கேயாக்கி வைத்ததி ங்கென்னை" எ-ம். வரும் விருத்தங்களின் கருவைப்பற்றி இந்நூலினும் "கந்தமலரயன்படைக்கும்" என்னும் விருத்தம் வருகையாலும் "சொன்னவித்தொழில்களென்ன காரணந்தோற்றவென்னின் முன்னவன் விளையாட்டென்று மொழிதலுமாம்" எ - ம். "அழிப்பிளைப்பாற்றல்" எ - ம். வரும்விருத்தங்களின் கருவைப்பபற்றி இந்நூலினும் "ஏற்றவிவை யரனருளின் றிருவிளையாட்டாக வியம்புவர்கள்" என்னும் விருத்தம்வருகையாலும் இந்தப்பதியிலக்கணமாக வருளிச்செய்த விருத்தமாறு மந்நூல்களிற்கருத்து ஒத்துவருகையால் முதற்சூத்திரமாகநின்றதெனவறிக. இங்ஙனம் சித்தியாரில் முதற்சூத்திரத்தில் விருத்தங்களா யேதுகாட்டின செயுட்களை விருத்தங்கடோறு முடியவொட்டிக் கண்டுகொள்க.

மேல் முதற்சூத்திரமாக வகுத்த பதியிலக்கணமாகிய செய்யு ளாறினுள்ளும் மூற்கூறிய பலகலையென்ற விருத்தத்துக்குத் தொந்தனைவருமாறு:—முன்னே பாயிரத்திற்கூறிய தெரித்தகுரு முதல்வருயர் சிவஞானபோதஞ் செப்பினர்பின்பவர்புதலவர் சிவஞானசித்தி விரித்தனர் என்றும் இறைவனூலுங்கலந்து என்றும் வரப்பட்ட முன்னூல் வழிநூல்களினுமிப்பொழுது கூறப்பட்ட இந்தச்சார்புநூலாலு மருளிச்செய்கிறவத்தமேதென்றுவினவ மேலருளிச்செய்வானெடுத்துக்கொண்டருளியது.

பலகலையாகமவேதம்யாவையினுங்கருத்துப்பதிபசு பாசந்தெரித்தல்பதிபரமேயதுதா, னிலவுமருவுருவின் றிக்குணங்குறிகளின்றி நின்மலமாயேகமாய்நித்தமாகி, யலகிலுயிர்க்குணர்வாகியசலமாகியகண்டிதமாயாநந்தவுரு

வாயன்றிச், செலவரிதாய்ச்செல்கதியாய்ச்சிறிதாகிப்பெரிதாய்த் திகழ்வதுதற்சிவமென்பர்தெளிந்துளோரே. (க)

விதிப்படி முதனூல் விளம்புமுப்பொருளின்
பதித்திறந்தெரிந்து பாரித்துரைத்தது.

வி-ம். பலகலையாகமவேதம் யாவையினுங்கருத்து.எ-து பலகலைஞானங்களாகச் சொல்லப்பட்ட ஆகமங்களுக்கும் வேதங்களுக்கும் இவையிற்றின்விரிந்தநூல்களுக்கும் துணிவாவது,—பதிபசுபாசந்தெரித்தல். எ - து. பதியையும் பசுவையும் பாசத்தையுங்கூறுசெய்தல். இவையிற்றின் முதற்கூறப்பட்ட பதியின்றன்மையெங்ஙனேயென்னில்,—பதிபரமே. எ - து. அந்தப்பதியாவது எல்லாவற்றிற்கு மேலாயிருப்பதொன்று,—அதுதான். எ - து. அந்தப்பரமேயென்று சொல்லப்பட்ட பதியானதி னியல்பு யெங்ஙனேயென்னில்,—நிலவுமருவுருவின்றி. எ - து. விளங்கக்காணப்படுவதுங் காணப்படாததுமல்லவாய். நிலவுமென்றது பொருந்தவெனவுமாமெனவறிக,—குணங்குறிகளின்றி. எ - து. ஒருகுணங்களு மோரடையாளங்களுமில்லையாய்,— நின்மலமாய். எ - து. மலரகிதமாய்,— ஏகமாய். எ - து. ஒன்றாயிருப்பதாய்,—நித்தமாகி. எ - து. அழியாததாய்,—அலகிலுயிர்க்குணர்வாகி. எ - து. எண்ணிறந்தவான்மாக்களுக்குமறிவாய்,—அசலமாகி. எ - து. சலிப்பற்றதாய்,— அகண்டிதமாய். எ-து. கண்டிக்கப்படாததாய்,—ஆநந்தவுருவாய்.எ-து. இன்பசொரூபமாய்,—அன்றிச்செலவரிதாய். எ-து. மாறுபட்டவர்களுக்குச்சென்றுகூடுதற் கரிதாய்,— செல்கதியாய். எ - து. வழிபட்டவர்களுக்குச் சென்றுபொருந்துகைக்கு இடமாகிய முத்திநெறியாய்,— சிறிதாகிப்பெரிதாய். எ-து. அணுவுக்கணுவாய் மஹத்துக்குமஹத்தாய்,— திகழ்வதுதற்சிவ

மென்பர். எ- து. இப்படிவிளங்காநின்றது உண்மையானசிவமென்று சொல்லுவார்கள்,—தெளிந்துளோரே. எ- து. சித்தாந்தத் தெளிவுவந்த பெரியோர்கள். எ - று.

ற-ம். பலகலை. எ-கு. வேதாகமங்களைச்சொல்லாமலவையிற்றைத்தவிர வேறேசிலநூல்களென்று சொல்லுவாருமுளர் அப்படியாகுனு மிந்தச்செய்யுளில் பலகலையை முந்தக்கூறி யாகமமும் வேதமும் பிற்படக்கூறுகையாலே யது பொருளல்ல வெனவறிக. அல்லது பின்னை யெங்ஙனேயென்னில் வேதாகமங்களு மவையிற்றினின்றும் விரியப்பட்ட நூல்களுமென்பதொழிந்து வேருகச்சொல்லவொண்ணு தெனவறிக. அதற்குவழியேதென்னில் கலைஞானமென்பது சர்வநூலுக்கும் பொதுப்பெயராகையா லப்படிச் சொன்னதெனவறிக அதற்கு. பி - ம். சித்தியாரில். "வேதசாத்திரமிருதி புராணகலைஞானம்" எ - ம். சங்கற்ப நிராகரணத்தில். "பெருங்கடலுதவுங் கருங்கடுவாங்கிக்- கந்தரத்தடுத்த வந்தமில்கடவுள் - பாலனையுணர்த்துமேலவர்போலக்-கேட்போரளவைக்கோட்படுபொருளா - லருளியகலைகளலகிலவதனல்" எ-ம் திருவருட்பயினில். "நற்குஞ்சரக்கன்று நண்ணிற்கலைஞானங் கற்குஞ்சரக்கன்றுகாண். எ-ம். இந்நூலினும் "அருங்கலைகள் முதிர்ந்துளோரே" எ - ம். வருமேதுக்களைக் கண்டுகொள்க. யாவையினும். எ - கு. வேதத்தினு மாகமத்தினும் விரியப்பட்டது மற்றுள்ள நூல்களெல்லாமென்று பொருட்படுத்தினத்துக்கு. பி - ம். சித்தியாரில் "வேதநூல் சைவநூலென்றிரண்டே நூல்கள் வேறுளைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்கள்" எ - தி. கண்டுகொள்க. பதிபரமே. எ - கு. எல்லாவற்றிற்கு மேற்பட்ட பொருளென்றதேதென்னில் அண்டாண்ட பகிரண்டங்களுக்கு மப்பாற்பட்ட பொருளென்றதெனவறிக. இதற்கு. பி - ம். திருப்பல்லாண்டில். " அண்ட

ங்கடந்த பொருளளவில்லதோ ராநந்த வெள்ளப்பொருள்" எ-து. கண்டுகொள்க. நிலவு மருவுருவின்றி. எ - கு, காணப்பட்ட பொருளுமல்ல காணப்படாத பொருளுமல்ல வென்றதேதென்னில் காணப்படும் பொருளென்றால் தோன்றி நின்றழியப்படும் பொருளாம் காணப்படாத பொருளென்றால் முயற்கோடுபோலவு மாகாயப் பூப்போலவு மில்லாததொருபொருளாமென்றதெனவறிக. இவையிரண்டிக்கும்பி-ம் சித்தியாரில். " அறிதரும் பொருளோவீச னறிவுறுதவனே வென்னி, லறிபொருள் சித்துசத்தா மறியாததின்று மெங்குஞ், செறிசிவமிரண்டுமின்றிச் சித்தொடு சத்தாய் நிற்கும்." எ. து. கண்டுகொள்க. இதிலாகாயப் பூப்போலக் காணாத பொருளாம். எ - கு. பி-ம். சித்தியாரில். "வானத்தினாரார் பூந்தொடையு மாமைக்கெழு மயிர்க்கயிறும் போலும்." எ-து. கண்டுகொள்க. அன்றிச் செலவரிதாய்ச் செல்கதியாய். எ-கு. வழிபடாதவர்கள் சென்று கூடுதற்கரிதாயென்றும் வழிபட்டவர்கள்சென்று கூடுதற்கெளிதாயென்றும் பொருட்படுத்தினத்துக்கு வழியேதென்னில் சிவாகமஞ்சொன்னவொழுக்கிலேநின்று அநுட்டியாதவர்களுக்குக் கூடலரிதென்று மநுட்டித்தவர்களுக்குக் கூடலெளிதென்றுஞ் சொன்னதெனவறிக. இவையிரண்டிக்கும். பி - ம். சித்தியாரில் "இறைவனவான்" என்றசெய்யுளில். "மறையாகமங்களினா லறிவெல்லாந்தோற்றும் வனைவின்வழி வருவோர்க்கும் வாராதோர்க்கு, முறைமையினா லின்பதுன்பங்கொடுத்தலால்." எ- து. கண்டுகொள்க. சிறிதாகிப் பெரிதாய். எ - கு. அணுவுக்கணுவாய் மஹத்துக்குமஹத்தாயென்றதேதென்னில் சர்வான்மாகளுக்கு மெடுக்கப்பட்ட அச்சுக்களுக்கெல்லா மதற்கதற்குத்தக்கதாகக் கூடிநின்று சேட்டிப்பிக்கையா லப்படிச்சொன்னதெனவறிக. இதற்கு. பி ம். இருபாவிருபஃதில், " யாவ

ரியாவையுமியாங்கணுஞ்சென்று-புக்குழிப்புக்கு." எ-து. கண்டுகொள்க. தற்சிவம். எ-கு. உண்மையான சிவமென்றதேதென்னில் ஒருவிகற்பங்களுமின்றித் தற்சுபாவமாய் நின்ற சொரூபத்தைச் சொன்னதெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில். "நிறுத்துவதோர்குணமில்லான் றன்னையொருவர்க்கு நினைப்பரியானொன்றுமிலான்" எ-து. கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது பலகலைஞானமாகச் சொல்லப்பட்ட வேதாகமபுராணசாத்திரங்களெல்லாம் பதிபசுபாசத்தினுண்மையைச்சொல்லுமென்று மிதிற்பதியானது நிஷ்களசொரூபியாய் நிற்குமென்னுமுறைமையு மறிவித்தது. (க)

இங்ஙனநிஷ்களசுபாவமாயிருக்கப்பட்டசிவன் பிரபஞ்சசிருஷ்டியை நடத்துமுறைமையெங்ஙனேயென்று வினவத்தனது சத்திகளிடமாகத் திருமேனிகொண்டு நடத்துவனென்னுமுறைமையை மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

நீடுபராசத்திநிகழிச்சாஞான நிறைகிரியைதரவதனைநிமலன்மேவி, நாடரியகருணைதிருவுருவமாகி நவின்றுபலகலைநாதவிந்துவாதி, கூடுமொளிவளர்குடிலைமாயை மேவிக் கொடுவினைகொடனுகரணபுவனபோகம், பீடுபெறநிறுவியவையொடுக்குமேனி பிறங்கியநிட்களசகளப்பெற்றியாமே. (உ)

முன்னருட்சத்தி மூவிதமான
தன்மையினிட்கள சகளமுரைத்தது.

வி-ம். நீடுபராசத்தி. எ-து. அந்தநிஷ்களசுபாவமாயுள்ள சிவத்துடனே நிலைபெற்றுள்ள மேலானசத்தியானது அந்தச்சிவனுக்குத்திருமேனியாக,—நிகழிச்சாஞானநிறை கி

ரியைதர. எ-து. விரிந்துதோன்றப்பட்டவிச்சாசத்தியென்று
ம் ஞானசத்தியென்றும் நிறைந்தகிரியாசத்தியென்றும் ஒன்
றிலேயொன்றாக வுண்டாக்க,— அதனைநிமலன்மேவி. எ-து.
அந்தச்சத்திகளைநிமலனாகிய சிவன்பொருந்தி,— நாடரிய க
ருணைதிருவுருவமாகி. எ- து. குறித்தற்கரிய காருண்ணியத்
தினாலே யப்படியிச்சாஞானக்கிரியாசொரூபனுமாய்—நவின்
றுபலகலைநாதவிந்துவாதிகூடுமொளிவளர்குடிலை. அநுவயம்.
ஒளிவளர்குடிலைகூடு நாதவிந்துவாதிபலகலைநவின்று. எ- து.
பிரகாசம்வளராநிற்கிற குடிலையாகிய சுத்தமாயையைப்பொ
ருந்தி நாதவிந்துமுதலான தத்துவங்களையுந்தோற்றுவித்துப்
பலகலையாகிய வேதாகமங்களையு மருளிச்செய்து,—மாயை
மேவிக் கொடுவினைகொ டனுகரணபுவனபோகம் நீடுபெறநி
றுவி. எ- து. அசுத்தமாயாகாரணத்தையும்பொருந்திக் கொ
டியவினைக்குக்கொள்கலமாக விருக்கிற சகலராயுள்ள வான்
மாக்களுக்குத் தனுகரணபுவனபோகங்களையும் பெருமைபெ
றநிறுத்தி,—அவையொடுக்கும். எ - து. இங்ஙனஞ் சொல்ல
ப்பட்டவற்றையெல்லாந் தோற்றினமுறைமையிலே யொ
டுக்குவிக்கும்,—மேனி. எ-து. திருமேனியானது,— பிறங்கிய
நிட்களசகளப்பெற்றியாமே. எ - து. விளங்கப்பட்டநிஷ்க
ளமென்றுஞ் சகளமென்றுஞ் சொல்லுமுறைமையினை யுடை
த்து. எ - று.

று - ம். நீடுபராசத்தி. எ - கு. அந்தச்சிவத்துடனே
நிலைபெற்றுள்ள சத்தியென்று பொருட்படுத்தினத்துக்கு வ
ழியேதென்னில் அந்தப்பராசத்தியானது அந்தப்பரமசிவனை
ப்போலே தனக்கொருபோக்குவரவின்றியே யெப்பொழுது
மொருதன்மையாய் நிற்கையாலே யப்படிச் சொன்னதென
2·124.3 வறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில். "எத்திறநின்றானீசன
த்திறமவனுநிற்பள்." எ-து. கண்டுகொள்க. ஒளிவளர்குடிலை

என்றதைப் பிரகாசத்தினையுடைய மாமாயையென்ற தேதென்னில் சிவன்கொள்ளப்பட்ட திருமேனியெல்லாமதனிடமாகக் கொள்ளுகையாலெனவறிக. நிட்கள சகளப்பெற்றியாமே என்றதை இங்ஙனஞ்சொல்லப்பட்ட திருமேனிநிஷ்களமுமாஞ் சகளமுமாமென்றதேதென்னில் தோற்றுகிறதிருமேனி சகளமாமென்றும் ஒடுக்குகிறதிருமேனி நிஷ்களமாமென்றுஞ் சொன்னதெனவறிக.

இதனாற்சொல்லியது சிவன்பிரபஞ்சசிருஷ்டியாகச் சகளீகரிக்குமிடத்துத் தனதுசத்தியேவடிவாகத் திருமேனி கொண்டு சுத்தமாயையைப்பொருந்தி யதிலுண்டானநாதவிந்துமுதலான தத்துவங்களையுந்தோற்றுவித்துப் பலகலைஞானமாகிய வேதாகமங்களையுமருளிச்செய்து அசுத்தமாயையிலுண்டான தனுகரணபுவனபோகங்களையு நடத்தி மீளவுமொடுக்குவனென்று மிங்ஙனநடத்துகிறதிருமேனி சகளமென்றுமொடுக்குகிறதிருமேனி நிஷ்களமென்றும்வருமுறைமையுமறிவித்தது. (௨)

அப்படி யும்முடையசிவன் சகளீகரிக்குமிடத் தவனைப் பிரமா சிருஷ்டிக்கிறதொழியத் தானேசகளீகரிப்பானென்னலாமோவென்ற பாஞ்சராத்திரியைநோக்கி யருளிச்செய்வானெடுத்துக்கொண்டருளியது.

ஈங்கிதுவென்றதுகட்டந்தவியல்பினனு மீறுமுதனடுவொன்றுமிலாமையானு, மோங்கிவளர்ஞானமயனதலானு முண்மைபிறர்க்கறிவரியவொருமையானுந், தாங்கரியவெறுப்பினொடுவிருப்புமெல்லாஞ் சார்வரியதனிமுதல்வனதலானு, நீங்கலருமுயிர்க்குயிராய்நிற்றலானு நிறுத்திடுவனினைந்தவுருநிமலன்றானே. (௩)

துடைப்பவனுருவாய்த் தோன்றுவதன்றிப்
படைக்கவரிதாம் பரிசினையுரைத்தது.

வி - ம். ஈங்கிதுவென்றது கடந்தவியல்பினனும். எ-து. இவ்விடத்திதுவென்று ஆன்மபோதத்தாற் குறிக்கப்பட்டத ற்கப்பாற்பட்டிருக்கிற முறைமையினையுடையவனாகையா லும்,— ஈறுமுதனடுவொன்று மிலாமையானும். அநுவயம். முதனடுவீறொன்றுமிலாமையானும். எ - து. தோன்றிநின்ற ழியப்பட்ட முதலுநடுவுமுடிவு மில்லாதவனாகையாலும்,— ஓங்கிவளர்ஞானமயனாதலானும். எ - து. மிக்குவளராநின்ற அறிவேவடிவாக வுடையவனாகையாலும்,— உண்மைபிறர்க் கறிவரிய வொருமையானும். எ - து. தன்னுண்மையைப்பிற ராலறிதற்கரிய நிலைமையினையுடையவனாகையாலும்,—தாங் கரிய வெறுப்பினொடுவிருப்புமெல்லாஞ் சார்வரியதனிமுத ல்வனாதலானும். எ - து. ஆன்மாக்களைப்போலப் பொறுத் தற்கரிய பிரியாப்பிரியங்களெல்லாம் பொருந்துதற்கரிய வொப்பில்லாத முதலியாதலானும்,— நீங்கலருமுயிர்க்குயி ராய்நிற்றலானும். எ - து. தன்னைவிட்டுப்பிரிந்து தனித் தொருமுதலாய்நில்லாத சர்வான்மாக்களுக்கும் பிராணனா ய்நிற்கையாலும்,— நிறுத்திடுவனினைந்தவுரு நிமலன்றானே. எ - து. இங்ஙனஞ்சொல்லிவந்த முறைமைகளையுடையவனா தலாலே யவனுக்கொருவர் ஒருவடிவு கொடுக்கவேண்டுவதி ல்லை தனக்குத்தானேபொருந்தினவடிவை யெடுத்துக்கொள் ளுவன். எ - று.

நு - ம். இந்தச்செய்யுளுக்கிட்டதொந்தனையிலே சிவ னையும் பிரமாசிருஷ்டிப்பானென்று பாஞ்சராத்திரிசொன் னானென்பதற்கு. பி - ம். சித்தியாரில். "உந்தியிலயனையீன் றங் கவனைக்கொண்டுலகுண்டாக்கி, யந்தநல்லுலகழிக்க

வரனையுமாக்குவித்துத், தந்திடுஞ்சகத்தினுக்குத் திதிகத்தா
தானேயாகி, வந்திடுந்தோற்றமீறுநிலைமையும் பண்ணுமா
யன்." எ-து. கண்டுகொள்க. அவனப்படிச்சொன்னதனை
மறுத்ததற்கு: பி-ம். சித்தியாரில். "அயன்றனைப்பயந்தா
னென்று யரியயன் சிரஞ்சேதிப்பப், பயந்திடான்றலைமாரு
னும் படைத்திடான் சிரத்தைக்கிள்ளுஞ், சயந்தருமரனைத்
தந்தா னயனென்கை தப்பேயன்றே, தியங்கிடாதுணரா
யெல்லாஞ் சிவன்செயலென்றுதேர்ந்தே." எ-து. கண்டு
கொள்க. இனி ஈங்கிதுவென்றது கடந்தவியல்பினன். எ-கு.
ஆன்மபோதத்தாற்சுட்டி யறிதற்கரியவனென்று பொருட்
கூறியதற்கு. பி-ம். சித்தியாரில். "குறித்ததொன்றாகமாட்
டாக்குறைவிலனாதலானும்." எ-ம். "தன்னறி வதனாற்காணு
ந்தகைமையனல்லனீசன்". எ-ம். கண்டுகொள்க. ஈறுமுத
னடுவொன்று மிலாமையான். எ-கு. தோன்றிநின் றழித
லில்லாதவனென்றதேதென்னில் ஆன்மாக்களைப்போல யோ
னிசம்பந்தமுள்ளவ னல்லவென்றதெனவறிக. ஓங்கிவளர்
ஞானமயன். எ-கு. மிக்குவளராநின்றவறிவென்ற தேதெ
ன்னில் அண்டாண்டபகிரண்டங்களுக்கெல்லா மப்பாலுமிப்
பாலுமுண்டாகிய வியல்புகளையெல்லா மறியப்பட்டபேரறி
வனாகையாலெனவறிக. உண்மைபிறர்க்கறிவரிய வொருமை
யான். எ-கு. தன்னுண்மை பிறருக்கறிய வரியவனென்ற
தேதென்னில் பிரமவிஷ்ணுக்கள் முதலாயுள்ளவர்களுக்கு
ந் தன்னையறிதற்கரியவ னென்றதெனவறிக. இதற்கு. பி-ம்.
கோவைத்திருவாசகத்தில். "நடனும்வணங்குந் தோல்லோ
னெல்லை நான்முகன்மாலறியாக், கடனுமுருவத்தரன்."
எ-து. கண்டுகொள்க. நிறுத்திடுவனினைந்தவுருநிமலன்று
னே. எ-கு. தனக்குப்பொருந்தினவடிவு தானேயெடுத்
துக்கொள்ளுவனென்ற தேதென்னில் பத்தியினால் வழிப

டுவோர்க்கு அதற்கதற்குத்தக்க திருமேனிகொண் டிரக்ஷிக்கையாலெனவறிக. இதற்கு. பி - ம். பூசாகரணத்தில். "எவ்வுலகத்துமூர்த்தி யேதுகொண்டவனியங்கு, மவ்வுலகத்துமேனி யதுகொண்டங் கமருமீசன்." எ - து. கண்டுகொள்க. அதுவன்றியு மந்திரங்களிரத்தமாகவும் பதங்கள் தசையுநரம்புமாகவும் வன்னங்கள் துவக்காகவும் புவனங்களுரோமமாகவும் தத்துவங்க ளத்திமச்சைசுக்கிலமுதலான தாதுக்களாகவும் கலைகளைந்தாகிய சாந்தியாதீதகலை முதல் திருமுடியாகவுந் திருமேனியாகக்கொண்ட அத்துவாமூர்த்தியென்னவு மாமெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில், "அத்துவாமூர்த்தியாக வறைகுவதென்னை யென்னினித்தனுய் நிறைந்தவற்றி னீங்கிடா நிலைமையானுஞ், சித்துடனசித்துக்கெல்லாஞ் சேட்டித னுதலானும், வைத்ததா மத்துவாவும் வடிவெனமறைகளெல்லாம்" எ-து. கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது நின்மலசொருபனாகியசிவன் வாக்குமனாதீத னுகையாலுந் தோன்றிநின் றழியாதவனுகையாலும் ஞானசொருபனுகையாலுந் தனக்குப்பொருந்தின திருமேனி தானேயெடுத்துக்கொள்ளுவனென்னு முறைமையை யறிவித்தது. (ந)

இங்ஙனங்கூறிவந்த செயுட்களில் பலகலையென்ற விருத்தமுதலாகிய செய்யுள்மூன்றினுள்ளு மொருகத்தாவையுண்டென்றுநாட்டி அவனிஷ்களசொரூபியா யிருப்பனென்று மவன் பிரபஞ்சத்தை நடத்துவது பொருட்டாகத் தனதுசத்தியிடமாகச் சகளீகரித்து நடத்துவனென்று மப்படியவன் சகளீகரிக்குமிடத்துத் தனக்குப் பொருந்தின திருமேனிதானுயெடுத்துக்கொள்ளுவனென்றுஞ் சொல்லுகிறதென்ன? அப்படி யொருகத்தாவில்லை யென்று மிந்தப் பிரபஞ்சமு மொரு

காலத்தினு மழியாம னித்தமாயிருக்குமென்றுஞ் சொல்லுகி றவுலோகாயிதனை நோக்கி யிந்தப்பிரபஞ்சமநித்தியமென்று மிந்தப்பிரபஞ்சத்தைத் தோற்றுவித்து நடத்தி யொடுக்குகைக்கொரு கத்தாவுண்டென்று மேல் மறுத்தருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

உலகமெலாமொருவனோடொருத்தியொன்றென் று ளதாகிநின்றளவிலொடுங்கும்பின்னு, மலமதனாலுளதா குமுருவமாறி வருவதுபோவதுசெல்வதாதலானு, மலை விலசேதனமாயையாதலானு மணுக்களுருவடையுமறிவி லாமையானு, நிலவுதொழின்மருவியுருநிற்றலானு நின் றெவையுமளித்திடுவனிமலன்றானே. (௪)

ஒருவனொருத்தி யொன்றென்றுணர்வரு
முருவமவனால் வந்ததென்றது.

வி-ம். உலகமெலா மொருவனோ டொருத்தி யொன்றெ ன்றுளதாகி நின்றளவிலொடுங்கும். எ-து. நீநித்தியமென்ற பிரபஞ்சமனைத்து மவனென்று மவளென்று மதுவென்றுந் தோன்றிநின் றெல்லையிலேயழியாநிற்கு மாகையாலே இந்த ப்பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்கவுந் திதிக்கவுஞ் சங்கரிக்கவு மொரு கத்தாவேண்டுமென்றறிவாயாக. அப்படியும்முடை யகத்தாவாலே சங்காரப்பட்டொடுங்கின பிரபஞ்ச மீளவு ந் தோன்றுவா னேனென்னில்,—பின்னுமலமதனா லுளதாகு ம். எ-து. ஆன்மாக்களுக்கு ஆணவமலபாகம் வருகைப்பொ ருட்டாக மீளவுந் தோன்றாநிற்கும். அஃதாவது இந்தப்பிரப ஞ்சமென்றது ஆன்மாக்களும் பாசங்களுங்கூடியே பிரபஞ்ச மாகையா லவையிற்று ளான்மாக்க ளநாதியேமலசகச ரா கையாலே யந்த மலபாகம்வந்தே முத்தியைப் பெறவேண்டு

கையா லந்தமலபாகம் வருமிடத்து மாயாசரீரங்களை யெடுத்துக் கன்மங்களைப் புசித்தே மலபாகம் வரவேண்டுகையா லந்தமுத்தியைப் பெறுமளவுஞ் சங்காரகாலம் மாயாகாரணத்திலே யொடுங்கியுஞ் சிருஷ்டிகால மந்தக்காரணமாகையினின்றுந் தோன்றப்பட்ட காரியமாயையாகிய கலையாதித்துவங்களோடு மொக்கத்தோன்றி ஜீவித்து வருகையாலே யப்படிச் சொன்னதெனவறிக. அப்படி யான்மாவென்பதுமொன்றுண்டா யதனைமறைக்கப்பட்ட ஆணவமலமென்பதுமொன்றுண்டா யந்த மலபாகம் வருகைப் பொருட்டாக வொடுங்கின பிரபஞ்ச மீளவுந்தோன்றுமேயாகி லதுதானே யொடுங்கியுந் தோன்றியும் வாராதோ அதற்குக்கத்தாவென் றொருவன் வேண்டுமென்றதேதென்னில்,— உருவமாறி வருவதுபோவது செல்வதாதலானும். எ - து. ஆன்மாக்கள் கன்மத்துக்கீடாக வச்சுமாறித் தேகத்தை வந்தெடுத்தும் பிராரத்தந் தொலைந்தவாறே யந்தத்தேகத்தை விட்டுப்போயும் புண்ணியபாவங்களுக்கீடாகச் சுவர்க்கநரகங்களிலே சென்றநுபவிக்கையினாலும். அன்றியும்,—அலைவிலசேதனமாயையாதலானும். எ - து. இந்தமாயாரூபங்கள் ஜடமானபடியாலே யிவையிற்றுக் கியக்கமுமறிவு மில்லாதபடியாலும். அன்றியும்,— அணுக்களுருவடையுமறி விலாமையானும். எ-து. ஆன்மாக்கள் கன்மத்துக்கீடாக வொவ்வொருசரீரங்களையெடுக்குமிடத்து அந்தச்சரீரங்களிலே சென்று பொருந்துகைக்குத்தங்களுக்கென்ன வோரறிவில்லாதபடியாலும். அன்றியும்,—நிலவுதொழின் மருவியுருநிற்றலானும். எ - து. ஆன்மாக்கள்கன்மத்துக்கீடாக அப்படியெடுக்கப்பட்டசரீரங்களோடுங் கூடிநின்று பொருந்தப்பட்ட தொழில்களிலே யாதாமொருதொழில்களைச்செய்து நிற்கையாலு மிவையெல்லாந் தாமாகக் காரியப்படமாட்டாததுகொண்டே,— நின்றெவை

யுமளித்திடுவனிமலன்ருனே. எ- து. தனக்கொருபோக்குவரவின்றியே நின்றெல்லாவற்றையுஞ் செய்வித் திரக்ஷித்தருளுவ னின்மலனாகிய சிவன்ருனே. எ - று.

ரு - ம். இந்தச்செய்யுளுக்கிட்ட தொந்தனையிலே உலகாயிதன் கத்தாவில்லையென்ருனென்று மிந்தப்பிரபஞ்சமொருகாலத்தினு மழியாமனித்தியமாய்நிற்கு மென்ருனென்றுஞ் சொன்னதனைமறுத்து உலகமெலாமொருவனேடொருத்தி யொன்றென்றுளதாகிநின்றளவிலொடுங்கும். எ - கு. பொருட்கூறியவிடத்து இந்தப்பிரஞ்ச மவனவளதுவாய்நின்று காரியப்படுமிடத்துத் தோன்றிநின்றழிகையாலே இவையிற்றைக்காரியப்படுத்திச் சிருஷ்டித்துத் திதித்துஞ் சங்கரித்தும்வருகைக் கொருகத்தாவேணுமென் றவனை மறுத்ததற்கு. பி - ம். சித்தியாரில் உலகாயிதன் மறுப்பாகிய செய்யுளில். "பூதமானவைநித்தமென்று புகன்றதென்னையுருக்களா, யாதலோடழிவாகுமாதலி னுக்குவோர்வரவேண்டிடுங், காதலோடு கடாதிமண்கொ டியற்றுவோருளர் கண்டனஞ், சீதநீரிலெழுந்தகொப்பு ணிகழ்ந்த மாருதச்செய்கையே." எ - ம். "பூதமானவைகாரியங்கள் பொலிந்துமன்னியழிந்திடு, மாதலாலொரு நாதனிங்குள னென்றறிந்துகொளையனே, பேதமான கடாதிமண்ணினில் வந்தவாறு பிரித்திடிற், கோதிலாத குலாலனல்வரு செய்கையென்று குறிப்பபோ." எ-ம். வருமதுகண்டுகொள்க. அன்றியுஞ் சுபக்ஷத்திலும் உலகாயிதன்கருத்தை மறுத்தவிருத்தத்தில். "ஒருவனேடொருத்தியொன்றென் றுரைத்திடு முலகமெல்லாம், வருமுறைவந்துநின்று போவதுமாதலாலே, தருபவனொருவன்வேண்டுந் தான் முதலீறுமாகி, மருவிடுமாதிமுத்தச் சித்துருமன்னிநின்றே." எ - து. கத்தாபிரஞ்சத்தை நடத்துவனென்பதற்குக் கண்டுகொள்க. இனிபிரபஞ்சந்தோ

ன்றியு மழிந்தும் வருமென் றவனைமறுத்ததற்கு. பி - ம். சி
த்தியாரில். "உதிப்பதுமீறுமுண்டென் றுரைப்பதிங்கென்னை
முன்னோர், மதித்துலகநாதியாக மன்னியதென்பரொன்னி,
விதற்கியானநுமானாதி யெடேனிப் பூதாதியெல்லாம், விதி
ப்படிதோன்றிமாயக் காணலான்மேதினிக்கே." எ - து. க
ண்டுகொள்க. இனி யிந்தப்பிரபஞ்சமாவது ஆன்மாக்களும்
பாசங்களுங்கூடியே பிரபஞ்சமென்று பேர் பெற்றுநின்ற
தென்று விதப்பாகப்பொருட்கூறியதற்கு. பி - ம். தத்துவ
விளக்கத்தில். "கருமலிபாச மசேதனங்கட்டுண்பர் சேதன
ரொன், றிருமையில்லைவய மடங்குமென்றெண்ணுக." எ-து.
கண்டுகொள்க.இனி யப்படியொடுங்கினபிரபஞ்ச மீளத்தோ
ன்றுவானேனென்று உலகாயிதன் வினாயதற்குத்தரமாகப்
பின்னு மலமதனாலுளதாகும். எ - கு. ஆன்மாக்களநாதியே
மலசகசராகையாலே யந்தமலபாகம் வருகைப்பொருட்டா
கப் பிரபஞ்ச மீளவுந்தோன்றுமென்று விதப்பாகப்பொருட்
கூறியதற்கு. பி-ம். சிவஞானபோதத்தில். "அவனவளதுவெ
னுமவ்வைமூவினைமையிற், றோற்றியதிதியேயொடுங்கி மலத்து
ளதாம்." எ-ம். "இலயித்ததன்னி லிலயித்ததாமலத்தால்."
எ - ம். வருமதுகண்டுகொள்க. அன்றியு மாணவமலபாகம்
வாராத ஆன்மாக்கள் மாயாரூபங்களொடுங்குங்காலங் கார
ணமாயையிலே யொக்கவொடுங்கியுந் தோன்றுங்காலமந்
தமலபாகம் வருகைப்பொருட்டாக மீளவுமந்தக்காரணமா
யையினின்றுங் காரியமாயையோடே யொக்கத்தோன்றுவா
ர்களென்றும் விதப்பாகப்பொருட்படுத்தினத்துக்கு. பி-ம்.
சித்தியாரில். "உயிரவையொடுங்கிப்பின்னு முதிப்பதெனர
ன்பாலென்னிற், செயிருறுமலத்தினாகுஞ் சிதைந்ததேதென்
னிற் சித்தத், தயர்வொழிகாரியங்க ளழியுங்காரணங்கிடக்
கும், பயிறருகாரியம்பின் பண்டுபோற்பண்ணுமீசன்" எ-து.

கண்டுகொள்க. இந்நூலினும். "மற்றத்தோற்றமலபாகம்வர"
என்பது மிப்பொருட்பற்றியெனவறிக. இங்ஙனமான்மாவு
க்குத் தோற்றஞ்சொல்லவே யுடம்போடுங்கூடித் தோன்று
கையால் பிரபஞ்சத்தோற்றஞ்சொல்லுகை கருத்தெனவறி
க. இனியந்த ஆணவமலபாகம் வருமிடத்து மாயாரூபங்க
ளையெடுத்தே மலபாகம்வரவேணுமென்பதற்கு. பி - ம். சித்
தியாரில். "எழுமுடல்கரணமாதி யிவைமல மலமலத்தாற்,
கழுவுவனென்றுசொன்ன காரணமென்னையென்னிற், செ
ழுநவையறுவைசாணி யுவர்செறிவித்தழுக்கை, முழுவதுங்க
ழிப்பன்மாயை கொடுமலமொழிப்பன் முன்னோன்." எ-து.
கண்டுகொள்க. இனி யப்படிப் பிரபஞ்சந்தோன்றுமிடத்துத்
தானேதோன்றுதோ கத்தாவும் வேணுமோவென் றுலகாயி
தன்வினையதற்குத்தரமாக வுருவமாறி யென்றபதந்தொடங்
கி மற்றுள்ளபதங்களுக்கெல்லாம் பொருட்கூறுமிடத்து மா
யாகன்மங்கள் ஜடமானபடியாலு மான்மாக்கள் தங்களுக்
கென்ன வோரறிவில்லாதபடியாலு மவையிற்றைக்கூட்டி
க் காரியப்படுத்துவது சிவனேயென்றும், நின்றவையுமளி
த்திடுவ னிமலன்றானே. எ - கு. சர்வமுஞ்சிவனேசெய்வித்
திரக்ஷித்தருளுவனென்றும் பொருட்கூறியதற்கு. பி - ம்.
சித்தியாரில். "உலகுடல்கரணங்கால முறுபலநியதிசெய்
தி, பலவினைகொண்டுகன்மம் பண்ணுவதுண்பதானு, னில
விடாவினைதான்சென்று நினைந்துயிர் நிறுத்திக்கொள்ளா,
வலகிலாவறிவனாணை யணைத்திடுமருளினாலே." எ - து. கண்
டுகொள்க. ஆகவிங்ஙனங் கூறிவந்தபதங்களி லுருவமாறிவ
ருவது போவது செல்வது, எ - கு. பொருட்கூறுமிடத்து வ
ருவது சிருஷ்டியென்றும் போவது சங்காரமென்றுஞ் செ
ல்வது திதியென்றும் பொருளுரைப்பாருமுளர். அது பொரு
ளல்லவெனவறிக. அதுவேனென்னில் இச்செய்யுளின் முதற்

பதத்தில் உளதாகிநின்றளவிலொடுங்கும். எ-கு. தோன்றிநின்றழியுமென்று சிருஷ்டியுந் திதியுஞ் சங்காரமுமாகப்பொருட்கூறி யிதற்குமப்படிப் பொருளுரைக்கில் ஒருசெய்யுளிலே யிரட்டித்த பொருள்கூறுகை வழக்கல்லாதபடியா லப்படிச் சொன்னதெனவறிக. ஆகையால் செல்வதென்றது ஆன்மாக்கள் கன்மத்துக்கீடாகச் சுவர்க்கநரகங்களிலே செல்வார்களென்பதே பொருளெனவறிக. அன்றியும், அணுக்களுருவடையு மறிவிலாமையானும். எ - கு. பூதவணுக்கள்நாலு மான்மவணுவொன்றும் ஆகவைந்தணுவுந்தம்மிற்கூடி யுருப்படுமென்று பொருளுரைப்பாருமுளர். அப்படியானாலும் அணுக்க ளுருவடையுமென்றசொல்லுக்கு அந்த அணுக்களென்றது வேறே யோருடம்பிலே சென்று பொருந்துமென்று பொருளாமொழிய வவைதம்மிற்கூடியுடம்பாமென்று பொருளாகாதபடியால் ஆன்மாக்களாகிய வணுக்கள் வேறே யோருடம்பிலே சென்று பொருந்துமென்பதொழிய ஆன்மவணுவும் பூதவணுநாலுந் தம்மிற்பொருந்திக் காரியப்படுமென்பது இந்தப்பதத்துக் காகாதென்றதெனவறிக. அணுக்கள்ளென்பது ஆன்மாக்களென்பதே யிந்தப் பதத்துக்குச் சொல்லப்படுமென்பதற்கு இந்நூலிற் பின்சென்ற நூலாகிய திருநெறிவிளக்கத்தினும் இந்தவிருத்தத்துக் கெதிரடைவிருத்தமாகிய "வையமெலா மாண்பெணலியென்னத்தோன்றி வல்வினையா லுழன்றுருடுங்கி மலத்தாற் பின்னு, மெய்யணையும் வெகுவித ரூபங்கள்மாறி விடுவது பற்றுவதாகி விரிதலானும், பொய்யனையமாயை சடமாதலானும் போதமுருவறிந்து பொருந்தாமையானுஞ், செய்வினைசெய்துயிருருவினிற்றலானுஞ் சகமுழுது நின்றுசிவன் செய்வன்காணே" என்னுமிதில் போதமுருவறிந்து பொருந்தாமையானும் என்றபதத்தை அணுக்களுருவடையு மறிவிலாமையானு மென்

றபதத்துக்குக் கண்டுகொள்க. இந்தத் திருநெறிவிளக்கம் பின்னூலாயிருக்க விதனை யெதுக்காட்டிய தேதென்னில் இந்தச்சிவப்பிரகாசத்துக்குப் பின்சென்ற நூலாகையால் சத்தம் வேறுபட்டும் அத்தமொன்றுபட்டும் வருகையாலே யதுகாட்டவேண்டிய தெனவறிக. இந்தநூலி லிவைவந்த விடமெல்லாமிதுவே கருத்தென்பது கண்டுகொள்க. அன்றியும் அணுக்களென்பதை ஆன்மாக்களென்று தனித்துஞ்சொல்லப்படுமென்றதற்கு. பி-ம். தத்துவ விளக்கத்தில் "அமையாநில்லமையணுக்களோர்மூன்று வகையவைதாங், கமையாநிறைந்த விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர்." எ - ம். "மூவகையணுக்களுக்கு முறைமையால் விந்து ஞானமேவின" என்று சித்தியாரினுங் கண்டுகொள்க. ஆகையா லிந்தப்பதத்துக்கு அணுக்க ளுருவடையுமென்றது ஆன்மாக்களென்பதே துணிவெனவறிக. அன்றியும் நிலவுதொழின் மருவியுருநிற்றலானும். எ - கு. அறுவகைத் தொழிலிலே பொருந்தப்பட்டதொருதொழிலைச்செய்து நிற்றலானு மென்று பொருளுரைப்பாருமுளர். அப்படி யறுவகைத்தொழில் மானுடர்க்கொழிய மற்றுள்ள வான்மாக்களுக்குப்படாதாகையா லிவ்விடத்துச்சர்வான்மாக்களையு நோக்கிப் பொதுப்படக் கூறுகையாலேநிலவுதொழிலென்பது பொருந்தப்பட்ட தொழிலென்று பொருட்படுத்துகையே வழக்கெனவறிக. அறுவகைத்தொழிலென்றால் மானுடர்க்கென்ற தேதென்னில் அறுவகையாவது உழவு, தொழில், வரைவு, வாணிபம், வித்தை, சிற்பம் ஆகையாலப்படிச்சொன்ன தெனவறிக. என்றிங்ஙனங் கூறப்பட்டசெய்யுளில் உலகமெலா மொருவனொடொருத்தி யொன்றென் றுளதாகிநின்றளவி லொடுங்குமென்ற பதமொன்றையும் உலகாயிதனை மறுத்ததாக்கி மற்றப்பதமைந்தும் மற்றுள்ள புறச்சமயிகளை மறுத்ததாகப் பொருளுரைப்பாருமுளர். அதுபொரு

ளல்லவெனவறிக. அதுவேனென்னில் இச்செய்யுள்பதந்தோறுமொருவன்கருத்தைப்பற்றித் தொடர்ந்து சொல்லுகையாலும் இச்செய்யுளுக்குக் கருத்தாகச்சேர்த்த குரட்பாவும்உலகாயிதனொருத்தன் கருத்தைப்பற்றி நிற்கையாலு மப்படிச் சொன்னதெனவறிக. அப்படிமற்றுள்ள சமயிகளை மறுத்துக் கூறப்பட்டதானு லுலகாயித னொருவனையு நோக்கிச்சிவனையும் ஆன்மாவையும் ஆணவமலத்தையுங் கன்மமலத்தையுங் கூறவேண்டுங் காரணமேதென்னில் அவையிற்றை யவனில்லையென்று சொல்லுகையா லப்படிச் சொன்னதெனவறிக. அவயிற்றை யவனில்லையென்று சொன்னதற்கு. பி-ம். சித்தியாரில். "இப்படியன்றிக்கன்ம முயிரிறைவேறுண்டென்று, செப்பிடுமிவர்க்குமண்ணோர் செய்திடுங் குற்றமென்னோ, வொப்பிலாமலடிபெற்ற மகனொரு முயற்கொம்பேறி, தப்பிலாகாயப்பூவைப் பறித்தமை சாற்றினாரோ" எ - து. அவன்மதத்திலே கண்டுகொள்க. இனியவையெல்லா முண்டென்றுநாட்டியவனைமறுத்துக்கூறினதற்கு. பி - ம். சித்தியாரில். "அநாதியே லமைவின்றெனின்மல மாயைகன்மமணுச்சிவ, னநாதிகன்மமணுக்கள்செய்ய வறிந்துகன்மமுடற்செயா, வநாதிகாரியமாமுடற்க ளசேதனம் மணையாவறிந், தநாதியாதியமைக்கவேண்டு மமைப்பினோடு மநாதியே." எ - து. அவன் மறுப்பிலே கண்டுகொள்க. ஆகையா லிச்செய்யு ளிங்ஙனங் கூறிவந்த வுபமானங்களினாலும் பிரமாணங்களினாலு முலகாயிதனை நோக்கி மறுத்ததென்பதை யநுபவத்தாற் கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது இதற்கு முன்னர்ச்செய்யுட்களிலேயுண்டென்றுநாட்டப்பட்ட கத்தாவை யில்லையென்று பிந்தப்பிரபஞ்ச நித்தியமென்றுங் கூறிய வுலகாயிதனைநோக்கி மறுத்து இந்தப்பிரபஞ்ச மவனவளதுவாகத் தோன்றிநின்ற

ழிகையாலே இவையிற்றைக்காரியப்படுத்துகைக்கு ஒருகத்தாவுண்டென்னு முறைமையையறிவித்தது. (௪)

அப்படியிங்ஙனங்கூறப்பட்ட முன்னர்ச்செய்யுள் முடிவிலே நின்றெவையுமளித்திடுவ னிமலன்றானேஎன்றதற்கு சர்வமுஞ் சிவனேசெய்விப்பனென்று நீர்சிவனொருவன்மேலேயும் வைத்துச்சொல்லுகிறதென்ன. இந்தப்பிரபஞ்சத்தைப் பிரமாசிருஷ்டிப்பனென்றும் விஷ்ணுவிரக்ஷிப்பனென்று முருத்திரன்சங்கரிப்பனென்று மூன்றுதொழிலுக்கு மூவரையுமென்றல்லோ சொல்லுவது என்கிறபாஞ்சராத்திரியைநோக்கி மூன்றுதொழிலுக்குஞ் சிவனேகத்தாவென்னு முறைமையை மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

கந்தமலரயன்படைக்குமுலகமெல்லாங் கண்ணனளித்திடுமவையெங்கடவுடானே, யந்தமுறவழித்திடுவனுதலாலே யயனரியுமவனதுயரதிகாரத்து, வந்தமுறைதன்றொழிலேமன்னுவிப்பனெல்லாம் வருவிப்பன்விகாரங்கண்மருவான்வானின், முந்திரவியெதிர்முளரியலர்வுறுமொன்றலர்வான் முகையாமொன்றென்றுலருமுறையினுமே. (ரு)

படைப்புநிலையவன் படைப்பாதலினாற்
றுடைப்பவன்முதலெனத் தோன்றவுரைத்தது.

வி-ம். கந்தமலரயன்படைக்கு முலகமெல்லாங்கண்ணனளித்திடும். எ-து. மணம்பொருந்தின தாமரைமலரிலே யிருக்கப்பட்ட பிரமா வுலகங்களனைத்தையுஞ் சிருஷ்டிப்பன் அந்தவுலகங்களை விஷ்ணுவிரக்ஷியாநிற்பன்,— அவை யெங்கடவுடானே யந்தமுறவழித்திடுவன். எ-து

அவர்களாற் படைத்தளிக்கப்பட்ட வுலகங்களைச் சேர வெம்முடைய கத்தாவாகிய வுருத்திரன் முடிந்துபோம்படி சங்கரிப்பன்,—ஆதலாலே. எ-து. அந்தத்தொழில்களைச் சிவனப்படிச் சங்கரிக்கையாலே,— அயனரியுமவனது ய ரதிகாரத்துவந்தமுறை. எ - து. அந்தப்பிரமவிஷ்ணுக்களு மந்தச்சிவனுடைய மிக்கவாக்கினைவழியிலே வருகிறமுறைமையினையுடைய வதிகார கத்தாக்களாயிருக்கும். அப்படியானலந்தத்தொழில்களும் பிரமவிஷ்ணுக்களுக்கும் அநாதியேயுடையதோ வும்முடைய கத்தாவாகிய சிவன்கொடுத்ததோவென்னில்,—தன்றொழிலேமன்னுவிப்பன். எ - து. எம்முடையசிவன் றனக்குண்டானதொழில்களிலே யந்தப் பிரமவிஷ்ணுக்களையு நிறுத்துவன். அவை யப்படியும்முடையசிவனுடையதொழிலேயானல் அவையிற்றை யவனழிப்பானேனென்னில்,— எல்லாம்வருவிப்பன். எ - து. அப்படியவனழித்தாலுந் தன்னுடைய கிருத்தியங்களை நடத்தவேண்டுங்காலத்துக் கெல்லாவற்றையு மீளவுமுண்டாக்கியுங்கொள்ளுவன். அப்படியானலொருத்த னொருதொழில்செய்யமாட்டுகிறுனில்லை பலதொழிலு மொருவன் செய்வனுகிலும்முடையசிவன் விகாரப்படானோ வென்னில்,— விகாரங்கண்மருவான். எ - து. அப்படி யெம்முடையசிவன் பலதொழிலு நடத்தினுலு மவனுக்கு விகாரங்களுண்டாகாது. அதுவென்போலவென்னில்,— வானின்முந்திரவி யெதிர்முளரி யலர்வுறுமொன்றலர்வான் முகையாமொன்றுென்றுலரு முறையினுமே. எ - து. ஆகாசத்திலேதோன்றிச் செல்லு மாதித்தன்சந்நிதியிற் றுமமையானது முதிர்ச்சிக்குறையொப்புக்கீடாகக் காரியப்படுமிடத்தொன்றலராநின்றது ஒன்றலருகைக்குப் பக்குவமாகாநின்றது ஒன்றுலராநின்றது

இப்படித்தாமரை மூன்றுதொழிற்பட்டு நிற்கச்செய்தே ஆதித்தனுக்கு விகாரமில்லாதாற்போல. எ-று.

ந - ம். இந்தச் செய்யுளுக்கிட்ட தொந்தஜேயிலே சிருஷ்டிக்குந் திதிக்குஞ் சங்காரத்துக்கும் பிரமா விஷ்ணு வுருத்திரஜேயுஞ் சொல்லியிருக்க வும்முடையசிவனொருவஜேயுங் கத்தாவென்பானேனென்று பாஞ்சராத்திரி வினவினு னென்பதற்கு. பி - ம். சித்தியாரில். "உரைத்தவித்தொழில்கண்மூன்று மூவருக்குலகமோத, வரைத்தொருவனுக்கேயாக்கி வைத்ததிங்கென்ஜே யென்னில், விரைக்கமலத்தோன்மாலு மேவலான் மேவினேர்கள், புரைத்ததிகாரசத்தி புண்ணியநண்ணலாலே" என்று அவன்வினயதற்குத் தரமாகக்கூறியது கண்டுகொள்க. இனி கந்தமலரயன். எ-கு. பூவுக்குப் பெயர்கூருமல் மலரொன்று பொதுவாகச்சொல்லியிருக்கத் தாமரைமலரொன்று பொருட்கூறிய தேதென்னில் பிரமாவுக்கிருப்பிடந் தாமரைமலரொன்று நூல்களிற் சொல்லிவருகையாலே ஆசரணபற்றி யழைத்துப் பொருட்கூறியதெனவறிக. அப்படிவருமதற்கு. பி - ம். "அலரோனெடுமா லமரர்கோன்." எ - ம். "பூவார்திசைமுகன்." எ - ம். முளரியன். எ - ம். தாமரையோன். எ - ம். வருமேதுக்களேக்கண்டுகொள்க. இனி யவையெங்கடவுடானே யந்தமுறவழித்திடுவன். எ - கு. அவையென்ற சுட்டுகொண்டே அந்தத்தொழில்களன்றியே அந்தத்தொழில்களுக்குக் கத்தாவாயுள்ள பிரம விஷ்ணுக்களேயு மழிப்பனென்னவு மாமெனவறிக. இதற்கு. பி- ம். சித்தியாரில். "இறுதியாங்காலந்தன்னி லொருவனே யிருவர்தாமு, முறுதியாய்நின்ருரென்னி லிறுதிதானுண்டாகாதா, மறுதியிலரனே யெல்லாமழித்தலா லவனின்னும், பெறுதுநாமாக்கநோக்கம் பேரதிகரணத்தாலே."

எ - ம். "அழிப்பரி யேவலென்று யரிதனை யழிக்குமன்றங், கழிப்பது தவிர்க்கமாட்டா னங்கமுமழித்தேபூண்டா, னழிப்பரியேவலென்றங் கறைந்தது மழிந்ததன்றோ, வழித்திடுமரனேயாக்க நோக்கமு மாக்குவானே." எ - ம். வருமேதுக்களைக் கண்டுகொள்க. இனி அயனரியு மவனதுய் ரதிகாரத்துவந்த முறை. எ - ம். எல்லாம் வருவிப்பன். எ-ம். வருகையாலே அந்தந்தத்தொழில்களை யன்றியே யந்தந்தத்தொழில்களுக்குக் கத்தாவாயுள்ள பிரம விஷ்ணுக்களையுஞ் சிவனே யுண்டாக்குவனென்னவு மாமெனவறிக. இதற்கு. பி- ம். சித்தியாரில். "சீவன்கள் சநநம்போலச் சிலர்வயிற்றுதித்தமாலைத், தேவென்றே வையங்காக்கச் சுவேச்சையாற் சநித்தானென்பீர், பூவன்பின்படைக்கமாட்டா தரனடி போற்றவேதக், கோவந்து முகத்திற் றோன்றிச் சிருட்டியைக்கொடுத்தல்கூறும்." எ- து. கண்டுகொள்க. இனி யெங்கடவுடானென்றதுகொண்டே சிவனேகத்தாவென்றதெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில். "நாரண னயனையீன்று மயனு நாரணனையீன்றுங், காரணமொருவருக்கங் கொருவர்தாமிருவருக்கும், வாரணமுரித்தவள்ளல் காரணமென்றுமன்ற, வாரணமுனைக்கும்பக்கத் தவர்களு மறைந்தாரன்றே." எ - து. கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது பிரம விஷ்ணுக்களுடைய சிருஷ்டியையுந் திதியையுஞ் சிவனேயழித்துப்போடுவனென்று மீளவுமுண்டாமிடத்துச் சிவனே யுண்டாக்குவனென்றும் வருமுறைமையை யறிவித்தது. (ரு)

அப்படி இந்தத்தொழில்களை யும்முடையகத்தாவென்னை பயனைக்கருதிச் செய்கின்றானென்ற புத்தனைநோக்கி மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

ஏற்றவிவையரனருளின்றிருவிளையாட்டாக வியம்புவர்களணுக்களிடர்க்கடனின்றுமெடுத்தே, யூற்றமிகவருள்புரிதலேதுவாக வுரைசெய்வரொடுக்கமிளைப்பொழித்தன்மற்றைத், தோற்றமலபாகம்வரக்காத்தல்போகந்துய்ப்பித்தறிரோதாயிநிறுத்தலாகும், போற்றலருமருளருளேயன்றிமற்றுப் புகன்றவையுமருளொழியப்புகலொணுதே. (கூ)

மன்னுயிர்க்கிரங்கி வகுத்தவைந்தொழிலு
முன்னவனருளெனு முறைமைமொழிந்தது.

வி - ம். ஏற்றவிவை யரனருளின் றிருவிளையாட்டாக வியம்புவர்கள். எ - து. இங்ஙனம் பொருந்தப்பட்ட தொழில்கள் தம்பிரானநுக்கிரகத்தாலே செய்யுந்திருவிளையாட்டென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். அப்படியாஞ லும்முடைய கத்தாவானவன் பாலரைப்போலப் பயனற்ற காரியஞ் செய்வானோவென்னில் அப்படியல்ல எம்முடைய கத்தாவானவன் அந்தத்தொழில்களைப் பாராமலெளிதாகச் செய்கையினுலே விளையாட்டென்றதாம். அவனவையிற்றை யேதுகாரியமாகச் செய்கிருனென்னில்,— அணுக்களிடர்க்கடனின்று மெடுத்தே யூற்றமிகவருள்புரிதலேதுவாக வுரைசெய்வர். எ - து. ஆன்மாக்களைத் துக்கசாகரமாகிய ஜநநக்கடலிலேநின்றுங் கரையேற்றித் தனது நிலைபேருயுள்ள திருவடியிலே கூட்டிக்கொள்ளுகை காரணமாகவென்று சொல்லுவார்க ளறிவாலுயர்ந்தபெரியோர்கள். அப்படி யும்முடைய கத்தாவநுக்கிரகஞ்செய்கிறவனேயாஞல் சங்கரிப்பானென்பா னேனென்னில்,— ஒடுக்கமிளைப்பொழித்தல். எ - து. அப்படிச் சங்கரிக்கிறது கன்மத்திஞலலைப்புண்ணு மான்மாக்களை யிளைப்பாற்றுகை. அப்படி யிளைப்பாறிக்கிட

வாமல் மீளவுந்தோற்றுவிப்பானேனென்னில்,— மற்றைத் தோற்றமலபாகம்வர. எ - து. மீளவுஞ்சிருஷ்டிக்கிறது மல நீங்காதபடியாலே அந்த மலநீங்குகைப்பொருட்டாகத் த னுகரண புவனபோகங்களோடுங் கூட்டுகிறதாயிருக்கும். அ ப்படிச் சிருஷ்டித்தபோதே யந்தமலத்தைப் பாகம்வருத்தித் தன்னிடத்திலே கூட்டிக்கொள்ளாமல் நெடுங்காலந்திதியெ ன்கிறதொழிலிலே நிறுத்துவானேனென்னில்,— காத்தல் போகந்துய்ப்பித்தல். எ-து. அப்படி நெடுங்காலந்திதியென் கிறதொழிலிலேநிறுத்தினது ஆன்மாக்களுக்குக் கன்மங்கள் மிகுதியாயிருக்கையினாலே யந்தக்கன்மங்களைப் புசிப்பித்து இயல்பிலே மலபாகம்வருத்துகிறதா யிருக்கும். அப்படிச்செ ய்கிற கத்தா மறைப்பானேனென்னில்,— திரோதாயிநிறுத் தலாகும். எ - து. திரோதமாகிய மறைப்பாவது அந்தப் போகங்களைப் புசிப்பித்துக் கன்மங்களைத் தொலைவிக்கத்த க்கதாக அளவுகளிலே நிறுத்தினதாயிருக்கும். அப்படியானு லநுக்கிரகமேதென்னில்,— போற்றலருமருளருளே. எ-து. சொல்லுதற்கரிய அநுக்கிரகமாவது ஆன்மாக்களைத் தனது திருவடியிலே கூட்டிக்கொள்ளுவதுதான் அநுக்கிரகமாயிரு க்கும். இதுவொழிந்து முன்சொல்லப்பட்ட நாலுதொழி லுமேதென்னில்,— அன்றிமற்றுப் புகன்றவையுமருளொழி யப் புகலொணாதே. எ - து. இவ்வநுக்கிரகமன்றி முன்சொ ல்லப்பட்ட சிருஷ்டிதிதிசங்காரந் திரோபாவமென்னப்பட் டநாலுந் தனதுதிருவடியிலே கூட்டிக்கொள்ளுகை நிமித் தமாக மலபாகம்வருத்துகிற அநுக்கிரகமொழிய மற்றொ ன்றாகச் சொல்லவொண்ணாது. எ - று.

ந - ம். அரனருளின் திருவிளையாட்டு என்றதை உம் முடையகத்தா பாலனைப்போலப்பயனற்றகாரியஞ்செய்வா னென்று புத்தன்சொன்னானென்றதற்கு. பி - ம். சித்

தியாரில். "பெறுவதிங்கென்படைத்துப் பெற்றதுவிளையா ட்டென்னிற், சிறுமழவிறையதாகுஞ் செய்திடுங்கன்மத்தெ ன்னி, னுறுபெருங்கன்மஞ்செய்வோர் முன்புளராவருண் மை, யறிவுறின் ஞாலமெல்லா மநாதியென்றறிந்திடாயே" எ-து. அவன்மதத்திலே கண்டுகொள்க. இனியிந்தத்தொழில் களைப் பாராமற்செய்ததுகொண்டே யவனுக்கிதுவிளையாட் டாமென் றுத்தரமாகக்கூறினத்துக்கு. பி-ம். திருவாசகத்தில் "ஆர்த்தபிறவித் துயர்கெடநாமார்த்தாடுந், தீர்த்தனற்றில் லைச் சிற்றம்பலத்தே தீயாடுங், கூத்தனிவ்வானுங் குவலயமு மெல்லோமுங், காத்தும்படைத்துங் கரந்தும்விளையாடி, வார் த்தையும்பேசி" எ - ம். " ஐயா நீயாட்கொண்டருளும் விளை யாட்டில்". எ - ம். வருமேதுக்களைக் கண்டுகொள்க. அன்றி யும் சிவனேபஞ்சகிருத்தியஞ் செய்வனென்பதற்கு. பி - ம். திருவாசகத்தில். "போற்றியெல்லாவுயிர்க்குந் தோற்ற மாம் பொற்பாதம், போற்றியெல்லாவுயிர்க்கும் போகமாம்பூங் கழல்கள், போற்றியெல்லாவுயிர்க்கு மீறுமிணையடிகள், போற்றிமானான்முகனுங் காணாதபுண்டரிகம், போற்றியாமு ய்யவாட். கொண்டருளும்பொன்மலர்கள்" எ - து. கண்டு கொள்க. இதனுள்தோற்றமாம் பொற்பாதம். எ-து. சிருஷ் டியெனவறிக. போகமாம் பூங்கழல்கள். எ-து. திதியெனவ றிக. ஈறுமிணையடிகள். எ-து. சங்காரமெனவறிக. மால்நான் முகனுங்காணாத புண்டரிகம். எ - து. திரோபாவமெனவறிக யாமுய்யவாட்கொண்டருளும் பொன்மலர்கள். எ-து. அனு க்கிரகமெனவறிக. ஆ ஐந்துகிருத்தியத்துக்கு மிங்ஙனங்கண் டுகொள்க. அன்றியுங் கத்தா விந்தத்தொழில்களிலே யான் மாக்களைக்கூட்டிப் பஞ்சகிருத்தியப்படுத்துமிடத்துப் பாரா மலெளிதாக விளையாட்டாகச் செய்வனென்று மப்படிச் செய்யவே ஆன்மாக்களுக்குண்டான மலபாகமும்வந்து திரு

வடிக்கு முரித்தாவார்க ளென்பதற்கு. பி - ம். சித்தியாரில். "சொன்னவித்தொழில்களென்ன காரணந்தோற்றவென்னின், முன்னவன்விளையாட்டென்று மொழிதலுமாமுயிர்க்கு, மன்னியபுத்திமுத்தி வழங்கவுமருளான்முன்னே, துன்னியமலங்களெல்லாந் துடைப்பதுஞ்சொல்லலாமே" எ-து. கண்டுகொள்க. "அணுக்களிடர்க்கடலின்றுமெடுத்தே யூற்றமிகவருள்புரிதலேதுவாக வுரைசெய்வர்." எ - கு. ஆன்மாக்களை ஜநநக்கடலிலேநின்றுங் கரையேற்றித் தனதுதிருவடியிலே கூட்டிக்கொள்ளுகைநிமித்தமாகக் கர்த்தா விந்தத்தொழில்களைச்செய்வனென்று புத்தனைநோக்கிச் சொன்னதற்கு. பி-ம். சித்தியாரில். "அநாதிமுத்தனுய்ப்பரனு யசலனுயெல்லா வறிவுதொழிலனுக்கிரக முடையவரன்கன்ம, நுனுதிகமற்றொருத்தவிடத்தே சத்திநிபாத நுழைவித்து மலங்களெலாநுங்கநோக்கி, மனுதிகரணங்களெலா மடக்கித்தன்னை வழிபடுநல்லறிவருளி மாக்கருணைக்கையா, லினுதுபிறப்பினினின்றுமெடுத்துமாரு வின்பமுத்திக்கேவைப்ப னெங்கண்முத்தியிதுவே" எ - து. அவன்மறுப்பிலே கண்டுகொள்க.

இதனுற்சொல்லியது உம்முடையகர்த்தா விந்தத்தொழில்க ளென்னபயனைக்கருதிச்செய்கிருனென்ற புத்தனைநோக்கி யான்மாக்களை மலபாகம்வருத்தித் தனதுதிருவடியிலே கூட்டிக்கொள்ளுகைப்பொருட்டாகவென்றும் அப்படிச்செய்யுமிடத்துப் பாராமலெளிதாக விளையாட்டாகச்செய்வனென்றும் வருமுறைமையை யறிவித்தது. (கூ)

முதற்சூத்திரமாகிய பதியிலக்கணமுற்றும்.

இங்ஙன முதற்சூத்திரமாகிய பதியிலக்கண மருளிச்செய்து மேலிரண்டாஞ்சூத்திரமாகிய பசுவிலக்கணமும்

பாசவிலக்கணமு மருளிச்செய்வா னெடுத்துக்கொண்டரு ளியது.

இதற்கு வழியேதென்னில் முதற்சூத்திரமாகிய பதியிலக்கணத்தில் முதல்விருத்தமாகிய "பலகலை" என்றசெய்யுளில் "பசுபாசந்தெரித்தல்" என்றபதத்துக்குப்பொருள் பதியையும் பசுவையும் பாசத்தையும் பிரித்துச்சொல்லியறிகிறதே பயனென்றமையால் பதியிலக்கணமாகிய "ஏற்றவிவை" என்ற செய்யுள்முடிவாகிய விருத்தமாறுக்கு மேலாகப் பசுவிலக்கணமும் பாசவிலக்கணமுங் கூறுமதே வழியாகையால் சிவன்ஆன்மாக்களை மாயாகன்மங்களோடுங்கூட்டிக் காரியப்படுத்தி மலபாகம்வருத்தி முத்திக்கேதுவாக்குவ னென்னப்பட்ட பசுவிலக்கணமும் பாசவிலக்கணமுமாகிய "எண்ணரிதாய்"என்றவிருத்தந்தொடங்கி "அரிவையரின் புறுமுத்தி" என்னும் விருத்தமுடிவாகிய செய்யுள் முப்பத்திரண்டு மிரண்டாஞ்சூத்திரமாக வகுத்ததெனவறிக. இந்தச்செய்யுட்கள் முப்பத்திரண்டு மிரண்டாஞ்சூத்திரமாகநின்றதற்கு வழியேதென்னில் சிவஞானபோதத்தினுஞ் சிவஞானசித்தியாரினும் இரண்டாஞ் சூத்திரத்துக்குண்டானகருத்து இந்தச்செய்யுட்களினும்வருகையா லிவையிற்றையும் இரண்டாஞ்சூத்திரமாக வகுத்ததெனவறிக. அதுவெங்ஙனேயென்னில் சிவஞானபோதத்தி லிரண்டாஞ்சூத்திரமாகிய "அவையேதானேயாயிருவினையிற், போக்குவரவு புரியவாணையி, னீக்கமின்றிநிற்குமன்றே." எ - ம். சிவஞானசித்தியாரி லிரண்டாஞ்சூத்திரமாகிய "உலகெலாமாகிவேறு யுடனுமாயொளியாயோங்கி, யலகிலாவுயிர்கள்கன்மத் தாணையினமர்ந்துசெல்லத், தலைவனாயிவற்றின்றன்மை தனக்கெய்தலின்றித்தானே, நிலவுசீரமலனாகி நின்றனனீங்காதெங்கும்." எ - ம். இரண்டுசெய்யுட்களினும் வருங்கருத்து இந்நூலினும் "எண்

ணரிதாய்" என்னும் விருத்தம்வருகையாலும் சித்தியாரில் இரண்டாஞ்சூத்திரத்தில் மலமாயைகன்மங்களின் காரணகாரியத்துக்குவரும் விருத்தங்களில். "ஒன்றதாயனேகசத்தியுடையதாய்." எ - ம். ஆணவமலத்திற்குச்சொல்லும் விருத்தத்தின்கருவைப்பற்றி இந்நூலினும் "ஏகமாய்த்தங்காலவெல்லைகளின்மீளு மெண்ணரியசத்தியதாய்." எ - ம். இந்த ஆணவமலத்தைத் திரோதாயி பாகம்வருத்துகைக்கு. "ஏயுமும்மலங்கடத்தந் தொழிலினையியற்றவேவுந், தூயவன்றனதோர்சத்தி திரோதானகரியதென்றும்." வரும் விருத்ததிற் கருவைப்பற்றி இந்நூலினும் "பாகமாம்வகைநின்று திரோதானசத்தி பண்ணுதலான்மலமெனவும்பகர்வர்." எ-ம். வருகையாலும். இனி யசுத்தமாயாகாரணத்துக்குச் சொல்லப்பட்ட "நித்தமாயருவாய்" என்னும் விருத்தத்தின்கருவைப்பற்றி இந்நூலினும் "உருவாதிசதுவிதமாய்" என்னும் விருத்தம் வருகையாலும் இங்ஙனஞ்சொல்லப்பட்ட மாயையென்றொரு முதலில்லையென்றுஞ் சிவன்வேண்டுவதில்லை கன்மங்களானே யான்மாக்களைக்காரியப்படுத்துமென்றுஞ் சொல்லுகிற சமயிகளைமறுத்து மாயையுண்டென்று மிந்தமாயையுங் கன்மமும் ஜடமாகையாற் றானேகாரியப்படமாட்டாது இவையிற்றைக்கூட்டிக் காரியப்படுத்துகைக் கொருகத்தாவுண்டென்றும் வருங்கருத்தாகிய. "உலகுடல்கரணங் காலமுறுபலநியதிசெய்தி, பலவினைகொண்டுகன்மம் பண்ணுவதுண்பதானு, னிலவிடாதிவைதாஞ்சென்று நினைந்துயிர்நிறுத்திக்கொள்ளா, தலகிலாவறிவனானை யணைத்திடுமருளினாலே." என்னும் விருத்தத்தின்கருவைப்பற்றி இந்நூலினும். "என்னையிதுவெனில்". எ-ம். "படைத்ததொருபடி". எ-ம். "அல்லன்மிகவுயிர்க்கிவைதான்." எ - ம். வரும்விருத்தங்கள் மூன்றும்வருகையாலும். அன்றியும் ஆன்மாக்களுக்கு மூன்

றுமலமும்நாதியென்பதற்குச் சிவஞானபோதத்தி லிரண்டாஞ்சூத்திரத்து வெண்பாவில் "நெல்லிற்குமியு நிகழ்செம்பினிற்களிம்புஞ், சொல்லிற்புதிதன்று தொன்மையே." எ-ம் சித்தியாரினும். "மும்மலநெல்லினுக்கு முளையொடுதவிடுமிப்போன், மம்மர்செய்தனுவினுண்மை வடிவினைமறைத்து நின்று." என்னும் இவ்விரண்டினுள்ளுமுள்ள கருவைப்பற்றி இந்நூலின்முற்கூறிய "அல்லன்மிக" என்னுஞ் செய்யுண்முடிவிலே "நெல்லின்முளை தவிடுமிப்போலநாதியாக." எ-ம் வருகையாலும். முற்கூறிய அசுத்தமாயையின் காரியமாயுள்ள கலையாதிதத்துவங்களின் றோற்றங்களையுங் காரியப்படுகையுஞ் சொல்லப்பட்ட "மாயையிற் காலமோடு" என்னும் விருத்தந்தொடங்கி "குறிகொள்வச்சிரத்தினோடு" என்னும் விருத்தமுடிவாகிய செய்யுள்பதினைந்தினு முண்டாகியதோற்றத்தின் கருவைப்பற்றி இந்நூலினும் "அருத்திமிகுங்கலைகாலம்" "மன்னியகன்மேந்திரியம்" என்னும் விருத்தமிரண்டும் வருகையாலும் கன்மத்தின்காரணகாரியத்துக்கு "தன்மமோடதன்மமாகி." எ - ம். "இருவினையநாதி." எ - ம். "உடற்செயல்கன்மம்." எ - ம். "மேலைக்குவித்துமாகி." எ-ம். "முற்செயல்விதியை." எ - ம். வரும்விருத்தங்களின் கருவைப்பற்றி இந்நூலினும் "நண்ணியிடும்." எ - ம், "கன்மநெறி." எ - ம். "மேலைக்குவருவினை." எ - ம். "உற்றதொழில்." எ - ம். வரும்விருத்த நாலும்வருகையாலும் இங்ஙனஞ்சொல்லப்பட்ட மலங்களின் றொகையாகிய "மலமாயைகன்ம மாயேயந்திரோதாயிமன்னிச் சலமாரும்பிறப்பிறப்பிற்றங்கி." என்னும் விருத்தத்தின் கருவைப்பற்றி இந்நூலினும் "மோகமிகவுயிர்கடொறு முடனாய்நிற்கும்" என்னும் விருத்தம்வருகையாலும் இங்ஙனஞ்சொல்லப்பட்ட மலமைந்தினுள்ளும் ஆணவமலம் ஆன்மபோதத்தை மறைக்குமெ

ன்றும் அப்படி யாணவமலமென்பதொன்றில்லை மாயாசரீரங்களே யான்மபோதத்தை மறைக்குமென்றும் மாயாகாரியமான கலையாதிதத்துவங்களினாலே சிவன் ஆணவமலத்தைப் பாகமாக்குவனென்றும் வருங்கருத்தாகிய "போதகாரியமறைத்து நின்றதுபுகல்மலங்காண்." எ - ம். "மலமெனவேறென்றில்லை மாயாகாரியமதென்னில்." எ - ம். "மாயையேயான்மஞானக் கிரியையைமறைத்துநிற்கும்." எ-ம். "பருதியைமுகின்மறைப்பப் பாயொளிபதுங்கினாற்போல்." எ - ம். "எல்லாமாய்த்தத்துவங்க ளிசைந்ததெனனுவக்கு." எ-ம். "எழுமுடல் கரணமாதி" என்னும் விருத்தத்தில் "மாயைகொடுமலமொழிப்பன் முன்னோன்." எ - ம். வரும் விருத்தங்களின் கருவைப்பற்றி இந்நூலினும் "ஓங்கிவரும் பலவுயிர்கள்" என்னும் விருத்தந்தொடங்கி "புகலுமலமொழிதற்குக் கலாதிமுதன்மாயை பொருந்தியிடுமரனருளால்." என்னும் விருத்தமுடிவாகிய செய்யுளைந்தும் வருகையாலும் அந்தக்கலையாதி தத்துவங்களோடு மான்மாக்கள்கூடிப் பிரபஞ்சகாரியப்படுகைக்கு முற்கூறிய "மாயையிற் காலமோடு" என்னும் விருத்தந்தொடங்கி "இரந்தரமாகி வானின்" என்னும் விருத்தமுடிவாகிய செய்யுள்பதின்மூன்றினுட் டத்துவங்கள் காரியப்படுங்கருத்தைப்பற்றி இந்நூலினும் "இத்தகைமையிறையருளால்" என்னும் விருத்தத்தில் "சுத்தமாயைவைத்தகலைதான் மூலமலஞ் சிறிதே நீக்கி" என்னும் பதந்தொடங்கி "முந்தியவைம்பூதங்கள் வானாதியாக" என்னும் விருத்தமுடிவாகிய செய்யுளேழும் வருகையாலும் அன்றியும் தத்துவமுப்பத்தாறின்றொகைக்கு மூவகைத்தத்துவங்களுக்கும் ஆன்மாக்கள் யோனிவிட்டுயோனிபற்றி ஜநநமரணப்படுகிறதற்கும் நால்வகைத்தோற்றத்துக்கு மெண்பத்துநான்கு நூறாயிர யோனிபேதத்தொகைக்கும் சித்தியாரில் வரும்விரு

த்தங்களாகிய "சுத்ததத்துவங்களென்று முன்னமேசொன்னவைந்து, மித்தகைமையினியம்பு மிவைமுப்பத்தொன்றுமாகத், தத்துவமுப்பதாறும்." எ-ம். "ஐந்துசுத்தத்தின்கீழேழசுத்தாசுத்தமசுத்தந், தந்திடும்புமான்கீழெண்மூன் றுயதத்துவஞ் சீவர்க்கும்." எ - ம். சிவஞானபோதத்தி லிரண்டாஞ்சூத்திரத்து வெண்பாவில் "அரவுதன்றோலுரிவு மக்கனவும்வேறு, பரகாயம்போய்வரு மப்பண்பும்." எ - ம் சித்தியாரில். "பன்னகமண்டசங்கள் பரகாயந்தன்னிற்பாய்வோர், துன்னுதோல் முட்டையாக்கை துறந்துசெல்வதுவேபோல." எ - ம். "அண்டசஞ்சுவேதசங்க ளுற்பீசஞ்சராயுசத்தோ, டெண்டருநாலெண்பத்து நான்குநூறுயிரத்தா, லுண்டுபல்யோனி". எ - ம். வரும்விருத்தங்களின் கருவைப்பற்றி இந்நூலினும் "இந்நிலையிலைந்துசுத்தம்." எ-ம். "தோற்றிபிடுமண்டசங்கள்." எ-ம். விருத்தமிரண்டும் வருகையாலும் அன்றியும் இங்ஙனமான்மாக்கள் பிரபஞ்சகாரியப்பட்டு மலபாகம்வந்து முத்திக்கேதுவாவார்களென்பதற்கு சித்தியாரில். "அரன்வியருளதென்றே யறைந்தன மதுவுமுன்னே, தனைநரகந்துறக்கந் தனுகரணாதியெல்லாம், வருவதுஞ் செய்தநாதி மலங்களிம்மருந்தாற்றீர்த்துப், பரகதியதுவுந்தந்து பாதபங்கயமுஞ்சூட்டும்." எ-ம். வரும்விருத்தத்தின் கருவைப்பற்றி இந்நூலினும் "இனையபலபிறவிகளின்." எ - ம். "நாடியசத்திநிபாதம்." எ - ம். "அரிவையரின்புறுமுத்தி." எ-ம். விருத்தமூன்றும் வருகையாலும் "எண்ணரிதாய்" என்றவிருத்தந்தொடங்கி "அரிவையரின்புறுமுத்தி" என்னும் விருத்தமுடிவாகிய செய்யுட்களித்தனைக்கு முன்னுள்ளநூல்களி லிரண்டாஞ்சூத்திரத்திற் செய்யுட்களேதுக்காட்டி வருகையால் இவையு மிரண்டாஞ்சூத்திரமாக நின்றதெனவறிக. அப்படியானு லிந்நூலில் இரண்டாஞ்சூத்திரமாக வகுத்தசெய்யு

ள் முப்பத்திரண்டினுள்ளுஞ் சுத்தமாயா காரண காரியத்து க்கு வகுத்த "உன்னலரும்பரசிவன்றனருளாலேநாத முதிக் குமிகுங்குடிலைதனில்." எ - ம். வாக்குகளுக்கும். "வந்த டைந்துபின்னமாய்" எ - ம். வரும்விருத்தங்க ளிரண்டுக்கும் ஏதுக்காட்டாததேதென்னி லந்தச்சுத்தமாயையின் பிரசங்க ஞ் சித்தியாரில் முதற்சூத்திரத்திலே வருகையாலே யதற்கு யேதுக்காட்டினதில்லை யெனவறிக. அப்படிச்சுத்தமாயை யைச் சித்தியாரில் முதற் சூத்திரத்திலே சொல்லியிருக்க இ ந்நூலிரண்டாஞ்சூத்திரத்திலே கூட்டுகைக்கு வழியேதென் னி லந்தச்சுத்தமாயையானது சிவன்கொள்ளப்பட்டதிரு மேனிக்குடம்பாய்நிற்கையாலு மலங்களொடுங்கூடி வருகை யாலும் சித்தியார்செய்தருளினவர்அந்நூலின் முதற்சூத் திரம் பதியிலக்கணமாகையா லந்தப்பதியாகியசிவனுக்குச் சுத்தமாயை திருமேனியென்னும் கருத்தைப்பற்றி "வித்தை யோடீசர்சாதாக் கியஞ்சத்திசிவங்களைந்துஞ், சுத்ததத்துவ ஞ்சிவன்றன் சுதந்தரவடிவமாகும்." எ - ம். சுத்தமாயையை முதற்சூத்திரத்திலே கூட்டியருளிச்செய்தா ரெனவறிக. இந் தச்சிவப்பிரகாசஞ்செய்தருளினவர் சுத்தமாயையை மலமா யைகன்மங்களைவகுத்தருளிச்செய்து சொல்லுகிறவொழுங் கிலே கூட்டியருளிச்செய்கையினாலும் அன்றியு மலத்தொ கைக்கருளிச்செய்த விருத்தமாகிய "மோகமிகவுயிர்கடொ றும்"என்னும் விருத்தத்தின்முடிவிலே "தேகமுறுகரணமொ டுபுவனபோகச் செயலாருமாமாயைத் திரட்சியொன்றென், ருகமலமைந்தென்பர்". எ-ம். வருகையாலும் இரண்டாஞ் சூ த்திரத்தின்கருவைப்பற்றிச் சிவஞன்மாக்களை மாயாகன்மங் களோடுங்கூட்டிக்காரியப்படுத்தி மலபாகம் வருத்துமுறை மையைச்சொல்லுகையாலு மிந்தச்சுத்தமாயை மலத்தோடு ங்கூடிவருகையா லிதனை யிரண்டாஞ்சூத்திரத்திலே கூ

ட்டப்பட்டதெனவறிக. அப்படிச்சுத்தமாயையை மலத்தோ டுங் கூட்டுகைக்கு அநுபோகமேதென்னில் முத்தியைப்பெறு மான்மாக்களுக்குத் தத்துவமுப்பத்தாறுநீங்கியே முத்தியெ ன்னும் விதியைப்பற்றித் தத்துவமுப்பத்தாறினுள் சுத்ததத் துவங்களுங் கூடிவருகையா லவையுநீங்கியே முத்தியைப் பெறவேண்டுமென்பதைப்பற்றி யப்படிவைக்கப்பட்டதென வறிக. அப்படியானால்இந்நூல் சித்தியாரைப் பின்சென்றநூ லாயிருக்கச் சுத்மாயையைச் சிவனுக்குத் திருமேனியென்று அந்நூல் முதற்சூத்திரத்திலே சொல்லியிருக்க அதனை யிந்நூ லின் மலத்தோடுங்கூட்டி வேற்றுமைகூறுதற்கு விதியேதெ ன்னில் சித்தியார் வழிநூலாகையாலு மிந்நூல் சார்புநூலா கையாலும் "இருவர்நூற்குமொருசிறைதொடங்கித்திரிபுவே றுடையது புடைநூலாகும்" என்பதைப்பற்றியப்படிவேற்று மைகூறினதெனவறிக. ஆக விங்ஙனங் கூறிவந்தவகைகளா ல் "எண்ணரிதாய்" என்னும் விருத்தந்தொடங்கி "அரிவை யரின் புறமுத்தி" என்னும் விருத்தமுடிவாகிய செய்யுள் மு ப்பத்திரண்டு மிரண்டாஞ்சூத்திரமாகநிற்குமென்பதை யநு பவத்தாற்கண்டுகொள்க. இங்ஙன மிரண்டாஞ்சூத்திரமாக வகுத்தசெய்யுள் முப்பத்திரண்டினுள்ளு முதல்விருத்தமாகி ய "எண்ணரிதாய் நித்தமாய்" என்னும் விருத்தஞ் சிவஞான போதத்தி லிரண்டாஞ்சூத்திரமாகிய "அவையேதானே" எ ன்றமுதற்செய்யுளின் கருத்தைப்பற்றி நிற்குமேயானல் அந் நூலில் இந்தச் சூத்திரத்தில் வருஞ்செய்யுட்களின் கருத்து அந்தச் சூத்திரத்துக்குஅதிகாரமாகிய முதற்செய்யுளிலே நி ன்றாற்போல் இந்நூலினு மிங்ஙன மிரண்டாஞ்சூத்திரமாக வகுத்த செய்யுட்களில்வருங்கருத்து "எண்ணரிதாய்" என் னும் விருத்தமாகிய முதற்செய்யுளிலே வருமுறைமை யெ ங்ஙனேயென்னில் அஃதாவது "எண்ணரிதாய் நித்தமாய்" எ

ன்றதற்குமேலாக "இருண்மலத்துளழுந்தி" என்றது ஆன்மாக்களுக்கு ஆணவமல மறைப்புக்குச்சொன்ன "ஏகமாய்" என்னும் விருத்தம் வகுத்தசெய்யுள் முப்பத்திரண்டினுள்ளு முதல்விருத்தமாகிய "எண்ணரிதாய் நித்தமாய்" என்னும் விருத்தம் சிவஞானபோதத்தி லிரண்டாஞ்சூத்திரமாகியதின்கருவைப்பற்றி நிற்கையாலும் "இருவினையின்றன்மைகளுக் கீடானவாக்கை யண்ணலருளானண்ணி." எ - து. சிவனருளாலே யான்மாக்கள் மாயாகன்மங்களோடுங் கூடுவார்களென்பதற்குச்சொன்ன "உன்னலரும்பரசிவன்றனருளாலே" என்னும் விருத்தந்தொடங்கி "மோகமிக" என்னும் விருத்தமுடிவாகிய செய்யுட்களின் கருவைப்பற்றி நிற்கையாலும் "அவையவராயதனு லலகிளிகழ்போகங்களருந்துமாற்றுற் புண்ணியபாவம்புரிந்து போக்குவரவுடைத்தாய்." எ-து ஆன்மாக்கள் கேவலசகலப்பட்டும்யோனிவிட் டியோனிபற்றி ஜநநமரணப்பட்டும் வருவர்களென்பதற்குச்சொன்ன "ஒங்கிவரும்பலவுயிர்கள்" என்னும்விருத்தந்தொடங்கி "இனையபலபிறவிகள்" என்னும் விருத்தமுடிவாகிய செய்யுட்களின் கருவைப்பற்றி நிற்கையாலும் "புணருமிருண்மலபாகம்பொருந்தியக்காலருளா, லுண்ணிலவுமொளியதனு லிருளகற்றிப்பாத முற்றிடு நற்பசுவர்க்கம்." எ - து. ஆன்மாக்கள் மலபாகம்வந்து திருவருளுண்டாய் முத்திக்கேதுவாவார்களென்பதற்குச்சொன்ன "நாடியசத்திநிபாதம்" "அரிவையரின் புறமுததி" என்னும் விருத்தங்களின்கருவைப்பற்றி நிற்கையாலும் "எண்ணரிதாய்" என்னும் விருத்தம் இங்ஙன மிரண்டாஞ்சூத்திரமாக வகுத்தசெய்யுட்களுக்கு அதிகாரமாக நின்றதெனவறிக.

இங்ஙனங் கூறப்பட்ட எண்ணரிதாயென்றசெய்யுள் முதற்சூத்திரமாகிய பதியிலக்கணத்துக்குமேலாகப் பசுவி

லக்கணமாகநிற்கையா லந்தப்பசுவினிலக்கண மேலருளிச் செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

எண்ணரிதாய்நித்தமாயிருண்மலத்தினழுந்தி யிரு வினையின்றன்மைகளுக்கீடானயாக்கை, யண்ணலருளா னண்ணியவையவராயதனு லலகினிகழ்போகங்களருந் துமாற்றாற், புண்ணியபாவம்புரிந்துபோக்குவரவுடைத் தாய்ப் புணருமிருண்மலபாகம்பொருந்தியக்காலருளா, லுண்ணிலவுமொளியதனுலிருளகற்றிப்பாத முற்றிடுநற் பசுவர்க்கமெனவுரைப்பருணர்ந்தே. (எ)

எண்ணிலாவுயிர்க ளிறந்துபிறந்தொருகா
னண்ணிடுமரனடி யருளாலென்றது.

வி - ம். எண்ணரிதாய். எ - து. ஆன்மாக்க ளிலக்கத் தினு லளவுபடுத்துதற்கரிதாய்,—நித்தமாய். எ - து. ஒருகா லத்தினு மழியாததாய்,— இருண்மலத்தினழுந்தி. எ - து. அஞ்ஞானமாகிய ஆணவமலத்தினுலே மறைப்புண்டுகிடந் து,— இருவினையின்றன்மைகளுக் கீடானயாக்கை யண்ணல ருளானண்ணி. எ - து. அவரவர்களுக்குண்டான புண்ணி யபாவங்களுக்கீடானதோ ருடல்களைத் தம்பிரானூர்காருண் ணியத்தினுலேபொருந்தி,—அவையவராய். எ - து. அவனவ ளதுவாகிய வந்தவுடம்பென்னத் தானென்னத் தோன்றும ற் பிறிவற்றுநின்று,— அதனுலலகினிகழ்போகங்களருந்து மாற்றாற் புண்ணியபாவம்புரிந்து. எ - து. அந்தவுடம்புக ளோடுங் கூடுகையாலே யெண்ணிறந்தபோகங்களைப்புசித் து அந்தப் புசிப்பாலுண்டாகிய ஹிதாஹிதங்களினுலே மீள வும் புண்ணியபாவங்களை யார்ச்சித்துக்கொண்டு அதனு லே,— போக்குவரவுடைத்தாய். எ - து. இறந்துபிறந்துவ ருவதாய்,—புணரும். எ - து. இங்ஙனம் பொருந்திவாராநி

ற்கும். இப்படி வரச்செய்தே;—இருண்மலபாகம் பொருந்தி யக்கா லருளாலுண்ணிலவுமொளி. எ - து. அநாதியேயான்மாவைமறைக்கப்பட்ட ஆணவமலமானது க்ஷயம்வந்தவவதரத்துச் சிவனுடையவருளாலே யந்தவான்மாவினிடத்திலே ஞானம்பிரகாசியாநிற்கும். அன்றியும், புணருமிருண்மலபாகமென்று பதங்கூட்டி யான்மாக்களோடுங்கூடிநிற்கிற வாணவமலமென்று பொருளுரைப்பினுமாம்.— அதனை யிருள்கற்றிப் பாதமுற்றிடு நற்பசுவர்க்கம். எ - து. அங்ஙனம் பிரகாசிக்கப்பட்ட ஞானத்தினாலே யந்தவாணவமலமறைப்பைநீங்கிச் சிவனுடைய திருவடியிலே பொருந்திடும் பக்குவப்பட்டசுத்தான்மாக்கள்,— எனவுரைப்பருணர்ந்தே. எ - து. என்றிங்ஙனஞ்சொல்லுவார்க ளறிவாலுயர்ந்தபெரியோர்கள். எ - று.

ரு - ம். எண்ணரிதாய். எ - கு. ஆன்மாக்களை யிலக்கத்தினாலளவுபடுத்துதற் கரிதென்றதேதென்னில் ஒவ்வொருயோனிவர்க்கங்கடோறுமுண்டான வான்மாக்களையளவுபடுத்தப்படாததுகொண்டே எண்பத்துநான்கு நூறாயிரயோனிபேதத்திலுண்டான வான்மாக்களையு மளவுபடுத்தப்படாதபடியாலும்; அன்றியு மவதரந்தோறுந் திருவடியிலே கூடினவான்மாக்கள் மீளவும் ஜநநங்களில் வாராதிருக்கவும் பிரபஞ்சகாரியப்பட்டு வருகிற வான்மவர்க்கந்தொலையாததுகொண்டு மப்படிச் சொன்னதெனவறிக. இதற்கு. பி-ம். கோயிற்புராணத்தில். "எத்தகையபோகங்களை வற்றினுக்குங் காரணமாய், வைத்தபடியிடம்போதா வகைநெருங்கு மன்னுயிர்கள்." எ - ம். "கற்பங்கடோறு நடஞ்செய்கழலணைந்தோர் கணிப்பில்லார்." எ-ம். வருமதுகண்டு கொள்க. இனிநித்தமாய். எ - கு. ஒருகாலத்தினுமழியாததென்றதேதென்னில் பதிபசுபாசமென்னப்பட்ட முதல்மூன்று

நித்தியமென்று நூல்கள்சொல்லுகையாலு முத்தியிலுமான்மாக்களுக் கழிவில்லாதபடியாலு மப்படிச்சொன்னதெனவறிக. இங்ஙனம் பதிபசுபாச மூன்று மநாதியென்பதற்கு. பி-ம். திருமந்திரத்தில் "பதிபசுபாசமெனப்பகர் மூன்றும்,பதியினைப்போற் பசுபாசமநாதி." எ-து. கண்கொள்க. அன்றியும் முத்தியிலுமான்மாக்க ளழியாதென்றதற்கு. பி-ம். உண்மைவிளக்கத்தில். "முத்திதனின்மூன்று முதலுமொழியக்கேள், சுத்தவநுபோகத்தைத்துய்த்தலணு - மெத்தனவே, யின்பங்கொடுத்தலிறை யித்தைவிளைவித்தன்மல, மன்புடனே கண்டுகொளப்பா." எ-து. கண்டுகொள்க. அன்றியும் சித்தியாரிலும் "கரும்பைத்தேனைப்பாலைக் கனியமுதைக்கண்டைக் கட்டியையொத்திருப்பனந்த முத்தியிற்கலந்தே." என்றமையால் ஆன்மாவில்லாதபொழுது அநுபவிப்பானில்லாதாகையா லநுபவமுண்டானதுகொண்டே யான்மாவுமுண்டென்பதை யநுபவத்தாற் கண்டுகொள்க. இனியிருண்மலத்தின்மூழ்கி. எ-கு. ஆன்மா வாணவமலத்தான் மறைப்புண்டுகிடக்குமென்றதேதென்னில் கேவலப்பட்டு மாயைதாரகமாக வொடுங்கிக்கிடக்குமவதரத்து கலையாதிதத்துவங்களாயுள்ள காரியமாயையுநீங்கி யாணவமலமறைப்பாகக்கிடக்கையாலேயப்படிச்சொன்ன தெனவறிக. இதற்கு.பி-ம்.சித்தியாரில். "அறிவிலனமூர்த்தனித்த னராகாதிகுணங்களோடுஞ், செறிவிலன்கலாதியோடுஞ் சேர்விலன்செயல்களில்லான், குறியிலன்கத்தாவல்லன் போகத்துக்கொள்கையில்லான், பிறிவிலன்மலத்தினேடும் வியாபிகேவலத்திலான்மா." எ-ம். "மும்மலநெல்லினுக்கு முளையொடுதவிடுமிப்போன், மம்மர்செய்தணுவினுண்மை வடிவினைமறைத்துநின்று." எ-ம், கண்டுகொள்க. இனியவையவராய். எ-கு. அவனவளதுவாயென்றதேதென்னில் உயர்திணையஃறிணையாகிய

யோனிபேதங்களினுள் அவனென்றது ஆண்பாலெனவறிக அவளென்றது பெண்பாலெனவறிக அதுவென்றது ஆணும்பெண்ணுமல்லாத அலியெனவறிக. உயர்திணை யஃறிணையென்றதேதென்னில் உயர்திணையாவது தெய்வயோனிமானுடயோனியெனவறிக. அஃறிணையென்றது மற்றுள்ளயோனிகளையெனவறிக. இனி யிருண்மலபாகம்பொருந்தியக்காலருளாலுண்ணிலவுமொளி. எ-சு. மலபாகம்வந்த ஆன்மாக்களிடத்திலே சிவனருளாகியஞானம் பிரகாசிக்குமென்ற தேதென்னில் பக்குவப்பட்ட சுத்தான்மாக்களுக் கிருளாகிய வஞ்ஞான நீங்கி யொளியாகிய ஞானம்பிரகாசிக்கையாலே யப்படிச் சொன்னதெனவறிக. இதற்கு. பி-ம். கோவைத்திருவாசகத்தில். "உருகுதலைச்சென்ற வுள்ளத்துமம்பலத்தும் மொளியே, பெருகுதலைச்சென்று நின்றேன்." எ-து. கண்டுகொள்க. இனியதனாலிருளகற்றிப் பாதமுற்றிடு நற்பசுவர்க்கம். எ-சு. அந்தஞானத்தினாலே சிவனுடைய ஸ்ரீபாதத்தையடையும் பக்குவப்பட்ட சுத்தான்மவர்க்கமென்ற தேதென்னில் அங்ஙனம் பக்குவப்பட்ட ஆன்மாக்களிடத்தில் பிரகாசிக்கப்பட்ட சிவனருளாகிய ஞானமேபற்றாக அந்தச்சிவத்தோடுங் கூடுகையா லப்படிச்சொன்னதெனவறிக. இதற்கு. பி-ம். தத்துவவிளக்கத்தில். "பவமேவியநெறி பந்திக்குமீசன்பசுக்கடம்மை, யவமேவியநெறிப் போகங்களால்முற்ற வந்நிலையே, தவமேவியநெறி சத்திகண்ணுற்சென்று சார்ந்துபின்னைச், சிவமேவுவனொன்றுகாண்கொச்சைகாவலன் சித்திரிப்பே." எ-து. கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது ஆன்மவர்க்க மெண்ணிறந்திருக்குமென்றும் நித்தமாயிருக்குமென்றும் ஆணவமலத்தான்மறைப்புண்டு கேவலப்பட்டுக்கிடக்குமென்றும் புண்ணியபாவங்களுக்கீடான சரீரங்களையெடுத் துமலபாகம்வந்தவாறே

சிவனருளாகிய ஞானத்தினாலே சிவனைப்பெறுமென்றும் வருமுறைமையை யறிவித்தது. (எ)

இங்ஙனம் பசுவிலக்கண மருளிச்செய்து பதிப்சுபாசந் தெரித்தலென்னும் விதியைப்பற்றி மேற்பாசவிலக்கணங்கூறுமதே முறைமையாகலான் முற்கூறியவான்மாக்களோடு மநாதியே கூடியிருக்கப்பட்ட மலமாயாகன்மங்களி னியல்பைக்கூறுமிடத்து ஆணவமாயைகாமியமென்னு மொழுங்கைப்பற்றி முந்த வான்மாக்களைமறைக்கப்பட்ட ஆணவமலத்தினியல்பும் அந்தமலத்தின் மறைப்பைநீக்குகிற திரோதாயியினியல்பு மருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

ஏகமாய்த்தங்காலவெல்லைகளின்மீளு மெண்ணரிய சத்தியதாயிருளொளிரவிருண்ட், மோகமாய்ச்செம்பினுறுகளிம்பேய்ந்துநித்த மூலமலமாயறிவுமுழுதினையுமறைக்கும், பாகமாம்வகைநின்றுதிரோதானசத்தி பண்ணுதலான்மலமெனவும்பகர்வரதுபரிந்து, நாகமாநதிமதியம் பொதிசடையானடிக ணணுகும்வகைகருணைமிகநயக்குந்தானே. (அ)

மோகமாமூல மலத்தின்முறைமையும்
பாகமாந்திரோதப் பகுதியும்பகர்ந்தது.

வி - ம். ஏகமாய். எ - து. ஆணவமலமானது எண்ணிறந்தவான்மாக்களோடுங் கூடிநின்று மறைத்துந் தானொன்றாயிருப்பதாய்,— தங்காலவெல்லைகளின்மீளு மெண்ணரியசத்தியதாய். எ - து. ஆன்மாக்களுடைய பக்குவாபக்குவங்களுக்குத்தக்கதாக அவரவரிடங்களிலே மறைத்துநின்று அந்தந்த ஆன்மபோதங்களின் மீட்சியிலே நீங்குவதாயிருக்கிற த

ன்காரியமான வெண்ணிறந்த சத்திகளையுடையதாய்,— இருளொளிரவிருண்ட மோகமாய். எ - து. (செறிந்தவிருளும்) (வெளியென்னும்படி) நின்று ஆன்மாக்களுக்கு மிக்கமறைப்புகள்செய்யுமதாய்,—செம்பினூறுகளிம்பேய்ந்து நித்தமூலமலமாய். எ - து. செம்பினுடன்கூடி யிருக்கப்பட்ட காளிதமானது அந்தச்செம்புள்ளவன்றே யதனைமறைத்துள்ளும்புறம்புங்கலந்து வெட்டுவாய்தோறு நின்முற்போல வான்மபோதத்தோடுங் கலந்து மறைந்துநிற்கிற அழியாதவநாதிமலமாய்,— அறிவுமுழுதினையு மறைக்கும். எ-து. இங்ஙனமான்மாவி னிச்சாஞானக்கிரியைகள் சற்றும்ஜீவியாதபடி மறைத்துநிற்கும். இங்ஙன மாணவமலத்தினியல்பையருளிச்செய் திந்தமலத்தைப் பாகம்வருத்துகிற திரோதாயிசத்தியினியல்பு மேலருளிச்செய்கின்றது.— பாகமாம்வகை. எ-து. அந்த ஆணவமலமானது க்ஷயமாம்படி,—நின்று திரோதானசத்திபண்ணுதலான். எ - து. சிவனுடைய வருட்சத்தியானது அந்த வாணவமலத்தோடுங்கூடித் திரோபவித்து நின்று காரியப்படுத்துகையால்,— மலமெனவும் பகர்வர். எ-து. இந்தத்திரோதாயிசத்தியை யந்தமலத்தோடுங்கூட்டி மலமென்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள். இங்ஙனமலமெனவுமென்ற வும்மைகொண்டே யந்தத்திரோதாயிசத்தியே யருளென்பதுதுணிவு. இங்ஙனந் திரோதமாய்நின்று காரியப்படுத்திமலபாகம்வருத்தின வருளானது இங்ஙனம் மலபாகம்வந்தஆன்மாக்களுக்குண்டாக்கும் பயனேதென்னில்,— அதுபரிந்து. எ - து. அந்தவரு ளவர்களிடத்திலே கிருபைஜநித்துநின்று,— நாகமாநதிமதியம்பொதி சடையா னடிகணணுகும்வகைகருணை மிகநயக்குந்தானே. எ - து. பாம்பினையு மகத்தாயிருக்கிற கங்கா பரமேஸ்வரியையுஞ் சந்திரனையுஞ் சூழ்ந்திருக்கப்பட்ட திருச்சடாபாரத்தையுடைய தம்பிரானார்தி

ருவடிகளிலே பொருந்து முறைமையை யுண்டாக்குந் தன து காருண்ணியத்தினாலே. எ - று,

நு - ம். ஏகமாய். எ - கு. ஆணவமல மொன்றாயிருக்க வு மெண்ணிறந்தவான்மாக்களையுங் கூடிநின்று மறைக்கு மென்றதற்கு வழியேதென்னில் இருளானது தானொன்றாயி ருந்தும் பலகண்களையு மறைத்தாற்போல வெனவறிக. அப்ப டிமலமொன்றாயிருந்தும் பலவான்மாக்களையு மறைக்குமெ ன்பதற்கு. பி - ம். திருவருட்பயனில் "பலகைப்புணர்ந்து மி ருட்பாவைக்குண்டென்றுங், கணவர்க்குந் தோன்றாதகற்பு" எ - ம். இந்நூலினும். "மோகமிகவுயிர்கடொறுமுடனாய்நி ற்கு மூலவாணவமொன்று". எ - ம். வருமேதுக்களைக் கண் டுகொள்க. இனி தங்காலவெல்லைகளின்மீளும். எ - கு. ஆன் மபோதங்களின் மீட்சியிலே நீங்குகிற சத்திகளென்றதேதெ ன்னில் போதத்தின் மீட்சியாவது பிரபஞ்சத்தைப் பொய் யென்று கண்டு நீங்குகை யெனவறிக. இதற்கு. பி - ம். சித் தியாரில் "ஆசைதரு முலகமெலா மலகைத்தேரா மென்றறி ந்தகலவந்நிலையேயாகும்". எ - து. கண்டுகொள்க. அப்படி மலமொன்று யிருக்கவு மந்தமலத்தின்சத்திக ளெண்ணிறந் திருக்குமென்ற தேதென்னில் அந்தமலத்தோடுங்கூடி யிருக் கப்பட்ட வான்மாக்க ளெண்ணிறந்திருக்கையாலு மந்தவா ன்மாக்கடோறும் வெகுவிதமான சத்திகள்பதிந்து நிற்கை யாலு மப்படிச்சொன்ன தெனவறிக. அப்படி யான்மாக்க டோறு மந்தமலத்தின் சத்தி வெகுவிதமாகப் பதிந்து நிற்கு மென்றதற்கு. பி - ம். தத்துவவிளக்கத்தில். "கதிதருங்காழி மன் கட்டுமப்பாசங்கள் மூன்றவைதாம், பொதிதருமாணவ ம் போகஞ்செய்கன்மமு மாயையுமா, முதியதுதானொன்று முன்பினிலாதது சேதனன்கண், ணதிகமறைப்பன வாயிர கோடி விருத்திகளே". எ - து. கண்டுகொள்க. இனி யிருளோ

ளிர விருண்டமோகமாய். எ - கு. செறிந்த விருளும் வெளி யென்னும்படி யிருளாயிருக்கு மந்தமலமென்ற தேதென்னி ல் (இருளானது பண்டபதார்த்தங்களைமறைத்துந் தான்தோ ன்றி நிற்கையாலும் இந்தமலமானது தன்னையுங்காட்டாமல் பொருளையுங்காட்டாமல் நிற்கையாலு) மப்படிச்சொல்லப்ப ட்ட தெனவறிக. இதற்கு. பி - ம். திருவருட்பயனில். "ஒரு பொருளுங்காட்டா திருளுருவங்காட்டு, மிருபொருளுங்கா ட்டாதிது". எ - து. கண்டுகொள்க. இனி செம்பினுறுகளிம் பேய்ந்து நித்தமூலமலமாய். எ - கு. செம்பிற்காளிதம்போ லவொருகாலத்தினு மழியாத வநாதிமலமென்றதேதென்னி ல்செம்பென்கிற பொருளுள்ளளவுங் காளித நின்றாற்போல ஆன்மபோதமுள்ளமட்டு மந்தமலத்தின் மறைப்புப்போகா தென்றதெனவறிக. இதற்கு. பி - ம். தத்துவவிளக்கத்தில். "விருத்திகளான் மறைக்கின்றவவ்வாணவம் வெங்குருமன், கருத்தியநூன்முறை தேறிக்கலந்துட னுயணுவை, யருத்தி யநஞ்சென்ன மோகஞ்செய்தாசை யநுபவத்திற், பெருத் திடச்செம்பினிற் காளிதம்போலப் பிணைந்துளவே." எ - து கண்டுகொள்க. நித்தமூலமலமென்றது முத்தியினு மலமழி யாதென்ற தெனவறிக. இதற்கு. பி - ம். உண்மைவிளக்கத்தி ல். "முத்திதனின் மூன்று முதலும்." என்றசெய்யுளின் முடி விலே "இத்தைவிளைவித்தன் மலம்." எ - து. கண்டுகொள்க. இனி யறிவுமுழுதினையுமறைக்கும். எ - கு. ஆன்மாவினிச்சா ஞானக்கிரியைகளைச் சற்றும் ஜீவிக்க வொட்டாதபடி மல் மறைக்குமென்று பொருட்படுத்தினத்துக்கு. பி - ம். சித்தி யாரில். "சீவனுமிச்சாஞானக் கிரியையாற்சிவனையொப்ப, னுவனென்றிடலநாதி மலமிவற்றினைமறைக்கும்." எ - து. கண்டுகொள்க. இனி பாகமாம்வகைநின்று திரோதானசத் திபண்ணுதலால். எ - கு. சிவனுடைய வருட்சத்தியானது

திரோதாயியாய் நின்று மலங்களைக் காரியப்படுத்துமென்று பொருட்படுத்தினத்துக்கு. பி-ம். சித்தியாரில். "ஏயுமும்மலங்கடத்தந் தொழிலினையியற்றவேவுந் தூயவன்றனதோர்சத்தி திரோதானகரியதென்றும்." வருமது கண்டுகொள்க. இனி யதுபரிந்து நாகமாநதிமதியம்பொதிசடையானடிகணணுகும்வகைகருணைமிக நயக்குந்தானே. எ - கு. அந்தவருளானது திரோதமாய்நின்று ஆன்மாக்களுக்கு மலபாகம் வருத்தி மீளவும் பழையவருளாய்க் கிருபைஜநிக்குமென்றதெங்ஙனேயென்னில் மாதாவானவள் பிள்ளைகளிடத்திற்குற்றங்கண்டு கோபித்து மீளவுங்குணங்கண்டவாறே பிரியப்பட்டாற்போலவெனவறிக. இதற்கு. பி - ம். திருவாசகத்தில். "பேதித்துநம்மை வளர்த்தெடுத்தபெய்வளைதன் பாதத்திறம்பாடியாடேலோ." எ - ம். இந்நூலினும். "முற்சினமருவுதிரோதாயிகருணையாகி". எ - ம். வருமேதுக்களைக்கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது ஆணவமலமான தான்மாவை மறைக்குமுறைமையு மந்தமலத்தையருட்சத்தியானது திரோதாயியாய்நின்று பாகம்வருத்தி மீளவும்பழையவருளாய்க்கிருபைஜநித்து அப்படிமலபாகம்வந்த வான்மாக்களைச் சிவனுடையதிருவடியிலே கூட்டுவிக்குமுறைமையு மறிவித்தது.(அ)

இங்ஙனஞ்சொல்லப்பட்ட வருளாகிய திரோதாயிசத்தி அந்தவாணவமலத்தைப் பாகம்வருத்து முறைமை யெங்ஙனேயென்றுவினவ அந்தத்திரோதாயிசத்தியானது இச்சாஞானக் கிரியாசத்திகளைத் தோற்றுவித்து அவையிற்றைக்கொண்டே சுத்தமாயையிலு மசுத்தமாயையிலுமுண்டானதனுகரண புவனபோகங்களைத் தோற்றுவிக்குமிடத்து அவையிற்றோடு மான்மாக்களைக்கூட்டிக் கன்மத்தைப்புசிப்பித்து

மலபாகம்வருத்தவேண்டுகையா லதில் சுத்தமாயையின்றோ
ற்ற முந்தவருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

உன்னலரும்பரசிவன்றனருளாலேநாத முதிக்குமி
குங்குடிலைதனில்விந்துவருநாதந், தன்னிலதினொளிவள
ருஞ்சதாசிவராமவரிற் றயங்கவருமீசர்வித்தைதனையளி
ப்பரதனுன், மன்னுவரிவ்வகையைவர்வாய்மையினுன்மு
ன்னே வந்திடுமென்றுரைசெய்தவிந்துவாழாவகையே,
முன்னுதவுசூக்குமாதியொருநான்குமென்று மொழிந்தி
டுவரருங்கலைகண்முதிர்ந்துளோரே. (௩௩)

வைத்தமாமாயையின் வாக்குநான்குஞ்
சுத்ததத்துவமைந்துந் தோன்றுமென்றது.

வி - ம். உன்னலரும்பரசிவன்றனருளாலே நாதமுதி
க்குமிகுங்குடிலைதனில். அநுவயம். உன்னலரும் பரசிவன்ற
னருளாலே மிகுங்குடிலைதனி னாதமுதிக்கும். எ - து. மன
த்தினுனினைத்தற்கரிய பரமசிவனுடைய பராசத்தியாலே கு
டிலையாகிய மாமாயையிலே நாததத்துவந்தோன்றும்,—வி
ந்துவருநாதந்தன்னில். அநுவயம். நாதந்தன்னில் விந்துவ
ரும். எ - து. முற்கூறியநாதத்திலே விந்துதத்துவந்தோ
ன்றும்,—அதினொளிவளருஞ் சதாசிவராம். எ - து. அந்தவி
ந்துவிலே பிரகாசமிக்க சாதாக்கிய தத்துவந்தோன்றும்,—
அவரிற்றயங்கவருமீசர். எ - து. அந்தச்சாதாக்கியத்திலே
விளக்கமாகவரு மீசுரதத்துவந்தோன்றும்,— வித்தைதனைய
ளிப்பர். எ - து. அந்தவீசுரருஞ் சுத்தவித்தையைத்தோற்
றுவிப்பர்,— அதனுன் மன்னுவரிவ்வகையைவர். அநுவயம்
அதனு லிவ்வகையைவர் மன்னுவர். எ - து. முற்கூறியவகை
களாற் குடிலையுபாதானமாக விந்தத்தத்துவங்களைந்துந் தோ

ன்றினவொழுங்கிலே தத்துவகத்தாக்க ளவருந்தோன்றி யிந்தத்தத்துவங்களோடும் பொருந்திநிற்பர்கள்,—வாய்மையினுன் முன்னேவந்திடுமென்றுரைசெய்தவிந்து. எ - து. உண்மையாக முன்பே நாதத்திலேதோன்றுமென்று சொல்லப்ட்ட விந்துவிலே,— வழாவகையே முன்னுதவு சூக்குமாகதியொருநான்கும். அநுவயம். வழாவகையே சூக்குமாதியொருநான்கு முன்னுதவும். எ - து. தப்பாதமுறைமையினுலே சூக்குமைமுதலாகிய வாக்குகளுலையு முற்கூறிய சிவசத்திகடோற்றுவிக்கும்,— என்றுமொழிந்திடுவ ரருங்கலைகண் முதிர்ந்துளோரே. எ - து. என்றிங்ஙனஞ் சொல்லுவர்க ளரியநூல்களையுணர்ந்த பெரியோர்கள். எ - று.

ந - ம். உன்னலரும் பரசிவன். எ - கு. மனத்தினுனினைத்தற்கரிய பரமசிவனென்று பொருட்கூறிய தேதென்னில் அந்த நிஷ்களசொரூபியாயிருக்கின்ற பரமசிவனை ஆன்மபோதத்தாற் சுட்டியறிய வொண்ணுதபடியாலே யப்படிச்சொன்னதெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில். "தன்னறிவதனுற்காணுந்தகைமையனல்லனீசன்." எ - ம். கோயிற்புராணத்தில். "காரணங்கற்பனை கடந்தகருணை" எ - ம். இந்நூலினும். "நாடரியகருணை." எ - ம். வருமேதுக்களைக்கண்டுகொள்க. பரசிவன்றனருளாலே. எ - கு. பரமசிவனுடைய பராசத்தியாலே குடிலையிலே நாதந்தோன்றுமென்று பராசத்தியின்மேல்வைத்துப் பொருட்படுத்தினத்துக்கு வழியேதென்னில் அந்தப் பரமசிவமானது பிரபஞ்சத்தைக் காரியப்படுத்துமிடத்துத் தனதுசத்தியைவிரித்து அதுவேயுடம்பாகநின்று காரியப்படுத்துகையா லப்படிச்சொன்னதெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில். "முன்னருட்சத்திதன்பான் முகுட்குந்தான்முளையானன்றே" எ - ம். இந்நூலினும். "நீடுபராசத்தி நிகழிச்சாஞான நிறைகிரியைதர

வதனை நிமலன்மேவி, நாடரியகருணை திருவுருவுருவமாகி" எ-ம். ஞானபூசைத்திருவிருத்தத்தில். "இன்புருவச் சிவன் படைத்தற் கிச்சைகாலத் திசைவுழிவித்தியாதேகி யாகியெ ழிற்கிரியை, முன்பெருகக் குடிலையினையடைந்துநாத மூந் துவிந்தக் காமனுநன் மொழிமுறையேவகுத்துத், தன்பொ ருவில்மந்திரத்தாற் சதாசிவாதியுதவி". எ-ம். வருமதுக ண்டுகொள்க. இங்ஙனஞ்சொல்லப்பட்ட சிவசத்திகளாலே குடிலையிலே தோன்றுமென்ற நாதவிந்து முதலாகியதத்து வங்களுக்கு வகுப்பேதென்னில் நாதமென்றது சர்வான்மா க்களுக்கு மறிவையெழுப்புவித்துநிற்கிற ஞானமெனவறிக. விந்துவென்றது சர்வான்மாக்களுக்குமுண்டாகிய தொழிலை யெழுப்புவித்துநிற்கிற கிரியையெனவறிக. சாதாக்கியமெ ன்றது அந்தஞானமுங் கிரியையுமாகிய நாதவிந்துக்களிர ண்டுங்கூடின வவதரமெனவறிக. ஈசுரமென்றது கிரியையே றி ஞானங்குறைந்துநின்ற வவதரமெனவறிக. சுத்தவித்தை யென்றது ஞானமேறிக் கிரியைகுறைந்துநின்ற வவதரமெ னவறிக. இவையிற்றுக்கு. பி-ம். தத்துவவிளக்கத்தில். "ஆ ய்ந்தவத்தத்துவ மைந்தாவன சிவதத்துவத்தோ, டேய்ந்தவ ச்சத்தி சதாசிவமீசனும் வித்தையுமென், ஞேர்ந்தறிவித்தினு க் குண்ணெகிழ்ப்பானது சத்தியத்திற், போந்தெழுமங்குர மைமுகத்தோனென்று போற்றுவரே." என்றதை இந்தத்தத் துவங்களைந்துஞ் சிவசத்தியாலே குடிலையிலே தோன்றுமெ ன்பதற்குக்கண்டுகொள்க. இந்தத்தத்துவங்க ளேறியுங்குறை ந்து மொத்துநின்றதற்கு. பி-ம். தத்துவவிளக்கத்தில். "போ ற்றும்பரத்திற் பொதிகின்றஞானங் கிரியைபெற்றுத், தோற் றுஞ்சதாசிவ முன்னதைஞானங் கிரியைகுன்றிற், றேத்தியவி த்தை யிவற்றின்றிரிவு மகேசன்மயல், மாற்றுஞ்சிரபுரத்தெ ங்கோனெறியில் வகுத்தனவே." எ-ம். சித்தியாரிலும். "ஞா

ணமேயானபோது சிவன்ருழில்ஞானமொக்கி, லீனமில்ச தாசிவன்பே ரீசனுந்தொழிலதேறி, லூனமேற்கிரியைவித் தை யுருத்திரனிலையபோக, மானபேரதிகாரத்தோ டதிகர ணத்தனுமே". எ - து. கண்டுகொள்க. இவையிற்றின்முற்கூறியவிந்துவுநாதமுஞ் சர்வான்மாக்களுக்கு மறிவையுந்தொழிலையுமுண்டாக்குமென்று முன்சொன்னதற்கு. பி - ம். சித்தியாரில், "மூவகையணுக்களுக்கு முறைமையால்விந்துஞானமேவினதில்லையாகில் விளங்கியஞானமின்ரும்". எ - து. கண்டுகொள்க. அதனுல் மன்னுவரிவ்வகையைவர். எ - கு. முற்கூறியவகையாற் குடிலையுபாதானமாகத் தத்துவங்களைந் துந்தோன்றினவொழுங்கிலே தத்துவகத்தாக்களைவருந் தோன்றி யிந்தத்தத்துவங்களோடும் பொருந்திநிற்பார்களென்று பொருட்படுத்தினத்துக்கு வழியேதென்னில் முற்கூறியவகையாவது அத்தச்சிவமுஞ் சத்தியுங் குடிலையிலே பொருந்தினவவதரத் தந்தக்குடிலையுபாதானமாகச் சிவதத்துவங்கடோன்றுகையா லந்தச்சிவமுஞ்சத்தியு மந்தத்தத்துவங்களுடம்பாகவு மதிஷ்டித்துத் தத்துவகத்தாக்களைவரர்கநிற்கையாலே யப்படிச்சொன்னதெனவறிக. அதற்கு வழியேதென்னில் நாததத்துவமுடம்பாகச் சிவமதிஷ்டித்துநிற்கையாலும் விந்துதத்துவமுடம்பாகச் சத்தியதிஷ்டித்துநிற்கையாலு மந்தநாதமும் விந்துவுங்கூடின சாதாக்கியமுடம்பாக அந்தச்சத்தியுஞ் சிவமுங்கூடி சதாசிவமாக அதிஷ்டித்துநிற்கையாலுங் கிரியையேறி ஞானங்குறைந்து ஈசுரமுடம்பாக மஹேசுரமதிஷ்டித்துநிற்கையாலு ஞானமேறிக்கிரியைகுறைந்து சுத்தவித்தையுடம்பாக உருத்திரனதிஷ்டித்துநிற்கையாலுந் தத்துவங்களுடம்பாகத் தத்துவகத்தாக்கள் பொருந்திநிற்பர்களெனவறிக. என்றிங்ஙனந் தத்துவமுடம்பாகத் தத்துவகத்தாக்கள் பொருந்திநிற்பார்களென்ப

தற்கு. பி - ம். சித்தியாரில். "வித்தையோடீசர்சாதாக்கியஞ் சத்திசிவங்களைந்துஞ், சுத்ததத்துவஞ்சிவன்றன் சுதந்தரவடிவமாகு, நித்தமென்றுரைப்பர்கால நீங்கியநிலைமையாலே, வைத்திலர்முற்பிற்பாடு வருவித்தார்கருமத்தாலே." எ - து. கண்டுகொள்க. என்றிங்ஙனஞ் சிவன்றன் சுதந்தரவடிவமாகுமென்று சிவமொன்றையுஞ் சொல்லியிருக்கச் சத்தியையுங்கூட்டித் தத்துவகத்தாவாகச் சொன்னதேதென்னி லந்தச் சிவமுஞ்சத்தியும் பின்னமற்றிருக்கையால் சிவத்தைச் சொல்லவே சத்திக்குமாமென்பதுகருத்து. அப்படிச் சத்திசிவமிரண்டும் பின்னமற்றிருக்குமென்பதற்கு. பி - ம். சித்தியாரில். "சத்திதாஞ்தமாதி தானுகுஞ்சிவமுமந்த, சத்திதானுதியாகுந் தருவடிவானவெல்லாஞ், சத்தியுஞ்சிவமுமாகுஞ் சத்திதான்சத்தனுக்குச், சத்தியாஞ்சத்தன்வேண்டிற் றெல்லாமாஞ்சத்திதானே". எ- து. கண்டுகொள்க. என்றிங்ஙனமுற்கூறிய வகைகளால் நாதவிந்து விரண்டுதத்துவமும் ஐந்தாகவிரிகையால் சத்திசிவமிரண்டுந் தத்துவகத்தாக்களாவராகநிற்பதை யநுபவத்தாற் கண்டுகொள்க. என்றிப்படித்தத்துவமென்றுந் தத்துவகத்தாக்களென்று மிருவகையாயிருக்கத் தத்துவங்களின்பேர் தத்துவகத்தாக்களுக்குச்சொல்லியும் தத்துவகத்தாக்களின்பேர் தத்துவங்களுக்குச்சொல்லியும் வருகைக்குவழியேதென்னில் தத்துவங்களுடம்புந் தத்துவகத்தாக்களுயிருமாய் நிற்கையாலே உடம்புக்கிட்டபேர் உயிருக்குநின்றாற்போலத் தத்துவங்களின்பேர் தத்துவகத்தாக்களுக்கு நிற்கையாலும் விளக்குச்சுடரொரியுந்தகளி விளக்கென்று பேர்பெற்றாற்போலத் தத்துவகத்தாக்களின்பேர் தத்துவங்களுக்கு நிற்கையாலு மப்படிச்சொன்னதெனவறிக. இனி விந்துவழாவகையே முன்னுதவுசூக்குமாதி யொருநான்கும். எ - கு. விந்துவிலேநின்

றுந் தோன்றப்பட்ட வாக்குகளேயுஞ் சிவசத்திகடோற்று விக்குமென்று பொருட்படுத்தினத்துக்கு வழியேதென்னில் அந்தவிந்துவானது ஜடமானபடியால் அது தானுக்த்தோற்று விக்கமாட்டாதாகையா லப்படிச்சொன்னதெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில். "விந்துவின்மாயையாகி" என்றவிருத்தத்தில். "விந்துதன்பால் வைகரியாதி." எ - ம். "சிவன்றன்சந்நிதிதன்னினின்றே." எ-ம். வருகையாலப்படிச் சொன்னதெனவறிக. சந்நிதியென்றது அந்தச்சிவனுடையசத்தியையெனவறிக. அன்றியும் முன்னுதவுருக்குமாதியொருநான்குமென்ற வும்மைகொண்டே வேறேயுஞ்சிலதோன்றுமென்பது கருத்தெனவறிக. அஃதாவது முன்சொன்ன விந்துவிற் றோற்றமாகிய வாக்குகளுமன்றியே ஐம்பத்தோரக்கரமும் எண்பத்தொருபதமுஞ் சத்தகோடி மஹாமந்திரங்களும் வேதாகமபுராணசாத்திரங்களும் விஞ்ஞானகலர் பிரளயாகலருக்குத் தனுகரண புவனபோகங்களுந் தோன்றுமென்பது கருத்தாகையா லப்படிச்சொன்னதெனவறிக. இவையிற்றுக்கு. பி - ம். கோயிற்புராணத்தில். "சத்திகளிற்கருத்திருத்தித் தாவிலருமாமாயை, யுய்த்ததனிநாதாதி யையவகையுமுதிப்பித்து, வைத்தெழுத்துமொழிமறைநூன் மந்திரமேமுதலான, சுத்தவழிவிரித்தசுத்த தத்துவங்கடொகுமுதலில்". எ - ம். சித்தியாரில். "வித்தைகளவித்தையீசர் சதாசிவரொன்றிவர்க்கு, வைத்துறும்பதங்கள்வன்னம் புவனங்கண்மந்திரங்க, டத்துவஞ்சரீரம்போகங் கரணங்கடாமெலாமு, முய்த்திடும்வயிந்தவந்தா னுபாதானமாகிநின்றே". எ - து. கண்டுகொள்க. வயிந்தவமென்றது குடிலையாகிய சுத்தமாயையை யெனவறிக. சுத்தமாயைபடங்குடிலானுற்போலக் காரணமுங்காரியமுமாக நிற்கையால் சுத்தமாயையைச்சொல்லவே அதன்காரியமாகி

ய விந்துவுக்குமாமென்பது கருத்தெனவறிக. இனி யருங்கலைகண் முதிர்ந்துளோரே. எ-கு. அரியநூல்களையுணர்ந்த பெரியோர்களென்று பொருட்படுத்தினதேதென்னில் அரியநூல்களையுணர்ந்தவர்க ளிங்ஙனங்கூறிய பொருளுக்குமாறுபாடுசொல்லுவர்க ளென்பதனு லப்படிச்சொன்னதெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில். "சுத்தவடிவியல்பாகவுடைய சோதி." என்னும் விருத்தத்தில் "பித்தர்குணமதுபோல வொருகாலுண்டாய்ப் பின்னொருகாலறிவின்றிப் பேதையோராய்க், கத்திமோன்மாக்களுரைக் கட்டிற்பட்டோர் கனகவரைகுறித்துப்போய்க் கடற்கேவீழ்வார்." எ-து. கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது மேலானசிவசத்திகளாலே சுத்தமாயையிலேநின்று நாதவிந்துமுதலான தத்துவங்டோன்றுமென்றும் அந்தத்தத்துவங்களுடம்பாக முற்கூறிய சிவசத்திகளிரண்டுந் தத்துவகத்தாக்களாக வதிஷ்டித்துநிற்பர்களென்றும் அதிலே விந்துசத்தியிடமாகச் சூக்குமைபைசந்திமத்திமை வைகரியென்னும் வாக்குகண்முதலானவைகளெல்லாந் தோன்றுமென்னுமுறைமையு மறிவித்தது. (௯)

இங்ஙனஞ் சுத்தமாயாகாரணகாரியத்தினியல் பருளிச்செய்து மேல் அசுத்தமாயாகாரணத்தி னியல்பை யருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

உருவாதிசதுவிதமாயொன்றொன்றெவ்வா வுண்மையதாய்நித்தமாயொன்றாயென்று, மருவாகிக்கன்மமாரணுக்களியார்க்கு மாவாரமாயசித்தாயசலமாகி, விரிவாயதன்செயலின்வியாபியாயெல்லாம் விரிந்தவகைபுரிந்தடைவின்மேவியவையொடுங்க, வருகாலமுயிர்களெல்லா

மருவிடாமாய்மலமாய் மன்னியிடுமரனருளான்மாயை தானே. (க0)

உன்னியசகலர்க் குடம்புமுதலாய்
மன்னியவசுத்த மாயையைவகுத்தது.

வி - ம். உருவாதிசதுவிதமாய். எ - து. தேகமுதலானவை நாலுபிரகாரமாவதேதென்னில் தனுவென்றுங் கரணமென்றும் புவனமென்றும் போகமென்றும்வரும். அவையாவன: தனுவென்றது பஞ்சபூதங்களு மவையிற்றின்காரியங்களிருபத்தஞ்சுங்கூடின பூததேகத்தையெனவறிக. கரணமென்றது உட்கரணங்கள் புறக்கரணங்களௌனவறிக. புவனமென்றது கன்மம் புசிக்கைக்குண்டான விருப்பிடத்தையெனவறிக. போகமென்றது இவனுக்குப் புசிப்பாயுள்ளசத்தாதிவிடயங்களையெனவறிக.— ஒன்றொன்றவ்வாவுண்மையதாய். எ-து. அவைநாலினு மொன்றையொன்றொவ்வாமுறைமையினையுடைத்தாய். ஒன்றையொன்றொவ்வா முறைமையாவது தனுப்போலல்லகரணம் கரணம்போலல்ல புவனம் புவனம்போலல்ல போகம் எனவறிக.— நித்தமாய். எ - து. ஒருகாலத்தினுமழியாததாய். ஒருகாலத்தினுமழியாததாவது தன்காரியமாயுள்ளவை சங்காரகாலத்தழியினுமப்பொழுதுமழியாமல் நிலைபெறாய் நிற்பதாயென்றதெனவறிக.—ஒன்றாய். எ-து. அப்படிதனுகரண புவனபோகங்களாய்நின்றுங் காரியப்பட்டும் மூலகாரணமொன்று யிருப்பதாய்,—என்றுமருவாகி. எ-து. எக்காலமுமருபமா யிருப்பதாய். எக்காலமாவதுஅந்தத் தனுகரணபுவனபோகங்களாகப் பிரபஞ்சகாரியப்படுங்காலத்து மவையொழிந்தகாலத்துந் தான் கட்புலனுக்குத் தெரியாதாகையாலே யெனவறிக.—கன்மமாரணுக்களியார்க்கு மாவாரமாய். எ-து. கன்மமானது

பொருந்தநின்று புசித்துமுடிந்துபோம்படிக் கேதுவாயுள்ள வான்மாக்களுக்கெல்லாந் தாரகமாய். அஃதாவது ஆன்மாக்கள் கன்மந்தொலைந்தே முத்திபெறவேண்டுகையா லந்த கன்மமானது முடிந்துபோம்படி புசிக்குமிடத்து மாயாசரீரமெடுத்து அதனோடுங்கூடிநின்று புசித்துத்தொலையவேண்டுகையா லிந்தமாயை யந்தக்கன்மங்களுக்கேற்ற சரீரங்களைக்கொடுத்து நிற்கையா லப்படிச்சொன்னதெனவறிக.— அசித்தாய். எ - து. சித்தல்லவாய். சித்தல்லவாவது இந்தமாயையப்படி யான்மாக்களுக்குத் தாரகமாயிருந்துந் தனக்கென்னவோ ரறிவுமில்லையாய்ச் சுத்தசடமுமா யிருக்கையாலெனவறிக,— அசலமாகி. எ - து. சலநமில்லாததாய். சலநமில்லாததாவது எண்ணிறந்தவான்மாக்களுக்கு மெடுக்குமெடுக்கும் ஜநநங்கடோறு மதற்கதற்கேற்ற வெகுவிதமானசரீரங்களைக்கொடுத்துந் தான்சலிப்பற்றுநிற்கையாலெனவறிக.— விரிவாயதன்செயலின் வியாபியாய். எ - து. பரப்பாயுள்ளதன்செயலாலே சுத்தமாயைக்கப்பாலளவும் வியாபகத்தையுடையதாய். சுத்தமாயைக்கப்பாலென்றது அதனைப்போல வியாத்தமன்றியே தன்காரியமாயுள்ள முப்பத்தொன்றுக்குமுள்ள வியாத்தந் தனக்குமுடையதென்றதெனவறிக.— எல்லாம்விரிந்தவகைபுரிந்தடைவின்மேவி. எ - து. தன்காரியமாயுள்ளவையெல்லாந் தோன்றினவடைவிலே தானுமொக்கக்கூடிநின்று. தன்காரியமாவது கலையாதிமண்ணுந்தமளவாகவுள்ள முப்பத்தொருதத்துவமு மவையிற்றி லடங்கிவரப்பட்ட நால்வகைத்தோற்றமு மெழுவகைப்பிறப்பு மெனவறிக.— அவையொடுங்கவருகாலமுயிர்களெல்லாமருவிடமாய். எ - து. அந்தக்காரியங்களெல்லாந் தன்னிடத்திலே யொடுங்கத்தக்கதாகவருகிற சங்காரகால மந்தக் காரியரூபத்தைப்பற்றி நின்றவான்மா

க்களுக்குந் தன்னிடத்திலே பொருந்துகைக்கிடமுமாய். அன்றியுமிதனை எல்லாம் விரிந்தவகைபுரிந்தடைவின்மேவி யவையொடுங்கவருகால முயிர்களெல்லாமருவிடமாய். என்றொருபதமாக்கி இதற்குத்தன்னிடத்திலே தோன்றப்பட்டவெல்லா மொடுங்குங்காலந் தோன்றினவடைவிலே யொன்றிலேயொன்றாகப் பொருந்தி யவையெல்லாந் தன்னிடத்திலே யொடுங்கத்தக்கதாகவருகிற சங்காரகால மந்தப் பிரபஞ்சரூபத்தைப்பற்றிநின்ற வான்மாக்களுந் தன்னிடத்திலே பொருந்துகைக்கு மிடமுமாய் என்றுபொருளுரைப்பினு மமையும். ஆன்மாக்கள்பொருந்துகைக் கிடமென்றதெத்தாலென்னில் ஆன்மாக்க ளநாதியே மலசகசராகையாலே யந்தஆணவமலபாகம்வந்தே சிவனுடைய திருவடியைக் கூடவேண்டுமாகையால் அவ்வளவும் ஒடுக்கமிளைப்பொழித்தல் மற்றத்தோற்றமலபாகம்வர. எ-ம். மாயைகொடுமலமொழிப்பன் முன்னோன். எ-ம். நூல்களிலே சொல்லிவருகையால் ஒடுங்குங்காலங் காரணமாயையிலே யொடுங்கியுந் தோன்றுங்காலங் காரியமாயையோடுந் தோன்றியும் வருகையா லப்படிச்சொன்னதெனவறிக.—மலமாய். எ-து. எண்ணப்பட்டமலங்களிலே தானுமொரு மலமாய், எண்ணப்பட்டமலமாவது ஆணவம் மாயை காமியம். எ-ம். அன்றியும் மலமாயைகன்ம மாயேயந் திரோதாயி எ-ம். எண்ணப்பட்ட மலங்களிலே தானுமொருமலமாயென்றதெனவறிக.— மன்னியிடும். எ-து. இங்ஙனநிலைபெற்றுவரும். நிலைபேறுவது இந்தமாயையானது சிருஷ்டிகாலத்துக்குஞ் சங்காரகாலத்துக்குந் தனக்கொரு போக்குவரவின்றியே தன்னுடைய வியாத்திநிலைகுலையாமல் அசைவற்றுநிற்கையாலே யப்படிச் சொன்னதெனவறிக.—அரனருளான்மாயைதானே. எ-து. இங்ஙனநிலைபெற்று வ

ருகிறதுதா னாராலேயென்னில் தம்பிரானார் காருண்ணியத்தி னாலே நிலைபெற்றுவரும் அசுத்தமாயைதான். எ-று. அரனருளா லென்பதற்குத் தம்பிரானார் சத்தியாலே யென்று பொருளுரைப்பினு மாமெனவறிக.

விதப்பு. இங்ஙனஞ் சங்காரகாலமான்மாக்கள் காரணமாயையிலே யொடுங்குவார்களென்று சொல்லியிருக்கக்கேவலக்குறிசொல்லுமிடத்து "மலத்திஞேடும் வியாபிகேவலத்திலான்மா."எ-ம்."மலமன்றியொன்றுமில்லை."எ-ம்."இயல்பால். எ-ம். கேவலத்திலாணவமலமொழிய மற்றொன்றுமில்லை." எ-ம். நூல்களிற் சொல்லுவானேனென்னில் அஃதாவது ஆணவமலத்துக்குச் சுபாவஞ் செம்பைக்காளிதமறைத்தாற்போலவு மக்கினியைக்காட்டமறைத்தாற்போலவு மான்மபோதத்தைமறைத்து அறியாமையைப்பண்ணிநிற்பதாதலாற் கேவலத்திலறிகருவியாயுள்ள தத்துவங்களுநீங்கி யறியாமையே வடிவாய்க்கிடக்கையா லப்படிச் சொன்னதெனவறிக. அப்படியானு லந்தவாணவமலமறைப்புத்தா னெடுக்கமாகாதோ சங்காரகாலத்துக்கு ஆன்மாக்கள் மாயைதாரகமாக வொடுங்குவார்க ளென்பானேனென்னில் அப்படியாணவத்தால் மறைப்புண்டுகிடந்தாலும் அந்தமறைப்புத் தாரகமாகாதென்றபடியால் மாயைதாரகமாக வொடுங்கவேண்டுகையாலே யப்படிச்சொன்னதெனவறிக. அப்படியாணவ மலமறைத்தாலு மாயைதாரகமாக வொடுங்குகைக்கு வழியேதென்னில் முற்கூறியவுபமானத்தில் காளிதத்தால் மறைப்புண்டசெம்பு மிருக்கும்பொழுது பூமிமுதலான தாரகங்களைப்பற்றி யிருந்தாற்போலவு மற்றக்காட்டமு மப்படிக்கு பூமிமுதலான தாராகங்களைப்பற்றி யிருந்தாற்போலவு மான்மாநித்திரையிற் கேவப்பட்டுக்கிடக்குமவதரத்து ஜீவிக்குங் கருவிகளெல்லாநீங்கி யாணவமலத்தான் மறைப்புண்டு

உடல்தாரகமாக மூலாதாரத்திலே யொடுங்கிக்கிடக்கையா லுஞ் சங்காரகேவலத்துக்கு மப்படிமாயையிலே யொடுங்கு மென்று சொன்னதெனவறிக. அப்படி நித்திரையிற் கேவல த்துக்கு ஆன்மாவுடல்தாரகமாக வொடுங்குமென்பதற்கு. பி-ம். சிவஞானபோதத்தில். "அவ்வுடலினின்றுயிர்ப்ப வைம்பொறிகடாங்கிடப்பச், செவ்விதினவ்வுடலிற் சென்றடங்கி" எ-ம்.சித்தியாரில். "உடலினிலஞ்சவத்தை யுறுமுயிர்காவலாக." எ-ம். இருபாவிருபஃதில். "உடலகத்துமூலத்தொடுங்க." எ - ம். வருமேதுக்களைக் கண்டுகொள்க. அன்றியும் கேவலத்தி லாணவமலமன்றியே மாயாகாரணமுண்டென்பதற் கநுபவமேதென்னில் அந்த வாணவமலமறைப்பாக மூலாதாரத்திலே யொடுங்கிக்கிடக்குமவதரத்து அவ்விடத்திலே காரியமாயையாயுள்ள கலையாதிதத்துவங்கடோன்றி யந்தவாணவமலமறைப்பை நீக்குகையாலே முளையுள்ளவிடத்திலே கிழங்குண்டென்று கண்டாற்போலக் கலையாதி தத்துவங்கடோன்றுகைக்குக் காரணமாயுள்ள மாயையு மவ்விடத்திலே யுண்டென்பதுகண்டுகொள்க. அப்படிகேவலத்தில் மாயையிலேநின்றுங் கலையாதிதத்துவங்க டோன்றுமென்பதற்கு. பி - ம். திருமந்திரத்தில். "மாயையெழுப்புங் கலாதியைமற்றதி, லேயவராகாதி யெய்துந்துரியத்துத், தோயுஞ்சுழுனை கனுவொடுந்துன்னியே, யாயினனந்தச் சகலத்துளானே." எ - து. கண்டுகொள்க. என்னவேதுரியத்தி லராகாதியென்பதுகொண்டே யதீதத்திற் கலாதிகளென்பது கண்டுகொள்க. அன்றியும் சித்தியாரிலும். "மாயையிற்காலமோடு நியதிபின்கலாந்தோன்றும்." எ- ம். "மாயையின்வயிற்றுண்மன்னி வருஞ்செயல்ஞானமிச்சை, யேயுமக் கலாதிமூன்று லேகதேசத்தினேய்ந்து." எ-ம். வருவதுமிப் பொருட்பற்றியெனவறிக. அப்படி கேவலத்தில் மலமுமா

யையுங்கூடி நிற்குமேயானால் மலத்தையிருளென்று மாயை யையொளியென்று நூல்களிற்சொல்லியிருக்க விருளாகிய கேவலத்திலேயொளியாகிய மாயையுங் கூடிநிற்குமென்ன லாமோவென்னில் அப்படியொளியென்றுசொல்லப்பட்டது அந்தக்காரணமாயையிலேநின்றுந் தோன்றி யாணவமலம றைப்பைநீக்கப்பட்ட கலையாதிதத்துவங்களாகிய காரியமா யையையெனவறிக. அப்படியாணவமலமறைப்பை நீக்குகி றகலையாதிதத்துவங்களை யொளியென்பதற்கு. பி - ம். சித்தி யாரில் "போதகாரியமறைத்து நின்றதுபுகல்மலங்கா, ஞா தலாங்குணமுமாக வுயிரினுள்விரவலாலே, காதலாலவித் தைசிந்தத் தருங்கலையாதிமாயை, யாதலாலிரண்டுஞ்சோதி யிருளெனவேருமன்றே". எ - ம். இந்நூலினும். "புகலுமல மொழித்தற்குக் கலாதிமுதல்மாயைபொருந்தியிடும்." என்ற செய்யுளில் "இகலிவருமிவையுணரி லிருள்வெளியாந்தன் மையெய்தும்" எ - ம. கண்டுகொள்க. அன்றியுமிச்செய்யு ளின கருத்தாகிய. "மலநிலையொதுங்க மாயாகாரியங் குல விடுமிருளொளி குறியிதற்கென்றது." எ - ம். கலையாதி தத் துவங்களை யொளியென்பதற்குச் சிவஞானபோதத்தினும். "கலையாதிமண்ணந்தங் காணிலவைமாயை, நிலையாவாந்திப மேபோல." எ-ம். "மாயாதனுவிளக்காய்" எ-ம். திருவருட்ப யனிலும். "விடிவாமளவும் விளக்கனையமாயை வடிவாதி." எ-ம். வருமேதுக்களையுங்கண்டுகொள்க. ஆகவிங்ஙனங் கலை யாதிதத்துவங்களாகிய காரியமாயையை யொளியென்றது கொண்டே யான்மாக்கள் கேவலத்தில்மாயாகாரணந் தார கமாகவொடுங்குவார்களென்பதையநுபவத்தாற் கண்டுகொ ள்க. அப்படிநித்திரையிற் கேவலத்துக்குஆன்மாக்கள்மாயை யிலேயொடுங்குவர்களென்பதுகொண்டே சங்காரகேவலத் துக்கும் மாயையிலே யொடுங்குவர்களென்று சொல்லலா

மோவென்னில்முன்னேநித்திரையிற்கேவலத்துக்கு மலமன்றியொன்றுமில்லையெனுமியல்பா யென்று ஆணவமறைப்புக்குச்சொன்னதைச் சங்காரகேவலத்துக்குபமானமாகக்கேட்கையா லிதற்குமப்படிச்சொல்லப்படுமெனவறிக. அன்றியுநித்திரையிற் கேவலம்போலவிருக்குஞ் சங்காரகேவலமுமென்பதற்கு. பி-ம். தத்துவவிளக்கத்தில். "எல்லியினித்திரைப்போலிளைப்பாற்று மணுக்களையே." எ-ம். இந்நூலினும். "நீக்கமிலதீதமாசு நிறைந்தகேவலமாநீர்மை". எ-ம். கண்டுகொள்க. ஆகையாலான்மாக்களுக்கு ஆணவமலம்போலமாயையும் அநாதிகாரணமாகையால் மலமறைக்கமாயைதாரகமாகவொடுங்குவார்களென்பதை யநுபவத்தாற் கண்டுகொள்க. அப்படியானால் ஒருமலத்தையுடையவிஞ்ஞானகலர் அந்தவாணவமலமொன்றேடு நின்றாற்போலச் சகலருங்கேவலத்துக்குஆணவமலமொன்றேடுங்கூடி நில்லார்களோவென்னில் அந்தவொருமலத்தையுடையவிஞ்ஞானகலரும் அந்தவாணவமலபாகம்வருமிடத்து ஜீவிக்குங்காலஞ் சுத்தமாயாகாரியத்தோடுங்கூடி ஜீவித்தும் ஒடுங்குங்காலம் அந்தச் சுத்தமாயாகாரணத்திலே யொடுங்கியுநிற்கையால் அவர்களுக் காணவமலமொன்றென்றுசொல்லவேண்டுவதில்லையெனவறிக. அவர்களுஞ் சுத்தமாயையோடுங்கூடி வருவார்களென்பதற்கு. பி-ம். சித்தியாரில் "வித்தைகளவித்தையீசர்சதாசிவரென்றிவர்க்கு, வைத்துறும்பதங்கள்வன்னம் புவனங்கண்மந்திரங்க, டத்துவஞ்சரீரம்போகங் கரணங்களாமெலாமு, முய்த்திடும்வயிந்தவந்தா னுபாதானமாகிநின்றே". எ-ம். தத்துவப்பிரகாசத்தினும் விஞ்ஞானகலருக்கு ஆணவமலமன்றியே திரோதமுஞ் சுத்தமாயையு முண்டென்பதற்கு. பி-ம். "இவ்வுயிர்கள்மூவகையாம் விஞ்ஞானகலர்க ளொழிற்பிரளயாகலர்கள் சகலர்களென்றிவரி,னவ்வகையே யாணவமு மாணவமு

ம்வினையு மாணவமும்வினையுமாயையுமூன்றுகுஞ், செவ்வை யிலே திரோதமுடன் சுத்தமாயை சேர்மூவகைக்குமுள." எ-ம். நூல்களிற்சொல்லிவருகையா லவர்களு மாணவமல மொன்றேடுங் கூடிநின்றாலுஞ் சுத்தமாயையாலே காரியப் பட்டுப் பாகம்வரவேண்டுகையால் சகலரும் மாயையிலே யொடுங்கியுந் தோன்றியும் வருவார்களென்பதே துணிபெ னவறிக. இனி யிந்தச்செய்யுளுக்குப் பதந்தோறும் பொருட் படுத்திவந்த வவதரத்து அவையொடுங்கவருகால முயிர்க ளெல்லாமருவிடமாய். எ-கு. அந்தக்காரியரூபங்கள் கார ணத்திலே யொடுங்குவதான சங்காரகாலம் அந்தக்காரியவு ருவத்தைப்பற்றிநின்ற வான்மாக்களு மந்தக்காரணத்திலே யொடுங்குவர்களென்று பொருட்படுத்தினத்துக்கு. பி-ம். தத்துவவிளக்கத்தில். "புல்லியபாசங்க ளுய்த்திடப்போகம் புமானுகர்ந்து,செல்லியகாயத் தறுஞ்செல்லனீங்கிச் சிரபுர க்கோன், சொல்லியமண்முத லாயினமாயையி லேதொகுத் தங், கெல்லியினித்திரைப் போலிளைப்பாற்று மணுக்களையே." எ-து. கண்டுகொள்க. அன்றியுமந்தப்பதத்துக்கு ஆணவமல பாகம் வாராதவான்மாக்கள் ஒடுங்குங்காலங் காரணமாயை யிலேயொடுங்கியுந் தோன்றுங்கால மந்தவாணவமலபாகம் வரக் காரியமாயையோடுந்தோன்றியும் வருமென்று பொரு ட்படுத்தினத்துக்கு. பி-ம். சித்தியாரில். "உயிரவையொடுங்கி ப்பின்னு முதிப்பதெனரன்பாலென்னிற், செயிருறுமலத்தினு குஞ்சிதைந்ததேதென்னிற்சித்தத்; தயர்வொழிகாரியங்க ளழியுங்காரணங்கிடக்கும், பயிறருகாரியம்பின் பண்டுபோற் பண்ணுமீசன்." எ-து. கண்டுகொள்க. என்றிங்ஙனமுதா ரணமாகக்காட்டின விந்தச்சித்தியாரின் செய்யுளிலே ஆன் மாக்க ளாணவமலபாகம் வருமளவுஞ் சங்காரகாலமாயா காரணத்திலே யொடுங்கியுஞ் சிருஷ்டிகாலமாயாகாரியத்

தோடு தோன்றியும் வருவார்களென்பதற்குப் பொருளாவது:— உயிரவையொடுங்கிப்பின்னு முதிப்பதென்னரன்பாலென்னில். எ - து. உம்முடையகத்தாவி னுக்கினையின்பகுதியாலே சங்காரகாலம் பிரபஞ்சமுமழிந்துஆன்மாக்களுமொடுங்குமேயாமாகில் மீளவுந்தோன்றுவா னேனென்று நீகேட்கில்,—செயிருறுமலத்தினுகும். எ - து. அப்படித்தோன்றுகிறது குற்றம்பொருந்தின வாணவமலபாகம் வாராதவான்மாக்கள் அந்தமலபாகம் வருகைப்பொருட்டாக மீளவுமாயையிலே தோன்ருநிற்பர்கள்,— சிதைந்த தேதென்னில் எ - து. அப்படியான்மாக்கள் மாய்யயிலே தோன்றுவார்களாகில் உம்முடையகத்தாவாலே சங்காரகாலத்திலழிக்கப்பட்ட தேதென்றுநீகேட்கில்,—சித்தத் தயர்வொழிகாரியங்களழியும். எ - து. சித்தமாகிய வான்மாவை அயர்வாக மறைக்கப்பட்ட வாணவமலத்தைப் பாகம் வருத்துகைக்குத்தத்துவமாயுள்ள காரியமாயையழியும். அப்படியழிந்துபோன காரியமாயை மீளவுஞ் சிருஷ்டியிற்ருேன்றுகைக்கு வழியேதென்றுநீகேட்கில்,—காரணங்கிடக்கும். எ-து· அப்படிக்காரியங்கடோன்றியு மழிந்தும் வருகைக் குபாதானமாயுள்ள காரணமாயை சங்காரகாலத்திலு மழியாமற் கிடக்குமாகையாலே,—பயிறருகாரியம்பின் பண்டுபோற் பண்ணுமீசன். எ-து: ஆன்மாக்கள்போகம் புசித்தற்குடம்பாகப் பொருந்தப்பட்ட் காரியமாயையை முன்புபோல வந்தக்காரணமாயையிலேநின்றுஞ் சிருஷ்டிப்பன் சிவன்ருன். எ-று. என்று பொருளுரைத்துக்கொள்க. அன்றியும் சிவாகமதில்"மாயாதத்வம் ஜகத்பீஜ மவிநாஸ்சிய சிவாத்மகம், விஸ்வேகமமலம் ஸூக்ஷம மநாஸ்தவ்வியய மீஸ்வரம்". "ததேகம் சிவம் பீஜம் ஜகத்சித்ர சத்திமது, சத்காரியா திகாராந்த சம்ரோதி வியாபிமீஸ்வரம்" எ- து. கண்டுகொள்க. எல்லாம் விரிந்தவ

கை புரிந்தடைவின் மேவியவை யொடுங்க வருகாலமுயிர்க ளெல்லா மருவிடமாய். எ-கு. ஆன்மாக்கள் சங்காரகாலங் காரணமாயையிலே யொடுங்குவர்களென்பது வழக்கல்ல வென்று எல்லாம் விரிந்தவகை புரிந்தடைவின் மேவியவை யொடுங்க வென்றுபதமுறித்து அதனைச் சங்காரகாலமாக் கி வருகாலமுயிர்களெல்லா மருவிடமாயென்ற பதத்தைச் சிருஷ்டிகாலமாக்கிப் பொருளுரைப்பாருமுளர். அதுவழக்க ல்லவெனவறிக. அதுவேனென்னி லிந்தச்செய்யுளுக்குப் பத ந்தோறும் யகரவொற்றுமுடிவாகப் பதமுடித்துவருகையா லும் ஒடுங்கவென்றுபதமுடியாதபடியாலும் அன்றியும் மு ன்னர்ப் பதங்களெல்லாஞ் சிருஷ்டியைச் சொல்லிவந்துமே ற்சங்காரத்தைச் சொல்லி முடித்துவிடுகிறதொழிய மீளவு ஞ் சிருஷ்டியைச்சொல்ல வழக்கல்லாத படியாலும் அன்றி யுமிச்செய்யுள் காரணமாயையைச் சொல்லுகையா லதனு டைய செய்தியைக் கூறுகிறதொழியக் காரியமாயையின் பி ரசங்க மிவ்விடத்துக் கூறப்படாதாகையாலும் ஒடுங்கவென் று பதமுறித்து வருகாலமென்பதைச் சிருஷ்டிகாலமென்று பொருட்படுத்துகை வழக்கல்லவெனவறிக. ஆகையால் அ வையொடுங்கவருகால முயிர்களெல்லா மருவிடமாய் என் ெறாருபதமாக்கிச் சங்காரகால மான்மாக்கள் மாயையிலே யொடுங்குவர்களென்பதே சித்தாந்த வழக்கெனவறிக. அன் றியும் இந்தப்பதத்துக்கிதுவே வழக்கென்பதற்கு முற்கூறிய வுபமானங்களன்றியே இந்நூலைப்பின்சென்றநூலாகிய திரு நெறிவிளக்கத்தினு மிந்தச்செய்யுளுக் கெதிரடைவிருத்தமா கிய "மெய்யாதி நால்வகையா யொன்றுக்கொன் றெவ்வா வெகுவிதமா யேகமாய்வீதலகன் றருவா, யெய்யாமல் வினை யினுழ லாருயிர்களெவைக்கு மிருப்பாகி யசேதனமாய்ச் சலிப்பிலதாய்த் தனது, பொய்யாய நிலையளவும் பூரணமா

யாவும் பொருந்தவடை வேபுரிந்து பொருந்திவினை யொன் றுஞ், செய்யாதவிறுகாலஞ் சேதனங்கட் கெல்லாஞ் சேர்வி டமா மாயையெனச் செப்புநூலே" என்பதனுள்"வினையொ ன்றுஞ் செய்யாத விறுகாலஞ்சேதனங்கட்கெல்லாஞ் சேர் விடமாமாயை" என்றபதத்தை அவையொடுங்க வருகாலமு யிர்களெல்லாமருவிடமாய் என்றபதத்துக்குக்கண்டுகொள்க அதற்குவழியே தென்னில் வினையொன்றுஞ் செய்யாத விறு காலம். எ - து. சங்காரகால மாகையாலும். சேதனங்கள் ள் - து. ஆன்மாக்களாகையாலும். சேர்விடம். எ - து. ஒடுங் குமிடமாகையாலும். மாயை. எ - து. அசுத்த மாயாகார ணமாகையாலும் சங்காரகால மான்மாக்கள் மாயையிலே யொடுங்குவர்களென்னும் பொருட்பெற்றுநிற்கையா லந்தப் பதத்துக்குவமிக்கப்பட்டதெனவறிக. இந்தத்திருநெறிவிளக் கம் பின்னூலாயிருக்கவு மிதனையேதுக்காட்டிய தேதென்னி லந்நூல் சிவப்பிரகாசத்தைப் பின்சென்ற நூலா யிருக்கை யினு மன்றியும் விருத்தந்தோறும் விருத்தந்தோறுஞ் சத் தம்பேதித்து வருகையேயன்றி யத்தமொன்றுபட்டு வருகை யாலு மதுகாட்டவேண்டி உருவாதி சதுவிதம். எ - கு. மெ ய்யாதி நால்வகையா யென்றசத்தம்போல அவையொடுங்க வருகால முயிர்களெல்லா மருவிடமாய். எ - கு. வினையொ ன்றுஞ் செய்யாத விறுகாலஞ் சேதனங்கட்கெல்லாஞ் சேர் விடமாம் என்பது காட்டவேண்டி யேதுவாகவிட்டதென வறிக. ஆகையால் முற்கூறிய வுபமானங்களினு மேதுக்க ளினு மான்மாக்கள் சங்காரகாலம் ஆணவமலத்தால் ம றைப்புண்டு மாயையிலே யொடுங்குவர்க ளென்பதே சித் தாந்த வழக்கென்பதை யநுபவத்தாற் கண்டுகொள்க. இது வே பொருளென்பதற்குக் கற்பகாலத்துப் பிரமாவுக்கு மா

லையிலே யொழிக்குமென்பதற்குச் சூதசங்கிதையென்னுங் கிரந்தத்திற் கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது அசுத்தமாயையானது சிருஷ்டிகாலத்தினிடத்திலே நின்றுந் தோன்றப்பட்ட காரியங்களோடேகூடி நிற்குமென்று மற்றக்காரியங்களெல்லாந் தன்னிடத்திலே யொடுங்கத்தக்கதாக வருகிற சங்காரகால மற்றக்காரியரூபத்தைப்பற்றி நின்ற வாசனைகளுந் தன்னிடத்திலே பொருந்துவதற்குத் தாரகமா யிருக்குமென்றும் வருமுறைமையை யறிவித்தது. (௧0)

இங்ஙனஞ்சொல்லப்பட்ட தேகாதிபிரபஞ்சத்தோன்றுமிடத்தும் பரப்பிரமத்திலேநின்றுந்தோன்றி யதிலேயொடுங்குமென்றொழிந்து அப்படி யசுத்தமாயாகாரணமென் றொருவன் காட்டிக்கொள்ளவேண்டுவதில்லையென்கிற மாயாவாதியை நோக்கிச் சித்தாயுள்ள பிரமத்தினிடத்து ஜடமாயுள்ள பிரபஞ்சந் தோன்றுதென்று மறுத்தருளிச்செய்வானெடுத்துக்கொண்டருளியது.

என்னையிதுவெளிறுவதற்குபாதானமில்லை யிறைவனலதெனினசித்துச்சித்தினிடத்துதியா, மன்னியுளதென்றுதல்வனென்கொலென்னின் மாயைதானசித்துருவாய்மருவமாட்டா, தன்னவனும்பிதுவொழியவாக்கமாட்டானசத்தனுமெனினதுவுமவன்போலிக்க, முன்னவனவ்வசித்தைவிரித்தவையுமாக்கு முதன்மையதுகொடுத்ததெனமொழிந்திடாரே. (௧௧)

உலகுபிரமத் ததித்தொழிக்குமெனுங்
கலைஞன்மொழியைக் காட்டிமறுத்தது.

விம். என்னையிதுவெனில். எ-து. பிரபஞ்சத்தோன்றுகைக்
கு இங்ஙனஞ்சொல்லப்பட்ட மாயாகாரணமென் றொருமுத
லைநாட்டிக்கொள்ள வேண்டுவதில்லையென்று நீசொல்லில்,—
உலகுக்குபாதானமில்லை. எ - து. பிரபஞ்சத் தோன்றுகைக்
கிந்தமாயையன்றி வேறொரு காரணமுமில்லையாம்,—இறை
வனலதெனின். எ - து. கத்தாவல்லவோபிரபஞ்சத்தோன்
றுகைக்குக் காரணமென்று நீசொல்லில்,— அசித்துச்சித்தி
னிடத்துதியா. எ - து. அசேதனமாயுள்ளபிரபஞ்சஞ் சேத
னமாயுள்ள கத்தாவினிடத்துத் தோன்றாது. ஆகையால் மா
யை வேண்டுமெனவறிக.— மன்னியுளதேன் முதல்வனென்
கொலென்னின். எ - து. அப்படி மாயையென்பதொன்று நி
லைபெற்றுடையதாகில் தலைவனுயுள்ள கத்தா வென்னகார
ணத்துக்கென்று நீகேட்கிறாயாமாகில்,—மாயைதா னசித்து
ருவாய் மருவமாட்டாது. எ - து. அந்தமாயையானது ஜட
மாயிருந்தபடியாலே தானேயுருக்களாகப் பொருந்தமாட்
டாது. ஆகையாலே கத்தாவேண்டுமெனவறிக.— அன்னவ
னுமிதுவொழிய வாக்கமாட்டா னசத்தனுமெனின். எ - து.
அந்தக்கத்தாவு மிந்தமாயையைக்கொண்டல்லது பிரபஞ்சந
டத்தமாட்டான். ஆனபடியாலே யவனுஞ்சத்திஹீனனுமெ
ன்றுநீசொல்லில்.—அதுவுமவன்போனித்தம். எ-து. அந்தமா
யையு மவனைப்போலே நித்தியமா யிருப்பதொன்று. ஆகை
யாலே,— முன்னவ னவ்வசித்தைவிரித் தெவையுமாக்கும்.
எ - து. அநாதியாயிருக்கப்பட்ட கத்தாவுந் தன்னைப்போலே
யநாதியா யிருக்கப்பட்ட காரணமாயையிலே நின்றுங் காரி
யமாயையா யிருக்கிற பிரபஞ்சத்தை விரிவிலேதோற்றுவித்
துச் சர்வத்தையு முண்டாக்குவன். அதுகொண்டே,— முத
ன்மையதுகொடுத்ததென மொழிந்திடாரோ. எ-து. அப்படி
யந்தமாயையைக்கொண்டு கத்தாபிரபஞ்சத்தை யுண்டாக்கி

நசாமர்த்தியமும் அந்தமாயைதானுண்டாக்கினதென்று பெரியோர்கள் சொல்லார்கள். எ-று. என்னவேமுதன்மையது கொடுத்ததென மொழிந்திடாரோ. எ - து. அதனை ரூபமாயிருக்கப்பட்ட மாயையிலேநின்று முரூபமாயிருக்கிற பிரபஞ்சத்தையுண்டாக்கிறகத்தா வந்தமாயை யில்லாதபொழுது முண்டாக்கிக்கொள்ள வல்லனெனவறிக.

உதாரணம். கத்தாவினிடத்திலே பிரபஞ்சந்தோன்றியொடுங்குமதொழிந்து மாயாகாரணமெனவொன்றுண்டென்ன வேண்டுவதில்லையென்று மாயாவாதி சொன்னதற்கு. பி - ம். சித்தியாரில். " தாங்குமூலகுக்குபாதானஞ் சத்தாஞ்சிலம்பிநூறன்பால், வாங்கிவைத்துக்காப்பதுபோல் வையமெல்லாந்தன்பக்க, லோங்கவுதிப்பித்துளதாக்கி நிறுத்தியொடுக்கத்திலதாக்கு, மாங்குவந்தவாறதனாற் சத்தாஞ்சகத்தினமைவெல்லாம்". எ - து. கண்டுகொள்க. அசித்தாயுள்ளபிரபஞ்சஞ் சித்தாயுள்ள கத்தாவினிடத்துத் தோன்றுதென்று அவனைமறுத்ததற்கு. பி - ம். சித்தியாரில். " மாயநூலதுசிலம்பிவாயினிடை வந்தவாறதனைமானவே, யாயவேயுலகமானதும் பிரமமதனிலேயெனிலடங்கிநின், றேயுமாகுமொருசித்துமத்துட னிலாததென்றுபினியபிம்பினீ,பேயனேகடமிருத்தில்வந்தது பிறப்பதாவதிலைபேசிலே". எ - து. கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது அப்படி மாயாகாரணமென்றொருமுதலில்லை கத்தாவினிடத்திலே பிரபஞ்சந் தோன்றுமென்றமாயாவாதியைமறுத்துச் சித்தாயுள்ள சிவனிடத்திலே ஜடமாயுள்ள பிரபஞ்சந் தோன்றாதாகையால் மாயையுண்டென்னு முறைமையை யறிவித்தது. (கக)

அப்படியே பிரபஞ்சத்தை யும்முடையகத்தாவே காரியப்படுத்துவனுமாகிற் சர்வான்மாக்களையு மொருதன்மையாகச் செய்வியாதிருப்பானேனென்ற பட்டாசாரியனைநோக்கி மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

படைத்ததொருபடியின்றிப்பறவைபசுநரராய்ப் பண்ணியதென் முன்னைவினைப்பான்மையென்ப, ரடுத்தவினையுளதாயினிறையேனென்னி லசேதனமற்றவையாவிக்கமைத்ததாகு, மெடுத்தவினையுருவுறுவதுயிரோற்றானேயிருவினைக்குத்தக்கவுடலெய்துமென்னிற், சடத்திரளுங் கத்தாவாயறிவொன்றில்லாத் தன்மையனுங்கூடவொருசங்கையின்றே. (கஉ)

பல்லுருவாகப் படைப்பதற்கேது
தொல்லைவினையின் றொடர்ச்சியைச்சொன்னது.

வி - ம். படைத்ததொரு படியின்றிப் பறவைபசுநராய்ப் பண்ணியதென். எ - து. உம்முடையகத்தா படைக்குமிடத்துச் சர்வான்மாக்களையு மொருதன்மையாகப் படையாமல் நரர்மிருகபசுபக்ஷிதாபராதிகளாயுள்ள நால்வகைத் தோற்றமு மெழுவகைப் பிறப்புமாகச் சிருஷ்டிப்பானேனென்று நீகேட்கிறாயாமாகில்,— முன்னைவினைப்பான்மையென்பர். எ-து. ஆன்மாக்கள் முன்ஜநநத்திற்செய்தவினையின்படிக்கீடாகவென்று சொல்லுவர்கள் பெரியோர்கள்,—அடுத்தவினையுளதாயி னிறையேனென்னில். எ - து. ஆன்மாக்கள்செய்த புண்ணியபாவங்களுக்கீடாகச் சரீரங்களுண்டாமாகி லந்தக்கன்மமேயமையாதோ கத்தாவொருவன் வேணுமோவென்னில்,— அசேதனமற்றவையாவிக்கமைத்தாகும். எ - து. அந்தக்கன்மங்களுக் கறிவில்லாதபடியாலே தானாக வுடம்புகளை யுண்டாக்கமாட்டா தாகையால் கத்தாவா

ன்மாக்கள்செய்த வினைக்கீடான வுடம்புகளை யுண்டாக்கின தாம்,—எடுத்தவினையுருவுறுவதுயிரோற்முனே யிருவினைக்கு த்தக்கவுடலெய்துமென்னில். எ - து. அந்தக்கன்மத்துக்கீடாகவெடுக்கப்பட்ட சரீரத்திலே நின் றநுபவிக்கிற தான்மாவேயாகில் தான்செய்த புண்ணியபாவங்களுக்கீடான சரீரத்தைத் தானேயெடுத்துக்கொள்ளுமென்னில்,— சடத்திரளுங் கத்தாவா யறிவொன்றில்லாத் தன்மையனுங் கூடவொருசங்கையின்றே. எ-து. ஜடமாயுள்ள வுடலினது கூட்டங்களுங் கத்தாவல்லனுமாய்த் தானேயறிகைக்கோரறிவில்லாதவான்மாவுந் தம்மிற்கூடியறிகைக் கோர்காரணமுமில்லை. எ - று. என்னவே சிவனே சர்வமுமறிந்துநின் றான்மாக்கள் செய்த கன்மத்துக்கீடான சரீரங்களைக் கொடுப்பனென்பது கருத்து.

வி-பு. படைத்ததொருபடியின்றிப்பறவைப்பசுநரராய்ப்பண்ணியதென்னென்று பட்டாசாரியன்கேட்டது பிரபஞ்ச மொருவழிப்பட்டிராததுகொண்டே கத்தா படைக்கிறபடைப்பால் பக்ஷபாதியாவனென்பது அவனுக்குக்கருத்து. என்னவே பிரபஞ்ச மநாதியேயுடையதென்று மது வொருவர் படைக்கவேண்டுவதில்லை யென்பது மவனுக்குப்பக்ஷம். இதற்கு. பி - ம். சித்தியாரில். " போக்கொடுவரவுகால மொன்றினிற்புணர்வதின்றி, யாக்கவேறொருவரின்றி யநாதியாயணுக்களாகி, நீக்கிடாவினையிற்கூடி நிலமுதலாகநிடி, யூக்கமாருலகமென்று முள்ளதென்றுரைக்கலாமே". எ - து. கண்டுகொள்க. அதனை முன்னைவினைப்பான்மையென்ப வொன்று மறுத்ததற்கு அடுத்தவினையுளதாகி லிறையேனென்று மீளவு மவன்சொன்னதற்கு. பி - ம். சித்தியாரில். " செயல்களேபலத்தைச்செய்யுந்தெய்வம்வேண்டாவிங்கென்னின், முயலுமிச்செயல்களிங்கே முழுவதுமழியுமெங்கே, பயனளிப்பவ

ணழிந்தே பலன்களைப்பண்ணுங்கெட்டே, வயலிடுந்தழையுந்தின்னு மருந்தும்பின்பலிக்குமாபோல்". எ - து. கண்டுகொள்க. இனி யசேதனமற்றவையாவிக் சமைத்ததாகும் என்று மறுத்ததற்கு எடுத்தவினை யுருவுறுவதுயிரோற்றனே யிருவினைக்குத்தக்கவுடலெய்துமென்று மீளவுமவன்சொன்னானென்பதற்கு. பி - ம். சித்தியாரில். " நித்தமாயெங்குமுண்டாய் நீடுயிரறிவுதானாய்ப், புத்திதானாதியாயகருவியின்புறத்ததாகிச், சுத்தமாயருவமாகித்தொல்லைவல்வினையின்றன்மைக், கொத்ததோருருவம்பற்றிப் புலன்வழியுணர்ந்துநிற்கும்". எ - து. கண்டுகொள்க. என்றிங்ஙனம்பட்டாசாரியன் சொன்னதை சடத்திரளுங் கத்தாவா யறிவொன்றில்லாத் தன்மையனுங்கூட வொருசங்கையின்றே என்றவனை மறுத்ததற்கு. பி - ம். சித்தியாரில். " உலகுடல்கரணங்கால முறும்பலநியதிசெய்தி, பலவிவைகொண்டுகன்மம் பண்ணுவதுண்பதானா, னிலவிடாவிவைதாஞ்சென்று நினைந்துயிர்நிறுத்திக்கொள்ளா, வலகிலாவறிவனானை யணைத்திடுமருளினாலே". எ - து. கண்டுகொள்க. ஆனபடியினாலே சிவன் ஆன்மாக்கள்செய்த கன்மங்களை யறிந்து அதற்கதற்கேற்ற சரீரங்களைக்கூட்டிப் புசிப்பிக்கையாலே பக்ஷபாதியல்ல நடுவனென்பதற்கு. பி - ம். இருபாவிருபஃதில். " வாக்குமனமும்போக்குளதனுவுஞ் - சொல்லுநினைவுஞ் செய்யுஞ்செயலு-நல்லவுந்தீயவு மெல்லாமறிந்து-முறைபிறழாமற் குறைவுநிறைவின்றாய்க்- காலமுந்தேசமு மாலறவகுத்து- நடுவுநின்றருத்தலி னடுவனாகுதியே". எ - து. கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது பிரபஞ்ச நித்தியமாயிருப்பதொன்றென்று மதுதானேகாரியப்படுமதொழிந்து கத்தாவேண்டுவதில்லையென்று மான்மாத் தானேசெய்தகன்மத்துக்கீடான சரீரத்தைத் தானேயெடுத்துக்கொள்ளுமென்றுஞ் சொன்

ன பட்டாசாரியனைமறுத்துக் கன்மமுஞ் சரீரமும் ஜடமான படியாலு மான்மா தனக்கென்னவோரறிவில்லாதபடியாலு மிவையிற்றைக்கூட்டிக் காரியப்படுத்துகிறது சிவனேயென் னுமுறைமையை யறிவித்தது. (௧௨)

அப்படியே கன்மத்துக்கீடாக ஆன்மாக்களுக்குக் கத்தா மாயாசரீரங்களைக்கூட்டிப் புசிப்பிக்கு மவதாரத்துக் கன் மமுண்டாயே மாயாசரீரமுண்டானதோ மாயாசரீரமுண் டாயே கன்மமுண்டானதோ வென்றுவினவ மேலருளிச்செ ய்வா னெடுத்துக்கொண்டருளியது.

அல்லன்மிகவுயிர்க்கிவைதானணைத்தீச னருவினை களருந்துதற்கோவினையோவன்றிச், சொல்லிவருமாயை யோவணுவைமுந்தச் சூழ்ந்ததெனுமுறைமுதலோர்துட க்கிலார்பா, லொல்லைவருமெனினுளதாமுயிருண்டாவே யுளதுமலமலமுளதாயொழிந்தவெல்லா, நெல்லின்மு ளைதவிடுமிபோலநாதியாக நிறுத்திடுவரிதுசைவர்நிகழ்த் துமாறே. (௧௩)

சாலியின்முளையுந் தவிடுமுமியும்
போலமும்மலமும் புராதனமென்றது.

வி - ம். அல்லன்மிக வுயிர்க்கிவைதானணைத்தீச னரு வினைகளருந்துதற்கோ. எ - து. துக்கமிகவுண்டாக வான்மா க்களுக் கிந்தவுடம்புகளைத் தம்பிரானார்கூட்டினது அரூபமா யிருக்கிறகன்மங்களைப்புசித்தற்கோ. அப்படியாமானல்,—வி னையோவன்றிச் சொல்லிவருமாயையோ வணுவைமுந்தச்சூ ழ்ந்தது. எ - து. கன்மமோ அதுவொழிந்து சொல்லப்பட்டு வருகிற மாயையோ ஆன்மாவை முந்தவந்துபொருந்தின து,—எனுமுறை. எ - து. என்றுசொல்லுகிறது,— முதலோர்

துடக்கிலார்பா லொல்லைவருமெனி னுளதாம். எ - து. அநாதியே யொருதொந்தனையு மில்லாதாரிடத்திலே மாயாகன்மங்களுண்டானாலல்லவோ அதற் குத்தரமுளதாவது. இந்த மாயையுங்கன்மமுமொழிய வேறுள தேதென்னில்,— உயிருண்டாவேயுளதுமலம். எ - து. ஆன்மாவென்றுண்டு அன்றேயுள்ள தாணவமலமும். அப்படியானால் மாயையுங் கன்மமும் பின்புண்டானதோவென்னில்,— மலமுளதாயொழிந்தவெல்லாம். எ- து. அந்தவாணவமலமுண்டாகவே மற்றுள்ளமாயாமலமுங் கன்மமலமும்,— நெல்லின்முளைதவிடுமிபோ லநாதியாகநிறுத்திடுவர். எ - து. நெல்லிலே யுண்டாகப்பட்டமுளையுந்தவிடுமுமியு மொக்கவுண்டானாற்போல விவையு மநாதியென்று பெரியோர்கணிச்சயிப்பர்கள்,— இது சைவநிகழ்த்துமாறே. எ - து. இப்படிச் சிவாகமஞ்சொல்லும். எ - று.

வி - பு. அல்லன்மிக வுயிர்க்கிவைதா னணைத்ததீசனருவினைகளருந்துதற்கோ என்று நிகண்டாவாதி சொன்னனென்னவுமாம் அதுவெங்ஙனேயென்னில் கத்தா கிருபாமூர்த்தியாகையாலே யவனான்மாக்கள் துக்கங்களை யநுபவிக்கத்தக்கதாக வுடம்புகளைக்கூட்டான் ஆன்மா தானேசரீரத்தோடுங்கூடி யநுபவிக்குமென்பது கருத்தாகையாலும் அன்றியுங்கத்தா பொன்னெயில்வட்டத்திலே பிரபஞ்சந் தோய்வற்றிருப்பானென்கையாலுமெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில் "அந்தவாய்மொழியி னுலவன்சரண மாதியோகமுதலானநூ, லிந்தமாநிலமயங்கிடாதவகை யிங்கியம்பினனிதன்பொருள், வந்தகாலமுயிர் கன்மகன்மியற மற்றும் விண்மருவு புற்கலம், பந்தம்வீடிஞ்ஞே டநாதியாயிவை படைப்பதின்றியுள பத்துமே." எ-ம். "கருவிகண்படுதுடக்கொழிந்துவரு காலமூன்றுநிகழ்காரியம், பெருகநின்றெருகணத்தி

லேயுணர் பெருந்தவக்கடவுள்பீடினூன், மருவநின்றுவழிபட்டவர்க்கு மலவுற்றவர்க்கு மனமொத்திடுங், குரிசிலெங்களிறையென்று பின்னுநிகழ் குற்றமின்மையது கூறுவான்" இது கத்தா விகாரமற்றிருப்பானென் றவன்சொன்னனென்பதற்குக்கண்டுகொள்க. இனியுயிருண்டாவே யுளதுமலம் எ-து. ஈஸ்வரவைக்கியவாதியைநோக்கிச் சொன்னதெனவுமாமெனவறிக. அதற்குவழியேதென்னில் ஆணவமலமென்பதொன்றில்லை மாயையுங் கன்மமுமேயுள்ளது என்ப தவன்கருத்தாகையா லப்படிச்சொன்னதெனவறிக. இதற்கு. பி-ம். சங்கற்பநிராகரணத்தில் "மாயை - யுருவிருவினையால் வருமிருவினையு- முருவாலன்றிமருவாதிவற்றின்- முந்தியதேதோ வந்தணைவதற்கோ-ரேதுவேண்டும்" என்றவன் வினவியதற் குத்தரமாக ஆணவமலமுண்டென்று நாட்டுதற்கு "மூலமலத்தாற் சாலுமாயை - கருமத்தளவிற் றருமுருவிறைவன்" என்று மவனைநோக்கிக் கூறியது கண்டுகொள்க. இனி நெல்லின்முளை தவிடுமிபோல் என்றுபமானங்கூறியவகையேதென்னில் முளை கன்மத்துக் குவமையெனவறிக. தவிடு ஆணவமலத்துக் குவமையெனவறிக. உமிமாயைக் குவமையெனவறிக. அரிசி யான்மாவுக் குவமையெனவறிக. என்றிங்ஙனங் கூறப்பட்ட வுபமானத்துக்கு. பி-ம். திருமந்திரத்தில் "ஆணவமாயையுங் கன்மமுமாமலங், காணமுளையுந் தவிடுமியான்மாவுந், தாணுவொவ்வாமலே தண்டுலமாய்நிற்கும், பேணுவாய்மற்றுநின் பாசம்பிரித்தே" எ - ம். வீட்டுநெறிப்பாலினும் "ஆணவம்பிண்டி யருமாயைதானுமி, காமியமூக்கென்று காண்" எ-ம். கண்டுகொள்க. அன்றியும் நெல்லின்வருதவிடுமிபோலென்று பாடமோதுவாருமுளர். அப்படிப்பாடமானல் நெல்லிலேவருகிற முளையென்று பொருளுரைத்துக்கொள்க.

இதனாற்சொல்லியது கத்தா வான்மாக்கள் கன்மந்தொலையவேண்டிச் சரீரங்களைக்கூட்டிப் புசிப்பிப்பனென்றும் அப்படிப் புசிப்பிக்குமிடத்து மாயையோகன்மமோ முந்தக்கூடினதென்றுகேட்க ஆன்மாவுள்ளவன்றே யாணவமலமுண்டென்றும் ஆணவமலமுள்ளவன்றே மாயாகன்மங்களு மநாதியென்றும் வருமுறைமையை நெல்லிலே முளையுந்தவிடுமுமியும் அநாதியானாற்போல விருக்குமென்றறிவித்தது. (கரு)

இங்ஙனஞ் சொல்லிவந்த வசுத்த மாயாகாரணத்தினின்றுண்டாக்கப்பட்ட காரியமாயுள்ள தத்துவங்களின் றோற்றமருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

அருத்திமிகுங்கலைகாலநியதியுடன்வித்தை யராக
மிவையனந்தரான்மாயைதனிலாகு, முருத்திரராற்கலைய
தனிற்பிரகிருதிகுணங்க ளுளவாகுமாங்காரம்புந்திதனி
லுதிக்கும், தெரித்தவிதுதிரிவிதமாந்தைசதவைகாரி திக
ழ்தருபூதாதியெனத்திருந்தியசாத்துவிதம், விரித்தகுண
மனம்புத்தியிந்திரியமென்று விளம்பியசோத்திராதிமுத
ல்விளங்கியிடும்விரிந்தே. (கச)

கன்றியமாயையிற் கலைமுதலாக
வொன்றுதத்துவம்பதி னைந்துற்பவித்தது.

வி - ம். அருத்திமிகுங்கலைகால நியதியுடன் வித்தையராக மிவை யனந்தரான் மாயைதனிலாகும். அநுவயம். மாயைதனிலனந்தரா லருத்திமிகுங் கலைகால நியதியுடன்வித்தை யராகமிவையாகும். எ - து. அதோமாயையிலேநின்றும் அனந்ததேவநாயனா ரருளினாலே புசிப்பைமிகவுண்டாக்குங் கலையுங்காலமு நியதியோடே வித்தையும் அராகமுந் தோன்றும். அருத்திமிகு மென்பதற்கு ஆசைமிகவுண்டா

க்குமென்னவு மாமெனவறிக.— உருத்திரராற் கலையதனிற் பிரகிருதிகுணங்களுளவாகும். எ - து. உருத்திரதேவநாயனா ரருளினாலே முற்கூறியகலையிலே மூலப்பிரகிருதி குணசொரூபங்களாகத் தோன்றும். குணசொரூபங்களாவன சாத்துவிதகுணமென்று மிராசதகுணமென்றுந் தாமதகுணமென்றும் பெயராய் அந்தக்குணங்க ளேற்றக்குறைவின்றித் தம்மிலொத்து நின்றவிடஞ் சித்தமென்றும் ஒரு குணமேறினவிடம் புத்தியென்றும் வருமெனவறிக. ஆகையால் பிரகிருதிதத்துவந்தானே சித்தமும் புத்தியுமாய் நிற்குமெனவறிக. இதனை மேல்நுட்பத்தில் காட்டுகிற உதாரணத்திலே கண்டுகொள்க.—ஆங்காரம் புந்திதனிலுதிக்கும். எ-து. அகங்காரதத்துவமு முற்கூறிய புத்திதத்துவத்திலே தோன்றும். என்றிங்ஙனங்கூறப்பட்ட முன்னர்ப்பதத்திலே புத்திக்குத்தோற்றஞ் சொல்லாமலிருக்கவு மிந்தப்பதத்திலே யாங்காரம் புத்தியிலேதோன்றுமென்பதுகொண்டே பிரகிருதிதானே குணசொரூபங்களாய் சித்தமும்புத்தியுமாய் நிற்குமென்பதை யநுபவத்தாற் கண்டுகொள்க.—தெரித்தவிதுதிரிவிதம். எ-து. இங்ஙனஞ்சொல்லப்பட்டவாங்கார மூன்றுவகையாயிருக்கும். அஃதெங்ஙனேயென்னில்.—தைசதவைகாரி திகழ்தருபூதாதியென. அநுவயம், திகழ்தருதைசதவைகாரி பூதாதி. எ - து. விளக்கத்தையுடைய தைசதவாங்காரமென்றும் வைகாரியங்காரமென்றும் பூதாதியாங்காரமென்றும் பொருளுடைத்தாம். இவையிற்றுள் தைசதம் அறிவென்றறிக. வைகாரி தொழிலெனவறிக. பூதாதியுருவமெனவறிக.—திருந்திய சாத்துவிதம் விரித்தகுண மனம்புத்தி யிந்திரியமென்று விளம்பிய சோத்திராதிமுதல் விளங்கியிடும் விரிந்தே. அநுவயம். திருந்திய சாத்துவிதம் விரித்தகுணமுதல் விளங்கியிடு மனம் புத்தி யிந்திரியமென்று விளம்பிய சோத்

திராதி விரிந்தே. எ-து. நன்மைபொருந்தினவறிவாகிய சாத்துவிதகுணம் விரிந்துபொருந்தின முந்தக்கூறிய தைசதவாங்காரத்திலே மனதும் ஞானேந்திரியமாகிய சோத்திராதிகளைந்தும் பிரகாசித்து விரிந்துதோன்றும். எ - று. முதல்விளங்கியிடுமென்றதை முந்தக்கூறின தைசதவாங்காரமென்றதெனவறிக. அஃதாவது ஆங்காரந் தோன்றினவொழுங்கு தைசத வைகரி பூதாதியென்றமையால் தைசதவாங்காரமுந்தக்கூறுகையா லப்படிச் சொன்னதெனவறிக.

று - ம். அருத்திமிகுங் கலைகாலம். எ - கு. புசிப்புமிகவுண்டாக்குங் கலாதிகளென்று பொருட்கூறியதேதென்னில் ஆன்மாக்கள் புசிப்புக்கீடாக கலாதிகள்தோன்றுகையாலப்படிச் சொன்னதெனவறிக. அன்றியும் அருத்திமிகுமென்றது ஆசை மிகவுண்டாக்குமென்றதேதென்னில் இங்ஙனஞ் சொல்லப்பட்ட தத்துவங்களி லராகத்துவங் கூடத்தோன்றுகையால் அராகமிச்சையை யெழுப்புகையால் ஆசையை மிகவுமுண்டாக்கு மாமெனவறிக. இனியுருத்திராற்கலையதனிற் பிரகிருதிகுணங்க ளுளவாகும். எ-கு. கலையிலேபிரகிருதிகுணங்கள் தோன்றுமென்று சொல்லியிருக்க வந்தக்குணங்கள் தம்மிலொத்தவிடஞ் சித்தமென்றும் ஒருகுணமேறினவிடம் புத்தியென்றும் விதப்பாகப் பொருட்படுத்துகைக்கு வழியேதென்னில் பிரகிருதிதத்துவ முபாதானமாக வான்மதத்துவ மிருபத்துநாலுந் தோன்றுமென்று முன்னூல்களிற் சொல்லியிருக்கையா லதிலே சித்தமும் புத்தியுமொழிய மற்றுள்ள தத்துவங்களின் தோற்ற மேற்சொல்லுகையாலே அந்தச்சித்தமும் புத்தியு மிந்தக் குணபேதத்தி லடங்கிவருகையாலே இந்நூற்செய்தருளினவ ரதனையடக்குவாய்செய் தருளிச்செய்ததை விரித்துப் பொருட்படுத்தின தெனவறிக. அப்படிப் பிரகிருதிதத்துவங் குணசொருபங்களாகத்தோன்ற வ

ந்தக்குணங்கள் தம்மிலொத்தவிடஞ் சித்தமென்றும் அதிலே யொருகுண மேறினவிடம் புத்தியென்றும் பொருட்கூறியதற்கு. பி - ம். தத்துவவிளக்கத்தில். "கூறியமூலப்பகுதியிற் றோன்றுங் குணமவைதான், றேறியசாத்திக ராசததாமதமென்றுசெப்பு, மூறியமுக்குணமொத்தவைமூன்று முயர்விழிவற், றேறியக்காற்புத்தி தத்துவமாகுமென் றெண்ணுவரே." எ - ம். சித்தியாரிலும். "சித்தமாமவ்வியத்தஞ் சிந்தனையதுவுஞ்செய்யும்." எ - ம். வருமேதுக்களைக் கண்டுகொள்க. இனிசர்வமுஞ் சிவசத்திகளாலே தோன்றுமென்று நூல்களிற் சொல்லியிருக்க விந்தத்தத்துவங்கள் அனந்ததேவ நாயனாராலும் உருத்திரதேவ நாயனாராலுந் தோன்றுமென்றதற்கு வழியேதென்னில் அஃதாவது விஞ்ஞானகலரில் அபக்குவரான அஷ்டவித்தேசுரராகிய அனந்தன் சூக்குமன் சிவோத்தமன் ஏகநேத்திரன் ஏகவுருத்திரன் திரிமூர்த்தி சிகண்டன் சிகண்டி என்னப்பட்ட வெண்மருக்குஞ் சிவனாசாரிய கிருத்தியமுமுண்டாக்கி யவர்களுக்குப் பிரபஞ்சநடத்துமதிகாரமுங் கொடுத்தருளுகையி லவர்களி லனந்ததேவ நாயனாருக்கு முருத்திரதேவநாயனாருக்கு மந்தவதிகாரங் கொடுத்ததெனவறிக. என்றிங்ஙனஞ் சொல்லப்பட்ட வெட்டுப்பேரும் விஞ்ஞானகலரிலபக்குவரென்பதற்கும் அவர்கள் சிவனுடையவாக்கினைவழியே நடத்துமதிகாரமு முடையவர்களென்பதற்கும். பி - ம். தத்துவவிளக்கத்தில். "அறிந்தவர்தீர்ந்த துகளினர்தீராத் துகளர்முன்னர், செறிந்தவர்விஞ்ஞைக்கு நாயகரெண்மரெனச்சிறந்தோர், பிறிந்தவர்மந்திர ராமெழுகோடியர் பேரொலியால், மறிந்ததிரைப்புனல் வெங்குருவாணர் வகுத்தனரே." என்பதனுள் விஞ்ஞைக்குநாயக ரெண்மரென்பதனை யிதற்குக்கண்டுகொள்க. இனியாங்காரம் புந்திதனிலுதிக்குந் தெரித்தவி

துதிரிவிதமாம். எ - று. புந்தியிலே யாங்காரமொன்றாய்த் தோன்றி மூவகையாங்காரமாக விரிந்ததற்கு வழியேதென்னில் இந்த வாங்காரங்காரியப்படுத்துமவதரத்து முற்கூறிய குணங்களோடுங்கூடிக் காரியப்படவேண்டுகையா லந்தக்குணங்களு மூவகையாகையாலே யிதனையு மப்படிமூவகையாகச் சொன்னதெனவறிக. அதற்குவழியேதென்னில் சாத்துவிதகுண மறிவும் இராசதகுணம் விகாரமும் தாமதகுணம் மயக்கமுமாகையாலும் தைசதவாங்காரம் விளக்கமும் வைகரியாங்காரந்தொழிலும் பூதாதியாங்கார முருவமு மாகையாலு மந்தந்தவகைகளிலே கூடிநின்று காரியப்பட்டதெனவறிக. இவைதம்மிற்கூடிக் காரியப்படுந் தோற்றங்களினுங் கண்டுகொள்க. அஃதாவது அறிவாகிய சாத்துவிதகுணமும் விளக்கமாயுள்ள தைசதவாங்காரமுங்கூடி அறிவாயுள்ளமனத்தையு ஞானேந்திரியமாகிய சோத்திராதிகளைந்தையுந் தோற்றுவிக்கையாலு மேல்வருகிறசெய்யுளிலே விகாரமாயுள்ள ராசதகுணமுந் தொழிலாயுள்ள வைகாரியாங்காரமுங் கூடித் தொழிலாயுள்ள கன்மேந்திரியமாகிய வாக்காதிகளைந்துந் தோன்றுகையாலு மயக்கமாகிய தாமதகுணமும் உருவமாகிய பூதாதியாங்காரமுங்கூடிப் பூதங்களுக்குக் காரணமாகிய சத்தாதிகள் தோன்றுகையாலு மப்படிச்சொன்னதெனவறிக. என்றிங்ஙன மறிவுந் தொழிலு மயக்கமுமுண்டாகையால் சாத்துவிதகுணமுந் தைசதவாங்காரமுமறிவைப்பற்றி நின்றதெனவறிக. இராசத குணமும் வைகரி யாங்காரமுந் தொழிலைப்பற்றி நின்றதெனவறிக. தாமதகுணமும் பூதாதியாங்காரமும் மயக்கமாகிய வுருவத்தைப்பற்றி நின்றதெனவறிக. ஞானேந்திரியமாகிய சோத்திராதிகள் அறிவைப்பற்றி நிற்கையாவது சோத்திராதிகளாயுள்ள செவிமெய் கண் நா நாசியென்னப்பட்ட விந்திரியமைந்துஞ் சத்த

பரிசரூபரசகந்தங்களைக் கொள்ளுமிடத்துச் சரீரந்தொழிற் பட்டுஜீவியாமல் அறிவாய் நிகழுகையா லப்படிச்சொன்ன தெனவறிக. இனி கன்மேந்திரியமான வாக்காதிகள் தொழிற்படுகையாவது அவைகாரியப்படுமிடத்துச் சரீரந்தொழிற் பட்டுநின்று காரியப்படுகையா லப்படிச்சொன்னதெனவறிக. இனியிங்ஙனஞ்சொல்லப்பட்ட தத்துவங்கள் மாயையிலேதோன்றுமிடத்துச் சித்தியாரில்காலமுதலாகத் தோன்றுமென்றுசொல்லியிருக்க விந்நூலிற் கலைமுதலாகத் தோற்றஞ்சொன்னதேதென்னில் சித்தியார்செய்தருளினவர் பிரபஞ்சத்தோற்றஞ் சொல்லுகையால் காலமுண்டாகவே பிரபஞ்சந்தோன்றுகையாலே காலமுதலாகச் சொன்னதெனவறிக. இந்நூல்செய்தருளினவர் ஆன்மாக்களுக்கு உணர்த்துமுறையைச்சொல்லுகையாலே யுணர்த்துகைக்குக் கலை முந்தியெழுப்பவேண்டுகையால் கலையைமுந்திக்கூறிய தெனவறிக. அப்படி வேற்றுமைகூறியதேதென்னி லிது சார்புநூலாகையால்“ திரிபுவேறுடையது புடைநூலாகும்”. என்னும் விதியைப்பற்றி யெனவறிக. அன்றியும் இந்தத்தத்துவத் தோற்றம்அனந்ததேவ நாயனாரொருவர் நடத்துகையா லப்படி முன்பின்கூறியதெனவுமா மெனவறிக.

இதனாற்சொல்லியது இந்த வசுத்தமாயையில்நின்று தோன்றப்பட்ட தத்துவங்களி லிந்தச்செய்யுளில் காலமு நியதியுங் கலையும் வித்தையு மராகமும் ஆகவைந்தும் பிரகிருதிகுணங்களாகிய அவ்வியத்தமுஞ் சித்தமும் புத்தியும் ஆக மூன்றும் புத்தியிலே ஆங்காரமும் ஆங்காரத்திலே மனதும் ஞானேந்திரியமாகிய சோத்திராதிகளைந்தும் ஆகவேமுங்கூடி ஆகத்தத்துவம் பதினைந்துந் தோன்றுமுறைமையை யறிவித்தது. (க௪)

இவ்வணம் பதினைந்துதத்துவத்திற்குத் தோற்றமருளிச் செய்து மேற்பதினைந்து தத்துவத்திற்குத் தோற்றமருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

மன்னியகன்மேந்திரியமானவிராசதஞ்சேர் வாக்காதிவைகாரிமருவிவருஞ்சத்தந், தன்னைமுதலாகியதாமதமிகுமாத்திரைபின் றருமிதனின்வானனிலமனல்புனல்மண்சத்த, முன்னதனில்வெளியாதியொன்றொன்றாகு முறையிலுறுமிருமையயன்முடிவாமுன்னே, யுன்னுசதாசிவராதியதிபதிகளொடுக்க முதித்தவடைவெனவுணாப்பருணர்ந்துளோரே. (கரு)

பின்னுமூவைந்து பிறக்குநெறியுஞ்
சொன்னவாறொடுக்கமுந் தோற்றமுஞ்சொன்னது.

வி - ம். மன்னிய கன்மேந்திரியமான விராசதஞ்சேர் வாக்காதி வைகாரிமருவிவரும். அநுவயம். மன்னியகன்மேந்திரியமான வாக்காதியிராசதஞ்சேர் வைகாரிமருவிவரும். எ - து. நிலைபெற்றுவருகிற கன்மேந்திரியமாகிய வாக்காதிகளாயுள்ளவை யைந்து மிராசதகுணத்தைப்பொருந்தி யிருக்கிற வைகரியாங்காரத்திலே பொருந்தித் தோன்றும். பொருந்தித்தோன்றுமென்றது வைகரிதொழிலாகையாலுங் கன்மேந்திரியந் தொழிற்பட்டுவருகையாலு மிந்தக்கன்மேந்திரியம் வைகரியாங்காரத்திற்றோற்றமாகையாலு மப்படிச்சொன்னதெனவறிக.—சத்தந்தன்னைமுதலாகிய தாமதமிகுமாத்திரைபின்றரும். அநுவயம். சத்தந்தன்னைமுதலாகிய மாத்திரைதாமதமிகுபின்றரும். எ - து. சத்தமென்கின்ற விடயத்தை முதலாகவுடைய தன்மாத்திரைகளைந்துந் தாமதகுணத்தை மிகுத்திருக்கிற பிற்பட்ட பூதாதியாங்காரத்திலே

தோன்றும். பின்றருமென்றதைப் பிற்பட்டவாங்காரமெனவறிக. அஃதாவது, முன்னர்ச்செய்யு ளாங்காரத்தினது தோற்றஞ்சொல்லுமிடத்துத் தைசதவைகாரிதிகழ்தரு பூதாதியென்று பூதாதியாங்காரத்தைப் பிற்படக்கூறுகையா லப்படிச்சொன்னதெனவறிக. அன்றியும் பூதாதியாங்காரத்திலே தன்மாத்திரைகளாகிய சத்தாதிகளைந்துந் தோன்றுமென்றதும் பூதாதியாங்காரமுருவத்தைப்பற்றி நிற்கையாலுஞ் சத்தாதிகள் பூதரூபங்கள் தோன்றுகைக்குக் காரணமாகையாலுமெனவறிக.—இதனில். எ-து. இங்ஙன முற்பதத்திலேசொல்லப்பட்ட தன்மாத்திரைகளாகிய சத்தாதிகளைந்தினும்,— வானனிலமனல்புனல்மண். எ-து. ஆகாயம் வாயு தேயு அப்பு பிருதிவி என்னப்பட்ட பூதங்களைந்துந் தோன்றுமிடத்து,— சத்தமுன்னதனில். எ-து. சத்தமுதலாயிருக்கப்பட்ட முற்கூறிய தன்மாத்திரைகளைந்தினும்,— வெளியாதி. எ-து. ஆகாயமாதியாக,— ஒன்றொன்றுகும். எ-து. ஒன்றிலே யொன்றுகவுண்டாம். அஃதாவது, சத்தத்திலேயாகாயந் தோன்றும் பரிசத்திலேவாயுதோன்றும் உருபத்திலே தேயுதோன்றும் இரசத்திலே அப்புதோன்றும் கந்தத்திலே பிருதிவிதோன்றும் என்றதெனவறிக.—முறையிலுறுமிருமையயன்முடிவாமுன்னே யுன்னுசதாசிவராதியதிபதிகள். அநுவயம். முன்னே யுன்னுசதாசிவராதியிருமையயன் முடிவாயதிபதிகள் முறையிலுறும். எ-து. அநாதியேயெண்ணப்பட்ட சதாசிவமுதல் பெரியபிரமாவீறுக அதிதேவதைகளைவரு மந்தந்தவொழுங்கிலே பொருந்துவர்கள். அந்தந்தவொழுங்காவது ஆகாசத்துக்குச் சதாசிவமும் வாயுவுக்குமயேசுரமும் தேயுவுக்கு வுருத்திரனும் அப்புவுக்குவிஷ்ணுவும் பிருதிவிக்கு பிரமாவுமெனவறிக.—ஒடுக்கமுதித்த வடைவெனவுணாப்பருணர்ந்துளோரே. எ-து. இங்ஙனந் தோற்றமாகச்

சொல்லிவந்த தத்துவங்களுக்குந் தத்துவகத்தாக்களுக்கும் ஒடுக்கமுந் தோன்றினவொழுங்கிலேயென்று சொல்லுவார்கள் அறிவாலுயர்ந்தபெரியோர்கள். எ – று.

ற – ம். மன்னியகன்மேந்திரிய மென்றதை நிலைபெற்ற கன்மேந்திரியமென்று பொருட்கூறியதேதென்னில் ஆன்மாவொருசரீரசம்பந்தியாய் நிற்குநாளெல்லா மிந்திரியங்கள் விடப்படாம னிற்கையாலே யப்படிச்சொன்னதெனவறிக. இந்தவாக்காதிகளைக் கன்மேந்திரியமென்ற தேதென்னில் கன்மந் தொழிலென்னும்பொருளைப்பற்றித் தொழிற்பட்டு ஜீவிக்கையாலே யப்படிச்சொன்னதெனவறிக. தொழிற்படுகையாவது வாயுங் காலுங் கையும் மலம்பிரிக்கிறதுவாரமுஞ் சலம்பிரிக்கிறதுவாரமும் வசன கமன தான–விசர்க்கானந்த மென்னும் விடயங்களோடுங்கூடி ஜீவிக்குமிடத்துச்சரீரந்தொழிற்பட்டு ஜீவிக்கையாலே யப்படிச்சொன்னதெனவறிக. வாக்காதியைந்தினும் வாக்கென்ற விந்திரியத்தை வாயென்றதற்கு. பி – ம். "கைகாலவைதருவாயொடு பாயுருபத்தமென்றுங்கவையே." எ-ம். சித்தியாரில் "வாயாதிசோத்திராதி புறத்துவாழ்கருவியாகும்". எ-ம். வருமதுகண்டுகொள்க. இனி பிராசதஞ்சேர் வாக்காதிவைகாரிமருவிவரும். என்பதற்கும். சத்தந்தன்னை முதலாகிய தாமதமிகு மாத்திரைபின்றருமென்பதற்கும் நுட்பம் முன்னர்ச்செய்யுளில் வந்தவிதப்பிலே கண்டுகொள்க. அந்தத்தாமதகுணத்திற் றோன்றப்பட்ட சத்தாதிகளைந்தையுந் தன்மாத்திரைகளென்று பெயர்கூறியதேதென்னில் அந்தந்த விந்திரியங்களுக்குத்தக்கதாக நின்று காரியப்படுகையாலு மப்படிக் காரியப்படுமிடத்துத்தத்தங்குணங்களுக் கேற்றக்குறைவின்றிநிற்கையாலு மப்படிச் சொன்னதெனவறிக. இனி சத்தமுன்னதனில் வெளியாதியொன்றென்றாகும். எ-கு. சத்தாதிகளைந்தினும் பூதா

திகளைந்துந் தோன்றுமென்பதன்றியே சத்தத்திலே பரிசமும் பரிசத்திலேயுருவமும் உருவத்திலேயிரதமும் இரதத்திலே கந்தமுமாக வொன்றிலே யொன்றாகத்தோன்றுமென்றும் அன்றியும் ஆகாயத்திலே வாயுவும் வாயுவிலே தேயுவும் தேயுவிலேயப்புவும் அப்புவிலே பிருதிவியுமாக வொன்றிலே யொன்றாகத் தோன்றுமென்றும் பொருளுரைப்பாருமுளர். அன்றியும் பூதங்களைந்துக்கு மொவ்வொருகுணங்களேறியிருக்குமென்பாருமுளர். ஒவ்வொருகுண மேற்றமாவது ஆகாசத்துக்குச்சத்தமும், வாயுவுக்குச் சத்தமும் பரிசமும், தேயுவுக்குச் சத்தமும் பரிசமும் ரூபமும், அப்புவுக்குச்சத்தமும் பரிசமும் ரூபமும் இரதமும், பிருதிவிக்குச் சத்தமும் பரிசமும் ரூபமும் இரதமுங் கந்தமு மெனவறிக. ஆக விங்ஙனங்கூறப்பட்ட மூவகையாயுள்ளபொருளு மப்படியுண்டாஞலுஞ் சத்தமுன்னதனில் வெளியாதி யொன்றென்றாகும். எ - கு. சத்தாதிகளைந்தினும் வெளியாதி யைந்துபூதங்களுந் தோன்றுமென்பதொழிய வந்தப்பொருள்க ளிந்தச்சத்தத்துக் ககப்படாதெனவறிக. அப்படிச்சத்தாதிகளைந்தினும் பூதங்களைந்துந் தோன்றுமென்பதொழிய மற்றுப் பொருள்க ளிந்தச்செய்யுளுக் ககப்படாதென்பதற்கு இந்நூலைப் பின்சென்ற நூலாகிய திருநெறிவிளக்கத்தில் இதற் கெதிரடைவிருத்தமாகிய. "எண்ணியகன்மேந்திரிய மென்றுசொலப்பட்ட விராசதமார்வாக்காதி யெய்திடும்வைகரியி, னண்ணியிடும்பூதாதி தாமதன்மாத்திரையா னவிலுறுசத்தாதியினைநல்கியிடுஞ்சத்தக், கண்ணதனில்வெளிபரிசங் காலுருவந் தன்னிற் கனலிரதத்தேபுனனற் கந்தத்தேதரையா, மண்ணிறுதிகலைமுதலா வந்தவகைமடங்கு மாலயனுதிகள்வடிவும்வந்தமைபோலொடுங்கும்." இந்தச்செய்யுளில் சத்தாதிகளைந்தினும் வெளியாதியாகிய பூதமைந்துந் தோன்றுமென்றப

டியா லதற்கு மிப்படிக்கண்டுகொள்க. அன்றியுந் தத்துவ விளக்கத்தினும். "கொள்ளு மத்தத்துவம்." என்ற செய்யுளின்பிற்பதத்தில். "பின், றெள்ளியதன்மாத்திரையின் வருஞ்சேர்ந்ததன்மாத்திரையி, ஞெள்ளியபூதங்க ளைந்துக்குமாமென்ப ருற்பவமே." என்பதனாலுஞ் சத்தாதிகளைந்தினும் வெளியாதியாயுள்ள பூதங்களைந்துந் தோன்றுமென்பதே யந்தப்பதத்துக்குப் பொருளெனவறிக. இந்த மாயாகாரியமான தத்துவமுப்பத்தொன்றென்று நூல்களிற் சொல்லியிருக்க முன்னர்ச்செய்யுளிற் றோன்றுந்தத்துவம் பதினைந்து மிந்தச் செய்யுளிற்றோன்றுந் தத்துவம் பதினைந்தும் ஆகத்தத்துவ முப்பதொழியப் புருடதத்துவ மொன்றுக்குந் தோற்றஞ் சொல்லாததேதென்னில் அது தத்துவசமுகத்திற் றோற்றமாகையால் "ஐவகையாலுறுபயன்க ளுகரவருங்கால மதுபுருடதத்துவமென் றறைந்திடுவரறிந்தோர்" என்று காரியப்படுமவதரத்துத் தோற்றமாகையா லிவ்விடத்துச்சொன்னதில்லையெனவறிக. அன்றியு மொடுக்கஞ்சொல்லுமவதரத்தும் "தத்துவமெண்மூன்றுஞ்சென் றுன்மதத்துவத்தொடுங்கும் வித்தையிலொடுங்குமாறும்" என்றமையால் வித்தையாதத்துவமேழாயிருக்கவும் வித்தையிலொடுங்குமாறு மென்றது கொண்டே புருடதத்துவத்துக் கொடுக்கஞ் சொன்னதில்லையெனவறிக.

இதனாற்சொல்லியது இராசதகுணத்தைப் பொருந்தின வைகரியாங்காரத்திலே கன்மேந்திரியங்களாகிய வாக்காதிகளைந்துந் தோன்றுமென்றும் தாமதகுணத்தைப் பொருந்தின பூதாதியாங்காரத்திலே தன்மாத்திரைகளாகிய சத்தாதிகளைந்துந் தோன்றுமென்றும் அந்தச்சத்தாதிகளைந்தினும் பூதங்களைந்துந் தோன்றுமென்றும் அந்தப்பூதங்களுக்கு அதிதேவதைகள் சதாசிவமுதல் பிரமாவீறாகிய தெய்வங்களென்

றும் இவையிற்றுக்கொடுக்கமுந் தோன்றினவடைவிலே யென்றும் வருமுறைமையை யறிவித்தது. (கரு)

உருவாதியென்ற விருத்தமுதலிந்தவிருத்தமுடிவாகிய செய்யுளாறும் அசுத்தமாயாவிலக்கணம்.

இங்ஙனஞ் சொல்லிவந்த மாயையாலுண்டான சரீரத்தை யான்மாக்கள்பொருந்திக் கன்மத்தைப் புசிக்கையினாலே யந்தக்கன்மத்தினியல்பு மேற்செய்யுணன்கினாலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

நண்ணியிடுமுருவதனுக்கேதுவாகி நானாபோகங்களாய்நாசோற்பத்தி, பண்ணிவருமாதலாலநாதியாகிப் பலவாகியணுக்கடொறும்படர்வதாகி, யெண்ணிவருமனவாசகன்மத்தாலியற்று மியல்பினதாய்மதிகதமாயிருபயனும்பாவ, புண்ணியமாய்ப்புலர்காலமாயைமேவிப் பொருந்துமிதுகன்மமலம்புகலுமாறே. (கசு)

தீங்குநலனுஞ்செய்தவாறடையும்
பாங்குறுவினையைப்பாரித்துரைத்தது.

வி - ம். நண்ணியிடு முருவதனுக்கேதுவாகி. எ - து. ஆன்மாக்க ளெடுக்கப்பட்ட வுடம்புகளுக்கு முன்னிலைக்காரணமாய். அஃதாவது, ஆன்மாக்கள் யாதாமொருசரீரங்களை யெடுக்குமிடத்து முற்செய்த கன்மங்களுக்கேதுவாக வெடுக்கையினாலே யப்படிச்சொன்னதெனவறிக.—நானாபோகங்களாய். எ- து. பலவிதமான புசிப்புகளை யுண்டாக்குவதாய். பலவிதமாவது ஆன்மா விந்திரியங்களைக்கொண்டு விடயங்களைக் கொள்ளுமிடத் தொவ்வொரு விடயங்களிலே வெகுவிதமான கன்மங்களைப் புசிக்கையினாலே யப்படிச் சொன்னதெனவறிக.—நாசோற்பத்தி பண்ணிவரும். எ - து. ஜநநத்தையு

மரணத்தையு முண்டாக்கிவரும். அஃதாவது, ஆன்மாக்கள் கன்மத்துக்கீடாக வெடுத்தவுடலுக்கு நாசமு மேலெடுக்குமு டலுக்குற்பத்தியு முண்டாக்கி வருமென்ற தெனவறிக. அன்றியும் புசித்தகன்மத்துக்குநாசமு மேற்புசிக்குங்கன்மத்துக்குற்பத்தியு மாமெனவறிக.— ஆதலாலநாதியாகி. எ - து. ஆகவிங்ஙனம்வருகிற தநாதியேயுள்ளதாய். அநாதியென்றது ஆன்மாவுள்ளவன்றே யிந்தக் கன்மமுள்ளதென்ற தெனவறிக.—பலவாகி. எ - து. பலபேதங்களா யிருப்பதாய். பலபேதங்களாவன ஆன்மாக்கள் கன்மத்துக்கீடாக வெடுக்குமுடல்களுக்கந்தந்தவுடற்கேறும் வடிவு நிறம் சாதி ஒழுக்கம் நெறி உணவு சுகம் துக்கம் ஆயுள்என்றிங்ஙனம் பலவகையாகையாலே யப்படிச்சொன்னதென்வறிக.—அணுக்கடோறும் படர்வதாகி. எ - து. ஆன்மாக்கடோறுஞ் சென்று பொருந்துவதாய். அஃதாவது, ஆன்மாக்க ளெடுக்குமெடுக்கு மச்சுகடோறு மதற்கதற்கேற்ற புசிப்புகளைக்கொடுத்து நிற்கையாலே யப்படிச்சொன்னதெனவறிக.—எண்ணிவரு மனவாசகன்மத்தாலியற்று மியல்பினதாய். எ - து. நினைக்கப்பட்டுவருகிற மனதினாலும் வாக்கினாலுங் காயத்தினாலுஞ் செய்யப்பட்ட வியல்பினையுடையதாய். அவையாவன மனதினானினைக்கை வாக்கினாற்சொல்லுகை காயத்தினாற்செய்கை எனவறிக.—மதிகதமாய். எ - து. நிற்குங்காலம் புத்தியிலேநிற்பதாய். புத்தியிலேநிற்பதாவது யாதொன்றிலே புத்திநிச்சயிக்குமிடத்துக் கன்மத்துக்கீடாக நிச்சயிக்கையா லப்படிச்சொன்னதெனவறிக.—இருபயனும் பாவபுண்ணியமாய். எ - து. இருவகைப்பயனாகச் சொல்லப்பட்ட புண்ணியபாவங்களாய். இருவகைப்பட்ட பயனாவது ஹிதாஹிதங்களிலே விருப்பு வெறுப்புண்டாய் அதனாலே புண்ணியபாவங்கள் கட்டுப்பட்டு அதனாலே யின்பதுன்பங்களாகிய சுவர்க்கநரகங்களை யநு

பவிக்கையாலே யப்படிச்சொன்னதெனவறிக. இங்ஙனஞ்சிருஷ்டிகாலம்பிரபஞ்சங்காரியப்படுமெனவறிக.—புலர்காலே மாயைமேவிப் பொருந்தும். எ-து. சங்காரகால மாயாகாரணத்திலே சென்றுபொருந்தும். அஃதாவது, முற்கூறியபிரபஞ்சமு மதனோடுங்கூடிநிற்கு மான்மாக்களு மாயாகாரணத்திலே யொடுங்குகிற சங்காரகாலம் இந்தக்கன்மமு மந்தக்காரணமாயையிலே சென்று கூடுகையா லப்படிச்சொன்னதெனவறிக. அன்றியும் பொருந்துமென்ற பதத்துக்கு வேறு பொருட்கூறவேண்டுகி லந்தமாயாகாரணத்திலே யொடுங்கினவான்மாக்களையுங் கூடுமென்று பொருளுரைப்பினுமாம். அஃதெங்ஙனேயென்னில் இந்தக்கன்மங்காரியப்படுங்காலத்து அணுக்கடொறும்படர்வதாகி என்றமையா லொடுங்குங்காலத்து மொக்கவொடுங்குமென்னுங் கருத்தையும்பற்றி யப்படிச் சொன்னதெனவறிக.—இதுகன்மமலம் புகலுமாறே. எ - து. இங்ஙனஞ் சொல்லப்பட்டது கன்மமலத்தின்முறைமையாம். எ-று. இந்தப்பதத்துக்குப்புகலுமென்று முன்னே வைத்துப் பொருளுரைத்ததெனவறிக. அல்லதூஉம் இதுகன்மமலத்தைச்சொல்லும் வழியாமென்று பொருளுரைப்பினுமமையும்.

வி - பு. புலர்காலமென்றசொல் சிருஷ்டிகாலத்துக்கும்படுமென்று இச்செய்யுளைச் சிருஷ்டியொன்றையுநோக்கிச் சொன்னதென்பாருமுளர். அது பொருளல்லவெனவறிக. அதுவேனென்னில் புலர்காலென்றசொல் அழிதலாகையால்சங்காரமென்பதே பொருளெனவறிக. அன்றியும் யாதாமொன்றைச் சொல்லுமிடத்துத் தோற்றமு மொடுக்கமுஞ் சொல்லவேண்டுகையால் மற்றுள்ளபதமெல்லாஞ் சிருஷ்டியைச் சொல்லிப் புலர்காலே மாயைமேவி என்றபதத்தைச் சங்காரகால மாயாகாரணத்திலே கன்மங்கூடுமென்பதே பொருளே

ன்வறிக. அப்படிப் புலர்காலமென்பது சிருஷ்டிக்கும் படுமென்று பொருளுரைத்ததைப்பற்றி யென்னில் திருவாசகத்தில். "ஒண்ணித்திலநகையா யின்னம்புலர்ந்தின்றோ." எ-ம். "போனதிசைபகரா தின்னம்புலர்ந்தின்றோ." எ-ம். வருமேதுக்களைப்பற்றிப் புலர்காலஞ் சிருஷ்டிகாலமென்றதெனவறிக. அதுவும் புலர்தலுலர்தலாகையால் சங்காரகாலத்துக்குச் சொல்லப்படுமென்பதே பொருளெனவறிக. புலர்தல் சங்காரமென்பதற்கு. பி-ம். காளத்தியந்தாதியில். "அலரோனெடுமா லமரர்கோன்மற்றும், பலராய்ப்படைத்துங் காத்தாண்டும் - புலர்காலத், தொன்றாகிமீண்டும் பலவாகிநிற்கின்றான், குன்றாதசீர்கயிலைக்கோ." எ-து. கண்டுகொள்க. இதனுள் புலர்காலத்தொன்றாகி. எ-து. சங்காரகாலமென்பதற்குக் கண்டுகொள்க. ஆகையா லிங்ஙனம்புலர்காலமென்பது சங்காரகாலத்துக்குச் சொல்லுமதேபொருளெனவறிக. இச்செய்யுளில் புலர்காலமாயைமேவி என்பதைச் சங்காரகாலத்துக்காரணமாயையிலே கன்மங்கூடுமென்பதற்குச் சொல்லுமதே வழக்கெனவறிக. அதுவழக்கென்பதற்கு இந்நூலைப்பின்சென்ற நூலாகிய திருநெறிவிளக்கத்தினுமிச்செய்யுளுக் கெதிரடை விருத்தமாகிய. "தொல்குரம்பை காரணமாய்த் தொகையளவுபடாத துன்பமுடனின்பமாய்த்தோற்றமுடனீறு, மல்கியிடும்வழியதனு னித்தமாகி மன்னுயிர்கடொறுமருவிப்பின்னுமற்றுப், பல்விதமாயுரைநினைவு தொழிலாற்செய்யும் பண்பினதாய்ப் புத்தியினில்வந்தமையும் பான்மை, நல்வினைதீவினையாகிக் கடைநாண்மாயைநண்ணியிடு மிதுகன்மநாட்டிலன்றே." என்பதனுள் கடைநாளென்றது சங்காரகால மாகையால் இந்நூலில் நண்ணியிடுமுருவதனுக் கேதுவாகி என்றசெய்யுளுக்கு இந்தத்திருநெறிவிளக்கத்தின்செய்யுளைப் பதந்தோறும் அந்தந்தப்பதத்தையு

வமித்துக்கொண்டு புலர்காலை மாயைமேவி என்றதற்குக்க டைநாண்மாயை நண்ணியிடுமென்ற பதத்தைக் கண்டுகொள்க. ஆகையா லிச்செய்யுளில் புலர்காலமென்றது சங்கார காலமே பொருளென்பதை யநுபவத்தாற் கண்டுகொள்க. அப்படியானால் மாயையுங் கன்மமுங்கூடினால் ஆன்மாவுக்கு ஜீவிப்புண்டாமென்று நூல்களிலே சொல்லியிருக்க ஒருஜீவிப்புமற் றொடுங்கிக் கிடக்கிற சங்காரகால மாயையிலே கன்மமுங் கூடுமென்னலாமோ வென்னில் அப்படிஜீவிக்குமென்றதுஞ் சிருஷ்டிகாலங் காரியமாயையாகிய கலையாதிதத்துவங்களோடுங் கூடினவிடத்து ஜீவிப்புண்டாமென்கிற தொழியக் காரணமாயையோடுங் கூடினவிடத்து ஜீவிப்பில்லையெனவறிக. அதற்கநுபவமேதென்னில் ஒருவிதையிலே முளையுண்டானாலு மந்தவிதையைவிட்டு முளைதோன்று மவதரத்து ஜீவிப்புண்டாகுமதொழிந்து அவ்வளவு மந்தவிதைக்குள் முளையடங்கிக்கிடந்து ஜீவியாமற் கிடக்குமதுபோல வெனவறிக. அப்படியானா லிந்தக் கன்மமு மாயையைப்போலே தனித்தொரு முதலாயிருக்கச் சிருஷ்டிகாலமுஞ் சங்காரகாலமு மாயையோடுங்கூடி நிற்குமென்பானேனென்னி லப்படியே கன்மந் தனியேயொரு முதலாயிருந்தாலு மற்றுள்ளமலங்களைச் சார்ந்துநிற்பதொழியத் தனித்துநில்லாதாகையா லப்படிச்சொன்னதென வறிக. அப்படிக் கன்மமலமானது மற்றுள்ள மலங்களையுஞ் சார்ந்துநிற்குமென்பதற்கு. பி - ம். சித்தியாரில். "இருவினையநாதியாதி யியற்றலானுகர்வாலந்தம், வருமலஞ்சார்ந்து மாயா வுருவுகண்மருவியார்த்துத், தருசெயன் முறைமையாலே தான்பலபேதங்காட்டி, யருவதாய்நின்றரன்ற னாணையினமர்ந்துசெல்லும்." எ - து. கண்டுகொள்க. இதில் மாயாவுருவுகள் மருவியார்த்து என்றமையால் சிருஷ்டிகாலங்

காரியமாயையோடுங் கன்மங்கூடிநின்று காரியப்படுமென் பதொழியக் காரணத்திலுங் கூடிநிற்குமென்பதற்கு வழி யேதென்னில் ஆன்மாக்களுக்கு மும்மலங்களுங் கூடிநிற் கும் அது "மும்மல நெல்லினுக்கு முளையொடு தவிடுமிப் போல்" என்றமையால் கன்மத்துக்குவமை முளையும் மாயை க்குவமையுமியுமாதலா லந்தநெல்லிலுமிபோனால் முளைஜீவி யாதாற்போலக் கன்மமு மாயையாதாரமாக வொடுங்கி மீ ளவு மாயையாதாரமாக ஜீவிக்குமென்பதை யநுபவத்தாற் கண்டுகொள்க. அன்றியும் அந்தநெல்லு மக்கினியினாலே வெதுப்புண்டவவதரத்து உமிகிடந்தாலு முளையெழாதாகை யாற் கன்மமில்லாதபொழுது மாயையும் ஜீவிப்பற்றுப்போ மென்மதை யநுபவத்தாற் கண்டுகொள்க. ஆகையால் கன் மத்துக்கீடாக மாயையுண்டாமென்றும் மாயைக்கீடாகக் கன்மமுண்டாமென்று மிரண்டு மொன்றைவிட் டொன்று நில்லாதென்று நூல்களிற்சொன்னது மிப்பொருட்பற்றி யெனவறிக. இனியிங்ஙனஞ் சொல்லப்பட்ட கன்மமான து அருபமுமாய் ஜடமுமாயிருக்க அணுக்கடோறும் படர் வதாகி யென்று அறிவாயுள்ளவான்மாவை ஜடமாயுள்ள கன்மம்பொருந்துமென்பதற்கு வழியேதென்னில் அந்தக்க ன்மமானது ஜடமாயிருந்தாலு மான்மாவை முத்தியிலேவிட் டு நிங்குவதொழிந்து மற்றவிடமெல்லா மான்மாவை விட ப்படாததாகையா லப்படிச்சொன்ன தெனவறிக. இப்ப டிக்கன்மம் ஜடமாயிருந்தும் ஆன்மாவை விடப்படாததெ ன்பதற்கு. பி - ம். திருக்களிற்றுப் படியாரில் "இன்றிங்க சேதனமா மிவ்வினைக ளோரிரண்டுஞ், சென்று தொடரு மவன் சென்றிடத்தே." எ - து. கண்டுகொள்க.

இதன்றற்சொல்லியது கன்மமலமானது சிருஷ்டிகால மா ன்மாக்க ளெடுக்கப்பட்ட தேகங்களுக்கெல்லா முன்னிலையு

மாய்ப் புசிக்கப்பட்ட போகங்களுக்கொல்லாங் காரணமு மாய்த் திரிவித காரணங்களினலே புண்ணியபாவங்களை யிய ற்றுவித்து அதனலே ஜநநமரணங்களை யுண்டாக்குவித்து நி ன்று சங்காரகால மாயாகாரணத்தோடுங்கூடி நிற்குமென் னுமுறைமையை யறிவித்தது. (கசு)

இங்ஙனமநாதியாகச் சொல்லப்பட்ட கன்மமானது ஒவ் வோருடம்புகளோடுங்கூடிக் காரியப்படுமிடத்து மூவகைக் கன்மமாக நின்று காரியப்படுமுறைமையை மேலருளிச்செ ய்வா னெடுத்துக்கொண்டருளியது.

கன்மநெறிதிரிவிதநற்சாதியாயுட்போகக் கடனதெ னவருமூன்றுமுயிரொன்றிற்கலத்த, ருென்மையதூழல லதுணவாகாதானுந்தொடங்கடைவினடையாதேதோன் றுமாறித் தன்மைதருதெய்விகமுற்பவுதிகமான்மிகமாந் தகையிலுறுமசேதனசேதனத்தாலுஞ்சாரு நன்மையொ டுதீமைதருசேதனனுக்கிவனூ ளுடிலதனூழ்வினையாந னுகுந்தானே. (கஎ)

ஆயுவும்போகமுஞ்சாதியுமாய்வினை
மாயையுருவில்மருவுமென்றது.

வி-ம். கன்மநெறிதிரிவிதம். எ-து. ஆன்மாக்களுக்குவர் துகூடுங்கன்மத்தின்வழி மூன்றுபிரகாரமாயிருக்கும். அவை யாவன,— நற்சாதியாயுட்போகக் கடனதெனவரும். எ-து. நல்லசாதி பொல்லாச்சாதியென்றும் ஏறினவாயுள் குறைந் தவாயுள்என்றும் நல்லபோகம் பொல்லாப்போகம் என்றும் வாராநிற்கும். இவை யெப்பொழுதுண்டானதென்னில்,— மூன்றுமுயிரொன்றிற் கலத்த ருென்மை. எ-து. இந்த க்கன்மங்கண்மூன்றும் ஓரான்மாவிலே கூடுகிற தநாதியே

யுள்ளதாம். சாதியுமாயுளு முன்னேயுள்ள வூழானுலும் போக மிப்பொழுதுண்டான முயற்சியல்லவோ வென்னி ல்,— அதூழல்லதுணவாகா. எ - து. அந்தப்புசிப்பு மூழ் வினையாலல்ல துண்டாகாது. அதுதான் முன்பே யார்ச் சித்த முறையிலே வருமோ முற்பிற்பாடாக மாறிவருமோ வென்னில்,— தானும். எ - து. அப்படியார்ச்சித்த வொ ழுங்கிலே வருகிறதுமுண்டு. அன்றியும்,— தொடங்கடைவி னையாதே தோன்றுமாறி. எ - து. அப்படிவாராமல் வன்மைமென்மைகளுக் கிடாக மாறிவருகிறதுமுண்டு. அப் படிவருகிற கன்மத்தின்விதி யெங்ஙனேயென்னில்,— தன் மைதரு தெய்விக முற்பவுதிகமான்மிகமாந் தகையினுறும். எ - து. இயல்பிலே வரப்பட்ட கன்மங்கள் தெய்வத்தா லும் பஞ்சபூதங்களினாலும் ஆன்மாக்களாலும்வரும். அவை வருமிடத்து,—அசேதன சேதனத்தாலுஞ்சாரும். எ - து. அறிவில்லாதவையாலும் அறிவுள்ளவையாலும் வரும். ஆ கையால்,— நன்மையொடு தீமை தருசேதனனுக் கிவணுண் டில். எ - து. இங்ஙன நன்மைதீமைகளைப் பொருந்திவரு கிற ஆன்மாவுக் கிவ்விடத்திற் புசிப்பை விசாரிக்கில்,— அத னூழ்வினையா நணுகுந்தானே. எ - து. முன்ஜநநத்திற் பு சிக்கச்செய்தே பெறின வாகாமியந்தானே இந்தஜநநத்துக் குப் புசிப்பாகவந்து பொருந்தும். எ - று.

ரு-ம். மூன்றுமுயிரொன்றிற்கலத்தல். எ-கு. ஓரான்மா வினிடத்திலே மூன்றுகாரியநிற்குமென்று பொருட்கூறியதே தென்னில் ஆன்மாக்கள் யாதாமொரு சரீரங்களைக் கன்மத் துக்கிடாக வெடுக்குமிடத்து யாதாமொரு சரீரவர்க்கங்களு ம் வயதுகளும் புசிப்புகளுமல்லாம லெடாதாகையாலே ய ப்படிச் சொன்னதெனவறிக. இனியதூழல்ல துணவாகா எ-கு. இப்பொழுதுண்டானபுசிப்புகளு மூழாலொழிய வுண்

டாகாதென்று பொருட்கூறியதற்கு வழியே தென்னில் ஆன்மாக்கள் யாதாமொரு கன்மங்களைப்புசிக்குமிடத்து வந்து கூடினத்துக்குந் தவறுவருகையாலு நினையாதது வந்துகூடுகையாலும் ஊழாலல்லது புசிப்புண்டாகாதென்றதெனவறிக. இதற்கு. பி-ம். திருவள்ளுவப்பயனில். "ஊழிற்பெருவலியாவுளமற்றொன்று சூழினுந்தான்முந்துறும்" எ-து. கண்டுகொள்க. இனிதொடங்கடைவி னடையாதேதோன்றுமாறி. எ-கு. கன்மத்தின்வழி வன்மைமென்மைகளுக்கீடாக மாறிவருகிறது முண்டென்று பொருட்கூறியதேதென்னில் முந்தச்செய்த கன்மம்பிற்பட்டும் பின்புசெய்தகன்ம முற்பட்டும் வருகையாலே யப்படிச்சொன்னதெனவறிக. அது வெங்ஙனேயென்னில் ஒருவன் பயிர்செய்யுமிடத்து முந்த வல்விதையை விதைத்துப் பின்பு இளவிதையைவிதைத்தாலும் அந்தவிளவிதை முந்தப்பயன்படுமாறுபோலக் கன்மத்தின்மிகுதி முந்தப்பயன்படுமெனவறிக, இனி தன்மைதருதெய்விகமுற் பவுதிகமான்மிகமாம். எ-கு. தெய்வத்தாலும் பஞ்சபூதத்தாலும் ஆன்மாக்களாலும் வருமென்றதற்கு வழியேதென்னில் தெய்வீக கன்மமாவது மாதாவின் கருப்பக்கோளகையிலே யிவனிருக்குமிடத் துண்டான விதனம் ஜநநமரணத்தி லுண்டான விதனம் யமதண்டம் நரகவேதனை இவைமுதலாகவுள்ளவையிற்றிலே துக்கப்படுதலெனவறிக. இனிபஞ்சபூதங்களால் வருகிறபௌதிககன்மமாவது குளிர் வெப்பம் மழை காற்று மின் இடி சுவர்விழுதல் கல்விழுதல் இவைமுதலாக வுள்ளவையிற்றிலே துக்கப்படுதலெனவறிக. இனி ஆன்மீககன்மம் ஆன்மாக்களால் வருகையாவது சரீரத்திலும் மனத்திலுந் துக்கப்படுகை. இதற்குவழியேதென்னில் தந்தஞ் சரீரத்திலுண்டான வியாதிகளினாலும் மிருகங்களினாலும் பறவைகளினாலும் இராக்ஷதரா

னும் பசாசுகளாலும் கள்வராலும் மற்றுள்ளமனிதராலும் இவைமுதலாயுள்ள சரீரதுக்கங்களெனவறிக. இனி மற்றமனோதுக்கமாவது பிறருடைய கல்வியுஞ் சௌந்தரியமுஞ் செல்வமுங்கண்டு பொறாமை அபிமானங்கெடுதல் எழுந்ததுபுத்தியாகச்செய்தல் கோபியாய்த்திரிதல் என்னுமிவைமுதலாயுள்ளவை யெனவறிக. மற்றச்சுககன்மங்களும் இங்ஙனஞ்சொல்லிவந்த வொழுங்கிலே கண்டுகொள்க. ஆகவிங்ஙனஞ் சொல்லப்பட்ட மூவகை துக்கமாகிய கன்மங்களுக்கு பி - ம். ஞானமிர்தத்தில் "ஆதிதெய்வீக மாதிபௌதிக- மாதியத்தியான்மீகமென்ன-வோதிய துக்கமூன் றினுத்தியான்மீக-மெய்யில்மனத்தி லையமிலிரண்டே- வளியிற்பித்தில் விளையாவிளையி- னூனுகுதொழுனையி லுதிக்கக்கோட்டில்- வெற்பிற்குலையின் மக்களின் விலங்கி - னலகையிற்கள்வரிற்பறவையி னிருதரில்- மைந்தரின்மகளிர்மணத்திடைதணப்பிற்- பேரறம்வளர்ப்பிற் பெருந்திருநுகர்விற் - சீரியயாக்கை மாதுயர்மாசு-மனத்துறுதுயர நினைப்பருஞ்சோக - மறிவுருவாக்கமடைவனற்பொறாமை- மான்மாக்காலம் பூணுதுமறுத்த-லிச்சையைநினைதலிருஞ்சினமிகுத்த - வினையவைமுதலாநினைவருந்திறத்த-வாதிபௌதிகஞ் சீதமாமழை - யுருப்பவிர்வேனி னுட்குவருகடுங்கா-லிருள்கிழிபமின்பெருவிறலசனி - மன்னுயிர்க்குறுகண்டுன்னியாறருந்த - லாதியாயவிவருந்திறத்த-வாதிதெய்வீகம் பேதையாவையின் - கருக்குழியமுங்கல் பிறப்புறம்போது - திரைவருந்தீமைவளாவில்பேதைமை - மடங்கலாருயிர்தொடங்கினவவ்வலி- யாவரும்விழையாக் கொள்வாய் நிரயத்து-வீழ்ந்தனரொழாஅ வான்கழிதன்ப- மினையமாலையதுயரிடைவிளைநகர் - கருங்கைக்கைமைக்களிறுகைத் திரும்புலப்-பெரும்படைவிரிந்துசூழ்ந்திருந்தா- நாற்கதிப்பவனியுலாயார்த்த வீழ்திறம்பிற் போற்றுமதி புரிந்தே" எ - து. கண்டுகொ

ள்க. அன்றியும் இங்ஙனங்கூறிவந்த மூவகைத்துக்கஞ்சிவாகமத்தில் கிரந்தத்திலே யெடுத்து சதிர்த்தின சங்கிரகத்திலே சேர்ந்த கிரந்தத்தினுங் கண்டுகொள்க. அந்தக்கிரந்தத்தி னத்தமும் முற்கூறிய ஞானுமிர்தத்தினத்தமும் ஒப்புநோக்கிக் கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது கன்மமானது காரியப்படுமிடத்து ஆயுளும் போகமும் சாதியுமாகநின்று காரியப்படுமென்றும் அது வூழ்வினையாலொழிய வராதென்றும் அது வருமிடத்து ஆர்ச்சித்தவொழுங்கிலே வருமென்றும் அன்றியும் வன்மை மென்மைகளுக்கீடாக மாறியும் வருமென்று மதுதெய்வீக கன்மமாகவும் பௌதீககன்மமாகவும் ஆன்மீககன்மமாகவும் வருமென்றும் புண்ணியபாவங்களுக்குடனாய் நிற்கிற வான்மாக்களுக் கிவையெல்லா மூழ்வினையால்வருமென்றும் வருமுறைமையை யறிவித்தது. (௧எ)

இங்ஙனமெடுத்தவுடலிலே புசிக்கிறதெல்லா மூழேயானால் மேலைக்கு ஜநநத்துக்கேதுவாகிய ஆகாமியமுண்டாகிறவகையெப்படியென்றுவினவ மேலருளிச்செய்வா னெடுத்துக் கொண்டருளியது.

மேலைக்குவருவினையேதென்னிலங்கண் விருப்புவெறுப்பெனவறியவ்வினையுமெல்லா, மூலத்தவினைப்பயில் வாமென்னினுமேன் முற்றியதன்பயனுனக்குமுளைக்குமென்பர், ஞாலத்துவினைகளிருதிறனுகும்புந்தி நண்ணுதவினைநணுகும்வினையெனவொன்றிரண்டா, மேலத்தானிதமகிதமாமிதனல்வழுவா தெய்தியிடும்புண்ணியபாவங்ளென்றே. (௧அ)

மன்னியவிருப்பு வெறுப்பால்வல்வினை
பின்னும்வினையும் பெற்றியையுரைத்தது.

வி-ம். மேலைக்கு வருவினையேதென்னில். எ-து. இந்தவுடலிலுண்டாகிய புசிப்பெல்லா மூழேயாகில் மேலைக்குஜநநமுண்டாகத்தக்க கன்மத்துக்கேது வெப்படியென்னில்,— அங்கண்விருப்புவெறுப்பெனவறி. எ-து. அந்தவூழாகியசுகதுக்கம் புசிக்கிறவவதரத்திலே யுண்டாகிய பிரியாப்பிரியங்கள்வித்தாக மேலைக்கு ஜநநமுண்டாமெனவறிவாயாக.— அவ்வினையுமெல்லா மூலத்தவினைப்பயில்வாமென்னில். எ-து. அப்படிப்பிரியாப் பிரியப்பட்டுப் புசிக்கிறது முன்னைவினையின்பகுதியல்லவோ வென்னில் அப்படியானாலும்,—நாமேன்முற்றியதன் பயனுனக்குமுளைக்குமென்பர். எ-து. நாமுன்புபண்ணின கன்மமல்லோவிப்பொழுது புசிக்கிறோமென்று விசாரியாமல் நாம்செய்தோம் பிறர்செய்தாரென்று நீசுட்டுகையாலே யந்தச்சுட்டாலுள்ள பயன் மேலைக்குற்பவிக்குமென்று பெரியோர்கள்சொல்லுவார்கள். ஆகையால்,— ஞாலத்துவினைகளிருதிறனாகும். எ-து. பிரபஞ்சத்திற் புண்ணியபாவங்க ளிரண்டுவகைப்பட் டிருக்கும். அஃதெங்ஙனேயென்னில்,— புந்திநண் ணுதவினை நணுகும்வினையெனவொன்றிரண்டாம். எ-து. புத்திபூர்வமாகச் செய்ததென்றும் அபுத்திபூர்வமாகச்செய்ததென்று மிரண்டுவகைப்பட்டிருக்கும். அன்றியும் புத்திக்குப்பொருந்திய காரியமென்றும் பொருந்தாத காரியமென்றுஞ் சொல்லவுமாம். அதனைவிசாரிக்குமிடத்து,— ஏலத்தானிதமகிதமாம். எ-து. அநாதியே ஹிதமென்று மஹிதமென்றுமிரண்டுவகையாம்,— இதனால் வழுவாதெய்தியிடும் புண்ணியபாவங்களன்றே. எ-து. இந்தஹிதத்தாலு மஹிதத்தாலுந் தப்பாமற்பொருந்தியிடும் புண்ணியகன்மமும் பாவகன்மமும். எ-று.

வி-பு. இப்பொழுது புசிக்கிறதெல்லா மூழேயானால்மேலைக்காகாமியமுண்டாகிற தெப்படியென்று கேட்டதற்கு இந்தப்பிராரத்தம் புசிக்கச்செய்தே யுண்டானவிருப்புவெறுப்பாகிய ஹிதாஹிதஙகளாலே ஆகாமியங்கட்டுப்படுமென்று ஆசாரியர் விடைகொடுத்ததற்கு .பி-ம். சித்தியாரில். "முற்செயல் விதியையிந்த முயற்சியோடநுபவித்தா லிச்செயல் பலிக்குமாறென்னிதமகிதங்கண் முன்ன, ரச்செயலாலிங்கு மவை செயின்மேலைக்காகும், பிற்செயாதநுபவிப்ப தின்றுபின்றொடருஞ்செய்தி."எ-ம்.அந்தவிருப்புவெறுப்பு மாறாதியேதொண்டுதொட்டு வருமென்பதற்கு. பி - ம். சித்தியாரில். "மேலைக்குவித்துமாகி விளைந்தவையுணவுமாகி, ஞாலத்துவருமாபோல நாஞ்செயும் வினைகளெல்லா, மேலத்தான்பலமாச்செய்யு மிதமகிதங்களெல்லா, மூலத்ததாகியென்றும் வந்திடுமுறைமையோடே." எ - ம். கண்டுகொள்க. அப்படி முன்புசெய்த கன்மத்துக்கீடாகவல்லோ விப்பொழுது புசிக்கிறோமென்று விசாரியாமல் நான்செய்தேன் பிறர்செய்தாரொன்றுசுட்டும்வகையா லந்தச்சுட்டாலுள்ளபயன்மேலைக்குவினைவாமென்பதற்கு. பி-ம். சித்தியாரில். "யான்செய்தேன்பிறர்செய்தா ரென்னதியானென்னுமிக்கோணை ஞானவெறியால் வெதுப்பி நிமிர்த்துத், தான்செவ்வேநின்றிட வத்தத்துவன்றனோ தனையளித்து முன்னிற்கும்வினையொளித்திட்டோடு, நான்செய்தேனெனுமவர்க்குத் தானங்கின்றி நண்ணுவிக்கும் போகத்தைப்பண்ணுவிக்குங்கன்ம, மூன்செய்யாஞானந்தா னுதிப்பினல்லா லொருவருக்கு மியானெனதிங் சொழியாதன்றே." எ-து. கண்டுகொள்க. ஞாலத்துவினைகளாகிய விருவகைப்பயனாகிற புண்ணியபாவங்கள் புத்தி பூர்வத்தாலும் அபுத்திபூர்வத்தாலு முண்டாமென்றதேதென்னில் அபுத்திபூர்வமாவது ஒருபொல்லாங்குகளிலாவது நன்மைகளி

லாவதுமனதும்வாக்குந் தன்னையறியாமலோடினாற் பின்புந
ம்மையறியாம லிப்படிவந்ததாயிருந்ததெனக் கொள்கை.
புத்திபூர்வமாவது வொருவர்க்கொரு நன்மை தீமைகளைச்
செய்யுமிடத்து இவர்களுககென்னபொல்லாங்கு செய்வோ
மென்று மென்னநன்மை செய்வோமென்று மனதும்வாக்
குங் காயமுங்கூடி நினைத்துஞ் சொல்லியுஞ் செய்தும்வரு
கையெனவறிக.

இதனாற்சொல்லியது இந்தவுடலிலே புசிக்கிறதெல்லா
ம் பிராரத்தமானால் மேலைக்காகாமிய முண்டாம்வழி யெப்
படியென்று வினவ இப்பொழுது புசிக்கிறது முன்புள்ள ஊ
ழ்வினையின் பயனல்லோவென்று விசாரியாமல் நான்செய்
தேன் பிறர்செய்தாரென்ற விருப்பு வெறுப்பாகிய சுட்டால்
மேலைக்கு ஜநநமுண்டாமென்று மவைவருமிடத்துப் புத்தி
பூர்வத்தாலு மபுத்திபூர்வத்தாலும் வருமென்னுமுறைமை
யையு மறிவித்தது. (சஅ)

இங்ஙன முண்டாகப்பட்ட வாகாமியத்தாற் புண்ணியபா
வங்களுண்டாம்வழி யெப்படியென்று மதுபோம்வழி யெப்
படியென்றும் வினவ மேலருளிச்செய்வா னெடுத்துக்சொ
ண்டருளியது.

உற்றதொழினினைவுரையினிருவினையுமுளவா மொ
ன்றொன்றாலழியாதுணுழியாதுன்னின் மற்றவற்றினொ
ருவினைக்கோர்வினையால்வீடு வைதிகசைவம்பகருமரபி
லாற்றப், பற்றியதுகழியுமிதுவிலையாலேற்கும் பான்மை
யுமாம்பண்ணுதுபலிக்குமுன்னஞ், சொற்றருநூல்வழியி
ன்வரின்மிகுதிசோருஞ் சோராதங்கதுமேலைத்தொடர்
ச்சியாமே. (சகூ)

ஒழியாவிருவினையொன்றிற்றொன்றிங்
கழியாதநுபவ மாகுமென்றது.

வி-ம். உற்றதொழினினைவுரையி னிருவினையுமுளவாம். எ-து. பொருந்தப்பட்ட வுடம்பின்றொழிலாலு மனதினினைவாலும் வாக்கின்சொல்லாலும் புண்ணியபாவங்க ளிரண்டுமுண்டாம். அப்படியுண்டாமிடத்து ஒருகன்மங்கொண்டொருகன்மத்தைப் போக்கிக்கொள்ளலாமோ இரண்டுமிரண்டாக அநுபவிக்கவேணுமோ வென்னில்,— ஒன்றொன்றாலழியாது ஒழியாதுன்னில். எ-து. புண்ணியத்தாற் பாவமும்போகாது பாவத்தாற் புண்ணியமும் போகாது ஆகையாலே விசாரிக்குமிடத்துப் புசிப்புந்தவிராது. அப்படியானால் ஒருவர்செய்தபாவகன்மங்களைப் போக்கிக்கொள்ளுகைக்கு வழியில்லையோவென்னில்,— மற்றவற்றி னொருவினைக்கோர் வினையால்வீடு வைதிகசைவம் பகரும். எ-து. அப்படிச்செய்யப்பட்ட வினைகளில் ஒருவினையைக்கொண்டொருவினையைப் போக்குதற் குபாயம் வேதாகமங்கள் சொல்லாநிற்கும்,— மரபிலாற்றப்பற்றியது கழியும். எ-து. அந்தவேதாகமங்கள் சொன்னமுறைமையிலே செய்தாற் கூடினகன்மங்க ணீங்கும். அப்படிச் செய்யமாட்டாதவர்களுக்கிந்தத்தோஷங்கள் நீங்கும்வழியெங்ஙனேயென்னில்,— இது விலையாலேற்கும் பான்மையுமாம் பண்ணுதுபலிக்கும் எ-து. இந்தத்தோஷங்கள் நீங்குகைக்குத் தான்செய்துகொள்ளமாட்டானில்லையாகிலுஞ் சிலதிரவியங்களைக் கொடுத்துச் செய்ய வல்லவர்களைக்கொண்டு செய்வித்துக் கொள்ளுகையாலே (தான்செய்யாதிருக்கிலுந்) தனக்குப்பயனைப் பலிக்கும். இங்ஙனமுண்டான தோஷங்களைப் போக்கிக்கொள்ளலா மென்றிருக்கச்செய்தே யொன்றொன்றாலழியா தென்றதேதென்னில். அஃதாவது,—முன்னஞ் சொற்றருநூல் வ

ழியின்வரின் மிகுதிசேரும். எ - து. முன்னே சொல்லப்பட்ட வேதாகமங்களின் முறைமையிலே யொருவன்முன்செய்ததோஷத்துக்குத்தக்க பிராயச்சித்தஞ் செய்தாலு மந்தத் தோஷத்தின் கௌரவங்கெட்டுத் தோஷமாத்திர நிற்கும். அதேதென்னில் ஒருவன்பிரமஹத்தி கோவதைமுதலாயுள்ள தோஷங்கள் செய்து அதற்குத்தக்க பிராயச்சித்தஞ் செய்தாலு நரகவேதனைக்குள்ள கௌரவங்கெட்டுக் கொலைதோஷமாத்திர நிற்குமெனவறிக. அப்படிக் கொலைமாத்திரமாக நின்ற தேதுசெய்யுமென்னில்,—சோராதங்கதுமேலைத் தொடர்ச்சியாமே. எ - து. நீங்கிப்போகாத கன்ம மேலுடலெடுக்கைக்குத் தொந்தனையாம். எ - று. ஆகையினாலே ஒன்றொன்றாலழியாதெனக்கொள்க.

ரு - ம். உற்றதொழி னினைவுரையாகிய மனவாக்குக் காயங்களா லுண்டாகிய கன்மங்களாவன அருணினைவு பொறை பிறர்பொருள்விரும்பாமை செய்நன்றிமறவாமை அபிமானம்பேணல் அழுக்காறின்மை அவாவறுக்கை பிறர்விதனங்கண்டிரங்குதல் பிறருக்கு அறிவுஞ் செல்வமு மழகும் மோக்ஷமுமாகிய விவைநான்குந் தம்மினு மிகுதியாக வேணுமென்று விரும்பிநினைக்கை ஆக விவையித்தனையும் மனதினுண்டாகிய நல்வழிநினைவெனவறிக. இவையித்தனைக்குமாறுபடநினைக்கை தீவழிநினைவெனவறிக. இனி வாக்கினாலுண்டாகியகன்மமாவது தன்மம் ஞானங்கூறுதல் புறங்கூறாமை உண்மையேசொல்லுதல் நூலுரைகூறல் இனியனசொல்லுதல் கடுஞ்சொல்விடுதல் வேதாகமங்களையோதல் ஆகவிவையித்தனையும் வாக்கினாலுண்டாகிய நல்லுரையெனவறிக. இவையிற்றுக்கு மாறுபடக்கூறுகை தீயவசனங்களெனவறிக. இனி காயத்தினாற்செய்யுங் கன்மமாவது அரிதாயதவங்களைச்செய்தல் பூசைகளோமங்கள்செய்கை பகுத்துண்ணல் பூமரங்

கள் தோப்புகள்வைக்கை பிறர்மனைவிழையாமை குளம்வெட்டுகை கூவறேண்டல் தன்மசாலை பள்ளிக்கூடம் திருக்கோயிலெடுக்கை மடங்கட்டுகை ஆக விவையித்தனையுங் காயத்தினூற்செய்யு நற்றொழிலெனவறிக. இவையிற்றுக்கு மாறுபாடாகச் செய்கையெல்லாந் தீவழித்தொழிலெனவறிக. இங்ஙனமனத்தினு னினைத்தும் வாக்கினுற் சொல்லியுங் காயத்தினூற் செய்தும் வருமென்பதற்கு.பி-ம்.ஞானாமிர்தத்தில் "பொய்ப்பொறிபுணர்க்கு முப்பொறியுள்ளு - முள்ளச்செய்தி தெள்ளிதிற்கிளப்பி - னிருடீர்காட்சி யருளொடு புணர்தல்-பெரும்பொறைதாங்கல் பிறன்பொருள் விழையாமை-செய்தநன்றறிதல் கைதவங்கடிதல்-பால்கொடாதுபகலிற்றேன்றல்-மானமதாணி யாணீற்றுங்க - லழுக்காறின்மை யவாவிற்றீர்த-லருந்துயருயிர்கட் கிருந்தகாலை - யழறேய்வன்ன ராதியானக்-கழலுநெஞ்சிற் கையற்றிளைத்தல்-பன்னருஞ்சிறப்பின் மன்னுயிர்துடக்கிற்-கறிவும்பொறியுங் கழிபெருங் கவினும்-தெறற்கருந்துறக்கமு மறப்பவாங்குத்-தம்மினும்வேண்டு -மெண்ணரும் பெருங்குணம்-வாக்கொடுசிவணிய நோக்கினமக்கொள-வறம்பெரிதுரைத்தல் புறங்கூறுமை-வாய்மைகல்வி தீமையிற்றிறம்ப-லின்மொழியிசைத்தல் வன்மொழிமறுத்த-லறிவுநூல்விரித்த லருமறைகழற- லடங்கியவறைதல் கடுஞ்சொல்விடுதல்-பயனின்ற படிக்கல் பழிற்றுரைகெடுதல் - காயதித்யைந்த வீயாவினையு - ளருந்தவந் தொடங்கறிருந்தியதானங் - கொடையுடம்படுதல் படையுடம்படாமை-யமரர்ப்பேணலாகுதியருத்த - லொழுக்கமோம்பும் விழுப்பெருங் கிழமை-யுடம்பிடியேந்தி யுடறணிந்திடுமா - றடைந்தகாலை யவணியருயர்ந்தோ - ராலலர்தெரிந்து மாருயிர்பெரும்பிறி தாகலி-னிரும்பிணமிசைஞரி ஞெராங்குபட்டா - ரைம்பெரும்பாதகத்தாழிநீந்த - லிந்தியப்பெரும்படை யிரியநூறும் - வனற்

றருகண்மை வானின்ட்டாங்கு - நோவனசெயினு மேவன விழைத - றவச்சிறிதானு மிகப்பலவிருந்து - பாத்தூண்செல் வம் பூக்குமழிரும்பொழி - றன்மனைக்கிழத்தி யல்லதைப்பிற ர்மனை - யன்னையிற்றீரா நன்னராண்மை - கார்கோளன்ன கயம்பலகிளைத்தல் - கூவமொட்டலாதுலர்சாலை - யறங்கரை நாவினுன்றோர்பள்ளிக் - கடவுட் கண்ணியத் தடவுநிலைகோ ட்ட - மினையவைமுதலா நிலைவருந்திறத்த- புறத்தனமாதோ வறத்துறைமறத்துறை - யிவற்றுவழிபடாதெதிர்வனகெழீஇ- யுளுற்றெனமொழிய வுணர்ந்திசினோரே." எ - து. கண்டு கொள்க. ஒருவினைக்கோர் வினையால்வீடு என்றது சமயாசா ர முதலாயுள்ளத்துக்குத் தவறுவந்தா லதற்குப் பிராயச்சித் தஞ்செய்துகொள்ளவுமா மென்றதெனவறிக.

இதனாற்சொல்லியது மனவாக்குக் காயங்களினாலே க ன்மமேறுமென்று மப்படியேறின கன்மங்களை நீக்கிக்கொள் ளுகைக்குப் பிராயச்சித்தமு மந்தப்பிராயச்சித்தத்தாற் போ காத கன்மத்துக்கு மேலும் ஜநநதொந்தனை யுண்டாமென்னு முறைமையையுமறிவித்தது. (கக)

இங்ஙனம் பஞ்சமலங்களின் காரண காரியங்களை ஏக மாய் என்னும் விருத்தந்தொடங்கி யிவ்வளவு மருளிச்செய்து மேலிந்தப் பஞ்சமலங்களின் றொகையு மிவையிற்றுடன்கூடி நிற்கு மான்மாக்களுக் கிவை நீங்கியே யருளைப்பெறவேணு மென்னு முறைமையையு மருளிச்செய்வா னெடுத்துக்கொ ண்டருளியது.

மோகமிகவுயிர்கடொறுமுடனாய்நிற்கு மூலவாண வமொன்றுமுயங்கிநின்று, பாகமிகவுதவுதிரோதாயியொ ன்று பகர்மாயையொன்றுபடர்கன்மமொன்று,தேகமுறு கரணமொடுபுவனபோகச் செய்லாருமாமாயைத்திரட்சி

யொன்றென், றுகமலமைந்தென்பரைந்துமாறு தருளெ
ன்பதரிதென்பரறிந்துளோரே. (உ0)

அலக்கண்படுமுயிர்க் கைந்தவகையா
மலத்தின்பகுதியை வனப்புறவகுத்தது.

வி - ம். மோகமிக வுயிர்கடொறு முடனாய்நிற்கு மூல வாணவமொன்று. எ - து. அறியாமை மிகவுண்டாம்படி யான்மாக்கடோறுஞ் சகசமுமா யநாதியுமா யிருக்கப்பட்ட வாணவமலமொன்று,— முயங்கிநின்று பாகமிகவுதவுதிரோ தாயியொன்று. எ - து. அந்தவாணவ மலத்தோடுங்கூடி நின்று அதுபக்குவமா மளவு மான்மாவை மறைத்து அந்த மலத்தைப் பாகம்வருத்துகிற திரோதமலமொன்று,— டகர் மாயையொன்று. எ - து. ஆன்மாக்களுக்குத் தனுவாதிக ளைக் கொடுக்குமென்று சொல்லப்பட்டுவருகிற மயக்கத்தை ச்செய்யும் அசுத்த மாயாகாரணமல மொன்று,— படர்கன்ம மொன்று. எ - து. ஆன்மாக்கடோறும் விரிந்து அநுபவமாய் நிற்குங் கன்மமலமொன்று,— தேகமுறு கரணமொடுபுவன போகச்செயலாரு மாமாயைத் திரட்சியொன்று. எ- து. ஆன் மாக்களெடுக்கப்பட்ட பூததேகமாகிய தனுவு மதனோடுற்றிரு க்கப்பட்ட கரணமு மதனோடுங் கூடிவரும் புவனமும் போக மு மான்மாக்களோடுங் கூடிக் காரியப்படு மவதரத்து அவை யிற்றைமுற்கூறிய அசுத்தமாயாகாரணத்திலே நின்று சிவச த்திகடோற்றுவிக்கு மவதரத்து அவையிற்றோடும் பொருந் திநடத்தப்பட்ட சுத்தமாயையின் றிரட்சியாகிய சுத்ததத்து வங்களென்னு மலமொன்று. அன்றியு மிந்தப்பதத்துக்குப் பொருள்சொல்லுமிடத்து வித்தைகளவித்தையீசர் சதா சிவனென்ற விஞ்ஞானகலர்க்குத் தனுகரண புவனபோகங்க ளைக் கொடுத்து நிற்கிறசுத்தமாயை யென்பாருமுளர், அஃதி

வ்விடத்துச் சொல்லவேண்டுவதில்லை யெனவறிக. அதற்குக் குற்றமேதென்னில் இச்செய்யுள் சகலரைநோக்கிப் பஞ்சமலங்களின் றொகை சொல்லுகையாலு மிந்தச்செய்யுளில் விஞ்ஞானகலர் பிரசங்கமில்லாதபடியாலும் பஞ்சமலங்கள் விஞ்ஞானகலர்க்கில்லாதபடியாலு மப்படிச் சொல்லப்படாதெனவறிக.—என்றுமலமைந்தென்பர். எ-து. ஆகக்கூட்டியிங்ஙனஞ் சொல்லப்பட்ட மலமைந்தென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். ஆகையால்,— ஐந்துமாறு தருளென்பதரிதென்ப றறிந்துளோரே. எ-து. இங்ஙனஞ்சொல்லப்பட்ட மலமைந்தையும் விட்டுநீங்காமலான்மாக்களுக்குத் திருவருளுண்டாகாதென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். எ - று.

ரு-ம். மோகமிகவுயிர்க டொறுமுடனாய்நிற்கு மூலவாணவமொன்று. எ-கு. ஆணவமலமொன்றாயிருக்க வான்மாக்கடோறுங்கூடிநின்று மறைக்குமென்று பொருட்படுத்துகைக்கு வழியேதென்னில் இருளானதொன்றாயிருந்தும் பலகண்களையு மறைத்தாற்போல ஆணவமலமு மப்படியொன்றாயிருந்தாலும் பலவான்மாக்களையு மறைக்கு மென்றதெனவறிக. இதற்கு. பி-ம். திருவருட்பயனில் "பலரைப்புணர்ந்து மிருட்பாவைக்குண்டென்றுங், கணவற்குந்தோன்றுத கற்பு." எ-து. கண்டுகொள்க. இனி முயங்கிநின்று பாகமிகவுதவு திரோதாயியொன்று. எ-கு. அருளாகியதிரோதசத்தி யான்மாக்களை மறைக்கப்பட்ட விருளாகிய ஆணவமலத்தோடுங் கூடிநின்று பாகம்வருத்துமென்று பொருட்கூறியதேதென்னில் காணுங்கண்ணனதை மறைக்கப்பட்ட படலத்தைநீக்கப்பட்டவௌஷதமானது கண்ணோடுங்கூடி நின்று விதனமாக்கி அந்தக்கண்ணைத்தெரிவித்தாற்போல சிவனுடையவருளானது திரோதமாய்நின்று ஆன்மாக்களை மறைக்கப்பட்ட ஆணவமலத்தைப் பாகம்வருத்தி அந்தமலபாகம் வந்தவாறே யான்மாக்களுக்கு

ஞானம்பிரகாசிக்கையா லப்படிச்சொன்னதெனவறிக. இத
ற்கு. பி-ம். சித்தியாரில் "ஏயுமும்மலங்கடத்தந்தொழிலினையி
யற்றவேவுந், தூயவன்றனதோர் சத்தி திரோதான கரியதெ
ன்றும்" எ-ம். இந்நூலினும் "முற்சினமருவுதிரோதாயி கரு
ணையாகி" எ-ம். வருமேதக்கனைக்கண்டுகொள்க. இனிபகர்மா
யையொன்று. எ-கு. அசுத்தமாயாகாரண மலமொன்றெ
ன்று பொருட்கூறியதேதென்னில் ஆன்மாக்கள் சங்காரப்
பட்டொடுங்கு மவதரத்துத் தாரகமாய் நின்றுஞ் சிருட்டி
கால மான்மாக்களுக்குத் தனு கரண புவன போகங்களாகிய
கலையாதி தத்துவங்கள் தன்னிடத்திலே தோன்றுகைக் கு
பாதானமுமா யிருக்கிற காரணமாயை யென்றதெனவறிக.
இதற்கு. பி-ம். தத்துவவிளக்கத்தில் "ஓதியவல்வினையூட்
டக்கருவியுடம்புலக, மாதியபோகமு மாய்நின்றமாயை மய
க்குவித்தே, போதந்தரும்பொரு ளாகிநிற்கும்புவ னாதிகளுக்,
காதியமாய்விரிந் தந்தமுமாகி யொடுங்கியதே" எ-ம். சித்தி
யாரில் "நித்தமா யருவாயேக நிலையதா யகிலத்துக்கோர்,
வித்துமாய் சித்தாயெங்கும் வியாபியாய் விமலனுக்கோர், சத்
தியாய்ப் புவனபோகந் தனுகரணமு முயிர்க்காய், வைத்த
தோர்மலமாய் மாயைமயக்கமுஞ்செய்யுமன்றே" எ-ம். இந்நூ
லினும் "உருவாதி சதுவிதமாய்" என்னும்விருத்தமு மாகவந்
தனம்வருமேதக்கனைக்கண்டுகொள்க. இனி படர்கன்ம மொ
ன்று. எ-கு. எங்கும்விரித்திருக்கப்பட்ட கன்மமலமொன்றெ
ன்று பொருட்கூறியதேதென்னில் ஆன்மாக்க ளெடுக்கப்பட்
ட அச்சக்கபோறுங் கூடிநின் றவரவர்க்குண்டான புண்ணிய
பாவங்களுக்கிடான புசிப்புகளைக்கொடுத்து நிற்கையா லப்ப
ச்சொன்னவெனவறிக. இதற்கு. பி-ம். தத்துவவிளக்கத்தில்
"பிணைந்தவக்கன்மம் பெருகியவாசை யனுநுகர்தற், கணைந்
தனகன்ம மிருவகைத்தாமறம் பாவமென்ப, தணைந்து மணந்

துந்தன் சார்பினிற்றோன்றுமன் சந்நிதியா, லுணர்ந்தவர் வித்தும் விளைவுமொப்பாமென வோதுவரோ" எ-ம். சித்தியாரில். "இருவினை யநாதியாதி யியற்றலா னுகர்வானந்த, வருமலஞ்சார்ந்து மாயா வுருவுசண்மருவியார்த்து". எ-ம். இந்நூலினும். "அணுக்கடொறும் படர்வதாகி." எ-ம். வருமேதுக்களைக் கண்டுகொள்க. இனி தேசமுறு கரணமொடு புவனபோகச் செயலாரு மாமாயைத் திரட்சியொன்று. எ-கு. ஆன்மாக்களுக்குண்டான தனு கரணபுவனபோகங்களை நடத்துகிற சுத்தமாயையின் றிரட்சியாகிய சுத்ததத்துவமல யொன்றென்று பொருட்கூறியதேதென்னில் அசுத்த மாயாகாரியமாகிய கலையாதி தத்துவங்களைப் பிரேரிக்கப்பட்ட சுத்தமாயாகாரியமாகிய சுத்தவித்தை யீசுரம்சாதாக்கியம் சத்தி சிவமென்னப்பட்ட சுத்த தத்துவங்களைந்துமொருமலமென்றதெனவறிக. அவையிற்றைப் பிரேரிப்பித்துகொண்டே சுத்த தத்துவங்களை மலமென்னலாமோ வென்னி லப்படிச்சொல்லப்படுமெனவறிக. அதற்குவழியேதென்னில் சிவனுடைய வருட்சத்தியானது திரோதமாய்நின்று மலத்தைக் காரியப்படுத்த அதுமலமென்று பெயர் பெற்றாற்போல விதற்கு மப்படிச் சொல்லப்படுமெனவறிக. இனி யைந்துமாறு வருளென்பதரிதென்ப ரறிந்தவோரே எ-கு. இங்ஙனஞ்சொல்லப்பட்ட மலங்களைந்து நீங்கினலொழிய வான்மாக்களுக் கருளுண்டாகாதென்று பொருட்கூறியதே தென்னில் இந்த மலங்களைந்தோடுங்கூடி நிற்குமளவு மான்மாக்களுக்கு ஜநநந் தொலையாதது கொண்டே யப்படிச் சொன்னதெனவறிக. இதற்கு. பி-ம். திருவாசகத்தில். "மலங்களைந்தாற்சுழல்வன் றயிரிற்பொரு மத்துறவே." எ-து. கண்டுகொள்க.

௧௧

இதனாற்சொல்லியது ஆன்மாக்களோடு மநாதியாய் மறைக்கப்பட்ட வாணவமலமொருமலமென்று மதனோடுங்கூடி யந்தமலத்தைப் பாகம்வருத்துவதானதிரோதாயி யொருமலமென்று மதனோடுங்கூடி வருகிறவசுத்தமாயாகாரணமலமொன்றென்று மதனோடுங்கூடி விரிந்து வரப்பட்ட கன்மமலமொன்றென்று மதனோடுங்கூடி வரப்பட்ட வசுத்தமாயாகாரியமாகிய தனுகரண புவனபோகங்களை நடத்துகிற சுத்தமாயாகாரியமாகிய சுத்ததத்துவங்க ளொருமலமென்றும் ஆக விங்ஙனஞ் சொல்லப்பட்ட மலங்களைந்து நீங்காமலான்மாக்கள் முத்தியைப் பெறுகைக்கு வழியுண்டாகாதென்றும் பெரியோர்கள் சொல்லுவார்களென்னு முறைமையையு மறிவித்தது. (உ0)

இங்ஙனஞ் சொல்லப்பட்ட பஞ்சமலங்களோடுங்கூடி நிற்கிறவான்மாக்க ளவையிற்றைநீங்கி யருளைப்பெறுகைக்கு வழி யெங்ஙனேயென்றுவினவ அந்தமலங்கள் காரியப்பட்டுப் பாகம்வந்தே யருளைப்பெறவேண்டுகையா லவைகாரியப்படுகைக்கு வழியாகக் கேவல சகல சுத்தமென்று மூன்றவத்தையை வைத்துக்கொண் டிதிற்கேவலாவத்தையை முந்த வருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

ஓங்கிவரும்பலவுயிர்கண்மூன்றவத்தைப்பற்றி யுற்றிடுங்கேவலசகலசுத்தமெனவுணர்க, வீங்குவருங்கலாதியொடுகுறியுருவமொன்று மின்றிமலமன்றியொன்றுமில்லையெனுமியல்பா, யாங்கறிவையறிவரியனறிகருவியணையா தாதலினலிருண்மருவுமலர்விழிபோலதுவாய், நீங்கும்வகையின்றிநித்தவியாபகமாயங்க ணிற்பதுகேவலமென்றுநிகழ்த்துநூலே. (உக)

ஆருயிர்மூவகை யவத்தையுறுமதிற்
கூரிருளவத்தைக் குறியிதுவென்றது.

வி - ம். ஓங்கிவரும்பலவுயிர்கண் மூன்றவத்தைப்பற்றி யுற்றிடும். எ - து. அநாதியே நிலைபெறாகி யெண்ணிறந்து மிக்குவருகிற வான்மாக்கள் மூன்றுவகைப்பட்டிருப்பதாகிய வவத்தைகளோடுங்கூடி யநுபவியாநிற்பர்கள். அதுவேதெனில்,— கேவலசகலசுத்தமென வுணர்க. எ - து. கேவலாவத்தையென்றுஞ் சகலாவத்தையென்றுஞ் சுத்தாவத்தையென்றுமறிக. இவையிற்றின் முற்கூறிய கேவலாவத்தையாவது,— ஈங்குவருங்கலாதியொடு குறியுருவமொன்று மின்றிமலமன்றி யொன்றுமில்லையெனு மியல்பாய். எ - து. இவ்விடத்துவிளங்காநின்ற கலையாதிதத்துவங்களோடுங் கூடியறியப்பட்ட வொருநினைவுகளு மொருகாட்சிகளு மில்லாமலறியாமையாயுள்ள வாணவமலமொழிய வேறொன்று மில்லையென்றாற்போலு மியல்பாயிருப்பதாய்,— ஆங்கறிவையறிவரியன். எ - து. அவ்விடத்திலான்மாசிற்றறிவா யறியப்படும்பொருளாகிய தன்னையு மறியமாட்டானாய்,— அறிகருவியணையா. எ - து. அறிகருவிகளாகிய சுத்ததத்துவங்களு மவ்விடத்துப்பொருந்ாது,— ஆதலினாலிருண்மருவு மலர்விழிபோலதுவாய். எ - து. அப்படிநிற்கையாலே யிருளைப்பொருந்திநின்று விழித்து ஜீவிக்கிறகண்ணானது அந்தவிருளின்வடிவு தானாய்நின்றாற்போல,— நீங்கும்வகையின்றி. எ - து. அந்தமலத்தைவிட்டு நீங்குகைக்கோருபாயமுமில்லையாய்,— நித்தவியாபகமாய். எ - து. அவ்விடத் தழியாமலந்தமலத்தோடும் வியாபித்திருப்பதாய்,— அங்கணிற்பது கேவலமென்று நிகழ்த்துநூலே. எ-து. அப்படிக்கேவலத்துக்குத் தலமாயுள்ள வவ்விடத்திலே முற்கூறிவந்தப

டியே நிற்கிற வதனையே கேவலாவத்தையென்று சொல்லும் திவ்வியாகமம். எ-று.

ரு-ம். ஓங்கிவரும் பலவுயிர். எ-கு. அநாதியே நிலைபெற்று மிக்குவருகிற வான்மாக்களென்று பொருட்கூறியதேதென்னில் அநாதியென்றது சிவனுள்ளவன்றே யான்மாக்களு முண்டாகையா லநாதியென்ற தெனவறிக. நிலைபேறென்றதுஞ் சிவனைப்போல வொருகாலத்தினு மழியாமனிற்கையா லெனவறிக. மிக்க வுயிரொன்றது பிரம விஷ்ணுக்கள் முதலாயுள்ள வான்மாக்களைப் பற்றி யெனவறிக. இனி மூன்றவத்தை யென்பதற்குக் கேவலமென்றுஞ் சகலமென்றுஞ் சுத்தமென்றும் பொருட்கூறியதேதென்னில் கேவலமென்றது மாயாகருவிகளாயுள்ள காரிய மாயையுநீங்கி யாணவமலத்தான் மறைப்புண்டு காரணமாயை நாரகமாக வொடுங்கின வவதரத்தை யெனவறிக. இனி சகலமென்றது அப்படிநீங்கப்பட்ட தத்துவமுப்பநாறோடுங்கூடி ஜீவித்து நின்ற வவதரத்தை யெனவறிக. இனி சுத்தமென்றது முற்கூறிய கேவல சகலமிரண்டு நீங்கிச் சிவனுடைய வருள்காட்டாகச் சென்று அந்தச்சிவத்தோடுங் கூடிநின்ற வவதரமெனவறிக. இங்ஙனஞ் சொல்லப்பட்ட வவத்தை மூன்றுக்கும் பி-ம். சித்தியாரில் "கேவல சகலசுத்த மென்று மூன்றவத்தையான்மா, மேவுவன் கேவலந்தன் னுண்மைமெய்ப்பொறிகளெல்லாங், காவலன் கொடுத்தபோது சகலனு மலங்களெல்லா, மோவினபோதுசுத்த முடையனுற் பவந்துடைத்தே." எ-து. கண்டுகொள்க. இனி ஈங்குவருங்கலாதி. எ-கு. இவ்விடத்து விளங்கப்பட்ட கலாதிகளென்று சுட்டிப் பொருட்கூறியதேதென்னில் ஆசாரியனருளிச்செய்யச் சீடன்கேட்டிருக்கு மவதரங் கருவிகளோடுங்கூடியிருந்து கேட்டறிந்து வருகையா லிவ்விடமென்ற சுட்டுக் கருவிகளோடுங்

கூடியிருந்து ஜீவித்துவருகிற சகலாவத்தை யெனவறிக. இனி குறியுருவமொன்றுமின்றி. எ-கு. ஒருநினைவுகளு மொருகாட்சிகளு மில்லை யென்று பொருட்கூறிய தேதென்னில் இவன்சகலனாகி நின்று ஜீவிக்கு மவதரத்து உட்கரணங்களினாலே நினைத்தும் புறக்கரணங்களினாற் கண்டுங் கேட்டும் வருகையா லந்தக்கேவலத்துக்கு அவையில்லாதபடியாலே யப்படிச் சொன்னதெனவறிக. என்றிங்ஙனங் கேவலப்பட்டுக் கிடக்குமிடத்துக் காரியமாயையாயுள்ள கலையாதித த்துவங்களோடிங்கூடி ஜீவிக்கிறதுணங் குறிகளு மில்லையென்பதற்கு. பி-ம். சித்தியாரில் "அறிவிலனமூர்த்தனித்தனரா காதி குணங்களோடுஞ், செறிவிலன் கலாதியோடுஞ் சேர்விலன் செயல்களில்லான், குறியிலன் கத்தாவல்லன் போகத்துக் கொள்கையில்லான், பிறிவிலன் மலத்தினோடும் வியாபி கேவலத்திலான்மா" எ-து. கண்டுகொள்க. இனி மலமின்றியொன்று மில்லையெனு மியல்பாய். எ-கு. கேவலத்துக்கு ஆணவமல மொன்று மொழிந்து மற்றொன்று மில்லை யென்றாற்போலு மியல்பா யிருப்பதாய் என்று சந்தேகமாய் பொருட் படுத்தினத்துக்கு வழியேதென்னில் மலமன்றியொன்று மில்லையெனும் என்ற உம்மைகொண்டும் இயல்பாயென்றவையச்சொற்கொண்டும் செத்தமனிதனைப்போலக் கிடக்கின்றார்கள் பட்டமரம்போலே நிற்குது என்றசொல் அவையிற்றுக் குயிருண்டென்பதை விளைத்துநின்றாற்போல அதுவுமாணவமலமொன்றியே மற்றுள்ளமலங்களு முண்டென்பதை விளைத்து நிற்கையா லப்படிச்சொன்னதெனவறிக. அஃதெங்ஙனேயென்னில் கேவலத்திலான்மா ஆணவமல மறைப்பாக வொடுங்கு மிடத்து மாயைதாரகமாக வொடுங்குகையாலப்படிச் சொன்னதெனவறிக. அவ்விடத்து மாயையுண்டென்பதற்கு அநுபோகமேதென்னில் நித்திரையிற் கேவல

ப்பட்டுக் கிடக்குமிடத்து உடல்தாரகமாகக் கிடக்கச்சிதேகூ-ப்பிட்டெழுப்பவு மெழுந்திராமற் கிடந்து அந்தவுடலைத் தட்டியெழுப்பு மிடத்துக் கலாதிக ளெழுந்திருக்கையா லந்தக் கலாதிகள் மாயையிற் றோற்றமாகையால் காரியமுள்ளவிடத்திலே காரணமுண்டான தாகையாலே கேவலத்தி லாணவமல மறைக்க மாயைதாரகமாக ஆன்மா வொடுங்குமென்பதை யநுபவத்தாற் கண்டுகொள்க. அப்படி நித்திரையிற் கேவலப்பட்டுக் கிடக்குமிடத் துடம்புதாரகமாக வொடுங்குமென்பதற்கு. பி - ம். சிவஞானபோதத்தில். "அவ்வுடலினின்றுயிர்ப்பவைம்பொறிக டாங்கிடப்ப, செவ்விதினவ்வுடலிற் சென்றொடுங்கி." என்பதனுள் "செவ்விதினவ்வுடலிற் சென்றொடுங்கி." எ - ம். போற்றிப் பஃறொடையினும். "மூலவருங்கட்டி லுயிர் மூடமாயுட்கிடப்ப." எ - ம். கண்டுகொள்க. என்றிங்ஙனநித்திரையிற் கேவலத்துக்கு மலமறைக்க உடல்தாரகமாக மூலாதாரத்திலே யொடுங்கினாற்போலச் சங்காரகேவலத்துக்கு மாயாகாரணந் தாரகமாக வொடுங்குமென்பது கண்டுகொள்க. ஆகையாலாணவத்துக்குமறைக்கையேதொழில் மாயைக்குத்தாரகமாகநிற்கையே தொழிலெனவறிக. அப்படியாணவத்துக்குமறைப்பே தொழிலென்பதற்கு. பி - ம். தத்துவவிளக்கத்தில். "சேதனன் கண்ணதிகமறைப்பன வாயிரகோடிவிருத்திகளே." எ - ம். சித்தியாரில். "போதகாரியமறைத்து நின்றது புகல்மலங்காண்." எ - ம். "முன்னைமலத்தினிருள் மூடாவகை." எ - ம். இந்நூலினும். "செம்பிலுறுகளிம்பேய்ந்து நித்தமூலமலமாயறிவுமுழுதினையு மறைக்கும்." எ - ம். "ஞானத்தின் கண்ணைமறைத்த கடியதொழி லாணவத்தால்." எ - ம். வருமேதுக்களைக் கண்டுகொள்க. இனி மாயைதாரகமாக நிற்குமென்பதற்கு." பி - ம். தத்துவவிளக்கத்தில். " புல்வி

யபாசங்க ளுய்த்திடப்போகம் புமானுகர்ந்து, சொல்லியகா லத்துறுஞ் செல்லனீங்கிச் சிரபுரக்கோன், சொல்லியமண் முதலாயினமாயையி லேதொகுத்தங், கெல்லியி னித்திளைப் போலிளைப்பாற்று மணுக்களையே." எ - ம். இந்நூலினும். "உருவாதி சதுவிதமாய்." என்ற இருபத்திரண்டாஞ்செய் யுளிலே "ஒடுங்கவருகாலமுயிர்களெல்லா மருவிடமாய்மல மாய் மன்னியிடுமொரனருளான் மாயைதானே." எ - து. க ண்டுகொள்க. இனி யாங்கறிவையறிவரியன். எ - கு. கே வலப்பட்டுக் கிடக்குமவ்விடத் தான்மாஅறியப்படும்பொரு ளாயிருக்கிற தன்னையு மறியமாட்டானென்று பொருட்கூறி யதேதென்னில் அப்படிக்கேவலத்திலான்மாவுக் கறிவாயுள் ள நாமிப்படியறிவற்றுக் கிடக்கிறோமேயென்கிற நினைவு மில்லாததுகொண்டே யப்படிச்சொன்னதெனவறிக. இ தற்கு. பி - ம். சித்தியாரில். "அறிவில னமூர்த்தனித்த னரா காதிகுணங்களோடுஞ், செறிவிலன் கலாதியோடுஞ் சேர் விலன் செயல்களில்லான்." எ - ம். "அறிந்திடுந்தன்னையுந் தானறியாமையானும்." எ - ம். கண்டுகொள்க. இனியறி கருவியணையா. எ - கு. கேவலமாகிய வவ்விடத்துச் சுத்த தத்துவங்களும் பொருந்தாதென்று பொருட்கூறியதேதெ ன்னில் அப்படிச் சுத்ததத்துவங்களைக் கூடினவிடம் சகல மாகையா லப்படிச்சொன்னதெனவறிக. அதுவெங்ஙனே யென்னில் அப்படிக்கேவலப்பட்டுக் கிடக்குமிடத்துச் சிவ சத்திக ளந்தச்சுத்ததத்துவங்களைக்கொண் டசுத்தமாயா காரணத்திலேநின்றுங் கலையாதி தத்துவங்களைத் தோற்று வித் தான்மாக்களோடுங்கூடிக் காரியப்படுத்துகையா லது சகலமாகையாலே யந்தக்கேவலத்திற் சுத்ததத்துவங்களும் பொருந்தா தென்றதெனவறிக. இதற்கு. பி - ம். இந்நூ லில், "இத்தகைமை யிறையருளால்" என்னும் விருத்தத்

தையொட்டிக் கண்டுகொள்க. இனியிருள்மருவு மலர்விழி போலதுவாய். எ-கு. இருளைப்பொருந்தினவிழி யந்தவிருளின்வடிவு தானாய்நின்றாற்போலவென்று பொருட்கூறியதேதென்னில் குற்றமறக்காணுங் கண்ணானது இருளோடுங்கூடின வவதரத்து வேறொன்றுங்காணாமல் அந்தவிருளின் வடிவு தானாய்நின்றாற்போல வறிவாயுள்ள வான்மாவுங் கேவலப்பட்டு மலத்தினால் மறைப்புண்டுகிடக்குமிடத்து அந்த மலந் தன்னைப்போல வறியாமையே வடிவாய்க்கிடக்கையாலப்படிச்சொன்னதெனவறிக. அப்படிக் கண்ணை யிருள் மறைத்தாற்போல வான்மாவையுங் கேவலத்தி லாணவமலமொன்று மறைக்குமென்று திருஷ்டாந்தமா யிருக்கக் கேவலத்தி லாணவமலமறைப்பதன்றியே மாயைதாரகமாக வொடுங்குமென்ற தேதென்னில் அப்படி யிருளினால் மறைப்புண்டு அந்தவிருளின்வடிவு தானாய்நின்ற கண்ணிற் சோதியாயுள்ள பிரபையுந் தனக்குடம்பா யிருக்கப்பட்ட குவளை தாரகமாக நின்றாற்போல வாணவமலத்தான் மறைப்புண்டு கேவலப்பட்டுக் கிடக்கு மான்மாவு மாயைதாரகமாகக் கிடக்குமென்பதை முற்கூறிய வகைகளினாலு மநுபவத்தினாலுங் கண்டுகொள்க. அப்படிக்கேவலத்தி லாணவமலமன்றியே மற்றுள்ளமலங்களு முண்டென்பதற்கு. பி-ம். சித்தியாரில். "மும்மல நெல்லினுக்கு முளையொடு தவிடுமிப்போன், மம்மர்செய் தனுவினுண்மை வடிவினை மறைத்துநின்று." எ-து. கண்டுகொள்க. இனி நித்தவியாபகமாய் எ-கு. அழியாத வியாபகத்தையுடையதாயென்று பொருட்கூறியதேதென்னில் அப்படி யாணவமலத்தினாலே மறைப்புண்டு மாயைதாரகமாகக் கிடந்தாலு மவ்விடத்தி லான்மா வழிவதுஞ் செய்யாம லந்தமலந் தன்னைப்போல வறியாமையாய் வியாபித்திருக்குமென்ற தெனவறிக. இதற்கு. பி-ம்.

சித்தியாரில். "மலத்தினோடும் வியாபி கேவலத்திலான்மா." எ - து. கண்டுகொள்க. இனி அங்கணிற்பது கேவலம். எ - கு. கேவலத்துக்குத் தலமாயுள்ளவவ்விடமென்றுபொதுப்படப் பொருட்கூறியதேதென்னில் நித்திரையிற் கேவலத்துக் குடல்தாரகமாகவு மூலாதாரமிடமாகவுஞ் சங்காரகேவலத்துக்குச் சாரணமாயை தாரகமாகவு நிற்கையாலப்படிச் சொன்னதெனவறிக. என்னுமிவை யிரண்டுக்கும். பி - ம். இருபாவிருபஃதில். "கடலமுதேவெண்ணெய்க் கரும்பேயென்கண்ணே - யுடலகத்துமூலத் தொடுங்க." எ-து. நித்திரையிற் கேவலத்துக்குக் கண்டுகொள்க. ஆன்மாக்கள் இந்நூலில் "ஒடுங்க, வருகால முயிர்களெல்லா மருவிடமாய் மலமாய் மன்னியிடுமரனருளான் மாயைதானே." எ - ம். தத்துவவிளக்கத்தில். "சொல்லியமண்முத லாயினமாயையி லேதொகுத்தந், செல்லியினித்திரைப் போலிளைப்பாற்று மணுக்களையே." எ - ம். சங்காரகேவலத்துக்குக் கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது கேவலசகலசுத்தமென்று மூன்றவத்தைப்படுமிடத்து அதில் கேவலாவத்தையாவது மாயாகருவிகளெல்லாங் கழன்று ஆணவமலத்தான் மறைப்புண்டு மாயைதாரகமாக வொடுங்குவர்களென்னு முறைமையை யறிவித்தது. (உக)

அப்படி யாணவமலமென்ப தொன்றில்லை மாயாமலமுங் கன்மமலமுமேயுள்ளது ஆன்மாவு மநாதியேசுத்தனென்கிற ஐக்கியவாதிமத மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

இன்மைமலமாயைகன்மமென்றிரண்டேயிறைதானிலங்குபலவுயிர்களுமுன்புரிந்தவிருவினையின், றன்மை

களாலெவர்களுக்குந்தனுகரணபுவனந் தந்திடுமிங்கதனு லேயிருபயனுஞ்சார்ந்து, கன்மமெலாநேராகநேராதன் மருவக், கடவுளருளாலெவையுங்கழித்திடுவனதனுற், பி ன்மலமானவையணுகாபெருகொளிமுன்புளதே பெற்றி டுமென்றித்திறமென்பேசுமாறே. (உஉ)

மலமெனவேறிலை மாயையுங்கன்மமு
நிலவிடுமுயிர்க்கெனு மவர்நெறியுரைத்தது.

வி-ம். இன்மைமலம். எ-து. அப்படி யாணவமல மென்பதொன்றில்லை. பின்னையுள்ளதேதென்னில்,— மாயை கன்மமென்றிரண்டே. எ-து. மாயாமலமென்றுங் கன்மம லமென்று மிரண்டுமேயுள்ளது. ஆனுலிவை யான்மாவினிட த்திலேவந்த பொருந்தினமுறைமையெங்ஙனேயென்னில்,— இறைதானிலங்கு பலவுயிர்களு முன்புரிந்தவிருவினையின் ற ன்மைகளாலெவர்களுக்குந் தனுகரணபுவனந்தந்திடும்.எ-து. கத்தாவானவன் சுத்தராயிருக்கப்பட்ட வான்மாக்கள் முன் னேசெய்யப்பட்ட புண்ணியபாவங்களுக்கீடாகச்சர்வர்க்கு முடம்புகளையுந் தத்துவங்களையு மிருப்பிடங்களையும் புசிப் புகளையு முண்டாக்குவன். புசிப்பென்றது கூட்டுப்பொரு ளெனவறிக. அது வொழிவுகொண்டறியப்பட்டது.— இங் கதனுலே யிருபயனுஞ்சார்ந்து. எ-து. இவ்விடத்தந்தவுட ம்புமுதலானவையாலே புண்ணியபாவங்களைப்பொருந்தி ய நுபவித்து மேலார்ச்சித்து மிப்படிப்பிறந்திறந்துவருகிறவவ தரத்திலே,— கன்மமெலாநேராக நேராதன்மருவ. எ-து. கன்மங்களெல்லாம் வெட்டனவில்லையாம்படி துலையொத்த வவதரத்து,— கடவுளருளாலெவையுங் கழித்திடுவன். எ-து. கத்தாவுந் தனதுகாருண்ணியத்தினுலே யந்தக்கன்மங்களையு மாயையையும்போக்குவன்,— அதனுற்பின்மலமானவையணு

கா. எ-து. ஆகையாலே யான்மாவுக்குப் பின்புமாயாகன்மங் கள் பொருந்ாது,— பெருகொளிமுன்புளதே பெற்றிடும். எ - து. ஆன்மாவும் பழையபிரகாசத்தையுடைத்தாம்.—என் றித்திறமென்பேசுமாறே. எ-து. என்றிப்படிநீசொல்லுகிற முறைமையெப்படியிருந்தது.

வி - பு. ஈசுரவைக்கியவாதி யப்படியாணவமலமென் பதொன்றில்லை சுத்தனாயிருக்கிற வான்மாவை மாயையுங் கன்மமும் பின்புவந்து மறைக்குமென்றானென்பதற்கு. பி-ம். சங்கற்பநிராகரணத்தில். "கருமுகிலடர விரிதருகதிர்போ ன்- றறிவாமுயிரிற்பிரியாதேயும்" எ - ம். சித்தியாரில். "ம லமெனவேறொன்றில்லை மாயாகாரியமதென்னி, லிலகுயிர் க்கிச்சாஞானக் கிரியைகளெழுப்புமாயை, விலகிடுமலமிவ ற்றை வேறுமன்றதுவேறாகி, யுலகுடல்கரணமாகி யுதித்தி டுமுணர்ந்துகொள்ளே" இதுமறுப்பென்பது கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது ஈசுரவைக்யகிவாதி யாணவமல மில்லையென்று மாயாகன்மங்களே யுள்ளதென்றுஞ் சுத்தரா யுள்ள வான்மாக்கள்செய்த புண்ணியபாவங்களுக்கீடாக க் கத்தா வுடம்புமுதலாயினவற்றைக் கொடுக்க வதனாலே ஜநநமரணப்பட்டுக் கன்மவொப்புவந்து ஆன்மாப் பண்டு போலே சுத்தனென்றுஞ் சொன்னமுறைமையும் இது சித் தாந்தவழக்கல்லவென் றவனைமறுத்த முறைமையு மறிவி த்தது. (உஉ)

அப்படி நான்சொன்ன வத்தத்தை இத்திறமென் பேசு மாறே என்று உதாசனமாகச் சொல்லவேண்டுவா னேனெ ன்று ஈசுரவைக்கியவாதி கேட்க அப்படியாணவமலமில்லை மாயையுங் கன்மமுமேயுள்ளதென்று நீசொல்லுகிறது கொ ட்டைமுந்தினதோ பனைமுந்தினதோ வென்கிற அருவழக்

இலே வருமென்று மறுத்து மேலாணவமலமுண்டென்னு முறைமையை யருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

மாயைமுதலெனவினையின்பான்மைமுதலெனவே மன்னுபனைவிதைமரபின்மயங்குமலஞ்சுத்தற், சேயுநெறியென்கொல்தனியல்பாயின்முத்தி யென்பதென்மற்றிவைநிற்கவிருங்கலாதியுணர்வாய், மேயபின்றன்னுருவம் விளங்காமைவிளக்கு மிகுமுலகந்தனிலென்னி லிவைவிடுங்காலுணர்வுட், டோயுநெறியிலதாதலறியாமையென நீ சொல்லியதுமலமென்பர்துணிந்துளோரே. (உ௫)

அறிவுறுங்கலாதியா லறியாநிலையைச்
செறிவுறுமதுமலச் செய்தியாமென்றது

வி-ம். மாயைமுதலென விினையின்பான்மை முதலெனவே. எ-து. அநாதியிற்சுத்தனை வான்மாவினிடத்திலேயிந்த மாயாகன்மங்கள் கூடுமிடத்து மாயாதேசமுண்டாகக்கன்மமுண்டானதோ கன்மமுண்டாக மாயாதேகமுண்டானதோ விதிலெதுதான் முந்தினதென்னுமிடத்து,— மன்னுபனைவிதை மரபின்மயங்கும். எ-து. நிலைபேறுகப்பொருந்தப்பட்ட பனைமுந்தவுண்டாக விதையுண்டானதோ விதைமுந்தவுண்டாகப்பனையுண்டானதோவென்று மயங்குந் தன்மைக் கொக்கும். இந்தக்குற்றமன்றியும்,— மலஞ்சுத்தற் கேயுநெறியென்கொல். எ-து. நீசொன்னமாயாமலமுங் கன்மமலமுஞ் சுத்தனை வான்மாவினிடத்திலே பொருந்துகைக்குக் காரணமேதாம்,— அதனியல்பாயின். எ-து. அதற்கு வேறொருகாரணமு மில்லையது வியல்பாகவந்து கூடுமாயின்,— முத்தியென்பதெ

ன். எ - து. அப்படியியல்பேயாயில் வீடுபேறுண்டென்று சொல்லவேண்டுவதில்லை. அதுவேனென்னிற் சுத்தனாயிருக்கப்பட்ட வான்மாவை மாயாகன்மங்களியல்பாகச்சென்று பொருந்துமாகிற் சாயுச்சியம்பெற்ற விடத்தினு மாயாகன்மங்கள்சென்று பொருந்துகைக்கு வழக்குண்டாம். அதுகொண்டே முத்தியுண்டென்று சொல்லவேண்டுவதில்லை யென்றதெனவறிக. ஆகையால்,— மற்றிவைநிற்க. எ - து. (மற்றுவினைமாற்று.) நீசொல்லுகிற யிவையிற்றை விடுவாயாக அன்றியும்,— இருங்கலாதியுணர்வாய் மேயபின் றன்னுருவம் விளங்காமை. எ - து. பெரியகலையாதியாயுள்ள தத்துவங்கள் முப்பத்தொன்று முணக்கறியும்பகுதிக் குதவியாகப்பொருந்தி ஜீவிக்குமவதரத் தான்மரூபத்தை யறியாமலிருப்பானேனென்னில்,— விளக்குமிகு முலகந்தனில். எ-து. ஆன்மரூபந் தெரியாதபடி மாயாகருவிகள் மறைத்துத்தன் வடிவை மிகுதியாக விளக்கிக்கொண்டு நிற்கும் பிரபஞ்சத்திலே,— என்னிலிவை விடுங்காலுணர்வுட்டோயு நெறியிலது. எ - து. அப்படியானு லந்தத் தத்துவங்களை நீங்கினவிடத்திலு மறிவிலேடுங் கூடிப் பற்றுநெறியில்லாமலிருப்பானேன்,— ஆதலறியாமை. எ - து. அப்படியானதறியாமையாலென்று நீசொல்லில்,— எனநீசொல்லியது மலமென்பர்துணிந்துளோரே. எ - து. என்றுநீ சொல்லப்பட்டவிதனையே யாணவமலமென்று சொல்லுவர்கள் நூலினையுணர்ந் தறுதிப்பட்ட பெரியோர்கள். எ — று.

உதாரணம். தாலஸீசநியாயமாகிய கொட்டைமுந்தினதோ பனைமுந்தினதோ வென்பதுபோல மாயைமுற்பட்டதோ கன்மமுற்பட்டதோவென்று ஈசுரவைக்கியவாதியை மறுத்ததற்கு. பி - ம். சங்கற்பநிராகரணத்தில். "சுத்தவறிவெனிற்பாசஞ் செறியாமாயை - யுருவிருவினையால் வரு

மிருவினையு- முருவாலன்றி மருவாதிவற்றின்- முந்தியதேதோ வந்தணைவதற்கோ - ரோதுவேண்டும்." எ - து. கண்டுகொள்க. இனியியல்பாயின் முத்தியென்பதேனென்று மறுத்தது வெள்ளைப்புடவைக் கழுக்கேறினாற்போல முத்தியினு மாயா கன்மங்கள் மீளவுங்கூடுமென்றதெனவறிக. இதற்கு. பி-ம். சங்கற்பநிராகரணத்தில். "தானியல் பென்னில் வீடுற்றவரினுங் கூடக்கூடும்." எ - து. கண்டுகொள்க. இனிஎன். நீசொல்லியது மலமென்பதொன்று மறுத்ததற்கு. பி - ம். சங்கற்பநிராகரணத்தில். "அறிவிலாமை யென்றனையது மலமாக்- குறிகொளாள ரறைகுவரன்றே." எ - து. கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது ஆணவமலமென்ப தொன்றில்லை சுத்தனாயுள்ளவான்மாவை மாயாகன்மங்க ளியல்பாகவந்து பொருந்துமென்ற வைக்கியவாதியை நோக்கி யப்படியானால் கொட்டைமுந்தினதோ பனைமுந்தினதோவென்கிற அநுவழக்கிலே வருமென்று மியல்பாயின் முத்தியைப்பெற்றவிடத்தும் மீளவுமாயாகன்மங்கள்கூடுமென்றுமறுத்து ஆணவமலமுண்டென்றுநாட்டினமுறைமையு மறிவித்தது. (உரு)

அப்படியே யோராணவ மலமென்ப தொன்றுண்டானாலென்னாற் காணப்படாதோவென்று மீளவு மைக்கியவாதி வினவ அந்தவாணவமலமானது திருவருட்பிரகாசமுண்டானவர்களாலே காண்கிறதொழிய வுன்னாற் காணப்படாதென்றவனை மறுத் தருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

அந்நியமானவையுணர்த்தியநநியமாய்நிறைந்த வறிவறியாமையினானுமருணிலவுங்காலந், தன்னிலவனேயாவுமாய்நின்றதொன்மை தாமுணர்தலானுமுயிர்தானென

வொன்றிலதாய், மன்னியிடுமலமாயைகன்மங்கண்மாறி வந்திடுமிங்கிதுவழுவாதாதலினுன்மனத்தா, லுன்னரிய திருவருளையொழியமலமுளதென் றுணர்வரிதாலதனுண் மைதெரிவரிதாமுனக்கே. (உச)

பற்றுதல்விடுதல்மற் றவற்றுளதொன்று
யுற்றிடுமலமுண் டுணர்வரிதென்றது.

வி - ம். (அந்நியமானவையுணர்த்தி யநந்நியமாய்நிறைந்தவறிவறியாமையினுனும்.) எ - து. தனக்கு வேறானபிரபஞ்சத்தை யறிவித்துத் தனக்குவேறற நிறைந்துநிற்கிற திருவருளைத் தானறியாதபடியாலும்,—(அருணிலவுங்காலந்தன்னிலவனேயாவுமாய் நின்றதொன்மை தாமுணர்தலானும்.) எ - து. அந்தத் திருவருட்பிரகாசமுண்டான காலத்துத் தன்னிடத்திலே நிற்கிற சிவமுதருனே யெவ்விடத்தினு நிறைந்துநிற்கிற பழைமையைத் தானறிகையாலும்,—(உயிர் தானெனவொன்றிலதாய் மன்னியிடுமலம்.) எ - து. ஆன்மாவென்றொரு முதலில்லையென்னும்படி நிலைபெற்றுநிற்கு மாணவமலமானது. ஆணவமென்றொன்றுவேணுமோ மாயை தான்மறையாதோவென்னில்,—(மாயைகன்மங்கண் மாறி வந்திடும்.) எ - து. மாயாமலமுங் கன்மமலமுங் காரணத்தினுங் காரியத்தினும் விட்டும்பற்றியும்வரும்,—(இங்கிதுவழுவாது.) எ - து. இவ்விடத்திந்த மாயையுங் கன்மமுமாறிவருகிறதும் மலமெவ்விடத்துஞ் சகசமா யான்மாவோடு நிலைபெற்றுநிற்கிறதுந் தப்பாது,—(ஆதலினுன் மனத்தாலுன்னரிய திருவருளையொழிய மலமுளதென் றுணர்வரிது.) எ - து. இப்படியாணவமலஞ் சகசமாய் நிலைபெற்றுள்ளதாகையான் மனத்தினு னினைத்தற்கரிய திருவருட்பிரகாசித்தகாலத்தல்லது ஆணவமலமொன்றுண்டென்றறியப்படாது,

(ஆல் அசை.) அதனுண்மை தெரிவரிதாமுனக்கே. எ-து. அந்தத்திருவருளுனக்கில்லாதபடியாலே யந்த வாணவமலத்தினுண்மை யுன்னாலறியப்படாது. எ-று.

வி-பு. அந்நியமானவையுணர்த்தி யநந்நியமாய்நிறைந்த வறிவறியாமையினானுமென்றது ஐக்கியவாதியைமறுத்திப்பொழுதிந்த மாயாகன்மங்கள்கூடின சகலத்துத்தேகாதிபிரபஞ்சத்தையறிந்து மிந்த மாயாகன்மங்கள் கூடுவதற்கு முன்பு நிசுத்தனென்று சொன்னவவதரத் தான்மாவினோடைக்கியமா யெங்கு நிறைந்துநிற்கிற திருவருளைத்தரிசியாதிருந்தபடியாலு மநாதியே யக்கினியைக் காட்டமறைத்து நின்றாற்போல ஆன்மாவென்றொரு முதலில்லையென்னும்படி யாணவமல மறைக்கையினாலுமெனவறிக. என்றிங்ஙனமவனை மறுத்ததற்கு. பி-ம். சங்கற்ப நிராகரணத்தில் "முன்பு நன்றுடனொன்றியகாலை-யின்டமெய்துதற் கிலதயிராகலி- னீயலைபொருதமாயாவாதி-யாயினையமையும்." எ-ம். "மூலமலத்தாற் சாலுமாயை - கருமத்தளவிற்றருமுருவிறைவன்." எ-ம். கண்டுகொள்க. இனிமாயைகன்மங்கள் மாறிவந்திடுமென்பது மிந்தவாணவமலம்போல மாயாமலமுங் கன்மமலமு மான்மாவை யநாதியேபற்றிநிற்கவு மவையிற்றின் காரியங்கள் விட்டும் பற்றியும் வருமென்றதெனவறிக. அப்படிக் காரணமலமூன்று மான்மாவை யநாதியேகூடிநிற்குமென்பதற்கு. பி-ம். சித்தியாரில். "மும்மலநெல்லினுக்கு முளையொடுதவிடுமிப்போன், மம்மர்செய்தணுவினுண்மை வடிவினைமறைத்துநின்று." எ-து. கண்டுகொள்க. அப்படியந்தயாணவமல மநாதியே யான்மாவை மறைத்து நிற்க மாயாகாரியமான கலையாதிதத்துவங்க ளந்தமறைப்பை நீக்குமென்பதற்கு. பி-ம். சித்தியாரில். "போதகாரியமறைத்து நின்றதுபுகல்மலங்கா, ணோதலாந்துணமுமா

க வுயிரினுள்விரவலாலே, காதலாலவித்தைசிந்தத் தருங்கலை யாதிமாயை, யாதலாலிரண்டுஞ்சோதி யிருளென வேருமன்றே." எ - ம். "மலமெனவேறென்றில்லை மாயாகாரியமதென்னி, லிலகுயிர்க்கிச்சாஞானக் கிரியைகளெழுப்புமாயை, விலகிடுமலமிவற்றை." எ - ம். "பருதியை முகின்மறைப்பப் பாயொளிபதுங்கினாற்போ, லுருவுயிர்மறைக்கின் ஞானக் கிரியைகளொளிக்குமாகும், கருதிடுமிச்சாஞானக் காரியங்காயம்பெற்றால், மருவிடுமுயிர்க்குக்காயம் வந்திடாவிடின்மறைப்பே.' எ - ம். கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது ஆணவமலமில்லையென்ற வைக்கியவாதியைநோக்கி அந்தமலமுண்டென்றுஅநுபவத்தினாற்காட்டினமுறைமையுமந்தமலமுந்திருவருட்பிரகாசமுள்ளவற்றொழிய காணப்படாதென்னுமுறைமையு மறிவித்தது.(உச)

இப்படியுண்டென்று நாட்டப்பட்ட வாணவமலநீங்கும் வழியேதென்றுவினவச் சிவன்றன்னருளாலே மாயாகாரியமாகிய கலையாதிதத்துவங்களைக்கூட்டி மலபாகம்வருத்துவனென்னுமுறைமையை மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

புகலுமலமொழித்தற்குக்கலாதிமுதன்மாயை பொருந்தியிடுமரனருளாற்போதந்தீபஞ், சகலமெலாமுடனுயவாறுபோலத், தரும்ருளைமலமுயிர்கள்சாராமன்மறைக்கு, மிகவிவரும்மிவையுணரினிருள்வெளியாந்தன்மை யெய்துமிவைதன்செய்தியிலங்கும்விந்து, பகர்வரியவுணர்வாகியொளியாயுள்ளப் பான்மையினலொருநாதம்பட்டுந்தானே. (உரு)

மலநிலையொதுங்க மாயாகாரியங்
குலவிடுமிருளொளி குறியிதற்கென்றது.

வி - ம். புகலுமலமொழித்தற்குக் கலாதிமுதன் மாயை பொருந்தியிடு மரனருளால். எ - து. முன்னேசொல்லப்பட்ட வாணவமலத்தைப் போக்குதற்குக் கலையாதி தத்துவங்களாகிய காரியமாயை யான்மாவோடுங்கூடிந் தம்பிரானுர் காருண்ணியத்திஞலே. அதுவென்போல வென்னில்,— போதந்திபஞ் சகலமெலா முடனுய வாறுபோல. எ - து. ஆன்மபோதம் ஜீவிக்குமிடத்து விளக்கானது பிரகாசித் தெரியுங்கால் தகளியுந் திரியு நெய்யுங் கூடிப்பிரகாசித் தெரிந்தாற்போல. அப்படி யான்மாவையுங் கருவிகளையு மந்த வருளேகூட்டி ஜீவிப்பிக்குமாகி லந்த வருளை யிந்தவான்மாவாலறிந்து கூடப்படாதோ வென்னில்,— தருமருளை மலமுயிர்கள் சாராமன்மறைக்கும். எ - து. அப்படிக்கூடிநின்றறிவிக்கிற திருவருளை யான்மாவறியாதபடி யாணவமலமானது மறைத்துநிற்கும்,— இகலிவரு மிவையுணரி னிருள்வெளியாந்தன்மை யெய்தும். எ - து. இங்ஙன மாறுபட்டுவருகிற வாணவமலமு மாயாகாரியமும் விசாரித்துப்பார்க்குமிடத் திருளையு மொளியையுமுவமிக்கிற குறியை யுடைத்தா யிருக்கும்,— இவைதன் செய்தி. எ - து. இந்தமலங்களின் முறைமை யிப்படியாயிருக்கும். அன்றியு மிந்தப்பதத்துக்கு இங்ஙனஞ்சொல்லப்பட்ட செய்யுளைந்துங் கேவலத்தின் முறைமையாமென்று பொருளுரைப்பினுமாம். அஃதாவது "ஓங்கிவரும் பலவுயிர்கள்" என்ற செய்யுளில் "ஈங்குவரும்" என்ற பதந்தொடங்கி யிவ்வளவுங் கேவலாவத்தையின் முறைமையைச்சொல்லுகையினு லெனவறிக. மேற் சகலாவத்தைக்குச் சுத்தமாயையிற் காரியமாகிய விந்துசத்தியிற் ரோற்றமாகிய வாக்குக

ள் காரியப்படுமுறைமை யருளிச்செய்கின்றது.—இலங்கும் விந்து பகர்வரியவுணர்வாகி யொளியாயுள்ளப் பான்மையி ஞலொருநாதம் படருந்தானே. எ - து. விளங்காநின்ற விந்துசத்தி சொல்லுதற்கரிதாகிய வறிவுமாய் விளக்கமுமா யான்மாக்களிடத்திலே யவரவர்களுக்குண்டான கன்மங் களுக்கிடாக வாக்குகளைத் தோற்றுவிக்கைப் பொருட்டாக வொருநாதத்தை யுண்டாக்கும். எ - று.

உ - ம். புகலுமலமொழித்தற்குக் கலாதிமுதன்மாயை பொருந்தியிடும். எ - ரு. ஆணவமலபாகம் வருகைக்கு மாயாகாரியங்க ளான்மாவைவந்து பொருந்துமென் றைக்கிய வாதியை மறுத்ததற்கு. பி - ம் சிவஞானபோதத்தில் "மாயாதனுவிளக்காய்" எ - ம். சித்தியாரில், "எழுமுடல் கரணமாதி யிவைமல மலமலத்தாற், கழுவுவனென் றுசொன்ன காரணமென்னை யென்னிற், செழுநவை யறுவைசாணி யுவர்செறிவித் தழுக்கை, முழுவதுங் கழிப்பன் மாயை கொடுமலமொழிப்பன் முன்னோன்." எ - ம். கண்டுகொள்க. இனி தருமருளை மலமுயிர்கள் சாராமன்ம றைக்கும். எ - ரு. அருளானது விகாரப்படாது நிர்விகாரியாயிருக்கும். ஆன்மாத் தானேவிகாரப்பட்டறியுமென் கிற வவிகாரவாதியைநோக்கி மறுத்துச் சொன்னதாகவுமாம். இதற்கு. பி - ம். சங்கற்ப நிராகரணத்தில். "நீர்நிழலனைய சீர்பெறுகடவுளைச் - சேர்ந்தவர்க்கின்பம் வாய்ந்திடுமென்றனை - பாதவமென்றுஞ் சேதனமின்மையி - னிழைத்தோர்வம்பி னென்பதுந்துன்பம் - விளைத்தோர்தம்மில் வெறுப்புமொன்றிலதே." எ - து. கண்டுகொள்க. இனி யிருள்வெளியாந் தன்மையெய்தும். எ - து. ஆணவமலத்துக் கான்மாவைமறைக்கிறது சுபாவம் மாயாகாரியமான கலாதிகளுக் கந்தமறைப்பை நீக்குகிறதுசுபாவம் என்றுபொ

ருட்கூறியதற்கு. பி - ம். சித்தியாரில். "போதகாரிய மறைத்து நின்றது புகல்மலங்கா, ளோதலாங் குணமுமாக வுயிரினில் விரவலாலே, காதலா லவித்தைசிந்தத் தருங்கலை யாதிமாயை, யாதலா லிரண்டுஞ்சோதி யிருளென வேறுமன்றே." எ-து. கண்டுகொள்க. இனி யிலங்கும் விந்து பகர்வரிய வுணர்வாகி. எ - கு. விளக்கத்தைச்செய்கிறவறிவுமாயென்று பொருட்கூறிய தேதென்னில். இது மூவகை யான்மாக்களுக்கு மறிவைக் கொடுக்கையினாலே யெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில். "மூவகை யணுக்களுக்கு முறைமையால் விந்துஞான, மேவின தில்லையாயின் விளங்கிய ஞானமின்றும்." எ - து. கண்டுகொள்க. இனி யுள்ளப்பான்மையினா லொருநாதம் படரும். எ - து. சூக்குமை வாக்கெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில்."சூக்குமைவாக்கதுள்ளோர் சோதியாயழிவதின்றி." எ-து கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது ஆணவமலநீங்குதற்கு மாயாகாரியமான கலையாதிதத்துவங்களைச் சிவன்கூட்டுவனென்று மப்படிக்கூட்டி யறிவிக்கிறசிவனை யான்மாவறியாதபடி யாணவமலமறைக்குமென்னு முறைமையு மிங்ஙனங் கேவலாவத்தையைமுடித்து மேற்சகலாவத்தையிற் சூக்குமைவாக்குத்தோற்றுமுறைமையு மறிவித்தது. (உரு)

மேற்பைசந்தி மத்திமை வைகரியென்னும் வாக்குகள்மூன்றுங் காரியப்படுமுறைமை யருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

வந்தடைந்துபின்னமாய்வன்னங்கடோற்றம் வரும
டைவுபடவொடுக்கிமயிலண்டசலநேர்;சிந்தைதனிலுண
ர்வாகும்பைசந்தியுயிரிற் சேர்ந்துவருமவைமருவுமுரு

வெவையுந்தெரித்து, மூந்தியிடுஞ்செவியிலுருதுள்ளுணர்வாயோசை முழங்கியிடுமெத்திமைதான்,வைகரியிலுதானன், பந்தமுறுமுயிரணைந்துவந்தமொழிச்செவியின் பாலணையநினைந்தபொருள்பகருந்தானே.　　　(உரு)

சூக்குமைமுதலாச் சொற்பதமீரு
வாக்கிடும்வாக்கி னடைவினைவகுத்தது.

வி-ம். வந்தடைந்து. எ-து. அந்தநாதமாகிய வறிவுதானே வடிவாகச் சூக்குமைவந்து உந்தித்தானத்திலே பொருந்தி,— பின்னமாய் வன்னங்கடோற்றம் வருமடைவுபடவொடுக்கி. எ-து. வெவ்வேறாய்வரு மக்கரங்களினுடைய சொரூபங்க டோன்றுமுறைமை தெரியாதபடி மறைத்துநிற்கும்,—மயிலண்டசலநேர். எ-து. மயில்முட்டைக்குள் ஜலமானது புறம்பேமயிலினிறமாய்ச் சொரூபீகரிக்துத்தோன்றச்செய்தே யுடைத்தால் ஜலமாய்விடுமாப்போல,— சிந்தைதனி லுணர்வாகும் பைசந்தி.எ-து. பைசந்தி வாக்கானது ஆன்மாவினிடத்திலே நினைவுமாத்திரமாய் நிற்கும்,—உயிரிற்சேர்ந்துவரு மவைமருவு முருவெ வையுந்தெரித்து மூந்தியிடுஞ் செவியிலுருதுள்ளுணர்வாயோசை முழங்கியிடு மத்திமைதான். எ-து. மத்திமைவாக்கானது மேற்சொல்லப்போகிற வக்கரங்களினுடைய சொரூபங்களைப் பிராணவாயுவோடுங்கூடியொழுங்குபடநிறுத்திச் செவிக்குங்கேளாதே யான்மாவினிடத்திலே யுள்ளறிவுமாய்த் தொனியுமுண்டாய்முற்பட்டுநிற்கும்,—வைகரியிலுதானன் பந்தமுறு முயிரணைந்து வந்தமொழிச்செவியின் பாலணையநினைந்தபொருள் பகருந்தானே.எ-து வைகரிவாக்கானது முற்கூறிய பிராணவாயுவோடுங்கூடிவந்து உதானவாயுவிலேயும்பந்தித்துச் செவிப்புலனிடத்திலே கேட்கத்தக்கதாக நினைவிலுண்டானவசனத்தைச் சொல்லும். எ-று.

நு-ம். இங்ஙனஞ் சொல்லப்பட்ட வாக்குகளுக்குத் தானமும் வடிவுமாவது சூக்குமைக்குத்தான நாபியடியு நாத தத்துவம் வடிவுமெனவறிக. பைசந்திக்குத்தானம் உந்தியும் பிராணவாயு வடிவுமெனவறிக. மத்திமைக்குத்தான நெஞ்சுங்கண்டமுமாய்நின்று பிராணவாயுவடிவுமெனவறிக. வைகரிக்குத்தானம் தாலுமூலமும் பிராணவாயுவு முதானவாயுவும் வடிவெனவறிக. ஆக விங்ஙனஞ்சொல்லப்பட்ட வாக்குகளுக்கும். பி-ம். சித்தியாரில். "சூக்குமைவாக்கதுள்ளோர்சோதியாயழிவதின்றி" எ-ம். "வேற்றுமைப்பட்டவன்னம்." எ-ம். "உள்ளுணர்வோசையாகி." எ-ம். "வைகரி செவியிற்கேட்பதாய்." எ-ம். வரும்விருத்தநாலையு மொட்டிக் கண்டுகொள்க. இந்தவைகரிவாக்குக் காரியப்படு மிடத்து நாக்கு உண்ணாக்கு பல்லு உதடு மூக்கு இவையோடுங்கூடி நின்று காரியப்படுமெனவறிக. இவையிற்றுக் த. பி-ம். நேமிநாதத்தில். "உந்தியிற்றோன்றி யுதானவளிபிறந்து, கந்தமலிநெஞ்சுதலைகண்டத்து-வந்தபின், ஞாசிநாவண்ணமிதழெயிறு மூக்கென்னப், பேசுமெழுத்தின் பிறப்பு." எ-து. கண்டுகொள்க. ஆக விங்ஙனஞ் சொல்லப்பட்ட விந்தவாக்குகளுந்தோன்றுகைக்குக் காரணமாகப் பஞ்சமையென்றொரு வாக்குண்டென்று மதற்குத்தானம் மூலாதாரமென்று மதுபிரணவ சொரூபமாயிருக்குமென்றுஞ் சொல்லுவாருமுளர். அதனையாராய்ந்துகண்டுகொள்க. இந்தவாக்குகள் காரியப்படுமிடத்துச் சாந்தியாதீதமுதலான கலைகளைந்தினோடும் பற்றுக்கோடாகநின்று காரியப்படுமெனவறிக அப்படிக்காரியப்படுமிடத்துப் பராசத்தியுந் திரோதசத்தியு மிச்சாசத்தியு ஞானசத்தியுங் கிரியாசத்தியுங் கூடிநின்று காரியப்படுத்துமெனவறிக. இதில் சூக்குமைவாக்குச் சாந்தியாதீதகலையுஞ் சாந்திகலையும் பற்றாகநிற்கப் பராசத்தியுந் திரோதசத்தியுங்

காரியப்படுத்துமெனவறிக. இனி பைசந்திவாக்குக்கு வித்தியாகலை பற்றுகநிற்க விச்சாசத்தி காரியப்படுத்துமெனவறிக. இனி மத்திமைவாக்குப் பிரதிட்டாகலைபற்றுகநிற்க ஞானசத்தி காரியப்படுத்துமெனவறிக. இனி வைகரிவாக்குக்கு நிவிர்த்திகலைபற்றுகநிற்கக் கிரியாசத்திகாரியப்படுத்துமெனவறிக. அன்றியுமுற்கூறிய பஞ்சமையென்னும் வாக்குக்கூட்டுகில் பராசத்தியுஞ் சாந்தியாதீதகலையு மதற்குக் கூட்டிக்கொள்க. இங்ஙனஞ்சொல்லப்பட்ட வாக்குகளுலு ங் கலைகளைந்திேனாடுங்கூடிக் காரியப்படுமென்பதற்கு. பி-ம். சித்தியாரில், "நிகழ்ந்திடும்வாக்குநான்கு நிவர்த்தாதிகலையைப்பற்றித், திகழ்ந்திடுமஞ்சதாக." எ - து. கண்டுகொள்க. இதனுள் நிகழ்ந்திடும்வாக்குநான்கு மென்றதுகொண்டே நிகழாதவாக்குமொன்றுண்டென்பதுகருத்தாகப் பஞ்சமையென்னும் வாக்குண்டானதெனவறிக. இங்ஙனங் கூறப்பட்டவையிற்றில் சத்திகளிவையிற்றைக் காரியப்படுத்துமெனவறிக. இதற்கு. பி - ம். இந்நூலில். மேல்வருகிற "இத்தகைமை யிறையருளால்"என்னும் விருத்தத்தை முடியவொட்டிக் கண்டுகொள்க. இனி யுயிரிற்சேர்ந்துவருமவ்வமருவும். எ - து. உயிரொன்பதுகொண்டே ஆன்மாவென்பாருமுளர். அது பிராணவாயுவெனவறிக. அப்படிப் பிராணவாயுவை யுயிரொன்பதற்கு. பி - ம். சித்தியாரில் வாக்குகள் காரியப்படுமிடத்துச் சொன்னவிருத்தத்தில். "உள்ளுணர்வோசையாக்கிச் செவியினிலுறுதல்செய்யா, தொள்ளியபிராணவாயு" எ - ம். "ஐயமில்பிராணவாயு வடைந்தெழுந்தடைவுடைத்தாம்." எ-ம். கண்டுகொள்க. உயிர்வாயுவென்றுஞ் சொல்லுமென்பதற்கு. பி- ம். "உயிரொலி வங்கூழ்சுலநம்வாதம் வளிமாருதம்." என்னுமிலக்கணங்களினுங் கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது சூக்குமைவாக்கு நாதவடிவாக வுந்தியைவந்துகூடி யாதாமொன்றைச் சொல்லுமிடத்துப் பைசந்திவாக்கானது அந்தவசனத்துக்குரித்தாகிய வக்கரங்களை மயில்முட்டையில் ஜலம்போலத் தோற்றுவித்து நிற்குமென்றும் மத்திமைவாக்கானது பிராணவாயுவையுங் கூடி யுள்ளே தொனியாய் நிற்குமென்றும் வைகரிவாக்கானது பிராணவாயுவோடு உதானவாயுவையுங் கூடிச் செவிப்புலனுக்குக் கேட்பதாக வசனிக்குமென்றும் வருமுறைமையை யறிவித்தது. (உசு)

இந்தவாக்குக ளோலோடுங்கூடி யான்மா வருளாலேகாரியப்படுமிடத்துச் சுத்ததத்துவங்களிநிலே காரியப்படுமென்று மந்தச் சுத்ததத்துவங்களிலே யசுத்தமாயையிற் றோற்றப்பட்ட கலையாதிதத்துவங்களிற் கலையும் வித்தையுங் காரியப்படு முறைமையு மேலருளிச்செய்வானெடுத்துக் கொண்டருளியது.

இத்தகைமையிறையருளாலுயிரறியுமறிவுக் கீடாக வாடாதேயீரிரண்டிலுரைத்த, வித்தைமுதலேவரான்விளங்குஞான மேவியிடுமெனவுரைப்பரசுத்தமாயை,வைத்த கலைதான்மூலமலஞ்சிறிதேநீக்கி மருவும்வகைதெரிவிக்கும்வாயில்களின்பயனைப், புத்திதரவித்தையிடைநின்றறிவையுயிர்க்குப்பொருந்தியிடும்வகைபுணரும்புனிதசத்தி புணர்ந்தே. (உஎ)

சுத்ததத்துவத்தாற் றேல்லுயிருணர
வைத்திடுங்கலைவித்தை மருவுமென்றது.

வி - ம். இத்தகைமையிறையருளா லுயிரறியுமறிவுக்கீடாக வாடாதே யீரிரண்டில், அநுவயம். இத்தகைமைவா

டாதே யீரிரண்டிலிறையருளா லுயிரறியு மறிவுக்கீடாக. எ - து. இந்தமுறைமையாலே கெடாதேவருகிற வாக்குக ளாலினுங்கூடித் தம்பிரானார் காருண்ணியத்தினாலே யான் மாவறியுமறிவுக்குத்தக்கதாக,— உரைத்த வித்தைமுத லைவ ரான் விளங்கு ஞானமேவியிடுமென வுரைப்பர். எ - து. முன்னே சுத்தமாயையிற் றோற்றமாகச் சொல்லப்பட்ட சுத்தவித்தை ஈசுரன் சாதாக்கியஞ் சத்தி சிவமென்கிற த த்துவங்களைந்தினாலும் பிரகாசிக்கிறவறிவு பொருந்தியிடு மென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். அன்றியும்,— அ சுத்தமாயை வைத்த கலைதான் மூலமலஞ் சிறிதேநீக்கி மரு வும்வகை தெரிவிக்கும் வாயில்களின்பயனை. எ - து. அ சுத்தமாயையிலே யுண்டாகப்பட்ட கலையானது அந்தச்சுத் ததத்துவத்திற் சத்திதத்துவ முதவியாகக்கொண் டான் மாவை மறைக்கப்பட்ட வாணவமலத்தைச் சற்றேயொது க்கி யிந்திரியங்களின் பயனாகிய விடயங்களை யான்மாப்பொ ருந்தும்படி யெழுப்புவிக்கும்,— புத்திதரவித்தை யிடைநின் றறிவை யுயிர்க்குப் பொருந்தியிடும் வகைபுணரும். அநுவ யம். வித்தை யிடை புத்திதர வுயிர்க்கு நின்றறிவை பொ ருந்தியிடும் வகைபுணரும். எ - து. சுத்தமாயையிற்றோற் றமாயுள்ள சுத்தவித்தை யுதவியாகக்கொண்டு சொல்லப்ப ட்ட வசுத்தமாயையிற் றோற்றமாயுள்ள வித்தையானது அ ந்தவிடயங்களை யான்மாக்கொள்ளுமிடத் தின்னதென்று நிரு பித்தறியத்தக்க ஞானத்தை யான்மாவுக்கும் விடயங்களுக் குநடுவேநின்று அறிவுண்டாம்படி கூட்டும். இதுதான் கூட் டுமுறைமை யாராலே யென்னில்.— புனிதசத்தி புணர்ந்தே எ - து. சுத்தனாகிய சிவனுடையசத்திக டொழிலாகப்பூ ண்டுநின்றுசெலுத்த வதனோடுங்கூடிக்கொண்டுநின்று. எ-று.

ரு-ம். உரைத்த வித்தைமுதலைவரான் விளங்குஞானம். எ-கு. சுத்ததத்துவமைந்தினாலு மான்மாக்களுக்கு ஞானமுண்டாமென்றதெங்ஙனே யென்னில் சிவசத்திகள் சுத்ததத்துவங்களைக் காரியப்படுத்தச் சுத்ததத்துவங்களசுத்தமாயையிற் கலாதிகளைக் காரியப்படுத்த அவையிற்றினாலே யான்மாக்களுக் கறிவுண்டாமென்றதெனவறிக. அஃதாவது கிரியாசத்தி சத்திதத்துவத்தை யெழுப்பச் சத்திதத்துவங் காலமுநியதியுங்கலையையுமெழுப்பக் கலை தழற்பொடி நீங்கினாற்போல வாணவமலத்தைச் சிறிதேநீக்கி யந்தக் கலையே வடிவாக வான்மாவுக்குச் சிறிதறிவை யுண்டாக்க ஞானசத்தி சுத்தவித்தையை யெழுப்ப சுத்தவித்தை வித்தையையெழுப்ப வித்தை யான்மாவுக் கறிவையுண்டாக்கு மென்றதெனவறிக. இனி புத்திதரவித்தை யிடைநின்று எ-கு. புத்திதரவென்பதை புத்திதத்துவமென்பாருமுளர் அது பொருளாகாதெனவறிக. "புந்தி பஞ்சாசற்பாவகமும் பண்ணிவிக்குந் தானே" என்று புத்திதத்துவத்தின் காரியப்பாடு பின்பேவருகையா லதனை யிவ்விடத்துக் கூறவேண்டுவதில்லையெனவறிக. ஆகையால் புத்திதரவென்பதை யான்மா வந்தவிடயங்களை நிரூபித்தறியவென்று பொருட்கூறுமதே வழியெனவறிக.

இதனாற்சொல்லியது முன்னர்ச்செய்யுளிற் கூறிய வாக்குகளாலினு மான்மாக்களறியுமிடத்துச் சிவதத்துவங்களினாலே யறியுமென்று மவையாலே யசுத்தமாயையிற் கலையும் வித்தையுங் காரியப்படுமுறைமையையு மறிவித்தது. (உஎ)

மேல் அராகதத்துவமு நியதிதத்துவமுங் காலதத்துவமுங் காரியப்படுமுறைமை யருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

பேசரியவராகந்தன்கன்மத்துக்கீடாய்ப் பெற்றதனி லாசைதனைப்பெருகுவிக்குநியதி, தேசமிகுமரசர்தருமா ணைசெய்தி செய்தவரைத்துய்ப்பிச்குஞ்செய்கைபோல, நேசமுறுந்தங்கன்மநிச்சயித்துநிறுத்துநிகழ்காலங்கழிகா லமெதிர்காலமென்றே, யோசைதரவருங்காலமெல்லைப லம்புதுமை யுறுவிக்குமிறைசத்தியுடனாய்நின்றே. (உஅ)

மாலுறுமராசமு மன்னியநியதியுங்
காலமுமூன்றின் கருத்தையுமுரைத்தது.

வி - ம். பேசரியவராகந்தன் கன்மத்துக்கீடாய்ப்பெற் றதனிலாசைதனைப் பெருகுவிக்கும். எ - து. சொல்லுதற் கரிய வராகதத்துவ மான்மாக்கள் செய்தகன்மத்துக்கீடாக ப்பெற்றதிலே நின்றும் பெறுததுக்காசையை மிகவுமுண் டாக்கும்,— நியதிதேசமிகுமரசர்தருமாணைசெய்தி செய்த வரைத்துய்ப்பிக்குஞ் செய்கைபோல நேசமுறுந்தங்கன்ம நிச்சயித்துநிறுத்தும். எ- து. நியதிதத்துவமானது பொ துவாக விராச்சியம்பண்ணு மிராஜாவினுடைய வாக்கினையை க்கொண் டுலகி லான்மாக்களை யெல்லைவிட்டுச்கடவாதபடிய ந்தவாக்கினையிலேநிறுத்தி நடத்து மந்திரியைப்போல விவ் வான்மாக்கள்செய்த கன்மத்தின்வழியன்றி யேறக்குறைய ப்போகாதபடி யறுதியாகநிறுத்தும்,— நிகழ்காலங்கழிகா ல மெதிர்காலமென்றே யோசைதரவருங்கால மெல்லைபல ம் புதுமையுறுவிக்கும். எ - து. காலதத்துவமானது நடக் கிறகாலமென்று மிறந்தகாலமென்றும் வருகிறகாலமெ ன்றுஞ் சொல்லப்பட்டுப் போனகாலத்தி லுண்டாகியவெல் லையு நடக்கிறகாலத்திலுண்டாகிய பலத்தையும் வருகிறகா லத்தி லுண்டாகியபுதுமையு முண்டாக்கிநிற்கும். இவைதா னாலே யுண்டாக்குமென்னில்,— இறைசத்தியுடனாய்நின்

றே. எ - து. கத்தாவினுடைய திருவருளான சத்தி கூடிநின்றுகாரியப்படுத்தும். எ - று.

ரு - ம். பேசரியவராகம். எ - து. ஆசையின்மிகுதி சொல்லுதற்கரிதென்றதெனவறிக. கழிகாலத்துக்கெல்லையென்றது ஆண்டு திங்கள் நாளெனவறிக. நிகழ்காலத்துக்குப் பலனென்றது தனக்கநுபவமான புசிப்பாயுள்ள விடயங்களை யெனவறிக. எதிர்காலதுக்குப் புதுமையென்றது தானறியாததன்றி யறிந்தவற்றையும் புதுமை யென்றதெனவறிக. இனி யிறைசத்தியுடனாய்நின்றே யென்றது இச்சாசத்தி ஈசுரதத்துவத்தை யெழுப்ப ஈசுரதத்துவ மராகதத்துவத்தை யெழுப்ப அராகதத்துவ மான்மாவுக்கிச்சையையெழுப்பு மென்றதெனவறிக. இனி நியதி யாதாமொருபொருளை நிச்சயிக்குமிடத்துக் கிரியாசத்தி சத்திதத்துவத்தைக்கொண்டு நியதியையெழுப்ப நியதி யாதாமொருபொருளை நிச்சயிக்கு மென்றதெனவறிக. இனி காலங்கூட்டுமென்றது கிரியாசத்தி தத்துவத்தைக்கொண்டு காலத்தை யெழுப்பக் கால மான்மாப்புசிக்கு மவதரங்களைக் கூட்டுமென்றதெனவறிக.

இதனாற்சொல்லியது ஆன்மாவுக் சராகதத்துவங் கன்மங்களுக்கீடாகப் பெற்றதைச் சிறிதாக்கிப் பெருததிலே யாசையை மிகவுமுண்டாக்குமென்று நியதிதத்துவ மிராஜாக்கினைபோலக் கன்மத்தை நிச்சயித்து நிறுத்துமென்றுங் காலதத்துவங் கழிகாலத்தினெல்லையு நிகழ்காலத்திற் பலத்தையு மெதிர்காலத்திற் புதுமையு முண்டாக்குமென்றும் வருமுறைமையை யறிவித்தது. (உஅ)

இங்ஙனஞ் சொல்லப்பட்ட தத்துவமைந்துங் காரியப்படுகிற சமுகந்தானே புருட தத்துவமென்றும் பிரகிருதி த

த்துவங் காரியப்படு மவதரத்து மூன்றுகுணமாக நின்று காரியப்படு முறைமையு மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

ஐவகையாலுறுபயன்கணுகரவருங்கால மதுபுருட்தத்துவமென்றறைந்திடுவரறிந்தோர், மெய்வகையகலாசுத்திதனினிதற்குஞ்சுத்தி மேவியிடும்வகைதானும்விரும்பியநூல்விளம்புஞ், செய்வகையின்றொடர்ச்சியிங்குத்தோன்றுவிக்குங்குணத்தின் சேர்வுபுரிபிர்கிருதிதிரிகுணமாமவைதா, னிவ்வகையிற்சாத்துவிதராசததாமதமா யியம்புவர்களொன்றிரண்டுகுணமேற்கவுடைத்தே. (உகூ)

புகன்றவற்றுல்வரு புருடதத்துவமு
மகன்றமானு மதன்குணம்விரித்தது.

வி - ம். ஐவகையாலுறுபயன்கணுகரவருங்கால மதுபுருடதத்துவமென்றறைந்திடுவ ரறிந்தோர். எ-து. ஆன்மாவானது காலம் நியதி கலை வித்தை யராக மிவையைந்துந் தனக்குடம்பாகக்கொண் டிந்திரியங்களுடனேகூடிச் சத்தாதிவிடயங்களைப் புசிக்கவருகிறவவதரத்தைப் புருடதத்துவமென்று சொல்லுவார்கள் பெரியோர்கள்,— மெய்வகையகாலசுத்திதனினிதற்குஞ்சுத்தி மேவியிடும்வகைதானும்விரும்பியநூல்விளம்பும். எ - து. உண்மையாகச் சொல்லப்பட்ட மந்திரமுதலானவைந்து நிவர்த்திமுதலான கலைகளைந்தினுமடைந்து சுத்திபண்ணுமிடத் திந்தப்புருட தத்துவத்தையுஞ் சுத்திபண்ணப்படுமென்று நம்மால்விரும்பப்பட்ட திவ்வியாகமங்கள் சொல்லும். அன்றியும், மெய்வகையகலாசுத்தி. எ - கு. மெய்யாகியசரீரத்தி லைவகைப்பட்ட கலாசோதனைசெய்யுமிடத்து மெனவறிக.—செய்வகையின்றொடர்ச்சி யிங்குத்தோன்றுவிக்குங் குணத்தின் சேர்வுபுரிபிரகி

ருதிதிரிகுணமாம். எ - து. ஆன்மாக்கள் முன்ஜநநத்திற் செய்த கன்மத்துக்கேதுவாயுள்ள சுகதுக்கங்களை (யிப்பொழுதுண்டாக்கும்) குணங்களின்வடிவாய்ப்பொருந்துகிற (பிரகிருதி மூன்றுவகையாகிய குணமாம்,— அவைதான். எ- து. அந்தக்குணங்களின்பெயராவன,— இவ்வகையிற் சாத்துவிதராசத தாமதமாமியம்புவர்கள். எ - து. இந்தமுறைமையிலே சாத்துவிதகுணமென்று மிராசதகுணமென்றுந் தாமதகுணமென்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள்,— ஒன்றிரண்டு குணமேற்கவுடைத்தே. எ - து. இந்தக்குணங்கள் மூன்றுக்கு மொவ்வொன்றுக் கிவ்விரண்டுகுணமாகவாறுகுணமு மநாதியே பொருந்துமியல்பினையுடைத்து. எ-று.

ரு - ம். மெய்வகையகலாசுத்தி. எ-ரு. மெய்யாகியசரீரத்தி லைவகைப்பட்டகலாசோதனைசெய்யுமிடத்து மென்னவுமாமென்றுபொருட்கூறியதேதென்னில் ஆசாரியன் தீக்ஷை செய்யுமவதரத்துக் கலாசோதனைசெய்யவேண்டுகையா லதற்குநிவர்த்திமுதலான கலைகளைந்தினையுஞ் சீடன்சரீரத்திலே யைந்துவகைப்படுத்திச் செய்யவேண்டுகையா லப்படிச்சொன்னதெனவறிக. அதற்குவகை யெங்ஙனேயென்னில் மூலாதாரந்தொடங்கி யுந்திக்குமே லெண்விரலளவு நிவர்த்திகலைக் கெல்லையெனவறிக. அதற்குமண்டலம் அக்கினிமண்டலம். ஆதாரம் மூலாதாரமுஞ் சுவாதிட்டானமும். அக்கரம் அகாரம். பிரகாசஞ் சொரிதழற்கொழுந்து. மலம் மாயாமலம். அவத்தை சாக்கிரம். மாத்திரை - ௩. மந்திரம் இருதயமுஞ் சத்தியோசாதமும். பதம் ஓநமோ முதல்மாதேவராந்தமாக - உஅ - ம் - வன்னம் க்ஷகாரமொன்றும். புவனம் காலாக்கினிமுதல் வீரபத்திரர்கள்முடிவாகிய - ளஅ - ம். தத்துவம் பிருதிவியொன்றும். தெய்வம் பிரமா. தொழில் சிருஷ்டி. என்றிங்ஙன நிவர்த்திகலைக்குக் கண்டுகொ

ள்க. இனி பிரதிட்டாகலைக்கு ஹிருதயந்தொடங்கி கண்டத்தளவு மெல்லையெனவறிக. அதற்கு மண்டலம் ஆதித்தமண்டலம். ஆதாரம் மணிபூரகம். அக்கரம் உகாரம். பிரகாசம் அக்கினியு மாதித்தனுங் கூடின பிரகாசம். மலம் கன்மமலம். அவத்தை சொப்பனம். மாத்திரை - ௨. மந்திரம் சிரசும் வாமதேவமும். பதம் மகேசுரமுதல் அருபிணிமுடிவாகிய - ௨௧ - ம். வன்னம் ஹம் முதல் டம் அந்தம் - ௨௪ - ம். புவனம் அமரேசர்முதல் சிகண்டிமுடிவாகிய - ௫௬ - ம். தத்துவம் பிருதிவிநீங்கலாக ஆன்மதத்துவம் - ௨௰௩ - ம். தெய்வம் விஷ்ணு. தொழில் திதி. என்றிங்ஙனம் பிரதிட்டா கலைக்குக் கண்டுகொள்க. இனி வித்தியாகலைக்குக் கண்டத்துக்குமேல் தாலுமூலத்தளவுமெல்லை நாலங்குலமெனவறிக. அதற்குமண்டலம் ஆதித்தமண்டலம். ஆதாரம் அநாகதம். அக்கரம் மகாரம். பிரகாசம் மின். மலம் மாயேயமலம். அவத்தை சுழுத்தி. மாத்திரை - ௧. மந்திரம் சிகையு மகோரமும். பதம்வியாபினிமுதல்தியானகாரியமுடிவாகிய-௨௰-ம்.வன்னம் ஞம் முதல் கம் அந்தமாகிய-௭-ம்.புவனம் தியானமுதல்வாமமுடிவாகிய-௨௭-ம். தத்துவம் வித்தியாதத்துவம் - ௭-ம்.தெய்வம் உருத்திரன். தொழில்சங்காரம். என்றிங்ஙனம் வித்தியாகலைக்குக் கண்டுகொள்க. இனி சாந்திகலைக்குத் தாலுமூலத்துக்கு மேற்புருவமத்தியத்தளவுமெல்லை நாலங்குலமெனவறிக. இதற்கு மண்டலம் சோமமண்டலம். ஆதாரம் விசுத்தி. அக்கரம் விந்து. பிரகாசம்விளக்கொளி. மலம் திரோதாயி. அவத்தை துரியம். மாத்திரை - ½. மந்திரம் கவசமுந் தற்புருடமும். பதம் நித்திய நியோகினிமுதல் வியோம வியாபினி முடிவாகிய ௧௪-ம். வன்னம் ஹம் முதல் கம் அந்தமாக - ௩ - ம் புவனம் ஙி முதல் சதாசிவமுடிவாகிய-௧௮-ம். தத்துவம் சுத்தவித்தை

ம் ஈசுரமும் சாதாக்கியமும். தெய்வம் மகேசுரம். தொழில்திரோபாவம். என்றிங்ஙனஞ் சாந்திகலைக்குக் கண்டுகொள்க. இனி சாந்தியாதீதகலைக்கு புருவமத்தியத்துக்குமேல்மூன்றங்குல மெல்லையெனவறிக. இதற்குமண்டலம் சோமமண்டலம். ஆதாரம் ஆக்ஞை. அக்கரம் நாதம். பிரகாசம் வாளொளி. மலம் ஆணவமலம். அவத்தை துரியாதீதம். மாத்திரைகால். மந்திரம் நேத்திரமும் அத்திரமும் ஈசானமும். பதம் பிரணவ மொன்றும். வன்னம் அம் முதல்- அஃ அந்தம் - கசு-ம். புவனம் நிவர்த்திமுதல் சமாநாந்தம்முடிவாகிய - க௫-ம். தத்துவம் சத்தியுஞ் சிவமும். தெய்வம்சதாசிவம். தொழில் அநுக்கிரகம். என்றிங்ஙனஞ் சாந்தியாதீதகலைக்குக்கண்டுகொள்க. ஆக விங்ஙனங் கலைகளைந்துக்கும் கண்டுகொள்க. இங்ஙனங் கூறிவந்த பொருள்களிற் கலாசோதனைக்குமந்திரங்கள் பதங்கள் வன்னங்கள் புவனங்கள்தத்துவங்கள்கலைகள் என்று சொல்லியிருக்க விவைநீங்கலாக மற்றுள்ள ஆதாரமுதலான பொருள்கள் கூறவேண்டியதேதென்னில் அஃதாவது கலாசோதனை செய்யுமிடத்துச் சரீரத்தி லைவகைப்படுத்திச் செய்யவேண்டுகையா லந்தத்தத்துவங்கடோறு நிற்கும்பொருள்களை வகுத்துக்கூறியதெனவறிக. இற்கு. பி - ம். சித்தியாரில். "மந்திரங்கள்முதலைந்துங் கலையைந்தில்வியாத்தி." என்னும் விருத்தமுதலாகிய செய்யுள் மூன்றிலும் பிரசாதவகவலினும் தத்துவப்பிரகாசத்தில் "இவ்வகைய மனவிகற்ப மெட்டுமேவி லெழுவிலகாரமுஞ் சொரிநழல் மாத்திரையும் எ - ம். விருத்தமுதலாகிய செய்யுளெட்டினுங் கண்டு கொள்க. இனி யொன்றிரண்டுகுணமேற்க வுடைத்தே. எ - கு. ஒவ்வொரு குணத்திலே யிவ்விரண்டுகுணமேற்க வுண்டாமென்று பொருட்கூதறியற்கு வகுப்பேதென்னில் சாத்துவிதத்தி லிராசத

முஞ் சாத்துவிதத்திற்றாமதமும் இராசதத்திற் சாத்துவிதமு மிராசதத்திற்றாமதமும் தாமதத்தி லிராசதமுந் தாமதத்தில் சாத்துவிதமும் என்றிங்ஙனங் கண்டுகொள்க. இதற்கு. பி - ம். சித்தியாரில். "வருங்குணவடிவாய்மூலப் பிரகிருதி கலையிற்றோன்றித், தருங்குணமூன்றாயொன்றிற் றான்மூன்றாய்மும்மூன்றாகி, இருங்குணரூபமாகி யிசைந்திடுமெங்கு மான்மாப், பெருங்குணவடிவாய்ப்போக சாதனம்பெத்த மாமே." எ - து. கண்டுகொள்க. குணத்தின் சேர்வுபுரிபி ரகிருதி என்பதற்கு மிந்தப்பிரமாணத்திலேகண்டுகொள்க.

இதனாற்சொல்லியது காலமு நியதியுங் கலையும் வித்தை யு மராகமுங்கூடின சமுகந்தானே புருடதத்துவமென்றுந் தீக்ஷையிலே கலாசோதனை செய்யுமிடத் திந்தப்புருடதத்து வத்துக்குஞ் சோதனைபண்ணவேண்டுமென்றுங் குணசொ ரூபமாயுள்ள பிரகிருதிதானே மூன்றுகுணமாகக் காரியப் படுமென்னு முறைமையு மறிவித்தது. (உக)

இங்ஙனஞ்சொல்லப்பட்ட குணமூன்று மொன்பதுவ கையாகக் காரியப்படுகைக்கு வகுப்பெங்ஙனேயென்று வி னவ வவை காரியப்படுமுறைமையு மேல் புத்திதத்துவங் கா ரியப்படுமுறைமையு மருளிச்செய்வா னெடுத்துக்கொண்ட ருளியது.

அலகில்குணம்பிரகாசம்லகுதைவியாபிருதி யடர்ச் சிமிகுஞ்சௌரவமுந்நியம்மிவையடவே, நிலவியிடுமும் மூன்றுமுயிரொன்றிற்கலந்தே நிற்குமிவைநிறைபுலனின் பயனெவையுங்கவருங், குலவிவருபோகங்கொளிடமா மாருக் குறைவிலொளியாமலகில்புலனிடத்தினொருமை, பலவகையுமுடையதாய்ப்பரனருளாற்புந்தி பஞ்சாசற் பாவகமும்பண்ணுவிக்குந்தானே. (௩0)

விளம்பியகுணநவ மாகவிரிந்தும்
வளந்திகழ்புத்தியைம் பதுவகைத்தென்றது.

வி - ம். அலகில்குணம். எ - து. எண்ணிறந்திருக்க ப்பட்ட விந்தக்குணத்தின் விரிவைச் சொல்லுமிடத்து முன் சொல்லப்பட்ட பிரதானமான குணமூன்று மொழிந்து ஏறினகுண மாறுக்கும் வகையாவன,— பிரகாசம். எ - து. பிரகாசமாயிருக்கும். அஃதாவது சாத்துவிதத்திலே யிராசதங்கூடினால் அந்தச்சாத்துவிதத்தைப் பிரகாசித்துக்கொண்டுநிற்கு மென்றதெனவறிக.—லகுதை. எ - து. நொய்தாயிருக்கும். அஃதாவது சாத்துவிதத்திலே தாமதங்கூடினால் நல்லொழுங்குகளை மறைத்துக்கொண் டந்தப்பிரகாசத்தை நொய்தாக்கிக்கொண்டு நிற்குமென்றதெனவறிக.— வியாபிருதி. எ - து. தெரியாமல் மறைத்துநிற்கும். அஃதாவது இராசதத்திலே தாமதங்கூடினால் நல்லொழுங்குகளை மறைத்துக்கொண்டு நிற்குமென்றதெனவறிக.—அடர்ச்சிமிகும். எ-து. செறிவித்துநிற்கும்.அஃதாவது இராசதத்திலே சாத்துவிதங்கூடினால் நன்மைகளைச் செறிவித்துநிற்கு மென்றதெனவறிக.— கௌரவம். எ - து பெருமையை யுண்டாக்கும். அஃதாவது தாமதத்திலே யிராசதங்கூடினால் கர்வத்திலே பெருமையைப்பண்ணி நிற்குமென்றதெனவறிக.— அந்நியம். எ - து. நல்லநியமமல்லாததைச் செய்வித்துநிற்கும். அஃதாவது தாமதத்திலே சாத்துவிதங்கூடினால் அந்நிய நியமங்களைச் செய்வித்துக்கொண்டு நிற்குமென்றதெனவறிக.— இவையடைவே நிலவியிடும். எ - து. இந்தக்குணங்களிங்ஙனஞ்சொன்ன முறைமையிலே பொருந்திநிற்கும். இவை வெவ்வேறாய்நிற்குமோ கூடிநிற்குமோ வென்னில்,— மும்மூன்று முயிரொன்றிற் கலந்தேநிற்கும். எ - து. இவை யொன்பதுகுணமு மொரு ஆன்மாவிலே கூடிநிற்கும். ஒன்

பதுகுணமாவது சாத்துவிதத்திற் சாத்துவிதமென்றும் சாத்துவிதத்தி விராசதமென்றும் சாத்துவிதத்திற் ருமதமென்றும், இராசதத்திலிராசதமென்றும் இராசதத்திற் சாத்துவிதமென்றும் இராசதத்திற் ருமதமென்றும், தாமதத்திற் ருமதமென்றும் தாமதத்திற் சாத்துவிதமென்றும் தாமதத்தி விராசதமென்றும் இங்ஙன மொன்பதுவகைப்படும். அதற்குவகையேதென்னில் சாத்துவிதத்திற் சாத்துவிதமாவது துறவும் சாந்தமும் மோக்ஷத்திலே மிகுந்ததாகமு மாகையெனவறிக. சாத்துவிதத்தி விராசதமாவது துறவும்சாந்தமு மிடையேநழுவ முத்தியில்முயலுகையுமா மெனவறிக. சாத்துவிதத்திற் ருமதமாவது துறவும் சாந்தமு மோக்ஷத்திலே முயலுகையுமன்றி விடயவிருப்பமு முண்டாகையெனவறிக. இனி யிராசதத்தி விராசதமாவது தன்மத்திலாசையோடுங்கூடி யிடைவிடாமற் செய்கையெனவறிக. இராசதத்திற் சாத்துவிதமாவது யாவர்க்குங் கிருபையோடே யறங்களைச்செய்கை யெனவறிக. இராசதத்திற் ருமதமாவது இவையிற்றினையிகழ்தலும் பாவத்தொழில்களைச் செய்தலு மெனவறிக. இனி தாமதத்திற் ருமதமாவது மயக்கமு மிகழ்ச்சியும் பாவமு மாசையும் பயமு முறக்கமு மென்வறிக. தாமதத்தி விராசதமாவது தகாதனசெய்தலு முண்ணுதனவுண்ணலுங் களிப்பும் வெகுளியுமெனவறிக. தாமதத்திற் சாத்துவிதமாவது வேதாகமங்களில் விருத்தமாயிருக்கிற கிருத்தியமான சிறுதேவதைகளைப் பிரதிபத்தி பண்ணுகையெனவறிக. இப்படி யெண்ணிறந்தகுணங்களை யுடைத்தாகையாலே யலகில்குணமென்று சொல்லப்பட்டதெனவறிக. இங்ஙனங் குணபேதங்களாகக் கூடிநின்றுசெய்யுமிடத்து;— இவை நிறைபுலனின் பயனெவையுங் கவரும். எ - து. இந்தக்குணங்களொன்பது நிறைந்துநிற்கிற விந்திரியங்களின் ப

யனுன விடயங்களைத் தன்னிடத்திலேகவர்ந்துகொள்ளும்—குலவிவரு போகங்கொளிடமா மாருக்குறைவிலொளியாம். எ - து. சர்வராலுங் கொண்டாடப்பட்டுவருகிற புசிப்புகளை யான்மாக்கொள்ளுகிறவிடமுமா யுடல்முழுதும்விட்டு நீங்காத குறைவற்ற பிரகாசமுமாய் நிற்கும். இவ்வளவும் வித்தியாதத்துவத்தின் கலைதொடங்கிப் பிருகிருதி மாயையாகியகுணங்கள் காரியப்படுகையை யருளிச்செய்து மேலான்மதத்துவத்திற் புத்திதத்துவங் காரியப்படுகையை யருளிச்செய்கின்றது.—அலகில் புலனிடத்தி ஞெருமை பலவகையுமுடையதாய்ப் பரனருளாற் புந்தி பஞ்சாசற்பாவகமும் பண்ணுவிக்குந்தானே. எ - து. எண்ணிறந்த விருத்தியாகியவிடயங்களை யிந்திரியகளைக்கொண் டான்மாக்கொள்ளுமிடத்து நிச்சயித்தலைப் பலவகையாலுமுண்டாவதாய்ச்சிவனுடையவநுக்கிரகத்தினுலே புத்தியான்ஐம்பதைம்பதுபேதங்களை யொவ்வொருகுணங்கடோறுஞ்செய்துநிற்கும்.எ-று.

ரு - ம். இந்தப்புத்தியின் விருத்தி யெங்ஙனே யென்னில் அவ்வியத்தமாவது மூன்றுகுணங்களுந் தோன்றுமல்வடவித்துப்போலேயிருந்த வவதரமெனவறிக. குணதத்துவமாவது வடவித்திலேநின்று மங்குரந் தோன்றினுற்போல வவ்வியத்தத்திலே மூன்ருய்த்தோன்றிச் சமமாயலைவறநின்றவவதரமெனவறிக. வேறுபட்ட குணங்களையுடைத்தாயேற்றக்குறைச்சல் புத்திமுதலான தத்துவங்களெனவறிக. புத்தி தத்துவமாவது இராசதமுந் தாமதமுங்குறைந்து சாத்துவிதகுணமேலிட்ட வவதரமெனவறிக. இந்தப்புத்தியினது காரியமாவது தன்ம ஞான வைராக்கிய வைஸ்வரியமென்றும் அதன்ம அஞ்ஞான அவைராக்கிய அநைஸ்வரியமென்று மெட்டுவகையாம். இதில் தன்மத்திலேநின்றும் பத்துபாவகர்தோன்றும். ஞானத்திலேநின்று நூற்றெண்பது

பாவகந்தோன்றும். வைராக்கியத்திலே நின்று மறுபத்து நாலுபாவகந்தோன்றும். ஐஸ்வரியத்திலே நின்று நூற்றெழுபத்தாறு பாவகந்தோன்றும். எ - ம். மற்றவதன்மத்திலே நின்று முப்பத்தெட்டுபாவகந் தோன்றும். அஞ்ஞானத்திலேநின்று முப்பத்தெட்டு பாவகந்தோன்றும். அவைராக்கியத்திலேநின்று நூறுபாவகந் தோன்றும். அநைஸ்வரியத்திலேநின்று மெட்டுபாவகந்தோன்றும். ஆகபுத்தியினுடையகாரிய மறுநூற்றொருபத்து நாலெனவறிக. அப்படியிருக்க இந்நூலிலே பஞ்சாசற்பாவகமென்று நானூற்றைம்பதாகச் சொல்லுவா னேனென்னி லப்படியுஞ் சிலவாகமங்களிலே சொல்லுகையாலெனவறிக. அன்றியும் பஞ்சாசற்பாவகமுமென்ற வும்மைகொண்டே மற்றதுமுண்டெனவறிக. இனி புத்திதத்துவத்தை அலகில்புலனிடத்தினொருமைபலவகையுமுடையதாய் என்றதேதென்னில் அது கன்மாகன்மங்களுமுடையதாய் சத்தாதிவிடயங்களிலே நிச்சயித்தலுமுடையதா யின்பதுன்பங்களிலே மோகத்தையு முடையதாய் அறிவுதொழில்களுமுடையதாய் நிற்கையினாலேயப்படிச் சொன்னதெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில். "சித்தமாமவ்வியத்தஞ் சிந்தனையதுவுஞ்செய்யும், புத்தியவ்வியத்திற்றோன்றிப் புண்ணியபாவஞ்சார்ந்து, வத்துநிச்சயமும்பண்ணி வருஞ்சுகதுக்கமோகப், பித்தினின் மயங்கிஞானக் கிரியையும்பேணிநிற்கும்." எ - து. கண்டுகொள்க. இனி புந்தி பஞ்சாசற்பாவகமும் பண்ணுவிக்கும். எ - கு. புத்திதத்துவமானது குணங்களோடுங்கூடிச் சம்பந்தமா யிருக்கையினாலே யொருகுணத்துக் கைம்பதுவகையாக வொன்பதுகுணத்துக்கு நானூற்றைம்பதுவகையாகப் பேதித்ததெனவறிக. என்றிங்ஙனம் புத்திகுணத்தோடு சம்பந்தமாய்நிற்கு மென்பதற்கு. பி - ம். தத்துவவிளக்கத்தி

ல். "எண்ணியபுத்தியில் முக்குணஞ்சேரியல் பாற்கரந்து" எ - து. கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது குணதத்துவ மொன்பதுவகையாகக்காரியப்படுமுறைமையும் புத்திதத்துவ மொன்பதுகுணத்துக்குமொவ்வொருகுணத்துக்கைம்பதைம்பதாக நானூற்றைம்பது பாவகமாகக்காரியப்படுமுறைமையுமறிவித்தது. (௫0)

மேல்ஆங்காரமு மனதுஞ் சித்தமுங் காரியப்படுமுறைமையை யருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

ஆனதனுவதனிலுறு மனிலனையுமியக்கி யாங்காரநீங்காதவகந்தைக்குவித்தா,யானலதுபிறரொருவரெனையொப்பார்புவியி னில்லையெனுமியல்பினதாமிந்திரியம்புலன்க, டானுகருமளவிலதின்முந்தியுறுமிச்சை தானுருவாய்ச்சங்கற்பசதாகதியுந்தந்து, மானதமானதுநிற்குஞ்சிந்தைநினைவையம் வந்துதருமனமொழியவகுப்புணர்தே.

அகந்தைக்கிடமா மாங்காரத்துட
னிகழ்ந்தெழுமனஞ்சித்த மிவ்வகைத்தென்றது.

வி - ம். ஆனதனுவதனிலுறு மனிலனையுமியக்கி யாங்காரநீங்காதவகந்தைக்குவித்தா யானலதுபிறரொருவரெனையொப்பார்புவியி னில்லையெனுமியல்பினதாம். எ - து. ஆங்காரதத்துவமான தான்மாக்கள் கன்மத்துக்கீடாகவுண்டானசரீரத்திலே பொருந்திப்போதும் வாயுவையு மியங்கும்படி நிறுத்தி நீங்காதமமதைக்கு மூலமுமாய் நானேயொழியப் பிறரெனக்கொப்பார் பூமியிலில்லையெனு மியல்பினையுடையதாய்நிற்கும்.இனி மனதுகாரியப்படும்வகையாவது,— இந்திரியம்புலன்கடானுகருமளவிலதின் முந்தியுறுமிச்சை தானுருவாய்ச் சங்கற்பசதாகதியுந் தந்து மானதமானது நி

ற்கும். எ - து. இந்திரியங்களானது விடயமாகிய புல ன்களைப் புசிக்குமிடத் ததற்குமுந்திச்செல்லுமதாயிருக்கிற விச்சையேதனக்கு வடிவாய்த் தனக்குவேண்டினதிலே ச தாசாலமுஞ் சங்கற்பித்துக்கொண்டுநிற்கு மனதானது. இ னி சித்தங்காரியப்படும் வகையாவது,— சிந்தைநினைவு. எ - து. சித்தமானது நினைவுமாத்திரமாய் நிற்கும். இங்ங னமிவை காரியப்படுமிடத்து,— ஐயம்வந்துதரு மனமொழி யவருப்புணுதே. எ - து. யாதாமொன்றின்மேலே செல் லுமிடத்து ஆமோவல்லவோவென் றையப்பாட்டையுமு டைய மனதாலொழிய வவை காரியப்படமாட்டாது. எ-று.

இதனாற்சொல்லியது யானெனதென்னு மமதையையு டைய வாங்காரமு மாமோவல்லவோவென்கிற சந்தேகத்தி னையுடைய மனது நினைவுமாத்திரமாயிருக்கிற சித்தமுங் கா ரியப்படுமுறைமையை யறிவித்தது. (ருக)

மேல்சோத்திராதியுஞ் சத்தாதியும் வசனாதியும் வாக்கா தியுமாகத் தத்துவமிருபதுங் காரியப்படுமுறைமையை யரு ளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

சொன்னமுறைசெவிதுவக்குநோக்குநாக்குத் துண் டமிவையைந்திற்குந்தொகுவிடயமாக, மன்னியசத்தப் பரிசரூபரசகந்த மருவியிடுமிவையடைவேவாக்குப்பாத ம்,பின்னர்வருபாணிமிகுபாயுவினோடுபத்தம் பேசலுறு மைந்திற்கும்பிறங்கொலிகொள்வசன, முன்னரியகமன தானவிசர்க்காநந்த முற்றதொழில்பெற்றிடுவதுண்மை யாமே. (ருஉ)

ஞானமுங்கன்மமு நண்ணுமிந்திரியமு
மூனமில்விடயமுந் தொழிலுமுரைத்தது.

வி - ம். சொன்னமுறை செவிதுவக்குநோக்குநாக்குத் துண்டமிவை யைந்திற்குந்தொகுவிடயமாக. எ - து. முன் சொல்லிவந்த முறைமையிலே யுட்கரணங்களன்றியே புற க்கரணமாயுள்ள சோத்திரம் தொக்கு சக்ஷு சிங்நுவை ஆக் கிராணமென்னு மிவையைந்துக்குங் கூடத்தக்க விடயமா க,— மன்னியசத்தப்பரிசரூபரசகந்தமருவியிடும். எ - து. நிலைபெற்ற சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்த மிவையைந்தும் பொருந்திடும்,— இவையடைவே வாக்குப்பாதம் பின்னர் வருபாணி மிகுபாயுவிேனாடுபத்தம் பேசலுறுமைந்திற்கும். எ - து. வாக்கும் பாதமும் பின்வரப்பட்டபாணியும் மிகு தலையுடையபாயுவும் இதனோ டுபத்தமுமென்று சொல்லப்ப ட்ட கன்மேந்திரியமைந்திற்கும்,— பிறங்கொலிகொள் வ சனமுன்னரியகமனதான விசர்க்காநந்தமுற்றதொழில் பெ ற்றிடுவதுண்மையாமே. எ-து. விளங்கப்பட்ட வோசையை யுடைய வசனமும் நினைத்தற்கரிய கமனமும் தானமும் வி சர்க்கமும் ஆநந்தமுமென்று பொருந்தப்பட்ட வைந்துதொ ழிலு மடைவே யுண்டாகிறது முறைமையாம். எ - று.

ந - ம். வாக்கென்றது வாயெனவறிக. இவையடை வே என்றதற்கு வகையாவது சோத்திரத்தின்வழித்து வா க்கு. தொக்குவின்வழித்துப்பாதம். சக்ஷுவின்வழித்துப்பா ணி. சிங்நுவின்வழித்துப்பாயுரு. ஆக்கிராணத்தின் வழி த்து உபத்தம். என்னு மிவையிற்றைக் காரியப்படுத்து மவ தரத்திலுங் கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது புறக்கரணமாயுள்ள ஞானேந்திரி யமாகிய சோத்திராதியு மதன்விடயமாகிய சத்தாதியுங் கன்மேந்திரியமாகியவாக்காதியு மதன்தொழிலாகியவசனாதி யும்ஆகவிருபதுங்காரியப்படுமுறைமையையறிவித்தது. (௩௩)

மேற்பூதங்களைந்துங் காரியப்படுமுறைமையை யருளிச் செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

முந்தியவைம்பூதங்கள்வானாதியாக முயங்கியநற்செ விநாசிகண்ணுமெய்ம்முறையா, லிந்தவயினின்றுவருமை ம்புலனுமுயிர்தா மெய்தும்வகைதம்முருவினிலங்கியிடு ம்புறத்தும், வந்தடையவிடங்கொடுக்குநிரந்தரமாய்வா னம் வாயுமிகச்சலித்தெவையுந்திரட்டுந்தீவெம்மை, தந் தவைசுட்டொன்றுவிக்குநீர்குளிர்ந்துபதமே தருமுரத் துத்தரிக்குமிகுதரணிதானே. (௩௯)

ஒன்றுமைம்பூதங்க ளுள்ளும்புறம்பு
நின்றுகாரியப்படு நெறியிதுவென்றது

வி - ம். முந்தியவைம்பூதங்கள் வானாதியாக. எ- து. தத்துவங்களெல்லாவற்றினு முந்தத்தரிசநப்பட்டுவருகிற ஆ காசமாதியான பூதங்களைந்தினும்,— முயங்கியநற்செவிநாசி கண்ணு. எ - து. பொருந்தப்பட்ட சோத்திரமுதலாக்கிரா ணமீறுகவுள்ள விந்திரியங்களைந்துமிடமாக,— மெய்ம்முறை யாலிந்தவயினின்று வருமைம்புலனும். எ - து. உண்மையா கவடைவே யிந்தவிடயங்களிலே நின்றுகூடாநிற்கும் வி டயங்களைந்தும், அன்றியும் இந்தப்பதத்துக்கு இந்திரியங் களைந்திற்கு மடைவிலே பொருட்சொல்லவேண்டுகில் "முயங் கிய நற்செவிமெய்கண்ணுசி முறையானிந்தவயினின்று வரு மைம்புலனும்" என்றுபாடமோதி பொருட்படுத்துமிடத்து பொருந்தப்பட்ட நன்மைப்பகுதியினையுடைய சோத்திரம் தொக்கு சக்ஷு சிங்நுவை ஆக்கிராண மிவையடைவேநின்று வருகிறசத்தாதியாகிய விடயங்களைந்துமென்று பொருட்படு த்திக்கொள்க.—உயிர்தாமெய்தும்வகை தம்முருவி னிலங்கி

யிடும். எ - து. ஆன்மாக்கள் பொருந்தும்படி தந்தாஞ்சரீரங் களிலே விளங்காநிற்கும்,— புறத்தும். எ - து. உள்ளன் றியே புறம்பேயும் பூதங்கள் ஜீவிக்கும்படியாவது,— வந்த டைய விடங்கொடுக்குநிரந்தரமாய் வானம். எ - து. ஆ காசமானது சர்வமுந் தன்னிடத்திலேவந்து பொருந்துகை க் கிடத்தினையுங் கொடுத்து வெளியாய்நிற்கும்,—வாயுமி கச் சலித்தெவையுந்திரட்டும். எ - து. வாயுவானதெல் லாத்தையு மிகுதியாக வியக்கிவித்துக் கூட்டும்,—தீவெம் மைதந்தவைசுட்டொன்றுவிக்கும். எ - து. அக்கினியா னது உஷ்ணத்தையு முண்டாக்கித் தன்னோடுங்கூடினவை யிற்றையுஞ் சுட்டொன்றுபடுத்தும்,— நீர்குளிர்ந்துபதமே தரும். எ - து. அப்புவானது தன்னோடுங்கூடினவையிற்றை க்குளிர்வித்து நெகிழ்ச்சியாக்கும்,— உரத்துத்தரிக்குமிதுக ரணிதானே. எ - து. பிருதிவியானது கடினமா யெல்லா வற்றையுந் தாங்கிநிற்கும். எ - று.

ரு - ம். முந்திய வைம்பூதங்கள் தம்முருவினிலங்கி யிடுமென்றது ஆன்மாக்கள்சோத்திராதிகளைக்கொண்டு சத் தாதிகளை யறியுமிடத்துப் பூதங்களிடமாகநின்று கொள்ள வேண்டுகையா லெனவறிக. அதற்குவகையாவது ஆகாச மிடமாகநின்று சோத்திரத்தைப்பொருந்திச் சத்தத்தை ய றிவன். வாயுவிடமாகநின்று தொக்கைப்பொருந்திப் பரிசத் தையறிவன். தேயுவிடமாகநின்று சக்ஷுவைப்பொருந்தி யு ருவத்தை யறிவன். அப்புவிடமாகநின்று சிங்நுவையைப் பொருந்தி இரதத்தையறிவன். பிருதிவியிடமாகநின் ருக்கி ராணத்தைப்பொருந்தி கந்தத்தையறிவன். இப்படியேஞா னேந்திரியங் காரியப்பட்டாற்போல வாகாசமாதியான பூதங்களிடமாகநின்று கன்மேந்திரியமான வாக்காதிகள் கா ரியப்படுமுறைமையை யநுபவத்தாற் கண்டுகொள்க. தம்

முருவினென்றது பூதரூபமென்றுமாம். புறத்துமென்ற வும்மைகொண்டே வுள்ளுமப்படிக் காரியப்படுமென்றதென வறிக.

இதனாற்சொல்லிய தான்மா சத்தாதிகளை யறியுமிடத்துப்பூதங்களிடமாக நின்றறியுமென்று மந்தப்பூதங்கள் காரியப்படுமிடத் துள்ளும்புறம்புமாகநின்று காரியப்படுமென்றும் வருமுறைமையை யறிவித்தது. (௫௫)

இங்ஙனஞ்சொல்லப்பட்ட தத்துவமுப்பத்தாறுஞ் சுத்தமாயிருப்பதொன்றோ வசுத்தமாயிருப்பதொன்றோ வென்றும் இந்தத்தத்துவங்களோ டான்மா கூடிநிக்குமிடத் திவர்களுக்குண்டாகிய பயனேதென்றும் வினவ மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

இந்நிரையினைந்துசுத்தமேழசுத்தாசுத்த மெண்மூன்றுமசுத்தமெனுமிவைமுப்பத்தாறு, மன்னியதத்துவங்களிடைமயங்கிநெடுந்துயர்தா மருவுமுருநிலையழியவரும்பொழுதுவரியார், பன்னகமண்டசங்கனவுபடர்வுகையேமுன்னம் பகரவருங்கலாதிநிலைபரவியசூக்குமமாந், தன்னுருவினணைந்துபயனருந்தியரனருளாற் றனையினிடைவருமென்றுசாற்றுநூலே. (௫௪)

தூலவுடல்விட்டுச் சூக்குமவுருவுடன்
மேலுறுபயன்றுய்த்து மீளுமென்றது.

வி - ம். இந்நிரையில், எ - து. இந்தமுறைமையிலே,— ஐந்துசுத்தம். எ-து.முன்னே "உன்னலரும் பரசிவன்றன்னருளாலே" என்னும் விருத்தத்திற் றோற்றமாகச் சொல்லப்பட்ட சிவதத்துவமைந்துஞ் சுத்ததத்துவமென்று பேராம் — ஏழசுத்தாசுத்தம். எ - து. வித்தியாதத்துவமேழும் சுத்தா

சுத்தமென்றுபேராம்,— எண்மூன்றுமசுத்தம். எ - து. ஆன்மதத்துவமிருபத்துநாலு மசுத்தமென்றுபேராம்,— எனுமிவைமுப்பத்தாறும். எ - து. என்றிங்ஙனமூன்றுவகையாகச்சொல்லப்பட்ட தத்துவங்களினது தொகைமுப்பத்தாறென்று நாட்டப்பட்டிருக்கும்,— மன்னியதத்துவங்களிடைமயங்கி. எ - து. இப்படிநிலைபெற்றதத்துவங்களினடுவே யான்மாமயக்கமுற்று,— நெடுந்துயர்தாமருவுமுருநிலையழியவரும்பொழுது. எ - து. மிகவுஞ்சுகதுக்கவேதனைகள் பொருந்தப்பட்ட தூலசரீரத்திலேயுள்ள கன்மந்தொலைந் திதனைவிட்டுப்போங்காலத்து,—வரியார் பன்னகமண்டசங் கனவுபடர்வகையே. எ-து. வரிபொருந்தினபாம்புதோலுரித்துப் போமாறுபோலவு முட்டையில் ஜநநமாயுள்ளவை அந்தத்நோடுவிட்டு நீங்குமாறுபோலவு நனவிலேயுள்ளவர்கள் கனவிலே யடையுமாறுபோலவும்,— முன்னம்பகரவருங்கலாதிநிலைபரவிய சூக்குமமாந் தன்னுருவிலணைந்து பயனருந்தி. எ - து. முன்னே சொல்லப்பட்டு வருகிற கலைபாதியாயுள்ள தத்துவமுப்பத்தொன்றும் விரிந்திருக்கப்பட்ட சூக்குமதேகமான யாதனுசரீரத்தைப் பொருந்தி சுவர்க்கநரகங்களிலுண்டான வின்பதுன்பங்களைப் புசித்து,— அரனருளாற் றரையினிடை வருமென்று சாற்றுநூலே. எ - து. தம்பிரானார் காருண்ணியத்தினாலே மீளவும் பூமியின்கண்ணே வருமென்று சாத்திரங்கள் சொல்லும். எ - று.

ரு - ம். சிவதத்துவமைந்தையுஞ் சுத்தமென்ற தேதென்னில் அநுசுத்தமாயையிற் றோற்றமாகையாலுங் கத்தா கொள்ளப்பட்ட திருமேனியெல்லா மதினிடமாகக் கொள்ளுகையாலும் வேதாகமங்கடோற்றுகையாலு மெனவறிக. இனி வித்தியாதத்துவ மேழையுஞ் சுத்தாசுத்தமென்றதே

தென்னில் இவையிற்றைச் சுத்ததத்துவங்கள் காரியப்படு த்துகையாலு மசுத்தமாயையிற் றோற்றமாகையாலு மெனவ றிக. இனி யான்மதத்துவ மிருபத்துநாலையு மசுத்தமென்ற தேதென்னி லது பிரகிருதியிற் றோற்றமாகையாலு மும்மல த்தையுடைய சகலர்க்குத் தனுகரணபுவன போகங்களா யி ருக்கையாலு மெனவறிக. இனி வரியார்பன்னகமண்டச மென்றது தூலவுடல்விட்டுச் சூக்குமதேகத்தோடும் போகி றத்துக் குவமையெனவறிக. இனி கனவு படர்வகையே யென்றது ஒருஉடலிற்செய்தகாரிய மற்றோருடலிற் றெரி யாததற் குவமையெனவறிக. இனி கலாதிநிலைபரவியசூக்கு மமாமென்றது கலையாதிதத்துவ முப்பத்தொன்றுங் கூடியே சூக்குமதேகமாமென்றதெனவறிக. இனி பயனருந்தி யென் றது தூலதேகத்தோடுங் கூடிநின்று செய்தபுண்ணியபாவத் துக்குத்தக்கதாகச் சூக்குமதேகத்தோடுங்கூடி யியமதண்ட த்தினு நரகசுவர்க்கங்களிலுள்ள வின்பதுன்பங்களினு மநு பவிக்கிறதெனவறிக. இனி தரையினிடைவருமென்றது அ ப்படித்தொலைந்துந் தொலையாத சேடகன்மத்தைப் புசிப்ப தாக மீளவுந் தூலதேகத்தை வந்தெடுக்கையெனவறிக.

இதனாற்சொல்லியது தத்துவ முப்பத்தாறுஞ் சுத்தமெ ன்றுஞ் சுத்தாசுத்தமென்று மசுத்தமென்று மிந்தத் தத்துவ ங்களினோடுங்கூடி நிற்கப்பட்ட வான்மாக்கள் தூலதேகத் தைவிட்டுப் போய்ச் சூக்குமதேகத்தோடுங்கூடி யின்பதுன் பங்களை யியமதண்டத்தினு நரகசுவர்க்கங்களினு மநுபவி த்து மீளவும் பூமியின்கண்ணேவந்து தூலதேகத்தை யெடுப் பர்களென்றும் வருமுறைமையை யறிவித்தது. (௩௪)

இங்ஙனம் ஜநநமரணப்பட்டுவருகிற வான்மாக்களெடு க்கப்பட்ட யோனிபேத மெத்தனைவகைப்பட் டிருக்குமென்

றுவினவ நால்வகைத்தோற்றமு மெழுவகைப்பிறப்பு மெண்பத்து நான்குநூறாயிர மியோனிபேதமுமா யிருக்குமென்னு முறைமையை மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

தோற்றியிடுமண்டசங்கள்சுவேதசங்கள்பாரிற் றுதைந்துவருமுற்பீசஞ்சராயுசங்களுன்கி, னூற்றமிகுதாபரங்கள்பத்தொன்பதென்று மூர்வபதினைந்தமரர்பதினொன்றேடுலவா, மாற்றருநீருறைவனநற்பறவைகளுற்காலிமன்னியிடும்பப்பத்துமானுடரொன்பதின்ம, ரேற்றியொருதொகையதனிலியம்புவர்கள்யோனி யெண்பத்துநான்குநூறாயிரமென்றெடுத்தே. (கூரு)

பாயிரமாகவெண் பத்துநான்குநூ
றாயிரயோனிக் கடைவிதுவென்றது.

வி - ம். தோற்றியிடு மண்டசங்கள் சுவேதசங்கள் பாரிற்றுதைந்துவரு முற்பீசஞ் சராயுசங்களுன்கின். எ - து. ஆன்மாக்கள் ஜநநமெடுக்குமிடத்து முட்டையிற்றேன்றுவனவேர்வையிற்றேன்றுவன பூமியிற் செறிந்துவருகிற வித்திற்றேன்றுவன பைக்குடரிலே தோன்றுவன. இந்தநால்வகைத்தோற்றத்திலு முண்டாகப்பட்ட வெழுவகைப்பிறப்பாவன,— ஊற்றமிகுதாபரங்கள் பத்தொன்பதென்றும். எ-து, மிகவுமுறுதிபெற்றுடைய தாபரவர்க்கங்கள் பத்தொன்பது நூறாயிரவர்க்கமென்றும்,— ஊர்வபதினைந்து. எ - ஊர்ந்து திரிவன பதினைந்து நூறாயிரவர்க்கமென்றும்,— அமரர் பதினொன்றேடுலவா மாற்றருநீருறைவனநற்பறவைகளுற்காலிமன்னியிடும் பப்பத்து. எ-து. தேவர்கள் பதினொரு நூறாயிரவர்க்கமென்று மொருகாலத்திலு நீங்காமலு

ண்டாகப்பட்டவை பத்துநூருயிரவர்க்கமென்று நல்லபற வைகள் பத்துநூருயிரவர்க்கமென்று நாலுகாலையுடைய வை பத்துநூருயிர வர்க்கமென்றும்,— மானுடரொன்பதின் மர். எ - து. மனிதரொன்பதுநூருயிரவர்க்கமென்றும்,— ஏற்றி யொருதொகையதனி லியம்புவர்கள். எ - து. ஆக விவை யொன்ருகவெண்ணி யொருதொகைப்படுத்துவர்க ள்பெரியோர்கள். அதுவேதென்னில்,— யோனி யெண்பத் துநான்கு நூருயிரமென்றெடுத்தே. எ - து. யோனிபேத ங்க ளெண்பத்துநான்கு நூருயிரமென்று வகையினைத்தெரி த்து. எ - று.

ந - ம். அண்டஜமென்ற தோற்றம்பறவை பாம்பு முத லாயுள்ளவை யெனவறிக. சுவேதஜமென்ற தோற்றம் கிரு மி கீடம் விட்டில் பேன்முதலானவை யெனவறிக. உற்பீ ஜமென்ற தோற்றம் மரம் பூண்டு கொடிமுதலானவை யெனவறிக. சராயுஜமென்ற தோற்றம் நாற்காலிகள் மானு டர் தேவவர்க் முதலானவை யெனவறிக. ஆகத் தோற் றம் நால்வகையெனவறிக. இதி லெழுவகைப் பிறப்புக்கு வ கையாவன தேவர் நரர் மிருகம் பக்ஷி ஊர்வன நீருறைவன விருக்ஷமெனவறிக.

இதனுற் சொல்லியது நால்வகைத்தோற்றமு மெழுவ கைப்பிறப்பு மிதிலுண்டானயோனிபேத மெண்பத்துநான் குநூருயிரமாக விரிந்தமுறைமையு மறிவித்தது. (௩௫)

இங்ஙனமான்மாக்கள் ஜநநமரணப்பட்டு வருமவதரத் து மலபாகம்வந்து சத்திநிபாதமுண்டாகு முறைமையை மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

இனையபலபிறவிகளினிறந்துபிறந்தருளா லிருவினை கள்புரிந்தருந்துமிதுசகலமகலா, முனமருவுமிருபயனு

மொருகாலத்தருந்த முந்தநுகருந்துபயனந்தமுறவந்த, வினையுமெதிர்வினையுமுடிவினையுதவுபயனு னோராகநேரா தல்மேவுங்கான்முற், சினமருவுதிரோதாயிகருணையாகித் திருந்தியசத்திநிபாதந்திகழுமன்றே. (ருசா)

உருவுடன்போகத் துற்றிடுஞ்சகலமு
மருவியசத்தி நிபாதமும்வகுத்தது.

வி - ம். இனையபலபிறவிகளி னிறந்துபிறந்தருளாலிரு வினைகள்புரிந்தருந்து மிதுசகலம்.எ-து. ஆன்மாக்க ளித்த ன்மைத்தாகிய வெண்பத்துநான்கு நூறுயிர யோனிகடோ றுஞ் சிவனுடையவருளாலே பிறந்திறந்து புண்ணியபாவங்க ளைச்செய்து இன்பதுன்பங்களை யநுபவிக்கிறது சகலாவத் தை. முன்னர் "புகலுமலமொழித்தற்கு" என்றசெய்யுளில் "இ லங்கும்விந்து பகர்வரிய வுணர்வாகி" என்றபதந்தொடங்கி இவ்வளவுஞ் சகலாவத்தையை யருளிச்செய்ததெனவறிக. மேற்சுத்தாவத்தையை யருளிச்செய்கின்றது. அகலாமுன் மருவுமிருபயனு மொருகாலத்தருந்த. எ- து. இங்ஙனஞ் சொல்லப்பட்ட சகலாவத்தையைவிட்டு நீங்காமல் முன் ஜநநங்கடோறும்பொருந்தி வருகிற புண்ணியபாவங்க ளிர ண்டு மொருஜநநத்திலே புசித்துத் தொலையத்தக்கதாக,— முந்தநுகருந்துபயன். எ - து. முன்ஜநநத்திலே புசிக்கச் செய்தேயேறி யார்ஜிதமா யத்துவாவிலேகட்டுப்பட்ட சஞ் சிதமும்,— அந்தமுறவந்தவினையும். எ - து. இப்பொழுது புசித்துமுடிவதாகவந்த வுடலிலே கட்டுப்பட்ட பிராரத்த கன்மமும்,— எதிர்வினையும். எ - து. இப்பொழுது புசிக் கச்செய்தேயுள்ள ஹிதாஹிதங்களினாலேயேறுகிற வாகாமி யமும்,— முடிவினையுதவுபயனு னோராகநேராதல்மேவுங் கால். எ - து. இந்தக்கன்மங்க ளிவனுக்குமுடிந்துபோம்ப

படி சிவபுண்ணியத்தினதிகத்தாலே யெல்லாஞ்சேரத்துலை யொக்கப் பொருந்தினவிடத்து,—முற்சினமருவு திரோதாயி கருணையாகித் திருந்தியசத்திநிபாதந் திகழுமன்றே. எ - து. முன்கோபம்போலே மறைத்துநின்ற திரோதாயிசத்தி கா ருண்ணியத்தைச்செய்து நன்மையுடைய சத்திநிபாதம்விளை க்கும். எ - று.

நு - ம். சத்திநிபாதமாவது சத்திசெலுத்தாமனிற்கிற தெனவறிக. அஃதாவது புண்ணியபாவந் துலையொத்தவா ன்மாக்களைத் திரோதானசத்திநிக்கிரகமும் அநுக்கிரகசத்தி பதிதலுமாமெனவறிக. இனி மூந்தநுக ருந்துபயனென்ற து முன்ஜநநங்களி லெடுக்கப்பட்ட வுடம்புகளோடுங் கூடி நின்று புசிக்கச்செய்தே யிந்தவுடம்புகளெடுக்கைக் கேது வாகக் கட்டுப்பட்ட சஞ்சிதகன்மமெனவறிக. இனியந்தமு றவந்தவினையென்றது இந்தத்தேகாந்தமட்டும்புசிக்கிற பி ராரத்த கன்மமெனவறிக. இனி யெதிர்வினையென்றது இந் தப்பிராரத்தம் புசிக்கச்செய்தே யுண்டாகிய ஹிதாஹிதத் தாலே விளைகிற வாகாமிய கன்மமெனவறிக. இங்ஙனஞ் சொல்லப்பட்ட கன்மங்களுக்கு. பி - ம். சித்தியாரில் "முற்செயல் விதியையிந்த முயற்சியோடநுபவித்தா, வி ச்செயல்பலிக்குமாறென் னிதமகிதங்கள்முன்ன, ரச்செய லானுலிங்கு மவைசெயின்மேலைக்காகும்." எ - ம். "மே லைக்குவித்துமாகி விளைந்தவையுணவுமாகி, ஞாலத்துவருமா போல நாஞ்செயும்வினைகளெல்லா, மேலத்தான்பலமாச் செய்யு மிதமகிதங்களெல்லா, மூலத்ததாகியென்றும் வந்திடு முறைமையோடே." எ - ம். கண்டுகொள்க. இனி முடி வினையுதவுபயனு னேராகநேராதல். எ -து. சிவபுண்ணியத் தினுலே பசுபுண்ணியமும் பாவமுந் துலையொத்ததெனவறி க. இதற்கு. பி - ம். சித்தியாரில் "புண்ணியமேனேக்குவி

க்கும் பாவங்களுக்கும் புண்ணியனைப்பூசித்த புண்ணியத்தினாலே, நண்ணியஞானத்தினா லிரண்டினையுமறுத்து ஞாலமொடுகீழ்மேலு நண்ணாகி, யெண்ணுமிகலோகத்தே முத்திபெறுமிவன்றா னெங்கெழிலென்ஞாயிறெமக் கென்று குறைவின்றிக், கண்ணுதறன்னிறைவதனிற் கலந்துகாயங் கழிந்தக்காலெங்குமாய்க் கருதரன்போனிற்பன்.” எ - து. கண்டுகொள்க. இனி சினமருவுதிரோதாயியென்றது ஆன்மாக்களுக்குண்டான மலங்களைப் பாகம்வருத்தவேண்டிப் புண்ணியபாவங்களைச் செய்வித்துச் சுவர்க்கநரகங்களிலே செலுத்திப் பாகம்வருத்துகையாலெனவறிக. திரோதாயியென்றது அவதரப்பெயரொனவறிக. இனி திருந்தியசத்திநிபாதந் திகழுமென்றது முன்னர்ப் பிரபஞ்சத்தைப் பொருளென்றுகாட்டி ருசிப்பித்துநின்ற திரோதாயிதானே யருளாய்ப் பிரகாசித்துப் பழையப்பிரபஞ்சத்தை யுவர்ப்பித்துச் சிவனளவிலுந் திருவேடத்தாரளவிலுஞ் சிவாகமங்களிலும் பிரியத்தை யுண்டாக்குவித்து நிற்கையெனவறிக. இதற்கு. பி - ம். போற்றிப்பஃறொடையில். “அன்பனைக்கண்டின்புறுத, லுய்யுநெறிசிறிதே யுண்டாக்கிப்— பையவே, மட்டாய்மலராய் வருநாளின்முன்னைநாள், மொட்டாயுருவாமுறைபோலக்— கிட்டியதோர், நல்லபிறப்பிற்பிறப்பித்துநாடும்வினை, யெல்லையிரண்டு மிடையொப்பிற்—பல்பிறவி, யத்தமதிலன்றே வளவென்றுபார்த்திருந்து, சத்திபதிக்குந்தரம்போற்றி.” எ - து. கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது முன்னர்ப்பதத்திலே சகலாவத்தையின் முறைமைமுடிந்ததென்றுஞ் சஞ்சிதம்பிராரத்த மாகாமியமென்னப்பட்ட மூவகைக்கன்மங்களுஞ் சிவபுண்ணியத்தின் மிகுதியாலே நீங்குமென்று மப்படிநீங்குமிடத்திருவினையொப்புண்டாமென்று மப்படி யிருவினையொப்பு

ண்டாகவே திரோதாயியாய் நின்றவருள் காருண்ணியசத்தி யானமுறைமையு மறிவித்தது. (௩௬)

இங்ஙனஞ் சொல்லப்பட்ட சத்திநிபாத மெத்தனைவகைப்பட்டிருக்குமென்று மிந்தச்சத்திநிபாத முண்டானவர்களுக்குக்கத்தாவநுக்கிரகஞ்செய்யுமுறைமையெப்படியென்றும்வினவமேலருளிச்செய்வானெடுத்துக்கொண்டருளியது.

நாடியசத்திநிபாதநாலுபாத நண்ணும்வகையெண்ணரியஞானபாதங், கூடுமவர்தமக்குணர்வாய்நின்றஞானக் கூத்தனொருமூர்த்திகொடுகுறுகிமோக, நீடியகேவலசகலநிகழாவாறு நிறுத்திமலமறுக்குமிதுநிலையார்சுத்தங், கேடில்புகழ்தருஞ்சரிதைகிரியாயோகக் கேண்மையரோவிவையுணர்த்தக்கிளக்குநூலே. (௩௭)

கேவலசகல மேவலுற்றொருநிலை
யாவதுசுத்தா வத்தையென்றது.

வி - ம். நாடியசத்திநிபாத நாலுபாதம். எ - து. முன்னெடுத்துக்கூறப்பட்ட சத்திநிபாத நாலுபிரகாரமாயிருக்கும்,— நண்ணும்வகை யெண்ணரியஞானபாதங் கூடுமவர்தமக்கு. எ - து. அந்தச்சத்திநிபாதநாலினும் பொருந்தும் வகையே நினைத்தற்கரிதாகிய ஞானபாதத்தைச் சேருகைக்குரித்தான நாலாஞ்சத்திநிபாத முள்ளவர்களுக்கு,— உணர்வாய்நின்ற ஞானக்கூத்தனொரு மூர்த்திகொடுகுறுகி. எ-து. உயிர்க்குயிராய்நிற்கிற ஞானநடநத்தினையுடைய தம்பிரா னாசாரியமூர்த்தமாகவெழுந்தருளிவந்து,—மோகநீடிய கேவலசகல நிகழாவாறுநிறுத்தி. எ - து. மறைப்பைமிகவுண்டாக்குகிற கேவலாவத்தையும் விகற்பத்தையுடைய சகலாவத்தையையுந் தோற்றுதபடி யருளிலேநிறுத்தி,— ம

லமறுக்குமிது நிலையார்சுத்தம். எ-து. இங்ஙனமலத்தை ப்போக்குகிறவிது நிலைபெற்றசுத்தாவத்தையாம். இது யாவர்க்காமென்னில்,— கேடில்புகழ்தருஞ்சரிதைகிரியாயோகக் கேண்மையரோ விவையுணர்த்தக் கிளக்குநூலே. எ - து. அழிவில்லாத புகழைத்தருவதாயுள்ள சரிதை கிரியா யோகமென்னுநிலைகளைக் குறைவறச்சரித்தவர்களுண்டாமாகி லவர்களுக் கிந்தச்சுத்தாவத்தையின் முறைமையை யுணர்த்தப்படுமென்றுசொல்லுந் திவ்வியாகமம். எ - று.

ரு - ம். சத்திநிபாத நாலென்றதற்கு வகையேதென்னில் மந்தமென்றும் மந்ததரமென்றும் தீவிரமென்றுந் தீவிரதரமென்றும் வருமெனவறிக. அஃதாவது முதற்சத்திநிபாதமாகிய மந்தம் வாழைத்தண்டிலே நெருப்புப்பற்றினாற்போலெனவறிக. இனி யிரண்டாஞ்சத்திநிபாதமாகிய மந்ததரம் பச்சைவிறகிலே நெருப்புப்பற்றினாற்போ லெனவறிக. இனிமூன்றாஞ்சத்திநிபாதமாகிய தீவிர முலர்ந்தவிறகிலேநெருப்புப்பற்றினாற்போ லெனவறிக. இனிநாலாஞ்சத்திநிபாதமாகிய தீவிரதரங் கரியிலேநெருப்புப்பற்றினாற்போ லெனவறிக. இவையிற்றுக்கு. பி - ம். "நாலுவகைச்சத்திநிபாதத்துநற்பருவ, மூலகுருவேமொழியெனக்குக்—கோல, வரம்பைத்தண்டொண்பச்சைக் காட்டமுலர்ந்த, நிரம்புகரிநேராநினை." எ - து. கண்டுகொள்க. இந்தச்சத்திநிபாதநாலுக்கு மநுபோகமாவது:— முதற்சத்திநிபாதமாவது நமக்குப்பேருயுள்ளதொரு கத்தாவுண்டென் றறிவெழுந்திருக்கையெனவறிக. இரண்டாஞ்சத்திநிபாதமாவ தந்தக்கத்தாவைப்பெறுகைக்கு வழியெப்படியென் றாராய்கையெனவறிக. இனிமூன்றாஞ்சத்திநிபாதமாவ தப்படியாராய்ந்தறிந்த கத்தாவைப்பெறவேணுமென்று பிரபஞ்சத்தையுவர்த்துப் புளியம்பழமு மதன்தோடும்போல நிற்றலெனவறிக. இ

ணி நான்காஞ்சத்திநிபாதமாவது பிரபஞ்சத்தை முற்றத்து றந் தாசாரியனே பொருளொன்றுகொண்டு தானறநின்று வழிபடுகையெனவறிக. அப்படிப் பிரபஞ்சத்தை முற்றத்துறக்கவென்பதற்கு. பி - ம். சித்தியாரில். "ஆசைத்ருமூலகமெலா மலகைத்தேராமென் றறிந்தகலவந்நிலையேயாகும்." எ - து. கண்டுகொள்க. ஆசாரியனைப் பொருளொன்று கொண்டு வழிபடுகைக்கு. பி - ம். சித்தியாரில். "பரப்பிரமமிவனென்றும் பரசிவன்றானென்றும் பரஞானமிவனென்றும் பராபரன்றானென்று, மரன்றருஞ்சீர்நிலையெல்லா மிவனேயென்று மருட்குருவைவழிபடவே யவனிவன்றானாயே, யிரங்கியவாரணமாமை மீனண்டஞ்சினையை யியல்பினொடும்பரிசித்து நினைந்தும்பார்த்தும், பரிந்தவைதானாக்குமாபோற் சிவமேயாக்கும் பரிசித்துஞ் சிந்தித்தும்பார்த்துந் தானே." எ - ம். "பன்னரியபரமகுரு மற்றவனோனாளும் பணிந்துபணிசெய்யவந்து பலிக்குமன்றே." எ - ம். கண்டுகொள்க. இனியுணர்வாய்நின்ற ஞானக்கூத்தனொரு மூர்த்திகொடுகுறுகி. எ - கு. அருபியாய்நின்றகத்தா வுருபியாய்வந்தானென்று பொருட்கூறியதற்கு. பி - ம். திருவாசகத்தில். "அருபரத்தொருவ னவனியில்வந்து - குருபரனாகி யருளியபெருமையைச்- சிறுமையென்றிகழாதே திருவடியிணையே." எ - ம். போற்றிப் பஃறொடையில் "பூவலயந், தன்னின்றுநீங்காச் சகலர்க்கவர்போல, முன்னின்றுமும் மலந்தீர்த்தாட்கொள்கை—யன்னவனுக், காதிகுணமாதலினா லாடுந்திருத்தொழிலுஞ், சோதிமணிமிடற்றுச் சுந்தரமும்—பாதியாம், பச்சையிடமும் பவளத்திருச்சடைமேல், வைச்சநதியு மதிக்கொழுந்து—மச்சமுற, வாடுமரவு மழகார்திருநுதன்மே, னீடுருவவன்னிநெடுங்கண்ணுங்—கேடிலயங், கூட்டுந்தமருகமுங் கோலவெரியகலும், பூட்டரவக்கச்சும் பு

லியதனும்—வீட்டின்ப, வெள்ளத்தழுத்தி விடுந்தாளினுமடியா, ருள்ளத்தினும்பிரியா வொண்சிலம்புங்—கள்ளவினை,வென்றுபிறப்பறுக்கச் சாத்தியவீரக்கழலு, மொன்று முருத்தோன்றுமலுள்ளடக்கி—யென்று,பிறவாதவின்பத்தெமையிருத்தவேண்டிப், பிறவாமுதல்வன்பிறந்து— நறவாருந், தாருலாவும்புயத்துச் சம்பந்தநாதனென்று, பேரிலாநாதனொருபேர்புனைந்து—பாரோர்த, முண்டியுறக்கம்பயமின்பமொாத்தொழுகிக், கொண்டுமகிழ்ந்த குணம்போற்றி." எ-ம். கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது சத்திநிபாத நாலுவகைப்பட்டிருக்குமுறைமையு மந்தச்சத்திநிபாதத்துக் கீடாகக் சத்தாவாசாரியமூர்த்தமாகவந் திரக்ஷிக்குமுறைமையு மப்படி யிரக்ஷிக்குமிடத்துக் கேவலாவத்தையுஞ் சகலாவத்தையு நீக்கிச் சுத்தாவத்தையிலே நிறுத்துவனென்னு முறைமையு மறிவித்தது. (௩௭)

மேல் மற்றுமுண்டான வுலகாயிதன் முதலாயுள்ள சமயிகளுக்கு மிப்படிச்சுத்தாவத்தையிலே நின்றே முத்தியென்றிருக்குமோ வெவ்வேறுவழிகளாயிருக்குமோவென்ற மாணவகனைநோக்கி அவர்களுக்குண்டான நிலைகளு முத்திகளு மின்னபடியென்று மதுகுற்றத்தையுடைய முத்திகளாமென்று மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

அரிவையரின்புறுமுத்திகந்தமைந்து மறுமுத்திகிரிகுணமுமடங்குமுத்தி, விரிவுவினைகெடுமுத்திமலம்போமுத்திவிக்கிரகநித்தமுத்திவிவேகமுத்தி, பரவுமுயிர்கெடுமுத்திசித்திமுத்தி பாடாணமுத்தியிவைபழிசேர்முத்தி,

திரிமலமுமகலவுயிரருள்சேர்முத்தி திகழ்முத்தியிதுமுத்தித்திறத்ததாமே. (ரு௮)

தவமென்றவநெறி சரிப்பார்முத்தியுஞ்
சிவகதிதனையு முறையுறவகுத்தது.

வி-ம். அரிவைய ரின்புறுமுத்தி. எ-து. மகளிரிடத்துண்டான போகமே முத்தியென்கிற வுலகாயிதன்முத்தியும்,— கந்தமைந்து மறுமுத்தி. எ-து. உருவம் வேதனை குறிப்பு பாவனை விஞ்ஞானமென்கிற பஞ்சகந்தங்களுங் கெடுகிறதே முத்தியென்கிற புத்தரிற் சௌத்திராந்திகன் முத்தியும்,— திரிகுணமு மடங்குமுத்தி. எ-து. முக்குணங்கெடுகிறதே முத்தியென்னு மமணரில் நிகண்டாவாதி முத்தியும். அன்றியும் மாயாவாதத்தி னிரீச்சுரசாங்கியன்முத்தியுமாம்,— விரிவுவினை கெடுமுத்தி. எ-து. எங்கும்விரிந்திருக்கப்பட்ட கன்மங்கள் கெடுகிறதே முத்தியென்கிற பிரபாகரன்முத்தியும்,— மலம்போமுத்தி. எ-து. ஆணவமலங்கெடுகிறதே முத்தியென்கிற அகச்சமயத்திற் பேதவாதி முத்தியும்,—விக்கிரக நித்தமுத்தி. எ-து. இந்தச் சரீரம் முத்தியிலு மழியாது நித்தியமா யிருக்குமென்கிற அகச்சமயத்திற் சிவசம்வாதிமுத்தியும்,— விவேகமுத்தி. எ-து. இத்தச்சரீரந் தொந்தனைப்பட்டு நிற்கிற சீவான்மாவுக்கு விவேகஞான முண்டாகிறதுதானே முத்தியென்கிற மாயாவதி முத்தியும்,— பரவுமுயிர் கெடுமுத்தி. எ-து. சொல்லப்பட்டுவருகிற வான்மாகெடுகிறதே முத்தியென்கிறமாயாவாதத்திற் பாற்கரியன் முத்தியும்,— சித்திமுத்தி எ-து. பசுகரணங்கெட்டுச் சிவகரணமாகிறதே முத்தியென்கிற அகச்சமயத்திற் சங்கிராந்தவாதி முத்தியும். அன்றியுமிதற்கு அட்டமாசித்தியென்னவுமாம்,— பாடாணமுத்தி.

எ - து. ஆன்மா கேவலத்திற்கிடக்குந்தன்மைபோல முத்தியிலு மொன்றுமறியாமற் பாடாணம்போற் கிடக்குமென்கிற பாடாணவாதிமுத்தியும்,— இவைபழிசேர்முத்தி. எ-து. என்றிங்ஙனஞ் சொல்லப்பட்ட பத்துவகைமுத்திகளுங் குற்றத்தையுடைய முத்திகளாம். பின்னைநன்மையாகிய முத்தியேதென்னில்.— திரிமலமுமகல வுயிரருள்சேர்முத்தி திகழ்முத்தி. எ - து. ஆணவ மாயை காமியமென்கிற மூன்றுமலங்களுநீங்கி யான்மா வருளோடுங்கூடிநிற்கிறதே விளங்குதலையுடைய முத்தியாம்,— இது முத்தித்திறத்ததாமே. எ - து. இதுவே முத்தியென்றுசொல்லப்பட்டவை யெல்லாவற்றிலுந் திறப்பாட்டினையுடைய முத்தியாம். எ - று.

வி - பு. உலகாயிதன் அரிவையரின்புறுமுத்தி யென்றதேதென்னில் அவன் பிரத்தியக்ஷமொழிய அநுமானங் கொள்ளாதபடியாலே கன்மமு மான்மாவுஞ் சிவனுமில்லையென்றுசொல்லி இம்மைப் பயனாகிய மகளிரிடத்துண்டாகிய சிற்றின்பமே பொருளெனக்கொண்டா னெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில். "ஊடுவதுணர்வதுற்ற கலவிமங்கையரையுள்ளி, வாடுவதடியில்வீழ்ந்து வருந்துவதருந்தவம்பின், கூடுவதுணர்வுகெட்டுக் குணமெலாம்வேட்கையாகி, நீடுவதின்பமுத்தி யித்தினின்றார்கண்முத்தர்." எ-ம். அவன்மறுமைப்பயன் கொள்ளானென்பதற்கு. பி - ம். "வாசமார்குழலார்தங்கண் மணியல்குற்றடத்தேமூழ்கி, நேசமார்குமுதச்செவ்வா யமுதினைநிறையவுண்டு, தேசுலாமணிமென்றோண்மேற் சேர்ந்துவீற்றிருந்திடாதே, மாசுலாமனத்தோரொல்லா மறுமைகொண்டழிவர் மன்னோ." எ - ம். "வீட்டினையுளதென்றோடி மெலிவதிங்கென்னைவீடு, காட்டுவோர்கண்டோர் கேட்டோர் கரியவை யுண்டேற் காட்டீர், நாட்டினிலரசனானைக் கிசையவேநடந்துநாளு, மீட்டிய பொருள்

கொண்டிங்கே யின்பத்தி னிசைந்திடீரோ." எ - ம். கண்டு கொள்க. அவனிங்ஙனஞ் சொன்ன முத்தியை பழிசேர்முத்தியென்று மறுத்ததேதென்னில் பன்றியானது கன்மத்துக்கீடாக விட்டையை விரும்பிப் புசித்தாற்போல வ்வனுமசுத்தமாயிருக்கிற மகளீரிடத்துண்டாகிய சிற்றின்பத்தை யநுபவிக்கிறதுதானே முத்தியென்கையினு லெனவறிக. என்றிங்ஙனமறுத்ததற்கு. பி - ம். சித்தியாரில். "ஆசையுற்றுழல் சூகரங்க ளசுத்தமேவி யளைந்துதின், றேசுகித்தன வாயிடுஞ்சுக மேழையோடுறு மின்பநீ, மாசதற்றொளிர் நித்தசுத்த வளந்தருஞ்சுக வாரிகா, ணீசனுக்கடி மைத்திறத்தி னியைந்துநாம்பெறு மின்பமே." எ - ம். ஸ்ரீகளை அசுத்தமென்பதற்கு. பி - ம். சித்தியாரில். "தோலிரத்த மிறைச்சி மேதை யெலும்புமச்சை சுவேதநீ, ராலெடுத்த முடைக்குரம்பை யழுக்கினோடு புழுக்குழா, நூலொழுக்கிடு கோழையீர லுளைக்குமூத்திர பாத்திரஞ்,சேலடர்த்த கண்ணார்களென்பது தேர்மலத்திர டிண்ணமே." எ - ம். "பொன்குலாவு மணிக்கலன்கண் மலம்புகிற்கை பொருந்திடா, மின்குலாமிடையார்கடா முலகத்தின்வேட்கை விடும்பொருள், புன்புலான்மல மூத்திராதி பொசிந்துநாறு புலைக்கல,மென்கொலாமிவர் மேல்விழுந்த திவற்றினென்பெற வெண்ணியே." எ-ம். கண்டுகொள்க. அன்றியு மிம்மைப்பயனுஞ் சிவனாலே யுண்டாகவேணுமென்று அவனைமறுத்ததற்கு. பி - ம். சித்தியாரில். "வேதனாரணனாரணம் மறியாவிழுப்பொருள்பேதைபாற், றூதனாயிருகான்டந்திடு தோழன்வன்மைசெய்தொண்டனுக், காதலாலடியார்களுக் கெளியானடிக்கமலங்சணீ, காதலாலணையீண்டன்வேண்டின விம்மையேதருங்கண்டிடே." எ - து. கண்டுகொள்க. இனி யிரண்டாவது புத்தரிற் சௌத்திராந்திகன் கந்தமைந்துமறுமுத்தி யென்ற தேதென்னில்

பிருதிவி யப்பு தேயு வாயுவென்கிற பூதநாலும் வலி கந்தம் இரதம் வன்னம் என்கிற உபாதானரூபம்நாலும் ஆக உருவகந்தமெட்டும் குசலாவேதனை அகுசலாவேதனை குசலாகுசலாவேதனை என்கிற வேதனைக்கந்தமூன்றும் சோத்திரம் துவக்கு சக்ஷு சிங்குவை ஆக்கிராணம் மனது என்கிறகுறிப்புக்கந்தமாறும் பொய்சொல்லல் கோட்சொல்லல் கோபித்துச்சொல்லல் பயனிலசொல்லல் என்கிறவாக்கின்குணநாலும் களவுக்குப்போதல் வறிதேதொழில்செய்தல் கொலைசெய்தல் என்கிறகாயத்தின்குணமூன்றும் கொலைநினைக்கை காமப்பற்று ஆசை என்கிற மனத்தின்குண மூன்றும் ஆகக்கூறிய வகைமூன்றினுஞ் செய்யபபட்டதீக்குணம்பத்தும் அன்றியும் மெய்யுரை நல்வார்த்தை இனியனகூறல் பயன்படுசொல்லலென்கிற வாக்கின்குணநாலும் பள்ளிவலம்வருதல் தவம்புரிதல் தானஞ்செய்கையென்கிற காயத்தின்குணமூன்றும் அருணினைவு ஆசையறுத்தல் தவப்பற்றுஎன்கிற மனத்தின் குணமூன்றும் ஆகநற்குணம்பத்தும் ஆகவகை யிரண்டினுக்கு முண்டாகப்பட்ட பாவனைகந்தமிருபதும் சத்தம் பரிசம் ரூபம் இரதம் கந்தம் சித்தம் என்கிறவிஞ்ஞானகந்தமாறும் ஆக விங்ஙனநாற்பத்து மூன்றுவகையாக வெண்ணப்பட்டுவருகிற பஞ்சகந்தங்களைந்துங் காரணங்கெட்டுக் காரியங்கிடக்குமென்கிறது மிகுத்துறை யில்வழக்குமாய்ப் பந்ததுக்கமுமாய விதுகுற்றவீடென்றும் கந்தங்களைந்து நேராகக்கெட்டு வீட்டையடையுமென்பதுவே முத்தியின்பமெனக் கொண்டானெனவறிக இதற்கு. பி - ம். சித்தியாரில். “ஓங்கியவுருவமோடும்வேதனைகுறிப்பினேடுந், தாங்குபாவனைவிஞ்ஞானந் தாமிவையைந்துங்கூடிப், பாங்கினுற்சந்தானத்திற் கெடுவதுபந்தத்துக்க, மாங்கதுபொன்றக்கேடா யழிவதுமுத்தியின்பம்.”

எ - து. கண்டுகொள்க. அன்றியும் இந்தப்பஞ்சகந்தங்களு நாற்பத்துமூன்றுவகையாய் நிற்குமென்பதற்கு. பி - ம். புத்தநூலில். "எட்டிவையுருவமூன்றுவேதனையாறுஞான,மொட்டியகுறிப்போராறு செய்கையுமிருபதாகக், கட்டியபஞ்சகந்தங் கணத்தினிற்பங்கமாகித், தொட்டநாற்பத்துமூன்றும் சுத்தநூற்றுணிவுதானே." எ - து. கண்டுகொள்க. அவனிங்ஙனஞ் சொன்னமுத்தியைப் பழிப்சர்முத்தியென்று மறுத்ததேதென்னில் அவ னான்மாவில்லையென்கையினா லு மப்படியுண்டென்று நாட்டப்பட்ட பஞ்சகந்தங்களுங் கற்பூரத்தீபம்போலே யறக்கெட்டுப்போமென்கையினாலு மந்தமுத்தியைப் பெறுவானில்லாதபடியாலு மெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில். "ஐந்துகந்தஞ்சந்தானத் தழிதல்பந்ததுக்க மறக்கெடுகைமுத்தியின்ப மென்றறைந்தாய்கந்த, மைந்துமழிந்தான்முத்தி யணைபவராரொன்ன வணைபவர்வேறில்லையென்று யார்க்குமுத்தியின்ப, மைந்தினுணர்வினுக்கென்னி னொழியாதவ்வுணர்வுண் டாகவேயெவ்விடத்து முருவாதிகந்த, மைந்துமுளவாமதுவும் பந்தமாகி யரந்தைதருமுத்தியின்ப மறிந்திலைகாணீயே." எ - து. கண்டுகொள்க. இனி மூன்றுவது திரிகுணமுமடங்குமுத்தி யென்றது அமணரில் நிகண்டாவாதிசொன்னதென்றதேதென்னில் ஞானவாணியம் தரிசனவாணியம் வேதினீயம் மோகனீயம் ஆயுசு நாமம் கோத்திரம் அந்தராயம் என்கிற குணங்களெட்டும் பசித்தல் தாகம் பயம் செற்றல் உவகை மோகம் சிந்தனை பழித்தல் நோய் நசித்தல் வேர்வை கேதம் மதம் வேண்டல் அதிசயித்தல் உருசிப்பு பிறப்பு உறக்கம் என்கிறகுணங்கள் பதினெட்டும் அரசிகம் இரதி அரதிசோகம் சுகுச்சை பயம் என்கிறகுணங்களாறும் ஆகவிங்ஙனஞ் சொல்லப்பட்டுவருகிற மூவகைக்குணங்களையும்விட்டுப் பூர்வகன்

மத்திலுண்டாகிய கன்மங்கள் புசித்துத் தலைந்தவவதரந்தானே வீட்டின்பமெனக் கொண்டானெனவறிக. இங்ஙனஞ் சொல்லப்பட்ட மூன்றுவகைக்குணங்களினு முதற்சொன்ன ஞானவாணியமாதியாயுள்ள குணங்களெட்டுக்கும். பி - ம். சித்தியாரில். "ஈறிலாதனவநந்தஞானமுத லெண்குணங்களனுமொண்குண, மாறிலாதமதிமேவுசீதமென மன்னிவானவர்வணங்கவே, வேறுலாவுகுணஞானவாணிய மதாதியெட்டினையும்விட்டசி, ரோறுபான்மையுடனீடுவாழருக னெங்களுக்கிறைவனென்றனன்." எ - ம். இரண்டாவதுசொன்ன பசித்தலாதியாயுள்ள குணங்கள்பதினெட்டுக்கும். பி- ம். சித்தியாரில். "பசித்தருகபயசெற்றமோடுவகை மோகசிந்தனைபழித்தனாய், நசித்தல்வேர்வினொடுகேதமோடுமதம் வேண்டலீண்டதிசயித்தலும், புசிப்புவந்திடுபிறப்புறக்கமவை விட்டொரட்டகுணபூதனாய், வசித்தவன்னுலகின்மேலிருந்தொருசொ லிகலனுக்கருளுமென்றனன்."எ - ம். மூன்ருவதுசொன்ன அரிசிகமாதியாயுள்ள குணங்களாறுக்கும். பி - ம். சித்தியாரில். "ஏணுமொன்றுடைய வாகியெங்குமணு வாயிரும்புகன் மரங்களும், பூணுமங்குரு வெலாமுமாகுமவை புற்கலப்பொருள்க ளென்னலாங், காணுமங்கறு வகைத்தொழிற்களவை கட்டுவிட்டநெறி கன்மமேன், மாணநின்றுவரு மாறிமாறிமுன் வனைந்ததுண்டுவிட மாட்சியே." எ - ம். கண்டுகொள்க. அவனிங்ஙனஞ் சொன்னமுத்தியைப் பழிசேர்முத்தி யென்று மறுத்ததேதென்னில் குணங்களைவிட்டவிடந்தவமாகாதாகையாலும் பூர்வகன்மநிச்சயித்துப்புசிக்கைக்கிவ்விடத்தான்மாவுக்குத்தனக்கென்னவோரறிவுமில்லாதபடியாலுமெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில் "பூர்வகன்மமற்றிடப் புசித்தபின்புபொன்னெயி, னேர்யதென்னினக்கன்மத்து நிச்சயமிலாமையிற், றீர்தலின்மை

தேரின்வாயில் சேர்தலின்மைதெண்கட, னீர்வறந்தபின்புழு
ளை மீனருந்தநின்றதே" எ-று. கண்டுகொள்க. அன்றியுந்திரி
குணமுமடங்குமுத்தி என்பதற்கு மாயாவாதத்திற் பேதமா
யுள்ள நிரீச்சுரசாங்கியன்முத்தியென்னவு மாமெனவறிக.
அஃதெங்ஙனேயென்னில் பிரகிருதிதத்துவமானது தூலசூக்
குமமுமா யெல்லாப்பதார்த்தங்களுக்குங்காரணமுமாய் மு
க்குணங்களு மொத்துநிற்கிறதே தனக்குவடிவுமாய் அமூர்த்
தமாயிருக்கும் புத்திமுதல் பிருதிவியீறாகியதத்துவமிருபத்து
மூன்று மிதனுடைய வியாத்தியாயிருக்கும். அதனோடுங்கூடி
ன் சுத்தபுருடனும் பாலனாகிய பிள்ளைகளைப்போலச் சேட்
டையுண்டாய்ப் பல யோனிகளையுமெடுத் திந்தக்குணங்க
ளோடு மநாதியேகூடிப் புத்தியையுடைத்தா யவித்தையின்
வசத்திலே யொழுகி ஜநந சம்பந்தமுண்டாயிருக்கிற சுகது
க்கமானகுணங்களு முண்டாயிருக்கும். இதுபெத்தம். இனி
யவன் முத்தியிலிருக்கும்படியாவது அந்தப்பிரகிருதியினுடை
ய தன்மையையறிந்து புத்தியையடைந்திருக்கிற வறியாமை
போய் விகிருதியாலுண்டான சுகதுக்கங்களைப் பிரகிருதிக்
குண்டானதென்றுகண் டிது ஆன்மாவுக்கில்லையென்று கு
ணத்திரயங்களடங்க விருப்பது. இதுவே மோக்ஷமென்
று சொல்லுவனெனவறிக. இதற்கு, பி-ம். சித்தியாரி
ல். "மூலம்புரியட் டகம்விகிர்தி யாகிமூன்றாய்ப் பிரகிருதி,
தூலஞ்சூக்குமம் பரமாய்ச் சுத்தப்புருடன் சந்நிதியிற்,
பாலன்சேட்டை புரிந்துலக மியோனிபலவாய்ப் பரந்தொ
டுங்குஞ், சாலவன்று நிரீச்சுவா சாங்கியன்றான் சாற்றிடு
மே." எ-து. கண்டுகொள்க. இதனைப் பழிசேர்முத்தி எ
ன்று மறுத்ததேதென்னில் அப்படியான்மா வநாதியே சுத்
தனானால் பிரகிருதியான் மறைப்புண்டு கிடக்கமாட்டான். அ
ன்றியும் அதுநீங்கி முத்திநிலையைப்பெற்றாலும் முன்புபோலே

மீளவுங்கூடும். ஆகையா லிவையிற்றைகூட்டுகைக் கொருக த்தாவும் வேண்டுகையா லதுபொருளல்லவெனவறிக. இத ற்கு. பி - ம். சித்தியாரில். "சுத்தனறிவன் புருடனெனிற் சூ மூாதாகும் பிரகிருதி, பெத்தநீங்கினுலும்பின் பெத்தனுவன் பேரறிவாற், கத்தமேவும் பிரகிருதி கண்டுகழிக்கமாட்டா னேல், முத்தனுகான்சுத்தனுக்கு மூலப்பிரகிருதியிலையாம்." எ - ம். "அறியான்புருடன்பிரகிருதி யசேதனங் காரியத் தினுக்குக், குறியாய்நாதனுளனென்று கூறுமுத்திவிவேகமெ னிற், செறிவாந்தளை போகாதறியிற் சேர்த்தோன் வேண்டு ஞ்செயலிற்போ,நெறியாற்பணிசெய் துடற்பாச நீக்கிக்கொ ண்ணி நின்மலனுல்." எ - ம். கண்டுகொள்க. இனிநால வது விரிவுவினைகெடுமுத்தி யென்று பிரபாகரன் சொன்ன தேதென்னில் அவனரிதாகச் செய்யப்பட்ட கன்மத்தின் மு டிவிலே ஞானமென்பதொன்றுண்டா யந்தக்கன்மத்திலே யறிவுகூடிநின்று தொழிற்பட் டந்தக் கன்மமு ஞானமுங் கெட்டு ஆன்மா மண்போலவுங் கல்லுப்போலவுங் கிடக்கி றதே முத்தியென்று கொண்டானெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில். "அருஞ்செயலின் பாவத்தேய் பூர்வமெனு மது தோன்றித், தருஞ்செயலே நின்றழியிற் றன்பலிப்ப தாகு மது, வருஞ்செயலொன் றின்றியே மண்சிலைபோ லாமுத்தி, தருஞ்செயலு மெனவுணர்ந்து தாரணிமே லவன்சாற்றும்." எ - து. கண்டுகொள்க. அவ்விங்ஙனஞ்சொன்ன முத்தி யைப் பழிசேர் முத்தியென்று மறுத்ததேதென்னில் கன்ம மறுமைப்பயனைத் தருமென்று வேதஞ்சொல்லுகச்செய்தே யந்தக்கன்மங் கெட்டுப்போமென் றவன்சொல்லுகையினு லு மந்தக்கன்மத்தா லுண்டாகியஞானமுங்கெட்டுக் கல்லுப் போலவு மண்போலவுங் கிடக்குமென் றவன்சொல்லுகை யா லவ்விடத்துப் பேறில்லாதபடியாலெனவறிக. இதற்கு.

பி - ம். சித்தியாரில். "வேறுபலன் றருவதுதான் வினை யென்று வேதங்கள், கூறவோர்பூர்வந்தான் கொடுக்கு மெனக் கொண்டவுரை, மாறுதரு மறையோடு முன்பின்றி வந்ததாற், றேறியவிண் பூமுடிமேற் சேர்ந்துமணந் திகழ்ந்ததுவாம்." எ - ம். "ஆநந்தங்கதியென்ன வறிவழிகைவீடென்கை, யூனம்பினுணர்வழிந்தோர்க் குளதாகுமோமுத்தி, தானிங்குச்சிவப்பொழியத் தழனிற்குமாறில்லை, ஞானங்கெட்டுயிர்நிற்கு மெனுமுரைதானஞ்ஞூதால்." எ - ம், கண்டுகொள்க. இனி ஐந்தாவது மலம்போ முத்தியென்றதைப் பேதவாதி சொன்னுனென்றதேதென்னில் அவன்செம்பான திரதகுளிகையினுலே காளிதங்கெட்டுப் பொன்னுனதன்மைபோலச் சிவனுடைய வருளாலே யான்மாவுக்கு மலமானதுகெட்டுப் பெறுவானும் பேறுமாக முத்தியிலேயிருப்பதே பொருளெனக் கொள்ளுகையினு லெனவறிக. இதற்கு. பி - ம். சங்கற்பநிராகரணத்தில். "ஈசனதருளாற்பாசத்தொகுதி - செறிவுறுசெம்பிற் களையுறுகளிம்பு-குளிகைதாக்க வொளிபெற்றுங்கு - நித்தசுத்த முத்தராக-வைத்தனருலகின் மறைவல்லோரே." எ - து. கண்டுகொள்க. அவனிங்ஙனஞ்சொன்னமுத்தியைப் பழிசேர்முத்தி யென்றதேதென்னில் வேதாகமங்கள் பதிபசுபாச மூன்றுநித்தியமென்றுசொல்லுகச்செய்தே ஆணவமலங்கெடுமென்கையினுலு மெனவறிக. இதற்கு. பி - ம். சங்கற்பநிராகரணத்தில் அவன் மறுப்பிலே "மறைகளாகமத் துறைகண்மற்றெவையு - நாசமில்பதிபசு பாசமென்றுரைத்தலயர்த்தோர்குளிகை சயத்தாற்றுமிரக்- காளிதநாசம் பாசத்தேய்த்தல்-கூடாதன்றியுங் குளிகைசீருண - நீடாதழித்த நிலைநிலையாகலிற்- பேதவாதமோதுதல் பிழையே." எ - து. கண்டுகொள்க, இனி யாருவது விக்கிரகநித்தமுத்தி, எ - கு. சிவச

ம்வாதி சுத்தமாயாசரீர மழியாமல் நித்தியமாயிருக்கிறதே முத்தியென்று னென்றதேதென்னில் வேட்டுவாளியானது ஒன்றுமறியாத பச்சைப்புழுவையெடுத்துத் தற்சொரூபமாக்கினதன்மைபோல வொன்றுமறியாத வான்மாவையுஞ் சிவனுடைய வருளெடுத்துக்கொண்டு தற்சொரூபமாக்க வந்த மாயாவுடல்தானே நித்தியத்துவத்தைப் பெற்றிருப்பதுதானே முத்தியென்று கொள்கையினாலெனவறிக. இதற்கு. பி - ம். சங்கற்பநிராகரணத்தில். "முன்னோன்றனைஅ முதிரொளிஞான - மறியாப்பச்சைச் சிறுபுழுக்கவர்ந்த - வண்டெனவுயிரைக் கொண்டிடுமுயிரது - தன்னைநோக்கித்தானதுவாகி - யைவகைத்தொழிலு மெய்வகையுணர்வும் - பிரியாவாறு பெற்றுத் - திரியாப்பெரியோர் திரட்சிசேர்ந்திடுமே." எ - து. கண்டுகொள்க. ஊவனிங்ஙனஞ்சொன்ன முத்தியைப் பழிசேர் முத்தியென்றதேதென்னில் அருள்பொருந்தின ஆன்மாக்களுடைய மாயாதேகந்தானே நித்தியத்துவத்தைப் பெற்றிருக்கிறது பதமுத்தியாகிய சாரூபமொழிந்து சாயுச்சியமாகாதாகையாலும் அன்றியும் யாதாமொரு சரீரதொந்தனையுள்ளமட்டு மூன்றுமலமும் போகாதாகையாலு மப்படிச்சொன்னதெனவறிக. இதற்கு. பி - ம். சங்கற்பநிராகரணத்தில். "முத்தியுற்ற நற்றவரவையிடை - சேர்வொன்றனை சார்தருமுத்தி-சாலோக்கியமோ சாயுச்சியமேற்-பந்தமுற்ற கந்தலகழித்த- லறிவினோடறிவு பிரியாப்பெற்றி-வேண்டுமென்பதற் கீண்டிவரிவ்வா - திருப்பதொன்பதற்குருத்தான்வேண்டும்." எ - ம். சித்தியாரில். "அநாதியுடலொன்றினைவிட் டொன்றுபற்றிக் கன்மா லாய்ந்துவருதலா லந்தமில்லைப், பிறிதியருள் பெற்றவர்க ணித்தவுருவத்தைப் பெற்றிருக்கை முத்தியெனிற் பெறும்பதமே யிதுவு, மிறுதியிலை யிதுதானுங் காயமுண்டே லிருங்கன்மமாயை

மலமெல்லாமுண்டா, மனுதிதருமுடலாதி காரியத்தாலநா தி மலமறுக்குமருந்தற்று லுடன்மாயுங்காணே." எ - ம். கண்டுகொள்க. இனியேழாவது விவேகமுத்தி. எ - கு. மாயாவாதி யிவனுக்கு விவேகஞானமுண்டாகிறதே முத்தியென்றுனென்று பொருட்கூறியதற்கு வகையேதென்னில் அவன்கருத்து நிர்மலமாயிருக்கிற ஆகாசத்தை மேகமறைத்ததன்மைபோலச் சுத்தமாயிருக்கிற பரப்பிரமமு மாயாவுபாதிகளினுலே வாதிக்கப்பட் டிந்தவுடலிலே மயங்கிநிற்கிறதே ஜீவான்மாவாவது. அந்த வாகாசத்திலே யொரு காற்றுத்தோன்றி யந்தமேகத்தை நீக்கினதன்மைபோல விந்தஜீவான்மாவினிடத்திலே யொருவிவேகஞானந்தோன்றி யந்தமாயாவத்தையைநீக்குகிறதே முத்தியெனக்கொண்டானெனவறிக. இதற்கு. பி - ம். சங்கற்பநிராகரணத்தில். "இவ்வியற்பந்தப் பௌவமதகல - விண்முதறந்த கொண்மூப்படலத் - திருளறவுதித்தகாறகவிவேகந்-தன்னிற்றேன்றிச் சாதகமனைத்தையு - மன்னகப்பிரிப்பு மடியிழைவாங்கலும் - போலஞாலம் பொய்யறக்கழீஇத் - தானேதானுய்த் தன்னிற்றன்னைத் - தானேகண்டு தன்னலமுற்று - வசையிறத்துவ மசிபதத்தெளிவா - லகமேபிரமமாயினனெனவறிந் - தசலனுகிநற் சலசலமதியெனக் - கண்டிடுமுடலம் விண்டகல்கடத்த - மங்குலதுடைதர வெங்குமாந்தகைத்தே." எ - து. கண்டுகொள்க. அவனிங்ஙனஞ்சொன்ன முத்தியைப் பழிசேர்முத்தியென்றதேதென்னில் இந்தஜீவான்மாவினிடத்துண்டாகிய விவேகஞான முன்பேயுள்ளதாகி லிவனுக்கு மயக்கம்வர வழக்கில்லை. பின்புள்ளதாகிலாகாயப்பூப்போல வில்லாத துண்டாகா தாகையாலெனவறிக. இதற்கு. பி - ம். சங்கற்பநிராகரணத்தில். "பந்தமதகலமுந்துவிவேகம் - வான்வளியெனத்தனிற் றுனேதோன்

றின் - முன்புளதாயின் மயங்காதிலதெனிற்- பின்புளதாகா திலதுளதெனின்வெளி - மலரதுதருமணம்." எ - து. கண்டு கொள்க. இனி யெட்டாவது பரவுமுயிர் கெடுமுத்தி. எ-கு. மாயாவாதத்திற்பாற்கரியன் ஆன்மாகெடுகிறதே முத்தியெ ன்றுனென்று பொருட்கூறியதற்கு வகையேதென்னில் அ வன்கருத்து பரப்பிரமந்தானே பிரபஞ்சமுமா யான்மாவு மாய்நின்று காரியப்படுகிறவிடத்து ஆன்மா கன்மத்தையநு ஷ்டித்து ஞானமுண்டானவாறே பிரமத்தோடுங்கூடி யா ன்மாவழிந்துபோகிறதே முத்தியெனக்கொண்டா னெனவ றிக. இதற்கு. பி - ம். சித்தியாரில். "சித்தேயுலசாய்ப்ப ரிணமித்துச் சீவனுகித்திகழ்ந்தமையாற், சத்தேயெல்லாமு த்திதனைச் சாரக்கண்டஞானங்கள், வைத்தேமொழியுமாம றைகள் சொன்னமரபேவந்தக்கா, லொத்தேகெட்டுப்பிர மத்தோ டொன்ருய்ப்போமென்றுரைத்தனனே." எ - து. கண்டுகொள்க. அவனிங்ஙனஞ்சொன்னமுத்தியைப் பழிசே ர் முத்தியென்றதேதென்னில் அந்தப்பரப்பிரமம் பிரபஞ்ச மாகாதபடியாலும்; அன்றியு மான்மாவாகாதபடியாலு முத் தியி லான்மாக்கெட்டுப்போமென்கையினுற் பெறுவானில் லாதபடியாலுமெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில். "இயம்புகின்ற தலகாயிடாது சடமென்றுமின்று சடமாகி யே, முயங்குகின்றமையி னிலவணத்திரத முழுதுமேகம தை முயல்கைபோற், பயந்ததென்னி லறியப்படும்பொருளு மறிவுமென்று பல்வாகுமோ,தியங்குகின்றதெ னுரைத்திடா ய்கடின மாதியாகவரு சித்தனே." எ - ம். "அறிவிறேடுசெ யல்மாறவீடதனை யணுகொர்ணுதவையிரண்டினு, லுறுதியான பிரமத்திரேடழிய லொன்றலாமெனவுரைத்திகா, ணிறுதி யேயிதனொடிசைவதின்றிசைவ துள்ளதாயிடினுமின்பமே, பெறுதிநீயுடலொடுயிர்களாயது பிறக்குமாறுசெயல்பெற்றி

யால்." எ-ம். கண்டுகொள்க. இனி யொன்பதாவது சித்திமுத்தியென்று அகச்சமயத்திற் சங்கிராந்தவாதி யான்மாபசுகரணங்கெட்டுச் சிவகரணமாகிறதே முத்தியென்றுனென்று பொருட்கூறியதற்கு வகையேதென்னில் அவனுன்மாவுக்கு மலபாகம்வந்தவிடத்துக் கண்ணுடியிற்காட்டினநிழ லந்தக்கண்ணுடியிற் பொருந்தினாற்போலச் சிவனுடையவரு ளான்மாவிலே பிரகாசித்தவவதரத்துக் காட்டத்தைப்பொருந்தின வக்கினிபோலவு முப்பளத்தைப்பொருந்தின புல்லும்வைக்கோலும் போலவும் பசுத்துவங்கெட்டுச் சிவத்துவமாய்ப் பசுகரணங்கெட்டுச் சிவகரணமாகிறசித்தியதே முத்தியெனக் கொள்ளுகையினு லெனவறிக. இதற்கு. பி-ம். சங்கற்பநிராகரணத்தில். "பழமலநீங்கநிகழுங்காலை- வேற்றோர்முகவொளி தோற்றுங்கலனெனத் - தலைவனதருளுயிர் நிலவிடுநிலவக் - காட்டத்தங்கிமாட்டத்தங்கிய - தன்மையுமளத்த புல்வையினீப்பும்-போன்றதுவாகித் தோன்றிடுமதனாற் - பசுகரணங்கள்சிவகரணங்க - ளாகமாறியறிவு - மேகமாமுயிர்யானெனதின்றே." எ-து. கண்டுகொள்க. அவனிங்ஙனஞ்சொன்னமுத்தியைப் பழிசேர்முத்தியென்றதேதென்னில் அப்படிக்கண்ணுடியானது கொடுத்ததுகொள்ளுந் தன்மையுண்டாகையினாலு மான்மாவுக்கதுவில்லாதபடியாலு மாயாகருவிகள் ஜடமானபடியாலே யதுசிவசொரூபமாகாதபடியாலுமெனவறிக. இதற்கு. பி-ம். சங்கற்பநிராகரணத்தில். "நோக்குமுகவொளி நீக்காதானெனக் - கவருந்தன்மைமுகுரம்போலக்-கொடுத்ததுகோடற் கடுத்ததுண்டன்றே - காட்டத்தங்கி கூட்டக்கூடு - மிந்தனத்தியற்கைவெந்தழருங்கா - வுப்பளத்தடுத்தபுற்பலாலங்கள்- சுடத்தவேனுங் கொடுத்ததுகொள்ளுந் - தன்மையுண்டெனக்கின்மையதன்றே - யவமுறுகருவி சிவமயமாமெனக் - கூறின

தாகமம்வேறுருக்கவரா -தென்பதெனவைமுற் றுன்பந்தொ டைக்குந் - திருவருண்மருவ வுரியனவென்னி - லருளுருமா யாவிருளினதாங்கொல்." எ - து. கண்டுகொள்க. அன்றி யு மிங்ஙனஞ்சொல்லப்பட்ட சித்திமுத்தியென்பதற்கு அ ட்டமா சித்தியென்னவுமாமென்று பொருட்கூறியதற்கு வ ழியேதென்னில் அணுமா மகிமா லகுமா கிரிமா ஈசத்துவம் வசித்துவம் பிராத்தி பிராகாமியம் என்னும் பெயர்களாயி ருக்கும். இவையிற்றினுள் முதற்கூறிய அணுமாசித்தியாவ து இவன் சூக்குமதேகமாகவேண்டுமென்றாற் சூக்குமதேக மாகையெனவறிக. இனி யிரண்டாவது மகிமாசித்தியென்ற து இவன் மகாமேருபோலப் பெருகவேணுமென்று லப்படி யேபெருக்கையெனவறிக. இனி மூன்றாவது லகுமாசித்தியெ ன்றது பதிநாலுலகங்களினுந் தடைபடாமல் மனவேகம் போல விவனினைந்தவிடத்திலே போயிருக்கையெனவறிக. இனிநாலாவது கிரிமாசித்தியென்றது ஐராவதமுதலாயுள் ளவை யசைப்பினு மிவனசைவற்றிருக்கையெனவறிக. இனி யைந்தாவது ஈசத்துவமென்றது சர்வான்மாக்களையுந் தன் னுடைய வாக்கினையிலே நடத்திவித்துக்கொள்ளுகை யென வறிக. இனியாறாவது வசித்துவசித்தியென்றது பூலோகத் தைத்தெய்வலோகமாக்கியுந் தெய்வலோகத்தைப் பூலோக மாக்கியும் வருகையெனவறிக. இனியேழாவது பிராத்திசி த்தியென்றது அரிபிரமாதியான தேவர்கள்போகங்கள் த னக்குவரவேணுமென்று மனதிலேநினைந்தா லப்பொழுதே சித்திக்கிறதெனவறிக. இனி யெட்டாவது பிராகாமியசித்தி யென்றது ஒருகணப்பொழுதிலே வனேகநூறாயிரம் ஸ்ரீக ளைச்சிருஷ்டித்து அப்பொழுதே யந்தஸ்ரீகளுக்குப் பத்தவா யநுபவிக்கையெனவறிக. ஆகச் சித்தியெட்டு மிங்ஙனங்கண் டுகொள்க. இதுமுத்தியாகாதென்றுமறுத்ததற்கு. பி-ம். சித்

தியாரில். "குறித்தடியினின்றட்டகுணமெட்டுச்சித்திக்கோக னகன்முதல்வாழ்வுகுலவுபதமெல்லாம், வெறுத்துநெறியறு வகையுமேலொடுகீழடங்க வெறும்பொயெனநினைந்திருக்க மேலொடுகீழில்லா, னிறுத்துவதோர்குணமில்லான்றன்னை யொருவர்க்கு நினைப்பரியானென்றுமிலானேர்படவந்துள் ளே,பொறுப்பரியபேரன்பையருளியதன்வழியே புகுந்தளிப் பனெங்குமிலாப்போகத்தைப்புரிந்தே."எ-து.கண்டுகொள்க. இதனுளெட்டுச்சித்தியென்பதை யட்டமாசித்தியு நன்முத்தி யாகாதென்பதற்குக் கண்டுகொள்க. அன்றியும் தேவிகாலோ த்திரத்தில். "அட்டமாசித்திமுத லனைத்துள்ளபேறுகளுங், கட்டமாங்கதிகடரும்பரகதிகாணக்கொடா." எ-ம். கோயிற்பு ராணத்தில்."முத்தியுமுடிவிலாதபோகமுநாலிரண்டாஞ்சித்தி யுமென்செய." எ-ம். வருமேதுக்களினுங் கண்டுகொள் க. இனிபத்தாவது பாடாணமுத்தி. எ-கு. இவன்பாடாண ம்போலே கிடக்கிறதேமுத்தியென்று பாடாணவாதிசொன் னனென்று பொருட்கூறியதேதென்னில் அவனறிவில்லாத வான்மாக்காளதீதாவத்தைப்பட்டுக்கிடக்குந்தன்மைபோலச் சுத்தாவத்தையினு மான்மாவொன்றுமறியாமற் கல்லுப்போ லேகிடக்குமென்று கொள்ளுகையா லப்படிச்சொன்னதெ னவறிக. இதற்கு. பி-ம். சங்கற்பநிராகரணத்தில் "கொ த்தைமாந்தருய்த்திடுதுயில்போற் - காட்சியென்னக்காணுத் துயர - மாட்சியைமுத்தியெனவகுத்தனரோ." எ- து. கண்டு கொள்க. அவனிங்ஙனஞ்சொன்னமுத்தியைப் பழிசேர்மு த்தியென்றதேதென்னில் ஆன்மாகேவலப்பட்டுக் கிடக்குந் தன்மைபோல முத்தியினு மொன்றுமறியாமற்கிடப்பனென் கையினால் சிவாநுபோகமில்லாதபடியா லதுநன்முத்தி யா காதென்றதெனவறிக. இதற்கு. பி - ம். சங்கற்பநிராகர ணத்தில் "காட்சியென்னக் காணுத்துயர-மாட்சியைமுத்தி

யெனவகுத்துரைக்கிற்-கரணுபாவமரணங்கருமர-மேய்ந்தவர் முத்திசேர்ந்தவரன்றே - யனையகதிக்கோர்முனைவரும்வேண்டா - தனிதருதுயரமெனுமிதுதிடமே - பாடாணத்திற்கூடா முத்தி." எ - து. அவனைமறுத்ததிலேகண்டுகொள்க. இனி திரிமலமுமகலவுயிரருள்சேர்முத்திதிகழ்முத்தி என்றபதத்தில் திரிமலமுமகல. எ - கு. ஆணவ மாயை காமிய மென்று சொல்லப்பட்ட மலங்கள்மூன்று நீங்கவென்றுபொருட்கூறியதேதென்னில் அந்தமலங்கள்மூன்று நீங்கினவிடமே சிவஞானத்தைப்பெற்ற விடமாதலா லப்படிச்சொன்னதெனவறிக. இதற்கு. பி - ம். சிவஞானபோதத்தில். "புண்ணிய பாவம் பொருந்துமிக்காமியமு, மண்முதன்மாயைகாண்மாயையுங் - கண்ணிய, வஞ்ஞானங்காட்டுமிவ்வாணவமுமிம் மூன்று, மெய்ஞ்ஞானிக்காசாவிடு." எ - து. கண்டுகொள்க. அப்படிமூன்றுமலங்களும் விடவென்றதும் அந்தமலத்தின் குணபேதமான காரியங்களைவிடவென்றதெனவறிக. அவை யாவன ஆணவத்தின்குணமெட்டு மாயையின்குணமேழுங் கன்மத்தின்குணமாறுமெனவறிக. இவையிற்றுக்கு. பி - ம். இருபாவிருபஃதில். "கூறியமூன்றுமலத்தின்குணக்குறி- வேறுகிளக்கின் விகற்பங்கற்பங்- குரோதமோகங்கொலையஞர்மதநகை -விராயெண்குணமுமாணவமெனவிளம்பினை-யஞ்ஞானம்பொய்யயர்வேமோகம்- பைசாசூந்கிய மாச்சரியம்பய-மாவேழ்குணனுமாயைக்கருளினை - யிருத்தலுங்கிடத்தலு மிருவினையியற்றலும்-விடுத்தலும்பரநிந்தை மேவலென்றெடுத்த-அறுவகைக்குணனுங் கருமத்தருளினை." எ-து. கண்டுகொள்க. உயிரருள்சேர்முத்தி திகழ்முத்தி. எ - கு. ஆன்மாவருளோடுங்கூடினவிடமே விளங்குதலையுடைய முத்தியாமென்று பொருட்கூறியதேதெதென்னில். ஆன்மாக்கள் சிவனைப் பெறுமிடத்துச் சிவனுடையவருட்சத்தியினிடமாகச்சென்று

பெறவேண்டுகையாலப்படிச்சொல்லப்பட்டதெனவறிக. இதற்கு. பி - ம். தத்துவவிளக்கத்தில். "பவமேவியநெறி பந்திக்குமீசன் பசுக்கடமை, யவமேவியநெறிப் போகங்களால்முற்ற வந்நிலையே, தவமேவியநெறி சத்திகண்ணுய்ச்சென்று சார்ந்துபின்னைச், சிவமேவுவரென்றுகாண் கொச்சைக்காவலன் சித்திரிப்பே." எ - ம். சிவபுராணத்தில். "அவனருளாலே யவன்றாள்வணங்கி." எ - ம். இப்பொருட்பற்றியே யெனவறிக. இனி யிதுமுத்தித் திறத்ததாமே. எ - கு. இதுவே முத்திகளென்றுசொல்லப்பட்டவை யெல்லாத்தினுந் திறப்பாட்டினையுடைய முத்தியாமென்று பொருட்கூறியதேதென்னில் மற்றுள்ள முத்திகளென்றுசொல்லப்பட்ட பத்துவகைமுத்திகளு மழியப்படுமாகையா லப்படிச்சொன்னதெனவறிக. அவைகளெல்லா நன்முத்தியல்லவென்பதற்கு. பி - ம். சித்தியாரில். "இம்மையேயீரொட்டாண்டெய்தியெழிலாரு மேந்திழையார்முத்தியென்று மிருஞ்சுவர்க்கமுத்தி, யம்மையேயென்றுமுத்தியைந்துகந்த மறக்கெடுகையென்றுமட்டகுணமுத்தியென்று, மெய்ம்மையேபாடாணம்போல்கைமுத்தியென்றும் விவேகமுத்தியென்றுந்தன்மெய்வடிவாஞ்சிவத்தைச், செம்மையேபொறுகைமுத்தியென்றுஞ்செப்புவர்கள் சிவனடியைச்சேருமுத்திசெப்புவதிங்கியாமே." என்றமையால் சிவனடியைச்சேருமுத்தி யிவைநீங்கலாக வேறேயுமுண்டென்பது கருத்தெனவறிக. அஃதாவது சித்தியாரில். "இரும்பைக்காந்தம் வலித்தாற்போலியைந்தங்குயிரை யெரியிரும்பைச்செய்வதுபோலிவனைத்தானாக்கி, யரும்பிந்தனத்தையனலழிப்பதுபோன்மலத்தை யழித்தமலனப்பணைந்தவுப்பேபோலணைத்து, விரும்பிப்பொன்னினைக்குளிகையொளிப்பதுபோலடக்கி மேலளித்துத்தானெல்லாம்வேதிப்பானாகிக், கரும்பை

த்தேனைப்பாலைக்கனியமுதைக்கண்டை கட்டியையொத்திருப்பனந்தமுத்தியினிற்கலந்தே." எ-து. கண்டுக்கொள்க. ஆகையால் முத்திக்கேதுவான வான்மாக்களுக்குச் சிவன்றனது திருவடிஞானத்தைக் கடாக்ஷிக்குமவதரத்து அவர்களுக்குண்டான மலமாயாகன்மங்களை நீக்கித் தன்னுடையதிருவடியிலே கூட்டிக்கொள்ளுவனென்பதே சைவசித்தாந்த முத்தியெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில். "படிக்குநூல்கள்சிவாகமம் பசுபாசமோடுபதித்திற, மெடுத்தியம்புவதீசன்வார்கழ லேத்திடுந்தொழிலென்றுமே, விடுத்திடும்பொருள்காமமாதிகள் வேண்டிடும்பொருளீண்டருள், முடித்துமும்மலம்விட்டுநின்மல னோடுநின்றிடன்முத்தியே." எ-ம். "அநாதிமுத்தனைப்பரனையசலனையெல்லாவறிவுதொழிலநுக்கிரகமுடையவரன்கன்ம, நுனுதிகமற்றொத்தவிடத் தேசத்திநிபாத நுழைவித்துமலங்களெலாநுங்கநோக்கி, மனுதிகரணங்களெலாமடக்கித்தன்னை வழிபடுநல்லறிவருளிமாக்கருணைக்கையா, லினுதுபிறப்பினினின்றுமெடுத்துமாறுவின்பமுத்திக்கேவைப்பனெங்கண்முத்தியிதுவே," எ-ம். கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது ஆன்மாக்கள் முத்தியைப்பெறுமிடத்து மகளிருடத்துண்டாகியபோகமே முத்தியென்கிறவுலகாயிதனும் பஞ்சகந்தங்களுங் கெடுகிறதே முத்தியென்கிற புத்தரிற்சௌத்திராந்திகனும் மூன்றுவகையாகச் சொல்லப்பட்டகுணங்கள் கெடுகிறதே முத்தியென்கிற அமணரில் நிகண்டாவாதியும் எங்கும் விரிந்திருக்கப்பட்ட கன்மங்கெடுகிறதே முத்தியென்கிற பிரபாகரனும் ஆணவமலங்கெடுகிறதே முத்தியென்கிற அகச்சமயத்திற் பேதவாதியும் முத்தியினுஞ்சரீரமழியாதென்கிற அகச்சமயத்திற் சிவசம்வாதியும் இந்தவுடலிலே ஜீவித்துநிற்கிற ஜீவான்மாவுக்கு விவே

கஞானமுண்டாகிறதே முத்தியென்கிற மாயாவாதியும் இந்தவான்மாகெடுகிறதே முத்தியென்கிறபாற்கரியனும் ஆன்மாபசுகரணங்கெட்டுச் சிவகரணமாகிறதே முத்தியென்கிற சங்கிராந்தவாதியும் முத்தியிலு மொன்றுமறியாமற்கிடக்குமென்கிற பாடாணவாதியும் ஆகவிப்படிச்சொல்லப்பட்ட பத்துவகைமுத்தியு மறுத்து இவையெல்லாங்குற்றத்தையுடைய முத்திகளென்றுகாட்டி ஆன்மா வாணவமாயைகாமியமென்னப்பட்ட மும்மலங்களுநீங்கிச் சிவனுடையதிருவருண்ஞானத்தைப்பெற்றுச் சிவாநுபவமாய்நிற்கிறதேசைவசித்தாந்தமுத்தியென்னுமுறைமையையுமறிவித்தது. (நஅ)

பொதுமுற்றும்.

இண்டாஞ்சூத்திரமாகிய பசுவிலக்கணமும்

பாசவிலக்கணமுமுற்றிற்று.

ஆ பாயிரமுட்பட திருவிருத்தம்-ருO.

உண்மை

இங்ஙனங் கூறப்பட்ட முத்தியைப்பெறுமிடத்து உண்மையையறிந்து முத்திபெறவேண்டுகையால் மேலுண்மையை யருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

இந்தவுண்மையில் முதற்செய்யுளுக்குத் தொந்தனையாவது இங்ஙனம் பொதுவாக வருளிச்செய்யப்பட்ட செய்யுளைம்பதினும் பொருள்களைச் சாமானியத்திலேயுண்டென்றுநாட்டினதொழிய விசேடவத்தங்களை யருளிச்செய்யாததேதென்று வினவினமாணுக்கனைநோக்கி யிவைகளெல்லாம் பெத்தநிலையைக்கூறிவருகையால் பெத்தங்கூறுமிடத்து முத்திநிலையாகிய விசேடவத்தங்களைக் கூறவழக்கல்லாதபடியாலும் அன்றியும் பதியையில்லையென்றும் பசுவையில்லையென்றும் பாசத்தையில்லையென்றுஞ் சொல்லப்பட்டசமயிகளெதிர்ப்படுகையா லவர்களைநோக்கி மறுத்துக்கூறுமிடத்துப் பொருள்களைச் சாமானியத்திலேயுண்டென்றுநாட்டுமதொழிய ஆன்மதரிசனஞ் சிவதரிசனமுதலாகவுள்ள விசேடவத்தங்களைக்கூற வழக்கல்லாதபடியாலு முற்கூறிய செய்யுட்களைம்பதும் பொதுவாகக் கூறினேமென்றும் ஆன்மதரிசனம் சிவதரிசனமுதலாகவுள்ள விசேடவத்தங்களை மேலுண்மையிலே சொல்லுகிறேமென்னு முறைமையை யருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

இங்கிவைபொதுவியம்புமென்பர்களிதன்மேலான்மாத்
தங்கியவஞ்சவத்தைதன்னுண்மையுணர்த்துந்தன்மை
பொங்கொளிஞானவாய்மையதன்பயன்புனிதனும
மங்கதினணைந்தோர்தன்மையறைகுவனருளினாலே. (க)

உண்மைநிலையி லொன்பதுதிறனும்
வண்மையுடனே வனப்புறவகுத்தது.

வி - ம்: இங்கிவைபொதுவியம்புமென்பார்கள். எ-து. இவ்விடத் திங்ஙனங் கூறப்பட்ட செய்யுளெம்பதும் பெத்தநிலையைக்கூறுகையாலே பொருள்களைச் சாமானியமாகக் கூறினதென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்,— இதன்மேல். எ - து. இந்தப்பொதுவைம்பதிற்கு மேலாகக்கொண்டு உண்மையாவது,— ஆன்மா. எ - து. ஆன்மவிலக்கண மோரதிகாரத்தானும்,— தங்கிய வஞ்சவத்தை. எ - து ஆன்மாதங்கப்பட்ட சாக்கிரஞ்சொப்பனஞ்சுழுத்தி துரியந் துரியாதீதமென்னு மஞ்சவத்தையின்முறைமை யோரதிகாரத்தானும்,— தன்னுண்மையுணர்த்துந்தன்மை. எ - து. ஆன்மாக்க ளாணவமலத்தாலேமறைப்புண்டு மூலாதாரத்திலேகேவலப்பட்டுக்கிடக்கிறவவதரத்துச் சிவன்கலையாதிதத்துவங்களைக் காரணமாயையிலேநின்றுந் தோற்றுவித்து அதனாலே யந்தவாணவமலத்தைநீக்கியறிவிக்கிறமுறைமை யோரதிகாரத்தானும்,— பொங்கொளிஞானவாய்மை. எ-து. மிகுந்தபிரகாசமாகிய பேரறிவாய்நிற்கிறசிவனுடையஞானத்தினுண்மையை யோரதிகாரத்தானும்,—அதன்பயன். எ-து அந்தஞானத்தைப்பெறுமவர்பயனாகிய ஆன்மதரிசனம் ஆன்மசுத்தி ஆன்மலாபமென்னப்பட்ட மூன்றுவகையு மூன்றதிகாரத்தானும்,— புனிதனாமம். எ - து. சுத்தனாயிருக்கிற சிவனுடைய திருநாமமாகிய அஞ்செழுத்தருணிலை யோரதிகாரத்தானும்,— அங்கதினணைந்தோர்தன்மை. எ - து. அவ்விடத்தந்த வுண்மையாகிய சிவத்துடனே கூடிநின்றநுபவிக்கிற சீவன்முத்தரிலக்கணமு மோரதிகாரத்தானும்,— அறைகுவனருளினாலே. எ - து. ஆக விங்ஙனஞ்சொல்லப்

பட்ட வதிகாரமொன்பதினாலுஞ்சொல்லாநின்றேன் றம்பிரானாநுக்கிரகத்தாலே யிந்தவுண்மையைம்பதையும். எ-று.

று - ம். பொதுவியல்பு. எ - கு. முற்கூறியசெய்யுளைம்பதினு முண்டாகிய பொருள்களைச் சாமாநியத்திலே பெத்தநிலைகளைச் சொன்னதென்று பொருட்படுத்தினத்துக்கு வழியேதென்னில் சிவ ஞான்மாக்களைமலபாகம்வருத்துமிடத்து மலமாயாகன்மகளோடுங் கூட்டி ஜநநமரணப்படுத்தி மலபாகம்வருத்து முறைமையைக்கூறுகையா லப்படிச் சொன்னதெனவறிக. மற்றவைம்பது முண்மையென்றது மந்தப்பெத்தநிலையைநீங்கி முத்திக்கேதுவாயுள்ள வுண்மைநிலையைப் பெறவேண்டும் பக்குவான்மாக்களைநோக்கிக் கூறுகையாலெனவறிக. இவையிரண்டுக்கும். பி - ம். கோவைத்திருவாசகத்தில். "பொதுவினிற்றீர்த்தென்னை யாண்டோன் புலியூரரன்." எ - ம். "பொதுக்கடிந் தினிதுகாத்து." எ - ம். சித்தியாரில். "ஆரணநூற்பொதுச் சைவமருஞ்சிறப்புநூலாம்." எ - ம். வருமேதுக்களைக் கண்டுகொள்க. இனி தன்னுண்மை யுணர்த்துந் தன்மை. எ - கு. கேவலாவத்தை யான்மாவுக்குண்மையென்றதேதென்னில் செம்பைக் காளிதமறைத்தாற்போலவு மக்கினியைக் காட்டமறைத்தாற்போலவு மான்மாவை யாணவமல மநாதியேமறைத்துநிற்கையா லப்படிச்சொன்னதெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில். "கேவலசகலசுத்த மென்னுமூன்றவத்தையான்மா, மேவுவன்கேவலந்தன் னுண்மை." எ-ம். இந்நூலினும். "உறுந்தனியதீதமுண்மை யுயிர்க்கு." எ-ம். வருமது மிப்பொருட்பற்றியெனவறிக.

இதனாற்சொல்லியது முற்கூறப்பட்ட செய்யுளைம்பதும் பொதுவென்று மேலுண்மையைம்பதினு மான்மவிலக்கண முதலாகவொன்பததிகாரமாகவருமுறைமையுமறிவித்தது(க)

இங்ஙனமுன்னமருளிச்செய்த செய்யுளைம்பதினுள் பாயிரம் பன்னிரண்டுசெய்யுளு நீக்கி மற்றுள்ளவையெல்லா மூதற்சூத்திரமு மிரண்டாஞ்சூத்திரமுமாக வகுத்தருளிச் செய்து மேலுண்மையிலே நீக்கியுள்ள மூன்றாஞ்சூத்திர முதலாகப் பத்துச்சூத்திரமும் வருகையா லதில்மூன்றாஞ்சூத்திரமாகிய வான்மவிலக்கண மருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

அப்படி யான்மவிலக்கண மூன்றாஞ்சூத்திரமாகைக்கு வழியேதென்னில் சிவஞானபோதத்தினுஞ் சிவஞானசித்தியாரினு மூன்றாஞ்சூத்திர மான்மவிலக்கணமாக நிற்கையாலிவையிற்றையு மப்படிவைக்கப்பட்டதெனவறிக. அவையெங்ஙனேயென்னில் சிவஞானபோதத்தில். "உளதிலதென்றலி னெனதுடலென்றலி, னைம்புலனொடுக்க மறிதலிற்கண்படி, லுண்டிவினையின்மையி னுணர்த்தவுணர்தலின், மாயாவியந்திர தனுவினுளான்மா." எ - ம். சிவஞானசித்தியாரில். "உயிரெனப்படுவதிந்த வுடலின்வேறுளதாயுற்றுச், செயிருறுமிச்சாஞானச் செய்திகளுடையதாகிப், பயில்வுறுமின்பதுன்பப் பலன்களுநுகரும்பார்க்கிற், றுயிலொடுமைந்தவத்தைப் படுமுண்மைதுரியாதீதம்." எ - ம், மூன்றாஞ்சூத்திர மான்மவிலக்கணத்துக் கருளிச்செய்கையா லிந்நூலினும். "செறிந்திடும்." என்ற விருத்தந்தொடங்கி "ஓரிடத்திருத்தல்." என்னும் விருத்தமுடிவாகிய செய்யுளெட்டினும் ஆன்மவிலக்கணத்தை யருளிச்செய்கையால் இதுவுமப்படி மூன்றாஞ்சூத்திரமாக நின்றதெனவறிக. இவ்வதிகாரத்துக்கு வகுத்த செய்யுட்களில் ஆன்மப்பிரகாசம் வருமுறைமைக்கும் வகுப்புகளுக்கும் வகையேதென்னில் "தனியதீதமுண்மை யுயிர்க்கெனவுணர்த்துமன்றே." எ - ம். "அருவினையுடலுளாவி யறிவினாலறியுமன்றே."

எ-ம். "ஆன்மா வறிவிலதாகுமீச னசேதனத்தளித்திடா னே." எ-ம். "அசத்தைச் சத்துடனின்றுநீக்குந் தன்மை யாற்சதசத்தாமே." எ-ம். ஆன்மாவின்பிரசங்கம் வரு கையா லப்படிச்சொல்லப்பட்டதெனவறிக. அவைவருமா று மேல்வருமிடத்திற் கண்டுகொள்க.

மேல்வரும்விருத்தத்துக்குத் தொந்தலையாவது இங்ஙன ஞ்சொல்லப்பட்டவான்மா வொருசரீரத்தோடுங்கூடி ஜீவி க்குமுறைமையை யருளிச்செய்வா னெடுத்துக்கொண்டரு ளியது.

செறிந்திடுமுடலுண்மன்னிச் சேர்புலன்வாயில்பற் றி, யறிந்ததிலமுந்துமொன்று மறிந்திடாவறியுந்தன்மை, பிறிந்தடையஞ்சவத்தை பெருகியமலத்தாற்பேணி, யுறு ந்தனியதீதமுண்மை யுயிர்க்கெனவுணர்த்துமன்றே. (உ)

தொல்லைவினையாற் றுவக்குண்டுழலும்
பல்லுயிர்த்தன்மை பாரித்துரைத்தது.

வி-ம். செறிந்திடுமுடலுண்மன்னி. எ-து. கன்மத் துக்கிடாகச்செறிந்து கூடினசரீரத்திலே நிலைபேறுய்நின் று,— சேர்புலன்வாயில்பற்றி யறிந்ததிலமுந்தும். எ-து. பொருந்தத்தக்க விடயங்களை யிந்திரியங்களினாலும் பூதங்க ளினு மந்தக்கரணங்களினாலுங் கலாதிகளினாலுஞ் சுத்த தத்துவங்களினாலும்பொருந்தியறிந்தநுபவியாநிற்கும்,— ஒன்றுமறிந்திடா. எ-து. இப்படியிந்தத்தத்துவங்களினாலே யறிந்து அநுபவிக்கச்செய்தேயு மிவையிற்றுலேயல்லோ வ றிகிறேமென் றறியமாட்டாது,— அறியுந்தன்மைபிறிந்து. எ-து. அப்படிவிசுவவியாத்தனுய் நிற்கச்செய்தே யறிக ருவிகள் பதினுறுநீங்கி நின்றகருவிகளோடுங்கூடி,— அடை யஞ்சவத்தை பெருகியமலத்தாற் பேணியுறும். எ-து. ஒ

மூங்கிலே சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியந்துரியாதீதமென்னப்பட்ட வைந்தவத்தைகளினு மிக்கவாணவத்தான் மறைப்புண் டழுந்தாநிற்கும். இதுவன்றியும் இங்ஙனம்பொருட்கூறிவந்த பதமிரண்டையும் ஒன்றுமறிந்திடாவறியுந்தன்மை பிறிந்தடையஞ்சவத்தை பெருகியமலத்தாற் பேணியுறும் என்றொருபதமாக்கி ஒன்றுமறிந்திடா, எ-கு. ஒன்றுமறியாமற் கேவலப்பட்டுக் கிடக்கத்தக்கதாக அறிகருவிகளுநீங்கி அடைவே யவத்தைப்பட்டுவருமென்று வருகாலமாகப்பொருளுரைப்பினுமாம்.—தனியதீதமுண்மை. எ-து. ஆன்மாவினியற்கையான சுபாவத்தைவிசாரிக்குமிடத்து ஜீவிக்குங்கருவிகளெல்லாநீங்கி முற்கூறிய வாணவமலத்தான் மறைப்புண்டு மூலாதாரத்திலே பிரகிருதிதத்துவமுடம்பாகக் கிடந்தழுந்துமதே யதீதமாம். இவைகளெல்லாம்யார்க்கென்னில்,— உயிர்க்கெனவுணர்த்துமன்றே, எ-து. இந்தமுறைமைக ளான்மாவுக்கென்று சிவாகமங்கள் சொல்லாநிற்கும். எ-று.

ரு-ம். செறிந்திடுமுடலுண்மன்னி. எ-கு. கன்மத்துக்கீடாகச்செறிந்து கூடின வுடம்பென்று பொருட்கூறியதேதென்னில் ஆன்மாக்கள் கன்மத்தைப் புசிக்குமிடத்தொவ்வொரு சரீரங்களையெடுத் ததஞ்ஞேடுங்கூடிப் புசிக்கவேண்டுகையா லப்படிச்சொன்னதெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில். "உடல்விடாயோனிபற்றி." என்றசெய்யுளின் முடிவிலே. "இடருறுமுருவஞ்சன்மத் தளவினிலெடுக்குமன்றே." எ-ம். இந்நூலினும். "எண்ணரிதாய்." என்னுஞ்செய்யுளில் "இருவினையின்றன்மைகளுக் கீடானயாக்கை யுண்ணலருளானண்ணி." எ-ம். வருமதுகண்டுகொள்க. இனி சேர்புலன்வாயில்பற்றி யறிந்ததிலழுந்தும் எ-கு. ஆன்மாகூடியநுபவிக்கத்தக்க விடயங்களை யிந்

திரியங்களினாலும் பூதங்களினாலு மந்தக்கரணங்களினாலு ங்கலாதிகளினாலுஞ் சுத்ததத்துவங்களினாலு மறிந்தநுபவிக் குமென்றதேதென்னில் அப்படி யான்மா விந்திரியங்களைக் கொண்டு விடயங்களைக் கொள்ளுமிடத்துப் பூதங்களினிட மாகநின் றறிகையினாலெனவறிக. அந்தக்கரணங்களினாலெ ன்றது மனது பற்ற ஆங்காரமெழுப்ப புத்திநிச்சயிக்க சித் தஞ் சிந்தித்ததெனவறிக. இனி கலாதிகளினா லறியவென்ற து காலங்கூட்டியும் நியதிவரைந்துங் கலை தொழிற்படுத்தி யும் வித்தை யறிவையெழுப்பியும் அராக மிச்சையையெழு ப்பியும் புருடன் போகவிச்சாவாகியும் பிரகிருதியமூர்த்து வித்தும் வருகையெனவறிக. இனி சிவதத்துவங்களினா லறி யவென்றது அவையிற்றைப் பிரேரிப்பிக்கையினா லெனவறி க. இனியொன்றுமறிந்திடா. எ - கு. அந்தத் தத்துவங்க ளினாலே கூடியறிந்து வருமிடத்து இவையிற்றாலேயல்லோ கூடியறிந்து வருகிறோமென் றான்மாவறியமாட்டாதென்று பொருட்கூறியதேதென்னில் (ஆன்மா தத்துவங்களோடுங்கூ டினவிட மயக்கவறிவாகையாலே தன்செயலறுதி தோன்றா மல் யானெனதென்கிறமமதைபற்றிநிற்கையா லப்படிச்சொ ன்னதெனவறிக. இனி யறியுந்தன்மைபிறிந்து. எ - து. ஆன்மாவிசுவவியாத்தனாய் நிற்கச்செய்தே யறிகருவிகள் பதினாறுநீங்கி நின்றகருவிகளோடுங்கூடி யவத்தைப்படு மென்று பொருட்கூறியதேதென்னில் ஆன்மா தத்துவமுப் பத்தாறோடுங்கூடி விசுவவியாத்தனாய் நிற்கச்செய்தே யவ த்தைப்படுமவதரத்து அறிகருவியாகிய சுத்ததத்துவமைந் தும் வித்தியாதத்துவமேழில் பிரகிருதிதத்துவ நீங்கலாக கலாதிகளாறும் பூதங்களைந்தும் ஆகப்பதினாறு நீங்கிநின்ற கருவியிருபதும் தொண்ணூற்றாறு வகையில் வாயுக்கள்பத் தும் வசனாதிகளைந்தும் ஆக முப்பத்தைந்தோடுங் கூடிச்

சாக்கிரத்தில் முப்பத்தைந்துகருவியும் சொப்பனத்தி லிரு பத்தைந்து கருவியும் சுழுத்தியில் மூன்றுகருவியும் துரிய த்தி லிரண்டுகருவியும் அதீதத்தி லொருக்கருவியுமாக நிற்கை யா லப்படிச்சொன்னதெனவறிக. அப்படியானலு மவத் தைக்கு அறிகருவிகள்பதினறும் நீங்குமென்பதொழிய வா யுக்கள்பத்தும் வசனதிகளைந்தும் சாக்கிரத்தினுங்கூடி நிற் கச்செய்தே யவத்தையிற் கூடுமென்றதேதென்னில் அப்ப டிச்சாக்கிரத்திற் கூடிநின்றாலு மவத்தைக் கவைமேலிட் டு ஜீவிக்கையினலே யப்படிச்சொன்னதெனவறிக. அது வெவ்வணேயென்னில் அந்தத்தசவாயுக்களுக்குங் குணமாவ து பிராணவாயு மேனேக்கியும் அபானவாயு கீழ்நோக்கியும் வியானவாயுகலந்தும் உதானவாயுவிக்கியும் சமானவாயு சம மாக்கியும் நாகவாயுதும்மியுங் கூர்மவாயு கொட்டாவியுஞ் சோம்பும் கிரிகரவாயு கண்ணிமைப்பித்தும தேவதத்த வாயு நகைப்பித்தும் தனஞ்சயவாயு நாடிகளைத்திறப்பித்து டலை வீக்கியும் வருமாகையா லப்படிச்சொன்னதெனவறி க. இதற்கு. பி-ம். தத்துவசரிதையில். "செப்புமிடை பிங்கலைநற் சுழுமுனைகாந்தாரி திகழத்திசிங்நுவையு மலம் புடையும் புருட, ஞெப்பரியசங்கினியுங் குதமுமாகு மொருபத்திற்பிராணனபானன் பின்னும் வியான, தப்பிலு தானன்சமான ஞகன்கூர்மன் றருகிரிகரன்றேவதத்தன் ற னஞ்செயனும்பத்தி, லொப்பினசிருதங்கலத்தல் விக்கல் சமந்தும்ம லுயர்சோம்புகண்ணேற்றல் நகைமலர்ச் சீவிக் கே." எ-து. கண்டுகொள்க. அவையெல்லாம் விசுவவி யாத்தியில்லையோவென்னி லவையுண்டானலு மான்மபோத மேலிட்டுநிற்கையா லவையடங்கியு மவத்தையி லான்ம போதமலத்தினலேமறைந்து அடங்கிநிற்கையா லவைமேலி ட்டுநிற்குமென்ற தெனவறிக. அதற்கநுபோகமேதென்னில்

விசுவவியாத்தியிலடங்கிநின் றியங்கின வாயுக்கள் அவத்தை யிலேமேலிட்டுப் பெருமூச்செறிந்துநின்று காரியப்படுமா கையா லப்படிச்சொன்னதெனவறிக. வாயுக்களப்படியா னாலும் வசனாதிகளைந்தும் விசுவவியாத்தியிலு முண்டாயி ருக்க அவத்தையிலே மேலிட்டுநின்று ஜீவிக்குமென்ற தே தென்னில் விசுவவியாத்தியிலுங் கன்மேந்திரியமான வாக் காதிகளுக்கு விடயமாகநின்று ஜீவித்தாலு மவத்தைப்படு மவதரத்துஞ் சொப்பனத்தி லந்தவாக்காதிகணீங்கினாலும் வசனாதிகணின்று ஜீவிக்கையா லப்படிச்சொன்னதெனவறி க. அஃதெங்ஙனேயென்னில் ஆன்மா சொப்பனத்தனான வவதரத்தும் இந்தப்பூதவுட லசைவற்றுக்கிடக்கச்செய்தே யு மொருவரோடுவைதும் வாழ்த்தியும் சிலவிடங்களுக்குப் போயு மீண்டுஞ் சிலபண்டங்களையிடுதலேற்றல் செய்தும் விசர்க்கித்தும் வீட்டித்தும் மைதுனம்பண்ணியும் சிறுநீர் போக்கியும் வருகையால் அவத்தையிலும் வசனாதியுண்டா கையா லப்படிச்சொன்னதெனவறிக. ஆகையாலவத்தை யில் வாயுக்கள்பத்தும் வசனாதிகளைந்தும் மேலிட்டுநின்று ஜீவிக்குமென்பதை யநுபவத்தாற்கண்டுகொள்க. இனியடை யஞ்சவத்தைப்பெருகிய மலத்தாற்பேணியுறும். எ - கு. அ வத்தைகளினடைவே சாக்கிராவத்தைக்கு முப்பத்தைந்து கருவியென்றும் சொப்பனாவத்தைக்கு இருபத்தைந்துகருவி யென்றும் சுழுத்தியவத்தைக்கு மூன்றுகருவியென்றும் து ரியாவத்தையில் இரண்டுகருவியென்றும் அதீதாவத்தையில் ஒருகருவியென்றும் பொருட்கூறியதற்கு. பி - ம். சித்தியா ரில். "சாக்கிரமுப்பத்தைந்து நுதலினிற்கனவுதன்னி, லா க்கியவிருபத்தைந்துகளத்தினிற்சுழுனைமூன்று, நீக்கியவித யந்தன்னிற் றுரியத்திலிரண்டுநாபி, நோக்கியதுரியாதீத நு வலின்மூலத்தொன்றே." எ - து. கண்டுகொள்க. அன்றி

யும் பெருகியமலம். எ-கு. மிக்கமலமென்று பொருட்கூறியதேதென்னில் அந்தவாணவமல மொன்றுமிருந்துஞ் சர்வான்மாக்களையு மறைத்துநிற்கையாலு மநாதியேதொடங்கி மேலுமான்மவர்க்குமுள்ளமட்டு மந்தமலநீங்காதாகையாலு மப்படிச்சொன்னதெனவறிக. இனிதனியதீதமுண்மை.எ-கு. கருவிகளொன்றுமில்லை யென்றிருக்கப் பிரகிருதிதத்துவமுடம்பாகக் கிடக்கிறதேயதீதமென்று பொருட்கூறியதேதென்னில் அந்தப்பிரகிருதிதத்துவ மற்றுள்ளகருவிகளைப்போல ஆன்மாவை விட்டும்பற்றியும் வாராமற் கேவலசகலமிரண்டினும் உயிருமுடலும்போலப் பிரிவற்றுநிற்கையாலப்படிச்சொன்னதெனவறிக. அப்படியானல் தனியதீத மென்பானேனென்னில் அஃதாவது யாதாமொருவர் தனித்திருக்கிறார்களென்று லவர்களுயிருமுடம்பு மிரண்டாயிருக்கவும் ஒருவரொன்றும் தனியரொன்றும் பெயர்பெற்றாற்போல வெனவறிக. இதற்குமேல் "எண்ணவொன்றிலாதநீதம்" என்னும் விருத்தத்துக்கெழுதுகிற நுட்பத்தினுங்கண்டுகொள்க. இனியதீதத்தை யான்மாவுக்கு உண்மையென்பானேனென்னில் கருவிகளோடுங்கூடிநின்று ஜீவித்தவிடம் செயற்கையறிவாகையாலும் ஜீவிக்குங்கருவிக ணீங்கினவிட மியற்கையறிவாகையாலு மப்படிச்சொன்னதெனவறிக. அப்படியான்மாவுக் கியற்கையான சுபாவமேயுண்மையென்பதற்கு. பி-ம். "கேவலந்தன்னுண்மை" எ-ம். "விஞ்சியசுபாவமலத்துடன் மேவுதல்" எ-ம். வருமதுநூல்களிலே கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது ஆன்மாக்க ளொவ்வொருசரீரங்களிலே கூடி நிற்குமிடத் திந்திரியங்களோடுங் கூடிநின்று ஜீவிக்குமுறைமைய மப்படிநிற்கச்செய்தே யறிகருவிகணீங்கி யவத்தைப்படுமுறைமைய மதீதத்திற்கேவலாவத்தைக்கு

ஜீவிக்குங்கருவிகளெல்லாநீங்கி யாணவத்தான்மறைப்புண்டு மூலாதாரத்திலே கிடக்குமுறைமையு மறிவித்தது. (உ)

இப்படியான்மாவென்பதொன் றுண்டாயிருக்கச்செய்தே யதனையில்லையென்று உலகாயிதனிந்தப்பூததேகந்தானே யறிகிறதென்றும் புத்தரில்மாத்திமீக னிந்திரியங்கடானே யறிகிறதென்றும் மாயாவாதி பிரமத்தின்சந்நிதியிலே யந்தக்கரணங்கடானே யறிகிறதென்றும் மீளவும் உலகாயிதன் வாயுப்பூதந்தானே யறிகிறதென்றுஞ் சொல்லுவானேனென்று வினவின மாணவகனை நோக்கி யவரவரத்தங்களை மறுத்துக்காட்டிச் சிவனறிவிக்க வான்மாவே யிந்தவுடலிலே நின்றறிகிறதென்னு முறைமையை மேலருளிச்செய்வானெடுத்துக்கொண்டருளியது.

உருவுணர்விலாமையானு மோரொருபுலன்களாக
மருவிநின்றறிதலானு மனுதிகடம்மின்மன்னித்
தருபயனுகர்தலானு முயிர்சடமாதலானு
மருவினையுடலுளாவி யறிவினாலறியுமன்றே. (ரு)

புகலுயிரில்லெனும் புறச்சமயத்தவர்
தகவிலுரையைச் சாற்றிமறுத்தது.

வி - ம். அப்படி யான்மாவென்பதொன்றில்லை யிந்தப்பூததேகந்தானே யறியுமென்கிற வுலகாயிதன் கருத்தை மறுத் தருளிச்செய்கின்றது. உருவுணர் விலாமையானும். எ - து. இந்தச்சரீரமான துறக்கமானபொழுதுஞ் சவமானபொழுது மறியாதபடியாலே யிவையிற்றைக்கொண்டறிகைக் கொரு ஆன்மாவுண்டென் றறிவாயாக. அன்றியும் இரண்டாவது இந்திரியங்களறியுமென்ற மாத்திமீகன்கருத்தை மறுத் தருளிச்செய்கின்றது.—ஓரொருபுலன்களாக மருவிநின்றறிதலானும். எ - து. இந்திரியங்களுறக்கத்தினறியா

தபடியாலும் அன்றியுமிவை யொன்றறிந்த தொன்றறியாதப டியாலு மிந்த விந்திரியங்களைக் கொண்டறிகைக் கொருஆ ன்மாவுண்டென் றறிவாயாக. அன்றியு மூன்றாவது அந்த க்கரணங்க ளறியுமென்கிற மாயாவாதிகருத்தை மறுத்தரு ளிச்செய்கின்றது.—மனாதிகடம்மின்மன்னித் தருபய னுகர் தலானும். எ - து. மனம் புத்தி யாங்காரஞ் சித்தமென்ன ப்பட்ட அந்தக்கரணங்க ளொன்றையொன்றறியாதபடியா லும் அன்றியும் ஒன்றறிந்த தொன்றறியாதபடியாலும் இ வையிற்றைக்கொண் டறிகைக் கொரு ஆன்மாவுண்டென் றறிவாயாக. அன்றியும் நாலாவது வாயுப்பூத மறியுமென் றுமீளவும் உலகாயிதன்சொன்ன கருத்தை மறுத்தருளிச்செ ய்கின்றது.— உயிர்சடமாதலானும். எ - து. உறக்கத்தின் கண் வாயுப்பூதமியங்கச்செய்தேயு மறிவற்றுக்கிடக்கையா லு மிதனைக்கொண்டறிகைக் கொரு ஆன்மாவுண்டென்றறி வாயாக. இங்ஙனமிவை யறியாதாகையால்,— அருவினை யுடலுளாவி யறிவினாலறியுமன்றே. எ - து. கட்புலனுக்கு த்தெரியா மலரூபமா யிருக்கப்பட்ட கன்மத்துக்கீடாகவுண் டான வுடம்பிலே நிற்கிறவான்மா கத்தாவின் றிருவருளி னாலே யறிவிக்கவறிந்து ஜீவியாநிற்கும். எ - று.

இங்ஙன் நாட்டப்பட்ட சமயிகளுக்கு. உ - ம். உரு வுணர் விலாமையானும். எ - கு. இந்தப்பூததேகமானது சவமானபொழுதறியாதென்றும் அன்றியும் உறக்கத்தின் கண்வாயுப்பூதமறியாதென்றும் உலகாயிதன்கருத்தை மறு த்ததற்கு. பி - ம். சிவஞானசித்தியாரில். "அறிவுபூதம தென்னில்வேறு புறத்தறிந்தமைகண்டிலஞ், செறிவுதானு டலத்தெனிற் சவமானபோதுடறேருமோ, குறிகொளாதுட ல்வாயுவானது கூடிடாமையினென்னினீ, பிறிதராதுயிர்நிற் கஞான முறக்கமென்பிறவாததே." எ - து. கண்டுகொள்

க. இனி ஒரோருபுலன்களாக மருவிநின்றறிதலானும். எ-கு. இந்திரியங்களறியாதென்றும் புத்தரில்மாத்திமீகன் கருத்தை மறுத்ததற்கு. பி - ம். சித்தியாரில். "கருவியுமொளியும் வேறு கண்டிடுங்கருத்துநிற்கப், பொருள்புணராமையாலே போதம்வந்தெழுவதின்று, மருவிடும்பொருளுண்டாக வந்தெழும்புத்தியானற், பொருளுளதாகுமாகப் போதமுமுள்ளதாமே." எ - ம். "அறிவதைம்பொறியேயென்னி னுறக்கத்துமறிவாயாகு, மறிவதுமொன்றென்றாக வொன்றொன்றயறியுமென்னி, லறிவுகளொன்றையொன்றங் கறிந்திடாவைந்தையுங்கொண், டறிவதொன்றுண்டதான்மா வைம்பொறியறிந்திடாவே." எ - து. கண்டுகொள்க. இனிமூன்றுவது மனாதிகடம்மின்மன்னித் தருபயனுகர்தலானும். எ-கு. அந்தக்கரணங்க ளறியாதென்று மாயாவாதிகருத்தை மறுத்ததற்கு. பி - ம். சித்தியாரில். "வேறதாகுமுருவத்திலேபரம் வெளிப்படும்மெனவிளம்பினீ, யூறிலாவொருசவத்திலேயதுவு முண்டுகாணுணர்வதின்றுதான், மாறிவாயுவுமனாதியானவையும் வந்திடாமையினினின்றெனி, னீறுதானுடையதாயதோபிரம மென்கொலோவிவையிறப்பதே." எ - து. கண்டுகொள்க. இனி நாலாவது உயிர்சடமாதலானும். எ - கு. வாயுப்பூத மறியாதென்று உலாகாயிதனைமறுத்ததற்கு முற்பதத்திலே யிவனை மறுத்த உதாரணத்திலே கண்டுகொள்க. அன்றியும் உயிர்சடமாதலானும். எ-கு. பிராணவாயுவென்று பொருட்படுத்தி அகச்சமயத்திற் சங்கிராந்தவாதி என்பாருமுளர். அதற்கிந்தச்செய்யுளின் கருத்து "புகலுயிரில்லெனும் புறச்சமையத்தவர், தகவிலுரையைச் சாற்றிமறுத்தது என்று புறச்சமயிகளத்தத்தை மறுக்கையினாலே யது வத்தமல்ல வெனவறிக.

இதனாற்சொல்லியது ஆன்மாவென்பதொன்றில்லையெ ன்றுசொல்லுகிற உலகாயிதன் மாத்திமீகன் மாயாவாதி இவர்கள் மூவரத்தத்தையுமறுத்து மாணவகனைநோக்கி யான்மாவுண்டென்று நாட்டி யிந்தவான்மாவுஞ் சிவனறிவிக்க வறிந் திந்தவுடலிலேநின்று ஜீவிக்குமென்னு முறைமையை யறிவித்தது. (௩)

அப்படிச்சிவனறிவிக்க வான்மாவறியுமென்பது பொருளல்ல ஆன்மா தானேயல்லவோவறிந்து ஜீவித்துநிற்குமென்கிற அவிகாரவாதியையும் அதுவல்ல ஆன்மாவுக்கறிவில்லையென்கிற சங்கிராந்தவாதியையும் அதுவல்லவான்மாவுக் கிந்திரியங்க ளறிவைக்கொடுக்குமென்கிற சிவசமவாதியையும் அதுவல்ல ஆன்மாவுக்கென்ன வோர்சிற்றறிவுஞ் சற்றுமில்லை சிவ னறிவுகொடுத்தறிவித்தா லறியுமென்கிற பரிணாமவாதியையு மறுத் தருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

அறிவெனில்வாயில்வேண்டா வன்றெனிலவைதா
மென்னே, யறிவதையுதவுமென்னிலசேதனமவைதாமெ
ல்லா, மறிபவனறியுந்தன்மையருளுவனென்னிலான்மா,
வறிவிலாதாகுமீச னசேதனத்தளித்திடானே. (௪)

உயிருளதென்னு முட்சமயத்தவர்
செயிருறுமொழியைத் தெரிந்துசெப்பியது.

வி-ம். அப்படிச்சிவனறிவிக்கவேண்டா ஆன்மாதானே யறியுமென்கிற ஈஸ்வரவவிகாரவாதியை மறுத்தருளிச்செய்கின்றது. அறிவெனில் வாயில்வேண்டா. எ-து. அப்படியான்மாவை யறிவென்பையாமாகில் ஒன்றையறியுமிடத்து இந்திரியங்களைக்கொண் டறியவேண்டுவதில்லையாம். ஆகையாற் றற்சுதந்தரமாயறிகிறவ னல்லவென்பதுகருத்து. அ

ன்றியும் இரண்டாவது ஆன்மாவை யறிவல்லவென்கிற சங்கிராந்தவாதியை மறுத்தருளிச்செய்கின்றது.— அன்றெனிலவைதாமென்னே. எ - து. ஆன்மாவை யறிவல்லவென்பையாமாகில் அந்தவிந்திரியங்களா லிவனுக்கொருபயனுமில்லையாகவேண்டும். ஆகையா லிவனுக்கறிவில்லையென்னவுமொண்ணாதென்பதுகருத்து. அன்றியும் மூன்றாவது இந்திரியங்களான்மாவுக் கறிவைக்கொடுக்குமென்ற சிவசமவாதியை மறுத் தருளிச்செய்கின்றது.— அறிவதை யுதவுமென்னி லசேதனமவைதாம். எ - து. இந்திரியங்க ளான்மாவுக் கறிவைக்கொடுக்கு மென்பையாமாகிற் சேதனனாயுள்ளவான்மாவுக்கு அசேதனமாயுள்ளவிந்திரியங்களறிவைக்கொடுக்கமாட்டாது. ஆகையா லிந்திரியங்களைக்கொண்டு ஆன்மாவறியுமென்பது கருத்து. இனிநாலாவது ஆன்மாவுக்கென்னவோர் சிற்றறிவுதானுமில்லை சிவனறிவுகொடுத்தா லறியுமென்ற பரிணாமவாதியை மறுத்தருளிச்செய்கின்றது.— எல்லாமறிபவனறியுந்தன்மை யருளுவனென்னிலான்மாவறிவிலாதாகும். எ - து. சர்வத்தையு மொருநிகழ்ச்சியா யறிகிற சிவன்றானே யான்மாவுக் கறிவைக்கொடுப்பனென்று நீசொல்லில் முன்பான்மாவுக்குச் சிற்றறிவுதானுமில்லையாக வேண்டும். அப்படியான்மாவுக்கு முன்பு அறிவுண்டாமாகில் சிவனறிவிக்கவேண்டுமோ வென்று நீசொல்லில்,— ஈசனசேதனத்தளித்திடானே. எ - து. சிவனறிவுள்ளமுதலுக் கறிவைக்கொடுப்பதொழிந்து அறிவில்லாத கடபடாதிகளுக் கறிவைக்கொடான். எ - று.

உ - ம். இங்ஙனங்கூறப்பட்ட சமயிகள்மதமு மதற்குமறுப்புஞ் சங்கற்ப நிராகரணத்திலே காட்டுதும். ஈஸ்வரவவிகாரவாதி ஆன்மாவை யறிவென்றதற்கு. பி - ம். " பஃறுளைக்கடத்தி னுள்விளக்கேய்ப்ப - வறிவுளதாகு முரு

வுறுமுயிர்கள்." எ - து. அவன்மதத்திலே கண்டுகொள்க. அப்படியான்மா வறிவல்லவென் றவனை மறுத்ததற்கு. பி - ம். "இருந்துன்கேள்வி திருந்திடுமுயிர்க - ளறிவெனில்வாயிற் பொறிபுலனென்னை - மற்றவைபற்றி யுற்றறிந்திடுதலி - னறிவெனவழங்கு முயிரொனவுரைத்தல்- காணுங்கண்ணினன் கைகொடுதடவிப் - பூணும்பொருளின்பெயர்பல புகற - லென்னுங்கிளவி தன்னொடுதகுமே." எ - து. அவன்மறுப்பிலே கண்டுகொள்க. இனி யிரண்டாவது ஆன்மாவை யறிவல்லவென்று சங்கிராந்தவாதி சொன்னதற்கு. பி - ம். நீங்காதொளிருயிர் விளக்கெனநிற்கு - மளப்புறு மறிவின்று." எ - து. அவன்மதத்தில் கண்டுகொள்க. இனியான்மாவுக் கறிவுண்டென் றவனைமறுத்ததற்கு. பி- ம். "இன்றெனதுரையி னன்றியுயிரொளிர் - தீபம்போலத் தாபந்தரிலிருள் - செறியுந்தன்மையெ னறிவிலதாகி - யொளியெனவுரைத்த தெளிவதற்கேதாம்." எ - து. அவன்மறுப்பிலே கண்டுகொள்க. இனி மூன்றாவது இந்திரியங்க ளான்மாவுக்கறிவைக் கொடுக்குமென்று சிவசமவாதி சொன்னதற்கு. பி - ம். "பாசமைம்புலன் றேசுறவுணர்த்தப் - பசுத்தனிஞானம் புசித்திடுமன்றே." எ-து. அவன்மதத்தில் கண்டுகொள்க. இனி யிந்திரியங்க ளான்மாவுக்கறிவைக்கொடுக்கமாட்டாதென் றவனைமறுத்ததற்கு. பி - ம். "பொறிபுலன் றுன்றேவறியா." எ - து. அவன்மறுப்பிலே கண்டுகொள்க. இனி நாலாவது ஆன்மாவுக்குச் சிற்றறிவுதானு மில்லை சிவனறிவு கொடுத்தாலல்ல தறிவில்லையென்று பரிணாமவாதி சொன்னதற்கு. பி - ம். "அறிவோன்றானு மறிவிப்போனு மறிவாயறிகின் றோனுமறிவுறு - மெய்ப்பொருடானும் வியத்திதுவெனப்படு - மப்பொருளியாவு மவனேயென்றும்" எ-து அவன்மதத்திலேகண்டுகொள்க. இனி யான்மாவுக் கநாதி

யே சிற்றறிவுண்டென் றவனைமறுத்ததற்கு. பி - ம். "அறிவொன்றில்லோர்க் கிறையருளுதவல் - பிறிவறிவரியசெறியிருளிடத்தோ - ரந்தகர்காணவந்தோரெம்மை- நீவிருங்காணவேணுமென்றுங் - கெடுத்தொருதீபங்கொடுத்ததையொக்கு- மிச்செயற்கிறைவன் கொச்சையனன்றே." எ - து. அவன் மறுப்பிலே கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது ஆன்மாதானே யறியுமென்ற அவிகாரவாதியையும் ஆன்மாவுக்கென்னவோ றறிவில்லையென்ற சங்கிராந்தவாதியையும் ஆன்மாவுக்கு இந்திரியங்களறிவைக் கொடுக்குமென்ற சிவசமவாதியையும் ஆன்மாவுக்குச் சிற்றறிவுதானுமில்லை சிவனறிவித்தாலறியுமென்ற பரிணாமவாதியையும்மறுத்தருளிச்சிற்றறிவாயுள்ள வான்மாவுஞ் சிவனறிவித்தா லறியுமென்னு முறைமையையறிவித்தது. (ச)

அப்படி யான்மாவுக்கென்ன வோரறிவுண்டாமாகி லப்படியறிவிக்கின்றசிவனை யிவனாலறியப்படாதோ வென்கின்ற பரிணாமவாதியையுஞ் சிவனையான்மாவால் ஒருகாலத்தினு மறியப்படாதென்கின்ற பாடாணவாதியையு மறுத்து ஆன்மாவிந்திரியங்களுடனேகூடியறியு மறிவால் அசத்தாகிய பிரபஞ்சத்தை யறியுமதொழிந்து சிவனையறியமாட்டாதென்னு முறைமையை மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது,

அறிவினாலறிந்தயாவு மசத்தாதலறிதியென்று, மறிவினாலறிவொணாதாலாவதொன்றின்மைதொன்மை, யறிவுதானென்றைமுந்தியதுவதுவாகக்காணு, மறிவுகாணசத்துமற்ற தறிவினுக்கறியொணாதே. (௫)

பொறியாலுயிரறி பொருளசத்தந்த
வறிவாலமலனை யறிவரிதென்றது.

வி - ம். ஆன்மாவைச் சிவனறிவித்தாலு மிந்தஆன்மாவுக்கறிவுண்டாமாகி லந்தச்சிவனை யிவனாலறியப்படாதோவென்கிற பரிணாமவாதியை மறுத் தருளிச்செய்கின்றது. அறிவினாலறிந்தயாவு மசத்தாதலறிதி. எ-து. ஆன்மபோதத்தாற் சுட்டியறியப்பட்ட பொருள்களெல்லா மசத்தாயழிந்துபோகிற துண்மையென்றறிவாயாக. ஓகோ! வாக்குமனாதீத கோசரனாயிருக்கப்பட்டசிவனை யிவனாலறியப்படுமோவென்ற பாடாணவாதியைநோக்கி மறுத்தருளிச்செய்கின்றது.— என்றுமறிவினாலறிவொணாதாலாவதொன்றின்மை. எ - து. இந்தப்பெத்தத்திலொழிந்து முத்தியினு மிவன் சிவனையறியானுமாகி லிந்தவான்மாவுக் கொருபயனுமில்லையாம். அப்படிச் சொல்லுகிறதென்ன முற்பதத்திலே யான்மபோதத்தா லறியப்பட்டதெல்லா மசத்தாயழிந்துபோமென்றுசொல்லி இப்பொழு திவனாற்சிவனையறியப்படாதாமாகிலிவனுக் கொருபயனுமில்லை யென்பானேனென்று மீளவுங்கேட்ட பரிணாமவாதியை மறுத்தருளிச்செய்கின்றது.—தொன்மையறிவுதா னொன்றைமுந்தி யதுவதுவாகக்சாணு மறிவுகாணசத்து. எ - து. பழையவான்மபோதமானது இந்திரியங்களுடனேகூடி யந்தவிடயந்தானாய் முற்பட்டுநின்று காண்கிற வறிவைகாண் அசத்தா யழிந்துபோமென்றோம். ஆனாற் பின்னையெங்ஙனேயென்னில்,— மற்றதறிவினுக் கறியொணாதே. எ - து. (மற்றுவினைமாற்று) அந்தஞானமானதிந்த விந்திரியங்களோடேகூடி யறியுமறிவா லறியப்படாது எ - று.

ரு - ம். அறிவினாலறிந்த யாவுமசத்தாதலறிதி. எ-கு. அப்படிச் சிவனறிவித்து நிற்கச்செய்தேயு மான்மபோதத்தாலறிகிறநெல்லா மசத்தாமென்று பரிணாமவாதியை மறுத்ததேதென்னில் சிவனறிவிக்கச்செய்தேயு மான்மாவாலப்படி

யறிவிக்கிற சிவனை யறியப்படாதென்ற தெனவறிக. இதற்கு
6. பி - ம். சித்தியாரில். "அன்னியமிலாமையானு மறிவினுணி
ற்றலானு, முன்னியவெல்லாமுண்ணின் றுணர்த்துவனுதலா
னு, மென்னுதியானென்றோது மிருஞ்செருக்கறுத்தலானுந்,
தன்னறிவதனுற்காணுந் தகைமையனல்லனீசன்." எ - து.
கண்டுகொள்க. இனி யிரண்டாவது என்று மறிவினுலறி
வொணுதா லாவதொன்றின்மை. எ - ரு. முத்தியிலுஞ் சி
வனை யான்மாவாலறியப்படாதாயி னிவனுக்கொரு பயனுமி
ல்லையென்று பாடாணவாதியை மறுத்ததற்கு. பி - ம். சங்
கற்ப நிராகரணத்தில். "காட்சியென்னக் காணுத்துயர- மா
ட்சியைமுத்தி யெனவகுத்துரைக்கிற் - கரணுபாவ மரணங்
கருமர-மேய்ந்தவர்முத்திசேர்ந்தவரன்றே - யனையகதிக்கோ
ர் முனைவரும்வேண்டா - தனிதருதுயர மெனுமிதுதிடமே -
பாடாணத்திற் கூடாமுத்தி." எ - து. கண்டுகொள்க.
இனி மூன்றுவது தொன்மை யறிவுதானென்றைமுந்தி யது
வதுவாகக்காணு மறிவுகாணசத்து என்று மீளவும் பரிணும
வாதியை மறுத்ததற்கு. பி - ம். முற்செய்யுளி லிரண்டாம்
பதத்தில். "அறிவதையுதவுமென்னில சேதனமவைதாம்."
எ - து. கண்டுகொள்க. இனி நாலாவது மற்றதறிவினுக்
கறியொணுதே. என்றதை அந்தஞானமான திந்திரியங்க
ளோடுங்கூடி யறியுமறிவா லறியப்படாதென்றதற்கு. பி-ம்.
திருவாசகத்தில். "அனைத்துலகுமாய் நின்னையைம்புலன்கள்
காண்கிலா," எ - ம். காளத்தியந்தாதியினும். "நிறைந்தெ
ங்குநீயேயாய் நின்றாலுமென்று, மறைந் தைம்புலன்காண
வாராய்". எ - ம். கண்டுகொள்க.

இதனுற்சொல்லியது ஆன்மாவுக்குச் சிற்றறிவுண்டாமா
கில் தன்னையறிவிக்கிறசிவனை யவனறியானேவென்ற பரிணு
மவாதியையும் ஆன்மாவா லொருகாலத்தினுஞ் சிவனையறிய

ப்படாதென்ற பாடாணவாதியையுமறுத்துப் பெத்தமொழி யமுத்தியினுமான்மாவறிந்தநுபவியாதபொழுது அவனுக்கொருபயனுமுண்டாகாதென்னு முறைமையையறிவித்தது. (௫)

அப்படியசத்தாகிய பிரபஞ்சத்தை யான்மபோதத்தாலறியப்படுமோவென்று பரிணாமவாதி யாசாரியனை வினவ வப்பொழுது ஈஸ்வரவவிகாரவாதிவந்து அசத்தாகிய பிரபஞ்சத்தை யான்மாவறியாமற் பின்னை யறிகிறதேதென்று கேட்க அப்படியல்ல பிரபஞ்சத்தையறிகிறது சிவனேயறிவனென்று மீளவும் பரிணாமவாதிசொல்லுகையும் அதனையல்லவென்றுமறுத் திந்திரியங்களறியுமென்று சங்கிராந்தவாதிசொல்லுகையும் அதனையல்லவென்றுமறுத் தான்மாவுமிந்திரியங்களுங்கூடி யறியுமென்று சிவசமவாதி சொல்லுகையும் அதனையல்லவென்று ஆன்மாவுமருளுங்கூடி யறியுமென்று ஈஸ்வரவைக்கியவாதிசொல்லுகையும் அதனையல்லவென்று அருளுமிந்திரியங்களுங்கூடி யறியுமென்று சைவர்சொல்லுகையுமான வவசரத்து இவர்களொருவர்க்கொருவர்மாறுபாடாகச் சொல்லுகிறவிதிலே யசத்தாகிய பிரபஞ்சத்தை யறிகிறதுதா னெந்தவறிவென்று ஆசாரியரை நோக்கி மாணவகன்வினவினவவதாரத்து இவர்களாறுபேருஞ்சொல்லுகிற வத்தங்களெல்லாஞ் சித்தாந்தத்துக்கு வாராதென்று அவரவர்சொல்லப்பட்ட வத்தங்களெல்லாவற்றையு மறுத்துக்காட்டி யருளிச்செய்வானெடுத்துக்கொண்டருளியது.

எவ்வறிவசத்தறிந்த தெனிலுயிரறியாதீச
னவ்வறிவறியானல்ல தசேதனமறியாதாவி
செவ்வியகருவிகூடித் தெரிவுறுதருளிற்சேரா,
வொவ்விருவகையதென்னிலொளியிருளொருங்குறுமே

அந்தவசத்தை யசத்தென்றறிந்த
தெந்தவறிவென் றியம்புகவென்றது

வி - ம். எவ்வறிவசத்தறிந்ததெனில், எ - து. இந்த ச்சமயிகளாறுபேருஞ் சொல்லுகிறவிதிலே யசத்தாகியபிர பஞ்சத்தை யறிகிறது எந்தவறிவென்று நீகேட்கிறுயாமாகில்,—உயிரறியாது. எ - து. அசத்தை யான்மாவாலறியப் படாது. அதுவேனென்னில் ஆன்மா தனக்கென்ன ஓரறிவி லாதபடியாலே பிரபஞ்சத்தைத் தானுகவறியமாட்டாதாகை யாலெனவறிக. அன்றியும்,— ஈசனவ்வறிவறியான். எ-து. சிவனுக்கு மப்படி யறிகிறவறிவில்லை. அதுவேனென்னில் அவனெங்கும் பூரணனுயிருக்கைபாலே யவனுக்கொன்றை யுஞ்சுட்டி யறியவேண்டுவதில்லையாகையா லெனவறிக.— அல்லதசேதனமறியாது. எ - து. அவையிரண்டையுமன் றி யிந்திரியங்களுந் தானுக வறியமாட்டாது. அதுவேனென்னில அவை ஜடமானபடியாலே தானுக வறியமாட்டாதா கையா லெனவறிக. அன்றியும்,— ஆவி செவ்வியகருவிகூடித்தெரிவுறுது. எ - து. ஆன்மாவு நேர்பட்டகருவிகளுங்கூடி யறியமாட்டாது. அதுவேனென்னில் ஆன்மாதனக்கென்ன வோரறிவில்லாதபடியாலு மிந்திரியங்கள் ஜடமானபடியாலுந் தம்மிற்கூடி யறியமாட்டாதாகையா லெனவறிக. அன்றியும்,— அருளிற்சேரா. எ - து. ஆன்மா வருளோடுங்கூடி யசத்தை யறியவேண்டுவதில்லை. அதுவேனென்னி லான்மா வருளோடுங்கூடினவிட முத்திக்கேதுவாகையா லசத்தாகிய பிரபஞ்சத்தை யறியவேண்டுவதில்லையாகையாலெனவறிக. அன்றியும்,— ஒவ்விருவகையதென்னில். எ - து. இங்ஙனஞ் சொல்லிவந்த வொழுங்கிலே பதிபசுபாசமூன்றினுள்ளும் வொவ்வொன்றுக வறியுமென்று மிவ்விரண்டாக வறியுமென்றுஞ் சொல்லிவந்தவகையி லொழிந்துள்

ளவருளு மிந்திரியங்களுங்கூடி யசத்தாகிய பிரபஞ்சத்தை யறியுமென்னில் அப்படியறியாது. அதுவேனென்னில்,—ஒளி யிருளொருங்குறுவே. எ-து. ஒளியாகியஞானமு மிருளாகிய வஞ்ஞானமு மோரிடத்திற்கூடிநில்லாதாகையால். எ-று.என்ன வே சிவன்றேய்வறநின்றுணர்த்த வான்மா பிரபஞ்சத் தோடுங்கூடி யறியுமென்பது கருத்து. இதற்கு. பி-ம். இந் நூலிலே "தனக்கெனவறிவில்லாதான் ருனிவையறிந்துசாரா ன், றனக்கறிவிலாதவாயி ருனறியாதுசாரா, தனக்கென வறிவிலாதான் றத்துவவன்னரூபன், றனக்கெனவறியாளு லிச் சகலமுநுருகந்தானே. எ-து. கண்டுகொள்க.

உ-ம். இந்தச்சமயிக ளாறுபேருடைய மதத்துக்கு மறுப்புக்குமுண்டானபிரமாணங்கள் சங்கற்பநிராகரணத்தி ல்காட்டுதும். அவைவருமாறு. இச்செய்யுளின் முதற்பதத் திலே அசத்தாகிய பிரபஞ்சத்தை உயிரறியுமென்று ஈஸ்வ ரவிகாரவாதிசொன்னதற்கு. பி-ம். "பஃறுளைக்கடத்தி னுள்விளக்கேய்ப்ப-வறிவுளதாகு முருவுறுமுயிர்கள்-க ண்ணுலோசையுங் கரணமுங்கருத-வொண்ணுதென்னு மு ணர்வுடைமையிரு- லவ்வப்புலன்கட்கவ்வப்பொறிகள்-செ வ்விதினிறுவிச் சேர்ந்தவைநுகரும்" எ-து. கண்டுகொள்க. அசத்தை யுயிரறியாதென்று அவனைமறுத்ததற்கு. பி-ம். "அவ்வப்புலன்கட் கவ்வப்பொறிகள்-செவ்விதினிறுவவி னறிவெனச்செப்பினே-யறிவிலாமைகண்டனமணுபுலற்குப்- பொறிகளேவலினறிவொடுபொருந்திற்-கண்டதோர்பொறி யாற் கொண்டிடவேண்டும்." எ-து. கண்டுகொள்க. இ னியசத்தாகிய பிரபஞ்சத்தைச் சிவனறிவனென்று இரண் டாவது பரிணமவாதிசொன்னதற்கு. பி-ம். அறிவோன் ருனு மறிவிப்போனு-மறிவாயறிகின்றேனுமறிவுறு-மெய்ப் பொருடானும் வியர்திதுவெனப்படு-மப்பொருளியாவுமவ

னேயென்றும்." எ-து. கண்டுகொள்க. இனி யசத்தைச் சிவனுக் கறியவேண்டுவதில்லையென்று அவனைமறுத்ததற்கு. பி-ம். "தனக்கெனிலஃது மிசைப்பதொன்றன்றே - தன் போலறிருருந் தலைவருமிலரான் - மின்போனிலையைவேண்ட லும்பழுதே." எ-து. கண்டுகொள்க. இனியசத்தாகிய பி ரபஞ்சத்தை யிந்திரியங்களறியுமென்று மூன்றாவதுசங்கிரா ந்தவாதிசொன்னதற்கு. பி-ம். "பூட்டைப் - பலவகையு றுப்பு மிலகியதொழில்போ-லைம்பொறிபுலன்களின்புறமன் றே." எ-து. கண்டுகொள்க. அப்படி யிந்திரியங்களாற் பிரபஞ்சத்தையறியப்படாதென்று அவனைமறுத்ததற்கு.பி-ம். "புலனைம்பொறியினிலவிடுமென்றனை - யஞ்சுமொருகாற்றுஞ் சாதறிதற்- கழிவென்று." எ-ம். "இதுவேயல்லது கதுமெ னவிருசெவி - யிருகூற்றெருசாற்றெரியாத்தன்மைவந் - தெ ய்துமனுதி மெய்யுயிர்ச்செயலுந்- தனக்கிலதொருவர்க்கென த்தெளிகிலையே." எ-ம். கண்டுகொள்க. இனியசத்தாகிய பிரபஞ்சத்தை யான்மாவு மிந்திரியங்களுங்கூடி யறியுமெ ன்று நாலாவது சிவசமவாதிசொன்னதற்கு. பி-ம். "பா சமைம்புலன்றேசுறவுணர்த்தப் - பசுத்தனிஞானம் புசித்திடு மன்றே." எ-து. கண்டுகொள்க. அப்படியவையிரண்டுங்கூடி னுலு மசத்தாகியபிரபஞ்சத்தை யறியமட்டாதென் றவனைம றுத்ததற்கு. பி-ம். "அந்நியமறியா மன்னுயிர்பொறிபுலன்-ரு ஞேவறியா." எ-து. கண்டுகொள்க. இனியசத்தாகிய பிர பஞ்சத்தை யருளுமான்மாவுங்கூடி யறியுமென்று ஐந்தாவ து ஈஸ்வரவைக்கியவாதி சொன்னதற்கு. பி-ம். "உலகத்- தாயவனுயிர்க்கு மாயையினருளா - னிருவினைத்தொகையி னுருவினைத்தருமாற் - கருமுகிலடராவிரிதருகதிர்போன் - ற றியாமுயிரிற் பிரியாதேயும்." எ-து. கண்டுகொள்க. அப் படி யருளு மான்மாவுங் கூடினவவதரந்தானே முத்தியா

மென் றவனைமறுத்ததற்கு. பி - ம். "அறிவிற்கறிவு செறிய வேண்டின்றே - யுண்மையிலிருமையு மொளியேயெனிலொரு - தன்மையாகமுன் சாற்றினரிலரோ". எ - து. கண்டுகொள்க. இனி யசத்தாகிய பிரபஞ்சத்தை யருளு மிந்திரியங்களுங்கூடி யறியுமென்று ஆறுவது சைவர் சொன்னதற்கு. பி - ம் "அண்ணல் - கலைமுதலாக நிலவியகருவியை - விளக்கெனவுதவுந் துளக்கறப்பொருந்தி." எ - து. கண்டுகொள்க. அப்படியல்ல இந்திரியங்களான்மாவோடுசம்பந்தமொழியச் சிவனோடுசம்பந்தமில்லையென்று அவனைமறுத்ததற்கு. பி - ம். "மலமிருணிலையொளி - தானமர்விளக்கிற்றகுமிருட்கலாதிக - ளீனமிலிவனிடத் தெவ்வாறிசைந்தன." எ - து. கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது அசத்தாகிய பிரபஞ்சத்தை யுயிரறியுமென்ற ஈஸ்வரவவிகாரவாதியையுஞ் சிவமறியுமென்ற பரிணாமவாதியையு மிந்திரியங்களறியுமென்ற சங்கிராந்தவாதியையு மான்மாவுமிந்திரியங்களுங்கூடி யறியுமென்ற சிவசமவாதியையு மான்மாவுமருளுங்கூடி யறியுமென்ற ஈஸ்வரவைக்கியவாதியையு மருளுமிந்திரியங்களுங்கூடி யறியுமென்ற சைவனையு மறுத்தமுறைமையை யறிவித்தது.(சு)

இங்ஙனம் பிரபஞ்சகாரியப்பட்டுநிற்கிற வான்மாவை முற்கூறியவிருத்தங்களில் அறிவென்ற சமயிகளையுமறுத்தீர் அறிவல்லவென்ற சமயிகளையு மறுத்தீர் பின்னையிதனையே தென்று சொல்லப்படும் சத்தாகிய வறிவனென்று சொல்லப்படுமோ அசத்தாகிய வறியாதவனென்று சொல்லப்படுமோவென்று வினவின மாணவகனை நோக்கி யருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

சத்திதுவென்றசத்துத் தானறியாதசத்தைச்
சத்தறிந்தகலவேண்டா வசத்திதுசத்திதென்றோர்
சத்திருளொளியலாக்கண் டன்மையதாமசத்தைச்
சத்துடனின்றுநீக்குந் தன்மையாற்சதசத்தாமே. (எ)

சத்தசத்தறியா தம்மிலவ்விரண்டையு
முய்த்தறிவதுசத சத்தென்றுரைத்தது.

வி-ம். சத்திதுவென் றசத்துத்தானறியாது. எ-து. சத்தாகியசிவத்தை யிதுசிவமென்று அசத்தாகிய பாசங்களறியமாட்டாது,—அசத்தைச்சத்தறிந்தகலவேண்டா. எ-து. அசத்தாகியபாசங்கள் சிவத்தைப்பொருந்தாதபடியாலே யவையிற்றைச்சத்தாகியசிவம் இதுபொல்லாதென்றறிந்து நீங்கவேண்டுவதில்லை. ஆகையால்,— அசத்திதுசத்திதென்றோர்சத்து. எ-து. அசத்தாகிய பாசத்தோடுகூடினபொழுது அந்தப்பாசந்தானாய்நின்றறிந்துஞ் சத்தாகியசிவத்தோடுங்கூடினபொழுது அந்தச்சிவந்தானாய்நின்றறிந்தும் இங்ஙனமிவையிரண்டோடுங்கூடி யறிந்துவருகிறவான்மாவு மறியுஞ் சத்தாம். அதென்போலவென்னில்,— இருளொளியலாக்கண்டன்மையதாம். எ-து. இருளோடுங்கூடி யந்தவிருள்தானாய்நின்று விழித்தும் ஒளியோடுங்கூடி யந்தவொளிதானாய்நின்றுவிழித்து நின்றகண் ணவ்விருளுமொளியுமல்லாதுநின்ற தன்மைபோல வான்மாவு மந்தச்சத்து மிந்தவசத்துமன்றித் தனித்தொருமுதலாய்நிற்குமானு லிந்தவான்மாவைச் சத்தென்றுசொல்லலாமோ வசத்தென்று சொல்லலாமோ வென்னில்,— அசத்தைச் சத்துடனின்றுநீக்குந்தன்மையாற் சதசத்தாமே. எ-து. முன்புகூடிநின்ற பாசங்களைச் சிவத்தோடுங்கூடிநின்று நீக்குமுறைமையாலே

யான்மாவுக்குச் சதசத்தனென்கிறதே யியல்பாம். எ - று. என்னவே அறிவித்தாலறிவனென்பதுகருத்து.

ரு - ம். சத்தாகிய சிவத்தை யசத்தாகியபாச மறியாதென்ற தெங்ஙனேயென்னில் உடலுமுயிருங் கூடியிருந்து ஜீவிக்கச்செய்தேயு முயிரையுடலறியா திருந்தாற்போல வெனவறிக.அசத்தாகிய பாசத்தைச் சத்தாகிய சிவனறிந் தகலவேண்டாவென்றது இந்திரஜாலங் காட்டுமவனை யது பிரமிப்பிக்கமாட்டாதாற்போலப் பாசங்கள் ஜடமானபடியாலே சிவனை மறைக்கமாட்டாதாகையா லவனுக்கிதையறிந் தகலவேண்டாவென்றதெனவறிக. ஆன்மாவை யிருளுமொளியுமல்லாத கண்ணின்றன்மைபோலவென்றது தானாகவறிகிறவனுமல்ல அறிவித்தா லறியாமலிருக்கிறவனுமல்ல வென்றதெனவறிக. சதசத்தென்றது சிவனறிவித்தா லான்மாவறிவனென்றதெனவறிக. இதற்கு; பி - ம். சித்தியாரில் "அறிந்திடுமான்மாவொன்றை யொன்றினாலறிதலானு, மறிந்தவைமறத்தலானு மறிவிக்கவறிதலானு, மறிந்திடுந்தன்னையுந்தா னறியாமையானுந்தானே, யறிந்திடுமறிவனன்று மறிவிக்கவறிவனன்றே." எ - து. கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது ஆன்மா வறியும்பகுதிக்குரியவனோ வறியாப்பகுதிக் குரியவனோவென்று வினவின மாணாக்கனைநோக்கி இவன்றானாகவறிகிறவனுமல்ல சிவனறிவிக்க வறியாமலிருக்கிறவனுமல்ல வொளியோடுகூடிக்கண்டகண்போல வருளோடுங்கூடி யறியுமென்னு முறைமையை யறிவித்தது. (எ)

அப்படியான்மா விருளுமொளியுமல்லாத கண்ணினது தன்மைபோலே யிருக்குமென்ற திருஷ்டாந்தத்தினால் விளக்குக்காட்டக் கண்கண்டதுகொண்டே சிவனறிவுகொடுத்

தாலறிகிறதொழியத் தனித்தறிவில்லையென்ற பரிணாமவாதியைமறுத்து ஆன்மாவுக்குச் சிவனறிவிக்கவறிந்தாலுஞ் சிற்றறிவுண்டென்னு முறைமையை மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

கண்ணொளிவிளக்களித்துக் காட்டிடுமென்னின்முன்னங், கண்ணொளியொன்றுமின்றும் விளக்கொளிகலந்தவற்றைக், கண்ணொளியகலநின்றே கண்டிடும்வேறுகாணுக், கண்ணொளிவிளக்கின்சோதி கலந்திடுங்கருத்தொன்றன்றே. (அ)

அற்றமிலுயிர்க்கறி விலையெனலடாது
சிற்றறிவென்றுமுண் டென்றுசெப்பியது.

வி - ம். கண்ணொளிவிளக்களித்துக் காட்டிடுமென்னில். எ - து. கண்ணினது பிரகாசத்தையும் விளக்குக்கொடுத்துக் காட்டுமென்று நீ சொல்லில்,—முன்னங்கண்ணொளியொன்றுமின்றும். எ - து. விளக்குக் காட்டுவதற்குமுன்பு கண்ணுக்குப் பிரகாசமொன்றுமில்லையாகவேண்டும். அப்படிவிளக்குவருவதற்குமுன்கண்ணுக்கொளியுண்டோவென்று நீகேட்கில்,—விளக்கொளி கலந்தவற்றைக் கண்ணொளியகலநின்றே கண்டிடும். எ-து. விளக்கின்பிரகாசங்கூடிக் காட்டுகிறபதார்த்தங்களைக் கண்ணின்பிரகாசமானது விளக்கின் பிரகாசத்தோடுங் கூடாம லிருளிலேநின்று காண்கையால் கண்ணுக்குத்தனியே யொளியுண்டென்றறிவாயாக. அப்படி யிருளுக்குள்ளே நின்று கண்கண்டுதாகிலும்,— வேறுகாணு. எ - து. காண்கிற பதார்த்தங்களை விளக்கொளியோடுகூடி நின்று காண்கிறதொழியத் தனித்துக் காணமாட்டதென்று நீசொல்லுகிறாயாமாகில் அப்படி விளக்கோடுகூடிக் கண் கண்டுதாமாகிலும்,— கண்ணொளிவிளக்கின்சோதி கலந்தி

டுங்கருத்தொன்றன்றே. எ - து. கண்ணினுடைய பிரகாசம் விளக்கினுடைய பிரகாசத்தோடுங்கூடியேநின்று ஜீவித்ததாகிலும் கருத்து வேறுபாடுண்டு. அஃதெங்ஙனேயென்னில் விளக் கெல்லாத்தையுஞ் சுட்டறநின்றுகாட்டும். கண்ணெல்லாத்தையுஞ் சுட்டிநின்று காணும். அதுபோலச் சிவனுஞ் சுட்டறநின்றறிவிப்பன். ஆன்மாவுஞ் சுட்டிநின்றறியும். ஆகையா லான்மாவுக்குஞ் சிவனுக்கு மறிவொன்றல்ல. எ - று. அன்றியும் விளக்குக் கண்ணுக்கொளியைக் கொடுத்துக் காட்டுமேயானால் விழிகண் குருடனுக்கும் விளக்குக் காட்டவேணு மதுவில்லாததுகொண்டே கண்ணுக்குவிளக்கு ஒளியைக்கொடுத்துக் காட்டுமென்கிறது சித்தாந்தவிரோதமெனவறிக.

உ - ம். கண்ணுக்கு விளக்கொளியைக்காட்டினாற்போல முன்னே சிற்றறிவுதானு மில்லாதவான்மாவுக்குச் சிவனறிவைக்கொடுத் தறிவிப்பனென்று பரிணாமவாதி சொன்னதற்கு. பி - ம். சங்கற்பநிராகரணத்தில். "கண்ணினதொளியைக் கண்ணினதெனிலது - திண்ணியவிருளிற் செறிபொருடெரித்தலு - மின்மைமின்மினி யெனவிருகண்மணித் - தன்மைதானுந் தாவிலததனாற் - கண்ணினதுருவு மதிற்கதிரொளியு - நண்ணருஞ்சத்தி சத்தர்கணடிப்பே." எ - து. கண்டுகொள்க. அப்படியேசிவனறிவிக்க வான்மாவறிந்தாலு மநாதியே யான்மாவுக்குச் சிற்றறிவுண்டென்று அவனைமறுத்ததற்கு. பி - ம். சங்கற்பநிராகரணத்தில். "கண்ணினதுருவு மதிற்கதிரொளியு - நண்ணருஞ்சத்தி நாடகமெனிலதற் - கேதுவும்பயனு மோதவேண்டு - நின்மொழிவிரோதமு நீடுலகியற்கையுந் - தன்மைசாத்திரமுஞ் சகலமுமென்செயும்." எ - ம். "அறிவொன்றில்லோர்க் கிறையருளுதவல் - பிறிவறிவரியச் செறியிருளிடத்தோ-ரந்தகர்காண வந்

தோமெம்மை - நீவிருங்காண வேணுமென்றுங்- கெடுத்தோர்தீபங் கொடுத்ததையொக்கு - மிச்செயற்கிறைவன் கொச்சையனன்றே." எ - ம். கண்டுகொள்க. இனிகருத்தொன்றன்றே. எ - கு. சிவனுக்கு மான்மாவுக்கு மோரறிவல்லவென்றதற்கு. பி - ம். சித்தியாரில், "சிவன்சீவனென்றிரண்டுஞ் சித்தொன்றுமென்னிற் சிவனருட்சித் திவனருளைச் சேருஞ்சித்தவன்றான், பவங்கெடுபுத்திமுத்தி பண்ணுஞ்சித்தவற்றிற் படியுஞ்சித்தறிவிக்கப் படுஞ்சித்துமிவன்று, ணவன்றனேயறியுஞ்சித் தாதலினாலிரண்டு மணைந்தாலுமொன்றாகா தநியமாயிருக்கு, மிவன்றானும்புத்தியுஞ்சித் திவனுமோபுத்தி யிதுவசித்தென்றிடிலவனுக் கிவனுமசித்தாமே." எ - து. கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது கண்ணுக்கு விளக்குக்காட்டக் கண்கண்டதுகொண்டே யான்மாவுக்குச் சிற்றறிவுதானுமில்லையென்ற பரிணமவாதியைமறுத்து விளக்கோடுகூடிக் கண்கண்டதாமாகிலும் விளக்கினொளிகண்ணிற்றாக்காமலிருளிலே நின்றுகாண்கையா லான்மாவுக்குச் சிவனறிவித்தாலு மநாதியே சிற்றறிவுண்டென்னு முறைமையை யறிவித்தது. (அ)

இங்ஙனஞ் சிற்றறிவனென்றுசொல்லி நாட்டப்பட்டவிந்தவான்மா வொருசரீரத்தோடுங்கூடிநின்று ஜீவிக்கு மிடத்து ஒருதானத்திலே நின்றறியுமென்றுஞ் சரீரமெங்குநிறைந்தறியுமென்று மெங்கும்பூரணமாய் நின்றறியுமென்றுந் தானேவிளங்கினவறிவாய் நிற்குமென்று மறியாமையாயிருக்குமென்றும் இங்ஙனம் பலவகைகளாகச் சிலசமயிகளாயுள்ளவர்கள் சொல்லுமத்தங்களி லுண்மையாகச் சொல்லுவதேதென்று வினவின மாணவகனைநோக்கி யிவைகளெல்லாஞ் சித்தாந்தவழக்கினையறிந்த நல்லோர்கள் சொ

ல்லார்களென்று மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

ஓரிடத்திருத்தன்மாயா வுருநிறைந்திடுதலொன்றும்,
பேரிடத்துறைதலுனே பிறங்கறிவாகிநிற்றல்,சோர்வுடைச்சடநிகழ்த்த லெனுமிவைசொல்லார்நல்லோ, ரோர்விடத்துணருமுண்மை யொளிதருமுபலம்போலும். (௬)

தொடுத்தவைவகையின் றெல்லுயிர்த்தன்மை.
யடுத்ததனியல்பியல் பாருமென்றது.

வி - ம். ஓரிடத்திருத்தல். எ - து. ஆன்மா வோருட்லிலேநின் றறியுமிடத்து ஒருதானத்திலேநின் றறியுமென்றும்,— மாயாவுருநிறைந்திடுதல். எ - து. இந்தமாயாதேகமெங்கு நிறைந்தறியுமென்றும்,— ஒன்றும்பேரிடத்துறைதல். எ - து. எங்கும்பூரணமாய் நின்றறியுமென்றும்,— தானே பிறங்கறிவாகிநிற்றல். எ - து. ஒருத்தரறிவியாமற் றானே விளக்கமுடைய வறிவாயிருக்குமென்றும்,— சோர்வுடைச்சடநிகழ்த்தல். எ - து. குற்றத்தையுடைய வசேதனமாயிருக்குமென்றும்,—எனுமிவைசொல்லார்நல்லோர். எ-து. என்றிங்ஙனஞ் சொல்லப்பட்ட வத்தங்களைச் சித்தாந்தவழக்கையறிந்தபெரியோர்கள் சொல்லார்கள். பின்னையெங்ஙனேயென்னில்,— ஓர்விடத்துணருமுண்மை யொளிதருமுபலம்போலும். எ - து. விசாரிக்குமிடத்து ஆன்மாவொருசரீரத்திலேநின் றறிகிறமுறைமை பிரகாசத்தினையுடைய படிகம்போலக் கூடினதின்றன்மையாய்நிற்கும். எ - று.

வி - பு. ஓரிடத் திருத்தலென்றதை நல்லோர் சொல்லாரென்று மறுத்ததேதென்னில் அப்படி யான்மா வொருதானத்திலே நின்றறியுமாகு லுருப்பட் டழிவதுஞ்செய்யும் சரீரமெங்குப் பரிசித்தாலு மறியமாட்டாதெனவறிக. என்

றிங்ஙனமறுத்ததற்கு. பி - ம். சித்தியாரில். "உடலினிலேகதே
4·16 சியுயிரொளிலுருவாய்மாயும், படர்வுறுமறிவின்றெங்குஞ் சுட
ரொளிப்பண்பதென்னிற், சுடர்தொடிற்சுடுவதெங்குந் தொ
ட்டிடமறிவுண்டாகு, மடர்புலனிடத்துமோக்க மறிவெழவே
ணுமன்றே." எ - து. கண்டுகொள்க. ஆகையா லிப்படியில்
லாததுகொண்டே யேகதேசஞ்சொல்ல வழக்கில்லையெனவ
றிக. இனி யிரண்டாவது மாயாவுருநிறைந்திடுதலென்றதை
நல்லோர் சொல்லாரொன்று மறுத்ததேதென்னில் அப்படியா
ன்மா வொருசரீரமெங்கு நிறைந்துநின் றறியுமேயாமாகிற்
கிழாலவத்தைப்பட்டு மூலாதாரத்திலே யொடுங்கிக் கிடக்க
வும் வழக்கில்லை. அன்றியுஞ் சத்தாதி விடயங்களை யறியுமிட
த்துப் புலன்களெல்லா மொக்க ஜீவிக்கவும்வேணும். அன்றியு
ஞ் சரீரத்திலே சில குறைவுபட்டா லதற்குத்தக்க தான்மா
விலுஞ் சில குறைவுபடவும்வேணும். என்றிங்ஙனமறுத்ததற்
கு. பி - ம். சித்தியாரில் "உருவினிநிறைந்துநின்றங் குணர்
ந்திடுமுயிரதென்னின், மருவிடாதுறக்கம்வாயி லறிவொக்க
4·17 வழங்கவேண்டும், பெருகிடுஞ்சுருங்கும்போதம் பேருடற்
சிற்றுடற்கண், வருமுடல்குறைக்கவொக்கக் குறைந்துபின்
மாயுமன்றே" எ - து. கண்டுகொள்க. ஆகையா லப்படியில்
லாததுகொண்டே சரீரமெங்கு நிறைந்துநின்றறியவழக்கில்
லையெனவறிக. இனி மூன்றாவது ஒன்றும்பேரிடத் துறைத
லென்றதை நல்லோர் சொல்லாரொன்று மறுத்ததேதென்னி
ல் அப்படியான்மா வெங்கும் பூரணமாய் நின்றறியுமேயா
னால் அவத்தைப்படவும் வழக்கில்லை ஜநநமரணப்படவும்
வழக்கில்லை. அன்றியுஞ் சத்தாதிவிடயங்களைக் கொள்ளுமிட
த் தொவ்வொரு புலன்களாக ஜீவிக்கவும் வழக்கில்லையாக
வும்வேண்டும். என்றிங்ஙன மறுத்ததற்கு. பி - ம். சித்தியாரி
4· 18 ல். "எங்குந்தான்வியாபியாய்நின் றுணருமிவ்வான்மாவென்

ணிற், றங்கிடுமவத்தைபோக்கு வரவுகள்சாற்றவேண்டும், பங்கமார்புலனென்றென்றாய்ப் பார்த்திடல்பகரவேண்டு, மிங்கெலாமொழிந்தானிற்ப தெங்ஙனமியம்பவேண்டும்." எ-து. கண்டுகொள்க. ஆகையா லப்படியில்லாததுகொண்டே யெங்கும் பூரணமாய் நின்றறியுமென்பது வழக்கில்லையெனவறிக. இனி நாலாவது தானே பிறங்கறிவாகி நிற்றலென்றதை நல்லோர் சொல்லாதொன்று மறுத்ததேதென்னில் அப்படியான்மாதானே யறியுமேயானாற் சத்தாதி விடயங்களைக் கொள்ளுமிடத்துப் புலன்களைக்கொண் டறியவேண்டுவதில்லை. அன்றியு மந்தக்கரணங்களைக்கொண்டு மறியவேண்டுவதில்லை. என்றிங்ஙனமறுத்ததற்கு. பி - ம். சித்தியாரில் "அறிவிச்சைசெயல்களெல்லா மடைந்தனல்வெம்மையும்போற், குறியுற்றங்கனேகானேக குணகுணிபாவமாகி, நெறியுற்று 4-6
நிற்குமென்னி னிகழ்புலன்கரணமெல்லாஞ், செறிவுற்றங்கறிவுகொள்ள வேணுமோசிவனார்க்கே." எ - து. கண்டுகொள்க. ஆகையா லப்படியில்லாததுகொண்டே யான்மாதானேயறிவனென்பது வழக்கில்லையெனவறிக. இனி யைந்தாவது சோர்வுடைச்சட நிகழ்த்த லென்றதை நல்லோர் சொல்லாதொன்று மறுத்ததேதென்னில் அப்படியான்மாவறியாமையா யிருக்குமேயானா லொருத்த ரறிவித்தாலு மறியவழக்கில்லை. அன்றியும் உபாதியைநீங்கி முத்தியைப் பெற் றநுபவிக்கவும் வழக்கில்லையாம். என்றிங்ஙன மறுத்ததற்கு. பி - ம். சித்தியாரில். "அசித்தெனிலுணரா தான்மாவசித்துச் சித்தாகுமென்னி, லசித்துச்சித் தாகாதாகுஞ் சித்தசித்தாவதில்லை, யசித்தொருபுறமாயொன்றிச் சித்தொருபுறமாய்நில்லா, தசித்துஞ்சித்தேயென்னி லசித்தடைந்தறிவதின்றாம்." என்பதனுள். "அசித்தெனிலுணராதான்மா." 4-14
எ - து. கண்டுகொள்க. ஆகையா லப்படியில்லாததுகொ

ண்டே யான்மாவை யறிவல்லவென்னவும் வழக்கில்லையெ னவறிக. ஆக விங்ஙனஞ்சொல்லப்பட்ட வகைகளைந்தினையு மறுத்து ஓரிடத்துணருமுண்மை யொளிதருமுப்பலம்போலு ம். எ-கு. ஆன்மாவானது சுத்தபடிகம்போலக்கூடினதி ன்றன்மையா யிருக்குமென்று பொருட்படுத்தினத்துக் கநு பவமேதென்னில் சுத்தபடிகமானது இருள்வந்து மேலிட்ட வவதரத் தந்தவிருளோடுங்கூடி யிருளினிறமாயிருந்தும் பஞ் சவன்னங்களோடுகூடின வவதரத் தந்தப்பஞ்சவன்னங்களி னிறமாயிருந்தும் ஒளிமேலிட்டபொழு தந்தவொளியோடுங் கூடி யொளிதானாயிருந்தும்வரும். அதுபோலவான்மாவும் ஆ ணவமலமேலிட்டு மறைத்தவவதரத் தந்தமலத்தோடுங்கூடி யறியாமையாய்க்கிடந்தும் அப்படிக்கிடக்கச்செய்தே கலை யாதித்ததுவங்களோங்கூடிப் பிரபஞ்சசாரியப்பட்டுச் சகல னாகியும் இவையிரண்டுபகுதியு நீங்குவதாக வருள்மேலிட்ட வவதரத் தந்தவருளோடுங்கூடி யறிவாய்நின்றும் இங்ஙனங் கேவலனாகியுஞ் சகலனாகியுஞ் சுத்தனாகியுங் கூடினதின்றன் மையாய் நிற்கையாலே படிகத்தை யுவமைசொன்னதென வறிக. இங்ஙனஞ் சொல்லப்பட்ட வவத்தை மூன்றுக் கும். பி-ம். சித்தியாரில். "கேவலசகலசுத்த மென்று மூன்றவத்தையான்மா, மேவுவன் கேவலந்தன் னுண்மை மெய்ப்பொறிகளெல்லாங், காவலன்கொடுத்தபோது சகல னாமலங்களெல்லா, மோவினபோதுசுத்த முடையனாற்பவ ந்துடைத்தே." எ-து, கண்டுகொள்க. இதுவன்றியுஞ் சகலமொன்றையும்பற்றி யான்மாபடிகம்போலக் கூடினதி ன்றன்மைக்குப் பஞ்சவிந்திரியங்களோடுங் கூடிநிற்பதே சொல்லலாம். அதுவன்றியு மூன்றவத்தைக்கு மநுபவங்காட் டிச்சொன்னது படிக முற்றுவமையாகையாலெனவறிக. இப் படிக்கூடினதின் றன்மையாயுள்ள வான்மாவினுண்நிலைமை யு மாசாரியன் காட்டக்கண்டு அதையறிந்துகொள்ளுக.

இதனாற்சொல்லியது ஆன்மாவொருசரீரத்தோடுங்கூடி நின்று ஜீவிக்குமிடத்து நிற்குமுறைமை யெப்படியென்று வினவினமாணவகனைநோக்கி ஒருதானத்திலே நின்றறியுமென்றுஞ் சரீரமெங்கு நிறைந்துநின்றறியுமென்று மெங்கும் பூரணமாய்நின்றறியுமென்றும் விளங்கினவறிவாயிருக்குமென்று மறியாமையாயிருக்குமென்று மிங்ஙனம்பலவகையாகச் சொல்லப்பட்ட சமயிகள்கருத்துகளை மறுத்து ஆன்மாவிவைமிற்றோடுங்கூடி யறியுமிடத்துப் படிகமானது பஞ்சவன்னங்களோடுங்கூடி யதுவதுவாய்நின்று காரியப்படுவதுபோல வான்மாவுங் கூடினதின்றமையாய்நின்று ஜீவிக்குமென்னு முறைமையையறிவித்தது. (௬)

மூன்றுஞ்சூத்திரமாகிய வான்மவிலக்கணமுற்றிற்று.

இங்ஙனங்கூடினதின்றன்மையாயுள்ள வான்மாவுக் கவத்தைப்படு முறைமையுமுண்டாகையால் ஆன்மவிலக்கணத்துக்குமேலாக நாலாஞ்சூத்திரமாகிய வவத்தைத் தன்மையென்னு மதிகாரம்வைக்கப்பட்டது.

இவ்வதிகாரநாலாஞ்சூத்திரமாகநின்றமுறைமை யெங்ஙனேயென்னில் சிவஞானபோதத்திலுநாலாஞ்சூத்திரமும் அவத்தைத்தன்மையை யருளிச்செய்கையினு லிதுவுமப்படி வைக்கப்பட்டதெனவறிக, அதுவெங்ஙனேயென்னில்:— "அந்தக்கரண மவற்றினொன்றன்றவை, சந்தித்ததான்மாச் சகசமலத்துணரா, தமைச்சரசேய்ப்பநின் றஞ்சவத்தைத்தே." என்னுஞ்சூத்திரத்துக் கிவ்வான்மாக்கள் சகசமலத்திலுணர்வின்றென்பது கருத்தாகையால் இந்நூலினும் இவ்வதிகாரமாகிய "எண்ணவொன்றிலாததீதம்," "இவ்வகையவத்தை" "நீக்கமிலதீதம்" என்னும்விருத்தமூன்றும் அவத்தைத் தன்மையைச் சொல்லுகையா லிதுவுநாலாஞ்சூத்திரமாக நின்றதெனவறிக. அப்படியுண்டாகப்பட்டவவத்தை யெத்தனை

வகைப்பட்டிருக்குமென்னில் அதுபதினெட்டுவகையவத்தை யுண்டாய்வரும். அதற்குவழியேதென்னில் காரணாவத்தை மூன்றுங் காரியாவத்தைப் பதினைந்துமாய் வருமென்றறிக. இதிற்காரணாவத்தை மூன்றேதென்னிற் காரணகேவலமென்றுங் காரணசகலமென்றுங் காரணசுத்தமென்றும்வரும். இதிற்காரணகேவலமாவது சர்வசங்காரகாலத் தான்மாக்கள் சுத்தமாயாகாரணத்திலேயொடுங்கிச் சிருஷ்டிகாலமளவும் ஆணவமலத்தான் மறைப்புண் டொன்றுமறியாமற் கிடக்குமவதரமெனவறிக. காரணசகலமேதென்னிற் சிருஷ்டிதொடங்கிச் சர்வசங்காரம்வருமளவு மான்மாக்க ளியோனிவிட் டியோனிபற்றி யெண்பத்துநான்கு நூறாயிரமியோனிபேதத்திலும் பிறந்திறந்து திரிகிறவவதரமெனவறிக. காரணசுத்தமேதென்னில் இங்ஙனங்கேவலசகலப்பட்டுப் பிறந்திறந்துதிரியுமவதரத் தாணவமலபாகம்வந்த வான்மாக்களுக் கிருவினையொப்புஞ் சத்திநிபாதமுமுண்டாமாகையாலந்தவவதரத்துச் சிவனாசாரியமூர்த்தமாக வெழுந்தருளி யிரக்ஷித்துத் தனதுதிருவருளான் ஞானத்தையுங் கடாக்ஷித்து நிஷ்டாபரராக்கிப் பிராரத்தந்தொலைந்தவாறே தனதுபூரணநிலையோடுங் கூட்டிக்கொண்ட வவதரமெனவறிக. இங்ஙனங்கூறப்பட்ட காரணாவத்தைமூன்றுக்கும். பி-ம். சித்தியாரில். "அறிவிலனமூர்த்தனித்த னராகாதிகுணங்களோடுஞ், செறிவிலன்கலாதியோடுஞ் சேர்விலன்செயல்களில்லான், குறியிலன்கத்தாவல்லன் போகத்திற்கொள்கையில்லான், பிறிவிலன்மலத்திேனாடும் வியாபிகேவலத்தி லான்மா." எ-து. கேவலத்துக்குக் கண்டுகொள்க. "உருவினைக்கொண்டுபோக போக்கியத்துன்னல்செப்பல், வருசெயல்மருவிச்சத்த மாதியாம்விடயந்தன்னிற், புரிவதுஞ்செய்தங்கெல்லா யோனியும்புக்குழன்று, திரிதருஞ்சகலமான வவத்தை

யிற்சீவன்சேர்ந்தே." எ-து. சகலத்துக்குக்கண்டுகொள்க. "இருவினைச்செயல்களொப்பி லீசன்றன்சத்திதோயக், குருவருள்பெற்றுஞான யோகத்தைக்குறுகிமுன்னைத், திரிமலமறுத்துப்பண்டைச் சிற்றறிவொழிந்துஞானம், பெருகிநாயகன்றன்பாதம் பெறுவதுசுத்தமாமே." எ - து. சுத்தத்துக்குக் கண்டுகொள்க. இனி காரியாவத்தைபதினைந்துக்கு வழியேதென்னில் கீழாலவத்தையைந்தும் நிலையிற்படுமவத்தையைந்தும் நின்மலாவத்தை யைந்துமெனவறிக. இவை பதினைந்துக்கும். பி - ம். சிவஞானபோதத்தில். "இலாடத்தேசாக்கிரத்தை யெய்தியவுள்ள, மிலாடத்தே யைந்தவத்தையெய்து - மிலாடத்தே, யவ்வவ்விந்திரியத் தத்துறைகள் கண்டதுவே, யவ்வவற்றினீங்கலதுவாங்கு." எ - ம். சித்தியாரில். "அறிதருமுதலவத்தை யடைதருமிடத்தே யைந்துஞ், செறிதருங்கரணந்தன்னிற் செயருறுமுணர்ந்துகொண்ணீ, பிறிவிலாஞானத்தோரும் பிறப்பறவருளாலாங்கே, குறியொடுமஞ்சவத்தை கூடுவர் வீடுகூட." எ - ம். இந்நூலினும். "இவ்வகையவத்தைதன்னில்" என்றவிருத்தமு மிப்பொருட்பற்றி யெனவறிக. ஆக முன்னுங்கூட்டியவத்தைப் பதினெட்டும் இவ்வதிகாரத்து வகுத்தசெய்யுண் மூன்றினுங் கண்டுகொள்க. அவைவருமாறு.

இங்ஙனஞ்சொல்லப்பட்ட வவத்தைகளிற் கீழாலவத்தையிற் காரியாவத்தையைந்துஞ் சாக்கிரமுதலாக வருளிச்செய்யாம லதீதமுதலாக வருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

எண்ணவொன்றிலாததீதமெய்தியதுரியத்தொன்று
நண்ணிடுஞ்சுழுத்திதன்னி னயந்துளதொன்றுபின்னு

மண்ணிடுங்கனவுதனி லாறேழாஞ்சாக்கிரத்தின்
கண்ணுறுமஞ்சாருயகருவிகள்காணுந்தானே. (௪0)

உடலிடையுயிருறு மோனாந்தவத்தையி
னடையுறுகருவியி னடைவினைவகுத்தது.

வி - ம். எண்ணவொன்றிலாததீதம். எ - து. ஆன்மா
வானது ஆணவமலமறைப்பாகக் கீழாலவத்தைப்பட்டுச் செ
ல்லுமவதரத்துப் பிரகிருதி தத்துவமுடம்பாகச்சென்று மூ
லாதாரமாகிய அதீதத்தானத்தில் சென்றொடுங்கு மவதர
த்து அவ்விடத்து ஜீவிக்குங்கருவிக ளொன்றுமின்றி யந்தப்
பிரகிருதியென்னத் தானென்னப் பிறிவற்றுக்கிடந்தழுந்து
மதேயதீதமாம். என்னவே அழுந்துந்தொழில் பிரகிருதிக்
குடையதாகையா லதீதத்திற் பிரகிருதியுண்டென்பதை யநு
பவத்தாற் கண்டுகொள்க. அன்றியு மிதற்குமே லிச்செய்யு
ளுக்கெழுதுகிற நுட்பத்திலே யேதுக்களும் பிரமாணங்க
ளுங்காட்டி யெழுதுகிற வகையினுங் கண்டுகொள்க.— எய்
தியதுரியத்தொன்று. எ - து. அந்தமூலாதாரத்துக்கு மே
லாகப்பொருந்தப்பட்ட நாபியாகியதுரியத்தானத்திலே நிற்
குங்கருவி பிராணவாயுவொன்று. பிராணவாயு நிற்கையாவ
து ஆன்மாதுரியத்திலே பிரகிருதிதத்துவ முடம்பாகப் பிரா
ணவாயுவோடுங்கூடி நிற்குமவதரத் தந்தத்துரியத்தைவிட்டு
அதீதத்திலே பிரகிருதிதத்துவமுடம்பாகச் செல்லுமிடத்தந்
தத்துரியத்திலே பிராணவாயு நின்றுவிடுகையா லப்படிச்
சொன்னதெனவறிக.— நண்ணிடுஞ்சுழுத்திதன்னி னயந்து
ளதொன்று. எ - து. அந்தத்துரியத்துக்கு மேலாகப்பொரு
ந்தப்பட்ட விதயமாகிய சுழுத்தித்தானத்திலே விருப்பத்து
டனே நிற்குங் கருவி சித்தமொன்று. சித்த நிற்கையாவது
ஆன்மா வந்தச்சுழுத்தியிலே பிரகிருதிதத்துவமுடம்பாகச்

சித்தத்தோடும் பிராணவாயுவோடுங்கூடி நிற்குமவதரத்தந் தச்சுழுத்தியைவிட்டுப் பிரகிருதிதத்துவமுடம்பாகப் பிராணவாயுவோடுங்கூடித் துரியத்திற்செல்லுமிடத் தந்தச்சுழுத்தியிலேசித்தமொன்று நின்றுவிடுகையா லப்படிச் சொன்னதெனவறிக.— பின்னுமண்ணிடுங் கனவுதன்னிலாறேழாம். அநுவயம். அண்ணிடுங் கனவுதன்னிற் பின்னுமாறேழாம். எ - து. அந்தச் சுழுத்திக்குமேலாக வடுத்த கண்டமாகிய சொப்பனத்தானத்திலே (பின்னுமென்றவிதப்பால் முற்கூறிய பிராணவாயுவுக்குப் பின்னுள்ள வொழிந்த வாயுக்கவொன்பதும்) ஆறேழாகிய சத்தாதிகளைந்தும் வசனுதிகளைந்தும் அந்தக்கரணங்களிற் சித்தநீங்கலாக மனம் புத்தி யாங்காரமும் ஆகப்பதின்மூன்றும் ஆகமூன்னுங்கூட்டி யிருபத்திரண்டு நிற்கும். அன்றியுமிந்தப் பதத்துக்குப் பின்னுமென்றது வாயுக்கவொன்பதுக்குப் பொருட்படாதென்று பின்னுமண்ணிடுங்கனவிலாறேழொன்பதாமென்று பாடமோதி இருபத்திரண்டுகருவி சொப்பனத்தானத்திலே நிற்குமென்று தொகைப்படுத்திப் பொருளுரைப்பாருமுளர். இதைப் பொருளுக்கேற்க அந்தப் பாடத்தைக் கூட்டிக்கொள்க. சொப்பனத்தானத்தில் நிற்குங் கருவி யிருபத்திரண்டாவ தேதென்னில் ஆன்மா வந்தக் கண்டத்தானத்திலே வாயுக்கள் பத்தும் வசனுதியைந்தும் சத்தாதியைந்தும் அந்தக்கரணங்களுலும்ஆகவிருபத்துநாலோடுங்கூடிப் பிரகிருதிதத்துவ முடம்பாகநிற்குமிடத்து அந்தக்கண்டமாகிய சொப்பனத் தானத்தைவிட்டுப் பிரகிருதிதத்துவ முடம்பாகப் பிராணவாயுவோடுஞ் சித்தத்தோடுங்கூடி இதயமாகிய சுழுத்தித்தானத்திலே செல்லுமவதரத்து முற்கூறிய கருவிகளிருபத்திரண்டுஞ் சொப்பனத்தானத்திலே நின்றுவிடுகையா லப்படிச் சொன்னதெனவறிக.—சாக்கிரத்தின் கண்ணுறுமஞ்சாறுய கருவிகள். எ-து.

கண்டத்துக்கு மேலாகிய இலாடத்தானமாகிய சாக்கிரத்தா னத்திலே பூதங்களைந்தின் வழித்தாகிய ஞானேந்திரியமாகிய சோத்திராதிகளைந்துங் கன்மேந்திரியமாகிய வாக்காதிகளைந் தும் ஆகப்பத்துக்கருவிகளுஞ்சாக்கிரத்திலேநிற்கும். பத்துக் கருவிகள் நிற்றலாவது ஆன்மா தத்துவ முப்பத்தாறோடுங்கூ டி விசுவவியாத்தனாய் நிற்கச்செய்தே யதிலே யறிகருவிக ளாகிய சிவதத்துவமைந்தும் வித்தியாதத்துவமேழிற் பிரகி ருதிதத்துவ நீங்கலாகக் கலாதிகளாறும் ஆன்மதத்துவ மிரு பத்துநாலிற் பூதங்களைந்தும் ஆகப் பதினாறுநீங்கலாக நின்ற கருவி யிருபதும் தொண்ணூற்றாறு வகையில் வாயுக்கள் பத் தும் வசனாதியைந்தும் ஆக முப்பத்தைந்தோடுகூடி ஆன்மா ஒடச்சமைந்தோடுகிறதே ரியற்றுவான்கைவிட்டு நின்றாற் போல அந்த விலாடத்தானத்திலே சாக்கிராவத்தைப்பட்டு நிற்கச்செய்தே யான்மா வதனைவிட்டுச் சொப்பனத்தானத் திற் செல்லுமிடத்து வாயுக்கள் பத்தும் வசனாதியைந்துஞ் சத்தாதியைந்தும் அந்தக்கரணங்களுலும் ஆக விருபத்து நாலோடுங்கூடிப் பிரகிருதிதத்துவ முடம்பாகச்செல்லுகை யா லிந்த விருபத்தைந்து நீங்கலாக மற்றுள்ள சோத்திராதி யைந்தும் வாக்காதியைந்து மந்த விலாடத்தானத்திலே நின் றுவிடுகையா லப்படிச்சொன்னதெனவறிக. அஞ்சாறுயகரு விகள். எ- கு. பூதங்களைந்தின் வழித்தாகிய கருவிகளென் றதேதென்னில் ஆன்மா விந்திரியங்களைக்கொண்டு விடயங் களைக் கொள்ளுமிடத்துப் பூதங்களிடமாகநின்று கொள்ளு கையாலப்படிச் சொன்னதெனவறிக.—காணுந்தானே.எ-து. ஆன்மா வவத்தைப்பட்டுச் செல்லுமவதாத் தந்தந்தத் தான ங்கடோறு மந்தந்தக்கருவிகளை விட்டுவிட்டுப்போமுறைமை யை யிங்ஙன மிப்படி யறியப்படும். எ-று.

வி - பு. இங்ஙனம் பொருட்கூறிவந்த வகையில் பின்னு மண்ணிடுங்கனவுதன்னி லாறேழாம். எ - கு. பின்னுமென்றது வாயுக்களொன்பதுக்கும் பொருட்படாதென்று பின்னு மண்ணிடுங்கனவி லாறேழொன்பதாம் என்று பாடமோது வாரு முளரொன்றதற்கு வழியேதென்னில் இந்தச்செய்யுளுக்குக்கருத்து ஆன்மா வவத்தைப்பட்டுச் செல்லுமவதரத் தந்தந்தத் தானங்கடோறும் விட்டுவிட்டுப்போங் கருவிக்குத் தொகை சொல்லுகையாற் சொப்பனத்தானத்தில் விட்டுப் போங்கருவியு மிருபத்திரண்டுக்குத் தொகைசொல்லு மிடத்துப் பின்னு மண்ணிடுங்கனவுதன்னி லாறேழாம் என்று பதின்மூன்றுக்குத் தொகைசொன்னதொழிய மற்றவொன்பதுக்குத் தொகை சொல்லாதபடியால் பின்னுமண்ணிடுங்கனவி லாறேழொன்பதாம் என்று பாடமோதி யிருபத்திரண்டென்று பொருட்கூறுகை கருத்தாகையா லப்படிப்பாடமோதினதெனவறிக. அப்படியானுல்முன்னே பிராணவாயுவைச்சொல்லிவருகையாற் பின்னுமென்றது பிற்பட்ட வாயுக்களொன்பதுமென்று பொருட்கூறுகைக்குத் தொகையாகாதோ வென்னி லப்படிமுன்னே பிராணவாயுவென்றதும் வியாக்கியானஞ் செய்தவர்கள் சொன்னதொழியப் பாடத்திற்சொல்லாதாகையால் அதுவும் பொருளல்லவென்பது கருத்தெனவறிக. இங்ஙனம் பொருட்கூறிவந்த வகைக் குதாரணங்கள்வருமாறு:- அஃதாவது ஆன்மாவவத்தைப்பட்டுச் செல்லுமிடத்துச் சாக்கிரந்தொடங்கி யதீதமளவு மந்தந்தத் தானங்கடோறுங் கூடிநிற்குங் கருவிகளின்னின்னதென்று தொகை சொன்னதற்கு. பி - ம். திருமந்திரத்தில் "முப்பதோடைந்தாய் முதல்விட்டங்கையைந்தாய்ச், செப்பதின்மூன்றாய்த் திகழ்ந்திரண்டொன்றதா, யிப்பதிநின்ற வியல்பையறிந்தவ, ரப்பதிகொள்பவ ராய்ந்துகொள்ளீரோ." எ - ம். சித்தியாரி

ல். "சாக்கிரமுப்பத்தைந்து நுதலினிற்கனவுதன்னி, லாக்கியவிருபத்தைந்து களத்தினிற்சுழுனைமூன்று, நீக்கியவிதயந்தன்னிற் றுரியத்திலிரண்டொபி, நோக்கியதுரியாதீத நுவலின் மூலத்திலொன்றே." எ - ம். மெஞ்ஞானவிளக்கத்தில். "நனவுதனிற்கருவி முப்பத்தைந்தாகும், கனவிருபத்தோனாந்தாங்காணில் - முனிசுழுத்தி, மூன்றுகுங்காலே முழுத்துரியமோரிரண்டே, யூன்றுமதீதந் தருமாறுன்று." எ - ம். வருமேதுக்களைக் கண்டுகொள்க. என்றிங்ஙனமவத்தைக்குக் கருவிமுப்பத்தைந்தென்று சொல்லியிருக்கிறவிதிலே முப்பத்துநாலுகருவியென்றும் ஒன்று ஆன்மாவென்றுஞ் சிலநூல்களிற் சொல்லுவானேனென்னிலப்படிச்சொன்னதும் பிரகிருதிதத்துவத்தை யான்மாவென்று சொன்னதெனவறிக. அதற்குவழியேதென்னில் பிரகிருதிதத்துவ மற்றுள்ளகருவிகளைப்போல வான்மாவைவிட்டும் பற்றியும் வாராமற் கேவலசகலமிரண்டினு முயிருமுடம்பும்போலப் பிறிவற்றுநிற்கையால் உடலுக்கிட்டபெயர் உயிருக்குநின்றுற்போலப் பிரகிருதிதத்துவத்தின்பெயர் ஆன்மாவுக்குச்சொல்லியும் விளக்குச்சுடரொளியுந்தகளியும் விளக்கென்று பெயர்பெற்றுற்போல ஆன்மாவின்பெயர் பிரகிருதிதத்துவத்திற்குச் சொல்லியும் வருகையால் இவ்விடத்துக்கும் ஆன்மாவின்பெயர் பிரகிருதிதத்துவத்துக்குஞ் சொன்னதெனவறிக. அப்படியொன்றின்பெய ரொன்றிற்கு மாறிவருகைக்கு. பி - ம். சிவஞானபோதத்தின் மூன்றுஞ்சூத்திரத்தின் சூரணையில். "ஒடுங்கினவிடத் தின்பதுன்பஜீவனம் பிரகிருதிக்கின்மையி னொடுங்காவிடத்தின்பதுன்பம் ஜீவியாநிற்ப துளதாதலி னதுவேயவ்வான்மாவாம்." என்றதனுள் "ஒடுங்கினவிடத்தின்பதுன்பஜீவனம் பிரகிருதிக்கின்மையின்" என்பதைப் பிரகிருதிதத்துவத்தின்பேர் ஆன்மாவுக்கு வருமதுகண்டுகொள்க.இனி யான்

மாவின்பெயர் பிரகிருதி தத்துவத்துக்கு வருமதற்கு. பி-ம். சித்தியாரி லிரண்டாஞ்சூத்திரத்தில் தத்துவத்தின்றொகை சொல்லுமிடத்துண்டாகிய விருத்தத்தில் "சுத்ததத்துவங்க ளென்று முன்னமேசொன்னவைந்து, மித்தகைமையினிய ம்பு மிவைமுப்பத்தொன்றுமாகத், தத்துவமுப்பத்தாருஞ் சைதன்னியங்களைந்து, சித்தசித்தான்மாவொன்று முப்பது மசித்தேசெப்பில்" இதிற் சித்தசித் தான்மா வொன்றுமென் பதைக் கண்டுகொள்க. இதனையுஞ் சித்தசித்தான்மாவென் று ஆன்மாவின்பெயர் வருகையா லான்மாவென்பாருமுளர். அதுவழக்கல்லவெனவறிக. அதுவேனென்னில் தத்துவங்க ளுக்குத் தொகைசொல்லிச் செலவுசொல்லுமிடத்து மீளவுந் தத்துவங்களைச்சொல்லாமல் ஆன்மாவைச்சொல்லுகை வழ க்கல்லாதபடியால் அதனைச் சொல்லவொண்ணாதென்றதென வறிக. அன்றியும் சித்தசித்தான்மாவென்றதைப் புருடதத்து வமென்பாருமுளர். அதுவழக்கல்லவெனவறிக. அதுவேனெ ன்னில் அதனைத் தத்துவசமுகத்திற்றோன்றுங் கருவியென் று "நிச்சயம்புருடனாகிப் பொதுமையினிற்குமன்றே." எ-ம் "ஐவதையாலுறுபயன்கணுகரவருங்கால மதுபுருடதத்துவ ம்." எ-ம். நூல்களிற் சொல்லிவருகையால் ஆன்மாதத் துவங்களோடுங் கூடிநின்று சகலனாகஜீவிக்குமவதரத் து ண்டாகுங் கருவியாகையாலும் பிரகிருதிதத்துவம்போல ஆ ன்மாவைவிடப்படாமற் கேவலசகலமிரண்டினுங் கூடிநில் லாதாகையாலு மதனையாகாதென்றதெனவறிக. அன்றியும் புருடதத்துவந்தன்னை யான்மாவென்றலு மான்மாவின்பெ யர் தத்துவத்துக்கும் வருமென்பதுகண்டுகொள்க. என்று லுஞ் சித்தசித்தான்மாவென்றது பிரகிருதித்துவமேதுணி பெனவறிக. அப்படியானாலு மவத்தைப்பட்டுச் செல்லுமவதரத்து மற்றுள்ளதத்துவமுடம்பாகச் செல்லாதோ பிர

கிருதிதத்துவம்வேணுமோவென்னில் அப்படிமற்றுள்ள தத்துவமுடம்பாகத் துரியமளவும் வந்துசென்றதாகிலுந் துரியத்திலே பிராணவாயுநின்றுவிடுகையாற் றுரியத்தைவிட் டதீதத்திலேசெல்லுமிடத் தான்மாவானது தனித்துச்செல்லாது அஃதெப்படியென்னில் "அங்கியானதுதானுமொன்றையுணைந்துநின்றுநிகழ்ந்திடும், பங்கியாவுயிர்தானுமிப்படி பற்றியல்லதுநின்றிடா." என்றுநூல்களிற் சொல்லிவருகையால் ஆன்மாவான தொன்றோடு கூடிநிற்பதொழியத் தனித்துநில்லாதாகை லவ்விடத்துக்குப் பிரகிருதிதத்துவமுடம்பாகச் செல்லவேண்டுகையா லதுவேண்டுமென்பதை யநுபவத்தாற்கண்டுகொள்க. அப்படியானு லான்மாவுக் காணவமலஞ்சகசமாய்நிற்கையா லந்தவாணவமலந்தாரகமாகச் சென்றுடுங்காதோ பிரகிருதிதத்துவம்வேணுமோவென்னில் அந்தவாணவமலமு மான்மாவோடுங்கூடிநின்று மறைக்கிறதொழியத் தாரகமாகாதாகையா லதனைச்சொல்லவேண்டுவதில்லையெனவறிக. ஆசையா லவ்விடத்துக்குப் பிரகிருதி தத்துவமுடம்பாகச்சென்று அதீதத்திலும் பிரகிருதிதத்துவமு மான்மாவுங்கூடிக்கிடக்குமென்பதே வழக்கெனவறிக. அப்படி யதீதத்தி லிரண்டுங்கூடிக்கிடக்குமேயானுல் சித்தியாரில் அவத்தைக்குச்சொல்லுமிடத்து "படைகொடுபவனிபோதும் பார்மன்னன்புகும்போதில்லிற், கடைதொறும்விட்டுவிட்டுக் காவலுமிட்டுப்பின்னை, யடைதருந்தனியேயந்தர்ப் புரத்தினிலதுபோலான்மா, வுடலினிலைந்தவத்தை யுறுமுயிர்காவலாக." எ - ம். இந்நூலினும் "அடையஞ்சவத்தைப் பெருகியமலத்தாற்பேணி யுறுந்தனியதீதமுண்மை யுயிர்கெனவுணர்த்துமன்றே." எ - ம். அதீதத்திலொருமுதலாகச் சொல்லுவானேனென்னி லப்படியொன்றென்றதும் பிரகிருதியையு மான்மாவையுங் கூட்டியே யொன்றென்றதெனவறிக. அத

ற்குவழியேதென்னில் ஓரான்மா வேொருடலோடுங்கூடியிரு க்குமிடத் துடலென்றுமுயிரென்றுமிரண்டுமுதலாயிருக்கச் செய்தேயு மவனென்று மவளென்று மதுவென்று மொன் ருய்நின்ருற்போல ஆன்மாவும் பிரகிருதியுந் தேகமுந்தேகி யும்போலப் பிறிவற் றிரண்டுமுதலுமொன்ருய்நின்றதெனவ றிக. அப்படியான்மாவைவிட்டுப் பிருகிருதிதத்துவமில்லா தென்றும் பிரகிருதிதத்துவத்தைவிட் டான்மாவில்லாதென் றுஞ் சொன்னதற்கு. பி - ம். சித்தியாரில். "புருடன்பிரகி ருதிபெற்ருற் போதஞ்சிறிதங்குண்டாகிக், குருடன்முதுகில் முடவனிருந் தூர்ந்தாற்போலப்பிரகிருதி, யிருடனிடத்தே யி ருந்தியங்கும்." எ - து. கண்டுசொள்க. அப்படிப்புருடன் பி ரகிருதிபெற்ருலென்பதுகொண்டே பிறகுவந்து கூடினதா மேயென்னில் அப்படிச்சொன்ன தந்தவதீதந்தன்னிலேயந் தப் பிரகிருதியமுந்த அந்தப் பிரகிருதியுங்கழன்று மாயாகா ரணத்திலே கிடந்துணர்த்துமுறைமையிற் கூடினதெனவ றிக. ஆகையாற் கேவலசகலமிரண்டினு மான்மாவும் பிர கிருதியு மொன்றையொன்றுவிடப்படாம லுயிருமுடலும் போலப் பிறிவற்றுநிற்குமென்பதே வழக்கெனவறிக. அப் படிக்கேவலத்திற் பிரகிருதிதத்துவமுண்டாமாகிற் றத்துவத் தோற்றஞ்சொல்லுமிடத்துச் சித்தியாரில். "வருங்குணவடி வாய்மூலப் பிரகிருதிகலையிற்ருேன்றித், தருங்குணமூன்ரு யொன்றிற் ருன்மூன்ருய்மும்மூன்ருகும்." எ - ம். இந்நூ லினும். "உருத்திராாற்கலையதனிற் பிரகிருதிகுணங்களுள வாகும்." எ - ம். தோற்றஞ்சொல்லுவா னேனென்னில் அப்படித் தோற்றஞ்சொன்னது மான்மாவானததீதத்தில் ஜீவியாமற்கிடந்து சகலனுக ஜீவிக்குமவதரத்து இச்சாஞா னக்கிரியாசொரூப னுற்போல வந்தப்பிரகிருதிதத்துவமு மான்மாக்க ளொடுங்குமவதரத் துபாதானமாக ஜீவியாம

ணின்றும் தோன்றுமவதாரத்துக்குக் குணசொரூபமாகத்தோ
ன்றி ஜீவித்தும் வருகையாலு மப்படிச்சொன்னதெனவறிக.
அப்படிப் பிரகிருதிதத்துவ மோகினியிற்றோற்றமாகிய காரி
யமாயையோடுந் தோன்றியுமொடுங்கியும் வரச்செய்தேயிது
வொன்று முபாதானமாய் நிற்குமுறைமை யெங்ஙனேயெ
ன்னி லதுசுத்தமாயையிற் காரியமாகிய விந்துசத்தி சூக்கு
மைவாக்கு முதலானவையிற்றுக் குபாதானமாய் நின்றொடு
ங்குமதுபோல வெனவறிக. அப்படியானு லோருபாதா
னத்திலே யோருபாதானமொடுங்குமுறைமை யெங்ஙனே
யென்னில் அஃதொருவரிடத்திலே மற்றுமோரான்மா கர்ப்
பத்திலே பதிந்து கிடந்தாற்போல வெனவறிக. அப்படியா
னூற் கருவிகூடினவிடமெல்லா மான்மாவுக்கு ஜீவிப்புண்டெ
ன்று சொல்லியிருக்கக் கேவலத்திற் பிரகிருதிதத்துவங்கூடி
நிற்குமேயாகி லான்மா ஜீவிப்பற்றுக்கிடக்குமுறைமை யெ
ங்ஙனேயென்னில் ஆன்மா வொருசரீரசம்பந்தமாய் நின்ற
விடமெல்லாம் ஜீவிக்குமென்று சொல்லியிருக்கவுங் கேவல
ப்பட்டுக்கிடக்கு மவதாரத்துச் சரீரசம்பந்தமாய்க்கிடந்து ஜீ
வியாமனிற்குமதுபோல வெனவறிக. ஆகையாற் பிரகிருதி
தத்துவ மான்மாவோடுங்கூடி யெவ்விடத்தினு முயிரு முட
லும்போலப் பிறிவற்றுநின்று சகலத்திற் குணசொரூபமாய்
நின்று காரியப்பட்டுங் கேவலத்தி லுபாதானமாய் நிற்குமெ
ன்பது முற்கூறிவந்த வுபமானங்களினாலு மநுபவத்தினாலுங்
கண்டுகொள்க. அன்றியு மிச்செய்யுளில். "எண்ணவொன்
றிலாததீதம்" என்கையா லதீதத்திற் கருவிகளொன்றுமில்
லை மற்றுள்ள நாலவத்தைக்குமே கருவியுள்ளதென்பாரு மு
ளர். அதீதத்திற் பிரகிருதிதத்துவ முண்டென்பதைப்பற்றி
முற்கூறிவந்தவகைகளி லிந்நூலுக்குக்கருத்தாகக் காவையம்
பலநாதத் தம்பிரானருளிச்செய்த குறட்பாவி லிச்செய்யு

ளுக்கு வகுத்தகுறட்பாவாகிய "உடலிடையுயிருறுமோரை ந்தவத்தையி, னடைவுறுகருவியினடைவினைவகுத்தது." என்று ஐந்தவத்தைக்குங் கருவியுண்டென்றருளிச் செய்கையாலு மதீதத்திலுங்கருவியுண்டென்பதுகண்டுகொள்க. என்னவே யதீதத்திற் பிரகிருதிதத்துவமுண்டென்பது கருத்து. அன்றியு மப்படியான்மாவைக் கேவலசகலமிரண்டினும் விட்ப்படாமல் வருங்கருவி பிரகிருதிதத்துவமல்ல புருடதத்துவமென்பாருமுளர். அதுவழக்கல்லவெனவறிக. அதுவேனென்னில் ஆன்மாவிசுவவியாத்தியைவிட் டவத்தைப்படு மவதரத்து அறிகருவி பதினுறுநீங்கி யவைத்தைப் படுகையாலதிலே காலமு நியதியுங் கலையும் வித்தையு மராகமுங்கூடி நீங்குகையா லந்த வைந்து கருவிகளுங்கூடி ஜீவிக்குஞ் சமூகத்திற்முேன்றுங் கருவி புருடதத்துவமாதலா லந்தக் கலாதிகளைந்து மவத்தைப்படுமவதரத்துக் கூடாததுகொண் டந்தச் சமூகத்திற்முேற்றமாகிய புருடதத்துவமு மவத்தையிற் கூடாதெனவறிக. அன்றியும் புருடதத்துவத்தையும் பிரகிருதி தத்துவத்தையு மொருகருவியென்று மது வான்மா வவத்தைப்படுமவதரத்துத் துரியமளவும் புருடதத்துவமென்று பெயர்பெற்றுபின் றதீதத்திற் பிரகிருதிதத்துவமென்று பெயராய் நிற்குமென்பாருமுளர். அஃதிரண்டுமொருகருவியென்பது வழக்கல்லவெனவறிக. அது வெங்ஙனேயென்னில் இந்நூலிலே தத்துவத்தோற்றஞ் சொல்லுமிடத்தில் "அருத்திமிகுங்கலைகாலம்" என்னுந் திருவிருத்தத்திலே "உருத்திராற் கலையதனிற் பிரகிருதிகுணங்க ளுளவாகும்" என்று பிரகிருதிக்குத் தோற்றஞ்சொல்லியும் "ஐவகையாலுறுபயன்க ளுகரவருங்கால மதுபுருடதத்துவமென் றறைந்திடுவரறிந்தோர்" என்று புருடதத்துவந் தத்துவசமூகத்திற்முேன்றுங் கருவியென்றுசொல்லுகையாலும் பு

ருடதத்துவம்வேறு பிரகிருதிதத்துவம்வேறெனவறிக. அன்றியு மிதுவேகருத்தென்பதைப்பற்றிக் காவையம்பலநாதத் தம்பிரானுர் இந்நூலுக்குக் கருத்தாகவருளிச்செய்த குறள் வெண்பாவில். "ஐவகையாலுறுபயன்க ணுகரவருங்கால மது புருடதத்துவம்." என்னுஞ் செய்யுளின் கருத்தாகிய "புகன்றவற்ருலவர் புருடதத்துவமு, மகன்றமானு மதன்குணம் விரித்தது" என்று தத்துவங்கள் காரியப்படுமிடத்துப் புருடதத்துவமும் பிரகிருதிதத்துவமும் வேறுவேருகச் சொல்லுகையாலு மவை யிரண்டையு மொருகருவியாகச்சொல்லவொண்ணுதெனவறிக. அன்றியுந் தத்துவ முப்பத்தாறுக்குத் தொகைசொல்லுமிடத்து ஆன்மதத்துவ மிருபத்துநாலு வித்தியாதத்துவமேழு சிவதத்துவமைந்தென்று சொல்லுமிடத்து அவையிரண்டு மொருகருவியானுல் முப்பத்தாறுக்குத் தொகையில்லாதபடியாலும் அன்றியும் அத்துவாசோதனையிற் கலைப்படைப்புக்குச் சித்தியாரில். "தத்துவமுமோரேழு." என்றுவித்தியாகலைக்கு வித்தியாதத்துவமேழாகையாலும் அவையிரண்டையு மொருகருவியென்ன வொண்ணுதெனவறிக. அப்படியானுல் வித்தியாதத்துவமேழென்பதற்குக் காலம் நியதிகலை வித்தை யராகம் புருடன் மாயையென்று நூல்களிற்சொல்லுகையால் புருடனையும் பிரகிருதியையு மொருதத்துவமாக்கி மாயையென்பதை யொருத்த்துவமாக்கி ஆகவித்தியாதத்துவமேழென்று தொகைப்படுத்தி ஆகத்தத்துவமுப்பத்தாறென்று சொல்லப்படாதோவென்னில் அப்படி மாயையென்றதும் பிரகிருதிதன்னையே யெனவறிக. ஆகையாற் புருடன்வேறு பிரகிருதிவேறென வறிக. அப்படிப்பிரகிருதி தன்னையே மாயையென்பதொழிய மாயையென்ருெருகருவி தனித்தில்லையென்பதற்கு வகையேதென்னில் தத்துவத்தோற்றஞ் சொல்லுமிடத்துக் காலம் நியதி கலை வித்தை

யராகம் பிரகிருதியென்று ஆறுக்குத்தோற்றஞ்சொல்லி வருகையாலும் புருடதத்துவத்தோற்றம். "ஐவகையாலுறுபயன்கணுகரவருங்கால மதபுருடதத்துவமென்று." அவ்விடத்திற் றோற்றஞ்சொல்லுகையாலு மாயையென் றொருகருவிக்குத் தோற்றமோரிடத்திலுஞ் சொல்லாதபடியாலும் அன்றியுந் தத்துவங்கள் காரியப்படுமிடத்து மாயையென் றொருகருவி காரியப்படுகை சொல்லாதபடியாலும் பிரகிருதி தன்னையே மாயையென்பதொழியத் தனித்தொருகருவி மாயையாகச் சொல்லப்படாதெனவறிக. ஆகையாற் புருடன்வேறு பிரகிருதிவேறெனவறிக. அப்படிப் புருடனொருகருவியும் பிரகிருதியொருகருவியுமானால் ஒடுக்கஞ் சொல்லுமிடத்து "வித்தையிலொடுங்குமாறும்" என்று ஆறுகச்சொன்னதேதென்னில் புருடதத்துவந் தத்துவசமூகத்திற் றோற்றமாகையாலு மற்றுள்ளகாலமு நியதியுங் கலையும் வித்தையு மராகமும் பிரகிருதியுங் காரணமாயையிற் றோற்றமாகையாலுந் தோன்றினவொழுங்கிலே யொடுக்கஞ் சொல்லவேண்டுகையாற் புருடதத்துவத்துக்குக் காரண்மாயையிற் றோற்றமில்லாதபடியாலும் மற்றுள்ள ஆறுதத்துவமுங் காரணமாயையிலொடுங்குகையால், "வித்தையிலொடுங்குமாறும்." என்றதெனவறிக. ஆகையாற்புருடதத்துவம்வேறு பிரகிருதிதத்துவம்வேறெனவறிக. அன்றியும். "சித்தமாமவ்வியத்தம்."என்றுநூல்களிற்சொல்லிவருகையால் அவ்வியத்தமான பிரகிருதிதானே சித்தமுமாய்த்தோன்றுகையால் பிரகிருதியையுஞ் சித்தத்தையு மொருகருவியாக்கி அவத்தைக்குக்கருவி முப்பத்தூநாலென்று சொல்லுவாருமுளர்.அதுவும் பொருளல்லவெனவறிக.அதற்குக் குற்றமேதென்னில் அப்படிப்பிரகிருதியுஞ் சித்தமு மொருகருவியானால் ஆன்மதத்துவ மிருபத்துநாலினுஞ் சித்தத்தை யொருக

ருவியாகவும் வித்தியாதத்துவ மேழினும் பிரகிருதியையொருகருவியாகவுஞ் சொல்லித் தத்துவமுப்பத்தாறென்கையாலும் அன்றியும் இவைகாரியப்படுமிடத்துச் சித்தமானதுநினைவுமாத்திரமாய்நின்று காரியப்படுமென்றும் பிரகிருதி முக்குணங்களா யொன்பதுவகையாக நின்றுகாரியப்படு மென்றுஞ் சொல்லிவருகையால் இரண்டையுமொரு கருவியாகச்சொல்லவொண்ணாதெனவறிக. அன்றியும் பிரகிருதிதானே சித்தமாமென்னும் வழக்கைப்பற்றி யிரண்டுமொன்றுமென்றாலும் பிரகிருதியினின்றுஞ் சித்தமுண்டாகையாற் சித்தமானது சுழுத்தியில் நினைவுமாத்திரமாய் நிற்குமென்று நூல்களிற்சொல்கையாலும் பிரகிருதிகாரணமாய்ச் சித்தந்தோன்றுகையாற் பிரகிருதிகெட்டுச் சித்தநிற்க வழக்கில்லாதபடியினாலும் அப்படிச் சொல்லவொண்ணாதெனவறிக. அப்படிப் பிரகிருதி காரணமாகச் சித்தந்தோன்று மென்றது ஆன்மதத்துவ மிருபத்துநாலும் பிரகிருதியிலே தோன்றி மீளவு மதிலேயொடுங்குகையாலும் அது வழக்கல்லவெனவறிக. அப்படிப் பிரகிருதியிலே யான்மதத்துவ மிருபத்துநாலுந்தோன்றி மீளவுமதிலே யொடுங்குமென்பதற்கு. பி-ம். இந்நூலில் "உருத்திரராற் சலயதனிற்பிரகிருதிகுணங்க ளுளவாகு மாங்காரம் புந்தியினிலுதிக்கும்" என்று தோற்றத்துக்குச் சொல்லியும் சித்தியாரில் "தத்துவமெண்மூன்றுஞ் சென்றான்மதத்துவத்தொடுங்கும்" என்று ஒடுக்கத்துக்குச் சொல்லியும் வருமதுகண்டுகொள்க. ஆகையாற் புருடதத்துவம்வேறு பிரகிருதிதத்துவம்வேறு சித்தம்வேறெனவறிக. அன்றியு மவத்தையிற் பிரகிருதிதத்துவங்கூடாதென்னி லதிற்றேற்றமாயுள்ள வந்தக்கரணங்களு மிந்திரியங்களும் அவத்தைத்தானங்களினின்று காரியப்படுகையாற் காரணமில்லாதபொழுது காரியம்ஜீவியாதாகையால் அவத்தையிற் பி

ரகிருதியுண்டென்பதை யநுபவத்தாற் கண்டுகொள்க. என்னவே ஆன்மாவவத்தைப்படுமிடத்துப்பிரகிருதிதத்துவ முடம்பாகச்சென்று மூலாதாரத்திலே யந்தப்பிரகிருதியோடு மழுந்திக்கிடக்குமென்கிறதே சித்தாந்தப்பொருளெனவறிக. என்றிங்ஙனஞ்சொல்லிவந்தவகையில் அவத்தைக்குக்கருவி முப்பத்தைந்தென்பதும் ஆன்மாவதீதத்திற் பிரகிருதிதத்துவ முடம்பாகச் சென்றொடுங்குமென்பதே வழக்கென்பதுங் கண்டுகொள்க. இதற்கு. பி-ம். சிற்றம்பலநாடித் தம்பிரானருளிச்செய்த ஞானப்பஃறொடையில். "ஐயாறுமைந்துமணை கருவி,யென்றுமிதிற் புருவத்திடை பத்தும்போக்கிருபத்,தைந்தோடே களத்திற் றங்கிச், சுழுத்திதனின்மூன்றும் துரியத் திரண்டும்,விழித்தநினைவற்றுயிரைவிட்டு-அழுத்தியிடு,மூலப் பிருகிருதியோடேயம்மூலமலங், கோலக்கிடந்துணர்த்தக் கூறுங்கால்." என்றருளிச்செய்ததுங் கண்டுகொள்க. அன்றியும் சிவாகமத்தில்அசிந்திதமென்கிற வாகமத்தின்கிரந்தத்திலே யவத்தைக்குக்கருவி முப்பத்தைந்தென்பதற்குப் பிரமாணங்கண்டுகொள்க. ஆன்மதத்துவ மிருபத்துநாலுக்கும் பிரகிருதிதத்துவம்பிரதானமாகையால் பிரகிருதியைக்கேத்திரக்கினனென்றதெனவறிக.

இதனாற்சொல்லியது ஆன்மா கீழாலவத்தைப்பட்டுப் பிரகிருதிதத்துவமுடம்பாகச்சென்று மூலாதாரத்திலேயொடுங்குமவதரத்துச் சாக்கிரத்தானத்தில்விட்டுப்போங்கருவிபத்தென்றும் சொப்பனத்தானத்தில் விட்டுப்போங்கருவியிருபத்திரண்டென்றும் சுழுத்தித்தானத்தில் விட்டுப்போங்கருவியொன்றென்றும் துரியத்தானத்தில் விட்டுப்போங்கருவியொன்றென்றும் வருமுறைமையையு மறிவித்தது. (க0)

இங்ஙனஞ்சொல்லப்பட்ட வவத்தைகளைந்து மடியேனுக்குத் தரிசனம் வந்ததில்லையென்ற மாணவகனைநோக்கி

ச் சகலாவத்தையிற் காரியமாயுள்ள நிலையிற்படுமவதரத்தி லுண்டான வைந்தவத்தைகளினுந் தரிசனப்படுத்தியதுகொண்டே திருவருட்பிரகாசமுள்ள புண்ணியவான்களுக்குண்டான மேலாலவத்தையும் ஆசாரியன்கண்ணாக வறியவேணுமென்னு முறைமையு மருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

இவ்வகையவத்தைதன்னிலெய்திடுங்கரணமெல்லா
மெய்வகையிடத்திலுற்றுமேவுமாகண்டுமிக்க
பொய்வகைப்பவமகற்றப்புரிந்திடிலருளாலாங்கே
யைவகையவத்தையுய்க்குமறிவினாலறிந்துகொள்ளே.

தத்துவசமூகந் தன்னிலைந்தவத்தையுஞ்
சுத்தமதாமைந் தவத்தையுஞ்சொன்னது.

வி - ம். இவ்வகையவத்தைதன்னி லெய்திடுங்கரணமெல்லாம். எ - து. இந்தவடைவிலே முற்கூறப்பட்ட அவத்தைகளைந்தினு முண்டானகருவிகளேற்றக்குறைச்சலாய் நின்றமுறைமைகளெல்லாத்தையும்,— மெய்வகையிடத்திலுற்று மேவுமாகண்டு. எ - து. மெய்யிலேவகைப்பட்ட விலாடத்தானத்திலே யஞ்சவத்தைப் படுமுறைமையையறிந்து,— மிக்கபொய்வகைப் பவமகற்றப் புரிந்திடில். எ - து. மிகவும் பொய்யாயிருக்கப்பட்ட ஜநநமரணதுக்கங்களைநீக்க விசாரிக்கில்,— அருளாலாங்கே யைவகையவத்தையுய்க்கும். எ-து. தம்பிரானார் காருண்ணியத்தினாலேமேலான சுத்தாவத்தைகளைந்தையு மந்தவிலாடத்தானத்திலே செலுத்தாநிற்கும். அதனையறியுமுறைமை யெங்ஙனேயெனனில்,— அறிவினாலறிந்துகொள்ளே. எ - து. ஆசாரியன்கண்ணாகவறிந்துகொள்ளுக. எ-று. அன்றியும்ஐவகையவத்தையுய்க்கு மறிவினாலறிந்துகொள்ளே யென்றொருபதமாக்கி மு

ற்கூறிய கீழாலவத்தைகொண்டும் நிலையிற்படுமவத்தைகொண்டும்மேலாலவத்தையுமறியப்படுமென்னவுமாமெனவறிக.

ரு - ம். மெய்வகையிடத்திலுற்றுமேவுமாகண்டு. எ-து. சாக்கிரத்தானத்திலேயுண்டாகிய நிலையிற்படுமவத்தையைந்தையுங் கண்டென்றதெனவறிக. அஃதாவது-ஒருபண்டத்தை மறந்தவனந்தப்பண்டங்காணாதபொழுது பிராணவாயுவு மியங்காமல் மூர்ச்சித்திருந்தவவதர நிலையிற்படுமவத்தையிற் சாக்கிர துரியாதீதமெனவறிக. இனியந்தப்பிராணவாயு வியங்கத்தக்கதாகப் பெருமூச்செறிந்து விசாரித்தறிவோமென்று நின்றவவதர நிலையிற்படுமவத்தையிற் சாக்கிரதுரியமென வறிக. இனியவ்விடத்திலேயல்லோ போனோமென்று நினைவெழுந்திருந்தவவ்தர நிலையிற்படுமவத்தையிற் சாக்கிர சுழுத்தி யெனவறிக. இனி யின்னவிடத்திலே யல்லோ பண்டம்வைத்தோமென்று விசாரப்பட் டறிந்தவவதர நிலையிற்படுமவத்தையிற் சாக்கிர சொப்பனமெனவறிக. இனியந்தப்பண்டம் வைத்தவிடத்திலேசென்று கண்டது. நிலையிற்படுமவத்தையிற் சாக்கிர சாக்கிரமெனவறிக. இந்தநிலையிற்படுமவத்தைக்குக் கருவிகளாவன. சுத்ததத்துவங்களைந்துமெனவறிக. அதுவெங்ஙனேயென்னில் அதீதத்துக்குச் சிவதத்துவமொன்று மெனவறிக. துரியத்துக்குச் சிவதத்துவமுஞ் சத்திதத்துவமு மெனவறிக. சுழுத்திக்குச் சிவதத்துவமுஞ் சத்திதத்துவமுஞ் சாதாக்கியதத்துவமு மெனவறிக. சொப்பனத்துக்குச் சிவதத்துவமும் சத்திதத்துவமுஞ் சாதாக்கியதத்துவமு மீசுரதத்துவமு மெனவறிக. சாக்கிரத்துக்குச் சுத்ததத்துவமைந்து மெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில். "ஐந்துசாக்கிரத்தினான்கு கனவினிற்சுழுனைமூன்று,வந்திடுந்துரியந்தன்னி லிரண்டொன்றுதுரியாதீதந், தந்திடுஞ்சாக்கிராதி யவத்தைகடானந்தோறு, முந்திடுங்கரணந்

தன்னிற் செயலெருருமுணர்ந்துகொள்ளே." எ-து. கண்டுகொள்க. இனி யிந்த நிலையிற்படு மவத்தைகொண்டே கீழாலவத்தை யறியப்படுமென்பதற்கு மிந்த நிலையிற்படு மவத்தையிற் கருவிக ணீங்குகிறதுதானே சுத்தாவத்தையாமென்பதற்கும். பி-ம். சித்தியாரில். "அறிதருமுதலவ்த்தை யடைதருமிடத்தேயைந்துஞ், செறிதருங்கரணந்தன்னிற் செயல்தொறுங்கண்டுகொண்ணீ, பிறிவிலாஞானத்தோரும் பிறப்பறவருளாலாங்கே, குறியொடுமைந்தவத்தை கூடுவர்வீடுகூட." எ-ம் சிவஞானபோதத்தில். "இலாடத்தேசாக்கிரத்தை யெய்தியவுள்ள, மிலாடத்தேயைந்தவத்தை யெய்து-மிலாடத்தே, யவ்வவ்விந்திரியத் தத்துறைகள்கண்டதுவே, யவ்வவற்றினீங்கலதுவாங்கு." எ-ம். கண்டுகொள்க. என்னவே யிந்தச்சகலாவத்தையிலுண்டானகருவிகளேற்றக்துறைச்சல்கள்போல வந்தக்கீழாலவத்தைக்குமெனவறிக. இதுசகலாவத்தையிற் காரியாவத்தையைச் சொன்னதெனவறிக. இனி யருளாலாங்கே யைவகையவத்தையுய்க்குமென்றது சுத்தாவத்தையெனவறிக. அவைவருமாறு நின்மலசாக்கிர நின்மலசொப்பன நின்மலசுழுத்தி நின்மலதுரிய நின்மலதுரியாதீதமெனவறிக. அஃதாவது சுத்ததத்துவமைந்தில் சுத்தவித்தைநீங்கினவவதரஞ் சாக்கிரத்திற் சாக்கிரம். சுத்தவித்தையுமீசுரமு நீங்கினவவதரஞ் சாக்கிரத்திற்சொப்பனம். சுத்தவித்தையு மீசுரமுஞ் சாதாக்கியமு நீங்கினவவதரஞ் சாக்கிரத்திற்சுழுத்தி. சுத்தவித்தையு மீசுரமுஞ் சாதாக்கியமுஞ் சத்தியு நீங்கினவவதரஞ் சாச்கிரத்திற்றுரியம். சுத்ததத்துவமைந்து நீங்கினவவதரஞ் சாக்கிரத்தி லதீதமெனவறிக. இவையைந்துதத்துவமு நீங்கவென்றதுகொண்டே யிவையைந்தும் பிரேரிக்கப்பட்ட கருவிகளு நீங்கவென்பதை யநுபவத்தாற் கண்டுகொள்க. இதற்கு. பி-ம். சிவஞானபோதத்தில். "இலாடத்தேசாக்கிரத்தே"

என்றசெய்யுண்முடிவில். "அவ்வவற்றி னீங்லதுவாங்கு." எ-து கண்டுகொள்க. இதுசுத்தாவத்தையிற் காரியாவத்தையென வறிக.

இதனாற்சொல்லியது கீழாலவத்தை யைந்தையுந் தரிசனப்படுத்தவேண்டிச் சகலாவத்தையிற் காரியாவத்தையாகிய நிலையிற்படுமவத்தைகொண்டே தரிசிப்பித்த முறைமையும் அதுகொண்டே சுத்தாவத்தையிற் காரியாவத்தை யைந்தையுந் தரிசிப்பித்த முறைமையு மறிவித்தது. நிலையிற்படுமவத்தையென்றது மத்தியாலவத்தை யெனவறிக. மேலாலவத்தை யென்றது சுத்தாவத்தையை யெனவறிக. (௧௧)

இங்ஙனஞ்சொல்லப்பட்ட காரியாவத்தைகள் தரிசிப்பித்தாற்போல முற்கூறிய காரணாவத்தைகள் மூன்றுந் தரிசிப்பிக்கவேணுமென்று மாணவகனைநோக்கிக் காரியாவத்தையி லுண்டான கேவலசகலசுத்தம்போலவிருக்குங் காரணாவத்தையி லுண்டான கேவலசகலசுத்தமென்னு முறைமையை மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண் டருளியது.

நீக்கமிலதீதமாசு நிறைந்தகேவலமாநீர்மை
சாக்கிரங்கலாதிசேர்ந்த சகலமாந்தன்மையாகு
நீக்கமிலிரண்டுங்கூடா தொழியவோர்நிலையினீடுஞ்
சாக்கிரவதீதஞ்சுத்தத் தகைமையதாகுந்தானே. (௧௨)

கேவலசகல சுத்தமென்றுரைத்த
மூவகைதெளியு முறைமைமொழிந்தது.

வி - ம். நீக்கமிலதீதமாசு நிறைந்தகேவலமா நீர்மை. எ - து. ஆன்மாக்கண் மாயாகருவிகளெல்லா நீங்க நீங்காதவாணவமலத்தாலே மறைப்புண்டு மூலாதாரத்திலே கிடக்கிறவதீதம்போலே யிருக்குஞ் சர்வசங்காரத்துங் காரணமா

யையிலே தத்துவங்களெல்லாமொடுங்க வதிலே சர்வான்மாக்களுமொடுங்கி யாணவமலத்தாலே மறைப்புண்டு கிடக்கிறதே காரணமாகிய கேவலாவத்தையின் முறைமை.— சாக்கிரங் கலாதிசேர்ந்த சகலமாந்தன்மையாகும். அநுவயம் கலாதிசேர்ந்த சகலமாந்தன்மையாகுஞ் சாக்கிரம். எ - து. ஆன்மாக்கள் கலையாதியாயுள்ள தத்துவங்களுடனே கலந்து ஒவ்வொருவிடயங்களிற் கூடிநின்று பிறிகிறகாரியமாகிய சாக்கிராவத்தைக்கொக்கும் கன்மத்துக்கீடாக வெண்பத்துநான்குநூறுயிர மியோனிகடோறும் பிறந்திறந்து திரிகிற சகலாவத்தையாகிய காரணாவத்தையின்முறைமை.—நீக்கமிலிரண்டுங்கூடாதொழிய வோர்நிலையினீடுஞ் சாக்கிரவதீதஞ்சுத்தத்தன்மையதாகுந்தானே. எ - து. ஒன்றைவிட்டொன்றுபற்றி யான்மாவைவிட்டு நீங்காமல்வருகிற பெருமைபொருந்திய கேவலசகலமிரண்டினுங் கூடாம லருளுடனேகூடியிரண்டறநிலைபெற்று நேயத்துடனே யழுந்துகிறதே சாக்கிராதீதத்துக்கொக்கும் பரமுத்தியான சுத்தாவத்தையாகிய காரணமும். எ - று.

ரு - ம். அதீதமென்றது ஜீவிக்குங்கருவிகளெல்லாங் கழன்ற விடமெனவறிக. கேவலமென்றது சர்வசங்காரமெனவறிக. சாக்கிரமென்றது கலையாதிதத்துவங்களோடுங்கூடி ஜீவித்துநிற்கை யெனவறிக. சகலமென்றது சிருஷ்டிதொடங்கிச் சங்காரமளவும் பிறந்திறந்து வருகிற தெனவறிக. சாக்கிராதீதமென்றது கருவிகள் முப்பத்தாறுங்கழன்று கேவலசகலத்தினுமழுந்தாம லருளிடமாகச்சென்று ஞேயத்தழுந்தலாகிய வுண்மைநிட்டையை யெனவறிக. சுத்தமென்றது திருவடியிலே யிரண்டறக்கூடிநின்றபரமுத்தியை யெனவறிக. இவையிற்றுக்கு. பி - ம். சித்தியாரில். "கேவலசகலசுத்த மென்னு மூன்றவத்தையான்மா, மேவுவன்". எ - ம்.

"அறிவில னமூர்த்தனித்த னராகாதி குணங்களோடுஞ் செறிவிலன்" எ-ம். "உருவினைக்கொண்டு போகபோக்கியத்துன்னல்" எ-ம். "இருவினைச்செயல்களொப்பி லீசன்றன் சத்திதோய" எ-ம். வரும் விருத்தங்களைக் கேவலசகலசுத்தமூன்றுக்குங்கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது ஆன்மா தத்துவங்களெல்லாங்கழன்று ஆணவமலத்தான் மறைப்புண்டு பிரகிருதிதத்துவமுடம்பாக மூலாதாரத்திலே கிடக்கிறவதீதம்போலே கிடக்குஞ்சர்வசங்காரகேவலத்திலென்றும் ஆன்மா கலையாதிதத்துவங்களோடுங்கூடி யொவ்வொன்றாக ஜீவிக்கிறசாக்கிரம்போலவிருக்கு மியோனிவிட்டுயோனிபற்றிப் பிறந்திறந்துவருகிறசகலமென்றும் இந்தக்கேவலசகலமிரண்டுநீங்கினசாக்கிராதீதம்போலவிருக்குந் திருவடியிலேயிரண்டறக்கூடின சுத்தமானபரமுத்தியென்றும்வருமுறைமையை யறிவித்தது.(கஉ)

நாலாஞ்சூத்திரமாகிய அவத்தைத்தன்மை முற்றிற்று.

இங்ஙன முற்கூறியவகையே யவத்தைப்பட்டுக்கிடக்கு மான்மாக்களுக்குச் சிவ னுணர்த்துமுறைமையு முண்டாமாகையால் அவத்தைக்குமேல் ஐந்தாஞ்சூத்திரமாகிய உணர்த்து முறைமையென்னு மதிகாரம் வைக்கப்பட்டது. இவ்வதிகாரத்தில் ஐந்தாஞ்சூத்திர நின்றமுறைமை யெங்ஙனேயென்னில் சிவஞானபோதத்தில்:— "விளம்பியவுள்ளத்து மெய்வாய்கண்மூக், களந்தறிந்தறியா வாங்கவைபோலத், தாந்தமுணர்வின்றமியருள், காந்தங்கண்ட பசாசத்தவையே." என்னும் ஐந்தாஞ்சூத்திரத்துக் கிவ்வான்மாக்களிடத்துத் தமது முதலுபகார முணர்த்துதனுதலிற்று. என்றமையால் இந்நூலினு மிவ்வதிகாரத்து. "மருவியபொறியிலென்றும்" என்றவிருத்தந் தொடங்கி "அறிந்திடுமனுதி." எ

ன்றவிருத்தமுடிவாகிய செய்யுளைந்தும் ஆன்மாக்களைச் சிவனுணர்த்துமுறைமையைச் சொல்லுகையால் இதுவுமைந்தாஞ்சூத்திரமாக நின்றதெனவறிக. இச்செய்யுட்களி லவைவருமா றெங்ஙனேயென்னில் "தனக்கெனவறிவிலாதான்." என்ற செய்யுளில் "தனக்கெனவறியானுலிச் சகலமுறுகருந்தானே." "அறிந்திடுமனாதி" யென்றசெய்யுளில். "கன்மத்தொன்மை யறிந்தவைநுகருமாறு மருளுவ னமலன்றனே." எ - ம். வருகையா லப்படிச்சொல்லப்பட்டதெனவறிக. இங்ஙன மிவ்வதிகாரத்துக்கு வகுத்தசெய்யுட்களிற் சிலவிருத்தங்களைச் சூத்திரத்துக் குவமைகாட்டி மற்றவிருத்தங்களுக் குவமைகாட்டாததேதென்னில் அஃதாவது இந்தப்பொருளுக்கு மாறுபாடுசொல்லுஞ் சமயிகள் கருத்துக்களை மறுத்தசெய்யுட்களாகையா லெனவறிக. மேல்வருஞ்சூத்திரங்களுக்கு மிங்ஙனங்கண்டுகொள்க. இனியிவ்வதிகாரத்துக்கு முதற்செய்யுளாகிய "மருவிய பொறியிலொன்றும்" என்ற செய்யுளுக்குத் தொந்தனைவருமாறு.

அப்படி யவத்தைப்பட்டுக்கிடக்குமான்மாக்க ளுணருமுறைமை யெங்ஙனேயென்று வினயதற் குத்தாமருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

மருவியபொறியிலொன்றுமாபூதமைந்திலொன்றுங்,
கருவிகளுன்குநீங்காக்கலாதிகளைந்துங்கூடி, யொருபுல
னுகருமிந்த வொழுங்கொழிந்துயிருமொன்றைத், தெரி
வுறுதவின்றுழிந்தத்திரள்களுஞ்செயலிலாவே. (கரு)

உணர்த்துமுறைமையிலொருபுலனுகர
விணக்குறுகருவிகளிவையாமென்றது.

வி - ம். (ஆன்மாவிந்திரியங்களைக்கொண்டு விடயங்களைக்கொள்ளுமிடத்து) மருவியபொறியிலொன்றும். எ-து.

அப்பொழுதைக்குப் பொருந்தப்பட்ட விந்திரியங்களிலே யொன்றும்,— மாபூதமைந்திலொன்றும். எ - து. பெரிய பூதங்களாகிய பிருதிவியப்புதேயுவாயு வாகாசமாகிய விவை யிற்றிலே யப்பொறிகளுக்கேற்ற பூதமொன்றும்,— கருவிக ளுன்கும். எ - து. மனம்புத்தி யாங்காரஞ் சித்தம் என்கி றஅந்தக்கரணங்களுன்கும்,— நீங்காக்கலாதிகள். எ - து. முற்கூறிய கரணங்களைவிட்டு நீங்காத கலை காலம் நியதி வித் தைஅராகம் புருடன் பிரகிருதி மாயையென்கின்ற வித்தியா தத்துவமேழும்,— ஐந்தும். எ - து. சுத்தவித்தை ஈஸ்வர ம் சாதாக்கியம் சத்தி சிவம்என்கின்றசிவதத்துவமைந்தும்,- கூடியொருபுலனுகரும். எ - து. ஆக்விங்ஙனஞ்சொல்லப் பட்ட தத்துவங்கள் பதினெட்டுங்கூடியே யான்மா வொரு விடயத்தைப் புசிப்பன். இந்தக்கருவிகள் கூடாதபொழுது ஆன்மாவுக்குப் புசிப்பில்லையோவென்னில்,— இந்தவொழுங் கொழிந் துயிருமொன்றைத்தெரிவுருது. எ - து. இந்தமு றைமையிலே சொல்லப்பட்ட கருவிகள் கூடினுலொழிய வான்மாவு மொன்றைப்புலப்பட வறியமாட்டாது. அந்த வான்மாக்கூடாதபொழுது அந்தக்கருவிகள் தானுகவறியா தோவென்னில்,— அவனெழிந்தத் திரள்களுஞ் செயலிலா வே. எ - து. அந்தவான்மாவைக் கூடாம லந்தக்கருவிக ளுந் தானுக வறியமாட்டா. எ - று.

ரு - ம். இங்ஙனம் பொருட்கூறிவந்தவகையி லான்மா யாதொரு விடயத்தைப் புசிக்குமிடத் தந்தவிடயங்களுக்கே ற்ற விந்திரியங்களிலே யாதாமொன்றும் அதற்கேற்ற பூதங் களிலே யாதாமொன்றும் அந்தக்கரணங்கள் நாலும் கலாதி களேழும் சுத்ததத்துவமைந்தும் ஆகப்பதினெட்டுக் கருவிக ளுங்கூடியே புசிக்கவேணுமென்று பொருட்கூறியதற்கு வழி யேதென்னில் அஃதாவது சிவனுடைய சத்திகள் சுத்ததத்து

வமைந்தையுங்கொண்டு வித்தியாதத்துவமாகிய கலாதிகளே ழையுங் காரியப்படுத்தியும் அந்தக்கலாதிகளேழும் ஆன்மத த்துவ மிருபத்துநாலையுங் காரியப்படுத்தியும் வருகையா லப்படிச் சொல்லப்பட்ட தெனவறிக. அவையொன்றினு லொன்று காரியப்படுமுறைமை யெங்ஙனேயென்னில் சிவ னுடையசத்திகள் சுத்ததத்துவமைந்தையு நடத்தும் வகை யாவது இச்சாசத்தி யீஸ்வரத்தை நடத்தும். கிரியாசத்திச த்திதத்துவத்தையுஞ் சாதாக்கியத்தையும் நடத்தும். ஞானச த்திசிவதத்துவத்தையும் சுத்தவித்தையையு நடத்துமெனவறி க. இதற்கு. பி - ம் "இச்சைநடத்தியிடு மீச்சுரதத்துவத்தை, மெய்ச்சத்திசாதாக்கிய மேவியிடு - நிச்சயமே, யேன்றகிரி யை நடத்தியிடு மெய்ஞ்ஞான, மேன்றசிவஞ் சுத்தவித்தை யாம்". எ - து. கண்டுகொள்க. இனிசுத்ததத்துவ மைந் தாலும் வித்தியாதத்துவமாகிய கலாதிகளேழுங் காரியப் பட்டுவருகையாவது நாதசொரூபமாகிய சிவதத்துவ மஹோ மாயையிலே நின் ருன்மதத்துவ மிருபத்துநாலுக்கு மு பாதானமாகிய பிரகிருதிமாயையைத் தோற்றுவித்தும் அத ற்கந்தமாகிய விந்துவடிவாகிய சத்திதத்துவத்தைக்கொண் டுகாலமுநியதியுங் கலையுந்தோற்றுவித்தும் சுத்தவித்தை வித் தையைத்தோற்றுவித்தும் ஈஸ்வரம்அராகத்தைத் தோற்றுவி த்தும் ஆக விங்ஙனந் தோன்றப்பட்ட காலமுநியதியுங்கலையு ம்வித்தையுமராகமுங்கூடின சமுகத்திலுண்டான புருடதத் துவத்தைச் சாதாக்கியதத்துவங் காரியப்படுத்தியும் வருமெ ன்பதை நூல்களினுலு மநுபவத்தினுலுங் கண்டுகொள்க. இவையிற்றுக்கு. பி - ம். "காலநியதிகலைசத்திதானடத்து, மேலும் வித்தை வித்தை யராகம்மீசர் - சாலவே, மாயைசிவ ம்புருடன் சாதாக்கியமேவி, நேயமுடனடுத்துநின்று." எ - து. கண்டுகொள்க. இனியிந்த வித்தியாதத்துவமேழாலும் ஆன்ம

தத்துவ மிருபத்துநாலுங் காரியப்படும்வகை யெங்ஙனேயெ ன்னில் கலையானது முற்கூறிய பிரகிருதி மாயையை யெழு ப்பி யதிலே நின்றுங் குணங்களைத்தோற்றுவிக்க அந்தக் கு ணங்களிடமாக வந்தக்கரணங்களு மிந்திரியங்களும் விடய ங்களும் பூதங்களு மொன்றிலே யொன்ருகத்தோன்றி விரி ந்தவவதரத்து அந்தக்கலையானது சித்தத்துக்கு முட்கருவி யாய்நின்று போகங்களிலே நினைவையெழுப்பியும் நியதிபு த்திக்கு முட்கருவியாய் நின்று போகங்களை நிச்சயித்து அ றுதிப்படுத்தியும் வித்தை யாங்காரத்துக்கு முட்கருவியாய் நின்று போகங்களிலே யறிவையெழுப்பியும் அராக மனது க்கு முட்கருவியாய்நின்று போகங்களிலே யாசையாகப்ப ற்றியும் புருடன்இந்திரியங்களையெழுப்பிப் போகங்களைப் பு சிப்பித்தும் பிரகிருதி போகங்களிலே யழுத்துவித்தும் கால மிவை யெல்லாவற்றையுங் கூட்டியும் வருகையா லப்படிச் சொன்ன தெனவறிக. என்றிங்ஙனம் பொருட்கூறிவந்த வ கையிற் கலை சித்தத்துக்குட்கருவி யென்றும் நியதிபுத்தி க்குட்கருவி யென்றும் வித்தை யாங்காரத்துக் குட்கருவியெ றும் அராக மனத்துக்குட்கருவி யென்றும் சொன்னதற்கு வழியேதென்னில் "அந்தக்கரணங்களின் குணம் நினைந்தா ராய்ந்து துணிந்து செயல் மணந்து" எ-ம். "நியதிசிந்தித் தாராய்ந்து துணிந்து செயற்படு மந்தக்கரணவமைச்சரும்." எ-ம். நூல்களிற் சொல்லிவருகையாற் சித்த நினைவையெ ழுப்புங்கருவியாயும் ஆங்கார மறிவைமேலிடுவிக்குங்கருவி யாயும் புத்தி நிச்சயிக்குங்கருவியாயும் மனதுபற்றுங்கரு வியாயும் இவையிற்றுக் குட்கருவியென்ற கலையும் வித்தை யும் நியதியும் அராகமும் நிற்கும்வகையாவது கலை யாண வமலத்தைச் சிறிதேநீக்கி யறிவையெழுப்பும் கருவியாகை யாலும் வித்தை யறிவைமேலிடுவிக்குங்கருவியாகையாலும்

நியதி நிச்சயிக்குங் கருவியாகையாலும் அராக மாசையை யெழுப்புங்கருவியாகையாலு மப்படிக் கூறப்பட்டதெனவறிக. என்னுமிவையிற்றுக்கு. பி - ம். இந்நூலில் "அசுத்த மாயை வைத்தகலைதான் மூலமலஞ்சிறிதேநீக்கி மருவும்வகை தெரிவிக்கும்." எ - ம். சித்தியாரில் "சித்தமாமவ்வியத்தஞ் சிந்தனையதுவுஞ் செய்யும்." எ - ம். வருமது கலையுஞ்சித்தமும் நினைவையெழுப்புங்கருவி யென்பதற்குக்கண்டுகொள்க. இனி வித்தையுமாங்காரமு மறிவைமேலிடுவிக்குங் கருவியென்பதற்கு. பி - ம். "வித்தையுயர்கலையதனிற்றோன்றி யறிவினையுதிக்கப்பண்ணும்." எ - ம். "ஆங்காரம்புந்தியின்கண் ணுதித்தகந்தைத்துவித்தா யீங்கார்தானென்னொடொப்பார்." எ - ம். வருமதுகண்டுகொள்க. இனிநியதியும் புத்தியும் நிச்சயிக்குங்கருவியென்பதற்கு. பி-ம். "நியதிபின்றோன்றிக் கன்மநிச்சயம் பண்ணிநிற்கும்." எ-ம். "புத்தியவ்வியத்திற்றோன்றிப் புண்ணியபாவஞ்சார்ந்து வந்து நிச்சயமும்பண்ணி." எ - ம். வருமது கண்டுகொள்க. இனி மனதும் அராகமும் ஆசையைப்பற்றுவிக்குங் கருவி என்பதற்கு. பி - ம். "விச்சையிலிராகந்தோன்றி வினைவழி போகத்தின்க ணிச்சையைப்பண்ணிநிற்கும்." எ-ம். "மனமதுதைசதத்தின் வந்தொருபொருளைமுந்தி, நினைவதுஞ்செய்து." எ - ம். வருமதுகண்டுகொள்க. ஆகையாலந்தக்கரணங்களுக்குஞ் சித்தத்துக்குக் கலையும் ஆங்காரத்துக்கு வித்தையும் புத்திக்குநியதியும் மனத்துக்கு அராகமும் உட்கருவியாய் நிற்குமென்பதை யநுபவத்தாற் கண்டுகொள்க. இனிசுத்ததத்துவங்களைந்தும் வித்தியாதத்துவங்க ளேழையுங் காரியப்படுத்துமென்றும் வித்தியாதத்துவமேழும் ஆன்மதத்துவ மிருபத்துநாலையுங் காரியப் படுத்துமென்றுஞ் சொன்னதற்கு வழியேதென்னில் சிவதத்துவமைந்தும் பி

ரேரகாண்டமென்றும் வித்தியாதத்துவமேழும் போகசயி த்திரிய காண்டமென்றும் ஆன்மதத்துவ மிருபத்துநாலும் போக்கியகாண்டமென்றுஞ் சொல்லுகையா லப்படிச்சொ ல்லப்பட்டதெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில். "ஐந்துசுத்தத்தின்கீழே ழசுத்தாசுத்தமசுத்தந், தந்திடும்புமான்கீழெண்மூன் றுயதத்துவஞ்சீவர்க்கு, வந்திடும்பிரேரகாண்ட மருவுபோகசயித்திரியத்தோ, டந்தமிலணுக்களுக்குப் போக்கியகாண்டமாமே." எ - து. கண்டுகொள்க. இனிவி த்தியாதத்துவ மேழும் ஆன்மதத்துவ மிருபத்துநாலையுங் காரியப்படுத்துமென்பதற்கு. பி-ம். சித்தியாரில். "வாயாதி சோத்திராதி புறத்துவாழ் கருவியாகு, மோயாதமனாதி காயத் துணருமுட்கருவியாகு, மாய்வார்கட்கராகமாதியவற்றினுட்கருவியென்பர், மாயாடன்வயிற்றிவற்றுற் றுடக்குண்டுவாழுமான்மா." எ - து. கண்டுகொள்க. இனிசிவசத்திகளாலே யிந்தத்தத்துவங்களொன்றையொன்று காரியப் படுத்துமென்றும் அப்படிக் காரியப்பட்டுத் தோன்றுமிடத் துச் சுத்தமாயையாலே யசுத்தமாயை காரியப்படுமிடத்து அதிலே பிரகிருதிமாயையானது ஆன்மதத்துவ மிருபத்து நாலுக்கு முபாதானமாகத் தோன்றுமென்று மற்றுள்ளத த்துவங்களு மவையிற்றிலே தோன்றுமென்றதற்கு. பி-ம். சித்தியாரில். "விந்துவின்மாயையாகிமாயையினவ்வியத்தம், வந்திடும் விந்துதன்பால் வைகரியாதிமாயை, முந்திடுமராகமாதிமுக்குணமாதிமூலந், தந்திடுஞ்சிவனவன்றன் சந்நிதி தன்னிலன்றே." எ - து. கண்டுகொள்க. இங்ஙனம் பிரகிருதிமாயையை யுவ்வியத்தமென்றும் மூலமென்றும் பெயர் கூறியதேதென்னில் பிரகிருதிமாயைக்கு மூலப் பிரகிருதி யென்றும் அவ்வியத்தமென்றும் புமானென்றும் மானென்றும் மாயையென்றும் உள்ளமென்றும ஆன்மதத்துவமெ

ன்றும் பெயராகையா லப்படிச்சொன்னதெனவறிக. என்றிங்ஙனங் கூறிவந்தவகைகளா லான்மாவொருவிடயத்தைக் கொள்ளுமிடத்துப் பதினெட்டுக்கருவியுங்கூடியே புசிக்கவேணுமென்பதை யநுபவத்தாற் கண்டுகொள்க. இங்ஙனம் பொருட்கூறிவந்த விந்தச்செய்யுளின் முதற்பதமாகிய மருவிய கூடியொருபுலனுகரும். என்றபதத்தை ஐக்கியவாதியைநோக்கி மறுத்துக்கூறிய தென்னவுமாம். அஃதெங்ஙனேயென்னில் உரைத்த முறைமைக்குச் சொல்லுமிடத்தாணவமலத்தான் மறைப்புண்டு கிடக்கு மான்மாவைச் சிவன் மாயாகருவிகளைக்கூட்டி யுணர்த்துவனென்றமையாலப்படி யாணவமலமென்ப தொன்றில்லை மயாகருவிகளே யான்மபோதத்தை மறைக்குமென்பது ஐக்கியவாதிகருத்தாகையால் மாயாகருவிகள்கூடியே யான்மபோதம் ஜீவிக்குமென்று இந்தப்பதம்நடக்கையா லவனைமறுத்துக்கூறினதென்றதெனவறிக. இனி யந்தவொழுங்கொழிந் துயிருமொன்றைத்தெரிவுறு தென்றபதமும் அவிகாரவாதியைநோக்கி மறுத்துக்கூறின தென்னவுமாம். அஃதெங்ஙனே யென்னில் அவ னான்மா தானேயறியுமென்று சொல்லுகையால்இந்தப்பதங் கருவிகள்கூடியே யான்மா வறியுமென்றமையாலவனை மறுத்ததென்றதெனவறிக. இனியவனொழிந்தத்திரள்களுஞ்செயலிலாவே யென்றபதமும் சங்கிராந்தவாதியை நோக்கி மறுத்துக்கூறின தென்னவுமாம். அஃதெங்ஙனே யென்னில் அவனான்மா வறியாது கருவிக ளறியுமென்று சொல்லுகையா லிந்தப்பத மான்மாவைக் கூடாமற் கருவிகளறியாதென்று மறுத்துக் கூறுகையால் அவனை மறுத்ததெனவறிக. இந்த மூன்றுவகைக்குமுதாரணம் சங்கற்பநிராகரணத்திலே கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது சிவஞான்மாக்களை யுணர்த்து முறைமையி லான்மாக்கள் பதினெட்டுக்கருவிகள் கூடியறியுமென்றுங் கருவிகளைக்கூடாம லான்மா வறியாதென்று மான்மாவைக்கூடாமற் கருவிகள்தாமாகவறியாதென்றுஞ்சொன்னமுறைமையை யறிவித்தது. (கரு)

அப்படி யான்மாவுங் கருவிகளுந் தம்மிற்கூடியறியுமாற்றாற் கத்தாவுணர்த்துவனென்பா னேனென்று வினவின மாணவகனைநோக்கி யருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

தனக்கெனவறிவிலாதான் றனிவையறிந்துசாரான்
றனக்கறிவிலாதவாயி றனறியாதுசாரா
தனக்கெனவறிவிலாதான் றத்துவவன்னரூபன்
றனக்கெனவறிவானாலிச் சகலமுநுகருந்தானே. (கசு)

தத்துவஞ்சடமுயிர் தானுவறியா
தொத்துணர்வதுபதி யுணர்வாலென்றது

வி - ம். தனக்கென வறிவிலாதான் றனிவையறிந்து சாரான். எ - து. ஒருத்தரறியாமற் றனக்கெனவோ ரறிவில்லாத வான்மா அதீதப்பட்டுக்கிடக்குமவதரத்துத் தானுகவிந்தத்தத்துவங்களைக்கூடி யறியமாட்டான்.—தனக்கறிவிலாதவாயி றனறியாதசாரா. எ - து. தனக்கென்ன வொருகாலத்திலு மறிவற்று ஜடமாயிருக்கப்பட்ட விந்திரியங்களதீதப்பட்டுக்கிடக்கிற வான்மாவையறிந்து கூடமாட்டாது. அப்படியானாலும்,— தனக்கெனவறிவிலாதான் றத்துவவன்னரூபன். எ - து. தனக்கென்னவோ ரறிவில்லாத வான்மா பஞ்சவன்னங்களையடுத்த படிகம்போலத் தத்துவங்களினது சொரூபமே தனக்கு வடிவாய்நிற்பன். இப்படிக் கூடினதின்றன்மையாய் நிற்கிறவனுகையாற் றற்சுதந்தரமுள்ளவன

ல்ல. ஆனுலிவைதன்னிற் கூடியறிந்தபடியெங்ஙனேயென்னி ல்,—தனக்கெனவறிவானுலிச்சகலமு நுகருந்தானே. எ-து. தனக்கொருவ ரறிவியாமற்றுனே சர்வத்தையு மறியத்தக்க சிவனுலே யான்மா சர்வத்தையு மறிந்து ஜீவியாநிற்பன் எ - று. ஆன்மா சர்வத்தையுமறிவனென்றது அந்தக்கரண ங்களோடுஞ் சோத்திராதிகளோடுங்கூடிச் சத்தாதிகளை ய றிவனென்றதென்வறிக.

நு - ம். ஆன்மாவைத் தனக்கென வறிவிலாதா னெ ன்றது அதீதப்பட்டுக் கிடக்கு மவதரத்துச் சரீரசம்பந்தனு யிருந்து மொன்றையுமறியாமற் கிடக்கையினுலெனவறிக. இதற்கு. பி - ம். சிவஞானபோதத்தில் "அவ்வுடலினின்று யிர்ப்ப வைம்பொறிகடாங்கிடப்பச், செவ்விதினவ்வுடலிற் சென்றடங்கி", எ - து. கண்டுகொள்க. இனிகருவிகளை ஜ டமென்றது மப்படியொன்றையு மறியாமற் கிடக்கையினு லெனவறிக.

இதனுற்சொல்லியது ஆன்மாவுக்குத்தனக்கெனவோர றிவில்லாதபடியாலே தானுகத்தத்துவங்களைக் கூடியறியமா ட்டாதென்றுங் கருவிகள்ஜடமாகையாலே யவைதானுக வா ன்மாவைக்கூடி யறியமாட்டாதென்று மிவையிரண்டையு ங்கூட்டிக் காரியப்படுத்துவது சிவனேயென்றும் வருமுறை மையை யறிவித்தது. (கஏ)

அப்படி யான்மாவையுங் கருவிகளையுஞ் சிவனே கூட்டி யறிவிப்பனென்கிறதென்ன சிவன் விகாரமறநிற்க வவனரு ளைக்கொண் டான்மாதானே சுட்டியறிந்து வருமென்கிற அ விகாரவாதியையும் அப்படி யல்லவென்று ஆன்மாவுக்சாக ச் சிவன்றுனே பிரபஞ்சத்தைச் சுட்டியறிந்து நிற்பனென்ற பரிணுமவாதியையு மறுத்தருளிச்செய்வா னெடுத்துக்கொண் டருளியது.

கண்டறிபுலன்கள்காணுங் கருத்தினலொருத்தன்
ஞானங், கொண்டுளமறியுமென்னிற் கொள்பவன்முதலி
யாகு, மண்டியவுணர்வுயிர்க்காமன்னிநின்றறியுமென்னி,
லுண்டிடவேண்டுவானுக்கொருவன்வேறுண்டலாமே. () 15

இப்பரிசன்றி யிகலுறுசமயிகள்
செப்பியமொழியைத் தப்பெனமறுத்தது.

வி - ம். கண்டறிபுலன்கள் காணுங்கருத்தினல். எ-து. கண்டுகேட்டுண்டுயிர்த் துற்றறியப்பட்ட விந்திரியங்களைக் கொண்டு ஆன்மா தனக்கேற்றவிடயங்களைக் கொள்ளுமுறைமைபோல,— ஒருத்தன்ஞானங் கொண்டுளமறியுமென்னில். எ - து. எங்குந்தானொருவனுமாய்நின்று சர்வான்மாக்களுக்கு முயிர்க்குயிராயுநின்று சேட்டிப்பிக்கிற சிவனுடைய ஞானத்தைக்கொண்டு ஆன்மாவறியுமென்று நீ சொல்லில்,—கொள்பவன்முதலியாகும். எ-து. என்றிங்ஙனமறிந்துகொள்ளுகிற வான்மாவே கத்தாவாவன். அப்படியல்ல வான்மாவுக்காகச் சிவனறிவனென்ற பரிணமவாதியை மருத் தருளிச்செய்கின்றது.— மண்டியவுணர்வுயிர்க்கா மன்னிநின்றறியுமென்னில். எ - து. சிவனுடைய மிகுத்த ஞானமான தான்மாவுக்காக நிலைபெற்றறியுமென்று நீசொல்லில்,—உண்டிடவேண்டுவானுக் கொருவன்வேறுண்டலாமே. எ - து. பசித்திருப்பானொருவனுக்காக வயலேயொருவனுண்டானென்னுந் தன்மைக்கொக்கும். எ - று. ஆதலாற் சிவனுடைய ஞானத்தைக்கொண் டான்மா முதன்மையாக நின்றறிவதுமில்லை யான்மாவுக்காகச் சிவனறிந்து நிற்பதுமில்லை யென்பதுகருத்து. என்னவே சிற்றறிவாயுள்ள வான்மாவைப் பேரறிவாயுள்ள சிவனறிவிக்க வந்தவறிவே யாதாரமாக வான்மாவறிவனென்ற தெனக்கொள்க. இதற்கு

பி-ம். திருவாசகத்தில் "அவனருளாலே யவன்றாள்வணங்கி." எ-ம். தேவாரத்தில் "காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே" எ-ம். வருமேதுக்களைக்கண்டுகொள்க.

உ-ம். ஆன்மாவிந்திரியங்களைக்கொண்டு விடயங்களையறிந்தாற்போலச் சிவன்விகாரமறநிற்க வவனருளைக்கொண் டான்மாமுதன்மையாக நின்றறிவனென்று அவிகாரவாதிசொன்னதற்கு. பி-ம். சங்கற்பநிராகரணத்தில் "நீர்நிழலனைய சீர்பெருங்கடவுள் - சலமிலனாகிச் சார்ந்தவர்க்கென்று-நலமிகநல்கு நாதனையணைந்து - பூழிவெம்மை பொருந்தாதுயர்ந்த - நீழல்வாழுநினைவினர்போலத்-திருவடிநீழல்சேர்ந்து-கருவுறுதுயரங் களைந்திருந்திடுமே" எ-து. கண்டுகொள்க. இது வத்தமாகாதென் றவனைமறுத்ததற்கு. பி-ம். சங்கற்ப நிராகரணத்தில் "பாதவமென்னுஞ் சேதனமின்மையி-னிளைந்தோர்வம்மி னென்பதுந்துன்பம் - விளைந்தோர்தம்மின் வெறுப்புமொன்றிலதே- பொடித்திடுகொப்புள் வெடித்திடுபாதம் - வெய்யபூழியினுள்ளுறவழுங்கி- யாற்றுதலின்றியாறியங்கினர்முன் - றேற்றிடுமென்று சொல்லவுமிலதா-லிவ்வகைக்கடவுட்கியம்புதறவறே." எ-து. கண்டுகொள்க. ஆன்மாவுக்குச் சிற்றறிவுதானுமில்லை யவனுக்காகச் சிவனறிவனென்று பரிணமவாதி சொன்னதற்கு. பி-ம். சங்கற்பநிராகரணத்தில் "அறிவோன்றானு மறிவிப்போனு-மறிவாயறிகின் றேனுமறிவுறு - மெய்ப்பொருடானும் வியந்திதுவெனப்படு - மப்பொருளியாவு மவனேயென்றும்" எ-து. கண்டுகொள்க. இதுவத்தமல்லவென் றவனைமறுத்ததற்கு பி-ம். சங்கற்பநிராகரணத்தில் "அறிவொன்றில்லோர்க்கிறையருளுதவல்-பிறிவறிவரிய செறியிருளிடத்தோ - ரந்தகர்காணவந்தோரொம்மை- நீவிருங்காணவேணுமென்றுங்-கெ

டுத்தோர்தீபங் கொடுத்ததையொக்கு - மிச்சையற்கிறைவன் கொச்சையனன்றே" எ - து. கண்டுகொள்க.

இதனாற்சொல்லியதுசிவன்விகாரமாகநிற்கச்சிவனுடைய ஞானத்தைக்கொண் டான்மாவறிவனென்ற வவிகாரவாதியையு மப்படியல்ல வான்மாவுக்காகச் சிவனறிகிறதொழிய வான்மாவுக்கென்ன வொருசிற்றறிவுதானு மில்லையென்கிற பரிணாம வாதியையு மறுத்தமுறைமையை யறிவித்தது. (௧௫)

இப்படியே சிவனறிவிக்கச்செய்தே யத்தச் சிவன்செய்விக்கிறதையறியாம லான்மாக்கள் நான்செய்தேன் பிறர்செய்தாரென்று சுட்டிக்கொண் டந்தச்சிவனையிழந்து நிற்கிறமுறைமை யெப்படியென்றுவினவின மாணவகனைநோக்கித் திருஷ்டாந்தமுகமாக வருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

இருணனியிரவிதான்வந் திரித்தலுமிரவிலெண்ணும்
பொருணிலைகண்டுமாந்தர் பொருந்திடுமாறுபோல
மருணிலையெங்குநீங்க மகிழ்ந்துயிர்தன்னுண்மன்னு
மருளையுமொழியஞாலத் தறிந்தவாறறியுமன்றே. (௧௬)

பருதியுதவியைப் பாரறியாபோ
லருளுதவியையுயி ரறியாதென்றது.

வி - ம். இருணனியிரவிதான்வந்திரித்தலும் எ - து. இருளினதுமிகுதியை யாதித்தன்வந்து நீக்கினவிடத்து,— இரவிலெண்ணும் பொருணிலைகண்டு மாந்தர் பொருந்திடுமாறுபோல எ - து. ஆன்மாக்களிராக்காலத்தில் விசாரித்தகாரியங்களெல்லா மவன்சந்நிதியிலே கண்டு தந்தாந்தொழில்களைச் செய்யுமிடத் திந்த வாதித்தன்காட்டவல்லோ நாங்கண்டோமென்று நினையாம லந்தவாதித்தனையிழந்து நின்று

தங்கள்சாமர்த்தியமாகக்கண்டு செய்துவருமாறுபோல,— மருணிலையெங்குநீங்க மகிழ்ந்துயிர்த்தன்னுண்மன்னு மருளை யுமொழிய. எ - து. ஆணவமலத்தின்மறைப் பெவ்விடத்தி னும்விட்டுநீங்க விருப்பத்துடனே யான்மாவினிடத்திலே நி லைபெற்றுப் பிரகாசிக்கிற வருளாலே யான்மாக்க ளறிந்துஜீ வித்து நிற்கவிந்த வருளாலொழிந் தறிந்து புசிக்கக்கூடாதெ ன்றறியாமற் றாந்தாஞ் சாமர்த்தியத்தினாலே யல்லோவறிந்து புசிக்கிறோமென்றுவிசாரித்திருக்கிறது எப்படியென்னில்,— ஞாலத்தறிந்தவா றறியுமன்றே. எ-து. முன்சொன்னபடியே பிரபஞ்சத்தி லான்மாக்க ளாதித்தன்சந்நிதியிலேகண்டுந் த ந்தாந்தொழில்கள் செய்யச்செயு மந்தவாதித்தனை யிழந்துநி ன்று தாங்கள்செய்தோமென்னு முறைமைபோலும். எ - று.

நூ - ம். மருணிலையெங்குநீங்கவென்றது ஆன்மாக்கள் புசிக்குமிடமெங்கு மவதாரந்தோறு மலநீங்குமென்றதெனவ றிக. இதற்கு பி - ம். "நிலைக்குணங்கணந்தோறு மவத்தை நீடுதல்." எ - து. கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது சர்வான்மாக்களுமாதித்தனாலே யி ருளானதுநீங்கத் தந்தாந்தொழில்கள்செய்யச்செயு மவனை யிழந்து தாங்கள்செய்தோமென்னுந் தன்மைபோலச் சிவனா லேயறிந்து சர்வமும் ஜீவிக்கச்செய்தேயு மந்தச்சிவனை யிழ ந்து தாங்கள்செய்தோமென்று நிற்கிறது மத்தன்மைக்கொ க்குமென்னு முறைமையை யறிவித்தது. (௧௬)

இந்தவத்தத்தை யின்னமு மொருவறுபோக திருஷ்டா ந்தமாக வருளிச்செய்கின்றது.

அறிந்திடுமனுதிவாயிலானவையவன்றனாலே
யறிந்திடுமென்றுமொன்றுமறிந்திடாவவைபோலியாவு

மறிந்திடுமறியுந்தன்மையறிந்திடாகன்மத்தொன்மை
யறிந்தவைநுகருமாறுமருளுவனமலன்றானே. (௧௭)

பொறியுங்கரணமும் போலுயிரருளா
லறியுந்தன்மை யறியாதென்றது.

வி - ம். அறிந்திடுமனாதி வாயிலானவை. எ - து. யாதா மொன்றை யறியத்தக்க வந்தக்கரணங்களு மிந்திரியங்களு மென்று சொல்லப்பட்ட கருவிகரணங்கள்,— அவன்றனாலேயறிந்திடும். எ - து. ஆன்மாவினாலே பிரபஞ்சவிடயத்தை யறியாநிற்கும். அப்படியறியச்செய்தேயும்,— என்று மொன்று மறிந்திடா. எ - து. எக்காலமு மான்மாவினாலேயல்லோ நாமறிகிறோமென் றந்தக்கரணங்களு மிந்திரியங்களுஞ் சிறிதுமறியமாட்டாது,— அவைபோல். எ - து. தனக்குக்காட்டாக வுள்ளவான்மாவை யந்தக்கருவிகரணகளறியாதிருந்தாற்போல,— யாவுமறிந்திடு மறியுந்தன்மை யறிந்திடா. எ - து. சர்வான்மாக்களுந் தங்களுக்கறியவேண்டியதெல்லாஞ் சிவனுடைய ஞானத்தாலே யறிந்து புசியாநிற்கச்செய்தேயு மந்தவருளாலேயல்லோ வறிந்து புசிக்கிறோமென் றறியமாட்டார்கள். ஆகையாலதுவுமன்றி,—கன்மத்தொன்மை யறிந்தவைநுகருமாறு மருளுவனமலன்றானே எ - து. பழையதாக வூட்டுகிற கன்மபலன்களையு மான்மாக்கள்தானே யறிந்து புசிக்கமாட்டார்கள். அதுகொண்டேயவையிற்றைப் புசிக்கிறமுறைமைகளையுங்கூட்டுவ னிமலனாகிய சிவன்றானே. எ - று.

று - ம். கன்மத்தொன்மை யறிந்தவைநுகருமாறு மருளுவனமலன்றானே. எ - து. சைவரத்தத்தைமறுத்ததென்னவுமாம். அஃதெங்ஙனேயென்னில் அவர்களுழாயுள்ளகன்மங்களைப்புசிக்குமிடத்து ஆன்மாக்கள்தானே யறிந்து புசிக்

குஞ் சிவன்கூட்டவேண்டுவதில்லை யென்கையாலெனவறிக. அஃதாவது சிவனுன்மாவையுங்கருவிகளையுங்கூட்டினுற் பின்னைத்தானேஜீவிக்குமென்பது கருத்து. இதற்கு பி - ம். சங்கற்ப நிராகரணத்தில் "அண்ணல்- கலைமுதலாகநிலவியகருவிகள்-விளக்கெனவுதவுந் துளக்கறப்பொருந்தி-யிருவினை நுகர்வில் வருவினைசெய்து - மாறிப்பிறந்து வருநெடுங்காலத்து." எ-து. கண்டுகொள்க.

இதனுற்சொல்லியது அந்தக்கரணங்களுமிந்திரியங்களுமான்மாவினுலே யறிந்துபுசிக்கச்செய்தேயு மந்தவான்மாவினுலேயல்லோ வறிகிறேமென் றறியாதாற்போல வான்மாக்களுஞ்சிவனுலேயறிந்துஜீவிக்கச்செய்தேயு மந்தச்சிவனையிழந்துநிற்கிறதுமப்படியென்னுமுறைமையையறிவித்தது (கஎ)

ஐந்தாஞ்சூத்திரமாகிய வுணர்த்துமுறைமை முற்றிற்று

இங்ஙன முணர்த்துமுறைமையிற் பிரபஞ்ச காரியப்பட்டுவரு மான்மாக்களுக்கு மலபாகம்வந்து முத்தியுமுண்டாமாகையா லிவ்வதிகாரத்துக்கு மேலாக வாருஞ்சூத்திரமுமேலதற்கோர்புறநடையாகிய வேழாஞ்சூத்திரமுமாகிய ஞானவாய்மையென்னு மதிகாரம்வைக்கப்பட்டது.

இவ்வதிகாரத்துக்குச் சூத்திரமிரண்டு நின்றமுறைமையெங்ஙனேயென்னில் "காட்டுங்கரணம்" என்றவிருத்தமொன்றும் ஆருஞ்சூத்திரமாகவும் "பன்னிறங்கவரும்." மாயைமாமாயை." என்றவிருத்தமிரண்டும் ஏழாஞ்சூத்திரமாகவும்நின்றதெனவறிக. இதற்குவழியேதென்னில் சிவஞானபோதத்தில் ஆருஞ்சூத்திரமாகிய "உணருருவசத்தெனி னுணராதின்மையி, னிருதிறனல்லது சிவசத்தாமென, விரண்டுவகையி னிசைக்குமன்னுலகே." எ - கு. சத்துமசத்தும் வணாசெய்து நிற்றலானு மீண்டறிவினு லறியப்பட்ட சுட்ட

சத்தாகையினாலும் "அறிதரும்பொருளோவீச னறிவுறுதவ னே." எ-ம். "உணராதபொருள்சத்தென்னி லொருபயனில் லை." எ-ம். சித்தியாரி லாறுஞ்சூத்திரத்தில் வருகையாலும் இவ்விரண்டு தன்மையுமின்றி வாக்குமனதீதகோசரமாயுள்ள து சத்தாயுள்ள சிவமென்கையாலும் இந்நூலினும் "காட்டி டுங்கரணமொன்று மில்லையேற்காணுறாதா, நாட்டியவிவற் றுல்ஞான நணுகவுமொண்ணு". எ-ம். சத்துமசத்தும் வரை செய்து நிற்றலால் இதுவு மாறுஞ்சூத்திரமாக நின்றதெனவ றிக. மற்றுள்ள விருத்தமிரண்டு மேலதற்கோர் புறனடை யாகிய ஏழாஞ்சூத்திரமாக நின்றமுறைமை யெங்ஙனேயெ ன்னில் சிவஞானபோதத்தில் ஏழாஞ்சூத்திரமாகிய "யாவை யுஞ்சூநியஞ் சத்தெதிராதலிற், சத்தேயறியாதசத்திலதறி யா, திருதிறனறிவுள திரண்டலாவான்மா." எ-கு. மெய்யி னிடத்துப் பொய்ப்பிரகாசமாய்நிற்றலான். எ-ம். உதாரண த்திலும் "அந்நியமிலாமையாற்கொன்றுணர்வின்று, மந்நிய மிலானசத்தைக் காண்குவனே-லந்நியமாய்க், காணவன் முன் கதிர்முன்னிருள்போல, மாணுவசத்தின்மை மற்று." எ-ம். வருங்கருத்தால் இந்நூலினும் "பன்னிறங்கவரும்." எ ன்றவிருத்தத்தில் "வளரொளிபோலவையந் தன்னகம்பயிலு நற்சிற், சடங்கடன்றன்மைதாவா." என்கையாலும். இனி அ சத்தினுக் குணர்வின்றென்னுங்கருத்தா லிவ்விரண்டையுமறி வதா யுபதேசியாநின்றவறி விரண்டின்பாலுமுளதா யுள்ள வதுவே யவ்வான்மாவா மென்றதால் இந்நூலினும் "மாயை மாமாயை." என்னும் விருத்தம். "இருதிறனறிவுள விரண்ட லாவான்மா." என்னுங்கருத்தைப்பற்றி "மருளெனிலிருளாய் நிற்கு மருளெனிலொளியாய்நிற்கும்." எ-ம். ஆன்மாவுக்குக் கூடினதின் றன்மைக் கருளிச்செய்கையால் இவையு மேழா ஞ் சூத்திரமாய் நின்றதெனவறிக.

மேல் "காட்டிடுங்கரணம்." என்னும் விருத்தத்துக்குத் தொந்தனையாவது இங்ஙன மிவ் வதிகாரத்தா லருளிச்செய்யப்பட்ட ஞானத்தினுண்மையை யடியேன் போதங்கொண்டறியப்படும்பொருளா யிருக்குமோ வறியப்படாத பொருளாயிருக்குமோ வென்று வினவின்மாணவகனை நோக்கி யருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

காட்டிடுங்கரணமொன்று மில்லையேற்காணொணாதா
நாட்டியவிவற்றான்ஞான நணுக்வுமொண்ணாமுன்ன
மீட்டியதவத்தினாலே யிறைபருளுருவாய்வந்து
கூட்டிடுமிவற்றைநீக்கிக் குரைகழல்குறுகுமாறே. (கஅ)

முற்பவத்துயிர்கள் முயன்றநற்றவத்தா
லற்புதன்றிருவுரு வாவனென்றது.

வி-ம். காட்டிடுங்கரணமொன்று மில்லையேற்காணொணாதாம். எ-து. உனக்குக் காட்டாகவுள்ள கருவிகளொன்று மில்லாத பொழுது பழையவறிவுதானு மில்லையாய்ச் சுத்தகேவலமே முத்தியென்கிற பாடாணவாதியத்தமுமாய்முடியும்.—நாட்டியவிவற்றான் ஞானநணுகவு மொண்ணா. எ-து. இங்ஙனஞ் சொல்லப்பட்ட தத்துவங்களோடுங் கூடியறிபுமென்னில் ஒருகாலத்து மருளிற்சென்று கிட்டவுமொண்ணாது. இது சங்கிராந்தவாதியத்தமுமாய் முடியும். இந்த விரண்டுவகையுமன்றி யந்தஞானத்தை யறிந்து பெறுமுறைமையெங்ஙனே யென்னில்,—முன்னமீட்டிய தவத்தினாலே யிறையருளுருவாய் வந்து கூட்டிடும். எ-து. ஆன்மாக்கள் முன்ஜநநங்களிற் செய்த சிவபுண்ணியத்தின் மிகுதியாலே தம்பிரானா ராசாரியமூர்த்தமாகத் திருமேனிகொண் டெழுந்தருளிவந்து கூட்டாநிற்கும்.—இவற்றைநீக்கிக் குரைகழல்

குறுகுமாறே. எ - து. இங்ஙன முன்சொன்ன கேவல சகல மிரண்டையுநீக்கி யாரவாரத்தை யுடைத்தாகிய வீரக்கழல்பொருந்தின ஸ்ரீபாதத்தைச் சென்று பொருந்துமுறைமையை. எ - று.

உ - ம். கருவிகளெல்லாங் கழன்ற கேவலம் பாடாணவாதியத்தமாமென்று மறுத்ததற்கு. பி-ம். சங்கற்ப நிராகரணத்தில். "காட்சியென்னக் காணுத்துயர- மாட்சியைமுத்தியெனவகுத்துணாக்கிற்- கரணுபாவ மரணங்கருமர-மேய்ந்தவர்முத்தி சேர்ந்தவரன்றே - யனையகதிக்கோர் முனைவரும் வேண்டா-தனிதருதுயர மெனுமிதுதிடமே - பாடாணத்திற் கூடாமுத்தி." எ - ம். சித்தியாரில். "கரணங்கள்கெடவிருக்கை முத்தியாமென்னிற் கதியாகுஞ்சினைமுட்டை கருமரத்தினுயிர்கள், மரணங்கொண்டிடவுறங்க மயங்கிமூர்ச்சிக்கவாயுத்தம்பனைபண்ண வல்விடத்தையடையச், சரணங்கள் புகுநிழற்போற் றனையடையுஞ்சமாதி தவிராதுமலமதுவும் பசுஞானமாகு, மரணங்களெரித்தவன்ற னடியையறிவிறந்தங் கறிந்திடீர் செறிந்ததுக ளகற்றிடீரே." எ - து. கண்டுகொள்க. இனி கருவிகளோடுங் கூடிநின்றறிகிற சகலஞ் சங்கிராந்தவர்தி யத்தமாமென்று மறுத்ததற்கு. பி - ம். சங்கற்ப நிராகரணத்தில். "நிறைந்துநீயாய் நின்றனையேனு - மறைந்தைம்புலனாய் வாராயென்றுங்- கரணமெல்லாங் கழன்றனையென்று - மரணமையர் தினப்புறத்தென்று-முன்னருட்டலைவர் பன்னினரெனவு - மினையவையொழிய வறிகுவதெவ்வா - றென்றனிற்கலிக் கொன்றியவின்பங்-கூறுதறகுமருட் பேறினையன்றே." எ - து. கண்டுகொள்க. அன்றியு மிந்தவிருத்த மாருஞ் சூத்திரமென்பதற்கு. பி - ம். சித்தியாரில். "அறிதரும்பொருளோவீச னறிவுறுதவனேவென்னி, லறிபொருளசித்தசத்தா மறியாததின்றுமெங்குஞ்,

செறிசிவமிரண்டுமின்றிச் சித்தொடுசத்தாய்நிற்கும்." எ-து. கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது கருவிகளெல்லா நீங்கின கேவலத்தினாலுங் கருவிகளைக்கொண்டறிகிற சகலத்தினாலுஞ் சிவசொரூபத்தை யறியப்படாதென்னு முறைமையும் ஆன்மாக்கள் முற்செய்த தவத்தினாலே கத்தா வாசாரியமூர்த்தமாக வெழுந்தருளி யந்தவுண்மைஞானத்தைக் கடாக்ஷித்தருளுவனென்னு முறைமையு மறிவித்தது. (கஅ)

இந்தவிருத்தத்தா லாறுஞ்சூத்திரமுடிந்தது.

இவ்வதிகாரத்துக்குமேல் வரும் விருத்தமிரண்டும் ஏழாஞ் சூத்திரத்திற் கருத்தாகையால் மேலதற்கோற் புறனடையாகிய ஏழாஞ்சூத்திரத்தில் வைத்துக்கொண் டருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

மேல்வரும்விருத்தத்துக்குத் தொந்தனையாவது அப்படியாசாரியமூர்த்தமாக வெழுந்தருளிவந்து கடாக்ஷித்தருளுகிற ஞானமேதென்றுவினவ மேலொரு திருஷ்டாந்தமுகமாக வருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

பன்னிறங்கவருந்தொன்மைப்படிகநீடொளியும்பன்மை
மன்னிலங்கியல்புந்தவளரொளிபோலவையந்
தன்னகம்பயிலுநற்சிற்சடங்கடன்றன்மைதாவா
நன்னலம்பெறநிறைந்தஞானமேஞானமென்பார். (கசு)

பன்னிறம்பளிங்கிற் பற்றிடப்பற்றுப்
பொன்னொளிபோலு மன்னருளென்றது

வி-ம். பன்னிறங்கவருந் தொன்மைப்படிகநீ டொளியும் எ-து. பலநிறங்களையுந் தன்னிடத்திலே கவர்ந்துகொள்ளுகி

ற வநாதியே யுடைத்தாகிய படிகத்தினது நிலைபெற்ற பிரகாசத்தினையும்,—பன்மைமன்னிலங் கியல்பும். எ-து. அந்தப்படிகத்திலே பொருந்தப்பட்ட பலவன்னங்களு மதிலே பிரதிபிம்பஞ்செய்து நிற்கிறமுறைமையும்,— தந்தவளரொளிபோல. எ - து. அவையிரண்டையுங் கூட்டிக் காரியப்படுத்துகிற வாதித்தப்பிரகாசம்போல,—வையந்தன்னகம் பயிலுநற்சித்து. எ - து. பிரபஞ்சமாகிய பாசங்களையு மான்மாக்களையுந் தன்னுடைய சேட்டையாலே கூட்டிக் காரியப்படுத்தி நிற்குந் திருவருள்ஞானமானது அப்படிக்கூட்டிக் காரியப்படுத்திநிற்கச்செய்தே முற்கூறிய வுபமானத்திற் படிகத்தையும் வன்னங்களையுங் கூட்டிக் காரியப்படுத்தின வாதித்தப்பிரகாசமும் அவையிற்றிற்றோய்வற்று நின்றாற்போல,— சடங்கடன்றன்மைதாவா நன்னலம்பெற நிறைந்த ஞானமேஞானமென்பார். எ - து. சடமாகிய பாசமயக்கந் தன்னைவந்து பொருந்தாதபடி தோய்வற நிற்கிற திருவருள் ஞானத்தையே மேலான வுண்மை ஞானமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். எ - று.

று - ம். பன்னிறங்கவருந் தொன்மைப்படிக நீடொளியும் பன்மைமன்னிலங்கியல்புந் தந்தவளரொளிபோல என்று படிகத்தையும் வன்னங்களையும் ஆதித்தப்பிரகாசத்தையுமுபமானமாகக் கூறியது படிக மான்மாவுக் குவமையெனவறிக. வன்னங்கள்பாசத்துக் குவமையெனவறிக. ஆதித்தப்பிரகாசந் திருவருள்ஞானத்துக் குவமையெனவறிக. இனி வையந்தன்னகம்பயிலும். எ - கு. வையமென்றது ஆன்மாக்களும் பாசங்களு மென்று பொருட் கூறியத்துக்குபி - ம். தத்துவவிளக்கத்தில் "கருமலிபாசமசேதனங் கட்டுண்பர் சேதனரொன், றிருமையில்வையமடங்குமென்றெண்ணுக." எ - து. கண்டுகொள்க. இனிநற்சித்து. எ-கு. இந்நூ

லிலே "இருளகற்றிப்பாத முற்றிடு நற்பசுவர்க்கம்." என்னுங் கருத்தைப்பற்றி யான்மாவிலே வைத்துக்கொண்டு மலபாகம்வந்த வான்மாவென்று பொருளுரைப்பாரு முளர். அப்படியானு மிந்தச் செய்யுள் ஞானவாய்மையென்னு மதிகாரத்தி லுள்ளதாகையா லந்தத்திருவருள்ஞானத்திலே கூட்டிப் பொருளுரைப்ப தொழிய வான்மஞானத்திற் கூட்டிப் பொருட்கூறுகை வழியல்லவெனவறிக. அன்றியும் நற்சித்து என்பதை திருவருள் ஞானமென்பதே பொருளாமென்பதற்கு. பி-ம். இந்நூலைப்பின்சென்றநூலாகிய திருநெறிவிளக்கத்திலே யிந்தச்செய்யுளுக் கெதிரடை விருத்தமாகிய "பற்றிய நிறங்களாகும் பளிங்கின தொளியும்பற்றி, நிற்றலையளிக்கும் வெய்யோ னீடொளியதுவும்போல, முற்றுலகதற்குச் சார்வாய் முயற்றினு முன்னீர்விண்போற், சிற்றினிற் சடங்க டோயா வென்பர்சிற் சத்திசேர்ந்தோர்."என்பதற்குப் பொருள் திருவருள்ஞானம் பிரபஞ்ச காரியப்படுத்தி நிற்கச்செய்தே தோய்வற்று நிற்குமென்பதற்குச் சமுத்திரத்திற் கூடின ஆகாயத்தைப்போலத் தோய்வறநிற்குமென்றுகூறுகையால் நற்சித்து என்றதைத் திருவருள் ஞானமென்பதே பொருளெனவறிக. அன்றியு மிச்செய்யுளிற் கருத்தாகிய குறள்வெண்பாவிலும் "பன்னிறம் பளிங்கிற் பற்றிடப்பற்றுப் பொன்னொளிபோலு மன்னருளென்றது." மிப்பொருட் பற்றி நின்றதெனவறிக. அல்லதூஉம் சதுர்த்த சங்கிரகத்திலே யிந்தச் செய்யுளுக்குச் சேர்த்த கிரந்தத்தினுங் கண்டுகொள்க. இனி நன்னலம்பெறநிறைந்த ஞானமேஞானம். எ-கு. சிவனுடைய நலத்தை மற்றொருவர் பெறவேண்டுகையா லிந்தச் செய்யுளுக்குச் சேர்த்த கிரந்தமு-மிப்பொருளைப்பற்றி நின்றதெனவறிக. அன்றியும் இதற்கு மலபாகம் வந்த வான்மாக்களுக்குத் திருவருள் ஞானமுண்டாம்படியென்று பொ

ருளானைப்பினுமாம். அதற்குவழியேதென்னில் முற்கூறிய வுபமானத்தில் ஆதித்தப்பிரகாசத்தினாலே படிகத்திலே வன்னங்கள் பிரதிபிம்பஞ்செய்யுமிடத் தந்தவாதித்தன்சாயவோடும்பொழு ததிலே பிரதிபிம்பஞ்செய்தும் அந்தவாதித்தன் மத்தியானமான பொழு தந்தப்படிகத்தி னுச்சியிலே நேர்பட்டவவதரத் தந்த வன்னங்கள்கூடியிருக்கச்சே யந்தப்படிகம் வன்னங்களிற் பற்றும லாதித்தப் பிரகாசத்தைக் கவர்ந்துகொண்டு நின்றாற்போல வந்தத்திருவருள் ஞானமு மான்மாக்களுக்கு மலபாகம் வாராத நாளெல்லாம் பிரபஞ்சத்திலே புசிப்பித்து மலபாகம்வந்த வவதரத் தந்தப்பிரபஞ்சப் பற்றறும்படி நேர்பட்டுத் தனது திருவருளைக் கடாக்ஷித்து நிற்கையா லப்படிச்சொன்னதெனவறிக. இதற்கு. பி-ம். திருவருட்பயனில். "தனக்குநிழலின்று மொளிசவருந்தம்பமெனக்கவரநில்லாதிருள்." எ - து. கண்டுகொள்க. அன்றியுமந்தத் திருவருண்ஞானம் ஆன்மாக்களைப் பெத்தமுத்தி யிரண்டினுங் காரியப்படுத்திநிற்கு மென்பதற்கு. பி - ம். இந்நூலில் "ஏற்றவிவை." என்னுஞ் செய்யுளிலே "போற்றவருமருளருளேயன்றிமற்றுப் புகன்றவையு மருளொழியப் புகலொணுதே." எ - து. கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது ஆதித்தப் பிரகாசமானது படிகத்தையும் வன்னபேதங்களையுங் கூட்டிக் காரியப்படுத்தி நிற்கச்செய்தே யந்தவன்னங்களிற் றோய்வற நின்றாற்போலச் சிவனுடைய திருவருண்ஞானமு மான்மாக்களையும் பாசங்களையுங் கூட்டிப் பிரபஞ்சகாரியப்படுத்தி நிற்கச்செய்தேயு மந்தப் பிரபஞ்சபாசங்களிற் றோய்வறநிற்கின்ற ஞானத்தையேயுண்மைஞானமென்னு முறைமையை யறிவித்தது.   (கக)

இங்ஙன மநாதியேகூடிநின்று காரியப்படுத்தி நிற்கிற வருளான திற்றைவனையும் பிரகாசியாம லிருந்ததேனென்று வினவின மாணவகனைநோக்கி யான்மாக்களுக் கருளுமலமு மநாதியே கூடிநிற்கிறதே முறைமையாகையால் அந்த மல மேலிட்டபொழு தருள்மறைந்துநின்று காரியப்படுத்துமெ ன்றும் அந்த மலம் பாகம்வந்தவவதரத் தந்தவருள் பிரகாசி த்து நிற்கிறது மியல்பாகையா லந்தமலநீங்கியே யருட்பிர காசிக்குமென்னுமுத்தர மேலருளிச்செய்வா னெடுத்துக்கொ ண்டருளியது.

மாயைமாமாயைமாயா வருமிருவினையின்வாய்மை
யாயவாருயிரின்மேவு மருளெனிலிருளாய்நிற்கு
மாயைமாமாயைமாயா வருமிருவினையின்வாய்மை
யாயவாருயிரின்மேவுமருளெனிலொளியாய்நிற்கும்.(௨0)

இருண்மலமொழிய வேனையவொளியா
யருளுடன்மருவு மவர்திறமுரைத்தது.

வி - ம். மாயைமாமாயை மாயாவருமிருவினையின் வா ய்மையாயவாருயிரின் மேவுமருளெனி லிருளாய்நிற்கும். எ - து. அசுத்தமாயையிற் றோற்றப்பட்ட தத்துவ முப்பத் தொன்றுஞ் சுத்தமாயையிற் றோற்றப்பட்ட தத்துவ மஞ்சு மாகத் தத்துவமுப்பத்தாறுங் கெடாதே வரப்பட்ட புண்ணி யபாவங்கண் மேன்மேல் வர்த்தியாநிற்கிற ஆன்மாவினிடத் திலே யாணவமலமாகிய வறியாமைமேலிட்டபொழு தான் மாவு மறியாமையாய் நிற்கும் — மாயைமாமாயை மாயாவ ருமிருவினையின் வாய்மையாய வாருயிரின்மேவு மருளெனி லொளியாய் நிற்கும். எ-து. அசுத்தமாயையிற் றோற்றப்பட் டதத்துவமுப்பத்தொன்றுஞ் சுத்தமாயையிற் றோற்றப்பட்ட

தத்துவமைந்தும், ஆகதத்தத்துவமுப்பத்தாறு மாய்ந்துபோவ தாகப் புண்ணியபாவங்கள் க்ஷயம்வந்த வான்மாவிடத்திலே யருள்மேலிட்டபொழுது ஆன்மாவு மறிவாய்ப்பிரகாசித்து நிற்கும். எ - று.

உ - ம். இந்தச்செய்யுளுக்கிட்ட தொந்தனையி லான்மாவை யருளுமலமு மநாதியேகூடிநிற்குமென்பதற்கு.பி-ம். சித்தியாரில் ஏழாஞ்சூத்திரத்தில் "சுத்தமெய்ஞ்ஞானமேனிச் சோதிபால்." என்றசெய்யுளின்முடிவிலே "சத்துளபோதே வேறுஞ்சதசத்துமசத்துமெல்லாம், வைத்திடுமநாதியாக வாரிநீர்லவணம்போல." எ - து. கண்டுகொள்க. இந்தச்செய்யுளின் முற்பதத்திலும் பிற்பதத்திலு மருளொளிலிருளாய் நிற்கும் அருளொளியிலொளியாய்நிற்கும் என்றது ஆன்மாவருளோடுமலத்தொடுங்கூடி யதுவதுவாய்நிற்கு மென்றது. இதற்கு. பி - ம். சிவஞானபோதத்தில் ஏழாஞ்சூத்திரமாகிய "யாவையுஞ்சூநியம்." என்றசெய்யுளின் பிற்பதத்தில் "இருதிறனறிவுளதிரண்டலாவான்மா." எ - து. கண்டுகொள்க. இனி யருளானது ஆன்மாவோடு மநாதியே கூடியிருக்கச்செய்தே மலபாகம்வாராதவான்மாக்களுக்கு அந்தவருள் கூடிநிற்கச்செய்தேயும் பிரகாசியாதென்று பொருட்கூறியதற்கு. பி - ம். திருவருட்பயனில் "ஊமன்கண்போல வொளியுமிகவிருளே, யாமன்கண்காணுதவை." எ-து. கண்டுகொள்க. ஊமனென்றது கூகையெனவறிக. ஒளியுமிகவிருளேயென்றது கூகைக்குப்பகற்காலத்திற் கண்தெரியாதென்பதுகருத்து. திருவள்ளுவதேவரும்."பகல்வெல்லுங்கூகையைக்காக்கை." என்றது மிப்பொருட்பற்றியெனவறிக. அன்றியும் சித்தியாரிலேயும் "இங்குத்தானந்தகருக் கிரவியிருளாகு மீசனருட்கண்ணிலார்க் கொளியாயேயிருளாம்." என்பது மிப்பொருட்பற்றியெனவறிக. இனி யிந்தச்செய்யுள் மா

யைமாமாயையென்று மிதித்ததைமிதித்து ஒருசொல்லையிரு காற்சொல்லியதேதென்னில் "கூறியபொருளைக்கூறலுமாகும் வேறொருபொருளைவிளைக்குமாகில்." என்னும்விதியைப்பற்றியெனவறிக. வேறொருபொருளைவிளைத்தலாவது முற்பதத்துக்கு மாயாவென்றது மாயாகன்மங்கள் க்ஷயம்வாராத வான்மாவென்றதெனவறிக. பிற்பதத்துக்குமாயாவென்றது மாயாகன்மங்கள் க்ஷயம்வந்த வான்மாவென்ற தெனவறிக. அப்படியொருசொல் லிரண்டாவது யெங்ஙனேயென்னில் வாராப்போனுனென்றசொல் வந்துபோனதற்கும் வாராமற்போனதற்கு நின்றாற்போலவெனவறிக.

இதனாற்சொல்லியது ஆன்மாக்கள் மாயாகன்மங்கள் க்ஷயம்வாராதநாள்களெல்லா மலத்தோடுங்கூடியறியாமையாய் நிற்பார்களென்றும் மாயாகன்மங்கள் க்ஷயம்வந்தநாளுக் கருளோடுங்கூடிப் பிரகாசமாய்நிற்பார்களென்னுமுறைமையு மறிவித்தது. (௨௦)

ஏழாஞ்சூத்திரமாகிய ஞானவாய்மைமுற்றிற்று.

முன்னதிகாரத்திலருளிச்செய்த ஞானத்தினுண்மை பயன்படுமிடத்து ஆன்மதரிசனமென்றும் ஆன்மசுத்தியென்றும் ஆன்மலாபமென்றுந் தெரித்துப்பயன்படவேண்டுகையால் மேலதன்பயனென்னுமதிகாரம் வைக்கப்பட்டதெனவறிக.

அப்படி யதிகாரமொன்றாயிருக்க மூன்றுவகையாகவேண்டுவானேனென்னில் இவ்வதிகாரத்தில் மூன்றுசூத்திரமடங்கிவருகையா லப்படி வைக்கப்பட்ட தெனவறிக. அஃதெங்ஙனேயென்னில் ஆன்மதரிசன மெட்டாஞ்சூத்திரமாகவும் ஆன்மசுத்தி யொன்பதாஞ்சூத்திரமாகவும் ஆன்மலாபம் பத்தாஞ்சூத்திரமாகவும் நிற்கையா லப்படிச்சொன்னதெனவறிக. அதற்கு வழியேதென்னில் சிவஞானபோதத்தில் எ

ட்டாஞ்சூத்திர மான்மதரிசனமாகவும் ஒன்பதாஞ்சூத்திர மான்மசுத்தியாகவும் பத்தாஞ்சூத்திர மான்மலாபமாகவும் வருகையா லிதுவுமப்படி வைக்கப்பட்டதெனவறிக. அஃ தெங்ஙனேயென்னில் "தேசுறமருவும்." என்றவிருத்தந்தொடங்கி "எல்லையில் பிறவி." என்ற விருத்தமுடிவாகியசெய்யுட் பத்தொன்பதினுள்ளுந். "தேசுறமருவும்." என்ற விருத்தமொன்றும் இவ்வதிகாரங்கள் மூன்றுக்கும் வகுப்பாகவருளிச்செய்து மேல் "தன்னறிவதனால்." என்ற விருத்தந்தொடங்கி "சுத்தமாஞ்சத்தி."என்ற விருத்தமுடிவாகிய செய்யுள் நாலும் ஆன்மதரிசனமாகவும் "புகலருஞ்சத்தர்" என்ற விருத்தந்தொடங்கி "அடைபவர்சிவமேயாகும்." என்றவிருத்தமுடிவாகிய செய்யுள்நாலும் ஆன்மசுத்தியாகவும் "பொற்புறு கருவி." என்றவிருத்தந்தொடங்கி "எல்லையில்பிறவி." என்ற விருத்தமுடிவாகிய செய்யுட்பத்தும் ஆன்மலாபமாகவும் வருகையால் சிவஞானபோதத்தில் "ஐம்புலவேடரி னயர்ந்தனை வளர்ந்தெனத், தம்முதல்குருவுமாய்த் தவத்தினிலுணர்த்தவிட், டன்னியமின்மையி னரன்கழல்செலுமே." என்றஎட்டாஞ்சூத்திரத்தின்கருத்து இவ்வான்மாக்களுக்கு ஞானத்தினை யுணர்த்துமுறைமையினை யுணர்த்துதனுதலிற்று என்பதனால் இந்நூலினும் ஆன்மதரிசனத்துக்கு வகுத்தசெய்யுட்களில் "தன்னறிவதனால்." என்றவிருத்தத்தில் "தன்னையுந்தானே காணுந் தானதுவாகிநின்றே." என்பதனால் ஆன்மதரிசனமென்னுமதிகாரம் எட்டாஞ்சூத்திர மாகுமென்றதெனவறிக. மேலொன்பதாஞ்சூத்திரத்துக்கும்சிவஞானபோதத்தில் "ஊனக்கண்பாச முணராப்பதியை, ஞானக்கண்ணினிற் சிந்தைநாடி, யுராத்துனைத்தேர்த்தெனப் பாசமொருவத், தண்ணிழலாம்பதிவிதி, யெண்ணுமஞ்செழுத்தே." என்னுஞ்சூத்திரத்தின்கருத்து ஆன்மசுத்திபண்ணுமா றுணர்த்துதனுதலிற்று என்

பதனால் இந்நூலினும் ஆன்மசுத்திக்குவகுத்த செய்யுட்களில் "இந்நிலை," என்னும்விருத்தத்தில் "கரணமாகாவகையதிலறிவடங்கி மன்னிடவியாபியாய வான்பயன்றேன்றுமன்றே." என்பதனால் ஆன்மசுத்தியென்னுமதிகாரம் ஒன்பதாஞ்சூத்திரமாக நின்றதெனவறிக. மேற்பத்தாஞ்சூத்திரத்துக்கும் சிவஞானபோதத்தில் "அவனேதானேயாகியவந்நெறி, யேகனுகியிறைபணிநிற்க, மலமாயைதன்னொடு வல்வினையின்றே." என்னுஞ்சூத்திரத்தின்கருத்து யானெனதென்னுஞ் செருக்கற்றவனது ஸ்ரீபாதத்தையணையுமென்பதனால் இந்நூலினும் ஆன்மலாபத்துக்கு வகுத்தசெய்யுட்களில் "தோன்றிநின்ற சிற்பரமதனுலுள்ளச் செயலறுத்திடவுதிக்குந்தற்பரம்." எ-ம். "மற்றதும்பகல்விளக்கின் மாய்ந்திடவருவதுண்டேல் பெற்றிடுமதனை." எ-ம். "பாவிக்கவேண்டாவாண்ட பரனருள்பற்றினேர்க்கே." எ-ம். தற்போதங்கெடநிற்பதுவே கருத்தாகையா லிதுவும் பத்தாஞ்சூத்திரமாக நின்றதெனவறிக. அப்படியானல் முன்னேமுகவுரையில் சூத்திரவகுப்பிலே இதற்குப்பின்னேவருகிற வைந்தெழுத்தருணிலையை ஒன்பதாஞ்சூத்திரத்திற் கூட்டினதேதென்னில் அஃதாவது சிவஞானபோதத்தில் ஒன்பதாஞ்சூத்திரமாகிய "ஊனக்கண்பாசமுணராப்பதியை." என்னுஞ்சூத்தரத்தின் பிறபக்கத்திலே "பாசமொருவத்தண்ணிழலாம் பதிவிதியெண்ணுமஞ்செழுத்தே" என்பதினுலும் சித்தியாரிலும் ஒன்பதாஞ்சூத்திரமாகிய "பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும்" என்ற செய்யுளிலேயும் "ஓசைதருமஞ்செழுத்தை விதிப்படியுச்சரிக்க" என்பதினுலும் அந்தப் பஞ்சாக்கரத்தையும் ஒன்பதாஞ் சூத்திரத்திலே கூட்டி வைக்கப்பட்டதெனவறிக. அப்படி யொன்பதாஞ் சூத்திரத்தின் பகுதியாயிருக்க இந்நூலிலே பத்தாஞ் சூத்திரமாகிய வான்மலாபத்துக்குப் பின்பாகப்பஞ்சாக்கரமாகிய

வைந்தெழுத்தருணிலை வைக்கவேண்டுவா னேனென்னில் அந்தப்பத்தாஞ் சூத்திரமாகிய வான்மலாபமென்பதனில் சிவனோடுங்கூடிப் பிறிவறநின்று சிவாநுபவத்தை யநுபவிக்கப்பட்ட சிவஞானிக ளந்தநிலைகுலைந்தவவதரத்தும் வேறு பிரபஞ்சவாதனையிற் கூடாதபடி யதுவு மோருபாயநிட்டையாகக்கொண்டு மீளவும் பழையவான்மசுத்தியில் நிற்கவேண்டுகையாற் பத்தாஞ்சூத்திரத்துக்கு மேலாகவும் ஒன்பதாஞ்சூத்திரதின் பகுதியாகிய வைந்தெழுத்தருணிலையை வைக்கப்பட்டதெனவறிக. இந்தப்பஞ்சாக்கர தரிசனத்தை முற்கூறப்பட்ட நூல்களைப்போல வொன்பதாஞ்சூத்திரத்தினோடுங் கூட்டிவையாமல் இந்நூலில் வேறேபகுத்துவைக்கைக்கு விதியேதென்னில் இந்தச்சிவப்பிரகாசஞ் சார்புநூலாகையால் "இருவர்நூற்கு மொருசிறைதொடங்கித் திரிபுவேறுடையதுபுடைநூலாகும்" என்னுமிலக்கணவிதியைப்பற்றி அந்நூல்களினொழுங்கில் வாராமல் முற்பிற்பாடாக வைக்கப்பட்டதெனவறிக. ஆகையால் முற்கூறிய "அதன்பயன்" என்ற செய்யுண்முதலிய பத்தொன்பது மிந்தப் பஞ்சாக்கரதரிசனத்தின் பகுதியான விருத்தமூன்றும் ஆகச்செய்யுளிருபத்திரண்டும் ஆன்மதரிசனமாகிய எட்டாஞ் சூத்திரமும் ஆன்மசுத்தியாகிய ஒன்பதாஞ்சூத்திரமும் ஆன்மலாபமாகிய பத்தாஞ் சூத்திரமுமாக நின்றதெனவறிக.

இங்ஙனம் வகுத்தருளிச்செய்யப்பட்ட எட்டாஞ்சூத்திரமாகிய ஆன்மதரிசனத்துக்கும் ஒன்பதாஞ் சூத்திரமாகியஆன்மசுத்திக்கும் பத்தாஞ்சூத்திரமாகிய ஆன்மலாபத்துக்கு மதிகாரவகுப்பருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

தேசுறமருவுமான்ம தரிசனமான்மசுத்தி
யாசிலாவான்மலாப மாகமூன்ருகுமூன்றும்

பாசமதகலஞானம் பற்றறான்பணியைநீத்த
லேசினேயத்தழுந்த லெனுமிவற்றடங்குமன்றே. (௨௧)

உயர்தவஞ்செய்தவர்க் குற்றமூவகையாம்
பயனுறும்வழியைப் பாரித்துரைத்தது.

வி-ம். தேசுறமருவு மான்மதரிசன மான்மசுத்தியாசிலா வான்மலாப மாகமூன்றாகும். எ-து. விளக்கமுண்டாகப் பொருந்தப்பட்ட ஆன்மாவைத்தரிசிக்கை யென்றும் ஆன்மாவைச்சுத்திபண்ணுகையென்றும் குற்றமில்லாத வான்மாவினுடைய பிரயோசன மென்றும் ஆகமூன்றுவகையாம்,— மூன்றும். எ-து. இந்தமூன்றுவகையுமேதென்னில்,— பாசமதகலஞானம்பற்றல். எ-து. பாசங்களாகிய தேகாதிபிரபஞ்சங்களாயுள்ளவை நீங்கும்படி யிவையிற்றைக் கூடின வருளோடும்பொருந்துகை யான்மதரிசனமாம்.—தான்பணியைநீத்தல். எ-து. தன்னுடைய விச்சாஞானக்கிரியைகளைவிட் டந்தவருளிலேமூழ்குகிற தற்போதம் ஜீவியாமனிற்கிறதுதானே யான்மசுத்தியாம்.— ஏசினேயத்தழுந்தல். எ-து. குற்றமில்லாத சிவரூபமாகிய ஞேயத்திலேயழுந்துகிறதுதானே யான்மாவினுடைய விலாபமாவது.— எனுமிவற்றடங்குமன்றே. எ-து. என்றிங்ஙனஞ்சொல்லப்பட்ட ஞாதுரு ஞானஞேயமென்னு மூன்றினுள்ளும்டங்கும். எ-று.

௫-ம். ஆன்மதரிசனமாவது தனக்கறிவாகக் கூடிநின்று காரியப்படுத்துகிற பிருதிவிமுதலானதத்துவங்களை நாமல்லவென்றுகழித்து அந்தவருளேதனுவாகப்பொருந்தி யந்தத்தத்துவங்களையுந் தன்னையு மந்தவருளையுந் தரிசித்துநின்றவிடமெனவறிக. அன்றியுமான்மசுத்தியென்றது அந்தவருள்காட்டத் தான்காண்கிறகாட்சியையிழந் தந்தவருளே தலைமறைவாக நின்றவிடமெனவறிக. அன்றியு மான்மலா

பமென்றது அந்தவருள்மேலீடாக நிற்கச்செய்தே யவ்விடத்திலே யோரின்பம் விளைதலெனவறிக. என்றிங்ஙனமூன்றுவகையாகச் சொன்னதற்கு. பி - ம் உருப்சொரூபவகவல் "மன்னருள்தன்னின் மன்னுயிர்மனனாத- லின்னுயிர்த்தரிசன மென்பர்நல்லோர் - சுத்திதன்போதந் தோன்றாதிருக்கை- யத்தகுமிலாப நேயத்தழுந்தல்." எ-து. கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது அந்தவுண்மைஞானத்தை யான்மாக்கள்பெறுமிடத்து ஆன்மதரிசனமென்றும் ஆன்மசுத்தியென்றும் ஆன்பலாபமென்றும் மூன்றுவகையாகநின்று பெறுமென்னு முறைமையையறிவித்தது. (௨௧)

இங்ஙனஞ்சொல்லப்பட்ட மூன்றுபகுதியினுள்ளு மெட்டாஞ்சூத்திரமாகிய ஆன்மதரிசனத்தை முந்தவருளிச்செய்வானெடுத்துக்கொண்டருளியது.

தன்னறிவதனாலேதுந் தனக்கறிவில்லையேனுந்
தன்னறிவாகவெல்லாந் தனித்தனிப்பயனருந்துந்
தன்னறிவறியுந்தன்மை தன்னாலேதனையறிந்தாற்
றன்னையுந்தானேகாணுந் தானதுவாகிநின்றே. (௨௨)

பவமாறாவிதன் பரிசினையுணர்ந்துபின்
சிவமாய்நிற்க வுயிர்தெரியுமென்றது.

வி - ம். தன்னறிவதனாலேதுந்தனக்கறிவில்லையேனும். எ-து. ஆன்மாவானதுக்குத் தன்னுடைய வறிவாலே யாதாமொன்றையறிகைக்குத் தனக்கென்ன வோரறிவுமில்லையாமாயினும்,— தன்னறிவாகவெல்லாந் தனித்தனிப்பயனருந்தும். எ - து. தானிந்திரியங்களுடனே கூடிநின்றறிகிறவறிவுகளெல்லாத்தையுஞ் சிவன்கூட்டியறிவிக்கிறதென் றறியாம

ற் றன்ஞலேயறிந்ததாக வொவ்வொருவிடயங்களிலே யொ ற்றித்துநின் றநுபவியாநிற்கும்,— தன்னறிவறியுந்தன்மை. எ - து. இப்படியறிகிறது ஆன்மபோதத்தின்முறைமையாம். இங்ஙனமாறுபாடாக வறிகிறமுமையைவிட்டு,— தன்ஞலே தனையறிந்தால். எ - து. அந்தச்சிவனுடை ஞானத்தாலே சி வனையறிந்தால்,—தன்னையுந்தானே காணும். எ - து. ஆன்மா வினுடைய செயலறுதியையு மந்தவான்மாதன்ஞலே காண வும்படும்' அஃதெங்ஙனேயென்னில்,— தானதுவாகிநின்றே. எ - து. ஆன்மாவான தந்தச்சிவஞானத்தோடுங் கூடிநின்ற வவதரத்து. எ - று. தன்னையுமென்ற விழித்துரைகொண்டே யான்மா தற்சுதந்தரமாகவறியமாட்டானென்பது கருத்தெ னவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில், "அறிந்திடுமான்மா வொன்றை மற்ருென்ருலறிதலானு, மறிந்தவைமறத்தலானு மறிவிக்கவறிதலானு, மறிந்திடுந்தன்னையுந்தா னறியாமையா னுந்தானே, யறிந்திடுமறிவனன்று மறிவிக்கவறிவனன்றே." எ - து. கண்டுகொள்க.

இதனுற்சொல்லியது ஆன்மாபெத்தத்தன்மையிலேநின் றும் பிரபஞ்சத்தோடுங்கூடி ஜீவிக்குமிடத்துத் தனக்கென வொருசெயலில்லாம லிருக்கச்செய்தேயுந் தன்செயலாகச் செய்கிருேமென்று நின்றமுறைமையு முத்தித்தன்மையிலே சிவனுடையவருளாலே தற்றெரிசனம்வந்தவிடத் தந்தவரு ளோடுங் கூடியறிகிறதொழிந்து நமக்கென்ருெருசெயலில் லையென்று தன்னுடையசெயலறுதியை யறிந்தமுறைமையு ம றிவித்தது. (௨௨)

இன்னமு மிந்தமூவகையத்தத்தைத் தெளியவருளிச்செ ய்யவேணுமென்றுவினவ மேலருளிச்செய்வா னெடுத்துக் கொண்டருளியது.

தத்துவமானவற்றின் றன்மைகளுணருங்காலை
யுய்த்தறிந்திடவுதிப்ப தொளிவளர்ஞானமாகு
மத்தன்மையறியுமாறு மகன்றிடவதுவாயான்மா
சுத்தமாஞ்சுத்தஞானத்தொகுமுதரேன்றுமன்றே(௨௩)

அதனைநிரூபித் தந்தமூவகைப்பயன்
விதமுடனிதுவென விளங்கவுரைத்தது.

வி - ம். தத்துவமானவற்றின் றன்மைகளுணருங்காலை யுய்த்தறிந்திடவுதிப்ப தொளிவளர்ஞானமாகும். எ - து. தத்துவங்களினுடைய வுருப சொருப சுபாவத்தை யறியுமிடத் தவையிற்றை யந்நியமாக வறிந்திடத் தோன்றுவது பிரகாசத்தினை மிகுதியாகவுடைய வருளென்றே சொல்லப் படுவது.—அத்தன்மை யறியுமாறு மகன்றிட. எ - து. அப்படியந்த வருள்காட்டக் காண்கிறகாட்சியை நீங்கி,—அதுவாயான்மா சுத்தமாம். எ - து. அந்தவருளோடுங்கூடி யதுதானாய்த் தற்போதம் ஜீவியாமனிற்கவே யான்மசுத்தியாம். அப்படிநிற்கவே,— சுத்தஞானத் தொகுமுதரேன்று மன்றே. எ - து. அப்பொழுதே நின்மலமாகிய வருளுக்கு முதலாயுள்ள சிவமாகிய ஞேயந்தோன்றும். எ - று.

ற - ம். தத்துவங்களி னுண்மையை யுணரவென்றது அவையிற்றை ஜடமென்று காண்கை யெனவறிக. இனி யுய்த்தறிந்திடவென்றது தேகாதி பிரபஞ்சங்களை நீங்குகையெனவறிக. அத்தன்மை யறியுமாறு மகன்றிட வென்றது தன்னுடைய போதத்தின் மேலீடாகிய விச்சாஞானக்கிரியைகளைவிடுகையெனவறிக.

இதனாற்சொல்லியது ஆன்மாவானது தத்துவங்களை ஜடமென்று கண்டுநீங்கி யருளேதனுவாய் நின்றவிட மான்மதரிசன மென்றும் அப்படி நிற்கச்செய்தே யந்தவருளேமே

வீடாகத் தற்போதம் ஜீவியாமனின்றவிட மான்மசுத்தி யென்றும் அப்படிநிற்கச்செய்தே யந்தஞானத்துக்கு முதலாகிய சிவமான ஞேயந் தோன்றுகிறதே யான்மலாபமென்றும் வருமுறைமையை யறிவித்தது. (உ௩)

அப்படியிருந்த ஞானத்துக்கு முதலா யொருஞேயந் தோன்றுமென்கிற தென்ன விந்தஞானமாகிய வருளோடுங்கூடி யந்தவருளேதானாய் நிற்கிறதல்லோ பயனென்கிற சங்கிராந்த வாதியை மறுத்து அந்தவருளையுந்தவிர வேறே ஞேயமாகிய சிவமுண்டென்று மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

உறைதருமுணர்வுமன்றி யதன்முதலுள்ளதென்றிங்
கறைவதேனென்னிலண்ண லருளெனுமதுவேயன்றி
நிறையொளிமுதலதன்றி நின்றிடாநிமலனுகு
மிறையவன்முதலவன்ற னிலங்கருட்சத்தியாமே. (உச)

அன்னபேரொளிக் காதவன்முதலாந்
தன்மைபோலருட்கரன் றன்முதலென்றது.

வி-ம். உறைதரு முணர்வுமன்றி யதன்முத லுள்ளதென்றிங் கறைவதே னென்னில். எ-து. ஆன்மாவினிடத்திலே பொருந்திநிற்கிற வருளாகியஞானமொழிய வதற்கு முதலாக வொருஞேய முண்டென்று சொல்லுவானேனென்று நீகேட்கில்,—அண்ணலருளெனும். எ-து.அதுதம்பிரானாருளே யென்று சிவாகமங்கள் சொல்லும். அப்படி அந்த வருளென்றுஞ் சிவமென்று மிரண்டா யிருக்குமோவெ ன்னில்,—அதுவேயன்றி. எ-து. அந்தச்சிவத்தை யொழிந்து அருள்தனித் தொருமுதலாய் நில்லாது. அதென்போல வென்னில்.—நிறையொளி முதலதன்றி நின்றிடா. எ-து. மிக்க பிரகாசமானது அதற்கு முதலாகிய வாதித்தனையன்றி

த் தனித்துண்டாகாது. அதுபோல,—நிமலனுகு மிறையவன் முதல். எ-து. நின்மலசொரூபமாகிய சிவ னந்தஞான த்துக்கு முதலாகிய காரணமாய் நிற்பன். அப்படியந்த வரு ளுஞ் சிவமும் பிறிவற்று நிற்குமாகி லந்தவருளே யமை யாதோவென்று நீகேட்கில் அப்படிப்பிறிவற்று நின்றுலு மா ன்மாக்கள் பயன்படுமிடத் தந்தவருள் கொண்டே போதா து. அதேனென்னில்,— அவன்ற னிலங்கருட் சத்தியாமே எ-து. அப்படியந்தச் சிவனிடத்து விளங்காநின்ற வரு ளானது அந்தச்சிவனுக்குச் சத்தியாம். எ-று. என்னவே சத்தியாமே யென்ற விழித்துரையால் இந்தச்சத்தியால் ஆ ன்மாக்களுக் கின்பம் விளையாதென்பது கருத்து. அதேனெ ன்னில் இந்தச்சத்தியும் பெண் அந்தச்சிவனேடுங்கூடி யான் மாவோ ரின்பத்தை யநுபவிக்க வேண்டுகையா லான்மாவு ம் பெண் ஆகையா லிரண்டுபெண்கள் தம்மிற்கூடி யநுபவி த்தா லின்பம்விளையாததுபோலவெனவறிக. இதற்கு. பி-ம். திருவருட் பயனில். "இருவர்மடந்தயருக் கென்பயனின்புண் டா, மொருவனொருத்தி யுறின்." எ-து கண்டுகொள்க. ஆ ன்மாவையும் பெண்ணென்பதற்கு. பி-ம். திருப்பாட்டில். "தன்னைமறந்தா டன்னுமங்கெட்டா டலைப்பட்டா ணங்கை தலைவன்றளே" என்னுமேதுக்களைக் கண்டுகொள்க.

௨-ம். அந்தவருளைப்பெற்ற வான்மாக்களு மந்த வ ருளோடுங் கூடி யுப்பளத்தைப்பொருந்தின புல்லும் வை க்கோலும் உப்பாந்தன்மைபோல வந்த வருளே சொருப மாய் நிற்கிறதொழிய வதற்குமேலாக வேறொரு ஞேயமெ ன்ப தொன்றில்லையென்று சங்கிராந்தவாதி சொன்னதற்கு. பி-ம். சங்கற்பநிராகரணத்தில் "ஏற்றேர் முகவொளி தோற்றுங்கலனெனத் - தலைவனதருளுயிர் நிலவிடுநிலவக்- காட்டத்தங்கி மாட்டத்தங்கிய - தன்மையுமளத்தபுல்வையி

னிப்பும்- போன்றதுவாகித் தோன்றிடுமெதனூற்- பசுகரணங்கள் சிவகரணங்க- ளாகமாறியறிவுறு- மேகமாமுயிர்யானெனுதின்றே." எ - து. கண்டுகொள்க. இது வத்தமல்லவென்றவனைமறுத்ததற்கு. பி - ம். "நோக்குமுகவொளி நீக்காதானெனக்- கவருந்தன்மை முகிரம்போலக் - கொடுத்ததுகோடற் கடுத்ததுண்டன்றே- காட்டத்தங்கி கூட்டக்கூட்டு- மிந்தனத்தியற்கை வெந்தழருங்கா - வுப்பளத்தடுத்த புற்பலாலங்கள்-சடத்தவேனுங் கொடுத்ததுகொள்ளுந்-தன்மையுண்டுனக்கின்மையதன்றே." எ - து. கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது ஆன்மாக்கள் முத்தியைப்பெறுமிடத்து அருளாகிய ஞானத்தோடுங் கூடுகிறதொழியச் சிவமாகிய ஞேயமென்பதொன்றில்லை யென்ற சங்கிராந்தவாதியை மறுத்து அருள் சத்தியாகையாலே யந்தச்சிவத்தோடுங்கூடியே யான்மநாயகி யின்பமநுபவிக்கையால் சிவம் வேணுமென்னு முறைமையை யறிவித்தது. (உச)

அப்படியானு லந்தச்சத்தியாற் பயனில்லையோ வென்று மீளவுமவன் வினவ அப்படி யநுபவத்துக்குப் பயனில்லை யென்னலாமொழிய வான்மாக்களுக் குண்டாகிய வநாதிமலங்களைநீக்கி யந்தச்சிவத்தோடுங் கூட்டுகைக் கந்தச்சத்தியே வேணுமென்னு முறைமையை யொருதிருஷ்டாந்த முகமாக வருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

சுத்தமாஞ்சத்திஞானச் சுடராகுஞ்சிவமொழிந்தச்
சத்திதானின்றுமுன்னைத் தகவிலாமலங்கள்வாட்டி
யத்தனையருளுமெங்கு மடைந்திடுமிருளகற்றி
வைத்திடுமிரவிகாட்டும் வளரொளிபோன்மகிழ்ந்தே. (

ஒத்துறுபருதியை யொளிதருவதுபோற்
சத்தியும்பிரானைத் தருமென்றுரைத்தது.

வி - ம். சுத்தமாஞ் சத்திஞானச் சுடராகும்- எ - து நின்மல சொரூபமா யிருக்கப்பட்ட சத்தியானது ஞானப்பி ரகாசமாயிருக்கும். அப்படி இருக்கவும் சிவம் வேணுமென் பானேனென்னில்,—சிவமொழிந்தச்சத்திதானின்றும். எ-து. அந்தச்சிவமில்லாம லிந்தச் சத்திதானுண்டாக மாட்டாது. ஆனாலிந்தச்சத்தியாற் பயனில்லையோவென்னில்,—முன்னைத் தகவிலா மலங்கள்வாட்டி யத்தனை யருளும். எ - து. அநா தியே வரப்பட்ட குற்றத்தை யுடைத்தாகிய மலங்களின் கௌரவத்தைக் கெடுத்துத் தனக்குமுதலா யிருக்கிற சிவ னோடு மான்மாக்களைக் கூட்டும். அதென்போலவென்னில்,— எங்குமடைந்திடு மிருளகற்றி வைத்திடு மிரவிகாட்டும் வெள ரொளிபோன் மகிழ்ந்தே. எ - து. எவ்விடத்தினுஞ் செறி ந்திருக்கிற விருளின் மேலீட்டைக் கீழ்ப்படுத்தித் தனக்குமு தலாயிருக்கிற வாதித்தனைக்காட்டுகிற பெரியபிரகாசம்போ ல வந்தச்சத்தியுங் கிருபையுடனே. எ - று. என்னவேயான் மாக்கள் சிவனைப்பெறுமிடத் தருளாகிய சத்தியிட்மாகப்பெ றவேணுமென்பதுகருத்து. இதற்கு. பி - ம். தத்துவவிளக்கத் தில். "பவமேவியநெறி பந்திக்குமீசன் பசுக்கடமை, யவ மேவியநெறி போகங்களால்முற்ற வந்நிலையே, தவமேவிய நெறி சத்திகண்ணுற்சென்று சார்ந்தபின்னைச், சிவமேவுவ தொன்று காண்சொச்சைகாவலன் சித்திரிப்பே." எ- து. கண் டுகொள்க.

இதனாற் சொல்லியது திருவருளாகியசத்தி யான்மாக்க ளுக்குண்டாகிய மலங்களைப் பாகம்வருத்தித் தனக்குமுத லாகியசிவத்துடனேகூட்டு முறைமையையறிவித்தது. (௨௫)

எட்டாஞ் சூத்திரமாகிய ஆன்மதரிசனம் முற்றிற்று.

மேலொன்பதாஞ் சூத்திரமாகிய ஆன்மசுத்தி வருமா று. அஃதாவது ஆன்மா தத்துவங்களோடுங் கூடிநின்று ஜீ

விக்கிற முறைமையைவிட் டந்தவருளோடுங்கூடி யதுமேலீ டாக மூழ்கித் தற்போதம் ஜீவியாமனிற்கிற வவதரத்தைச் சொல்லுவதெனவறிக.

அப்படி யருளைப்பெற்றவர்கள் தற்போதம் ஜீவியாம னிற்பர்களென்ன வேண்டுவதில்லை பசாசுபிடியுண்டவ னந் தப் பசாசு செய்யுங் கிருத்தியங்களெல்லாஞ் செய்துநின் றாற்போல வந்த வருளைப்பெற்றவர்களு மந்த வருளுக்கு ண்டான கிருத்தியங்களெல்லாஞ் செய்து நிற்பர்களென்கி ற சமவாதியை நோக்கி மறுத்தருளிச்செய்வா னெடுத்துக் கொண்டருளியது.

புகலருமசத்தர்தம்பாற் பொருந்தியவலகையேபோ
லகிலமுமுணருமீச னருளுயிர்மேவலாலே
சகலமுநிகழவேண்டுந் தலைவனைந்தொழிலுந்தானே
யிகலறவியற்றல்வேண்டுமென்றதுநன்றியின்றே. (௨௬)

அருளுயிர்தன்னி லலகைசேர்குறிபோல்
மருவிடுமுதன்கூம வாய்மையன்றென்றது.

வி - ம். புகலருமசத்தர்தம்பாற் பொருந்திய வல கையேபோல். எ - து. ஒருநற்குணமு முண்டென்று சொ ல்லுதற்கரிய வஞ்ஞானிகளிடத்திலே பொருந்திநின்ற பசா சுபோல,—அகிலமு முணருமீச னருளுயிர் மேவலாலே. எ - து. சர்வத்தையு மொருநிகழ்ச்சியாக வறிகிற சிவனு டைய வருளானது ஆன்மாவிலே பொருந்துகையினாலே ய ந்தப்பேய்க்குள்ள தன்மைகளெல்லாம் பிடியுண்டவர்களுக் கு முண்டானாற்போல,—சகலமுநிசழவேண்டுந் தலைவனைந் தொழிலுந்தானே யிகலறவியற்றல் வேண்டுமென்றது நன் றியின்றே. எ - து. அந்தச்சிவனருளைப் பெற்றவர்களுக்கு மந்தச் சிவனைப்போலச் சர்வஞ்ஞத்துவ முண்டாமென்று

ம் பஞ்சகிருத்திய மாறுபாடில்லாமல் செய்வதுஞ் செய்யுமென்றும் நீசொன்னது சித்தாந்தவத்தத்துக்கு நன்ருயிருந்ததில்லை. எ - று.

வி - பு. இச்செய்யுளுக் கிங்ஙனம் பொருட்படுத்தி வந்தவகையால் சகலமுங்கழவேண்டுந் தலைவனைந்தொழிலுந் தானே யிகலறவியற்றல் வேண்டும். எ - கு. பேய்பிடியுண்டவ னப்பேய்செய்யுங் கிருத்தியங்களையெல்லாஞ் செய்வதுபோலச் சிவனைப் பெற்றவர்களுஞ் சிவனைப்போலச் சர்வஞ்ஞத்துவமும் பஞ்ச கிருத்தியமுஞ் செய்யவேண்டுமென்று சமயிகள்மதத்தை மறுத்ததாகப் பொருளுரைப்பாருமுளர். அது கருத்தல்ல. அஃதெங்ஙனே யென்னில் அப்படிச்சொன்ன தந்த வருளைப்பெற்றவர்களுக்குச் சர்வஞ்ஞத்துவமும் பஞ்சகிருத்தியமு முண்டாமென் றந்தச் சமயிகள்மதமாகச் சொன்னுரென்பதே கருத்தெனவறிக. அதுவே கருத்தென்பதற்கு. பி - ம். இந்நூலைப்பின்சென்றநூலாகிய திருநெறிவிளக்கத்தினு மிந்தவிருத்தத்துக் கெதிரடை விருத்தமாகிய "பூசுரக்கடியசத்தன் றன்னிடைப் பொருந்தல்போல, வீசனதருளுயிர்ப்பா லெய்தலா லிவனேயாவு, மாசறவறியுமென்று மைந்தொழில் புரியுமென்றும், பேசுதலுண்மைஞான மன்றிது பிராந்திஞானம்." இதனுள் "ஈசனதருளுயிர்ப்பா லெய்தலாலிவனேயாவு மாசறவறியுமென்று மைந்தொழில்புரியுமென்றும் பேசுதலுண்மைஞான மன்றிது." என்றமையா லவன்சர்வஞ்ஞத்துவமும் பஞ்சகிருத்தியமு முண்டாமென்று னென்றதையே மறுத்ததென்பதை யநுபவத்தாற் கண்டுகொள்க. ஆகையாற் பேய்பிடியுண்டவ னந்தப்பேய்க்குள்ள கிருத்தியங்களெல்லாஞ் செய்தாற்போல வருளைப்பெற்ற வான்மாக்களு மந்தவருளுக்குண்டான சர்வஞ்ஞத்துவமும் பஞ்சகிருத்தியமுஞ் செய்வா

ர்களென்பதே கருத்தெனவறிக. அப்படியானு லந்தப்பேய்க்குண்டான தன்மைகளெல்லாம் பிடியுண்டானவனுக் குண்டானதுபோலச் சிவனுக்குண்டான தன்மையுஞ் சிவனருளைப்பெற்றவான்மாக்களுக்கு முண்டாகுமென்று சமவாதிசொன்னதற்கு வழியேதென்னில் அப்படிப் பேய்பிடியுண்டவ னின்னு னின்னபண்டங் கொண்டுவருகிறுனென்றும் இந்நாள் மழைபெய்யுமென்றும் நெருப்பைமிதித்துநின் றுடியும் சுடுகிற பாற்சோற்றிலே கையையிட்டுத் துழாவியும் நின்றாற்போல வந்தவருளைப் பொருந்தின வான்மாக்களுக்குஞ் சர்வஞ்ஞத்துவமும் பஞ்சகிருத்தியமு முண்டாமென்று சொன்னுனென்றதெனவறிக. அவனப்படிச் சொன்னுனென்பதற்கு. பி - ம். சங்கற்பநிராகரணத்தில். “முன்னேன்றன்து முதிரொளிஞான-மறியாப்பசசைச் சிறுபுழுக்கவர்ந்த-வண்டெனவுயிராக் கொண்டுமுயிரது-தன்னைநோக்கித் தானதுவாகி - யைவகைத்தொழிலு மெய்வகையுணர்வும்- பிறியாவாறுபெற்றுத் - திரியாப்பெரியோர் திரட்சிசேர்ந்திடுமே.” எ - து. கண்டுகொள்க. என்றது நன்றியின்றே என்றவனை மறுத்ததற்கு. பி- ம். மேல்வருகிறசெய்யுளுக்குக் காட்டிமறுக்கிற உதாரணத்திலே கண்டுகொள்க.

இதனுற்சொல்லியது பசாசுபிடி யுண்டவனுக் கந்தப்பசாசின் குணமுந்தொழிலு முண்டானுற்போலச் சிவனருளைப்பெற்ற வான்மாக்களுக்குஞ் சிவனுடைய சர்வஞ்ஞத்துவமும் பஞ்சகிருத்தியமு முண்டாமென்று சமவாதி சொன்னுனென்னு முறைமையை யறிவித்தது. (உசு)

அப்படி ஆக்ஷேபமாக்கிக்கொண்டு நன்றியின்றே யென்றதேதென்று மீளவுஞ் சமவாதிகேட்க நீசொன்னதிருஷ்டாந்தத்தா லந்தவருளைப்பெற்றவர்களுக்குச் சர்வஞ்ஞத்து

வமும் பஞ்சகிருத்தியமு முண்டாகாதென்னு முறைண்மை மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

இன்றுநோக்குநடைக்கு மியல்பிலோர்க்கினையவாய்ந்து
நின்றதோரலகைநேர்ந்தால் நிகழ்வதெனதுபோலுள்ளத்
தொன்றியவுணர்வுதம்பா லுள்ளதுநிகழ்த்துமீசன்
றன்றொழினடாத்துமேனிதனக்கெனக்கொண்டுதானே.

பற்றியவலகையின் பரிசுயிர்க்குளதெனுஞ்
சொற்பழுதுறும்வகை தோன்றமறுத்தது.

வி - ம். இன்றுநோக்குநடைக்கு மியல்பிலோர்க்கினையவாய்ந்து நின்றதோரலகை நேர்ந்தால் நிகழ்வதென். எ - து. இப்பொழுது குருடனுமாய் ஊமையுமாய் முடவனுமா யிருப்பானொருவனைப் பசாசுபிடித்தபொழுது அவன் காணவல்லவனானே பேசவல்லவனானே நடக்கவல்லவனானே,— அதுபோல். எ - து, அத்தன்மைபோல்,— உள்ளத்தொன்றிய வுணர்வுதம்பாலுள்ளது நிகழ்த்தும். எ - து. ஆன்மாவினிடத்திலே பொருந்தின வருளான தவர்களுக்குண்டான விச்சாஞானக்கிரியைகளுக் கீடாக வறிவித்து நிற்குமாகையால்,— ஈசன்றன்றொழினடாத்துமேனி தனக்கெனக் கொண்டுதானே. எ - து. பரமேஸ்வரனுந்தனக்குப் பொருந்தினதொரு திருமேனியைத் தானேயெடுத்துக்கொண்டு தனக்குமுறைமையான கிருத்தியங்களையு நடத்துவன். எ - று.

நு - ம். உள்ளத்தொன்றிய வுணர்வு. எ - து. உயிர்க்குயிராய் நிற்கிறதிருவருளை யெனவறிக. தம்பாலுள்ளது நிகழ்த்தும். எ - து. ஆன்மாவுக்குண்டான சிற்றறிவுக்குத் தக்கதாக வறிவித்து நின்றதெனவறிக. இங்ஙனஞ் சமவாதி சொன்ன திருஷ்டாந்தத்தையும் பொருளையு மறுத்ததற்கு.

பி-ம். சங்கற்பநிராகரணத்தில் "அவனிவனாகிலிவனவன் செய்தி-யென்றுசெய்வானென்றியமதத்தா லெல்லாமறிதல் செல்லாதுயிர்கள்- சிற்றறிவெனுமிச்சொற்றவறுரு -மென்ப தெனலகை தன்பதமடைந்தோர் - கொண்டவாறுகண்டன மென்னின் - மூங்கையந்தருற்றோங்கியகுணங்குறி - செய்வ தெனினும் பவ்வமுற்றமூழ்கினு - நாழிகொள்ளாதாழி.யினலே புன - லதனாற்கருத்தமுதலுளதாக-வேண்டுமென்றே." எ-து. கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது அருளைப்பொருந்தின வான்மாக்க ளந்த வருள்செய்யுங் கிருததியங்களெல்லாஞ் செய்வர்க ளென்றுசொன்ன சமவாதியைமறுத்து அப்படியருளோடுங் கூடினாலும் ஞேயந்தோன்றுதவிடத் தவர்களுக்குண்டாகிய சிற்றறிவொழிந்து பேரறிவுண்டாகாதென்னு முறைமையை யறிவித்தது. (உஎ)

அப்படியானா லிந்தவான்மசுத்தியாற் பயனேதென்று வினவின மாணவகனைநோக்கி மேலருளிச்செய்வா னெடுத் துக்கொண்டருளியது.

இந்நிலைதன்னின்மன்னி யெய்திடுங்கலாதிபோதந்
தன்னளவறிந்துநிற்குந் தகவிலாமலங்களீத்த
வந்நிலைகரணமாகா வகையதிலறிவடங்கி
மன்னிடவியாபியாபவான்பயன்றோன்றுமன்றே. (உ அ)

உளத்தறிவடங்க வொடுங்குமெல்லையிற்
றுளக்கறுபரனுந் தோன்றுமென்றது.

வி-ம். இந்நிலைதன்னின்மன்னியெய்திடுங் கலாதிபோதந் தன்னளவறிந்து. எ-து. இந்தவான்ம சுத்தியாவது ஆன்மா வுஞ்சருவிகளுங்கூடி ஜீவிக்குமிடத்து, கலையாதியாயுள்ளதத்

துவங்களினாலே யான்மபோதம் ஜீவிக்குமதுவும் அந்தத்தத்துவங்கள் ஜடமென்பது முணர்ந்து,— நிற்குந்தகவிலா மலங்கணீத்த வந்நிலைகரணமாகா வகையதிலறிவடங்கி மன்னிட. எ - து. இங்ஙனங்கூடி நிற்கப்பட்ட குற்றத்தையுடைய தத்துவங்களைநீக்கி யந்தவருளே தனுவாகநிற்கிற வான்மதரிசனத்தையும் விட்டு அந்தவருளே மேலீடாகத்தற்போதம் ஜீவியாமனிற்கிறதே யான்மசுத்தியாவது. இந்த வான்மசுத்தியிலே நிற்கவே,— வியாபியாய வான்பயன்றோன்றுமன்றே. எ - து. எவ்விடத்து நிறைந்துநிற்கிற சிவமாகிய சுகரூபந்தனக்குத்தோன்றும். எ - று.

வி - பு. தகவிலாமலங்கணீத்தவந்நிலை. எ - து. ஆன்மதரிசன மெனவறிக. கரணமாகாவகையதிலறிவடங்கி மன்னிட. எ - து. ஆன்மசுத்தியெனவறிக. வியாபியாய வான்பயன்றோன்றும். எ - து. ஆன்மலாபமெனவறிக.

இதனாற்சொல்லியது அருளானது தன்னையு மான்மாவையு மலங்களையுங்காட்ட வான்மா கண்டுநிற்கிறவவதரமான்மதரிசனமென்றும்ஆன்மாவந்தவருளோடுங்கூடித்தற்போதம் ஜீவியாம லந்தவருளே மேலீடாக மூழ்கிநிற்கிற விடம் ஆன்ம சுத்தியென்றும் அப்படித்தற்போதம் ஜீவியாமனிற்கவேமேலான்மலாபமுண்டாமென்னுமுறைமையு மறிவித்தது.

அப்படி யந்தவருளிடமாகச் சிவத்தோடுங் - கூடினவர்களந்தச்சிவத்துடனே யொன்றுபட்டுப்போகிற தொழிந்து அங்கேயொரு ஞேயந்தோன்று மென்கிறது பொருளல்லவென்ற சைவரை மறுத்தருளிச்செய்வா னெடுத்துக் கொண்டருளியது.

அடைபவர்சிவமேயாகு மதுவன்றித்தோன்றுமென்ற, கடனதேனென்னில்முன்னங் கண்டிடார்தம்மைப்

பின்னுந், தொடர்வருமருளினாலுந் தோன்றுமாகாணுரா
யி, னுடையவனடிசேர்ஞானமுணர்தலின்றணைதலின்றே·
ஒன்ருவுறுபய னுணராதுயிரொளி
னன்ருமுத்திலை நாடரிதென்றது.

வி - ம். அடைபவர் சிவமேயாகு மதுவன்றித் தோ
ன்று மென்ற கடனதே னென்னில். எ - து. அப்படியேசி
வத்தோடுங் கூடின ஆன்மாக்கள் சிவமாய்ப் போகிறதொழி
ந்து அவ்விடத்து வேறுமொரு பயன் ருேன்றுமென்ற கார
ணமேதென்னில்,—முன்னங் கண்டிடார் தம்மை. எ - து.
முன்பு பெத்தத்திலே மலமாயா கன்மங்களோடுங் கூடி மய
ங்கிநிற்கையினாலே தங்களுடைய வுண்மையை யறிந்தாரில்
லே. என்னவே தங்க ளுண்மையை யாறியாதது கொண்டே
சிவனையு மறியமாட்டார்கள்.—பின்னுந் தொடர்வருமருளினா
லுந் தோன்றுமா காணுராயின். எ - து. அந்தப்பெத்தத்
தை நீங்கினபின்புந் தனக்குக் கிட்டுதற் கரிதாகிய ஞானத்
தைப்பெற்ற வவதாரத்து சிவதரிசனப்பட்டு சிவபோகத்தை
யநுபவியாராமாகில்,—உடையவனடிசேர்ஞானமுணர்தலின்
றணைதலின்றே. எ - து. சர்வான்மாக்களையு மடிமையாகவு
டைய சிவனது திருவடியைக் கூடுகைக்குக் காரணமான
ஞானத்தை யறிந்ததுமில்லை யந்த ஞானத்தாலே சிவனு
டைய திருவடியிலே யிரண்டறக் கூடினதுமில்லையாம்· எ-று

உ-ம். ஆன்மா சிவத்தோடுங்கூடித் தற்போதங்கெட்டுச்
சிவமாய் விடுமென்று சைவர்சொன்னதற்கு. பி - ம். சங்க
ற்ப நிராகரணத்தில் "தன்னையுமதனையுந் தன்முதற்பொரு
ளையு-மின்னதென்றறியா விருவருமுயங்கி - யொன்ருயுறுபய
னுவப்பு-மொன்ருய்நிற்கு மிதுசிவகதியே" எ - து. கண்டு
கொள்க. இதுஅத்தமாகாதென்று சைவரைமறுத்ததற்கு,

பி - ம். சங்கற்ப நிராகரணத்தில் "இருவருங்கூடி யொரு பயனுய்த்தென் - றருளினையிவ்வா றபேதிகணிலையே - யொ ன்றுமென்ற லன்றியுமுவப்பு - மின்றுமென்று லென்பயனி யம்புக" எ - து. கண்டுகொள்க.

இத்திருவிருத்தத்தா லான்மா சிவத்தோடுங்கூடித் தற் போதங்கெட்டுச் சிவமாய் விடுகிறதே முத்தியென்கிற சை வரை மறுத்து அப்படியானுற் பெறுவானும் பேறுமில்லையாய் ச்சாயுச்சியமுமில்லையென்னுமுறைமையையறிவித்தது. (உ௯)

ஒன்பதாஞ் சூத்திர மாகிய ஆன்மசுத்தி முற்றிற்று.

மேற்பத்தாஞ் சூத்திரமாகிய ஆன்மலாப மருளிச்செய் வா னெடுத்துக்கொண்டருளியது. அஃதாவது சிவனுடைய வருளோடுங்கூடித் தற்போதம் ஜீவியாமனிற்கவே யந்தச் சி வமாகிய ஞேயந் தோன்றுமாதலால் அந்தச் சிவத்தோடுங் கூடி யான்மா சிவாநுபவத்தைப் பெற்றிருக்கு முறைமை யைச் சொன்னதெனவறிக.

மேல்வரும் விருத்தத்துக்குத் தொந்தனையாவது அந்த ஞேயமாகிய சிவத்தோடுங்கூடி யநுபவிக்கு முறைமை யெ ப்படியென்று வினவின மாணவகனைநோக்கி யருளிச்செய் வா னெடுத்துக்கொண்டருளியது.

பொற்புறுகருவியாவும் புணராமேயறிவிலாமற்
சொற்பெறுமதீதம்வந்து தோன்றுமேதோன்றிநின்ற
சிற்பரமதனுளுள்ள செயலறுத்திடவுதிக்குந்
தற்பரமாகிநிற்றல் சாக்கிராதீதந்தானே. (௩0)

நீக்கமில்சிவத்துட னிலைபெறநிற்குஞ்.
சாக்கிராதீதத் தன்மைசாற்றியது.

வி - ம். பொற்புறு கருவியாவும் புணராமே. எ - து. அந்தச் சிவத்தோடேகூடி யநுபவிக்கு மவதரத்துப் பொலிவினை யுடைத்தாகிய கருவிகள் முப்பத்தாறும் பொருந்தி விகற்பியாதே. அதுவன்றியும்,—அறிவிலாமற் சொற்பெறுமதீதம் வந்து தோன்றுமே. எ - து. அறியாமை யென்னுஞ் சொற்பெற் றிருக்கிற வாணவமலத்தால் மறைப்புண் டதீதாவத்தைப்பட்டுக் கிடவாதே. இங்ஙனஞ் சொல்லப்பட்ட சகலாவத்தையுங் கேவலாவத்தையும் விட்டு நீங்கின வவதரத்து,—தோன்றி நின்ற சிற்பரமதனாலுள்ள செயலறுத்திட வுதிக்குந் தற்பரம். எ - து. ஆன்மாவி னிடத்திலே யநாதியே கூடிநின்று பக்குவத்திலே பிரகாசிக்கப்பட்ட மேலான வருளானது காட்டத் தான்காண்கிற காட்சியைவிட்டு அந்தஞானந் தானாய்நிற்கவே யந்தஞானமாகிய வருளுக்கு முதலாயிருக்கப்பட்ட சிவமாகிய ஞேயந்தோன்றிப் பிரகாசியாநிற்கும்.—ஆகிநிற்றல் சாக்கிரா தீதந்தானே.எ-து. அங்ஙனமுதயஞ்செய்யப்பட்ட வந்தச்சிவத்தோடேகூடிச் சிவபோகமாய்நிற்கிறதுதானே சாக்கிரத்தி லதீதம். எ - று.

நு - ம். பொற்புறு கருவியாவும் புணராமே. எ - கு. கருவிகள் முப்பத்தாறும் பொருந்தி விகற்பியாதே யென்று பொருட்படுத்தினத்துக்கு வழியே தென்னில் சகலாவத்தைப்பட்டு நில்லாதே என்பதுமன்றி யாவும்என்ற சுட்டினாலே கலையாதிமண்ணீறுந்தமாயுள்ள தத்துவ முப்பத்தொன்று நீங்கலாகச் சுத்தமாயையிற் றோற்றமாயுள்ள சிவதத்துவங்கள் நீங்கியே முத்தியென்பதைப்பற்றி யெனவறிக. அப்படியந்தச் சிவதத்துங்வகளைந்தையுங் குறித்துச் சொல்லவேண்டுங் காரணமேதென்னில் அந்தச் சிவதத்துவங்களைந்திலுந் தத்துவகத்தாக்களைவரு மதிஷ்டித்து நிற்கையால் முத்தியைப்பெறுமவர்களுக்குப் பிரமசாயுச்சிய மென்றும் விஷ்

ணு சாயுச்சிய மென்றும் உருத்திரசாயுச்சிய மென்றும் மகேஸ்வர சாயுச்சிய மென்றும் சதாசிவ சாயுச்சியமென்றும் விந்து சாயுச்சியமென்றும் நாதசாயுச்சியமென்றும் வருகையா லவையெல்லாஞ் சுத்தமாயையிலடங்கி வருகையாலே யவை சைவசித்தாந்தத்துக்கு விரோதமாகிய சமயிகள் கருத்தைப்பற்றி நிற்கையாலு மதுபதமுத்தியிலே கூடிவருகையாலு மதுசாயுச்சியத்துக் காகாதபடியாலே யதனையாகாதென்றதெனவறிக. அப்படிச் சுத்ததத்துவங்களுநீங்கியே சாயுச்சியமென்பதற்கு. பி - ம். சித்தியாரில். "மூவகையணுக்களுக்கு முறைமையால்விந்துஞான, மேவினதில்லையாகில் விளங்கியஞானமின்று, மோவிடவிந்துஞான முத்திப்பதோர் ஞானமுண்டேற், சேவுயர்கொடியினுன்றன் சேவடிசேரலாமே." என்பதனுள் "விந்துஞானமோவிட" என் றநுவயித்துப்பொருட்கூட்டி விந்துநாதமுதலாயுள்ள தத்துவங்களு நீங்கியே முத்தியென்றதெனவறிக. இனிதத்துவங்களுந் தத்துவகத்தாக்களு நீங்கியே முத்தியென்பதற்கு. பி - ம். புராணசாரத்தில். "பாரணவும்புலனந்தக்கரணமொன்றும் பட்டராமேநடுநாடிபயிலுநாதங், காரணபங்கயன்முதலானமவர்வாழ்வுங் கழியுநெறிவழிபடவுங்கருதுமேலைப், பூரணமெய்ப்பரஞ்சோதிபொலிவுநோக்கி." எ - ம். திருவாசகத்தில். "ஆட்டுத்தேவர்தம் விதியொழித்தன்பா லையனேயென்றுன்னருள்வழியிருப்பேன்." எ - ம். தத்துவ முப்பத்தாறுநீங்கியே முத்தியென்பதற்குக்கோயிற்புராணத்தில். "தரைமுதலாறுறெனவரு நாதாதியின்மீதே." எ - ம். திருக்களிற்றுப்படியாரில். "நாதாந்தத்தேயிருப்பர்." எ - ம். திருப்புகழில் "விந்துநாதவோசைக்குத்தூரமானது." எ - ம். வருமேதுக்களைக் கண்டுகொள்க. இனியந்தச் சுத்ததத்துவங்கள் சுத்தமாயையிற் றோற்றமாகையாற் சுத்தமாயையைப்பற்றி நின்

றவிடம் பதமுத்தியாகையால் பதமுத்தியைச் சாயுச்சியமெ ன்கிற சமயிகள் கருத்தாமென்று சொன்னதற்கு. பி - ம் சங்கற்பநிராகரணத்தில் சிவசமவாதியைமறுக்கு மவதரத் தில் "செடியுடலணுகாக் குடிலைகொடுக்குமென் - ருேதினை நீ யேபேதாய்பகட்டுர - லொளிர்சினைமுச்சித்தளிரெனுமிதுதகு மிச்சாரூபநச்சினரென்னின் - மும்மலத்தேதுமின்மையதன் றே-யிதுவளர்முத்திப்பதமெனவிளம்புவர்." எ - ம். சித்தி யாரிலும். "அநாதியுடலொன்றினைவிட்டொன்றுபற்றிக்கன் மா லாயழிந்துவருதலாலந்தமில்லைப், பினுதியருள்பெற்ற வர்கள்நித்தவுருவத்தைப் பெற்றிருக்கைமுத்தியெனிற்பெ றும்பதமேயிதுவு, மினுதுநிலையிதுதானுங்காயமுண்டே விரு ங்கன்மமாயைமலமெல்லாமுண்டா, மனுதிதருமுடலாதிகா ரியத்தாலநாதி மலமறுக்குமருந்தற்றூலுடன்மாயுங்காணே." என்பதனுள் "நித்தவுருவத்தைப் பெற்றிருக்கை முத்தியெனி ற் பெறும்பதமே யிதுவும்." எ - து. கண்டுகொள்க. என் றிங்ஙன முத்தியைப்பெறுமிடத்துச் சுத்ததத்துவ நீங்கியே முத்தியாகையாற் றத்துவமுப்பத்தாறு நீங்கியே முத்தியெ ன்பது கருத்து. இதற்கு. பி - ம். ஞானமிர்தத்தில். "முப்ப துமூதளை மூவிரண்டோவா-வொப்பிறத்துவ மொரீஇயதீபமி யன்." எ - ம். திருமந்திரத்தில்." முப்பதுமாறும் படிமு த்தியேணியா, யொப்பிலாப்பேரண்டத் துள்ளில்வெளிபுக் குச், செப்பவரிய சிவங்கண்டுதாந்தெளிந், தப்பரிசாகி யம ர்ந்திருந்தானே." எ - ம். கண்டுகொள்க. ஆகையால் க ருவியாவும் புணராமையென்பது ஆன்மதத்துவ மிருப்பத்து நாலும் வித்தியாதத்துவமேழுஞ் சிவதத்துவமைந்தும் ஆகத் தத்துவ முப்பத்தாறு மெனவறிக. இனியறிவிலாமற் சொற் பெறுமதீதம்வந்து தோன்றுமே. எ - து. அறியாமையென் கிற வதீதாவத்தைப் பட்டுக்கிடவாதேயென்று பொருட்படுத்

தினத்துக்கு வழியேதென்னில் முத்தியைப் பெறுமவர்கள் தத்துவ முப்பத்தாறையுங் கழன் றந்தச்சிவத்தோடுங்கூடிச் சாக்கிராதீதம் புரிந்திருக்கு மவதரத்துக் கருவிகளெல்லாங் கழன்றவிடங் கேவலத்துக்கிடமாகையா லறியாமையோடுங் கூடிக் கேவலப்பட்டு வீழாதேயென்று சொன்னதெனவறிக. அன்றியு மான்மா முத்தியிற் பாடாணம்போலே கிடக்குமென்று சொல்லுகிற அகச்சமயத்திற் பாடாணவாதி புறச்சமயத்திற் பிரபாகர னென்னுமிவர்கள் கருத்தைப்பற்றியு மதனையாகாதெனவு மாமெனவறிக. அவர்க ளப்படிச்சொன்னதற்கு. பி-ம். சங்கற்ப நிராகரணத்தில். "காட்சியென்னக் காணுத்துயர - மாட்சியைமுத்தி யெனவகுத்தனரோ." என்றுபாடாணவாதி சொன்னதற்குக் கண்டுகொள்க. அதனையாகாதென் றவனைமறுத்ததற்கு. பி-ம். சங்கற்பநிராகரணத்தில். "காட்சியென்னக்காணுத்துயர- மாட்சியைமுத்தியெனவகுத்துரைக்கிற் - கரணபாவமரணங்கருமர- மேய்ந்தவர்முத்தி சேர்ந்தவரன்றே - யனையகதிக்கோர் முனைவரும்வேண்டா-தனிதருதுயர மெனுமிதுதிடமே - பாடாணத்திற் கூடாமுத்து" எ-து. கண்டுகொள்க. மற்றப்புறச் சமயத்திற் பிரபாகரன் முத்தியிற் பாடாணம்போலக் கிடக்குமென்றதற்கு. பி-ம். சித்தியாரில். "அருஞ்செயலின்யாவத்தே பூருவமெனுமதுதோன்றித், தருஞ்செயலொன்றின்றியே தான்பலிப்பதாகுமது, வருஞ்செயலொன்றின்றியே மண்சிலைபோலாமுத்தி, தருஞ்செயலுமெனவுணர்ந்துதாரணிமேலவன்சாற்றும்." எ-து. கண்டுகொள்க. அதனையாகாதென் றவனைமறுத்ததற்கு வழியேதென்னில் ஆன்மாவப்படி முத்தியிற்போதங்கெட்டுப் பாடாணம்போற் கிடக்குமென்றால் முத்திபெற்றநுபவிக்கப் போதமில்லாதபொழுது அநுபவமாகாதபடியா லதனையாகாதென்றதெனவறிக.

அப்படிப் பிரபாகரனை மறுத்ததற்கு. பி - ம். சித்தியாரில். "ஆநந்தங்கதியென்ன வறிவழிகைவீடென்கை, யூனம்பின்னுணர்வழிந்தோர்க் குளதாகுமோமுத்தி, தானிங்குச்சிவப்பொழியத் தழனிற்குமாறில்லை, ஞானங்கெட்டுயிர்நிற்கு மெனுமுறைதானன்றாதால்." எ - று. கண்டுகொள்க. அன்றியுமுத்தியிலான்மா போதங்கெட்டுப் பாடாணம்போற் கிடக்குமென்பது சித்தாந்தப்பொருளுக்கு விரோதமென்பதற்கு. பி - ம். சித்தியாரில். "கரணங்கள்கெடவிருக்கை முத்தியாமென்னிற் கதியாகுஞ்சினைமுட்டை கருமாத்தினுயிர்கள், மரணங்கொண்டிடவுறங்க மயங்கிமூர்ச்சிக்க வாயுத்தம்பனைபண்ண வல்விடத்தையடையச், சரணங்கள்புகுநிழற்போற்றனையடையுஞ்சமாதி தவிராதுமலமிதுவும் பசுஞானமாகு, மரணங்களரித்தவன்றன் னடியையறிவிறந்தங் கறிந்திடார்செறிந்ததுக ளகற்றிடரோ." எ - று. கண்டுகொள்க. இனி தோன்றிநின்றசிற்பரமதனாலுள்ளச் செயலறுத்திடவுதிக்குந்தற்பரம் என்றபதத்தில் தோன்றிநின்ற சிற்பரம். எ - து. தன்னிடத்திலே கூடிப்பிரகாசித்துநிற்கிறஞானமென்றபொருட்படுத்தினத்துக்கு வழியேதென்னில் அஃதாவது கண்களுக்கு ஆதித்தப்பிரகாசங் காட்டாகநின்றாற்போலச் சர்வான்மாக்களுக்கு முயிர்க்குயிராய் நின்றறிவிக்கிறது பூரணமாகிய திருவருளே யெனவறிக. அப்படிக்கண்களுக்காதித்தன் காட்டாகநின்றாற்போலத் திருவருள்ஞானநின் றான்மாக்களை யறிவிக்குமென்பதற்கு. பி - ம். சித்தியாரில். "மருளினையருளால்வாட்டி மன்னுயிர்க்களிப்பன்கண்கட், கிருளினையொளியாலோட்டு மிரவியைப்போலவீசன்." எ - று. கண்டுகொள்க. இனி யதனாலுள்ளச்செயலறுத்திடவுதிக்குந்தற்பரம். எ - து. ஆன்மா வந்தவருளானதுகாட்டத் தான்காண்கிற காட்சியை யிழந்து ஞானந்தானாய்நிற்கவே யந்

தஞானத்துக்கு முதலாகிய சிவமாகிய ஞேயந்தோன்றுமெ ன்று பொருட்படுத்தினத்துக்கு வழியேதென்னில் அந்தநிஷ் களசொரூபமாயுள்ள சிவமானது தன்னை யான்மபோதத்தா ற் சுட்டியறியுநாளெல்லாங் கூடிநிற்கச்செய்தேயு மறைந்து நின்றந்தவான்மாவானது தன்செயலறுதியைக்கண்டு தற்சே ட்டைகெடநிற்குமவசரத் தந்தச் சிவம் பிரகாசிக்கையா லப் படிச் சொன்னதெனவறிக. இவை யிரண்டுக்கும். பி - ம். சிவஞானபோதத்தில். "நானவனென்றெண்ணினர்க்கு நாடு மூளமுண்டாதல், தானெனவொன்றின்றியே தானதுவாய்- நானெனவொன், றில்லென்றுதானே யெனுமவரைத்தன்ன டிவைத், தில்லென்றுதானுமிறை." எ - து. கண்டுகொள் க. அன்றியும் திருக்களிற்றுப்படியாரிலும். "உள்ளமுதல னைத்து மொன்றவுருகவரி, னுள்ளமுருகவந்துட்டுநற்-தெள்ளி, யுணருமவர்தாங்க ளுளராகிலென்றும், புணரவரநில்லாப் பொருள்." எ - து. கண்டுகொள்க. இனி தற்சேட்டை கெடநின்றதே சிவாநுபவம் என்பதற்கு. பி - ம். தேவாரத் தில். "தன்னைமறந்தா டன்னுமங்கெட்டா டலைப்பட்டா ணங்கைதலைவன்றாளே." எ - ம். திருவாசகத்திலும். "ஊன் கெட்டுயிர்கெட்டுணர்வுகெட் டென்னுள்ளமும்போய், நான் கெட்டவாபாடித் தெள்ளேணங்கொட்டாமோ." எ - து. கண்டுகொள்க. அன்றியும் திருவள்ளுவர். "யானெனதெ ன்னுஞ் செருக்கறுப்பான்வானோர்க்,குயர்ந்தவுலகம் புகும்" என்பதுமிப்பொருட்பற்றி யெனவறிக. இனி யாகிநிற்றல் சாக்கிராதீதந்தானே என்றபதத்தில் ஆகிநிற்றல். எ - கு. ஆன்மா வந்தச்சிவத்தோடுங்கூடிச் சிவமாய் நிற்கவென்று பொருட்படுத்தினத்துக்கு வழியேதென்னில் அப்படிச்சொ ன்ன தந்தச்சிவத்தோடுங்கூடிப் பிறிவறநிற்கவெனவறிக. அ ஃதெங்ஙனேயென்னில் ஆதித்தப்பிரகாசங் காட்டாகப் பிர

பஞ்சரூபத்தைப்பற்றிநின்ற கண்ணனது அந்தவுருவங்களை விட் டந்தப்பிரகாசமிடமாகச்சென் றந்தப்பிரகாசத்துக்கு முதலாயிருக்கிற வாதித்தனைக்கண்டு பிறிவறநின்றாற்போல வான்மாவு மருளிடமாகக்கூடிநின்று சத்தாதிவிடயங்களைப் புசித்துநிற்கச்செய்தே யதனையும்விட்டு மனோவிசாரமுமட ங்கி யந்தவருளுக்கு முதலாயிருக்கிற சிவத்தோடு மந்தவரு ள்காட்டாகச் சென்றுகூடிப் பிறிவற் றிரண்டறநிற்கையா லப்படிச்சொன்னதெனவறிக. அப்படிப் பிரபஞ்சரூபத்தை ப்பற்றிநின்ற கண்ணனது திரும்பி யாதித்தனைநோக்குமள வி லந்தப்பிரபஞ்சரூபங்கள் தெரியாததுபோலவென் று பமானங்கூறினதற்கு. பி - ம். ஞானாமிர்தத்தில். "நீதருநெ டுங்கண்ணுதவனுட்டத் தயலொன்றின்மைபோலவும்." எ-து. கண்டுகொள்க. அன்றியு மான்மாசிவத்தோடுங்கூடிச் சி வமாய்நிற்குமென்பதற்கு. பி - ம். திருவாசகத்தில். "அவ மாயதேவ ரவகதியிலழுந்தாதே, பவமாயங்கெடுத்தென் னை யாண்டுகொண்டபரஞ்சோதி, நவமாயசெஞ்சுடர்நல்குத லுநாமொழிந்து, சிவமானவாபாடித் தெள்ளேணங்கொட் டாமோ." எ - து. கண்டுகொள்க. என்னவேசிவமாயெ ன்றது ஆன்மாத் தற்போதமாய் நிற்பதுஞ்செய்யாமற் று னென்கிற முதல்கெடுவதுஞ் செய்யாமற் றற்போதங்கெ ட் டந்தச்சிவத்தோடுங்கூடி யிரண்டறநின் றநுபவித்த தெனவறிக. அப்படிச் சிவமாயென்றசொல் அந்தச்சிவமா வதுஞ்செய்யாமற் பிறிந்துநிற்பதுஞ்செய்யாமல் நிற்கையெ ன்பதற்கு. பி - ம். சங்கற்பநிராகரணத்தில். "ஆனுயெ ன்பதனைத்துமவ்வகை - தானுகாமையைச்சாற்றிடுமென்க - தானேயெனுமித்தனியேகார - மழிந்திலரதுவேயாய்ந்திலர துவிட்-டொழிந்திலர்பிறிதில ரெனுமிவையுணர்த்தும்."எ- து. கண்டுகொள்க. இனி சாக்கிராதீதந்தானே. எ - கு. கே

வலசகலமிரண்டையு நீங்கிநிற்கவென்று பொருட்படுத்தின த்துக்கு வழியேதென்னில் அஃதாவது கேவலவத்தைப்பட் டாணவமலத்தான்மறைப்புண் டறியாமையாய்க் கேவலா தீதமாய்க் கிடப்பதுஞ்செய்யாமல் உட்கரணம் புறக்கரண ங்களோடுங்கூடிச் சகலனாய்ச் சத்தாதிவிடயங்களோடுங் கூடி ஜீவிப்பதுஞ்செய்யாம னின்றவிடமெனவறிக. இதற் கு. பி - ம். சித்தியாரில். "அறியாமையறிவகற்றி யறிவினு ள்ளே யறிவுதனையருளினா லறியாதேயறிந்து, குறியாதேகு றித்தந்தக் கரணங்களோடுங் கூடாதேவாடாதே குழைந்தி ருப்பையாயிற், பிறியாதசிவந்தானே பிறிந்துதோன்றிப் பிர பஞ்சபேதமெல்லாந் தானாய்த்தோன்றி, நெறியாலேயிவை யெல்லா மல்லவாகி நின்றென்றுந்தோன்றிடுவ னிராதாரனா யே." எ - ம். தேவிகாலோத்திரத்தில். "திருத்தகுசமாதி யைச்செய்யுங்காலத்துக், கருத்தெழுந்தடங்காது கலங்குமா யினும், வருத்தமாய்நித்திரை மருவுமாயினுந், திருத்தறிவுறு த்துத்தன் னிலையிற்சேர்க்கவே." எ - ம். "நித்திரையும் ப ராக்கினையுநீக்கிச், சித்தமொருநிலையு நீங்காமனிறுத்திக்கொ ண்டால்." எ - ம். கோயிற்புராணத்தில். "கரணமனைத்து ம்புலனிவைகாணாகைவிட்டால், மரணமெமக்கிங்கிதுதமியே ம்வாழ்வருண்மாறிற், றிரணமுமெய்ச்சஞ்சலமிலதென்று லொன்றுனின், புரணமெனக்கொண் டருளுகவென்றார் நின் றார்கள்." எ - ம். திருக்களிற்றுப்படியாரில். "உணராதே யாதுமுறங்காதேயுன்னிப், புணராதேநீபொதுவேநிற்கில்." எ - ம். திருமந்திரத்தில். "நினைப்புமறப்புமிலாதவிடத்தே, வினைப்பற்றறுக்கும்விமலனிருப்பன், வினைப்பற்றறுக்கும் வி மலனைநாடி, நினைக்கப்புகிலவனீளியனாமே." எ - ம். "இர வும்பகலுமிலாதவிடத்தே, குரவஞ்செய்கின்ற குழலியையா

டி, யரவஞ்செய்யாதவ ளோடுஞ்சந்திக்கிற், பரவஞ்செயாவ கைப்பாலனுமாமே." எ - ம். வருமேதுக்களைக்கண்டுகொள்க. ஆகையாற் கேவலசகலமிரண்டினுங்கூடாம லந்தச்சுத்தத்தோடுங்கூடிநின்றவிடமே சாக்கிராதீதமெனவறிக. அதற்குவழியேதென்னில் தத்துவமுப்பத்தாறோடுங்கூடி நிற்கச்செய்தே யவையிற்றோடுங்கூடி ஜீவிப்பதுஞ்செய்யாமலறிவுகெடுவதுஞ் செய்யாமல் நின்றவிடமெனவறிக. இதற்கு. பி - ம். திருமந்திரத்தில். "நின்றவச்சாக்கிரந்துரியமதானால், மன்றனுமங்கே மணஞ்செயாநின்றிடு, மன்றன்மணஞ்செயின் மாயையுமாய்ந்திடு, மன்றேயிவனு மவனெனலாமே." எ - ம். சித்தியாரில். "சாக்கிரத்தேயதீதத்தைப் புரிந்தவர்களுலகிற் சர்வசங்கநிவிர்த்திவந்த தபோதனர்களவர்கள், பாக்கியத்தைப்பகர்வதுவென் னிம்மையிலேயுயிரின் பற்றறுத்துப்பரத்தையடை பராவுசிவரன்றே." என்றதமிப்பொருட்பற்றி யெனவறிக. அன்றியுமிதனைக் குருமுகார்த்திரமாகப் பெற்றநுபவித்த பெரியோர்கள் திருவாக்கினுங் கண்டுகொள்க. அஃதாவது "அதிராம்புலன்கரிக ளாயுமனந்திண்டேர், கதிரொன்றியகுணமாக் காலாட் - சதுரங்கம், பூட்டினாற்போலிருக்கப் புக்கடிநிற்கும்புதுமை, காட்டினனம்பலவன்காண்." என்றமையா லிதனையிருவினையொப்புஞ் சத்திநிபாதமுமுண்டான பக்குவான்மாக்கள் ஞானாசாரியனிடத்திலே ஞானவுபதேசத்தைப்பெற்றுச் சாத்திரங்களையோதியுணர்ந்து பதிபசுபாசத்தின் வழக்குகளையும் பிறித்தறிந்து ஞானசாத்திரங்களைக் கேட்டுஞ் சிந்தித்துந் தெளிந்தும் வருமவதரத்து நிஷ்டாபரராகைக்குப் பக்குவரானவர்க ளந்தவாசாரியனிடத்திலே யுண்மையைப்பெற் றநுபவத்தி லறிகிறதொழிய நூல்களினு லறியப்படாதாகையா லந்தவுண்மையை யாசாரியன்கண்ணாகக் கண்டுகொள்க. அப்படியாகவுண்மை

யை யாசாரியன்முகாந்திரமாக வறிகிறதொழிய நூல்களினு லேயறியப்படாதென்பதற்கு. பி - ம். ஔவையார். "நல்ல னநூல்பலகற்கினுங்காண்பரிதே, யெல்லையிலாதசிவம்." எ-ம். திருமந்திரத்தில், "காட்டுங்குறியுங் கடந்தவர்காரண், மே ட்டின்புறத்தி லெழுதிவைத்தென்பயன், கூட்டுங்குருநந்தி கூ ட்டிடினல்லது, வாட்டின்கமுத்தினதாகறந்தற்றே." எ - து. கண்டுகொள்க. அன்றியுங் கேட்டுஞ் சிந்தித்துந் தெளிந்து நின்றுலு நிஷ்டைகூடும்பொழு தாசாரியனுலே கூடவேணு மென்பதற்கு. பி - ம், சித்தியாரில். "கேட்டலொடுசிந் தித்தல் தெளிதல்நிட்டை கிளத்தலெனவீரிரண்டாங் கிளக் கில்ஞான், வீட்டையடைந்திடுவர்நிட்டை மேவினோர்கள் மேவாததப்பினவர் மேலாயபதங்கட், கீட்டியபுண்ணியநாத ராகிபின்ப மினிதுநுகர்ந்தரனருளா லிந்தப்பார்மே, ஞட்டி யநற்குலத்தினில்வந் தவதரித்துக்குருவான் ஞானநிட்டைய டைந்தடைவர் நாதன்றுளே." எ - து. கண்டுகொள்க.

இதனுற்சொல்லியது சிவனுடையவருளிடமாகநின்று ஆன்மசுத்திபண்ணி நிற்குமவர்க ளந்தவருளுக்கு முதலாகி யசிவத்தோடுங்கூடி ஞேயத்தழுந்தி யான்மலாபம் பிறந்திரு க்கு மிடத்துக் கேவலசகலமிரண்டுநீங்கிச் சுத்தத்தோடுங் கூ டுகைக்குத் தத்துவமுப்பத்தாறோடுங்கூடி நிற்கச்செய்தே ய வையிற்றோடுங் கூடி ஜீவிப்பதுஞ்செய்யாம லறிவுகுலைவதுஞ் செய்யாமல் நிற்கிறதே சாக்கிரத்தி லதீதமென்னு முறைமை யை யறிவித்தது. (௩௦)

அப்படியருளிச்செய்த முறைமையிலே கரணங்களொ டுங்குமோ வென்று பார்த்தளவில் ஓரவதரத்திலு மொடுங்கு கைக்கு வழியில்லை இனியடியேன் தானுகவறிந் தொடுக்கிக் கொள்ளுவது பயனே தற்சுபாவத்திலே யொடுங்குகிறது ப

யனேவென்ற மாணவகனைநோக்கி யருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

ஒடுங்கிடாகரணந்தானே யொடுங்குமாறுணர்ந்தொடுக்க
வொடுங்கிடுமென்னினின்ற தொடுங்கிடாகரணமெல்லா
மொடுங்கிடவொடுங்கவுள்ள வுணர்வுதானொழியும்வேறு
யொடுங்கிடலன்றிமற்றவுண்மையையுணரொணுதே(௩க)

இந்நிலைகரண மிறந்தவிடமெனு
மந்நிலைபமுதா மதுவேறென்றது.

வி - ம். ஒடுங்கிடா கரணந்தானே. எ - து. கரணங்கள் தானுகவொடுங்கமாட்டாது,—ஒடுங்குமா றுணர்ந்தொடுக்க வொடுங்கிடுமென்னின். எ - து. கரணங்களொடுங்கும் வழியையறிந்து ஒடுக்க வவையொடுங்கு மென்னில்,— நின்றதொடுங்கிடா. எ - து. நீயறிந் தொடுக்குகையினுலே யறிகைக்குத் துணைக்கருவிகளா யுள்ளது ஒடுங்குத லில்லையாம்,— கரணமெல்லா மொடுங்கிடவொடுங்க. எ - து. தத்துவங்களெல்லா மொடுங்கத் தக்கதாக வொடுங்கினபொழுதே யான்மபோத மொடுங்குமென்னில் அப்பொழுது,—உள்ளவுணர்வுதா னொழியும். எ - து. பழையசிற்றறிவுதானுமில்லையாய்ச் சுத்தகேவலமே முத்தியென்கிற பாடாணவாதியத்தமாய்விடும். அப்படியானு லந்தச்சிவத்தை யறிந் தநுபவிக்கும்வழி யெங்ஙனேயென்னில்,— வேறுயொடுங்கிடலன்றி மற்ற வுண்மையையுணரொணுதே. எ - து. இந்தக் கரணங்க ளந்நியமாய்விடும்படி யுனக்குத்தரிசனமான ஞானத்தோடெ்கூடி நின்றுலொழிந்து அந்தச்சிவத்தையறிந் தநுபவிக்க வொண்ணுது. ஏ - று.

உ - ம். கரணங்க ளெல்லா மொடுங்கின ¦விடம் பாடாணவாதியத்தமாம் என்பதற்கு. பி - ம். சங்கற்ப நிராகரண

த்தில் "காரணபாவ மரணங்கருமர - மெய்ந்தவர்முத்தி சேர்ந்தவரன்றே." எ - ம். சித்தியாரில் "கரணங்கள்கெடவிருக்கை முத்தியாமென்னிற் கதியாகுஞ்சினைமுட்டை கருமரத்தினுயிர்கண், மரணங்கொண்டிடவுறங்க மயங்கிமூர்ச்சிக்க வாயுத்தம்பனைபண்ண வல்விடத்தையடையச், சரணங்கள் புகுநிழற்போற் றனையடையுஞ்சமாதி தவிராதுமலமிதுவும் பசுஞானமாகும்." எ - து. கண்டுகொள்க. வேறுயொடுங்கிடினன்றி என்றதற்கு. பி - ம். சித்தியாரில்முன்னிலு தாரணக்குறை "அரணங்களெரித்தவன்றனடியையறிவிறந்தங் கறிந்திடர்செறிந்ததுகளகற்றிடவே." எ - து. கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது ஆன்மா தத்துவாதீதனாய் நின்று சிவாநுபவத்தை யநுபவிக்குமிடத் தந்தத்தத்துவங்கள் தானுக வொடுங்காதென்று மறிந்தொடுக்கிக்கொள்ளு மவதரத்து நீயறிந்தொடுக்குகையினாலே யறிகைக்குத் துணைக்கருவியாயுள்ள தொடுங்காதென்றும் ஆனாலொடுங்குகைக்கு வழி யெங்ஙனேயென்று வினவ விவையிரண்டினுங் கூடாம லொடுங்குகைக்குவழி வேறேயென்னு முறைமையையறிவித்தது. (௩௪)

அப்படி யந்தத் தத்துவங்களோடுங்கூடி ஜீவிப்பதுமன்றிக் கேவலப்பட் டொன்று மறியாமற் கிடப்பது மன்றி வேறுயொடுங்கி யந்தச்சிவனைப் பெறுகைக்கு வழி யெப்படியென்று வினவ மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

பற்றிடுங்கருவியாவும் படர்ந்துணர்வளிக்குங்காலை
யுற்றறிந்திடுவதொன்றி லுணர்வினிலுண்மையாகு

மற்றதுபகல்விளக்கின் மாய்ந்திடவருவதுண்டேல்
பெற்றிடுமதனைமாயப் பிறப்பினையறுக்கலாமே (கூஉ)

பற்றிடுங்கருவிகள் பகல்விளக்கெனவே
பொற்பழிவுறவருள் பொருந்துமென்றது.

வி - ம். பற்றிடுங்கருவியாவும் படர்ந்துணர்வளிக்குங்காலை. எ - து. ஆன்மா பிரபஞ்சத்தோடுங் கூடத்தக்ககருவிகளெல்லாங்கூடி விரிந்தறிவிக்குமிடத்து,—உற்றறிந்திடுவதொன்றினுணர்வினினுண்மையாகும். எ - து. அந்தத்தத்துவங்களோடுங்கூடி யதுவதுவாய் நின்றறிந்து ஜீவிக்கிறது ஆன்மபோதத்தி னுண்மையாம்,— மற்றது பகல்விளக்கின் மாய்ந்திடவருவ துண்டேல். எ - து. அந்தக்கருவிகளு மான்மாவு மாதித்தன் சந்நிதியிலெரிகிற விளக்குப் பிரகாசங்கெட்டு நின்றெரிந்தாற்போலத் தந்தம் நிலைகுலையாமலிற்கச்செய்தே தம்மிற்கூடி ஜீவியாதபடி யருட்பிரகாச மேலிடத்தக்க துண்டாமாகில்,— பெற்றிடுமதனை. எ - து. ஆன்மா வந்தச்சிவாநுபவத்தைப் பெறுவதுஞ்செய்யும். அப்படிப்பெற்றால்,— மாயப்பிறப்பினையறுக்கலாமே. எ - து. மயக்கத்தைச்செய்கின்ற ஜநநத்தையும் போக்கலாம். எ - று.

நு - ம். மற்றதுமென்ற வும்மைகொண்டே ஆன்மாவுங் கருவிகளுமெனவறிக. என்னவே கருவிகளு மான்மாவும் பகல்விளக்குப்போல் நின்றே சிவனைப்பெறவேணுமெனபது மிரண்டுங்கூடி ஜீவியாம லிற்கவேணுமென்பதுங் கருத்து. இதற்கு. பி - ம். திருக்களிற்றுப்படியாரில், "அன்றிவருமைம்புலனுநீயுமசையாதே, நின்றபடிநிற்கமுன்னிற்கும்." எ - து. கண்டுகொள்க. பகல்விளக்குப்போலவென்பது தற்போதங் கெட்டுநிற்கையென வறிக. இ

தற்கு. பி - ம். திருவாசகத்தில். "வான்கெட்டுமாருத மாய்ந்தழனீர்மண்கெடினுந், தான்கெட்டலின்றிச் சலிப்பறி யாத்தன்மையனுக், கூன்கெட்டுயிர்கெட்டுணர்வுகெட் டென் னுள்ளமும்போய், நான்கெட்டவாபாடித் தெள்ளேணங்கொ ட்டாமோ." எ - ம். திருமந்திரத்தில். "ஒத்திட்டிருக்கவு டம்போடுயிர்தான், செத்திட்டிருப்பர் சிலசிவயோகிகள்" எ - ம். கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது தத்துவங்களு மான்மாவுந் தம்மி ற்கூடி ஜீவிக்கு முறைமையு மப்படிஜீவித்து நிற்கச்செய்தே யவையிரண்டும் பகல்விளக்குப்போலத் தற்போதம்ஜீவியா மனிற்கவே யந்தவருள்மேலிட்ட வவதரத் தான்மா வந்தவரு ளோடுங்கூடி யந்தச்சிவாநுபவத்தைப் பெறுமுறைமையுமறி வித்தது. (௩௨)

இங்ஙனந் தற்போதம் ஜீவியாமனின் றந்தச் சிவாநுபவ மாகிய முத்தியைப் பெறுகைக்கு அடியேன் செய்துவருகிற வியற்கை யேதென்று வினவ அதற்குவழி மேலருளிச்செய் வா னெடுத்துக்கொண்டருளியது.

முந்தியவொருமையாலே மொழிந்தவைகேட்டல் கேட்டல், சிந்தனைசெய்தலுண்மை தெளிந்திடலதுதா னாக, வந்தவாறெய்தனிட்டைமருவுதலென்றுநான்கா, மி ந்தவாறடைந்தோர்முத்தி யெய்தியவியல்பினோரே. (௩௩)

கேட்டல்முதலாக் கிளர்த்தல்நால்வகையும்
வாட்டருமுத்தியை மருவுமென்றது.

வி - ம். முந்தியவொருமையாலே மொழிந்தவை கேட் டல். எ - து. முன்ஜநநங்களிற் செய்துவந்த சரிதை கிரியா யோகங்களினது முற்றுதலினாலே யாசாரிய னருளிச்செய்த

ஞானவுபதேசங்களை யேகாக்கிர சித்தனாயிருந்து விரும்பிக் கேட்டல்,—கேட்டல் சிந்தனை செய்தல். எ-து. முன்சொல்லப்பட்ட ஞானவுபதேசமாகிய திரிபதார்த்தங்களை யிப்படியோ பதியினுண்மை யிப்படியேபசுவினுண்மை யிப்படியோ பாசத்தினுண்மையென்று மாராய்ந்து சிந்தித்தலாம்,—உண்மைதெளிந்திடல். எ-து. அப்படி யாராயப்பட்ட மூன்றினுள்ளும்பாசஞானமஞ்ஞானம்பசுஞானஞ்சுதந்தரஹீனமாகையால் இவையிரண்டையுங் கூட்டிச் சேட்டிப்பிக்கிறது பதிஞானம் அதுவேயுண்மையாக வுள்ளதென்றுகண் டதுவேபொருளாகத்தெளிதலே தெளிதலாம்,— அதுதானாக வந்தவாறெய்தனிட்டை மருவுதல். எ-து. அந்தப்பதியானது பெத்தான்மாக்களோடுங் கூடிநின்று காரியப்படுத்துச் செய்தே தானொருமுதலில்லை யென்னும்படி தோன்றாம னின்று காரியப்படுத்தினாற்போல நீயுமந்த ஞானத்தினாலே யல்லோ காரியப்பட்டு வருகிறோமென்கிறதை யறிந்து ஆன்மபோதம் ஜீவியாமல் ஞானந்தானாய் நின்றுவிடுதலே நிஷ்டையாம்,—என்றுநான்காம். எ-து. என்றிப்படி கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிஷ்டையென்று நாலுவகையாம்,— இந்தவாறடைந்தோர்முத்தி யெய்தியவியல்பினோரே. எ-து. இந்த வொழுங்கிலே கேட்டுச்சிந்தித்துத் தெளிந்து நிஷ்டையைக்கூடினவர்களே முத்திநெறியைப் பொருந்தினவர்கள். எ-று.

உ-ம். அதுதானாக வந்தவா றெய்தனிட்டை மருவுதல். எ-கு. பெத்தத்திற் சிவன்றோற்றமற் றான்மாவின்றோற்றமாய் நின்றாற்போல முத்தியி லான்மாவின் றோற்றமற்றுச் சிவதோற்றமாய் நிற்கவென்றதற்கு. பி-ம். இருபாவிருபஃதில். "நாடா -வென்னுட்கரந் தென்பின்வந்தருளி- யென்னையுந்தன்னையு மறிவின்றியற்று - மென்னதியானெனு மகந்தையுங்கண்- டியாவரியாவையு மியாங்கணுஞ்சென்று-பு

க்குழிப்புக்குப்பெயர்த்துழிப்பெயர்து - மிக்கபோகம் வி ளையால்விளைத்திட்- டெற்பணியாளா யெனைப்பிறியாதே-யோ டிமீள்கெனவாடல்பார்த்திட் - டென்வழிநின்றனனெந்தை." இதுபெத்தம். இனிமுத்திக்கு. பி - ம். முன்னி லுதாரணக் குறை "அன்றே - வருண்மிகவுடைமையி னருட்டுறைவந்து- பொருண்மிகவருடலும் பொய்ப்பகையாதலுங் - கைகண்டு கொள்ளெனக் கடலுலசறிய- மெய்கண்டதேவ னெனப்பெ யர்விரீஇத் - தன்னுட்கரந்து தான்முன்னாகித் - தன்னதுந்தா னுமா யென்னையின்றாக்கி" எ - து. கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது ஆன்மாக்கள் முத்திபெறுமிடத்து க் கேட்டுஞ் சிந்தித்துந் தெளிந்து நிஷ்டைகூடியு முத்தியைப் பெறு முறைமையை யறிவித்தது. (௩௩)

அப்படி நிஷ்டைகூடி முத்தியைப்பெறுகிற தொழியச் சாத்திரங்களையோதிக் கேட்டுஞ் சிந்தித்துந் தெளிந்து நின் றாலதுகொண்டே முத்தியாகாதோ வென்ற மாணவகனை நோக்கி யவைபாசஞானமும் பசுஞானமு மாகையா லதனா ல்முத்தியுண்டாகாது அந்தப்பதிஞானத்தோடேகூடுகிறதேநி ஷ்டையென்று மந்தநிஷ்டையுண்டாகிறதே முத்தியென்றும் வருமுறைமையை மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்ட ருளியது.

பாசமாஞானத்தாலும் படர்பசுஞானத்தாலும்
மீசனையறியவொண்ணா திறையருள்ஞானநண்ணித்
தேசுறுமதனன்முன்னைச் சிற்றறிவொழிந்துசேர்ந்து
நேசமோடுயர்பரத்து நிற்பதுஞானநிட்டை. (௩ச)

பலகலைஞானமும் பல்லுயிர்ஞானமுந்
தலைவனையணுகாத் தன்மைசாற்றியது.

வி - ம். பாசமாஞானத்தாலும் படர்பசு ஞானத்தாலு மீசனை யறியவொண்ணாது. எ - து. வேதாகமபுராண சாத்திரங்களென்று சொல்லப்பட்டவையிற்றா லறியும் பாச ஞானத்தாலுந் தத்துவங்களெல்லாங் கழன்றவிடத் தான்மா தானே சிவமாமென்றுசொல்லுகிற பசுஞானத்தாலுஞ் சிவனைக் கூடவொண்ணாது. பின்னை யெங்ஙனேயென்னில்,— இறையருள் ஞானநண்ணித் தேசுறுமதனால். எ து. கத்தாவினுடைய திருவருளாலே யந்தஞானத்தைப் பொருந்தி யவ்விடத்துப் பிரகாசித்துநின்ற திருவருளாலே,— முன்னைச் சிற்றறிவொழிந்து சேர்ந்து. எ - து. பழைய விச்சாஞானக்கிரியைக ளாகிய வான்மபோதத்தை விட்டு அந்தச் சிவஞானத்திலே பொருந்தி,— நேசமோடுயர்பரத்து நிற்பது ஞானநிட்டை எ - து. விருப்பத்துடனேயந்த ஞானத்துக்கு மேலான சிவத்துடனேநிற்குமதுவே ஞான நிஷ்டையாம்.

வி - பு. வேதாகம புராண சாத்திரங்களைப் பாசஞான மென்றது அவையிற்றை யறியுமிடத்துத் திரிவித கரணங்களைக்கொண் டறியவேண்டுகையினாலெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில். "வேதசாத்திரமிருதிபுராணகலைஞானம் விரும்பசவைவைகரியாதித்திறங்கள்மேலா, நாதமுடிவானவெலாம்பாசஞானம்." எ - து. கண்டுகொள்க. ஆன்மா தத்துவங்களெல்லாங் கழன்றவிடந்தானே சிவமென்று சொல்லுகிறதைப் பசுஞானமென்றது ஆன்மா வவ்விடத்தொருபொருளோடுங்கூடி யநுபோகப்படாததுகொண் டென வறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில். முன்னிலுதாரணக்குறை. "நணுகியான்மாவிவைகீழ்நாடலாலே, காதலினான் பிரமமென்னுஞானங் கருதுபசுஞானமிவனுடலிற்கட்டுண், டோதியுணர்ந்தொன்றென்றுவுணர்ந்திடலாற்பசுவா

மொன்றாகச்சிவனியல்பினுணர்ந்திடுவன்சானே." எ-து. கண்டுகொள்க. ஆகையா லான்மாசிவமாகாதெனக்கொள்க. ஆன்மாசிவமாமென்னிற் சகசஞானமுண்டாகவும் வேணுமெனவறிக. இறையருண்ஞானநண்ணி என்றது ஆன்மாசிவனையறியுமிடத் தந்தச்சிவனுடையஞானத்தைக்கொண்டு சிவனையறியவேண்டுமென்றதெனவறிக. இதற்கு. பி-ம். திருவாசகத்தில். "அவனருளாலே யவன்றாள்வணங்கி." எ-து. கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது ஆன்மாக்கள் சிவனைப்பெறுமிடத்துப் பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் பதியைக்கூடவொண்ணாதென்றும் அந்தப்பதிஞானங்கொண்டே பதியைக்கூடவேணுமென்னு முறைமையையுமறிவித்தது. (௩௪)

அப்படித்தற்போதம் ஜீவியாமனிற்கவென்று லதாமுடிடாது அடியேனின்று சாதித்துப்பெறத்தக்கதாக வெளிதாகவொருவழி கற்பித்தருளவேணுமென்ற மாணவகனைநோக்கி முன்கற்பித்த நிஷ்டைகைகூடுகைக்கு வேறேயுபாயநிஷ்டையாக வொருவழி யருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

விளம்பியவகையினிட்டை மேவிடலரிதேன்முன்ன, மளந்தறிவளித்தவற்றி னளவுமற்றவற்றினாலே, வுளங்கொளுந்தனையுமுள்ள படியுமுற்றுணர்ந்துசெவ்வே, தளர்ந்திடாதுவப்பமற்றத் தன்மையதாகுந்தானே. (௩௫)

போற்றருநிட்டை பொருந்ாதவருக்
கூற்றமுளதா முபாயமுரைத்தது.

வி-ம். விளம்பியவகையினிட்டை மேவிடலரிதேல் எ-து. முன்சொன்ன முறைமையினாலே யுண்டானநிஷ

டைகூடுதற் கரிதாமாயின்,— முன்னமளந்தறிவளித்தவற்றினளவும். எ-து. முன்பு பெத்தநிலையிலே தனக்குவேண்டின புசிப்புக்குத்தக்கதாக யறிவித்துக்கொண்டுநின்ற தத்துவங்களின துண்மையும்,— மற்றவற்றினாலே யுளங்கொளுந்தனையும். எ - து. அந்தத்தத்துவங்களினாலேயறிந் தின்பதுன்பங்களைப்புசித்துவருகிற தன்னுடைய வுண்மையையும்,— உள்ளபடியும். எ-து. கன்மத்துக்கீடாகத் தத்துவங்களையுந் தன்னையுங்கூட்டிப் புசிப்பிக்கிறகத்தாவின் முறைமையும்,— உற்றுணர்ந்து. எ - து. இவைமூன்றையுமநுபவத்தினாலேயறிந்து,—செவ்வேதளர்ந்திடாதுவப்ப. எ - து. இவையிற்றுக்குச் சலிப்பின்றித் தவறுவராமனோநின்று அந்தப்பொருளை விரும்பவே,—மற்றத்தன்மையதாகுந்தானே. எ - து. முன் சொல்லப்பட்ட நிஷ்டையின் முறைமையாகும். எ - று.

று - ம். தத்துவங்களினுண்மையறிய என்றது தத்துவங்க ளான்மாகூடினாலொழியவறியாதாகையா லவையிற்றை ஜடமென்றதெனவறிக. ஆன்மாவி னுண்மையை யறிய என்றது ஆன்மாதானாகவறிகைக்குச் சுதந்தரமில்லாதனுகொண்டே சுதந்தரஹீனனென்றதெனவறிக. கத்தாவினுண்மையையறிய என்றது அந்தத்தத்துவங்கள் ஜடமாகையாலு மான்மா தற்சுதந்தரமில்லாதவனாகையாலு மிவையிரண்டையுங்கூட்டிப் புசிப்பிக்கிறது கத்தாவென்பதெனவறிக. என்னுமிவையிற்றுக்கு. பி - ம். போற்றிப்பஃறொடையில். "நாடுகின்ற, வெப்பிறப்புமுற்செய் யிருவினையானிச்சயித்துப்—பொற்புடையதாய்தந்தை போகத்திற்—கர்ப்பமாய்ப், புல்லிற்பனிபோற் புகுந்திவலைக்குட்புகுங்கா—லெல்லைப்படாவுதாத் தீண்டியதீப்—பல்வகையா,லங்கேகிடந்த வநாதியுயிர்தம்பசியா—லெங்கேனுமாக வெடுக்குமென—வெங்கும்பிக் காயக்கருக்குழியிற் காத்திருந்துங்காமியத்துக்—கேயக்கை

கால்முதலா யெவ்வுறுப்புந்—தீதறவே,செய்துதிருத்திப்பின் பியோகிருத்திமுன்புக்க — வையவழியேகொண் டணைகின்ற—பொய்யாத, வல்லபமேபோற்றியம் மாயத்தாருன்மறைப்ப — நல்லவறிவொழிந்து நன்றுதீங்—கெல்லையுரு, வக்காலந்தன்னிற் பசியையறிவித்தழுவித்— துக்காவிசோரத்தாயுண்ணடுங்கி — மிக்கோங்குஞ், சிந்தையுருகமுலையுருகத் தீஞ்சுவைப்பால்—வந்துமடுப்பக்கண்டு வாழ்ந்திருப்ப—பந்தித்த, பாசப்பெருங்கயிற்றுற் பல்லுயிரும்பாலிக்க— நேசத்தைவைத்த நெறிபோற்றி— யாசற்ற, பாளைப்பசும்பதத்தும் பாலனுமப்பதத்து — நாளுக்குநாள்சகல ஞானத்தும் — மீள்வித்துக், கொண்டாளவாளக் கருவிகொடுத்தோக்கநின்று—பண்டாரியான படிபோற்றி.'' எ - து. கண்டுகொள்க. செவ்வே தளர்ந்திடா துவப்ப. எ - கு. சலிப்பற்று நேரோநிற்க என்றது எல்லாஞ் சிவசேட்டையென்று கண்டு யானெனதுகெட நிற்கையெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில் "யான்செய்தேன்பிறர்செய்தா ரென்னதியானென்னு மிக்கோணைஞானவெரி யால்வெதுப்பிநிமிர்த்துத், தான்செவ்வேநின்றிடவத் தத்துவந்தானேரோ தனையளித்துமுன்னிற்கும் வினையொளித்திட்டோடு, நான்செய்தேனெனுமவர்க்குத் தானங்கின்றி நண்ணுவிக்கும்போகத்தைப் பண்ணுவிக்குங்கன்ம, மூன்செய்யாஞானந்தா னுதிப்பினல்லா லொருவருக்குமியானெனதிங் கொழியாதன்றே." எ - து. கண்டுகொள்க.

இதனுற்சொல்லியது முன்புகற்பித்த நிஷ்டை கைகூடாதென்ற மாணவகனைநோக்கி வேறுமோ ருபாயநிஷ்டையாகக்கொண்டு தத்துவங்களை ஜடமென்றுகண்டும் ஆன்மாவைத் தனக்கென்ன வறிவில்லாதவனென்று கண்டு மிவை யிரண்டையுஞ் சிவனேகூட்டிக் காரியப்படுத்துவனென்

பதங்கண்டு தற்சேட்டைகெட நிற்கவே பண்டுகற்பித்த நிஷ்டை தானேகைகூடுமென்னுமுறைமையை யறிவித்தது.(௩௫)

இங்ஙன மருளிச்செய்த நிஷ்டையை யடியேன் பாவித்துக்கொண்டு வருகிறேனென்று வினவின மாணவகனை நோக்கி யப்படி நீபாவிக்கிறபாவகங்களா லந்தப்பொருளைப் பெறவரிதென்றுந் தம்பிரானார் திருவருளைப்பெற்ற வடியார்களுக் கொருபாவகங்களு மில்லாம லெளிதாகப் பெறலாமென்றும் வருமுறைமையை மேலருளிச்செய்வா னெடுத்துக் கொண்டருளியது.

பாவிக்கின்மனுதிவேண்டும் பயனிலைகரணநீத்துப்
பாவிப்பனென்னிலென்ன பழுதுளபாவகத்தாற்
பாவிக்கவொண்ணாதென்று பாவிப்பனென்னினீயென்
பாவிக்கவேண்டாவாண்டபரனருள்பற்றினோர்க்கே(௩௬)

நீக்கமில்பாவக நிலையெப்பொருளுந்
தாக்கருஞானஞ் சாராதென்றது.

வி - ம். பாவிக்கின் மனுதிவேண்டும். எ - து. அந்த வுண்மையை நீ தியானிக்கு மிடத்து அந்தக்கரணங்களாகிய மனுதிகள்கூடியே தியானிக்கவேண்டும். ஆகையால் அது,— பயனிலை. எ - து. அந்தவுண்மையாகிய சிவம் வாக்குமனுதீதமாயிருக்கையா லதனைக் கரணங்களைக்கொண்டு நீ தியானிக்குமளவி லுனக்கொருபிரயோசனமு மில்லையாம்,— கரணநீத்துப் பாவிப்பனென்னில். எ - து. அந்தக்கரணங்களை நீக்கியே யந்தப்பொருளைப் பாவித்துக்கொள்ளுவேனென்று நீசொல்லில்,—என்ன. எ - து. அதனாற்பயனேதுண்டாவது,—பழுதுள. எ-து. அந்தக்கரணங்கள்நீங்கினவிடங் குற்றத்தையுடைய கேவலமுமாய் முத்திப்பழுதுசொல்லுகிற பா

டாணவாதியத்தமுமாமாகையா லதுபயனல்ல,—பாவகத்தா ற் பாவிக்கவொண்ணுனென்று பாவிப்பனென்னில். எ - து. அப்படியல்ல அடியேன்பாவிக்கிறபாவகங்களா லந்தப்பொ ருளைப்பாவிக்கப்படாதென்று பாவித்துக்கொள்ளுவேனென் னில்,— நீயென். எ - து. அந்தப்பொரு ளுன்னுடையபா வகங்களாற் பாவிக்கப்படாதேயாகு லுன்னுடைய முயற்சி யேன். ஆகையால்,— பாவிக்கவேண்டா வாண்டபரனருள் பற்றினோர்க்கே. எ - து. அப்படியான்மபோதத்தா லொ ன்றையுஞ்சுட்டிப் பாவிக்கவேண்டுவதில்லை நம்மையாண்ட தம்பிரானுரநுக்கிரகித்த திருவருளைப்பெற்றவடியாராயுள்ள வர்களுக்கு. எ - று.

உ - ம். கரணநீத்துப் பாவிப்பனென்றது பாடாணவா தியத்தமாமென்று சொன்னதற்கு. பி - ம். சங்கற்பநிராக ரணத்தில். "காட்சியென்னக் காணுத்துயர-மாட்சியைமுத் தி யெனவகுத்தனரே." எ - து. கண்டுகொள்க. அதனைப் பழுதென்று மறுத்ததற்கு. பி - ம். சங்கற்பநிராகரணத்தி ல். "காட்சியென்னக் காணுத்துயர-மாட்சியைமுத்தி யெ னவகுத்துரைக்கிற் - கரணுபாவ மரணங்கருமர - மேய்ந்த வர்முத்தி சேர்ந்தவரன்றே - யனையகதிக்கோர் முனைவரு ம்வேண்டா - தனிதருதுயர மெனுமிதுதிடமே - பாடாணத திற் கூடாமுத்தி." எ - ம். சித்தியாரில். "சரணங்கள்கெ டவிருக்கை முத்தியாமென்னிற் கதியாகுஞ்சினைமுட்டை க ருமரத்தினுயிர்கள், மரணங்கொண்டிடவுறங்க மயங்கிமூர் ச்சிக்க வாயுத்தம்பனைபண்ண வல்விடத்தையடையச், சரண ங்கள்புகுநிழற்போற் றனையடையுஞ்சமாதி தவிராதுமலமி துவும் பசுஞானமாகு, மரணங்களரித்தவன்றனடியையறி விறந்தங் கறிந்திடீர்செறிந்ததுக ளகற்றிடீரோ." எ - து. க ண்டுகொள்க.

இதனாற்சொல்லியது அந்த வுண்மைஞானத்தைப் பாவகத்தினாலே தியானித்துவருகிறேனென்ற மாணவகனைநோக்கி யதனை நீதியானிக்குமிடத்துக் கரணங்கள்கூடித் தியானிக்கையா லதுவுமத்தமல்லவென்றுங் கரணங்களைநீக்கித் தியானிக்குமிடத்துக் குற்றத்தையுடைய கேவலமே முத்தியென்கிற பாடாணவாதி யத்தமாமென்றுஞ் சிவனருளைப்பெற்ற வடியார்களுக் கொருபாவகங்களும் வேண்டாமென்றும் வருமுறைமையை யறிவித்தது. (௩௬)

இங்ஙனஞ் சொல்லப்பட்ட நிஷ்டையாலு முன்சொன்ன வுண்மைநிஷ்டையாலு மந்தச்சிவனைப்பெற்ற வான்மாக்களந்தச்சிவனோடுங்கூடி யொன்றுபட்டுப்போவர்களோ இரண்டுபட்டுநிற்பர்களோவென்று மாணவகன் ஆசாரியரை வினவினவவதரத்து மாயாவாதி யநாதியிலொன்றாயிருந்து பொன்னிலேயிருந்து பணிகள்விரிந்தாற்போல ஜீவான்மாவும் பிரபஞ்சமுமாக விரண்டாய்விரிந்து மீளவு மொன்றுபட்டுப்போமென்று சொல்லுகையும், அதனை யதல்லவென்று சைவர்வந்து அநாதியி லான்மாவுஞ்சிவமு மிரண்டாயிருந்து முத்தியி லொன்றுபட்டுப்போமென்று சொல்லுகையும், அன்றியும் ஐக்கியவாதிவந்து அநாதியில் ஆன்மாவுஞ் சிவமுமிரண்டாயிருந்து முத்தியி னீருநீருங்கூடி யொன்றானாற்போல ஒன்றுபட்டுப்போமென்று சொல்லுகையும், அதனையல்லவென்று சமவாதிவந்து ஆன்மாவுஞ்சிவமு முத்தியிலுமிரண்டாயிருக்குமென்று சொல்லுகையும் அன்றியும் மீளவுமவ னக்கினியைச்சேர்ந்த விரும்பு அக்கினியானாற்போலச் சிவனைச்சேர்ந்த வான்மாக்கள் சிவமாமென்று சொல்லுகையுமான வவதரத்து இவர்கள் சொன்னதெல்லாஞ் சித்தாந்தவத்தமல்லவென்று அவரவரத்தங்களை மறுத்துக்காட்டிச் சித்

தாந்தவுண்மையை யோருபமானங்காட்டி மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

ஒன்றிரண்டாகியொன்றி னொருமையாமிருமையாகி, யொன்றிலொன்றழியுமொன்று தென்னினொன்றுகாதீயி, னொன்றிரும்புறழினன்று முயிரினைந்தொழிலும்வேண்டு, மொன்றினின் றுணருமுண்மைக் குவமையாணவத்தோடொன்றே. (௩௭)

குற்றமருவுங் கோட்பாடகற்றி
முற்றியகதியின் முறைமையீதென்றது.

வி - ம். ஒன்றிரண்டாகி யொன்றினொருமையாம் எ-து. எங்கு மொருமுதலாக விரிந்திருக்கப்பட்ட பிரமமானது ஜீவான்மாவாகவிரிந்து மீளவு மொன்றுபட்டுப் போமென்னில் அது ஜீவான்மாவாக விரிந்தவவதரத்தும் அந்தப்பிரமத்தின் செய்திகளெல்லா முண்டாகவேணும். அப்படியில்லையாகையா லதுவத்தமல்லவெனவறிக,—இருமையாகி யொன்றிலொன்றழியும். எ - து. அநாதியே யான்மாவுஞ் சிவமு மிரண்டுமுதலாய்நின்று முத்தியி லொன்றாய்விடுமென்னில் அப்பொழு தான்மாவழியவேண்டும். அதனாற்பெறுவானில்லையாம். ஆகையா லதுவுமத்தமல்லவெனவறிக.—ஒன்று தென்னினொன்றுகா. எ - து. ஆன்மா முத்தியிலுஞ் சிவத்தோடுங்கூடாம லிரண்டுபட்டுநிற்குமென்னில் அப்பொழுது முத்தியிலொன்றுபட் டநுபவிக்கிறதே பயனென்கிற பேறுமில்லையா மெனவறிக,— தீயினொன்றிரும் புறழினன்றும். எ - து. அக்கினியைச்சேர்ந்த விரும்பு அக்கினியானாற்போல ஆன்மாவு மந்தச்சிவத்துடனேகூடிச் சிவமாமென்னில் அப்படியாகாது. அதேதென்னில்,— உயிரினைந்தொழிலும் வேண்டும். எ - து. ஆன்மாவுக்குப் பிராணனாய்நின்று சேட்டி

ப்பிக்கிற சிவனுடைய பஞ்சகிருத்தியமு மந்தச்சிவனைப்பெற் ற வான்மாக்களுஞ் செய்யவேண்டும். அத்தன்மை யான்மா க்களுக்கில்லையாகையா லதுவத்தமல்ல வெனவறிக. அப் படியானு லான்மாக்கள் சிவனைப்பெற்று நிற்குமுறைமை யெங்ஙனேயென்னில்,— ஒன்றிநின்றுணருமுண்மைக் குவ மையாணவத்தோடொன்றே. எ-து. அந்தச்சிவத்தோடுங் கூடி முத்தியைப்பெற் றின்பத்தையநுபவிக்கிறதற் குவமை யாவது ஆணவமலத்தோடுங்கூடி யதிதப்பட்டவான்மாக் கள் அந்தமலத்தோடு மொன்றுபட் டழிந்துபோவதுஞ் செய்யாம லிரண்டுபட்டு நீங்குவதுஞ்செய்யாமல் நின்றாற் போலக் கூடியநுபவிக்கும். எ-று.

உ-ம். இங்ஙனஞ்சொல்லப்பட்ட சமயிக ளுல்வர்க் கு முண்டான மதத்துக்கு மறுப்புக்குஞ் சங்கற்ப நிராகர ணத்திலே காட்டுதும். அவைவருமாறு:— ஒன்றிரண்டாகி யொன்றும் என்று மாயாவதி சொன்னதற்கு. பி-ம். "பொற்பணியியல்பினின்-வான்வளியநீர் மண்மருந்தன்ன- வானதாது வாறைங்கோசத்-தொகுதியாக்கை பகுதியதொ ருபுடை." எ-ம். மீளவும் பரத்திலே யொடுங்குமென் ற வன்சொன்னதற்கு. பி-ம். "வானுர்ந் திரைநுரைதரு வாய்மையிற்கூடும்." எ-ம். கண்டுகொள்க. அந்தப்பர த்திலேநின்றுதோன்றி ஜீவான்மாவாகநின்று மீளவும்பரத் திலே யொடுங்குமென்றதை யந்தப்பரத்துக்குண்டான விய ல்பெல்லா மிந்த ஜீவான்மாவுக்குண்டாகவேணுமென்று அ வனை யொருமையாமென்றும் மறுத்ததற்கு. பி-ம். "பரத்து ளாதே விவையும்பரமார்த்தம்-பரத்திலதேலொழி முன்பக ர்மாற்றும்." எ-து. கண்டுகொள்க. இனியிரண்டாவது இருமையாகி யொன்றும் என்று ஐக்கியவாதிசொன்னதற் கு. பி-ம். "நீருநீருஞ் சேருந்தகையி-னறிவினறிவு செ

றிவுறப்பொருந்தி - யொன்றும்." எ-து. கண்டுகொள்க. அத னைமறுத்ததற்கு. பி - ம். "உண்மையிலிருமையு மொளியே யெனிலொரு - தன்மையதாகமுன் சாற்றினரிலரோ." எ - து. கண்டுகொள்க. அன்றியும் இருமையாகி யொன்றும் என்று சைவர்சொன்னதற்கு. பி - ம். "கருவியு மலமும் பிறிவுறப் பிறியா -ஞானநல்கலுந் தானதுநோக்கித்-தன்னையுமதனையுந் தன்முதற்பொருளையு - மின்னதென்றறியா விருவருமுயங் கி - யொன்றாயுறுபய னுவப்பு-மின்றாய்நிற்கு மிதுசிவகதி யே." எ-து.கண்டுகொள்க. அப்படி முத்தியிலொன்றுபட்டுப் போமென்னில் ஆன்மா வழிந்துபோமாகையினா லதுவத்த மல்லவென்று மொன்றினொன்றழியுமென்று மவனைமறுத் ததற்கு. பி - ம். "இருவருங்கூடி யொருபயனாய்த்தென்- றருளினையிவ்வா றபேதிகணிலையே.." எ - து. கண்டுகொ ள்க. அன்றியும் சித்தியாரிலும். "அணைந்துகெட்டதென்னிற், பொன்றுகையேல் முத்தியினைப் பெற்றவரார் புகல்நீ, யொ ன்றாகையே முத்தியெனிற் புருடனித்த னன்றாம்." எ - து. கண்டுகொள்க. இனி மூன்றுவது ஒன்றாதென்று சமவாதி சொன்னதற்கு. பி - ம். "முன்னொன்றனது முதிரொளிஞா ன- மறியாப்பச்சைச் சிறுபுழுக்கவர்ந்த- வண்டெனவுயிரைக் கொண்டிடுமுயிரது - தன்னைநோக்கித் தானதுவாகி - யைவ கைத்தொழிலு மெய்வகையுணர்வும் - பிறியாவாறுபெற்று த் - திரியாப்பெரியோர் திரட்சிசேர்ந்திடுமே." எ - து. கண் டுகொள்க. அப்படிக்கூடி யநுபவியாதபொழுது சாயுச்சிய மாகாதாகையா லொன்றாகாதென் றவனைமறுத்ததற்கு: பி-ம். "முத்தியுற்ற நற்றவரவையிடைச் - சேர்வரென்றனை சார்வ ருமுத்தி - சாலோக்கியமோ சாயுச்சியமெனிற் - பந்தமுற் ற கந்தலகழித்த- லறிவினோடறிவு பிறியாப்பெற்றி- வேண் டுமென்பதற் கீண்டிவரிவ்வா-திருப்பவொன்பதற் குருத்தான்

வேண்டு-மண்ணலதருளி னண்ணியிருப்பினுஞ் - சிவன்முத்த ரொன் றேதினரகன்று - நீங்கியு முருவ நீங்காதாயி - ஞேங் கியமுந்தி யாவதெனுரைக்க." எ - து. கண்டுகொள்க. இ னிதீயினொன்றிரும் புறழினன்றும் என்று மீளவுமவன்சொ ல்ல அப்படியாகாது ஆமென்னில் உயிரினைந்தொழிலும் வே ண்டும் என்று நாலாவது அவனைமறுத்ததற்கு. பி - ம். "மு ன்னவன்றன்மை - யெய்தினரொல்லாச் செய்தியுஞ்செய்வ- ரிரும்பெரியெய்தித் தருஞ்செயறகவெனிற் - பொருணிலைகி டக்க வொருதிட்டாந்தப் - பேறேயாயிற்சேருக்கதுவிய - பு னலொருபுடைசேர் கனறகுமாயினும் - வேறொருபொரு ளை நீருக்கிலதே - நெருப்பெனுமிதனி லுருத்தனிகாட்டுக - வங்கியுமொன்றிற் றங்கினின்றல்லது-தன்றொழினடத்தா தெ ன்றறியினீ - யிரும்பனற்செய்தி தரும்பரிசுளதே." எ - து. கண்டுகொள்க. இனி யைந்தாவது ஒன்றுபட்டு முத்தியி லே யநுபவித்து நிற்கிறத்துக்குத்திருஷ்டாந்த மாணவமல த்தோடுங்கூடி யதீதப்பட்டுக்கிடக்குமாபோலே யென்றது ஆன்மா சிவத்தோடுங்கூடி யொன்றுபட்டழிவதுமில்லை இர ண்டுபட்டு நீங்குவதுமில்லையென்றதெனவறிக. இதற்கு. பி-ம். இந்நூலிலே முன்னே "உடலுயிர்கண்ணருக்கனறிவொ ளிபோற் பிறிவருமத்துவிதம்"என்றது மிப்பொருட்பற்றி யெ னவறிக. அன்றியுந் திருவருட்பயனில். "ஒன்றாலுமொன் று திரண்டாலுமோசையெழா, தென்றாலுமொன்றிரண்டுமி ல்." எ - ம். "தாடலைபோற்கூடியவை தானிகழாவேற்றி ன்பக், கூடலைநீயேகமெனக்கொள்." எ - ம். இந்நூல்களை ன்றித் திருவளைப்பெற்றநுபவித்த வடியார்கள் திருவாக்கு களிலு முண்டானகருத்து சிவாநந்தமாலையில், "தாணுவி னோடத்துவிதஞ் சாதிக்குமாணவனை, யாணவத்தோடத்து வித மாக்கினரார் — கோணறவே, யென்னுனையென்னுனை

யென்னுணையேகமிரண், டென்னுமற்சும்மா விரு." என்னும் வகைகளினு மிப்பொருளைக் கண்டுகொள்க. ஆகையால் திருஷ்டாந்தத்தினாலுமநுபவத்தினாலுஞ் சிவனைப் பெற்ற வான்மாக்கண் முத்தியி லொன்றுபட்டழிவதுஞ்செய்யாம லிரண்டுபட்டுநீங்குவதுஞ்செய்யாம லத்துவிதமாய் நின்றே யநுபவிப்பார்களென்பது கருத்து..

இதனாற் சொல்லியது ஆன்மா வந்தப்பரத்திலேநின்றுந் தோன்றி மீளவு மந்தப்பரத்திலே யொன்றுபட்டுப்போமென்கிற மாயாவாதியும், அதல்ல ஆன்மா வநாதியி லிரண்டாயிருந்து முத்தியி லொன்றுமென்கிற ஐக்கியவாதியுஞ் சைவரும், அதல்ல முத்தியிலு மிரண்டுபட்டுச் சிவனைப்போலுஞ் சமமாயிருக்குமென்றும் அன்றியும் அக்கினியைச்சேர்ந்த விரும்பு அந்த வக்கினிசெய்யு முறைமைகளெல்லாஞ் செய்தாற்போலச் சிவனைப்பெற்றவர்களுஞ் சிவனைப்போலப் பஞ்சகிருத்தியங்களுஞ்செய்வர்களென்ற சமவாதியுந், தந்தமதங்களைச்சொல்ல வவர்களத்தங்களைமறுத்துக்காட்டிச் சைவசித்தாந்தவுண்மை யான்மா வாணவமலத்தோடுங்கூடின தன்மைபோல விருக்குமென்னு முறைமையை யறிவித்தது. (௩எ)

இங்ஙனஞ் சொல்லப்பட்ட வுண்மைஞானத்தைப்பெற்ற வான்மாக்களிடத்துண்டாகிய பாசமான வாணவமல மழியுமோ நிற்குமோவென்று வினவின மாணவகனைநோக்கிப் பாசமழியுமென்னிற் பேதவாதி யத்தமாமென்றும் பாசமழியாதென்னிற் சமவாதி யத்தமாமென்றும் இந்தவிரண்டுவகையு மறுத்துக்காட்டி மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது,

அழிந்திடும்பாசமென்னி னித்தமென்றுரைத்தல் வேண்டா, வழிந்திடாதென்னின் ஞானமடைவதுகரு

தவேண்டா, வழிந்திடுஞ்சத்திநித்த மழிந்திடாவொளியி ன்முன்ன, ரழிந்திடுமிருளுநாச மடைந்திடாமிடைந்தி டாவே. (ᙈ௮)

மொழிந்திடுமூல மலத்தின்சத்தி
யழிந்திடுந்தன்னியல் பழியாதென்றது.

வி - ம். அழிந்திடும்பாசமென்னில். எ - து. முத்தியைப்பெற்ற வான்மாக்களிடத்துண்டாகிய யாணவமலமானது அழிந்துபோமென்று சொல்லுகில்,—நித்தமென்றுரைத்தல் வேண்டா. எ - து. பதிபசுபாசமென்று சொல்லப்பட்ட முதல்மூன்று மநாதிநித்தமென்று வேதாகமங்கள் சொல்லவேண்டுவதில்லையாம். ஆகையா லதுவத்தமல்ல,—அழிந்திடாதென்னில். எ - து. முத்தியிலு மழியாதென்னில்,—ஞானமடைவது கருதவேண்டா. எ - து. ஆணவமல மறியாமையைப்பண்ணிநிற்கையா லதுவான்மாவோடுங்கூடி மறைத்துநிற்குமட்டு மறிவாயுள்ள சிவத்தோடுங்கூடி யநுபவிக்கவென்கிறது சற்று நினைக்கவேண்டுவதில்லையாம். ஆகையாலதுவுமத்தமல்ல. பின்னையெங்ஙனேயென்னில்,—அழிந்திடுஞ்சத்தி நித்தமழிந்திடாது. எ - து. ஆன்மபோதத்தை யநாதியேமறைக்கப்பட்ட வந்தமலத்தின் காரியமாயுள்ள சத்தியழியும் அதனுடைய காரணமாகிய நித்தியத்துக் கழிவில்லையாம். அஃதென்போலவென்னில்,—ஒளியின்முன்ன ரழிந்திடுமிருளுநாசமடைந்திடா மிடைந்திடாவே. எ - து. ஆதித்தப்பிரகாச முதலாயுள்ள வொளிகளில் முன்னில்லாதவிருளானது அழிந்ததுமில்லை மறைந்துநின்றதுமில்லை. எ - று. என்னவே ஒளியின்மேலீடுகொண் டிருளடங்கித் தோற்றமுமற்றுக் காரியப்படாமனின்றாற்போல வருளின்மேலீடுகொண்டு மலங்கீழ்ப்பட்டுநின்றதெனவறிக. இதற்கு. பி-ம். போ

ற்றிப்பஃறொடையில். "சேணாரிருள்வடிவுஞ் செங்கதிரோன் பானிற்பாற்—காணுதொழியுங் கணக்கேபோ—லாணவத்தி, ஞதிகுறையாம லென்பாலணுகாம— னீதுநிறுத்துநீலேபோற்றி." எ-து. கண்டுகொள்க.

ஙு-ம். பாசமழியுமென்பதைப் பேதவாதி கருத்தென்றது அவன் செம்பிற் காளிதமானது குளிகையினாலேகெட்டுப் பொன்னானதன்மைபோல வான்மாவுக்குண்டானவாணவமலமு மருவினாலேகெட்டுச் சிவமயமாமென்றானெனவறிக. இதற்கு. பி-ம். சங்கற்பநிராகரணத்தில். "ஈசனதருளாற் பாசத்தொகுதி - செறிவுறுசெம்பிற் கறையுறுகளிம்பு- குளிகைதாக்கவொளிபெற்றாங்கு-நித்தசுத்த முத்தராக-வைத்தனருலகின் மறைவல்லோரே." எ-து. கண்டுகொள்க. இதனையாகாதெனறு மறுத்ததேதென்னில் பதிபசுபாசமூன்று நித்தியமென்றிருக்கையாலே பாசமழியவொண்ணாதென்றதெனவறிக. இதற்கு. பி-ம். சங்கற்பநிராகரணத்தில். "மறைகளாகமத் துறைகள்மற்றெவையு - நாசமில் பதிபசு பாசமென்றுரைத்த- லியர்த்தோர்குளிகை சயத்தாற்றாம்பிர - காளிதநாசம்பாசத்தேய்த்தல் - கூடாதன்றியுங் குளிகைசேருண - நீடாதழித்தநிலேநிலேயாகலிற்- பேதவாதமோதுதல்பிழையே - யின்னுமின்னுயிரோமங்குளிகை - தன்னிலந்நியந்தருவதுதிடனே." எ-து. கண்டுகொள்க. பாசமழியாதென்றது சமவாதிகருத்தென்றதேதென்னில் அவன்முத்தியைப்பெற்றவிடத்துஞ் சரீரமழியாதென்கையினாலே சரீரமுள்ளமட்டும் மும்மலமும் போகாதென்கையினாலே யதனையாகாதென மறுத்ததெனவறிக. இதற்கு. பி-ம். சங்கற்பநிராகரணத்தில். "அகன்று- நீங்கியுமுருவநீங்காதாயி- னோங்கியமுத்தி யாவதெனுரைக்க - செடியுடலணுகாக் குடிலேகொடுக்குமென் - றேதினேநீயே பேதாய்பகட்டுர - லொளிர்

சினைமுச்சித் தளிரொனுமிதுதகு - மிச்சாரூபநச்சினொன்னின் - மும்மலத்தேது மின்மையதன்றே - யிதுவளர்முத்திப் பதமெனவியம்புக." எ - து. கண்டுகொள்க. இனிமலத்தின்சத்தியாகிய காரியமழியு நித்தமாகியகாரணமழியாதென்பதற்கு. பி - ம். சித்தியாரில். "தெரிவரியமெய்ஞ்ஞானஞ்சேர்ந்தவாறே சிவம்பிரகாசிக்குமிங்கேசீவன்முத்தனுகு, முரியமலமௌடதத்தாற்றடுப்புண்டவிடமு மொள்ளெரியினுளிமுன்னரிருளுந்தேற்றின், வருபரல்சேர்நீர்மருவுகலங்கலும்போலாகி மாயாதேதன்சத்திமாய்ந்துகாயந், திரியுமளவும்முளதாய்ப்பின்புகாயஞ் சேராதவகைதானுந்தேயுமன்றே." எ - து. கண்டுகொள்க. அன்றியும் ஞானமிர்தத்திலும். "மிக்க - விடங்கெழுபெருவலியுளங்கொளமந்திரத் - தடங்கியதன்மையுமற்றேகுடங்கரிற் - கலங்கனீரினலங்கிளர்விழுக்கா - லளைந்தமாறென விளங்கிறந்தகன்ற - பாசப்பெருவலி தீர்த்தனன் - மாசில்ஞானப்பெருந்தகையே." எ - து. கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது பாசமழியுமோவென்று மழியாதோவென்றுங் கேட்ட மாணவகனைநோக்கிப் பாசமழியில் நித்தியத்துக்கு மழிவுண்டாமென்றும் பாசமழியாதென்னில் ஞானம்பிரகாசியாதென்று மறுத்துப் பாசத்தின்சத்தியழியுமன்றி நித்தியமழியாதென்று வருமுறைமையை யறிவித்தது. (௩௮)

மற்றுண்டான கன்மமுமாயையும் போகைக்கு வழியெங்ஙனேயென்று வினவ மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

எல்லையில்பிறவிநல்கு மிருவினையெரிசேர்வித்தி
னெல்லையினகலுமென்ற வுடற்பழவினைகளூட்டுங்

தொல்லையின்வருதல்போலத் தோன்றிருவினையதுண்டே
லல்லொளிபுரையுஞானத்தழலுறவழிந்துபோமே. (௩௬)

மும்மையாம்வினையு முயங்கியமாயையுஞ்
செம்மையாலகலுந் திறந்தெரிந்துரைத்தது.

வி - ம். எல்லையில்பிறவிநல்கு மிருவினை. எ - து. அளவிடப்படாத ஜநநங்களைத்தருகிற புண்ணியபாவமாகிய சஞ்சிதகன்மங்கள்,—எரிசேர்வித்தெனல்லையினகலும். எ- து. அக்கினியைச்சேர்ந்த விதைகளைப்போல வாசாரியன்செய்யப்பட்ட தீக்ஷைகளினாலே விரைவிலேகெட்டுப்போம்,—வன்றவுடற்பழவினைகளுட்டும். எ - து. எடுத்தவுடலுக் சமைத்தபிராரத்த மந்தவுடலுள் ளதனையும்புசித்து அந்தவுடலோடே யொக்கக்கெட்டுப்போம்.— தொல்லையில் வருதல்போலத் தோன்றிருவினையதுண்டேல். எ - து. முன்புண்டான ஜநநங்கடோறும் பிராரத்தகன்மம் புசிக்கச்செய்தே யாகாமியகன்ம மேறினாற்போல இப்பொழுது பிராரத்தகன்மம் புசிக்கச்செய்தே ஆகாமியங் கட்டுப்படாதோவென்னில் அப்படியுண்டாகாது. வாதனாபலத்தாலும் அபுத்திபூர்வத்தாலும் புண்ணியபாவங்கள் மேலைக்குஜநநமாகக் கட்டுப்படுமாகில்,— அல்லொளிபுரையுஞானத் தழலுறவழிந்துபோமே. எ - து. விளக்கின்முன் னிருள்போனாற்போல விவனிடத்திலுண்டாயிருக்கப்பட்ட ஞானாக்கினியினாலே யழிந்துபோம். எ - று.

வி - பு. எல்லையில்லாத ஜநநங்களைத்தருகிற விருவினையென்றது யெங்ஙனேயென்னி லொவ்வொரு ஜநநங்களையெடுத்தா லந்தஜநநங்கடோறும் வெகுவிதமான ஜநநங்களைக் கட்டுப்படுத்துமென்றதெனவறிக. இதற்கு. பி - ம். இருபாவிருபஃதில். "அத்துவாமெத்தியடங்காவினைகள்." எ - ம். இந்நூலினும். "முந்தநுகருந்துபயன்." எ - ம். வருமே

துக்களைக் கண்டுகொள்க. இங்ஙனங் கட்டுப்பட்டுக் கிடக்கிற சஞ்சிதகன்மங்களை யாசாரியன் தீக்ஷைகளினாலே போக்குவனென்றதற்கு. பி-ம். சித்தியாரில். "மூன்று திறத்தணுக்கள்செய்யுங்கன்மங்கட்கு முன்னிலையாமூவிரண்டாமத்துவாவி, லூன்றமுறையவையருத்தியறுத்துமலமுதிர்வித் தரும்பருவமடைதலுமேயாசானாகித், தோன்றிநகாரதவகைமுற்செய்கன்மத் துகளறுத்தங்கத்துவாதொடக்கறவேசோதித், தேன்றவுடற்கன்மமநுபவத்தினாலறுத்தின் கினிச்செய்கன்மமூலமலஞானத்தாலிடிப்பன்." எ-ம். போற்றிப்பஃறொடையினும். "செய்யதிருக், கண்ணருளாலேநோக்கிக் கடியபிறப்பாற்பட்ட—புண்ணுமிருவினையும்போயகல." எ-து. கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது சஞ்சிதகன்ம மாசாரியன் செய்யப்பட்ட தீக்ஷைகளினாலே போமென்றும் பிராரத்தகன்மமுடலுள்ளமட்டும்புசித் துடலோடே யொக்கமாயுமென்றும் ஆகாமியகன்ம முண்டானாலு மிவனிடத்திலுண்டாயிருக்கப்பட்ட ஞானாக்கினியினாலே போமென்னுமுறைமையு மறிவித்தது. (௩௯)

பத்தாஞ்சூத்திரமாகிய ஆன்மலாபமுற்றிற்று.

இங்ஙனஞ் சஞ்சிதகன்மமானது தீக்ஷைகளினாலே போமென்றும் பிராரத்தகன்ம மிந்தவுடலுள்ளமட்டும் புசித்துத் தொலையவேணுமென்றும் அதனாலுண்டாகப்பட்ட வாகாமியகன்மமான தவர்களிடத் துண்டாகிய ஞானத்தினாலே போமென்றும் முன்னர்ச்செய்யுளிலே யருளிச்செய்கையினா லப்படி வாதிக்கப்பட்ட கன்மங்கள் போக்கிக்கொள்ளுகைக் கந்தஞானநிலைமை கைகூடாத வவதரத்தும் பரிபாகமாக ஆன்மலாபமாகிய பத்தாஞ்சூத்திரத்துக்குமேலாக மு

ற்கூறின ஆன்மசுத்தியாகிய ஒன்பதாஞ்சூத்திரத்தின் பகுதியாகிய பஞ்சாக்ஷரதரிசனமாகிய ஐந்தெழுத்தருணிலையென்னும் அதிகாரம்வைக்கப்பட்டது.

அஃதாவது பதிபசுபாசமென்றுசொல்லப்பட்ட மூன்று முதலும் ஐந்துவகையாகநிற்கையா லந்தவைந்தினையுஞ் சிவனுடைய திருநாமமாகியபஞ்சாக்ஷரமு மைந்தெழுத்தாகையாலதிலேயடைத்துத் தரிசிப்பித்ததெனவறிக. அது ஐந்திலும் நின்றமுறைமை மேல் "திருவெழுத்தைந்தில்" என்னுஞ் செய்யுளிலே கண்டுகொள்க. இவ்வதிகாரத்துக்கு முந்தினசெய்யுளாகிய "பந்தமானவையறுத்து" என்னுஞ்செய்யுளுக்குத் தொந்தனைவருமாறு:— அஃதாவது அப்படிச்செய்யப்பட்ட தீக்ஷைகளினாலே சஞ்சிதகன்மம் போனாற்போல மற்றுள்ள கன்மங்கள் போகாதிருப்பானேனென்ற மாணவகனை நோக்கிப் பிராரத்தகன்ம மிந்தவுடலுள்ளமட்டும் புசித்தே தொலையுமென்பதற் கொருதிருஷ்டாந்தமுகமாக வருளிச்செய்து அப்படிவாதிக்கப்பட்ட கன்மங்கள் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைக் குருமுகாந்தரமாகவறிந்துச்சரிக்கிற சிவஞானிகளுக்குப் புசிப்புமாத்திரமாய் வந்துபோகிறதொழிய அவர்களை மேலிட்டு வருத்தமாட்டாதென்னு முறைமையை மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

பந்தமானவையறுத்துப் பவுதிகமுழலுமெல்லைச்
சந்தியாதொழியாதிங்குத் தன்மைபோல்வினையுஞ்சாரு
மந்தமாதிகளிலாத வஞ்செழுத்தருளினாலே
வந்தவாறுரைசெய்வாமா வாதியாபேதியாவே. (௪0)

உடலுறுநுகர்வு முற்றிடும்வினையு
மிடர்படவஞ்செழுத் தியம்புகவென்றது.

வி - ம். பந்தமானவையறுத்துப் பவுதிக முழலுமெல் லைச் சந்தியாதொழியாது. எ - து. தீக்ஷைகளினாலே க ன்மங்களைப் போக்கினாலும் பிராரத்தகன்ம மிந்தப்பூததேக முள்ளமட்டும்பொருந்துதல்தவிராது. அஃதென்போலவென் னில்,—இங்குத்தன்மைபோல். எ-து. பெருங்காயத்தினியல்பு போல. அஃதாவது பாத்திரததிலேயிட்டுவைத்த பெருங்கா யமானதை வைத்தவிடைகுறையாமல்வாங்கிப் பாத்திரத் தைத் தூய்தாய்க்கழுவிப்போட்டாலு மந்தப்பாத்திரமுள்ளம ட்டு மதிலுள்ள கந்தத்தின் வாசனைபோகாதாற்போல வெ ன்றதெனவறிக. அப்படிப் பிராரத்தகன்ம முண்டாகவே,— வினையுஞ்சாரும். எ - து. ஆகாமியகன்மமு மேறுதிராது. அப்படி யிங்ஙனம் பொருந்தப்பட்ட பிராரத்தமு மதனாலு ண்டாகிய வாகாமியமும்,— அந்தமாதிகளிலாத வஞ்செழுத் தருளினாலே வந்தவாறுணாசெய்வாரை. எ - து. முடிவுமு தலு மில்லாத ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஆசாரியன் கடாக்ஷித்த முறைமையிலே யுச்சரிக்கப்பட்ட சிவஞானிகளை,—வாதியா பேதியாவே. எ - து. அந்தப்பிராரத்தகன்மம் புசிப்புமா த்திரமாய் வந்துபோகிறதொழிய அவர்க ளீடுபடத்தக்கதா க மேலிட்டு வருத்தாது. அவர்க ளப்படியீடுபட்டு வருந்தா துகொண்டே மற்றவாகாமியகன்மமுமேறாது. அப்படியே யேறிற்றாகிலும் பேதமாக்கிவித்து ஜநநத்தை யுண்டாக்காது. எ - று. அன்றியு மிந்தப்பதத்துக்குப் பிராாத்தகன்மம் வா தியாது ஆகாமிய கன்மம் பேதியாதென்றதைப் பிராாத்த மொன்றிலேயும் வைத்துக்கொண் டொருமையாகக் கூறு வாருமுளர். அதுவழக்கல்ல வெனவறிக. அதற்குக் குற்றமே தென்னில் அப்படிப் பிராரத்தகன்மம் வாதியாதென்றால் பவுதிகமுழலுமெல்லைச்சந்தியாதொழியாது என்றபதத்துக் குப் பிராரத்தகன்மம் பூததேகமுள்ளமட்டும் பொருந்துதல்

தவிராதென் றறுதிகூற வழக்கில்லையாமெனவறிக. அன்றியும் சித்தியாரில்."ஏன்றவுடற் சன்மமநுபவத்தினலறுத்து." எ-ம்.திருவருட்பயனில். "ஏன்றவினை யுடலோடேகும்.''எ-ம். நூல்களில்வரும்பொருளுக்கும் விரோதமுமாமெனவறிக. இதுவன்றியும் பிராரத்தகன்மம் பேதியாது ஆகாமியகன்மம் வாதியாதென்பாருமுளர் அதுவும் வழக்கல்லவெனவறிக. அதற்குக்குற்றமேதென்னில் பேதியாதென்பது போகாதென்னும் பொருட்பெற்றுநிற்கையால் பூததேகமுள்ளமட்டும் பிராரத்தகன்மம் பொருந்துதல் தவிராதென்று முற்கூறுகையாலே மீளவு மதனையிரட்டித்துப் பொருட்படுத்தவேண்டியதில்லையாம், அல்லதூஉம் பஞ்சாக்ஷரத்தை யுச்சரிக்கிறவர்களுக்குப் பிராரத்தகன்மம் போகாதென்பதுவழக்கல்ல. அஃதெங்ஙனேயென்னில் பஞ்சாக்ஷாத்தை யுச்சரித்தால் கன்ம நீங்குமென்பதன்றிப் போகாதென்ப தெதுபோலவென்னில் ஔஷதங்கொண்டாலும் வியாதிபோகாதென்பதற்கொக்குமெனவறிக. ஆகையால் பிராரத்தகன்மம் பேதியாதென்பது வழக்கல்லவெனவறிக. அன்றியும் வாதியாபேதியாவென்பதை ஆகாமிய மொன்றிலேயும் வைத்துக்கொண்டு பஞ்சாக்ஷாத்தை யுச்சரிக்கிற சிவஞானிகளுக்கு ஆகாமியகன்மம் வாதியாது அல்லாமல் வாதித்துதாகிலு மதனலே பேதித்து ஜநநமுண்டாக்கா தென்பாருமுளர். அதுவும்வழக்கல்ல வெனவறிக. அதற்குக்குற்றமேதென்னில் இச்செய்யுளிலே பவுதிகமுழுவுமெல்லைச் சந்தியாதொழியாது என்று பிராரத்த கன்மத்துக்குச் சொல்லுகையினாலும் வினையுஞ்சாருமென்று ஆகாமிய கன்மத்துக்குச் சொல்லுகையினாலும் அன்றியு மிதுவே கருத்தென்பதைப்பற்றி அம்பலநாத தம்பிரானர் இச்செய்யுளுக்குக் கருத்தாக வருளிச்செய்ததும் "உடலுறுநுகர்வு முற்றிடும்வினையு, மிடர்படவஞ்செழுத் தி

யம்புகவென்றது." என்று பிராரத்தத்திற்கும் ஆகாமியத்திற்குமாக வருளிச்செய்கையினால் ஆகாமிய மொன்றிலுங்கூட்டிப் பொருட்படுத்துகை வழக்கல்ல வெனவறிக. ஆகையால் பிராரத்த கன்மமானது சிவஞானிகளுக்கு வாதனுபலத்தால் புசிப்புமாத்திரமாய் நிற்பதொழிய சிவஞானிகளை மேலிட்டு அவர்க ளீடுபடத்தக்கதாக வருத்தாதென்பதே வாதியாதென்பதற்கு வழக்கெனவறிக. அப்படிப் பிராரத்தகன்மம் வந்து தாக்கினும் அதனாலீடுபட்டு வருத்தப்படாமல் நின்றவர்களு முண்டோவென்னில் அப்படியுண்டு. அஃதியாரோவென்னில் அப்பரென்னுந் திருநாவுக்கரசுதம்பிரானார் சமணசமயத்தைவிட்டுச் சைவத்திலேவந்ததற்கு அந்தச்சமணர் வெகுண்டுகொண்டு வேண்டும்வருத்தங்கள் செய்தவளவிலும் அதனாலீடுபட்டு வருந்தாமல் நின்றதுண்டு. அதற்கு. பி - ம். திருக்களிற்றுப்படியாரில். "கொல்கரியினீற்றறையினஞ்சிற் கொலைதவிர்த்தல், கல்லைமிதப்பாகக் கடனீந்தல் - நல்ல, மருவார்மறைக்காட்டில் வாசறிறப்பித்தல், திருவாய்மொழியாளிச்செயல்." எ - து. கண்டுகொள்க. அப்பர் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை யுச்சரித்துக்கொண்டு நிற்கவே யந்தவமணர்செய்யப்பட்ட வருத்தங்களா லீடுபட்டதில்லை யென்பதற்கு. பி-ம். தேவாரத்தில் "சொற்றுணைவேதியன் சோதிவானவன், பொற்றுணைதிருந்தடி பொருந்தக்கைதொழக், கற்றுணைப் பூட்டி யோர்கடலிற்பாய்ச்சினு, நற்றுணையாவது நமச்சிவாயவே." எ - து. கண்டுகொள்க. அன்றியுஞ் சிவஞானிகளிடத்திலே கன்மங்கள்வந்து தாக்கினு மதனால் வருந்தார்களென்பதற்கு. பி - ம். சித்தியாரில் "அங்கித்தம்பனைவல்லார்க் கனல்சுடாதாகு மௌடதமந்திரமுடையார்க் கருவிடங்களேறா, வெங்குற்றகன்மமெலாஞ் செய்தாலுஞானிக் கிருவினைகள்சென்றணையா முற்செய்வினையிங்குத், தங்கிப்

போம்பாத்திரமுங் குலாலன்வினைதவிர்ந்த சக்கரமுங்கந்தித்துச் சுழலுமாபோல், மங்கிப்போய்வாதனையா லுழல்விக்குமெல்லா மலங்களும்பின்காயமொடுமாயுமன்றே." எ-ம். ஞானாமிர்தத்தில், "மண்வினைமாக்க டம்வினைமுடியா - திகிரியுருட்டியொருவியாங்கு - வருதலோவா மற்றுங்குவிவாய்த் — தசும்புறையிங்காங் கசும்புறத்துடைத்து- விருங்கடியிகவாப் பெருங்கடனல்லதை - யுடையதையுடையரோ வினையுணர்ந்தோரே." எ - து. கண்டுகொள்க. அந்தமாதிகளிலாத வைந்தெழுத்து. எ - கு. ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைத் தோற்றமு மீறுமில்லாதென்றதேதென்னில் சிவனுக்குத் தோற்றமு மீறுமில்லாததுகொண்டே ஸ்ரீபஞ்சாக்ஷரமுஞ் சிவனுடைய திருநாமமாகையா லதனையுமப்படிச்சொல்லப்பட்டதெனவறிக. இந்தப் பஞ்சாக்ஷரத்தைக் குருமுகாந்தரமாகவறிந் துச்சரிக்கிற சிவஞானிகளை யந்தக்கன்மங்கள் மேலிட்டு வருத்தாதென்றதற்கு. பி - ம். தேவாரத்தில், "விண்ணுறவடுக்கிய விறகின்வெவ்வழ, லுண்ணியபுகிலவை யொன்றுமில்லையாம், பண்ணியவுலகினிற் பயின்றபாவத்தை, நண்ணிநின்றறுப்பது நமச்சிவாயவே." எ - ம். அன்றியு மந்தப்பஞ்சாக்ஷரத்தை யறிந் துச்சரிக்கிறவர்களிடத்திலே சிவன் சாந்நித்தியமாவனென்பதற்கு. பி - ம். தேவாரத்தில், "ஏதுமொன்று மறிந்திலராயினு, மோதியஞ்செழுத் துள்ளுணர்வார்கட்குப், பேதமின்றி யவரவருள்ளத்தே, மாதுந்தாமு மகிழ்வர்மாற்பேறரே." எ - ம். அன்றியும் சித்தியாரில் ஒன்பதாஞ்சூத்திரத்தில் "அஞ்செழுத்தை விதிப்படி யுச்சரிக்க மதியருக்கனனை யரவம்போற்சீருன்று மான்மாவி லரனே." எ - ம். கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது ஆன்மாக்களுக் குண்டாகப்பட்ட கன்மங்களை தீக்ஷையினாலே யாசாரியன் கிருபைசெய்து

போக்கினாலும் பிராரத்தகன்ம முடலுள்ள மட்டும் புசித்தே தொலையுமென்றும் அங்ஙனம் பிராரத்த கன்ம முண்டாக வே ஆகாமியகன்ம முண்டாமென்றும் அப்படியுண்டாகப்ப ட்ட கன்மங்களிரண்டும் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைக் குருமுகாந்த ரமாகப்பெற் றுச்சரிக்கிற சிவஞானிகளுக்குப் பிராரத்தகன் மம் புசிப்புமாத்திரமாய் வந்துபோகிறதொழிய மேலிட்டுவ ருத்தாதென்றும் அது அப்படிவருத்தாதுகொண்டேயதனாலு ண்டாகியவாகாமியகன்மமும் பேதித்துக்கிளைத்து ஜநநத்தை யுண்டாக்காதென்றும்வருமுறைமையையறிவித்தது. (௯0)

இங்ஙனஞ் சொல்லப்பட்ட பஞ்சாக்ஷரத்திலே பதிபசு பாசங்கள் மூன்றும் ஐந்துவகையாகநின்றமுறைமை யெங்ங னேயென்றும் இதனை யாருச்சரிக்கப்படுமென்றும் வினவ மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

திருவெழுத்தைந்திலான்மாத்திரோதமாசருள்சிவஞ்சூழ்
தரநடுநின்றதொன்றுந் தன்மையுந்தொன்மையாகி
வருமநமிகுதியாலே வாசியிலாசையின்றிக்
கருவழிச்சுழலுமாறுங் காதலார்க்கோதலாமே. (௯௧)

தீதிலாவுண்மைத் திருவைந்தெழுத்தையுங்
காதலாமவர்க் கோதலாமென்றது.

வி - ம். திருவெழுத்தைந்திலான்மாத்திரோதமாசருள் சிவம். எ - து. சிவனுடையதிருநாமமாகிய நமசிவாயவெ ன்ற ஐந்தக்ஷரத்திலும் ஆன்மாவுந் திரோதசத்தியு மலமும் அ ருளும் சிவமும் என்றுசொல்லப்பட்ட ஐந்துமுதலுநிற்கும். அவையாவன யகாரத்திலே யான்மாவும் நகாரத்திலே தி ரோதசத்தியும் மகாரத்திலே மலமும் வகாரத்திலே யருளும் சிகாரத்திலே சிவமுமாக நின்றதெனவறிக. இவையைந்து

முதலினுஞ் சிவமுன்னாகவுச்சரிக்கும்பொழுது,— சூழ்தரநடு நின்றது. எ - து. திரோதமுமலமுமொருபாலும் அருளுஞ்சிவமுமொருபாலுமாக முன்பின்சூழ்ந்துநிற்க நடுநின்றது ஆன்மா,—ஒன்றுந்தன்மையுந்தொன்மையாகிவரும். எ - து. நடுவேநின்றவான்மாவானது அந்தவருளறிவித்தாலதனுலேயறிந்து மற்றமலமறைத்தாலதனுலேமறைப்புண்டும் இங்ஙனமிரண்டோடுங்கூடி யொன்றுபட் டதுவதுவாய்நின்றாலுந் தானொருமுதலாய்வருகிறது அநாதியேயுடையது. அப்படியிருக்கவும்,—* மநமிகுதியாலே. எ - து. மவ்வாகியமலமும் நவ்வாகியதிரோதசத்தியு மேலிட்டுநிற்கையாலே,—வாசியிலாசையின்றிக் கருவழிச்சுழலும். எ - து. வவ்வாகியவருளிலுஞ் சிவ்வாகியசிவத்திலு மாசையற்று ஜநநமரணதுக்கத்திலே நின்றழுந்தும்,—மாறுங்காதலார்க்கோதலாமே. எ - து. அந்தமலத்தின்கௌரவநீங்கி யருளிலேயாசையுடையவர்களுக்கு இந்தப்பஞ்சாக்ஷரத்தை யுச்சரிக்கலாம். எ - று.

ரு - ம். பதிபசுபாசமென்று சொல்லப்பட்ட மூன்றுமுதலும் ஐவகையாகநின்றதற்கு வழியேதென்னிற் சிவ்விலும் வவ்விலும் நவ்விலும் பதியின்கூறாகிய சிவமும் அருளுந் திரோதசத்தியு நினறதென்வறிக. யவ்விலே பசுவாகியவான்மாநின்றதெனவறிக. மவ்விலே பாசமாகியமலநின்றதெனவறிக. இதிலே முற்கூறிய பதியின்கூற்றுக்குப் பாசத்தின்பகுதியாயிருக்கப்பட்ட திரோதசத்தியைக் கூட்டினதேதென்னில் அஃதாவது ஆன்மாவைமறைக்கப்பட்ட வாணவமலத்தைப் பாகம்வருத்தவேண்டி யருளானது திரோதமாய்நின்று காரியப்படுத்துகையா லதனையும் பதியின்கூறாகச்

---

* மநமிகுதி என்பதை மலமிகுதியெனப்பாடமோதுவாருமுளர்.

சொல்லப்பட்டதெனவறிக. அப்படியானு லந்தவருளுக்குத் திரோதசத்தியென்று பேராகவேண்டுவா னேனென்னி லந் தமலத்தோடுங்கூடிக் காரியப்படுத்துகையா லவதரப்பெய ரானதெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில். "தூயவன் றனதோர்சத்தி திரோதானகரியதென்றும்." எ - ம். அன்றி யும் இந்நூலினும் "ஞாற் சினமருவுதிரோதாயி கருணையாகி." எ-ம். வருமேதுக்களைக்கண்டுகொள்க. நடுநின்றதொன்றுந்த ன்மையுந் தொன்மையாகிவரும். எ-கு.ஆன்மாவருளோடுமல த்தோடுங்கூடி யொன்றுபட்டு வருமென்பதற்கு. பி-ம். சித்தி யாரில். "சத்தசத்தறிவதான்மாத் தான்சத்துமசத்துமன்று, நித்தனுய்ச்சதசத்தாகி நின்றிடுமிரண்டின்பாலும்." எ - து. கண்டுகொள்க. மநமிருதியாலே வாசியிலாசையின்றிக் கரு வழிச்சுழலும், எ - கு. நவ்வாகிய திரோதத்தோடு மவ்வா கிய மலத்தோடுங்கூடிப் பிரபஞ்சப்பற்றுவிடாமல் நிற்குமள வும் ஜநநமரணதுக்கத்திலேநின் றழுந்துமென்றதற்கு.பி·ம். சித்தியாரில். "மலமாயைகன்மமாயே யந்திரோதாயிமன்னி ச், சலமாரும்பிறப்பிறப்பிற்றங்கி." எ - து. கண்டுகொள்க. மாறுங்காதலார்க்கோதலாமே. எ - கு. பிரபஞ்சப்பற்றுவி ட் டருளிலேயாசைப்பட்டவர்களுக்கென்றதற்கு. பி - ம். தி ருவாசகத்தில். "அருளைப்பெறுவா னாசைப்பட்டேன்கண்டா யம்மானே." எ - ம். "ஆசைப்பட்டே னாட்பட்டே னுன்ன டியேனே." எ-ம். கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது ஸ்ரீபஞ்சாக்ஷரத்திலே பதிபசுபா சமூன்றும் ஐந்தாகநின்றமுறைமையும் இதிற்பசுவாகிய வா ன்மா அந்தவருளையிழந்து மலத்தோடுங்கூடி ஜநநமரணதுக் கப்பட்டு நிற்குமுறைமையும் இந்தமலத்தின்மேலீடுநீங்கி ய ருளிலேயாசைப்பட்டவர்களுக் கிந்தப்பஞ்சாக்ஷரத்தை யு ச்சரிக்கலாமென்னுமுறைமையு மறிவித்தது. (௪௧)

இங்ஙனஞ்சொல்லப்பட்ட மலமுந் திரோதாயியுநீங்கி யந்தவருளையுஞ் சிவத்தையும் பெறும்வழியெப்படியென்று வினவ மேலருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

ஆசுறுதிரோதமேவா தகலுமாசிவமுன்னாக
வோசைகொளதனினம்மே லொழித்தருளோங்குமீள
வாசியையருளுமாயா மற்றதுபற்றுவுற்றங்
கீசனிலேகமாகு மிதுதிருவெழுத்தினீடே. (௪௨)

ஓங்கியதிருவெழுத் தினையுணர்ந்துரைப்பவர் .
நீங்கருஞ்சிவத்தினை நீங்காரென்றது.

வி - ம். ஆசுறுதிரோதமேவாதகலுமா சிவமுன்னாக வோசைகொள். எ - து. அஞ்ஞானமாகிய மலமும் அதனோடுங்கூடி யிருக்கப்பட்ட திரோதானசத்தியும் ஆன்மாவைப் பொருந்தாமனீங்கும்படி சிவத்தைமுன்னாகவுச்சரிக்க,— அதனில். எ - து. நீயுமப்படி யுச்சரிப்பையாமாகில்,—நம்மே லொழித்தருளோங்கும். எ - து. நவ்வாகிய திரோதசத்தியு மவ்வாகிய மலத்தின்மேலீட்டை நீக்கி யருளாகநின்று பிரகாசிக்கும். அதுவுமன்றியே,— மீளவாசியையருளும். எ - து. அங்ஙனமலத்தினின்று மீளவிட்ட வவ்வாகியவருள் சிவ்வாகியசிவத்தையுந் தாராநிற்கும்.— மாயா. எ - து. அப்படிமலபாசம்வந்த மகத்தானவான்மா,—மற்றதுபற்றுவுற்றங் கீசனிலேகமாகும். எ - து. முன்சொன்ன வருள்தாரகமாகச்சென் றந்தச்சிவத்தோடுங்கூடி யிரண்டறநின்றநுபவிக்கும்.— இதுதிருவெழுத்தினீடே. எ-து. இங்ஙனஞ்சொல்லப்பட்ட விது ஸ்ரீபஞ்சாக்ஷரத்தின் முறைமையாம். எ - று.

று - ம். ஆசென்றதைக் குற்றத்தையுடையமலமென்றதேதென்னில் ஆணவமலம் ஆன்மபோதத்தோடுங்கூடி யஞ்

ஞானத்தை விளைத்துநிற்கையாலெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில். "என்றுமஞ்ஞானங்காட்டு மாணவமிசைந்துநின்று." எ - து. கண்டுகொள்க. உறுதிரோதமென்றதை ஆணவமலத்தோடுங் கூடிநின்று பாகம்வருத்தப்பட்ட திரோதாயியென்றதேதென்னில் ஆன்மாவொடுமெநாதியேகூடிவரப்பட்ட ஆணவமலத்தைப் பாகம்வருத்தவேண்டி யருளாகிய கிருபாசத்தி யதனோடுங்கூடித் திரோதமாய்மறைத்துநின்றதெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில். "தூயவன்றனதோர்சத்தி திரோதானகரியதென்றும்". எ - ம். அன்றியும் இந்நூலினும்." பாகமாம்வகைநின்றுதிரோதானசத்தி பண்ணுதலான்மலமெனவும் பகர்வர்." எ - ம். கண்டுகொள்க. சிவமுன்னுகவோசைகொள் என்று சர்வமும் சிவசேட்டையாலொழியமுடியாதாகையாலே சிவத்தைமுன்னிட்டுக்கொண்டுநிற்கவென்றதெனவறிக. இதற்கு. பி - ம். திருக்களிற்றுப்படியாரில். "சிவமுதலேயன்றிமுத லில்லையென்றும்" எ- து. கண்டுகொள்க. நம்மேலொழித்தருளோங்கும். எ-து. நவ்வாகியதிரோதசத்தி மவ்வாகியமலத்தின்மேலீட்டைநீக்கி யருளாய்நின்று பிரகாசிக்குமென்றதற்கு. பி - ம். இந்நூலில் "முற்சினமருவுதிரோதாயிகருணையாகித் திருந்தியசத்திநிபாதந்திகழும்" எ - ம். திருவெம்பாவையில். "பேதித்து நம்மை வளர்த்தெடுத்தபெய்வளைதன்." எ - ம். வருமது கண்டுகொள்க. மாயாவென்றதை மகத்தானவான்மாவென்றதேதென்னில் அந்தச்சிவத்தை முன்னிட்டுநின் றுச்சரிக்கையினுலெனவறிக. இதற்கு. பி - ம். திருவாசகத்தில். "யானேயோதவஞ்செய்தேன் சிவாயநமவெனப்பெற்றேன்." எ - து. கண்டுகொள்க.

இதனுற்சொல்லியது அந்தமலங்கணீங்கத்தக்கதாகச் சிவ முன்னுகவுச்சரித்தால் முன்பு திரோதமாய்நின்ற வரு

ளானது அந்தச்சிவத்துடனேகூட்ட ஆன்மாவந்தச்சிவத்தோ டுங்கூடிப் பிரிவறநிற்கு முறைமையை யறிவித்தது. (௪௨)

ஐந்தெழுத்தருணிலை முற்றிற்று.

மேலிங்ஙனமுன்னருளிச்செய்யப்பட்ட வுண்மைநிஷ்டையாலு முபாயநிஷ்டையாலும் இப்பொழுதருளிச்செய்த வைந்தெழுத்தருணிலையாலுங் கன்மக்ஷயம்வந்த ஜீவன்முத்தர்களதுதன்மையுணர்த்துவா னெடுத்துக்கொண்டருளியது.

இதற்கு வகையேதென்னில். "மாயாமற்றது பற்றுவுற்றிங், கேசனிலேகமாகும்." எ - து. ஆன்மா சிவனோடே பொருந்தப்பட்டு நிற்குமென்னும் விதியைப்பற்றிச் சிவனோடு மிரண்டறக்கூடிநின்றே மலமாயாகன்மங்களைப் போக்கிக் கொள்ள வேண்டுகையால் ஐந்தெழுத்தருணிலைக்கு மேலாகப் பதினோராஞ்சூத்திரமும் பன்னிரண்டாஞ் சூத்திரமுமாகிய அணைந்தோர்தன்மையென்னு மதிகாரம்வைக்கப்பட்டது. இவ்வதிகாரத்துக் கந்தச்சூத்திர மிரண்டுநின்றதற்கு வழியேதென்னில் சிவஞானபோதத்தில். "காணுங்கண்ணுக்குக் காட்டுமுளம்போற், காணவுள்ளத்தைக் கண்டுகாட்டலி, னயராவன்பி னரன்கழல்செலுமே." என்கிறபதினோராஞ் சூத்திரத்துக்குக் கருத்துப் பரமேஸ்வரன் ஸ்ரீபாதங்களையணையுமாறுணர்த்துதனுதலிற் றென்றதனாலும் பன்னிரண்டாஞ் சூத்திரமாகிய "செம்மலர்நோன்றாள் சேரலொட்டா, வம்மலங்கழீஇ யன்பரொடுமரீஇ, மாலறநேய மலிந்தவர்வேடமு, மாலயந்தானு மரனெனத்தொழுமே." என்பதற்குக்கருத்து அசிந்திதனாய்நின்றபதியைச் சிந்திதனாய்க்கண்டு வழிபடுகைக் கருளிச்செய்கையினாலும் இந்நூலினு மிவ்வதிகாரத்துக்கு வகுத்தசெய்யுளாகிய "தீங்குறுமாயை" என்றவிருத்தந்தொடங்கி "தொண்டர்களிடம்" என்ற விருத்தமுடிவா

கிய செய்யுளாறினுள்ளும் "தீங்குறு" "குறிப்பிடம்" "அகம்புறம்" "அண்டம்" "மண்முதல்" என்னுஞ் செய்யுளைந்தினும் பரமேஸ்வரனது ஸ்ரீபாதங்களை யணைந்துநிற்கு முறைமையை யருளிச்செய்கையால் பதினோராஞ்சூத்திரமாகவும் "தொண்டர்கள்" என்றசெய்யுளொன்றும் அசிந்திதனாய்நின்ற பதியைச் சிந்திதனாகக்கண்டுநிற்கப்பட்டதிருவேடமும் சிவாலயமும் சிவனெனக்கண்டுவழிபடுகைக் கருளிச்செய்கையாலிது பன்னிரண்டாஞ் சூத்திரமாகவும் நின்றதெனவறிக. அப்படி யிந்தச்சூத்திரங்களிரண்டினு நின்றகருத் திவ்வதிகாரத்துக்கு வகுத்தசெய்யுட்களில் நின்றமுறைமை யெங்ஙனேயென்னில் "நேயத்தேதாங்குணர்வகத்தடங்கி" எ - ம். உறக்குறுவவர்போல் வாய்மையொழிந்தவை யொழிந்துபோமே." எ - ம். "ஞானந்திகழ்ந் தகம்புறமென்னாத செம்மையார் நன்மையோரே." எ - ம். "கண்டதோர்பொருளை யந்தக்கருத்தினாற்காணிற்றானே, யண்டநாயகனார்மேனி யானதேலையமின்றே." எ - ம் "ஞானக், கண்ணினானின்றியந்தக் கருத்தினாலவையுநோக்கி" எ - ம். பரமேஸ்வரனோடிரண்டறக்கூடி நிற்குமுறைமையை யருளிச்செய்கையால் இச்செய்யுளைந்தும் பதினோராஞ் சூத்திரமாக நின்றதெனவறிக. அன்றியும் "தொண்டர்களிடத்தும்" என்றவிருத்தமும் திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் அண்டருங்கண்டிலாதவண்ணலே யெனவணங்கிநிற்கைக் கருளிச்செய்கையால் இதுவொன்றும் பன்னிரண்டாஞ்சூத்திரமாக நின்றதெனவறிக. இந்தச்செய்யுளாறினுள்ளும் "தீங்குறுமாயை" என்றசெய்யுளுக்குத் தொந்தனைவருமாறு.

இங்ஙன முற்கூறியவகைகளாற் கன்மக்ஷயம்வந்த ஜீவன்முத்தர்கள் வாதனுபலத்தால் மலமாயாகன்மங்கள் மேலிடாம லுயிர்க்குயிராய்நிற்கிற சிவனுடையதிருவருள்ஞானத்

தோடுங்கூடி யிரண்டறநிற்குமுறைமையை யருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

தீங்குறுமாயைசேரா வகைவினைதிரிவிதத்தா
னீங்கிடநீங்காமூல நிறையிருளிரியநேயத்
தோங்குணர்வகத்தடங்கி யுளத்துளின்பொடுங்கநேரே
தூங்குவர்தாங்கியேகத் தொன்மையிற்றுகளிலோரே. ()

தீங்குடல்வினையுஞ் செறிவுறுமலமு
நீங்கிடவருளொடு நீங்காவொன்றது.

வி - ம். தீங்குறுமாயை சேராவகை. எ-து. ஆன்மாவான து குற்றத்தையுடைய மாயாதேகத்தை மேலெடாதபடி,—வினைதிரிவிதத்தானீங்கிட. எ- து. பிராரத்தம் புசிக்கச்செய்தே யுண்டாகப்பட்ட ஹிதாஹிதங்களாலேயேறுகிற வாகாமியமான புண்ணியபாவங்களாகியவினை மூன்றுவகையாக வறியப்பட்டஞானத்தினாலேவிட்டுப்போக. மூன்றுவகையாவது தன்னை வினையைத் தலைவனையறிகிறஞானமெனவறிக. அஃதேதென்னில் ஆன்மாவையுங் கன்மத்தையுஞ் சிவனையுமறிகிறதாயிருக்கும். அறிகிறதாவது ஆன்மாவோவென்றாற் றனக்கெனவறிவில்லாதவனென் றறிந்தும் கன்மமோவென்றால் ஜடமாயிருப்பதென் றறிந்தும் இவையிரண்டையுங்கூட்டிக் காரியப்படுத்துகிறது சிவனேயென்றுங் கண்டு தங்களுக்கு யாதாமொன்றால்வருகிற வின்பதுன்பங்களெல்லாஞ் சிவச்சேட்டையாலொழிய வுண்டாகாதென்று கண்டு அவர்கள் விருப்புவெறுப்பற் றிருப்பர்களென்றதெனவறிக.—நீங்காமூலநிறையிருளிரிய. எ - து. ஆன்மாவையொருகாலத்தினும் விட்டுநீங்காம லநாதியே வியாத்தமாய்மறைக்கப்பட்டவஞ் ஞானமாயிருண்டவாணவம் விட்டுநீங்கத்தக்கதாக,— நேயத்தோங்குணர்வகத்தடங்கி. எ - து. தங்களுள்ளத்திலே

யுதயஞ்செய்யப்பட்ட மிகப்பிரகாசமாகிய பேரறிவுக்குள்ளேயடங்கித் தற்போதம்ஜீவியாமனின்று. அன்றியுமிந்தப்பதத்துக்கு ஓங்குணர்வகத்தடங்கியென்று பாடமோதி அந்தவருளிலே தங்களையொடுக்கியென்று பொருளுரைப்பாருமுளர். இதிற் பொருளுக்கேற்க வந்தப்பாடத்தைக் கூட்டிக்கொள்க.—உளத்திலின்பொடுங்க. எ - து. தங்களிடத்திலே சிவபோதமாகிய பேரின்பம் பதிந்து விளையத்தக்கதாக,—நேரே தூங்குவர்தாங்கி. எ - து. தாங்கள்கொண்ட சமாதிக்குத் தவறுவரத்தக்க மயக்க விகற்பங்களிற்படாம லுறங்கா துறங்கியிருப்பார்கள். அவர்களாரொன்றில்,—ஏகத்தொன்மையிற் றுகளிலோரே. எ - து. ஆன்மாவினிடத்திலே யொன்றுபட்டுப் பழையதாய்வரப்பட்ட திரோதமறைப்புநீங்கிய கலியாணர்களாகிய சிவஞானிகள். எ - று.

ரு - ம். தீங்குறுமாயைசேரா. எ-து. குற்றத்தையுடையமாயாதேக மேலெடாதபடியென்று பொருட்கூறியதேதென்னில் ஆன்மாக்கள் மாயாதேகமெடுத்தால் மேலும் ஜநநத்துக்கேதுவாயுள்ள கன்மங்களையார்ஜித்துக்கொள்ளுகையாலே யப்படிச்சொன்னதெனவறிக. இதற்கு. பி-ம். ஞானமிர்தத்தில் “முடலையாக்கையின் வினைபிணிப்பானல்- வினைப்பொதியெறுட்டோ டணிப்போவின்றே.” எ - து. கண்டுகொள்க. இனி வினை திரிவிதத்தாநீங்கிட. எ - கு. தன்னைவினையைத் தலைவனையறிகிறஞானத்தினாலே வினைகளை நீக்கிக்கொள்ளலாமென்று பொருட்கூறியதன்றியே வினைதிரிவிதத்தால்நீங்கிட வென்பதைக் கழிகாலமாக்கி மூவகைவினைகளினும் பொதுப்பட வேற்றியாசாரியன் செய்யப்பட்டதீக்ஷையினாலே சஞ்சிதகன்மம்போமென்றும் பிராரத்தகன்மம உடலுள்ளமட்டும் புசித்தேதொலையுமென்றும் ஆகாமியகன்மம் அவர்களிடத்துண்டானஞானத்தினாலே போக்கிக்கொள்ளு

வார்ளென்னவுமாமெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில், "ஆசானுகித், தோன்றிநுகராதவகை முற்செய்கன்மத் தகளறுத்தங்கத்துவாதொடக்கறவேசோதித், தென்றவுடற்கன்மமறுபவத்தினுலறுத்திங் கினிச்செய்கன்மமூலமலஞானத்தாலிடிப்பன்." எ-னு. கண்டுகொள்க. அன்றியும் வினைதிரிவிதத்தால் நீங்கிட. எ-து. சிவனைநோக்கி மனத்தினுல் தியானித்தும் வாக்கினு லுச்சரித்துங் காயத்தினுற் றொழில்களைச் செய்தும் வினைகளை நீக்கிக்கொள்ளலாமென்னவு மாமெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில் "மனமதுநினையவாக்கு வழுத்தமந்திரங்கள்சொல்ல, வினமலர்கையிற்கொண்டங் கிச்சித்ததெய்வம்போற்றிச், சினமுதலகற்றிவாழுஞ் செயலறமானுலியார்க்கு,முனமொருதெய்வமெங்குஞ் செயற்குமுன்னிலையாமன்றே." எ-னு. கண்டுகொள்க. இனி நீங்காமலநிறையிருளிரிய. எ-து. ஆணவமல மொன்றுமிருக்கவும் ஒருகாலத்திலும் விட்டுநீங்காதமலம் விட்டுநீங்கவென்று பொருட்கூறியதேதென்னில் அந்தமலத்தின் காரியமான சத்திகளழியக் காரணமாகிய நித்திய மழியாதென்றதெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில் "உரியமலமௌடதத்தாற் றடுப்புண்டவிடமு மொள்ளெரியிலெனுளிமுன்ன ரிருளுற்றேற்றின், வருபரல்சேர்நீர்மருவு கலங்கலும்போலாகி மாயாதேதன்சத்தி மாய்ந்துகாயந் திரிபுமளவும்முளதாய்ப் பின்புகாயஞ் சேராதவகைதானுந் தேயுமன்றே." எ-ம். இந்நூலினும் "அழிந்திடுஞ்சத்தி நித்தமழிந்திடா" எ - ம். வருமேதுக்களைக் கண்டுகொள்க. இனி நேயத்தோங்குணர் வகத்தடங்கி. எ - து. எப்பொழுதும் பேரறிவாயுள்ள சிவத்தினுள்ளே யிவனொடுங்கித் தற்போதம் ஜீவியாமலிற்க வென்று பொருட்கூறியதேதென்னில் இவன் பழைய பிரபஞ்சவாதனைபோகிக்கூடிச் சத்தாதிவிடயங்களில் ஜீவியாமற் றற்போதத்தை மீட்டு அருளிலே யொடுக்கு

கை யெனவறிக. இதற்கு. பி - ம். திருவருட்பயனில் "புல னடக்கித் தம்முதற்கட் புக்குறுவர் போதார், தலநடக்கு மா மை தக." எ-ம். திருவள்ளுவப் பயனில் "உரனென்னுந்தோ டியானோறைந்துங்காப்பான், வரனென்னும்வைப்புக்கோர் வித்து." எ-ம். ஞானாமிர்தத்தில் "மாணவரும்படை—தாங்கிக்கி ளர-தராதரத்தெறிவேலினைஞர்போலப் - பொறிவாழ்புலப்ப கை தாங்கிப்பிறப்பற - வெறியுமறப்பெயர் வாட்கையும்வாட் கை." எ-ம். கண்டுகொள்க. இனியுளத்தினின்பொடுங்க. எ-து. தங்களிடத்திலே பேரின்பம் பதிந்துவிளையத்தக்கதாக நிற்பா ர்களென்றதேதென்னில் அந்தச்சிவஞானம்விளைந்த ஜீவன் முத்தராயுள்ளவர்கள் தங்களுள்ளத்திலே சிவனைத்தியாநிக் குமிடத் தந்தச்சிவ னங்கேபதிந் துநிற்கையா லப்படிச்சொ ன்னதெனவறிக. இதற்கு. பி-ம். சித்தியாரில். இந்தனத்தினெ ரிபாலி னெய்பழத்திரத மெள்ளின்கணெண்ணெயும்போ லெங்குமுள்ளிறைவன்,வந்தனைசெய்தெவ்விடத்தும் வழிபட வேயருளு மலமறுப்போரான்மாவின் மலரடிஞானத்தாற், சிந்தனைசெய்தர்ச்சிக்கிற் சிவனுளத்தேதோன்றித் தீயிரும் பைச்செய்வதுபோற் சீவன்றன்னைப், பந்தனையையறுத்தாத் தா னாக்கித்தன்னுருவப் பரப்பையெலாங்கொடுபுகுந்து பதி ப்பனிவன்பாலே." எ - ம். கோவைத்திருவாசகத்தினில் "நி னைவித்துத்தன்னையென் னெஞ்சத்திருத்திநின் றம்பலத்துப், புனைவித்தவீசன்" என்றது மிப்பொருட்பற்றி யெனவறிக. இனிநேரே தூங்குவர்தாங்கி. எ - து. மயக்கவிகற்பங்களி ற்படாம லுறங்காதுறங்கி யிருப்பர்களென்று பொருட்கூறி ய தேதென்னில் அவர்கள் கேவலசகல மிரண்டினுஞ் செல் லாமல் அருணித்திரையா யிருப்பார்க ளென்றதெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில். "அந்தக்கரணங்களொடுங் கூடாதேவாடாதே குழைந்திருப்பையாகில்." எ - ம். அரு

ணித்திரை என்றதற்கு போஜனவிதியில். "ஆரமுதாகிரருந்தி யெச்சிலச்சமகற்றி யடைகாய்நற்கடுக்காய்சுக் கடுத்த தொன்றைமென்று, கூரியபேருணர்வுடனே தூங்கிக்கங்குற் குளிர்வெம்மைக்கிசைபூசை கொள்ளநல்கி, யோருணர்வுநிவேதியா துண்ணுவாய்மை யுடையையாயுயர்ஞான போகமுற்றுச், சாருமருணித்திலாயு முற்றுணர்கஞானச் சரிதையிது மெய்கண்டான் சந்தானத்தே." எ - ம். கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது சிவஞானிகளாயுள்ள ஜீவன்முத்தர்கள் பிராரத்தந்தொலையுமளவுஞ் சிவனோடும் பிரிவறநின்று வியாபரிக்குமிடத்து மலமாயாகன்மங்களை நீக்கிக்கொள்ளுமுறைமையை யறிவித்தது. (௬௩)

இங்ஙனஞ் சொல்லப்பட்ட ஜீவன்முத்தராயுள்ளவர்கள் முன்பு செய்துவந்த நியமங்களா யுள்ளவையெல்லாஞ் செய்துவருவர்களோ விட்டுவிடுவர்களோவென்றுவினவ மேலருளிச்சேய்வா னெடுத்துக்கொண்டருளியது.

குறிப்பிடங்காலந்திக்கா சனங்கொள்கைகுலங்குணஞ்சீர், சிறப்புறுவிரதஞ்சீலந் தபஞ்சபந்தியானமெல்லா, மறுத்தறவொழிதல்செய்தன் மருவிடாமன்னுசெய்தி, யுறக்குறுபவர்போல்வாய்மை யொழிந்தவையொழிந்து போமே. (௬௪)

மெய்ப்பொருளுணர்ந்தவர் விரதந்துயில்பவர்
கைப்பொருளெனவே கழலுமென்றது.

வி - ம். குறிப்பிடம் எ - து. கங்கைகுமரி முதலாயுள்ள தீர்த்தங்களையுங் காசிதிருவம்பல முதலாயுள்ள சிவத்தானங்களையு நாடியிருக்கை,— காலம் எ - து. விஷுசு அயனம் சங்கிரம முதலாயுள்ள காலங்களிலே செய்யுங்கிரம

ங்கள்,—திக்கு எ - து. இந்தநாளைக்கின்னதிசையிலே போக லா மிருக்கலாம் இன்னமந்திர மின்னதிசையைப்பார்த்து ஜ பிக்கலாமென்னு முறைமைகள்,—ஆசனம். எ-து. பதுமாதன ம் கூர்மாதன முதலாயுள்ள வாதனங்களிட்டிருகை,—கொ ள்கை. எ-து. வாய்மை ஒப்புரவு ஈகைமுதலாயுள்ளகொள்கை கள்,—குலம். எ-து. பிராமணர்முதலாகச் சண்டாளர்களிரு கியகுலநீதிமுதலாயுள்ளவை,—குணம். எ-து. யாவராயினு ம வரவர்சீலத்தினு மொழுகுதல் ஒருவரைநிந்தியாமை புறங் கூறாமைமுதலாயுள்ளகுணங்கள்,— சீர். எ - து. அந்தந்தசா தியொழுங்கு குலையாமல்நடக்கை,—சிறப்புறுவிரதம். எ-து. கொல்லாவிரதம் அஷ்டவிரதம் முதலாயுள்ளவிரதங்கள்,— சீலம். எ - து. ஜாதித்தொழில் குணத்தொழில் பொறையு டைமை அருளுடைமை முதலாயுள்ளசீலங்கள்,— தவம். பஞ்சாக்கினிநடு ஜலத்தினடு முதலாகச்செய்யுந்தவங்கள்,— சபம். எ - து. தேவதைமந்திரங்கள் சத்திமந்திரங்கள் எதி ரேறுமந்திரம் திருவம்பலவித்தை முதலாயுள்ளஜபங்கள்,— தியானம். எ - து. ஆதாரம் நிராதாரம் பிராசாதமுதலாயுள் ள தியானங்கள்,—எல்லாம். எ - து. இப்படிச்குறிப்பிடமு தற் றியானமீறுகச்சொல்லப்பட்ட நியமங்களெல்லாம்,— மறுத்தறவொழிதல்செய்தன் மருவிடா. எ - து. அந்தவு ண்மைஞானத்தைப் பெற்றிருக்கிற சிவஞானிகளந்தநியமங் களை விட்டுவிடவேணுமென்று தீரவிட்டுவிடுவதுமில்லை செ ய்துவரவேணுமென்று செய்வதுமில்லை. பின்னையெங்ஙனே யென்னில்,—மன்னுசெய்தி. எ - து. அவர்களந்தவுண்மை யிலேபெறநின்று,—உறக்குறுபவர்போல் வாய்மையொழிந் தவையொழிந்துபோமே. எ - து. நித்திரைசெய்யுமவர்கள் கையிற் பிடித்திருக்கப்பட்ட பதார்த்தமானது அவர்கள் வே ணுமென்று பிடித்திருக்கச்செய்தே யவர்களையறியாமற்

ழுனோமுவினாற்போல அந்தச்சிவஞானத்தைப்பெற்ற ஜீவன் முத்தர்க்கு மந்தவுண்மைஞானமொழிய மற்றுள்ள நியமங் களுந் தானேபோம். எ - று.

உ - ம். அந்தவுண்மைஞானமொழிய மற்றுள்ளநியம ங்களெல்லா முறங்கினவர்கள் கையிற்பிடித்திருந்த பண்டங் கள்போலத் தானேபோமென்றதற்கு. பி - ம். திருவருட்ப யனில். "ஒண்பொருட்கண்ணுற்றார்க் குறுபயனேயல்லாது, கண்படுப்போர்கைப்பொருள்போற் காண்." அன்றியுஞ்சங் கற்பநிராகரணத்திலே மாயாவாதியை மறுக்கிறவவதரத்தி லே. "ஞாலநீதியு நான்மறைநீதியும் - பாலருன்மத்தர் பசா சினொனவு - முறங்கினோன்கை வெறும்பாக்கெனவுந் - தா னேதவிராதானுற்புரியா-தொழிந்திடுநிறையத் தழுந்துதறிட மே." எ - து. கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது அந்த வுண்மைஞானத்தைப் பெற் ற ஜீவன் முத்தர்கள் முன்புசெய்துவந்த நியமங்களெல்லாந் தாங்கள் வேண்டாமென்று விட்டுவிடுவதுமில்லை செய்துவர வேணுமென்று நியமிததுச்செய்வதுமில்லை உறங்குவார்கை யிற் பதார்த்தங்க ளவர்களையறியாமற் றானேபோனாற்போல வந்தவுண்மைஞானமொழிய மற்றுள்ள நியமங்க டானே போமென்னு முறைமையையறிவித்தது.　　(சச)

இந்த வுண்மைஞானத்தைபெற்ற ஜீவன்முத்தரானவர்க ளந்தச்சிவத்தை யுள்ளேகண்டிருப்பர்களோ புறம்பேகண்டு வழிபடுவர்களோவென்று வினவின மாணவகனைநோக்கி மே லருளிச்செய்வானெடுத்துக்கொண்டருளியது.

அகம்புறமென்றிரண்டா லர்ச்சனைபுரியுமிந்தச்
சகந்தனிலிரண்டுமின்றித் தமோமயமாகியெல்லா

நிகழ்ந்திடமகிழ்ந்துவாழு நீர்மையார்போலஞானந்
திகழ்ந்தகம்புறமெனுதசெம்மையார்நன்மையோரே(சுரு)

உத்தமஞான முணர்ந்தஞான
வித்தகர்தன்மை விளங்கவுரைத்தது.

வி - ம். அகம்புறமென்றிரண்டா லருச்சனைபுரியு மிந் தச்சகந்தனில். எ - து. இந்தவுலகத்தின்கண்ணே சிவனை வழிபடுகிறவர்கள் உள்ளேகண்டும் பூசிப்பார்கள் புறம்பேக ண்டும்பூசிப்பார்கள்,— இரண்டுமின்றி. எ - து. இங்ஙன ஞ்சொல்லப்பட்ட வுட்பூசைபுறப்பூசையென்கிற விரண்டுபூ சையுமில்லாமல்,— தமோமயமாகி யெல்லாநிகழ்ந்திடமகி ழ்ந்து வாழுநீர்மையார்போல. எ - து. அஞ்ஞானமேவடி வாயிருக்கிற வாணவமலத்தின் மேலீட்டினாலே தத்துவமுப் பத்தாறுங்கூடிச் சிற்றின்பமாகிய மோகமேயொழிய மற் றொன்றுந்தோன்றாத முறைமையினையுடைய பெத்தனைப் போல்,— ஞானந்திகழ்ந்து. எ - து. பழையபிரபஞ்சவாத னைச் சற்றுந்தோன்றாமல் ஞானமேபிரகாசித்து அந்தஞான மான தெங்கும்பூரணமா யொழிவறநிற்கிறநிகழ்ச்சியோடுங் கூடியநுபவித்து,— அகம்புறமெனுதசெம்மையார் நன்மை யோரே. எ-று. அந்தரியாகமாகவுள்ளேகண்டுபூசித்தும் பகிரி யாகமாகப் புறம்பேகண்டுபூசித்தும்வருகிற முறைமையிரண் டுஞ் சற்றுந்தோன்றாமல் நினைவுகெட்டுப்போன பெரியோர் களே யந்த வுண்மைஞானத்தைப்பெற்ற நல்லோர்கள். எ-று.

உ - ம். இந்தஜகத்திலுள்ளவர்கள் உட்பூசையென்றும் புறப்பூசையென்றும் பூசித்துவருவார்களென்பதற்கு. பி-ம். சித்தியாரில். "நாட்டுமிதையந்தானு நாபியினடியாய் ஞா லமுதற்றத்துவத்தா லெண்விரலுளத்தால், மூட்டுமோகினி சுத்த வித்தைமலரெட்டாய் முழுவிதழெட்டக்கரங்கண் மு

றைமையினினுடைத்தாய்க், காட்டுகமலாசனமே லீசர்சதா சிவங்கள் கலாமூர்த்தமாமிவற்றின் கண்ணுகுஞ்சத்தி, வீட்டையருள்சிவன்மூர்த்தி மாஞுகிச்சத்தி மேலாகிநிற்பனிந்த விளைவறிந்துபோற்றே." எ - ம். "கந்தமலர்புகையொளி மஞ்சனமமுதுமுதலாக் கண்டனவெல்லாமனத்தாற் கருதிக் கொண்டு, சிந்தையினிலருச்சிக்க." எ - ம். உட்பூசைக்குக்கண்டுகொள்க. இனிபுறப்பூசைக்கு. பி - ம். சித்தியாரில். "புத்திரமார்க்கம்புகலிற் புதியவிரைப்போது புகையொளிமஞ்சனமமுது முதல்கொண்டைந்து, சுத்திசெய்தாசனமூர்த்தி மூர்த்திமாஞுஞ் சோதியையும்பர்வித் தாவாகித்துச்சுத்த,பத்தியிஞலர்ச்சித்துப் பரவிப்போற்றிப் பரிவினெடுமெரியில்வரு காரியமும்பண்ணி, நித்தலுமிக்கிரியையினையியற்றுவோர்க, ணின்மலன்றனருகிருப்பர் நிலையுங்காலே." எ - து. கண்டுகொள்க. இங்ஙனஞ்சொல்லப்பட்ட பூசைகளிரண்டு மந்தச்சிவஞான மேலிட்டவர்களுக் கில்லையென்பதற்கு. பி - ம். பூசாகரணத்தில். "ஞானவாரமிர்தமுண்டார் நயந்ததநுகர்ந்துவாழ்வார், ஊனமில்யோகச்செய்தி யொழிவதுண்டாகவுண்டா, மீனமில்தொழில்பின்னின்று முண்டெனிலெய்திற்றின்று, மானபின்ஞானயோக மல்லதொன்றறியாதாரே." எ - து. கண்டுகொள்க. எல்லாநிகழ்ந்திடமகிழ்ந்துவாழு நீர்மையார்போல என்றது சிவஞானிகளுக்குப் பசுஞானிகளை யொப்பிட்டதேதென்னில் அந்தப்பசுஞானிகளுக் கிந்தப்பிரபஞ்சமயக்கங்கொண்டே யந்தத்திருவருளின்றேற்றமற்று நின்றாற்போல விந்தச்சிவஞானிகளுக்கு மந்தத்திருவருளின் மேலீடுகொண்டே யிந்தப்பிரபஞ்சந்தோன்றும னின்றதெனவறிக. இதற்கு. பி - ம். மெய்ஞ்ஞானவிளக்கத்தில். "அறியார்களுமறியார்மிக வறிவார்களுமறியா, ரறியார்களுமறிவார்களுமொன்றேதமிலன்று,

மறியார்களும்பசுபாசமென் னிருளான்மறைந்தறியா, ரறிவார்களும்பரமா னந்தவொளியானிறைந்தறியார்." எ-து. கண்டுகொள்க. அந்தப்பசுஞானிகளுக் கிந்தத்திருவருடோன்றுதென்றதேதென்னில் நமக்குக்கத்தாவாக வோர்சிவனுண்டென்றும் அந்தச்சிவனுக்கடிமையாக நாமோரான்மாவுண்டென்றும் இந்தவான்மாவாலேசெய்யப்பட்டதொரு புண்ணியபாவங்களாகிய கன்மமுண்டென்றும் அதனாலொரு நரகசுவர்க்கமுண்டென்றுந் தோன்றும னின்றதெனவறிக. அந்தச்சிவஞானிகளுக்கிந்தப்பிரபஞ்சந் தோன்றுதென்றதேதென்னில் மண்ணாசை பெண்ணாசை பொன்னாசையென்னப்பட்ட மூன்றாசையும்விட்டு யாவரோடும் விருப்புவெறுப்பற்று யானெனது கெடநிற்கையினா லெனவறிக.

இதனாற்சொல்லியது அந்தச்சிவஞான மேலிட்டுநிற்கிற ஜீவன்முத்தர்க ளந்தச்சிவஞானத்தின் மேலீட்டினாலே வுட்பூசை புறப்பூசையென்கிற பூசைகளிரண்டினையும் விடாமல்விட்டு அந்த்ச்சிவஞானமே தனுவாய்நிற்கிற முறைமை பிரபஞ்சவாதனை மேலிட்டுநிற்கிற பசுஞானிகள் அந்தத்திருவருளின் றோற்றஞ் சற்றுந்தோன்றாமனிற்குமதுபோலே யிருக்குமென்னு முறைமையை யறிவித்தது. (௬௫)

அந்தவுண்மைஞானத்தைப்பெற் றதனோடுங்கூடி யநுபவிக்கிற ஜீவன்முத்தர்களுக்குப் பழையவாதனுபலத்தாலே பிரபஞ்சவாதனை மேலிட்டாலு மதனோடுங்கூடி மயங்காமலதனைத் தோன்றினமாத்திரத்திலே நீக்கிக்கொண்டுஅந்தஞானநிலைகுலையாமனிற்கைக்கு மேல்ஞானத்தில் யோகத்தை யருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

அண்டமேவிடவனைத்து மனைத்தையுமண்டமேவிக், கொண்டல்போலெவையுஞானங் குறைவிலாநிறைதலா

லே, கண்டதோர்பொருளை யந்தக்கருத்தினாற்காணிற்ரு னே, யண்டநாயகனார்மேனி யானதேலையமின்றே. (௪௬)

அவ்வியல்புருதவர்க் ககன்றஞானத்தின்
செவ்வியயோகத் திகழ்வினையுரைத்தது.

வி - ம். அண்டமேவிடவனைத்தும். எ - து. ஆகாச மிடமாகச்சரிக்கப்பட்ட பிரிதிவிமுதலானநாலுபூதங்களு ம தற் குட்பட்டவையும் அந்த வாகாசத்தோடும் பொருந்தி வி யாத்திபண்ணிநிற்க,—அனைத்தையுமண்டமேவிக் கொண்டல் போல். எ - து. அந்தவாகாயந்தா னவையெல்லாந் தன் னிடத்திலே கவளீகரித்துநின்ற கோட்பாடுபோல,—எவையு ஞானங்குறைவிலா நிறைதலாலே. எ- து. எல்லாவான்மாக் களினும் அவையிற்ருடுங்கூடி யிருக்கப்பட்ட வத்துவாக் களினும் பூரணனாயுள்ளசிவனுடையஞானமானது தன்னிடத் திலேயடக்கிக் கவளீகரித்துக்கொண்டுநிற்கையாலே,—கண் டதோர்பொருளை யந்தக்கருத்தினாற்காணில். எ- து. தான் ஹிதாஹிதப்படதக்கதாகச் சத்தாதிவிடயங்களிலே யாதா மொன்று தன்னிடத்திலேவந்து தாக்கினாலு முன்சொன்ன வுபமானம்போலே சிவனுடைஞானத்தினாலொழிய மற்ருெ ன்றினாலும் வாராதென்றுகண்டு விருப்புவெறுப்பற்று நிற்கி ல்,—தானேயண்டநாயகனார்மேனி யானதேல். எ - து. அங் ஙனங்கண்ட பொருடானே தேவர்களுக்குக் கத்தாவாயிருக் கப்பட்ட சிவனுடைய திருமேனியாம். அப்படிக்காணவே,— ஐயமின்றே. எ - து. அங்ஙனந்தாக்கினவிடயங்களாலே மே லைக்கு ஜநநமுண்டாகாதென்கிறது சந்தேகமில்லை. எ-று. அ ன்றியும் தானேயண்டர்நாயகனார் மேனியானதேலையமின் றே. என்ருெருபதமாக்கி யப்படிக்கண்ட சிவஞானிகள் சி வனுடைய திருமேனியாகிய ஞானத்தோடுங்கூடிச் சாயுச்சிய

த்தைப் பெறுகைக்குச் சந்தேகமில்லை யென்னவுமாமெனவ றிக. ஆனதேலென்றதனால் ஆன்மாசிவனாவனோ வென்னி ல் அப்படிச்சிவனாகான் அந்தச்சிவத்தோடுங் கூடுமென்பது கருத்து. இதற்கு. பி - ம். சங்கற்பநிராகரணத்தில் "ஆன வென்பதனைத்துமவ்வகைத் - தானாசாமையைச்சாற்றிடுமெ ன்க - தானேயெனுமித்ததனியேகார, மழிந்திலரதுவேயாய் ந்திலரதுவிட் - டொழிந்திலர்பிரிவில ரெனுமிவையுணர்த்து ம்." எ - து. கண்டுகொள்க.

ற - ம். கண்டதோர் பொருளை யந்தக்கருத்தினாற்காணி ல். எ - து. எல்லாஞ்சிவச்சேட்டையென்று கண்டுநிற்கிற சி வஞானிகளுக் கதற்குத்தக்கதாகச் சிவனின்றுசாந்நித்தியஞ் செய்வனென்பதற்கு. பி- ம். சித்தியாரில். "யான்செய்தேன் பிறர்செய்தா ரென்னதியானென்னு மிக்கோணைஞானவெ ரி யால்வெதுப்பிநியிர்த்துத், தான்செவ்வேநின்றிடவத் தத் துவன்றானேநேரே தனையளித்துமுன்னிற்கும் வினையொளித்தி ட்டோடு,நான்செய்தேனெனுமவர்க்குத் தானங்கின்றி நண் ணுவிக்கும்போகத்தைப் பண்ணுவிக்குங்கன்ம, மூன்செய்யா ஞானந்தா னுதிப்பினல்லா லொருவருக்குமியானெனதிங் கொழியாதன்றே." எ-ம். திருப்பாட்டில் "யாதேசெய்துமி யாம்யாமலோநீயெனி, லாதேசெய்யுமளவில்பெருமையன்." எ-து. கண்டுகொள்க. தன்னிடத்திலேதாக்கிற விடயங்களெ ல்லாஞ் சிவசொரூபமென்றுகண்டு நிற்கவென்றதற்கு. பி-ம். திருவாசகத்தில். "கூறுநாவேமுதலாகக் கூறுங்கரணமெல் லாநீ." எ - து. கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது அந்தச் சிவஞானத்தோடுங் கூடி யநுபவிக்கிற ஜீவன்முத்தர்க ளந்தநிலைகுலையத் தக்கதாக ப் பிரபஞ்சவாதனை மேலிட்டுச் சத்தாதி விடயங்களிற் றுக்

கினும் அவைகளெல்லாஞ் சிவச்சேட்டையாலொழிய வான்மசேட்டையால் வாராதென்பது கண்டு ஒருவரோடும் விருப்பு வெறுப்பற்று நிற்கவே யப்படித்தாக்கின விடயங்களாலே மேலைக்கு ஜநநத்துக் கேதுவாகிய வாகாமியங் கட்டுப்படாதென்னு முறைமையை யறிவித்தது. (௬௬)

இங்ஙனஞ் சொல்லப்பட்ட ஞானயோகத்தில் நிற்கப்பட்ட ஜீவன்முத்தர்களுக் கிந்தப் பிரபஞ்சவாதனை யப்படித் தோன்றினமாத்திரத்திலே நீக்கிக்கொள்ள வொட்டாமல் வாதனுபலத்தால் நீட்டிக்க மேலிட்ட வவதரத்தும் அதனோடு மான்மபோதத்தைச் செலுத்தாமற் சிவசிந்தனையாக நிற்கத் தக்கதாக மேல் ஞானகிரியை யருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

மண்முதல்கரணமெல்லா மறுவசத்தாக்கிஞானக்,கண்ணினிலூன்றியந்தக் கருத்தினுலெவையுநோக்கி, யெண்ணியஞ்செழுத்துமாறியிறைநிறையுணர்ந்துபோற்றல், புண்ணியன்றனக்குஞான்பூசையாய்ப்புகலுமன்றே(௬௭)

மாசணுகாது மனமிறந்தியற்றும்
பூசனைஞான பூசனையென்றது

வி-ம். மண்முதல் கரணமெல்லா மறுவசத்தாக்கி. எ-து. பிரிதிவி முதலாயுள்ள தத்துவங்களெல்லா நாமல்ல குற்றத்தையுடைய ஜடமென்று கண்டு. ஜடமெனக் காணவென்றது இது தானகக் காரியப்படமாட்டாதென்று காண்கையென வறிக. என்னவே யிது பூதசுத்தியாம். ஞானக்கண்ணினிலூன்றி. எ-து. அப்படியறிகிறது மந்தத் திருவருளாலொழிய ஆன்மபோதத்தா லறியப்படாதென்று கண்டு. அப்படிக் காணவே யதுஆன்மசுத்தியாம், அந்தக்கருத்தினுலெவை

யுநோக்கி. எ - து. அப்படி யான்மபோதத்தாற்றானே ய
றிகைக்குச் சேட்டையில்லை யென்று கண்டதுகொண்டே ஆ
ன்மாவுக் கறிவில்லை யெனவறிந்து கண்டுகேட் டுண்டுயிர்த் து
ற்றறிந்து நிற்கிறதெல்லாம் அந்தத் திருவருளென்று கண்டு
நிற்கவே அது திரவியசுத்தியாம்,— எண்ணி யஞ்செழுத்து
மாறி. அநுவயம். ஐந்தெழுத்து மாறி. எ - து. ஐந்தெழு
த்தையு மைந்தெழுத்தாகக் கொள்ளாமல் மாறிக்கொள்ள.
மாறிக் கொள்ளலாவது சிவ்விலே சிவமும் வவ்விலே யரு
ளும் யவ்விலே யான்மாவும் நவ்விலே திரோதமும் மவ்விலே
மலமுமாகக் கொண்டு ஐந்தெழுத் தையும்விட் டைந்து முத
லாக விசாரித்துக் கண்டு. அப்படிக் காணவே மந்திரசுத்தி
யாம். அன்றியும்,— எண்ணி. எ - து. இன்ன வுருவென்று
எண்ணித் தொகைப்படுத்தி ஜபிக்க வென்னவுமாம்,— இ
றைநிறை யுணர்ந்து. எ - து. கத்தாதானே யெங்கும் பூர
ணமாய்நின்று மற்றுண்டான சித்தசித்துக்க ளிரண்டினும் பி
ரிவறநின்று சேட்டிப்பித்து நிற்கிறத்தை யறிந்து. அப்படிச்
சித்தசித்துக்களிரண்டினுஞ் சிவனிறைந்துநிற்கிறத்தை யிந்த
விலிங்கத்தினு முண்டென்று காணவே இலிங்கசுத்தியாம்,—
போற்றல். எ - து. இங்ஙன மைந்துவகையாகச் சொல்ல
பபட்ட பூதசுத்தி ஆன்மசுத்தி திரவியசுத்தி மந்திரசுத்தி இ
லிங்கசுத்தி என்னு முறைமைகளுக்குத் தவறுவாராமல் வழி
பட்டு. இங்ஙனம் வழிபடவே,—புண்ணியன் றனக்குஞானப்
பூசையாய்ப் புகலுமன்றே. எ - து. இங்ஙனம் பஞ்சசுத்
திகளாகச் சொல்லப்பட்டதெல்லாஞ் சிவனுக்கு ஞானபூ
சையாமென்று சிவாகமஞ் சொல்லும். எ - று.

இங்ஙனஞ் சொல்லப்பட்ட பஞ்சசுத்திகளுக் கெழுதின
பொருளுக் குதாரணம் ஞானபூசைத் திரு விருத்தத்திலே
காட்டுதும். அவைவருமாறு:— மண்முதல் கரணமெல்லாம்

ஜட்டமென்று கழித்ததற்கு. பி - ம், "அஞ்சலிசெய் திருந் துடல நானல்லன்." எ - ம். "புஞ்சமலிதனுகரணம் புவனம் போகம்பொய்." எ - ம். "எடுத்தவீடு தானழியுமளவு மதிற் றங்குவோர்போல." எ-ம். வருமேதுக்களைப் பூதசுத்திக்குக் கண்டுகொள்க. ஞானக்கண்ணினி லூன்றியென்றது ஆன்மசுத்தி யென்றதற்கு. பி - ம். "தீங்கிலுயிர் சிவலிங்கஞ் சிவன் சீவன் யாதுஞ் செயவேண்டாம் பசுஞானம்." எ - ம். "மெய்ப்பணி மடங்கத் தூங்கிடும்." எ - ம். கண்டுகொள்க. அந்தக்கருத்தினு லெவையு நோக்கி யென்றதை தான்காண்கிறதெல்லாஞ் சிவன் காண்கிருனென்று காணவே திரவியசுத்தியாமென்றதற்கு. பி - ம். "நாலிரண்டு திருவுருவ நோக்கநோக்கால் நலங்கொ டிரவியசுத்தி நயந்து." எ - து. கண்டுகொள்க. எண்ணி யைந்தெழுத்துமாறி யென்றதை மந்திரசுத்தியென்று ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை யைந்தெழுத்ததாகக்கொள்ளாமல் ஐந்துமுதலாகக்கண்டு எண்ணி ஜபிக்கவென்றதற்கு. பி - ம். "பத்துருமந்திரசுத்திபயிற்றி." எ - து. கண்டுகொள்க. இறைநிறையுணர்ந்தென்றதை இலிங்கசுத்தியென்றது கத்தா வெங்கும்பூரணனுயிருக்கையாலே நம்பொருட்டாகப் பூசைகொள்ளக்கொண்ட திருமேனியிலு முண்டென்று காணவென்றதெனவறிக. இதற்கு. பி - ம். "நாதன், மேலுகந்தமலரொதுக்கியுருவநோக்கி விமலனிறைவுணர்ந்தெவையுமேனியான, சீலமுமிங்கருவுதிருவுருவமான சிறப்புமுணர்ந்திலிங்கசுத்திசேர்த்திடாயே." எ-து.கண்டுகொள்க.

இதனுற்சொல்லியது முன்சொன்ன ஞானயோகத்தி னிற்குமவர்களுக் கந்தநிலைகுலையத்தக்கதாகப் பிரபஞ்சவாதனைமேலிட்டாலு மதனேடுகூடாமல் அதனைநீக்கிக்கொள்ளத் தக்கதாக ஞானகிரியையைச் செய்யுமிடத்துப்பஞ்சசுத்திசெ செய்யவேண்டுகையால் அதற்குத் தத்துவங்களையெல்லாம்

ஜடமென்றுகாணவே பூதசுத்தியாமென்றும் அப்படிக்கண்டு நீக்கிக்கொள்ள நமக்கென்னவொருசேட்டையில்லையென்று காணவே யான்மசுத்தியாமென்றும் அப்படித்தனக்கென்னவொருசெயலில்லையென்று கண்டு தான்காண்கிறதெல்லாஞ் சிவதிருஷ்டியென்று காணவே திரவியசுத்தியாமென்றும் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை யைந்துமுதலாகக்காணவே மந்திரசுத்தியாமென்றும் எங்கும் பூரணனாயிருக்கிறசிவ னிந்தச்சிவலிங்கத்தினு முண்டென்றுகாணவே லிங்கசுத்தியாமென்றும் இங்ஙனஞ் சுத்திசெய்து வழிபடவே சிவனுக்கு ஞானபூசையாமென்றும் வருமுறைமையையறிவித்தது. (௪௭)

பதினோராஞ்சூத்திர முற்றிற்று.

இங்ஙனம் பஞ்சுத்திகளுஞ்செய்து அந்தஞானபூசையைச் செய்துவருமவசரத்து அதிலுமான்மபோதங் குவியாமல் வாதனுபலத்தாலே திரிவிதகரணங்களோடுங்கூடிப் பிரபஞ்சத்திலே யோடினாலும் பழையபிரபஞ்சத்தொழிலாய்நின்று ஜீவியாமல் அருட்டொழிலாய் நிற்கத்தக்கதாக மேல்பன்னிரண்டாஞ்சூத்திரமாகிய ஞானசரிதையை யருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

தொண்டர்களிடத்தும் வானோர்தொழுந்திருமேனி தானு, மண்டருங்கண்டிலாத வண்ணலேயெனவணங்கி, வெண்டரளங்கள்சிந்த விழிமொழிகுழறிமெய்யே,கண்டு கொண்டிருப்பர் ஞானக்கடலமுதருந்தினோரே. (௪௮)

சிவமாம்வேடஞ் சிவாலயமெனத்தொழுந்
தவமாஞானச் சரிதைசாற்றியது.

வி - ம். தொண்டர்களிடத்தும். எ - து. மஹேச்வரரிடத்திலும்,— வானோர்தொழுந்திருமேனிதானும். எ - து. பிர

மவிஷ்ணுக்கள்முதலாயுள்ள தேவர்களும்வந்து வழிபாடுசெய்யப்பட்ட சிவலிங்கப்பெருமானிடத்திலும்,— அண்டருங் கண்டிலாத வண்ணலேயெனவணங்கி. எ - து. அந்தத்தேவர்களாலுங்காணப்படாத சிவனல்லோ நம்பொருட்டாகத்திருமேனிகொண் டெழுந்தருளினனென்று இந்த விரண்டிடத்திலும் வழிபட்டுத்தெண்டனிட்டு,— வெண்டரளங்கள்சிந்தவிழி. எ-து. கண்களானது முத்துப்போலேநீரையுதிர்க்க,— மொழிகுழறி. எ-து. வார்த்தைதழுதழுக்க,—மெய்யேகண்டு கொண்டிருப்பர். எ - து. உண்மையாகக்கண்டு தியானித்துக்கொண்டிருப்பார்கள்,— ஞானக்கடலமுதருந்தினோர். எ - து. அருள்வெள்ளமாகிய சமுத்திரத்திலே விளைந்த சிவபோகமாகிய வமுதினைப் புசித்தசிவஞானிகள். எ - று.

று - ம். தொண்டர்களிடத்தும். எ - கு. திருவேடத்தாரைச் சிவனெனக்கண்டு வழிபட வென்று பொருட்கூறிய தேதென்னில் அவர்கள் கொண்ட வேடத்தினாலுந் தியானசமாதியினாலு மவர்களிடத்திலே சிவன் சாந்நித்தியமாகச்செய்து நிற்கையா லப்படிச் சொன்னதெனவறிக. இதற்கு.பி-ம். சித்தியாரில் "அறிவரியான்றனையறிய வாக்கையாக்கி யங்கங்கேயுயிர்க்குயிரா யறிவுகொடுத்தருளாற், செறிதலினாற்றிருவேடஞ் சிவனுருவேயாகுஞ் சிவோகம்பாவிக்குமதாற் சிவனுமாவர், குறியதனாலிதையத்தே யரனைக்கூடுங் கொள்கையினாலவனவர் குறியொடுதாமழியு, நெறியதனாற்சிவமேயாய் நின்றிடுவரொன்று னேசத்தாற்றொழுதிடுநீ பாசத்தாள் விடவே." எ - து. கண்டுகொள்க. இனி வானோர்தொழுந்திருமேனிதானும். எ - கு. சிவலிங்கப்பெருமானைச் சிவனெனக்கண்டு வழிபடவென்று பொருட்கூறியதேதென்னில் இந்தச்சிவலிங்கமூர்த்தமானது சிவனுடைய வடிவாகிய சத்திசிவான்மீகமாயிருக்கையாலு மந்திரதந்திரங்களினாலும் வழி

படுவோர்க்குக் காட்டத்திலக்கினிகடைந்தவிடத்திலே பிரகாசித்தாற்போலவும் பசுவினிடத்துண்டாகியபா லப்பசுவினுடலெங்கினின்ருலு மந்தப்பசுவின்முலைக்கண்ணிலே தோன்றினாற்போலவும் அந்த விலிங்கமூர்த்தத்திலே பூரணமாகியசிவம் பிரகாசிக்கையாலு மப்படிச்சொன்னதெனவறிக. இதற்கு. பி - ம். சித்தியாரில். "திருக்கோயிலுள்ளிருக்குந் திருமேனிதன்னைச் சிவனெனவேகண்டவர்க்குச் சிவனுறைவனங்கே, யுருக்கோலிமந்திரத்தா லென்னினையுமவர்க்கு முளனெங்குமிலனிங் குளனென்பார்க்கு, மிருப்பாயவடிவா யிந்தனத்தினெரிபோல் மந்திரத்தின்வந்துதித்து மிருஞ்சுரபிக்கெங்கு, முருக்காணவொண்ணுத பால் முலைப்பால்விம்மி யொழுதுவதுபோல்வெளிப்பட் டருளுவனன்பர்க்கே." எ - து. கண்டுகொள்க. மற்றுள்ளநூல்களெல்லா மூன்றுமுதலையுஞ் சிவனெனக்கண்டு வழிபடவென்று வருகையாலே இந்நூல் மஹேச்வரரையுஞ் சிவலிங்கப்பெருமானையும் வழிபடச்சொன்னதொழிய ஆசாரியனை வழிபடச்சொல்லாதிருப்பானேனென்னில் அது ஆசாரியன் முன்னிலையாக வெழுந்தருளிச்செய்யச் சீடன்கேண்டம்பண்ணி வழிபட்டுகேட்டு வருகையா லதனைச்சொல்லவேண்டுவதில்லை யென்பது கருத்து. ஆனலு மாசாரியனையுஞ்சிவனெனக்கண்டு வழிபடுகைக்குப். பி - ம். சித்தியாரில். "பரப்பிரமமிவனென்றும் மரசிவன்ருனென்றும் பரஞானமிவனென்றும் பராபரன்ருனென்று, மரன்றருஞ்சீர்நிலையெல்லா மிவனேயென்று மருட்குருவைவழிபடவே யவனிவன்ருனேயே, யிரங்கியவாரணமாமை மீனண்டஞ்சினையை யியல்பினெடுபரிசித்து நினைந்தும்பார்த்தும், பரிந்திவைதாமாக்குமாபோற் சிவமேயாக்கும் பரிசித்துஞ்சிந்தித்தும்பார்த்துந்தானே." எ - து. கண்டுகொள்க. இந்தப்பூமியின்க

ண்ணிலே யெழுந்தருளியிருக்கப்பட்ட விலிங்கமூர்த்தத்தை வானோர்தொழுந்திருமேனி யென்றதேதென்னிற் றேவர்களு முத்தியைப் பெறுமவதரத்து இந்தப்பூமியின்கண்ணேவந்து சிவனையருச்சித்துப் பெறவேண்டுகையா லப்படிச்சொன்னதெனவறிக.இதற்கு. பி-ம். சித்தியாரில் "வானிடத்தவருமண்ணில்வந் தரன்றனையர்ச்சிப்பர்." எ-ம். திருவாசகத்தினும். "புவனியிற்போய்ப் பிறவாமையினாளும் போக்குகின்றோம்." எ-ம். கண்டுகொள்க. அப்படியிருக்க விந்தவிலிங்கமூர்த்தத்தை யண்டருங்கண்டிலாத வண்ணலே யென்றதேதென்னில் இந்த விலிங்கமூர்த்தத்தை வழிபடுமவர்க ளந்தவுண்மைஞானமாகிய பூரணத்தை யிலிங்கத்தினிடத்திலே தியானித்து வழிபடவேண்டுகையால் அந்தவுண்மைஞானத்தை யவர்களறியாதபடியாலே யப்படிச்சொன்னதெனவறிக. அஃதெங்ஙனேயென்னில் அவர்கள். சிவனை யிழந்துநின்றுசெய்த பசுபுண்ணியத்தினாலே தெய்வபதத்தைப் பெற்றுச் சிற்றின்பமாகிய போகங்களை யநுபவித் திருக்கையா லந்தவுண்மைஞானத்தை யறியாதவர்க ளென்ற தெனவறிக. இதற்கு. பி-ம். திருவாசகத்தில் "வானநாடருமறியொணாதநீ" எ-ம். "கனவேயுந்தேவர்கள் காண்பரிய கனைகழலோன்" எ-ம். "அளவறுப்பதற்கரியவ னிமையவர்க்கடியவர்க்கெளியான்" எ-ம். வருமேதுக்களைக் கண்டுகொள்க. இனி இங்ஙனஞ் சிவனை வழிபடுகிறவர்கள் பிரியப்பட்டுவகைகூராமல் விதனப்பட்டு வெண்டரளங்கள் சிந்த விழிமொழிகுழறி யென்ன வேண்டுவா னேனென்னில் யாதாமொரு விதனமுற்றவர்கள் தங்கள் விதன நீக்கத்தக்க முதியோரைக் கண்டவிடத்துத் தாங்கள்பட்ட விதனத்தின் மேலீட்டினாலே தங்கள் விதனத்தைச்சொல்லி யாறுமிடத் தவர்கள்மெய்யறியாமற் கண்ணீருங்குதித்து நாவுந்தழுதழுத்துநின்றாற்போல

மோக்ஷகாமிகளா யுள்ளவர்களுந் தாங்கள் ஜநநமரண துக்கத்திலே யழுந்தியும் இயம தண்டப்பட்டும் நரகவே தனைப் பட்டும் வருகிற விதனத்தை யுபதேசக் கிரமங்களி னாலே கண்ட வவதரத்துச் சிவசந்நிதியிலே தங்கள் வித ன மாறவேண்டுகையால் வாக்கு மனு தீதமாயுள்ள சிவன் நம்பொருட்டாகத் திருமேனிகொண்டருளினனென்று கண் டு தங்கள் விதனத்தின் மேலீட்டை யந்தச் சந்நிதியிலே வி ண்ணப்பஞ் செய்யச்செய்தே யவர்வகள் மெய்யறியாம லு ண்டாகிய கண்ணீருங் குழறுதலு மெனவறிக. என்னவே ம னதிலுண்டான விதனங் கண்ணீராலே யறியப்படு மென்ப து கருத்து. அஃதெங்ஙனே யென்னில் "அன்பிற்குமுண்டோ வடைக்குந்தா, ழார்வலர்புன்கணீர் பூசறரும்." என்று திரு வள்ளுவ தேவரு மருளிச்செய்தது மிப்பொருட்பற்றி யென வறிக. சிவனைப் பெறவேண்டுமென்று விதனமுற்றவர்களுக் குக் கண்ணீருங் குழறுதலு முண்டா மென்பதற்கு. பி-ம். தி ருவாசகத்தில். "மெய்தானரும்பி விதிர்விதிர்த்துன் விரையா ர்கழற்கென், கைதான்றலைவைத்துக் கண்ணீர்ததும்பி வெ தும்பி." எ - ம். "உள்ளந்தாணின் றுச்சி யளவுநெஞ்சா யு ருகாதாருடம்பெல்லாங் கண்ணாயண்ணா, வெள்ளந்தான்பா யாதா னெஞ்சங்கல்லாங் கண்ணிணையுமரமாந் தீவினையினே ற்கே." எ - ம். "வேண்டுந்தனையும் வாய்விட்டலறி விரையா ர்மலர்ப்பாதம், பூண்டுகிடப்பதென்றுகொல்லோ வென் பொல்லாமணியைப் புணர்ந்தே." எ - ம். பெரியபுராண த்தில். "ஈசனையேபணிந்துருகி யின்பமிகக்களிப்பெய் தப், பேசியவாய்தழுதழுப்பக் கண்ணீரின்பெருந்தாரை, மாசிலாநீறழிந்தங் காவிதாமயிர்சிலிர்ப்பக், கூசியேயுடல் கம்பித் திடுவார்மெய்க்குணமுள்ளார்." எ - ம். பாணரா ற்றுப்படையில். "முதுமலைநோக்கிக் கதுமெனச்செல்வு

ழி - யுவகைப்பெரியாறு தவலறப்பெருகி - யுண்மனந்தளிர்ப்ப வுரோமஞ்சிலிர்ப்பக் - கண்ணுமத்தின் கண்ணீருடைய - வென்பிடையுருகி நன்குடல்விதிர்ப்ப - வேர்த்துமெய்யரும்பி நாத்தழுதழுப்ப." எ - ம். வருமேதுக்களைக்கண்டுகொள்க. இனி மெய்யேகண்டுகொண்டிருப்பர். எ - கு. உண்மையாகக்கண்டு தியானித்துக்கொண்டிருபர்களென்று பொருட்கூறியதேதென்னில் பூரணகத்தாவா யுயிர்க்குயிராய்நின் றறிவிக்கிறசிவமானது குருலிங்கசங்கமமாகப் புறம்பேகொள்ளப்பட்ட திருமேனியிலு முண்டென்றுவழிபடுகையா லப்படிச்சொல்லப்பட்டதெனவறிக. இதற்கு. பி - ம். தேவாரத்தில். "என்னிலாருமெனக்கினியாரில்லை, யென்னிலும்முனியானொருவனுள, னென்னுளேயுயிர்ப்பாய்ப் புறம்போந்துபுக், கென்னுளேநிற்கு மின்னம்பரீசனே." எ - ம். திருமந்திரத்தில். "உள்ளத்துமுள்ளன் புறத்துள்ளனென்றவர்க, குள்ளத்துமுள்ளன் புறத்துள்ளனெம்மிறை." எ - ம். திருவருட்பயனில். "உள்ளும்புறம்பு மொருதன்மைக்காட்சியருக், கெள்ளுந்திறமேதுமில்." என்றதுமிப்பொருட்பற்றிநின்றதெனவறிக. அன்றியும் பூசாகரணத்திலும் இதுவேபொருளென்பதைப்பற்றி. "ஆருயிர்சிவத்தைவிட்டுப் புறச்சிவமர்ச்சிப்பானே, லீருயிர்ச்சிவமுண்டாகி விசைவதன்றெங்குமுள்ள, தோருயிர்ச்சிவமேமற்றுப் புறச்சிவமுருச்சிவத்திற், பேருயிர்ச்சிவமேதென்னிற் பெருதுப்பிணக்குநூலே." என்பதனுலு மந்தச்சிவமுதலை யுள்ளும்புறம்பு மொருதன்மையாகக் கண்டவர்களே சிவஞானிகளென்பதனைக் குருமுகாந்தரமாகக் கண்டுகொள்க. இனி ஞானக்கடலமுதருந்தினோ என்றது ஞானத்துக்குச் சமுத்திரத்தை யுவமையாகக் கூறிய தேதென்னிற் சமுத்திரம்போல ஞானமுமளவுபடாதபடியாலும் தன்னிடத்திலேகூடின வான்மஜால

ங்களை யந்தச் சமுத்திரம்போல உள்ளடக்கிநிற்கையானு மந்தச்சமுத்திரம்போல வமுதம்விளைகையினாலு மப்படிச் சொன்னதெனவறிக. அப்படிச் சமுத்திரம்போல ஞான மளவுபடாதென்பதற்கு. பி-ம். திருக்களிற்றுப்படியாரில். "கடலலைக் கேயாடுதற்குக் கைவந்துநின்றுங், கடலளக்கவாராதாற்போலப் - படியி, லருத்திசெயுமன்பரைவந் தாண்டதுவுமெல்லாங், கருத்தினுக்குச்சேயனாய்க்காண்." என்பதனுள் "கடலளக்க வாராதாற்போல" என்பதைக் கண்டுகொள்க. அன்றியும் சமுத்திரம்போலச் சிவனு மான்ம ஜாலங்களை யுள்ளடக்கி நிற்பானென்பதற்கு. பி-ம். சித்தியாரில். "இரும்பைக்காந்தம் வலித்தாற்போ லிசைந்தங்குயிரையெரியிரும்பைச் செய்வதுபோ லிவனைத்தானாக்கி, யரும்பிந்தனத்தை யனலழிப்பதுபோன்மலத்தை யழித்தமலனப்பணைந்த வுப்பேபோலணைந்து, விரும்பிப்பொன்னினைக்குளிகை யொளிப்பதுபோலடக்கி மேலளித்துத்தானெல்லாம்வேதிப்பானாகிக், கரும்பைத்தேனைப்பாலைக் கனியமுதைக்கண்டைக் கட்டியையொத்திருப்பனந்த முத்தியினிற்கலந்தே." என்பதனுள் "விரும்பிப் பொன்னினைக்குளிகை யொளிப்பதுபோலடக்கி" என்பதைக்கண்டுகொள்க. இனி சமுத்திரம்போல அமுதம் விளைகையாலுமென்பதற்கு. பி - ம். ஞானமிர்தத்தில். "மந்தரமத்தென நிறுவினனென - வைந்தலையரவு சுற்றிநஞ்சொடு-பணமணிபிதுங்கப் பற்றியவுணரோ-டமரருமியக்கலாற்றுநாள்செல - முகுந்தன்றனாது முதுவலியெறுட்டோள்- வருந்தவாங்கு வாய்விட்டலறி- நுரைத்தலைவிரித்துத் திரைப்பெருங்கையெடுத் - தின்றுங்கூப்பிட் டன்றுவந்தெழுந்த- வுவரியமுதமென்ப." எ - து. கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது அசிந்திதனாய் நின்றபதியைச் சிந்திதனாகக் கண்டு வழிபடுகைக்குச் சிவஞானசித்தியில் பன்

ணிரண்டாஞ்சூத்திரமாகிய. "செங்கமலத்தாளிணைகள் சேர லொட்டாத்திரிமலங்க ளறுத்தீசனேசரொடுஞ் செறிந்தி ட், டங்கவர்தந்திருவேட மாலயங்களெல்லா மரனெனவே தொழுதிறைஞ்சி யாடிப்பாடி, யெங்குமியாமொருவருக்கு மெளியோமல்லோ மியாவர்க்குமேலானோ மென்றிருமாப் பெய்தி, திங்கண்முடியாரடியா ரடியோமென்று திரிந்திடுவர் சிவஞானச்செய்தியுடையோரே." என்னும் விதியைப்பற்றிச் சி வஞானிகளாயுள்ளவர்கள் திருவேடத்தாரையுஞ் சிவலிங்கப் பெருமானையுஞ் சிவனெனக்கண்டு வழிபடுமுறைமையை யறி வித்தது. (சஅ)

ஆக விங்ஙனஞ்சொல்லப்பட்டவுண்மையைம்பதினும் ஆ ன்மவிலக்கணமுதல் அணைந்தோர்தன்மைமுடிவாகச் சொல் லப்பட்ட அதிகாரமொன்பதும் இவ்வளவிலேமுடிந்தது.

அணைந்தோர்தன்மையாகிய பன்னிரண்டாஞ்சூத்திர

முற்றிற்று.

மே லிந்நூற்சொல்லப்பட்ட சைவசித்தாந்தத்திலுண் டாகிய வத்தத்தின் கோட்பாட்டையருளிச்செய்வா னெடுத் துக்கொண்டருளியது.

நிலவுலகாயிதாதி நிகழ்சிவாத்துவிதாந்தத்துக்
குலவினரளவளாவாக் கொள்கையதாகிவேதத்
தலைதருபொருளாயின்பாய்த் தாவில்சற்காரியத்தாய்
மலைவறுமுணர்வாற்பெத்த முத்திகண்மதித்தாமன்றே.

அந்தமில்சமையத் தளவாதருமறை
யந்தமுறுபொரு ளறைந்தேனென்றது.

வி - ம். நிலவுலகாயிதாதி நிகழ் சிவாத்துவிதாந்தத்து. எ - து. புறச்சமயமாகப் பொருந்தப்பட்ட வுலகாயின்றோ

தல் அகச்சமயமாக விளங்கப்பட்ட சைவராகியசிவாத்துவி தியீருக,—குலவினரளவளாவாக்கொள்கையதாகி. எ - து. அவர்கள்கொண்டாடப்பட்ட அத்தங்களாகியஅளவுகளுக் களவுபடாத கோட்பாட்டையுடைத்தாய்,— வேதத்தலைதரு பொருளாய். எ - து. வேதத்தின்முடிவிலே யுண்டாகப்பட்ட அத்தமாய்,— இன்பாய். எ - து. பரமாநந்தமாகிய பேரின்பமாய்,—தாவில்சற்காரியத்தாய். எ - து. கேடில்லாதசற்காரியவாதமுமாம். சற்காரியமாவதுஉள்ளதேயுள்ளதென்றும் இல்லாததொருகாலத்திலுமில்லையென்று நின்றதெனவறிக. அஃதாவது பதிபசுபாசமூன்றினுள்ளும் யாதொருபொருளை யோரிடத்திலேயுண்டென்றுநாட்டிப் பின்னை மற்றோரிடத்திலே யில்லையென்கிறது சித்தாந்தவிரோதமாகையால் அஃதிந்நூலுக் கில்லையென்றதெனவறிக,— மலைவறுமுணர்வால். எ - து. சிவனுடையகுற்றமற்ற பேரறிவாகியதிருவருளினாலே,—பெத்தமுக்திகண் மதித்தாமன்றே. எ - து. இந்நூலைப் பெத்தமாகிய பொதுவென்றும் முத்தியாகிய வுண்மையென்றுஞ் சொல்லாநின்றேம். எ - று. அன்றியும் பெத்தமுத்தியென்றது போகமோக்ஷமென்னனவுமா மெனவறிக.

வி - பு. உலகாயிதன்முதற் சிவாத்துவிதியீருகச் சொல்லப்பட்ட சமயிகளுக்குத்தொகை யிவ்வளவென்றறிகைக்கு முன்சொன்னபொதுவிலே “புறச்சமயத்தவர்க்கிருளா யகச்சமயத்தொளியாய்” என்றசெய்யுளுக்கெழுதின நுட்பத்திலே கண்டுகொள்க. பெத்தமுத்தியேன்ற தேதென்னில் பெத்தம் பாசத்தோடுங் கட்டுப்பட்டுநிற்கை. முத்தி யந்தக்கட்டுவிடுகை யெனவறிக. திருவாசகத்தில். “கட்டறுத்தெனையாண்டுகண்ணாரநீ, றிட்டவன்பரோ டியாவருங்காணவே, பட்டிமண்டப மேற்றினையேற்றினை, யெட்டினோடிரண்டும் மறியேனையே.” எ - து. கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது இந்நூலிற்சொல்லப்பட்ட சைவ சித்தாந்தவத்த மூலகாயிதன்மூதற் சிவாத்துவிதி யீருகச் சொல்லப்பட்ட சமயிகள்கொள்ளுங் கோட்பாட்டையுடை யதல்லவாய் வேதாந்தத்தெளிவாய் அநுபோகவத்தமாய் மு ன்னொடுபின் மலைவற்றபொருளா யிருக்கப்பட்ட அத்தத்தை ச் சிவனுடையதிருவருளினாலே பொதுவென்று முண்மையெ ன்றுஞ் சொல்லாநின்றேனென்னு முறைமையை யறிவித் தது. (௪அ)

இதுநூற்கருத்து.

இங்ஙனம் பெத்தமாகவும் முத்தியாகவுஞ் சொல்லப்ப ட்ட விந்நூலினையு மிதனால் விளங்கப்பட்ட சைவசித்தாந் தவத்தமும் ஆசாரியர் சீஷனுக்குக்கொடுக்குமுறைமையு மே லருளிச்செய்வா னெடுத்துக்கொண்டருளியது.

திருவருள்கொடுத்துமற்றிச் சிவப்பிரகாசநன்னூல்
விரிவதுதெளியுமாற்றால் விளம்பியவேதுநோக்கிப்
பெருகியவுவமைநான்கின் பெற்றியினிறுவிப்பின்முன்
றருமலைவொழியக்கொள்வோன்றன்மையிற்சாற்றலாமே.

பெருநூற்பொருளைப் பின்முன்மலைவற
வருளுடன்கொள்பவர்க் கறைகவென்றது.

வி - ம். திருவருள் கொடுத்து. எ-து. மலபாகமு ம்வந்து சத்திநிபாதமு முண்டாய்வந்தா னொருசீஷனுக்கு ஆசாரியன் றனதுதிருவடியை வைத்து,— மற்றிச் சிவப்பிர காச நன்னூல் விரிவது. எ - து. (மற்றுவினைமாற்று) இங் ஙனஞ் சிவப்பிரகாசமென்னும் நல்லநூலினது அத்தத்தின் விரிவானதை,— தெளியுமாற்றால். எ - து. அறிந்து தெ ளியும் வழியால்,—விளம்பிய வேதுநோக்கி. எ-து. நூல்க ளில் சொல்லப்பட்ட இயல்பு காரியம் அநுபூலத்தி யென்கி

றஏதுவாகிய காரணகாரியங்க ளாராய்ந்துபார்த்து,— பெரு கியவுவமைநான்கின்பெற்றியி னிறுவி. எ-து. மிகவு முவமை யாகச்சொல்லப்பட்ட வினை பயன் மெய் உருவென்று சொல் லப்பட்ட பண்பாலுவமை பயனாலுவமை உருவாலுவமை வி னையாலுவமையாகிய நால்வகையிலுண்டாகியவியல்பிலே க ருத்தைநிறுத்தி,— பின்முன்றருமலைவொழியக்கொள்வோன் றன்மையிற் சாற்றலாமே. எ-து. இந்நூலிலுண்டாகியஅத்தத் தை முன்னோடுபின் மலைவறக்கொள்ளத்தக்க முறைமையினை யுடையவரிடத்திலே தெளியச்சொல்லலாம். எ - று.

ரு-ம். திருவருள் கொடுத்தென்றது தீக்ஷையினாலே பாச க்ஷயம்பண்ணி யுண்மைஞானத்தைக் கடாக்ஷித்த தெனவ றிக. நன்னூலென்றது கருத்திலுறை திருவருளு மிறைநூலு ங்கலந்தென்னும் பொருளைப்பெற்று நின்றதெனவறிக. விரிவ துதெளியுமாற்று லென்றது வளர்விருத்த மென்னும் பொரு ட்பெற்ற தெனவறிக. அஃதாவது இந்நூலிற் சொற்சுருங்கிய த்தம் விருந்திருக்கையினாலும் ஆராயுந்தோறு மாராயுந்தோ று மத்த மேன்மேலும் விரிந்துவருகையினாலுமெனவறிக. விளம்பிய வேதுநோக்கி யென்றதை இயல்பென்றுங் காரிய மென்றும் அநுபலத்தியென்றுஞ் சொன்னதேதென்னில் இய ல்பேதுவென்றது பொருடன்னையே யுவமையாக்கி மாப்பூத் ததென்றால் மரமெனவறிகை யெனக்சொள்க. காரியவேது வென்றது புகையைக்கண்டது கொண்டே யிவ்விடத் தனலு ண்டென வறிதல். அநுபலத்தி யேதுவாவது குளிரில்லா துகொண்டே பனியில்லை யென்றதெனவறிக. இவையிற்று க்கு. பி - ம். சித்தியாரில் "ஏதுமூன்றுமியல்பு காரியத் தோடநுபலத்தியென, வோதியியல்புமாமரத்தைக் கூட்ட லுறுகாரியம்புகைதா, னுதியானவனல்காட்ட லாகுமநு பலத்தியது, சீதமின்மைபனியின்மை காட்டலாகுஞ் செப்

பிடிலே." எ - து. கண்டுகொள்க. உவமைதான்காவது "வி னைபயன்மெய்யுறு வென்றநான்கே, வகைபெறவந்த வு வமைத்தோற்றம்." என்னும் விதியைப்பற்றிக் கார்போலுங் குழல், தருப்போலுங்கை, புலிபோலப் பாய்ந்தான், பொ ன்போலுமாவாரம்பூ, என்று வருவதெனவறிக. இங்ஙனம் ஏதுவும் உவமையுஞ் சொன்னதேதென்னில் பதிபசுபாசமெ ன்ற மூன்றினுள் யாதாமொருபொருளை யறியுமிடத்து ஏது க்களினாலும் உவமைகளினாலு மறியவேண்டுகையா லெனவ றிக. இதற்கு. பி - ம். சங்கற்ப நிராகரணத்தில் "வாதசே ற்ப விதண்டையுமேதுவு - மோதுநால்வகை யுவமையுந்திக ட - ர-வருள்சேர்மாந்தர்பொருள்சேராமற் - றர்க்கமும் விடை யமுங் கற்க-நற்கவிமாந்தர் நகணவிற்றுவனே." எ - து. க ண்டுகொள்க. பின்முன் றருமலைவொழியக்கொள்வோன் ற ன்மையிற் சாற்றலாமே. எ-து. முன்னொடுபின்மலைவரக்கொ ள்ளவல்லவனென்றதானென்னில் முன்ஜநநங்களிலே சரிதை கிரியை யோகங்களை முற்றும் அநுட்டித்துவந்த புண்ணிய வான்க ளென்றதெனவறிக. இதற்கு. பி - ம். துகளறுபோத த்தில் "உற்ற சரிதை யொழியாத நற்கிரியை, குற்றமிலா யோகக் குறிவழுயு—முற்றிப், பிரந்தார்க டாமறியப் பேசு சேனன்றிப், பிறந்தா ரறியாத பேறு." எ-ம். இந்நூலினும் "கேடில்புகழ் தருஞ்சரிதை கிரியாயோகக் கேண்மயரோ வி வையுணர்த்தக் கிளக்குநூலே." எ - ம். கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது சமயாசாரமுஞ் சந்தானவாசார மு மூண்டாய்வந்தா னொருசீஷனுக்கு ஆசாரியன் றிருவடி யைவைத்து இந்தச் சிவப்பிரகாசமென்னுந் திருநாமத்தினை யுடைய நல்லநூலிலே விரியப்பட்ட சைவசித்தாந்தத்தி னு ண்மையானவத்தத்தை யேதுக்களினாலு முவமையினாலு நிச்சயித்து அந்தவத்தத்தை முன்னொடுபின்மலைவறக்கொள்

ளத்தக்கப் பக்குவனுக்குக் கிரமத்திலேகொடுக்கலாமென்னு முறைமையை யறிவித்தது. (ருo)

உண்மைமுற்றிற்று.

ஆ - பாயிரமுட்பட திருவிருத்தம்- ௱.

சிவப்பிரகாசவியாக்கியாநம் முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

இத்திருவெண்பா

விந்நூலாசிரிய ரருட்கொப்பின்மை கூறுமுகத்தா னூற்பெருமை கூறுகின்றது.

இப்பிறப்பேசிவன்முத்தி யெய்துவிக்குமேற்பிறக்கு
மப்பிறப்புமிங்கே யறுத்தருளி—யொப்பறவே
யுண்மையருள்கொற்றங் குடிவாழுமாபதிதன்
வண்மையருட்குண்டோ கைம்மாறு.

உரையாசிரியர்சிறப்பு.

தொக்கவினையாற்சூத்திரத்தாற் சொற்பொருளாயம்பலவன்
றந்தகுறளாற்றொகையாற் றன்னருளாற்—சிந்தையின்மெய்
காணச்சிவப்பிரகா சங்கணைக்கண்டான்மதுரைத்
தாணுச்சிவப்பிர காசன்

ஓதுபுகழ்சகாத்தமாயிரத்துநானூற்
றொருபதின்மேற்செல்கின்றகாலந்தன்னின்
மாதுபயில்மதுரையில்வாழ்சிவப்பிரகாசன்
வண்மையருணிகழ்ச்சியினாலுண்மையாக
வீதுமலமீதுவினையீதுமாயையீதுயிர்பின்
னீதுசிவமென்றேகாட்டித்
தீதில்சிவப்பிரகாசச்செய்யுணூறுந்
தேர்ந்துரையிட்டேயுலகிற்சிறப்பித்தானே

திருச்சிற்றம்பலம்.

சோதனைப்பத்திரம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௧0	௪௮	அவனது	அவாது
௧௨	௧௧	பிறயினை	பிறையினை
௩௮	௯	மங்ரோசுர	மந்திரோசுர
௪௯	௫	சாமீபதஞ்சாரூபதம்	சாமீபபதஞ் சாரூபபதஞ்
௫௩	௨௨	யானுமரித்தி	யானுமருத்தி
௫௪	௧௯	இரண்டி	இரண்டு
௫௬	௧௯	யாராந்து	யாராய்ந்து
௫௯	௧௨	செயுட்களை	செய்யுட்களை
ஷை	௧௮	புதலவர்	புதல்வர்
௬௧	௧௮	திருவருட்பயினில்	திருவருட்பயனில்
௬௨	௧௯	அநுட்டித் தவற்களுக்கு	அநுட்டித் தவர்களுக்கு
௬௮	௨0	செயுட்களில்	செய்யுட்களில்
௭௩	௨௫	மாலாலே	மாதலாலே
௭௬	௧0	அவயிற்றை	அவையிற்றை
௧௪௨	௨௬	தாாாகங்களை	தாரகங்களை
ஷை	௨௭	கேவப்பட்டு	கேவலப்பட்டு
௧௧௭	௨௪	சிவாகமதில்	சிவாகமத்தில்
௧௩௪	௪	காரியப்டுப	காரியப்படு
௪௫௬	௨௧	காயதித்	காயத்தி
௪௯௨	௨௫	ளெட்டுனுங்	ளெட்டினுங்
ஷை	௨௮	கூசறியற்கு	கூறியதற்கு
௧௯௬	௧௨	யிந்திரியகளை	யிந்திரியங்களை
௨00	௨௮	(௩௩)	(௩௨)
௨0௩	௧0	நிக்கு	நிற்கு
௨0௭	௧௬	தேவவர்க்	தேவவர்க்க
௨௨௮	௨௬	பத்தவா	பத்தாவா
௨௩௨	௨௨	சௌத்திராத்திசனும்	சௌத்திராந்திகனும்

சோதனைப்பத்திரம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தல்
௨௪௮	௧௫	மருத்தருளிச்செய்	மறுத்திருளிச்செய்
௨௫௧	௨௭	மரிஞ்ஞமவாதியை	பரிஞ்ஞமவாதியை
௨௫௫	௧௦	நுருகந்தானே	நுகருந்தானே
௨௫௯	௨௧	மாணக்கனை	மாணவகனை
௨௬௦	௨௩	கண்கண்டு தாகிலும்	கண்கண்டதாகிலும்
௨௬௬	௧௩	தத்துவங்ளோங் கூடி	தத்துவங்களோடுங் கூடி
௨௭௦	௧	கனவுதனி	கனவுதன்னி
௨௭௬	௨௫	யுயிர்கென	யுயிர்க்கென
௨௭௯	௧௦	யவைத்தைப்	யவத்தைப்
௨௮௦	௬	புகன்றவற்ருலவர்	புகன்றவற்ருல்வரு
௨௮௭	௧	னீங்லது	னீங்கலது
௨௮௯	௧௯	வைக்கப்வட்டது	வைக்கப்பட்டது
௨௯௯	௧௭	மருத்	மறுத்
௸	௨௫	சிற்றரிவாயுள்ள	சிற்றறிவாயுள்ள
௩௦௧	௩	விகாரமர	விகாரமற
௩௦௩	௧௩	கரணக	கரணங்க
௩௦௯	௨௫	பொறுட்	பொருட்
௩௬௦	௨௫	திருவளைப்பெற்	திருவருளைப்பெற்

P [illegible]

~~325~~

~~309~~

~~169~~

~~166~~

~~160~~

~~132~~

~~115~~

~~104~~

~~99~~

~~46~~

~~74~~ ~~18~~

~~39~~

~~37~~

P

201 [illegible]

~~250~~ [illegible] 17

330